உ

தமிழ்த்தாய் வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.



ஆங்கிரச ஆண்டு.

(1932—33)

எட்டாம் துணர்.

தஞ்சைக்
கரந்தைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

கட்டுரையெழுதிய பேரறிஞர்களும், கட்டுரைகளும்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் அ	ஆங்கீரச, சித்திரை, வைகாசி.	மலர் க, உ.

உ

பொழிலின் புத்துயிர்.

தமிழ்த்தாயின் திருவருளால், நமது தமிழ்ப் பொழில் இனி இவ்வெட்டாம் ஆண்டில் புத்துயிர் பெற்றுப் பொலிவுற விருப்பதை, உள்ளம் நிறைந்தோங்கும் உவகையொடு அன்பர்கட்குக் கூறும் பேறுடையேன் ஆகின்றேன். அஃதாவது, இனி இப்பொழிலிற்கு ஒப்பற்ற ஒரு பெருந்தொண்டராக நம் சங்கத்தலைவரவர்கள் திகழ்வார்கள் என்பதேயாகும். பொழில் தொடங்கும் முன்னும், தொடங்கியக்காலும், பிற்றைக்காலத்தும் இதுகாறும், பொழிற்றொண்டன் ஆதற்குரிய சிறப்பு என்பால் இல்லை என்ப்தை யான் கூறிவந்துளேன்; அது பொய்யுரை அன்றெனலைப் பொழில் காட்டி நிற்கின்றது. எனது உண்மையன்பர் சிலர், எனது உண்மை நிலையை உணரமாட்டாராய், என்னை அத்தொண்டியற்றி வரப் பணித்து வந்ததே, யான் இதுகாறும் பொழிற்றொண்டனாயிருந்து வந்ததன்காரணமாகும். பொழிலடியிலிருந்தே பொழிலை வளம்படுத்தி வரமாட்டாத யான், இன்று வேற்றார் புகும் வேலையொன்றுடையேனாதலை உணர்ந்த என் நண்பர்கள், என் எளிமைக்கிரங்கி என்னை விடுவிக்குங் காலம் எய்தியது.

கடந்த எழாண்டாக, யான் புரிந்துவந்த தொண்டெலாம், அன்பர்கள் வரைந்துதவிய கட்டுரைகளை அச்சிடற்காம் அச்சுத் திருத்தஞ் செய்தல் முதலிய சிறு தொண்டுகளே யாம். எங்கோ ஒன்றிரண்டு கட்டுரைகளும் காணப்படுகின்றனவே என்பாரும்

உளராயின், அன்னோர் அருள்கூர்ந்து அவையிற்றை நோக்கி, அவையெல்லாம், அறிஞர்கள் கட்டுரைகள் முற்றும் இல்லாத போதோ, அவை ஒரு பாரத்தின் இடையில் நின்று விட அவ் வெச்சத்தினை நிரப்ப நேர்ந்தபோதோ, அச்சுச்சாலையில் நின்ற நிலையில் எழுதியனவே யாதலையும், இவ்வுண்மைக்குக் கரியாக ஆங்காங்குக் காணப்பெறும் 'தொடரும்' எனும் உரைகள் பின்னர் அமையம் நேராமையின் தொடராதே எஞ்சி யொழிந் திருத்தலையும் கண்டு உண்மை உணர்வார்களாக.

ஒரு தொண்டர் செயவேண்டும் அலுவல் இவையெனலை யான் முற்றும் உணராதொழிந்தேனல்லேன்; சிறிதும் முயலா திருந்தேனுமல்லேன். என்செய்வேன்! என் வாழ்க்கையில் எனக்கெய்திய மனச்சோர்வுகளும், உயர்தரத்தினர் எனப்படும் இளைஞர்கள் பயிற்சியில், என்னுடல் வலி இடந்தரும் அளவெல்லாம் யான் பொழுது போக்கிவர நேர்ந்தமையும் காரணமாக, யான் புலவர் உலகிற் புகவும், எனது புல்லறிவிற்கு எட்டுவன வற்றைத் திரட்டி யுரைத்துவரவும் இடம்பெறேனாயினேன். என்றாலும், இம்மட்டிலாதல் என்னைத் தொண்டனாக்கி வைத் திருந்த திருவருட் செயலினை நோக்கி வியப்புற வேண்டியவன் ஆகின்றேன்.

இனி, நமது அருமைத் தலைவரவர்கள் இப்பொழிற்றொண் டர் வேலையினை ஒப்புவது, அவர்கட்கிருக்கும் எண்ணிறந்த வேலைகளை நோக்குவார்க்கு மிக்க வியப்பினைத் தருவதேயாகும். என்றாலும், அவர்களே இச்சங்கத்தின் உயிர் நிலையாக நின்று, தளரும் உறுப்புக்களைத் தளர்வகற்றிப் புதுக்கிப் புத்துயிர் அளித்துப் புரந்துவரும் செப்பரும் திறலினராதலின், பொழிற் றொண்டர் நிலை தளரும் இக்காலத்தே, அதனையும் தமக்குரிய ஆயிரத்தொடு ஆயிரத்தொன்றாம் வேலையாக மேற்கொள்வா ராயினர்! என்னே இவர் தம் ஊக்கம்! உழைப்பு!! திறல்!!! இவை, என்னனையோர்க்கு நாணம் விளைப்பவாகின்றன. கெடுக சிந்தை! கடிதிவர் துணிவே! தமிழ்த்தாயின் தலைமைந்தனாய இவர்கட்குத் தமிழ்த்தாயின் தனியருள் என்றும் நின்று நிலவுவ தாக.

அன்பரீர் !

இனி, யான் எனது தொண்டுரிமையை இன்று விடுவேனா யினும், இதுகாறும் செய்து வந்த என் எளிய தொண்டிற்குறை யாத தொண்டுகளை என்றுஞ் செய்திருப்பேனெனும் உறுதி உரை கூறி, பொழிலன்பர்களாகிய உங்களையெல்லாம் வணங்கி,

என்றினிக் கரந்தை சார்வேன், என்னியல் தொண்டிற்சேர்வேன்
என்றெலாம் உள்ள மாழ்கி இடம்பெயர் எளிய னாவேன்
சென்றன காலந் தம்மிற் செய்தன பிழைகள் பல்ல
ஒன்றுநன் றுளதாக் கொண்டே உவைபொறுத் தருளு வீரே.

என்று வேண்டி அமைகின்றேன். தமிழ்த்தாய் வாழ்க !

R. வேங்கடாசலம்,
பொழிற்றொண்டன்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கத்து

இருபத்தொன்றாம் ஆண்டு நிறைவு விழாவின் அவைத் தலைவர்

பண்டிதர், திரு.

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களுக்குச்

சங்கத்தார் கூறிய வரவேற்பு வாழ்த்து.

தேனாட்சி செயுமொழியும் திருவாட்சி செயுமுகனும் திகழு மன்பு
தானாட்சி செயுமனனும் தாமாட்சி கொளவிருக்கும் தனிச்சீ ராள!
மேனாட்சி ராப்பள்ளி பெற்றிருந்த வீறின்றும் மேவ விந்நாள்
மீனாட்சி சுந்தரனா விளங்கிடுவேங் கடசாமி வேந்தே! வாழி!

மன்னியநல் லிசைப்புலவர் மருதநிலக் கருவளங்கள் மாணக்கூறும்
அன்னவையெல் லாமின்றும் அமைந்தநடுக் காவேரி அண்ணல் எங்கள்
முன்னவன்செந் தமிழன்பன் முத்துச்சா மிப்பெயரான் முன்னம் செய்த
எண்ணரிய தவந்தருவேங் கடசாமி! இவண்வருக! வருக! எந்தாய்!

நத்தாரும் புனன்மதுரை நகர்ப்பாண்டி மன்னிறுவு நான்காஞ் சங்கத்
'தெத்தேர்வு தாழுமிலை யிவைநிகர்வ' எனப்படுமோர் ஏற்றஞ் சாலும்
முத்தேர்வும் மூவாண்டில் முதன்மையினில் முற்றுவித்தாய்! முன்ப!நின்னை
ஒத்தாரும் ஒப்பாரும் உளரோபல் வகைத்தேர்வாம் உலகத் தம்மா!

படித்தினித்த நாவிற்கும் பார்த்தொளிர்ந்த கண்ணிற்கும் பார்த்த வெல்லாம்
மடுத்தடுக்கித் திளைத்திருக்கும் மனத்திற்கும் வல்லாதார், மலிசீர்த் தோடாத்
தொடுத்தனர் நின் கைக்கு'ஒருகை பார்ப்ப'லெனச் சொல்லுமொரு துணைய
அடுப்பவர்க்கு வரையாதே அளிக்குமது வரைந்திட்ட அழகுகண்டே! (தாகி,

பெருக்கமுறு நூலியற்றப் பிறங்குமுரை நடையெழுதப் பேச்சு வன்மை
சிறக்கும்விரி வுரையியற்றச் செழுநூல்கட் குரைவிரிக்கத் திகழா ராய்ச்சி,
தருக்கநூல் இவைகாணத் தாம்தாம்தாம் எனமுழக்கும் தகவி னோரும்
செருக்ககல அவையியற்றும் திண்ணியவேங் கடசாமிச் செம்மால்வாழி!

பண்டிதரா வார்புதுமை பழகாமை ஆங்கிலமேற் பள்ளிக் கொவ்வாத்
தொண்டரெனக் கூறறிவின் தோற்றமிலார், தகுவரெனச் சுட்டு பட்டம்
கண்டவருட் சிலரைநெடுங் கணக்கெதுவோ என்னவிழி காட்டா நிற்பர்
மண்டவர்நின் முன்சேரின் மதிமுன்னர் மீனிருக்கும் மாண்பே யன்றோ

கல்லூரித் தமிழ்த்தொண்டு கடவாநாட் கணித்திருந்து காணும் பின்னோர்
நல்லூரிற் கலைமாடம் நாட்டியவண் அமைந்திருக்க நாடி நிற்பாய்;
சொல்லூர்மந் திரவாக, இச்சங்கத் தொண்டரெலாம் துணைவ ராகப்
பல்லூரும் பன்னூடும் பயிலிடமாம் பள்ளியிதாப் படைப்பாய் மன்னே.

நாடெல்லாம் உறுசங்கம் நற்றலைமை கொளச்செல்வாய்; நங்கள் சங்கம்
கூடுறுகால் வருபுலவர் கூட்டத்திற் காம்தொண்டு குறித்து நிற்பாய்;
பீடுறும்நின் னுரிமையிதேல், பிறங்குதலை மைக்கேது பிறிதொன் றன்று
நாடுமுட னலத்தளவில் நன்மொழித்தொண் டேயமைய நயந்த தன்றே.

திருவாழ்வு செய்வாழ்வு கலைமகளார் திருவருளாற் றிகழா நின்ற
ஒருவாழ்வு மனைமக்கள் உறுவாழ்வோ டனலங்கள் ஓங்கா நின்ற
பெருவாழ்வு தமிழ்த்தாயாம் பெரியாடன் திருச்சீரைப் பேசுமன்பால்
வருவாழ்வு பலவூழி வாய்ந்தனைவேங் கடசாமி! வாழி மாதோ!

20, 21-ஆம் ஆண்டுகளின் அறிக்கை.

சுக்கில (தை) — பிரசோற்பத்தி (மார்கழி)

சேந்தமிழ்த்தாயின் திருவருளால், இச்சங்கத்தின் இருபத்தொன்றாம் ஆண்டு நிறைந்துளது. இருபதாம் ஆண்டு நிறைவு விழா உரிய காலத்தே நிகழாமைக்குச் சிறந்த காரணம்பொருட்குறைவேயாகும். பண்டு, முதலாவதாண்டின் திருவிழா நடத்துதற்கு நன்கொடைபெற, இச்சங்க அன்பர் சிலர் வெளிப்பட்டகாலை, ஒரு பெருந்திருவாளர் விழாச்செலவு முழுவதூஉம் தம்முடையதாகவே இருக்கட்டும் எனக்கூறி, இரண்டு ரூபா நன்கொடையளித்தனர்! அங்ஙனம் அவர் எண்ணினும், இச்சங்கத்தின் ஆண்டுவிழாவென்பது, ஏறத்தாழ ஆயிர ரூபாச் செலவினதெனலை இச்சங்க அன்பர் யாவரும் அறிவர். இத்தகைய பெரும்பொருட் செலவினைக் கொண்ட ஆண்டுவிழாக்களே, பல்வேறு இடங்களில் பிரிந்துவதியும் இச்சங்க உறுப்பினரும், தமிழன்பர்களும், தமிழ்ப்புலவர்களுமாகிய தமிழ்த்தாயின் மக்களையெல்லாம் ஓரிடத்து ஒருங்குகூட்டிச் சங்கத்திற்குப் புத்துயிர் அளித்துப்போற்றி வருவன. ஆயினும், பொருணிலை முற்றும் இடங்கராத அமையங்களிலே, ஆண்டுவிழா நிகழ்தற்கியலுவதின்று. சென்ற ஆண்டில் சில்லாயிரக்கணக்கினதாகிய தொகையில் பள்ளிக்கூடத்திற்கு இடம் வாங்க நேர்ந்தமையின், ஆண்டுவிழா நிகழ்வது கூடாமையாயிற்று.

சுக்கில தைத் திங்களிலிருந்து தொடங்கும் இவ்விரண்டாண்டுகளில் இச்சங்கத்தே நடந்த பொதுக் கூட்டங்களில், பிரமோதூத, புரட்டாசி 11, 12 ஆம் நாட்களில் நடந்த 19 ஆம் ஆண்டு விழா ஒன்றாகும். அதன் நிகழ்ச்சி முன்னரே செய்தித்தாள்களிலும் நமது தமிழ்ப்பொழிலிலும் விரிவாக வெளிவந்திருத்தலின், ஈண்டு மீண்டும் விரிக்காமல், சங்க நிகழ்ச்சிகள் யாவும் தொடர்புறவரும் அறிக்கைகளிற் பதிவுபெறல்வேண்டும் முறைபற்றிச், சுருக்கமாகக் கூறுகின்றேம்.

விழாவின் அவைத்தலைவர்,

திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள், சென்னை.

விரிவுரைகள்.	விரிவுரையாளர்கள்.
தமிழ்ச்செய்யுள் வளர்ச்சி.	திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், *சென்னை.*
மதுரைக் காஞ்சியாராய்ச்சி.	திரு. ஆ. கார்மேகக்கோன் அவர்கள் *மதுரை.*
காஞ்சிப் புலவர்.	திரு. பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், *திருச்சிராப்பள்ளி.*
கம்பராமாயணம்.	திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், *மன்னார்குடி.*
வீரமாநகர்.	திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள், B.A., B.L. *சிதம்பரம்.*
சில கம்ப சித்திரம்.	திரு. சோமசுந்தர பாரதியாரவர்கள், M.A., B.L. *மதுரை.*
பண்டைக்கால நாவலரும் காவலரும்.	திரு. ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், *தோரமங்கலம்.*
பட்டினத்தார்.	பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள், *மகிபாலன்பட்டி.*
சிலப்பதிகார நாடகம்.	சங்க மாணவர்.

வேறு பொதுக் கூட்டங்கள்.

இவ்வாண்டுகளில், திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள், மாணிக்கவாசகர், நம்மாழ்வார் திருநாட்கள் கொண்டாடப்பெற்றிருக்கின்றன. நல்லிசைப் புலவர்களாக, சமய குரவர்களாக வுள்ள பண்டைத் தெய்வத் தமிழ்ப் புலவர் பெருமக்கட்கெல்லாம் திருவிழாக் கொண்டாடி வரல் வேண்டுமென்பது இச்சங்கத்தின் பெருநோக்கமாகும். என் செய்வது! யாவும் பொருள்

நிலையினைப் பொறுத்திருத்தலின், அந்நோக்கம் எண்ணியாங்கு முற்றுப் பெறுவதில்லாயிற்று. மேற்கூறிய சில திருநாட்கடாமும், அவ்வப் பெரியாரிடத்து உண்மைப் பற்றுடையோராகிய சங்க அன்பர் சிலர் துணைகொண்டு நடைபெற்றனவாகும். மகர்நோம்புச் சாவடித் திரு. ம. உலகநாத பிள்ளையவர்கள் நன்கொடையினால் திருநாவுக்கரசர் திருநாளும், மதுரை, இ. மா. கோபால கிருஷ்ணக் கோனாரவர்கள் நன்கொடையினால் கம்பர் விழாவும், தஞ்சை கீழவாயில் V. அழகர்சாமி நாயுடு அவர்கள், B.A., B.L. அளித்த நன்கொடையினால் நம்மாழ்வார் திருநாளும் நடைபெற்று வந்திருக்கின்றன. இவ்விழாக்களுள் வேறு சில, பல அன்பர்கள் தந்தபொருள் உதவியின் சேர்க்கையினால் நடைபெற்று வந்துள. அன்பர்கள் பொருள் தந்தும், இரண்டொரு விழா, குறித்த காலத்தில் நடத்த இயலாமற்போயதுபற்றி வருந்துகின்றோம். வருங்காலங்களில் தக்க முன்னுணர்ச்சியுடன் அவ்விழாக்களைச் செவ்வனே நடத்தவிருக்கும் உறுதி கூறிப் பொருளுதவி செய்தவர்களைப் பொறுத்தருள வேண்டுகின்றோம். தாம் தாம் தொடங்கி நடாத்தும் விழாக்களை இடையறாது நடத்திவருமாறு மேற் கூறிய திருவாளர்களை வேண்டிக் கொள்வதுடன், அவர்கட்கு எந்நலனும் ஓங்குமாறு தமிழ்த் தாயின் திருவருளை வணங்கி நிற்கின்றோம். பொருள் உதவிய திருவினர் பெயர் முதலியவை நன்கொடை எனும் தலைப்பிற் காணலாகும்.

தொழிற் கூட்டங்கள்.

இவ்வாண்டுகளில், எல்லா உறுப்பினரும் கூடும் உறுப்பினர் பொதுக் கூட்டம் ஒன்றும்; நிறைவேற்றுக் கழகத்தார் கூட்டம் பதின் மூன்றும் நடைபெற்றிருக்கின்றன.

வருவாய்.

சங்க உறுப்பினரும் சங்கத்தே அன்புடைய பிறரும் அளித்து வரும் வரி, நன்கொடைகளே இச்சங்கத்துப் பொருள் வருவாயாகும். இவற்றுள் பெரும் வருவாயாவன சங்கத் தலைவரவர்கள் பள்ளிக்கூட நிகழ்ச்சி, மருத்துவச்சாலை நிகழ்ச்சி,

பொதுக்கூட்டங்கள் முதலாய சங்க நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும், திங்கடோறும் அவ்வப்போதும் அளித்துவரும் பெருங் கொடையும், அரசியலார், கட்டிடம், இடம், ஆசிரியர்கள் ஊதியம், அறிவுநூற்பயிற்சி முதலியவற்றிற்குரிய பொருள்கள் முதலாய பள்ளிக்கூட நிகழ்ச்சிகட்கு அளித்து வரும் பெருங் கொடையும் ஆகும்.

சங்க உறுப்பினருட் பெரும்பாலோர் தத்தம் வரிகளை உரிய காலங்களிற் சிறுகச் சிறுகச் செலுத்தாது, பெருக்கிக் கொண்டிருந்து, பின்னர் செலுத்த இயலாமலோ, விருப்ப மில்லாமலோ சங்கத்தினின்றும் விலகிக் கொள்ளுகின்றனர். வெளியூர் உறுப்பினர்கள் தாமாகவோ, அல்லது சங்கத்தின் நினைவூட்டுங் கடிதங்கள் கண்டோ தத்தம் வரிகளை உடன் உடன் செலுத்திவராவிடின், அத் தொகைகளைச் சங்கத்தார் கேட்டு வாங்குவதற்குத் தனி அலுவலாளர் இல்லை. உள்ளூர் உறுப் பினர்களுட் சிலரும் அவ்வப்போது வரி கேட்க வரும் சங்க அலுவலாளர்களிடம், உரிய சிறு தொகையைத் தருவதில்லை. இவ்வாறெல்லாம் வரி எச்சம் மிகச்செய்து, பின்னர் அதனைச் செலுத்த இயலாமலும் விருப்பமில்லாமலும் போய சங்க உறுப்பினர்கள் இவ்விரு ஆண்டுகளிலும் மிகப்பலராவர். சங்கத்திற்றொடங்கி நடைபெறும் அலுவல்களோ வர வர விரி கின்றன. மேற்கூறியபடி, பொருள் வருவாய்களோ வரவரக் குன்றுகின்றன. இவற்றையுணர்ந்த சங்க உறுப்பினர்கள் இனியேனும் தத்தம் வரிகளை அருள்கூர்ந்து உடன் உடன் செலுத்திச் சங்கத்தைப் புரந்து வருவார்களாக. உண்மைப் பேரன்பர் பலர் இடையறாது அளித்துவரும் வரி, நன்கொடை களே, இதுகாலை பெரும்பற்றுக் கோடாகி நின்று, சங்க அலுவல்களை ஒருவாறேனும் இயக்கி வருகின்றன.

அன்பர்கள் தரும் நன்கொடைகள், சங்கத்தின் விழா, கட்டிடம், கல்வி முதலாய சங்க நிகழ்ச்சிகள் பற்றியனவும், தத்தம் இல்லங்களில் நடக்கும் மணம், முன்னோர் நாட்கள் முதலாய சிறப்புக்கள் பற்றியனவும் என இருவகைப்படுவன. அவ்விருவகையிலும் நன்கொடையளித்தார்:—

கல்லூரியும், திக்கற்ற மாணவர் இல்லமும்.

இச்சங்கத்தைச் சார்ந்த கல்லூரி நிகழ்ச்சிகளை இறுதியில் தனியேயுள்ள கல்லூரி யறிக்கையில் விரிவாகக் காணலாகும். அதனால், கல்லூரி மாணவர் பெருக்கத்தினையும், ஆசிரியர்கள் ஊக்கங்களையும், இன்னும் அக்கல்லூரிக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் இடம் பொருள் முதலாய குறைபாடுகளையும் அறிதலாகும். ஏனைய பள்ளிக்கூடங்களிற் காணலாகாது இங்கு மட்டும் காணலாகும் சிறந்த தமிழ்ப் பயிற்சி, இம்மாணவர்கள் மேற்படிக்குமிடத்து, தமிழ்ப் பயிற்சியைப் புறக்கணித்தொழியும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலோ, அன்றி மேற்படிக்க வியலாதார் செல்லும் உலகத்துச் சிறு அலுவல்களிலோ பெரும் பயன் அளியாதிருத்தலை, அறிஞர் அறிவர். எனவே, இச்சங்கத்து அருமுயற்சி பயன்படுவதாயின், இக்கல்லூரியின் தொடர்பாக அல்லது துணையாக, தமிழ்ப்பயிற்சியை முதன்மையாகக்கொண்ட ஒரு உயர்தரக் கல்லூரியும், ஒரு தனித் தமிழ்ப் பயிற்சிக் கல்லூரியும் இன்றியமையாதனவாகின்றன. தமிழ்த் தாயின் தண்ணருளால் இக்கல்லூரி எய்தும் வியத்தகும் வளர்ச்சியினை நோக்குங்கால், அவ்விருவகை மேற்படிப்பு வகுப்புக்களையும் தொடங்கும் காலம் மிகு சேய்மையிலிருக்குமென நினைக்கக்கூடவில்லை. சிறந்த தமிழன்பர்களாகிய உங்கள் ஒவ்வொருவர் கையிலுமுள்ள ஒருபை, ஒருபையாகும் எனலை நீங்கள் இன்று மனங் கொள்ளினும் அந் நன்னாள் நாளையேயாகும்—என்று சென்ற அறிக்கையில் குறித்தன இன்றும் குறித்தற்குரியன வாகின்றன.

கல்லூரிக்கு வரும் அரசியலார் நன்கொடை இதுபோது மிகக் குறைந்து விட்டது. 1930 ஆண்டிற்கு ரூ 3792—12—0 அளித்த அரசியலார் 1931 ஆண்டிற்கு ரூ 3055—11—0 அளித்துள்ளார்கள். சங்கத்தின்பாலிருந்த சிறு முதலிலிருந்து ரூ 3400—0—0 செலவில் பள்ளிக்கூடத்திற்கு இடம் வாங்க வேண்டும் இன்றியமையாமையும் எய்திற்று.

ஐயன்மீர்! இப்பள்ளி, ஏறத்தாழ 450 பிள்ளைகட்கு எவ்வகை ஊதியமுமிலா அறப்பள்ளிக்கூடமாக எட்டு வகுப்புக்களை வைத்து நடத்தி வருதலை, இதனாற் பயன்பெறும் உள்ளூர், வெளியூர் மக்கள் சிறப்பாகவும், தமிழன்பர்கள் பொதுவாகவும் உன்னி உணர்தல் வேண்டும்.

இச்சங்கத்தைச் சார்ந்த திக்கற்றமாணவர் இல்லம் ஒன்றும் தலைவரவர்கள் அரிய முயற்சியால் தொடங்கப்பெற்றுளது. இதன்கண் இப்போது பத்து மாணவர்கள் உண்டி உணவு வசதிகள் பெற்றுக் கல்வி பயின்று வருகின்றார்கள்.

அன்பர்காள்! இவ்வரிய பெரிய காரியங்களெல்லாம் என்றும் இடையறாது நடைபெற்று வருதல் வேண்டாவா? ஆயின், எங்ஙனம் உங்கள் உதவியின்றி நடைபெறும்? இந்நகர மக்கள் தத்தம் வீடுகளில் பிடியரிசிக்கலயம் வைத்து ஒருகை யளித்து உதவி வருதல் வேண்டும். இந்நகர வணிகர்கள் தத்தம் கடைகட்கு பாலையில் வந்து நிற்கும் சங்க அலுவலாளர்க்கு ஒரு பையேனும் அளித்து உதவி வருதல் வேண்டும். வெளியூர் அன்பர்கள் அறுவடைக்காலங்களில் இயன்ற அளவு நெல் உதவிகள் செய்து வருதல் வேண்டும். ஒவ்வொருநாளும் இன்னவை செலவுகள் எத்துணையோ செய்துவரும் நம் தமிழ் மக்கள், மேற்கூறிய வருவாய்களால் ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்கள் கல்விப்பயிற்சியுறுதலை உள்ளத்திற் கொள்ளுதல் வேண்டும். தமிழ்த்தாயின் திருமக்காள்! உள்ளங்கனிமின்! ஏழைச் சிறார்கட்கு இரங்குமின்! புகழும் பேறும் போற்றுமுறை போற்றுமின்!

மேற்கூறிய திக்கற்ற மாணவரில்லத்தின் மேற்பார்வையினை உண்மைப் பெரியாராய திரு. S. A. சாம்பசிவம் பிள்ளையவர்கள் செவ்விதின் நடாத்தி வருகின்றனர். கல்லூரி மேற்பார்வையினை நடாத்திவரும் அன்பர் திருவாளர் மா. வே. கோபாலகிருட்டினையர் அவர்களைப்போன்று, இத்திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு இவர்கள் மானேசராக அமைந்து ஊக்கமும் உழைப்புங்கொண்டு செவ்விதின் நடைபெறச் செய்து வருதல் சங்கத்தின் நற்பேறாகும். இவ்விரு திருவாளர்கட்கும் சங்கத்தின் வாழ்த்து உரியதாகும்.

திக்சற்ற மாணவர் இல்லத்திற்கெனக் கரந்தை, கூடலூர், குளமங்கலம், அரசூர், அம்மன்பேட்டை, பள்ளியக்கிரகாரம், சுங்கந்திடல், ஆலங்குடி, ஆத்தூர் இவ்விடங்களிலுள்ள பல அன்பர்கள் நெல்லும் அரிசியும் அளித்துப் பேருதவி செய்திருக்கின்றனர். இவர்களும் ஏனைத் தமிழ்ச்செல்வர்களும் இங்ஙனமே இடையறாது உதவி, நெடிது இம்மை மறுமை வாழ்வுகள் எய்துவார்களாக.

நூல் நிலையம்.

இச்சங்கத்தின் பெரும்பொருள் நிலைகளுள் ஒன்றாகிய இது, தமிழ் வள்ளல் பெத்தாச்சிச் செட்டியார் நூனிலையம், பொது நூனிலையம் என இருபாற்படும். பொது நிலையத்தினுள்ளும் பெரும்பாலன, அன்பர்கள் தந்த நன்கொடை நூல்களேயாகும். எஞ்சியனவே, சங்கத்தே விலைக்கு வாங்கியனவும், சங்கத்திற்கு வரும் திங்கட்டாள்களைத் தொகுத்தனவும் ஆகும். இப்போது அச்சிலில்லாத பல அரிய நூல்கள் இதன்கண்ணிருக்கின்றன.

இந் நூனிலையத்தே பத்தொன்பதாம் ஆண்டின் இறுதியிலிருந்த நூல்கள் 2448. இப்பால் அன்பர்கள் நன்கொடையளித்தனவும் சங்கத்தே விலைக்கு வாங்கியனவும், தமிழ்ப்பொழில் மாற்றிதழ்களைத் தொகுத்தனவுமாகக் கூடியன 199. விபரம் தெரியாதனவாகியும் எடுத்துப் போனவர்களிடம் திருப்பிப்பெற இயலாமற் போனவுமாகக் கைவிட்டுப் போன நூல்கள் 112. எனவே இதுபோது இருப்பன 2535 ஆகும். நன்கொடையளித்தவர்கள்—திருச்சிராப்பள்ளி டாக்டர் திரு. V. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள், சங்கத்தலைவரவர்கள், திரு. C. வேதாசலம் பிள்ளையவர்கள் (கரந்தை) சுப்பராம பாகவதரவர்கள் (கரந்தை) முதலியோர் ஆவர். இந் நன்கொடையாளர் கட்கெல்லாஞ் சங்கத்தின் வந்தனம் உரித்தாகும்.

தமிழ்ப் பொழிலுக்கு வரும் மாற்றிதழ்கள்:—

1. செந்தமிழ்.
2. செந்தமிழ்ச்செல்வி.
3. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.
4. ஆனந்த போதினி

5. யதார்த்தவசனி.
6. அரிசமய திவாகரம்.
7. சித்தாந்தம்.
8. பாரத தர்மம்.
9. முன்னேற்றம்.
10. பாரதி.
11. யாதவமித்திரன்.
12. கலைமகள்.
13. சன்மார்க்கம்.

இம்மாற்றிதழ்களை அவ்வப்போது அனுப்பிவரும் அன்பர்களுக்குச் சங்கம் தனது மனமார்ந்த நன்றியறிவினைத் தெரிவிக்கின்றது.

வெளியீடு.

சங்கத்தின் வெளியீடாகிய தமிழ்ப்பொழில், அதன்கண் காணப்பெறும் ஆசிரியர் கழகத்தினர் பேருதவியால், சற்றேறத்தாழ, உரிய காலங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதற்கென்றே முழுநேரமும் செலவிடத் தக்க ஒரு புலவர், தொண்டராக அமையின், இது, சிறந்த கட்டுரைகளைக் கொண்டு ஒவ்வொரு தமிழ்த் திங்கள் முதனாளையும் உறுப்பினர்கட்கு நினைவூட்டும் இதழாக மிளிர்ந்து கொண்டிருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று என்றதை மீண்டும் கூற வேண்டியதாகின்றது.

இனி, இச்சங்கத்தின் உறுப்பினரும் சங்க அன்பர்களுமாகிய தமிழ்ச்செல்வர்கள் பல்லாயிரவர் நிறைந்த இத்தமிழகத்தே, எவ்வித ஊதியமும் கருதாது தண்டமிழ் தொண்டொன்றையே கருதி வெளிவரும் இத்தமிழ்ப் பொழிலினைப் போற்றுவார், போதிய அளவு இலராதலை ஈண்டும் வருத்தத்துடன் வெளியிட வேண்டியவர் ஆகின்றோம். தமிழ்ச் செல்வர்காள்! உங்கள் தாய்மொழித் தொண்டிற்கு, ஆண்டிற்கு இரண்டு மூன்று ரூபா அளிப்பது அரியதொன்றாகுமா?

இத்தமிழ்ப் பொழிலின் பெருந்துணையாக நிற்பார், தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தினரும், தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தினரும், ஆவார். அக்கழகத்தினர் தத்தம் ஆட்சி எல்லையிலுள்ள பள்ளிக்கூடங்கட்கெல்லாம் தமிழ்ப் பொழிலினை

வாங்கி வைக்கின்றனர். இக்கழகங்கட்கும் இவற்றின் தலைவர்கட்கும் இச்சங்கம் என்றும் மறவாநன்றிகொள்ளும் நீர்மையது. இன்னோர் நீடு வாழ்வார்களாக.

இப்பொழில், கல்லூரி, பள்ளிக்கூடங்கட்கு இன்றியமையாது வேண்டப்படும் சிறப்பினையுடைய உண்மையை, கல்லூரி, பள்ளிக்கூடங்கட்கு அறிவித்திருக்கும் தஞ்சைமா நாட்டின் கல்வி நெறியாராய்ச்சியாளர் தலைவராயிருந்த திரு. P. P. S. சாஸ்திரியார் M. A., அவர்கட்கு இச்சங்கம் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, சங்கத்தின் வாயிலாக வெளிவந்திருப்பது, இவ்விழாக் கூட்டத்தே விலைக்கு வைக்கப் பெற்றுளது. இவ்வுரை, கிடைத்ததொரு ஏட்டுப் பிரதிகொண்டே அச்சிடப் பெற்றிருப்பதும், அச்சிட்டு முடிந்தபின்னர் இரண்டாவதேடு ஒன்று கிடைக்க, அதுகொண்டு செயத்தகும் செப்பங்கள் பலவும் செய்திருப்பதும் அதனைக் காண்பார் அறிவர். இவ்விரண்டேடுகளினும் காணலாகும் பொருள்களை ஒருங்கு அமைத்துப் பதிப்பதாம் இரண்டாம் பதிப்பு வெளிவருவது, தமிழன்பர்களாகிய உங்களைப் பொறுத்திருக்கின்றது. முதற் பதிப்பின் அருமையினை அறிவார் இலராகிய காலத்தே, இரண்டாம் பதிப்பின் எண்ணம் வருமாறில்லையாகலின், இந்நூலினை இவ்விழாவிற்கு வந்துள சங்க அன்பர்கள் ஒவ்வொருவரும் வாங்கி, இரண்டாம் பதிப்பிற்கு இன்றே அடிகோலிச் செல்வார்களாக. தமிழ்ப் பேரறிஞர்கள் முதற்பதிப்பினைச் செவ்விதின் ஆராய்ந்து இரண்டாம் பதிப்பிற்குரிய செப்பங்களை கூறியருள்வார்களாக என்றெல்லாம் சென்ற ஆண்டிற் கண்ட வேண்டுகோட்கு முடிபு எய்திலது.

கிளைச் சங்கங்கள்.

இச் சங்கத்தைச் சார்ந்திருந்தகிளைகள் மூன்றும், ஒற்றுமை நயங்கருதித், தாய்ச் சங்கத்தோடு ஒன்றிவிட்டன என்று கூறிவிடும் அளவிலன்றி வேறு யாதும் கூறுதற்கில்லேம்.

பதிப்பகம்.

இச்சங்கத்தின் அன்பர் பலர், இச்சங்கத்தின் நலங்கருதிக் 'கூட்டுறவு' முறையில் தனியே ஒரு பதிப்பகம் நாட்டியுள்ளார்கள். அது சங்க வேலைகளையும் பிற வேலைகளையும் நடாத்தி நன்கு பேர் கொண்டுவிட்டது. சங்கத்து வேலைகளைத் தனிக் கருத்துடன் செய்துவரும் இது, சங்க இடங்களிலேயே அமைந்திருப்பது, சங்கத்திற்குப்பல்வழியானும் பெருந்துணை செய்வதாகின்றது. சங்கஅன்பர்கள் இப்பதிப்பகத்தைப் போற்றி வருவார்களாக.

மருத்துவச் சாலை.

மன் மக்களெல்லாம் தம் மக்களாகக்கொண்டு அவர்களின் நன்மைக்கே தம் உடல் பொருள்களை அளித்து வரும் நம் சங்கத்தலைவரவர்கள், உயிர்ப்பிணியாய அறியாமை அகல நம் சங்கக் கல்லூரியை நாட்டியிருப்பது யாமறிந்ததொன்றே. பின்னர் அவர்கள் மக்களின் உடற் பிணிகளைப்போக்கும் ஒரு மருத்துவச் சாலையினையும் நாட்டினர். எண்ணிய எண்ணியாங் கெய்தும் அத்திண்ணியார் உளப்படியே இது நம் சங்கக் கல்லூரிக் கட்டிட முகப்பில் நிலைகொண்டு நடந்து வருகின்றது. தம் உயர் தகுதியை உலகிற்குக்காட்டி நிற்கும் திரு. ம. கண்ணுச்சாமி பிள்ளையவர்கள் ஓர் ஊதியமுமின்றி அதன்கண்ணமர்ந்து மருத்துவத்தொண்டுகளை இயற்றி வருகின்றனர். அதன்கண் மருத்துவம் பெறுவார் தொகை வரவரப் பல்கி வருகின்றது. இதற்காகத் தலைவரவர்கள் சில திங்களாக ரூ. 20-க்கு மேலாகத் தந்து வருகின்றனர். சங்க அன்பர்கள், தலைவரவர்கள் பொறையினை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

உறுப்பினர்.

இச்சங்கத்தின் உறுப்பினராக 19-ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளார் முந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆவர். இன்று வரையில் உள்ளார் இருநூற்றுத் தொண்ணூற் றொருவர் ஆவர். சங்கத்திற்குச் செலுத்தற்குரிய வரிகளைப் பலகாலும் செலுத்தாமையோடு, ஏதாவதொரு முறையில் அவ்வரியெச்சங்களைச்

செலுத்தி வரவும் மனங்கொள்ளாதவர்கள் நீக்கமே இப்பெருங் குறைவிற்கு உற்ற காரணமாகும். இதுபோதுள்ள உறுப்பினர் மனங்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு உண்மையன்பினரை உறுப்பினராக்கினும், உறுப்பினர் குறைந்ததொரு குறை பறந்தோடும். இதனை உறுப்பினராய அன்பர்கள் உளங்கொள்வார்களாக.

இரங்கல்.

நம் சங்க அன்பராய தமிழ்ப்புலவர் மணி. திருநாவுக்கரசரவர்களும் தமிழ்த்தாயின் அருமை மைந்தராகிய திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்களும் இவ்வுலகவாழ்வினை நீத்தது பற்றி இச்சங்கம் துயர்க்கடலுள் எய்திற்று. இச்சங்கப் பேரன்பரும் சங்கத்தே திருநாவுக்கரசர் திருவுருவப்படம் அமைத்து ஆண்டுதோறும் பெரும்பொருள் அளித்துத் திருவிழாவினைச் சிறக்க நடாத்தி வந்தவருமாகிய திரு. ம. உலகநாத பிள்ளையவர்கள், அண்மையில் இறைவன் திருவடி நீழல் எய்தியது இச்சங்கத்திற்கு ஆற்றொணாத்துயரினை விளைப்பதாகும். அந்தோ! நெருநல் உள இவர்கள் இன்றிலராயினரே!

மகிழ்ச்சி.

செந்தமிழ்ப் புலவராகிய உயர்திருவினர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கட்கு கலைநூற் புலவர் (Doctor of Literature) என்னும் பட்டமும், செந்தமிழ் மன்னராகிய திவான்பகதூர், இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கு வழக்கியற் புலவர் (Doctor of Laws) என்னும் பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தார் அளிக்க முடிவுசெய்திருப்பது பற்றி இச்சங்கம் மிகுமகிழ்வெய்துகின்றது.

வருகை.

இவ்வாண்டுகளில் இச்சங்கத்திற்கு வந்து பார்த்து மகிழ்ந்தேகிய திருவாளர்கள்:—1. திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியாரவர்கள், B. A., B. L, M. L. C. கல்வி மந்திரியார்.

2. திவான் பகதூர் T. M. கிருஷ்ணன் நாயரவர்கள், B. A., B. L. M. L. C. சட்டத்தலைவர்.

3. திரு. S. R. அரங்கநாதம் அவர்கள், M. A. சென்னைப் பல்கலைக்கழக நூனிலையத் தலைவர்.

வேண்டுகோள்.

இதுகாறும் இவ்வறிக்கையிற் கூறியவற்றை யெல்லாம் அன்புகூர்ந்து கேட்டருளிய நீங்கள், முடிவாகக்கூறும் இவ் வேண்டுகோளினையும் உள்ளத்துக்கொண்டு உறுவன செய்ம்மின். தமிழ்வளம் பெருக்கும் தனிச்சிறப் பள்ளிக்கூடத்திற்கு உங்கள் உதவிவேண்டும்; திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு உங்கள் உதவிவேண்டும்; புலவர் விழாக்கள், ஆண்டு விழாக்கள் முதலியவற்றிற்கு உங்கள் உதவிவேண்டும்; தமிழ்ப்பொழிலுக்கு உங்கள் உதவிவேண்டும்; தொல்காப்பியப் பதிப்பிற்கு உங்கள் உதவிவேண்டும்; மருத்துவச்சாலைக்கு உங்கள் உதவிவேண்டும். என்றிங்ஙனமெல்லாம் ஆங்காங்குப் பலவாறு வேண்டிக்கொண்டேமே! நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? இவற்றுள் எவையேனும் ஒன்றிற்குமட்டில் அளிப்பினும், ஏதேனும் ஒரு பை அளவில் அளிப்பினும், அது காலத்தினாற்செய்த பேருதவியாகும். அன்பரீர்! செல்வரீர்! புலவரீர்! இச்சங்கம் செய்து வரும் இத்தமிழ்த் தொண்டுகள் தமிழ் மக்களாகிய உங்கள் கடமைகளிற் சேர்ந்தன அலவா? ஆயின், இன்றே இச்சங்கத்து உறுப்பினராமின்! உறுவன செய்ம்மின்!! இயன்றன உதவுமின்!!!

நன்றி கூறல்.

செந்தமிழ்ச் செல்வர்காள்! பற்பல விடங்களினின்றும் இச்சங்க வேண்டுகோட்கிணங்கி வந்தருளிய உங்கள் எல்லோர்க்கும் இச்சங்கம் தன் மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றது. இனி, இச்சங்கத்தின் வாழ்வே தம் வாழ்வாகக் கொண்ட நம் சங்கத் தலைவரவர்கட்கும் இச் சங்கத்திற்குப் பல்வகையிலும் பொருள் அளித்துவரும் தமிழ் அன்பர்கட்கும், இச்சங்கத்துச் சிறப்புநாட்கட்கு வந்தருளி விரிவுரையாற்றியோர், தமிழ்ப் பொழிலுக்குத் தமது ஆராய்ச்சியுரைகளை அளித்து உதவியும் வரும் புலவர்பெருமக்கட்கும் இச்சங்கத்தின் ஆக்கங்கருதிப் பல்வகையான தொண்டு இயற்றிவரும் மற்றை அன்பர்கட்கும் இச்சங்கம் தனது மனமார்ந்த நன்றியைச் செலுத்தி வாழ்த்துகின்றது.

உ

திருக்குறள் அமைப்பு*

பண்டிதர், திரு. R. P. அமிர்தலிங்கம்பிள்ளையவர்கள், நன்னிலம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற திருக்குறளென்னும் திப்பிய நூலானது, எந்நாட்டினராலும், எம்மதத்தினராலும், எவ்வகுப்பினராலும் போற்றப் படுவதொன்றென்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். திருவள்ளுவ நாயனாரின் காலம் இது எனத் தெளிந்துரைத்தற்கேற்ற தக்க ஆதாரம் எதுவுமின்மையின் திருக்குறள் எக்காலத்திற்றோன்றியதென்பது நன்கு விளங்கவில்லை யாயினும், கடைச்சங்க நூல்களெல்லாவற்றினும் இத் திருக்குறள் எடுத்தாளப்பெற்றிருத்தலின் கடைச்சங்க காலத்திற்கு முற்பட்ட நூலெனக் கூறுவதில் யார்க்கும் மாறுபாடுண்டாதற்குக் காரணமில்லை. இத்திருக்குறளுக்கு முன்னும் பின்னும் தோன்றிய நூல்களுட்பல அழிந்தொழியவும், இத் திருக்குறளொன்றும் இதுகாறும் அழியாது நின்று மக்கள் வகுப்பினர் அனைவராலும் போற்றப் படுவதற்குக் காரணம் யாதென்பது அறிஞர்களான் ஆராயத் தகுவதொன்றாகும். இதற்குப் பலர் பலவாறு கூறினும், திருக்குறளின் அடிப்படையே அதற்குச் சிறந்த காரணமாகும். அவ்வாறு திருக்குறள் எந்த அடிப்படையின்மீது அமைக்கப்பெற்றுள்ளது என்பதே ஈண்டு விளக்கிக் காட்டுதற்கெடுத்துக் கொண்ட பொருளாகும்.

இனி, இதனை விளக்கப் புகுமுன் எண்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டுவது இன்றியமையாததாகின்றது. எண்களுக்கும் திருக்குறளுக்கும் இயைபென்னையெனக் கருதாது கடைபோகும்

---

* கட்டுரையெழுதும் பேரறிஞர்களை, இனி, இயன்றவரையில் தமிழ்ச் சொற்களையே அமைத்து எழுதுமாறு வேண்டிக்கொள்கின்றேம்.

வரை இதனை ஊன்றிப் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எண்கள், தனி எண்கள் (Single numbers) எனவும், சேர்க்கை எண்கள் (Compound numbers) எனவும் இருவகைப் படும். இவற்றுள் தனி எண்கள் என்று சொல்லப்படுவன, ஒன்று முதல் ஒன்பது ஈறாகவுள்ள ஒன்பது எண்களுமாம். பத்தும் அதற்குமேற்பட்ட எல்லா எண்களும் சேர்க்கை எண்களெனப்படும். இவற்றுள் தனியெண்கள் ஒன்பதுமே எண்களென்று சொல்லத் தகுவனவாகும். இவ்வொன்பதெண்களின் சேர்க்கையினாலேயே சேர்க்கை யெண்கள் உண்டாகின்றன. எவ்வாறெனில், ஒன்றோடு ஒன்பதைச் சேர்ப்பதனால் பத்து உண்டாகின்றது. இரண்டோடு ஒன்பதைச் சேர்ப்பதனால் பதினொன்று உண்டாகின்றது. இவ்வாறே ஒன்றோடு இரண்டு ஒன்பதைச் சேர்ப்பதனால் பத்தொன்பது உண்டாகின்றது. எனவே ஒன்று முதல் ஒன்பதீறாகிய தனி எண்களோடு, ஒன்பதை, ஒருமுறையோ பன்முறையோ சேர்ப்பதனால் முடிவில்லாத சேர்க்கை யெண்கள் உண்டாகின்றனவென்பது வெளிப்படை. இதனால் சேர்க்கை யெண்களுக்கெல்லாம் தனி எண்கள் ஒன்பதுமே மூல எண்கள் என்பதும் அவற்றை எவ்வாறு கண்டு பிடிப்பதென்பதும் எளிதின் விளங்கும். சேர்க்கை யெண்களை ஒன்பதால் வகுப்பின் வருகின்ற மீதமே மூல எண்ணாகும். மீதமில்லாவிடத்து ஒன்பதே மூல எண்ணாகும். உதாரணமாக 538ன் மூல எண் யாதெனில் இதனை ஒன்பதால் வகுக்க ஈவு 59ம் மீதம் 7ம் வருதலின் ஏழே 538ன் மூல எண்ணாகும். ஏழோடு 59 ஒன்பதுகளைச் சேர்ப்பதனால் 538 உண்டாகின்றதென்பது இதனால் தெளிவாக விளங்குகின்றது. 369ஐ எடுத்துக்கொண்டால் இதனை ஒன்பதால் வகுக்க மீதமின்மையின் இதன் மூல எண் ஒன்பதாம். இவ்வாறே எல்லா எண்களுக்குங் காண்க. ஆனால் தற்காலத்தில் யாவருக்கும் தெளிவாய் விளங்கக்கூடிய ஆங்கில எண்களையே உபயோகிப்பதால் மூல எண்களை எளிதாகக்கண்டு பிடித்தற்கு வேறோர் வழியிருக்கின்றது. அது, யாதெனில் சேர்க்கையெண்

களிலுள்ள எண்களை இடது புறத்திலிருந்தேனும் வலது புறத்திலிருந்தேனும் ஒரெண்ணுகும் வரையில் கூட்டினால் வருகின்ற தனி எண்ணே மூல எண்ணாகும். இஃதெவ்வாறெனில், முன் எடுத்துக்கொண்ட 538ஐயே எடுத்துக்கொண்டால் 5+3+8=16=1+6=7 ஆகின்றது. எனவே 538ன் மூல எண் 7. 369ஐ எடுத்துக்கொண்டால் 3+6+9=18=1+8=9 எனவே 369ன் மூல எண் ஒன்பது. 23ன் மூல எண் யாது என்னில் 2+3=5 ஆதலின் 23ன் மூல எண் ஐந்து. 54ன் மூல எண் யாதெனில் 5+4=9 ஆதலின் மூல எண் ஒன்பது. இவ்வாறே எல்லா எண்களுக்கும் காண்க. எந்த எண்ணைச் சோதித்துப் பார்த்தாலும் மேற் கூறிய இரு முறைகளும் சரியாகவேயிருக்கும். இது காறும் கூறியவற்றால் ஒன்று முதல் ஒன்பது ஈறாகவுள்ள ஒன்பது எண்களுமே எல்லா எண்களுக்கும் ஆதாரமாம் என்பது வெளிப்படை இனி, இவ்வெண்களே நுண்பொருள், பருப்பொருள் ஆகிய எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமென்பதும், எண்களின்றேல் எல்லாம் அழிந்தொழியுமென்பதும், எல்லா மறை பொருள்களையும், இரகசியங்களையும் அறிந்து கொள்வதற்கு எண்கள் ஏதுவாயிருக்கின்றன வென்பதும், எண் வல்லவர்களின் துணிபு. இவற்றைப் பின் வருவன வற்றானும் அறிக.

ஆதி முதலொழிய வல்லாதன வெண்ணி
னீதி வழுவா நிலைமையான்—மாதே
அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு.

(திருக்குறள் மேற்கோள்)

"எண்ணும் எழுத்தும் சொல்ஆனாய் போற்றி"
"எண்ணாகி எண்ணுக் கோரெழுத்து மாகி"

(அப்பாடிகள்)

"Without them (the numbers) the whole edifice of our civilization would fall to pieces." (Balzac)

இரவி முதலிய கோள்கள் இந்த விநாடியில் இராசி மண்டலத்தின் (Zodiac) எந்தப்பகுதி (Degree)யில் இருக்கின்றனவென்று

தெரிந்து கொள்ளவேண்டுமாயின், எண்களைக் கொண்டு அவற்றைத் தெளிவாக எளிதில் தெரிந்து கொள்ளக்கூடுமென்பது யாவரும் அறிந்ததொன்றே. நமது முன்னோர்கள் 25287 யாண்டுகளுக்கொருமுறை அயனமாறுபாடு (the procession of the Equinoxes) உண்டாகின்றதென எந்தக்கருவியின் உதவியுமின்றிக் கண்டு பிடித்துள்ளார்கள். தற்கால இயற்கை நூல் வல்லவர்கள் (Scientists) பல நூறாண்டுகள் வருந்திய பிறகு முன்னோர்கள் கூறியுள்ள காலஅளவு மிகச்சரியானது; அதில் ஒரு விநாடியும் வித்தியாசமில்லை; அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுவதே என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். இது நிற்க. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் முக்கிய எண் (Key number) ஒன்று இருக்கின்றது. உதாரணமாக எந்த வருடத்திலாயினும், ஜனவரி முதல் டிசம்பர் ஈறாகவுள்ள பன்னிரண்டு மாதங்களில் எந்த மாதங்களிலாயினும், 6, 15, 24 தேதிகளில் பிறந்தவர்களின் எண் 6. இந்த 6 (ஆறு) எண்ணுடையவர்களெல்லாம் அளவு கடந்த வசீகர சத்தியுடையவர்கள். இவர்கள் மற்றையோர்களைத் தங்களுக்கு வசப்படும்படி செய்து கொள்ளுகிறார்கள். தங்களின் கீழுள்ளோர்களால் இவர்கள் நேசிக்கவும் வணங்கவும் படுகின்றார்கள். தங்கள் உத்தேசங்களைச் செயற்கையிற் கொண்டு வருவதில் இவர்கள் மிக்க உறுதியுடையவர்கள். தங்களோடு நெருங்கிய தொடர்பில்லாதவர்களிடத்துப் பிடிவாதமும் விட்டுக் கொடுக்காத தன்மையுமுடையவர்கள். ஆனால் தங்களால் நேசிக்கப்பட்டவர்களுக்கு அடிமைகளாயுள்ளவர்கள், தாயினிடத்து மிக்க அன்புடையவர்கள், தாய் சொல்லைத்தவறி நடக்காதவர்கள், இந்த 6 எண்ணுடையவர்கள், அழகிய பொருள்களில் விருப்பமுள்ளவர்கள், சிறந்த வேலைப்பாடமைந்த வீடுகளைச் செய்விக்கின்றார்கள், சித்திரம், உருவச்சிலை, சங்கீதம், இவைகளில் பிரியமுள்ளவர்கள். இவர்கள் தனிகர்களாயிருப்பின், கலைகளுக்கும், கலைவல்லவர்களுக்கும் கொடுப்பதில் மிக்க தாராள நோக்கமுடையவர்கள். தங்கள் சிநேகிதர்களுக்கு விருந்து செய்வதிலும், அவர்கள் ஒவ்வொருவரும் தங்களையெண்ணி மகிழவேண்டு

மென்பதிலும் விருப்பமுடையவர்கள். இவர்கள் எல்லாரிடத்திலும் சிநேகமுடையவர்களாயினும், 3, 6, 9, 12, 15, 18, 21, 24, 27, 30 தேதிகளில் பிறந்தவர்களோடு மிக நெருங்கிய சிநேகமுடையவர்கள். இவர்கள் எந்தக் காரியத்தையும் துவக்குவதற்கு 3, 6, 9, 12, 15, 18, 21, 24, 27, 30, தேதிகள் நல்லனவாகும். கிழமைகளில் செவ்வாய், வியாழன், வெள்ளி, நல்லன. மேற்கூறிய தேதிகளில் ஏதேனுமொன்று, இக்கிழமைகளில் ஏதேனும் ஒன்றில் சம்பந்தப்படுமாயின் அத்தினம் மிகநன்று. இவர்கள் வசிக்கும் வீடுகளின் எண்கள், 3, 6, 9, ஆகிய இவற்றுள் இருத்தல் நன்று. ஈண்டு 3, 6, 9 என்றது மூல எண்களையாகலின்; இவற்றுள் ஏதேனுமொன்றை, மூல எண்ணாகவுடைய எந்த எண்ணாயினும் நன்று. தனியெண்களாகச் சொல்லப் படுவன வெல்லாம் மூல எண்களையே என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறே பிறந்த வருடம், மாதம், கிழமை முதலியவற்றிற்கும் எண்களிருக்கின்றன. இவற்றை யெல்லாம் கொண்டு மக்கள் தங்கள் வாழ்நாளில் அடையக்கூடிய நன்மை தீமைகள், வாழ்நாள்முடிவு, முதலியவற்றைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளக் கூடும் என்றும், தமது வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்திக் கொள்ளக் கூடுமென்றும் எண்வல்லவர்கள் (Numerologists) உறுதியாகக் கூறுகின்றார்கள். இவ்வாறு மறை பொருள் களெல்லாவற்றையும் தெரிந்து கொள்வதற் கடிப்படையாக வுள்ள எண்களுக்குள், ஏழும், ஒன்பதும் மிக முக்கியமான வைகளாகக்கருதப்படுகின்றன. இவற்றுள் ஏழு என்னும் எண் தெய்விகத்தன்மை உடையதாகவும், உலகில் கடவுளாக அல்லது கடவுளின் சக்தியாக நின்று யாவற்றையும் இயக்குவதாகவும், கருதப்படுவதோடு, மக்களுயிர்களிடத்துள்ள அறிவை விளக்கி, தெய்வத் தன்மையைப் பெருக்கக் கூடியதாகவுமிருக்கின்றது. ஒன்பது, இதற்கு நேர் எதிரான தன்மையில் ஒவ்வொரு சீவரிடத்து முள்ள தேக பலத்திற்கு ஆதாரமானதாகவும்

சடப் பொருள்களோடு சம்பந்த முடையதாகவு மிருக்கின்றது. அறிவுக்கு ஆதாரமாய் நின்று அறிவை விளக்கக்கூடியது ஏழு. உடலுக்கும் சடப் பொருளுக்கும் ஆதாரமாக நின்று உடல் வலிமையைத் தரத்தக்கது. 9. சித்துப்பொருள் ஏழு. சடப் பொருள் ஒன்பது. இவற்றுள், ஏழு, பெரியோர் நூல்களில் எங்குக் காணப்படினும் அது தெய்வத் தன்மையுடையதென்பதையே குறிக்கும். இவ்வேழை ஆதாரமாகக் கொண்டு உலகில் விளங்கும் பொருள்கள் மிகப்பல. அவற்றுட் சில கூறுதும். வாரத்தின் நாட்கள் ஏழு. இது மக்கள் அனைவராலும் தழுவப் படுவது. இந்நாட்களுக்குப் பெயராகவமைந்துள்ள கிரகங்கள் ஏழு. எந்நாட்டினரும் தங்கள் தங்கள் மொழியில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஆகிய ஏழு கிரகங்களின் பெயர்களையே, வாரத்தின் ஏழு நாட்களுக்கும் பெயர்களாய் அமைந்திருப்பது கருதத்தக்கது. இனி, கடல்கள் ஏழு, மேலுலகங்கள் ஏழு, கீழுலகங்கள் ஏழு, தீவுகள் ஏழு, மேகங்கள் ஏழு, தோற்றங்கள் (தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என) ஏழு, பிறவி ஏழு, தாதுக்கள் ஏழு, நிறங்கள் ஏழு, இசைகட்கெல்லாம் அடிப்படையான ஒலிகள் (ச. ரி. க. ம. ப. த. நி. என) ஏழு, கன்னியர்கள் எழுவர், கற்புடைமகளிர் எழுவர், வள்ளல்கள் எழுவர், முனிவர்கள் எழுவர், பதத்தினாற் பெயரிட்டு வழங்கற்பாலதாந் தன்மை யுடைய பதார்த்தங்கள் (திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம், என) ஏழு, வித்தியாதத்துவம் ஏழு, சத்திபேதம், ஏழு, சிவபேதம் ஏழு, இவற்றுடன் கீழ்வருவனவற்றையும் நோக்குக.

"For all purposes of occult calculation, the Numbers 7 and 9 are considered the most important of all. The 7 has always been understood to relate to the spiritual plane, acting as the God or creative force on the Earth and being creative, it is the uplifting, "wige" towards the higher development of the spiritual in humanity.

The 9 on the contrary is the number of physical force in every form and consequently stands in relation to the material.

In passing it may be remarked that all through the Bible and other sacred books the "seven" whenever mentioned always stands in relation to the spiritual or mysterious God force and has a curious significance in this sense whenever employed.

For a few instances of this, take the seven days (or cycles) of the creation as referred to in Genesis.

The seven heavens
The seven thrones
The seven seals.
The seven churches.

The seven days march round the walls of jericho, and on the seventh day the walls fell before the mysterious God force symbolised in the number of seven. It is also remarkable that there are exactly seven generations from David to the birth of Christ. In Revelations, we read of the "seven spirits of God sent forth into all the earth." Ezekiel speaks of "The seven angels of the Lord that go to and fro through the whole earth" which is believed to be a reference to the magnetic influences of the seven creative planets which radiate through the earth.

Again, we have the seven spirits referred to in the Egyptian religion.

The seven Devas of the Hindu's Bible,
The seven Amschaspands of the Persian faith,
The seven Angels of the Chaldean,
The seven Sephiroth of the Hebrew babala .
The seven Archangels of Revelations, etc., etc.,

Let us now take another view of this strange number. If we were to examine every class of occult teaching from the Hindu, Chinese, Egyptian, Greek, or modern school whichever one may choose, in every case—and without a single exception—we shall find that the quality of the number 7 stands for the expression of that mysterious God force in Nature before referred to—"Chiero"

இத்துணையும் கூறியவற்றால் ஏழு தெய்விகத் தன்மையுடைய தென்பது நன்குவிளங்கும்.

இனி, திருவள்ளுவ நாயனாரால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திருக்குறளும் இவ்வேழென்னும் எண்ணிலேயே அமைக்கப் பெற்றிருக்கின்றது. எவ்வாறெனில் தமிழில் நூலியற்றற்குரிய பாக்கள் பலவற்றுள்ளும் திருவள்ளுவர் வெண்பாவை யெடுத்துக்கொண்டனர். ஏனெனில், வெண்பா, (நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, குறள் வெண்பா, சவலை வெண்பா, பஃறொடை வெண்பா. என) ஏழு பிரிவுகளையுடையது.

இவ்வெண்பாக்களுள் திருவள்ளுவரால் எடுத்துக்கொள்ளப்பெற்றது, குறள் வெண்பா. ஏனெனில் அதன்கண் உள்ள சீர்கள்—ஏழு

இந்நூலின்கண் உள்ள குறட்பாக்கள் (1330=1+3+3+0=) .... ஏழு
அதிகாரங்கள் (133=1+3+3=7) .... ஏழு

இவ்வெண்களை ஒன்பதால் வகுப்பினும், ஏழே மீதம்வருதல் காண்க. இது பின்வருவனவற்றிற்கும் ஒக்கும்.

இனி, இத்திருக்குறள், அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால், என முப்பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. இவற்றுள்,

காமத்துப் பாலிலுள்ள அதிகாரங்கள் (25=2+5=7) ஏழு
இதிலுள்ள குறட்பாக்கள் (250=2+5+0=7) ஏழு
பொருட் பால் அதிகாரங்கள் (70=7+0=7) ஏழு
இதிலுள்ள குறட்பாக்கள் (700=7+0+0=7) ஏழு
பாயிர அதிகாரங்கள் நான்கையும் நீக்கி,

அறத்துப்பாலிலுள்ள அதிகாரங்கள் (34=3+4=7) ஏழு. இதிலுள்ள குறட்பாக்கள் (340=3+4+0=7) ஏழு. இனி, திருக்குறளிற் கூறப்படும் இயல்கள் (இல்லறவியல், துறவறவியல், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவியல், கற்பியல், என) ஏழு. இந்நூலின் துவக்கத்தில் கூறப்படுவது

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" என்னும் திருக்குறளாகும். இதன்கண் உள்ள எழுத்துகள் (25=2+5=7) ஏழு. ஆதல் காண்க.

இங்கு நோக்க வேண்டிய மற்றோர் சிறந்த நயம் உள்ளது. அது யாதெனின், தொல்காப்பியர்,

எழுத்தெனப்படுப
அகரமுதல் னகரவிறுவாய்
முப்பஃதென்ப" எனக்கூறியுள்ளார். இங்குத் திருவள்ளுவர் "அகர முதலவெழுத் தெல்லாம்" எனத் தொடங்கி,

"ஊடுதல் காமத்திற்கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்" என "னகர" ஒற்றில் முடித்திருத்தல் காண்க.

இனி, 1330 திருக்குறளினுமுள்ள எழுத்துக்கள் 35899 ஆகலின். இதுவும் (3+5+8+9+9=34=3+4=7) ஏழு ஆதல் காண்க.

இவ்வெழுத்துக்களின் தொகை பரிமேலழகர் உரையோடு உள்ள நாவலர் பதிப்புத் திருக்குறளின்படி. எண்ணிக்கண்டதாகும்.

இனி "திருவள்ளுவர்" என்னும் இப்பெயரிலுள்ள எழுத்துக்கள், ஏழு. திருவள்ளுவர் ஏழாவதாகப் பிறந்தாரெனக் கூறுவதும் ஈண்டு நோக்கத்தக்கது.

இனி, இத்திருக்குறளுக்கு உரையியற்றினார் பலர் உளரெனினும், பெரும் பாலும் பலராலும் போற்றப் படுவது

4

பரிமேலழகர், மணக்குடவர் ஆகிய இவ்விருவர்களின் உரைகளுமேயாகும். இவ்விருவர்களின் பெயர்களும், ஏழாதல் காண்க.

பரிமேலழகர்—இதிலுள்ள எழுத்துக்கள், ஏழு.

மணக்குடவர்—இதிலுள்ள எழுத்துக்கள், ஏழு.

இனி, திருவள்ளுவர், ஏதேனும் ஓர் பன்மை யெண்ணைக் கூறவேண்டின் அதற்கு ஏழையே கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது. இதனைப் பின் வரும் குறட்பாக்களான் அறிக.

"பழிதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரேழுபது கோடி யுறும்
செருநாற்றுச் சென்றுசெங் காதலர் யாழு
மேழுநாளே மேனி பசந்து
ஒருநா ளேழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு."

இதுகாறுங் கூறியவற்றால் திருக்குறள் தெய்வத்தன்மை பொருந்தியதோர் சிறந்த நூலெனவும், இதனை இயற்றிய திருவள்ளுவர் தெய்வப் புலமை வாய்ந்தவரெனவும், நன்கு விளங்குதல் காண்க.

இவ்வாறே 9 என்னும் எண்ணில் அமைக்கப் பெற்ற நூல் தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாக அமைக்கப் பெற்றுள்ளது. இவற்றுள்,

எழுத்ததிகார இயல்கள், ஒன்பது
சொல்லதிகார இயல்கள், ஒன்பது
பொருளதிகார இயல்கள், ஒன்பது
மொத்த இயல்கள் (27=2+7=9) ஒன்பது

தொல்காப்பியத் துவக்கத்தில் கூறப்படுவது "எழுத்தெனப்படுப" என்னும் வரியாகும். இவ்வரியிலுள்ள எழுத்துக்கள், ஒன்பது. இனி, தொல்காப்பியச் சூத்திரங்கள் 1611=1+6+1+1=9) ஒன்பது. தொல்காப்பியச் சூத்திரங்கள், 1610, என்றும், 1612, என்றும், கூறுவாரும் உளராலோவெனின்,

அவர்கள் இங்ஙனம் கூறுவது, இரண்டு சூத்திரங்களை ஒன்றாக்கிக் கொண்டும், ஒரு சூத்திரத்தை இரண்டாக அறுத்துக் கொண்டும், சொல்வதையன்றி வேறின்மையின், அவர்களும், இவ் வெண்ணுண்மையைக் காணின் 1611 என்பதை ஒப்புக் கொள்வதில் ஆசங்கையின்றாமென விடுக்க.

இனி, பொருளதிகாரச் சூத்திரங்கள் (666=6+6+6=18=1+8=9) ஒன்பது. பொருளதிகாரச் சூத்திரங்கள் இவ்வாறு 666 ஆக அமைந்திருப்பது அவ் வெண்ணினுண்மையை உற்று நோக்குவார்க்கு மிக்க வியப்பைத் தருவதோடு தமிழிலிக்கணமாகிய தொல்காப்பியத்தின் பெருமையும் நன்கு விளங்கும். பொருளதிகாரச் சூத்திரங்களின் தொகை 665, எனக் கூறுவார் உளரெனினும், 666 ஆக இருத்தலே பொருத்தமுடைத்தென்பது பின் வருவனவற்றால் இனிது புலனாகும். மனிதனுடைய எண்ணோ (666) என்பது எண் ஆராய்ச்சி வல்லவர்களின் முடிவாகும். இதனைக் கீழ்வருவனவற்றால் தெளிக.

"When this explanation is carefully considered it throws an illuminating light on the mysteriows text in Revelations. Chapter XIII Verse 11. "Here is wisdom. Let him that hath understanding count the number of the beast, for it is the number of man, and his number is 666." This strange text has puzzled the theological mind for centuries, yet if you will take the trouble to add 666 together you will get 18, and 1 plus 8 gives you the figure 9, which in turn represents the 9 planets of our solar system, the 9 numbers upon which man builds all his calculations, and beyond which he cannot go except by continual repetition of the numbers 1 to 9.

"666" producing its "spirit number" of 9 is therefore, in all truth as Revelation states "the number of the man."

The hidden meaning of this number is one of the greatest secrets of occultism, and has been concealed in a thousand ways, just as the cryptic text in Revelation has it for centuries from the minds of Theologians. "Cheiro."—

இனி, மக்கட்கு உறுதியெனை உயர்ந்தோரானெடுத்துக் கொள்ளப்பெற்ற பொருள், அறம், பொருள், இன்பம், வீடு, என நான்கென்பது வடநூல் வழக்கு. இந்நான்கினையும் புருடார்த்தமெனக் கூறுவராகலின், இந்நான்கினையும்அடைந்தவனே புருடன் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுதற்குரியவன் என்பது வெளிப்படை. அல்லாவிடத்து வடிவாற் புருடனுயி னும், உண்மையிற் புருடனுகான். இதனை, "புருடர் வடிவானதே யல்லாது கனவிலும் புருடார்த்தமேது மறியேன்" என்னும் தாயுமான அடிகள் வாக்காலும் நன்கறியலாம்.

தொல்காப்பியர் மேற் கூறிய உறுதிப் பொருள் நான் கினையும், அகப் பொருள், புறப் பொருள் என இரண்டாக்கி, இன்பத்தை அகத்திலும், பொருள், அறம், வீடு என்னும் மூன்றினையும் புறத்திலும் அடக்கியும் கூறியுள்ளாரென்ப தையும், இவ்வாறு கூறுவது தமிழ் நூல் வழக்கென்பதையும், யாவரும் நன்கறிவர். ஆதலின் இப் பொருளதிகாரத்தின் உண்மையை அறிந்தவரே மனிதராவர். அல்லாதவர் வடிவான் மனிதரேயாயினும் உண்மையின் மனிதராக மதித்தற்குரிய ரல்லார் என்பது தோன்றப் பொருளதிகாரச் சூத்திரங்கள் 666 ஆக அமைந்திருத்தல் மிகப் பொருத்தமுடைத்தாதல் காண்க.

ஏழையும் ஒன்பதையும் பற்றி முன்னர்க் கூறியவற்றை ஈண்டு ஞாபகப்படுத்திக் கொண்டு ஊன்றி நோக்குவார்க்கு, தமிழ்மொழிக்கே, உடலாகவும், உயிராகவும், 9 என்னும் எண்ணிலும், 7 என்னும் எண்ணிலும், தொல்காப்பியமும், திருக்குறளும் அமைக்கப்பெற்றுள்ளன வென்பதும், தமிழர் என்று சொல்லிக்கொள்ளுதற்கு உரிமையுடைய ஒவ்வொருவரும், இவ் விருநூல்களையும் பயின்றறிந் தொழுகவேண்டுவது அவசிய

மென்பதும், இவ்விரு நூல்களையும் கற்றார்க்கு வேறுகற்க வேண்டுவது ஒன்றுமில்லையென்பதும் நன்குபுலனாகும். ஆகலின் தொல்காப்பியமும், திருக்குறளும் எங்களுடைய நூல் எனச் சொல்லிக் கொள்வதற்குரிமையுடைய தமிழ்மக்களனைவரும் இவ்விருநூல்களையும், ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றமு மறக் கற்றுணர்ந்து, இம்மை, மறுமை, வீடு, என்னும் மும்மைப் பெரும் பேற்றையும் பெற்றுய்ய அருள் செய்யுமாறு, எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளை யிறைஞ்சி இத்துடன் இக்கட்டுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

கோளறுபதிகம்—விளக்கமயக்கம்.

திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள், B.A., L.T.,

தமிழ்ப்பொழில் துணர் 7 வைகாசி ஆனித்திங்கள் வெளியீடுபக்கம் 119-20-ல் யான் வேண்டிக்கொண்டாங்கு நாளது மார்கழித் திங்கள் வெளியீடு பக்கம் 379-86ல் கும்பகோணம் தமிழாசிரியர் திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் என் ஐயப்பாட்டை நீக்க முன்வந்து தமிழ்ப்பொழிலில் வரைந்து விடுத் திருப்பதைக் கண்ணுற்று வந்தனன். ஆயினும் என் ஐயப்பாடு நீங்கவில்லை. நாம் கவனிக்கற் பாலன மூன்றும். (1) இரண்டாஞ்செய்யுளில் காணப்படும் தாவாப்பட்ட அடி 27 நாள்களைக் குறிக்கின்றதா அல்லவா? (2) உரையாசிரியர்கள் கார்த்திகையைத் தலைநாளாகக்கொண்டது பொருந்துமா, பொருந்தாதா? (3) வராகமிகிரர் திருஞானசம்பந்தர் காலத்தவரா, முந்தினவரா, அல்லது பிந்தினவரா? இம்மூன்றையும் முறையே ஆய்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

(1). என் கொள்கைப்படி 27 நாட்களில் நல்லதென்னும் தீயதென்னும் பாகுபாடு அரனன்பு பூண்டார்க்குக் கிடையாது.

"தானுறு கோளும், நாளும் அடியாரைவந்து நலியா" வென்று கடைக்காப்பிற் கூறியிருப்பது என்னை? தான் பயணத்திற்குப் புறப்பட்டவன்று கோள்நிலை, நாட்கேடு இன்னதென்று அப்ப மூர்த்திகள் சொன்னதாயில்லை. சம்பந்த சுவாமிகளும் அதனை விளக்கவில்லை. பாலறுவாயர் ஒன்பது கோள்களையுங் கூறி எதனாலும் அடியாரவர்க்கு இடர் நிகழாதெனக் கூறியவாங்கே உலகவியலில் நாள்களிற் சில நல்லன, சில தீயனவென்றிருப்பினும் அன்பு நிறைந்த அடியார்க்கு அவ்வித பாகுபாடு கிடையாது, 'எல்லாநாளும் நல்ல நாளென்று எம்மைப் படைத்தவன் சொல் இருக்க' வென்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க நம் நாயனாரும் வேறுபாடு கருதாமல் புறப்பட்டனரென்று கொள்ளலே பதிகத்தின் கருத்துப் போக்கிற்குப் பொருந்தியதாயிருக்கின்றதெனத் தோன்றுகின்றது. எதுகைபற்றி 'என்பதென்று' ஆரம்பித்த பெருமான் வேறு சில இலக்கங்களைக் காட்டி இவற்றினுடனுப நாள்கள் என்று ஏனையவற்றைச் சுட்டி 27 நாள்களையும் குறித்தனரென்று கூறலில் பிழையாது? பக்கம் 382ல் 'ஒன்பான் கோள்களும் தீயன என்று கொண்டு முதற் பாடலிற் கூறியருளிய நாயனார், நாட்களுள், அங்ஙனமின்றி ஆகாதனவற்றைப் பிரித்து அவற்றைமட்டும், இரண்டாம் பாடலிற் கூறியருளினர்' என்ற கூற்றிற்கு ஆதாரமென்னை? ஆதரவுடன் கொண்ட கொள்கையை நிலை நிறுத்தலே ஆராய்ச்சி முறையாகும். ஆரிடங் கூறவுங் கேட்கவும் யான் வரவில்லை. உரையாசிரியர் காஞ்சிபுரம் வித்வான் சபாபதி முதலியாரவர்களும், திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்களும் தங்களுடைய தேவாரப்பதிப்பில் கார்த்திகையைத் தலைநாளாகக் கொண்டு கணக்கிட்டு, 'ஆறு' என்பதற்கு பதினெட்டொடு நான்குமல்லாத எட்டு என்று கூறலென்னையென்று யான் வினவியிருக்க, அதனைத்திரித்து 'ஆறு என்பதற்கு நான்கு என்று அர்த்தம் எழுதியிருக்குமானால்' என்று வரைந்து, என்னுரை 'பொருளில் கூற்'றென்றும், உரையாசிரியர் உரை உரையாகுமாவென்றும், எனக்குச் சோதிடர் கூறியது 'அடங்காத சிரிப்பு' விளைக்கிறதென்றும் தமிழாசிரியர் கூறியிருக்கின்றனர். பின்

வரும் குமாரசுவாமியச் செய்யுளால் 27 நாள்களும் இன்னின்ன தொடர்புற்று பயணத்திற்கு ஆகும் என்பது உணரத்தக்கது.

'அனல்முதல் ஏழ்ஏழ்ஆறு ஏழ்ஆரலுஞ் சுன்மதியும்
அந்தணன் மாலும் அலவும் இருத்தைபலாதனதேர்
முனருள கீழ்த்திசை முதலாய் முச்சிதிரிந்தபர
முதிர்கிதி மத்யானமுனர் மொழிவது யாத்திரைக்காம்!

இதன்பொருள், கார்த்திகை, ரோகணி, மிருகசிரம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம் ஆகிய இந்த ஏழு நட்சத்திரங்களில் செவ்வாய்க் கிழமையும் நத்தையுங்கூடில் மத்யானந் திரிந்ததன்பேரில் கீழ்த்திசை யாத்திரைக்கு உத்தமம். மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சோதி, விசாகம் ஆகிய ஏழு நட்சத்திரங்களில் சனி, திங்களும் பத்திரையுங் கூடில் அபராண (மாலை, எற்பாடு) காலத்தில் தென்றிசை யாத்திரைக்கு உத்தமம்: அனுசம், கேட்டை, மூலம், பூராடம்; உத்திராடம், திருவோணம், இந்த ஆறு நட்சத்திரங்களில் புதன் வியாழமும் ஜயையும் கூடில் மாங்கிக் காலத்தில் மேற்றிசை யாத்திரைக்கு உத்தமம். அவிட்டம், பூரட்டாதி, சதையம், உத்திரட்டாதி, ரேவதி, அசுவதி, பரணி, இந்த ஏழு நட்சத்திரங்களில் ஞாயிறு வெள்ளியும் பூரணையுங் கூடில் உதயத்திற்கு மேல் வடதிசை யாத்திரைக்கு உத்தமம். (யாத்திரை காண்டம் செய்யுள் 1.) மேற்படி நூல் இரண்டாஞ்செய்யுளில் கூடா நாள் பன்னிரண்டு என்று கூறியவிடத்து ஒவ்வொன்றிற்குஞ் சில தொடர்புங் கூறப்பட்டிருக்கிறது. அதனுரையாவது-பூரத்திரையம், பரணி, கார்த்திகை; திருவாதிரை; ஆயிலியம், விசாக, மகம்; சித்திரை, கேட்டை, சோதி, இவற்றில் இருத்தையுங்கூட திராசியில் ஞாயிறு செவ்வாய் புதனில் யாத்திரை போகலாகாது. நத்தை—பிரதமை, சஷ்டி, ஏகாதசி, (1, 6, 11) பத்திரை-துதிகை சப்தமி, துவாதசி 2-7-12. ஜயை—திரிதிகை, அஷ்டமி, திரையோதசி—3, 8, 13. இருத்தை—சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி 4-9-14. பூரணை-பஞ்சமி, தசமி, அமாவாசை-பௌர்ணமி 5-10-15.) 'சேர்க்கை, பார்வை, இடமாறிவருதல்' பற்றிக்கோள்கள் நற்கோள்களும் தீமைபுரிவனவாமென்றுகூறிய தமிழ்ப்பண்டிதர்

குறிப்பு:—32-ஆம் பக்கத்தொடர்ச்சி, 51-ஆம் பக்கத்திலுளது.

மேற் கூறிய வாரம் திதி முதலியனகொண்டு எல்லா நாள்களும் யாத்திரைக்காகு மென்றதைக் கூறுகதென்னே? மேலும் பெரிய வருஷாதி நூல் அல்லது சோதிட கிரக சிந்தாமணி எனும் நூலில் பக்கம் 39ல் காணப்படுவது பின்வருஞ் செய்யுளாகும்.

‘காலற்றன, உடலற்றன, தலையற்றன, நாளில்
கோலக்குய மடவார்தமைக் கூடின்மல டாவார்,
மாலுக் கொருமனை மாளிகை கோலினது பாழாம்,
ஞாலத்தவர் வழிபோகினும் நலமெய்திடாரவரே’.

காலற்றநாள் கார்த்திகை, உத்திரம், உத்திராடம். உடலற்றன— மிருகசிரம், சித்திரம், அவிட்டம், தலையற்றநாள்—புனர்பூசம், விசாகம், பூரட்டாதி-இவ்வொன்பது நாள்களும் புணர்ச்சிக்கும், மனை முகூர்த்தத்திற்கும், யாத்திரைக்கும் ஆகாவாம். இவற்றால் ஒன்பது நாள்களே ஆகாதன. வேறு சோதிடர்கள் பன்னிரண்டு நாள்கள் ஆகாதன என்பர், மற்றுஞ்சிலர் எல்லா நாள்களும் பயணத்திற்கு உதவும், என்று கூறியிருத்தலின் ஒருவர் கூற்று சரி, மற்றவர் கூற்று தவறு என்று எங்ஙனங் கூறுவது? மேற்படி நூலிலிருந்து நம் தமிழாசிரியர் வரைந்த ‘ஆதிரை பரணி.......பாம்பின்வாய்த் தேரைதானே’ (தமிழ்ப்பொழில் மார்கழி, 381-2ம் பக்கம்) என்ற செய்யுளின்பொருளை விளக்கும் ஆசிரியர் இருத்தை, பிரதமை, அஷ்டமி, உவா, ஞாயிறு, செவ்வாய், புதன், திராசிகள் முதலானவை சேரும்பொழுது பயணம் போகலாது என்று பக்கம் 185-6ல்கூறியிருக்கின்றனர். ஆகவே 12 நாளும் முற்றிலுங் கெட்டனவாகாவென்பது உற்று நோக்கத்தக்கது.

(2) கார்த்திகையைத் தலைநாளாகக்கொண்டு தாவாப்பட்ட அடிக்குப் பொருளுரைக்கலாம். எங்ஙனமெனின் கூறுதும். 1. கார்த்திகை, 9. பூரம், 7 கேட்டை, 18 பூராடம். 6 பூரட்டாதி, அதாவது முதனாள் கார்த்திகை, அதிலிருந்து 9-ம் நாள் பூரம், 7-ம் நாள் கேட்டை, கார்த்திகையிலிருந்து, 18-ம் நாள் பூராடம். பூராடத்திலிருந்து 6-ம் நாள் பூரட்டாதி, அசுவதி தொட்டுக் கணக்கிடுந் தற்கால பஞ்சாங்கத்தின்படி மேற்கூறிய

உ

தமிழ் நாட்டு வரலாறு *

திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், M. R. A. S.
கணபதிநகர், தஞ்சை.

நாம் வாழ்கின்ற, இந்திய நாட்டின் தென்பாகம் ஆகிய, இந்த நாடு தமிழ் நாடு என்று சொல்லப்படும். இதைத் தமிழகம் என்றும் கூறுவார்கள். இக்காலத்தில் நமது தமிழகம் திருவேங்கட மலைக்குத் (திருப்பதிக்கு) தெற்கே மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதோர் சிறுநிலப்பரப்பாகத் தோன்றினும், மிகப் பழங்காலத்தில் 'இந்துமகாசமுத்திரம்' முழுவதும் பரவியிருந்ததோர் பெருநிலப்பரப்பாகும் என்று பழங்கலைவல்லோர் கூறுகின்றனர். இமயமலையையும் கங்கையினையும் நமது தமிழகத்தோடு வயதில் ஒப்பிட்டுப்பார்ப்போம் ஆனால், முன்னவை பெரிதும் இளையனவே யாகும். நமது நாட்டின் பழைய வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக நின்று உதவுவன நமது பழைய இலக்கியங்களும், முன்னோர்கள் கட்டிவைத்துள்ள கோயில்களும், அவற்றில் செதுக்கிவைத்துள்ள கல்வெட்டுக்களும், நமது நாட்டைப்பற்றிப் பிறநாட்டார் எழுதிவைத்துள்ள குறிப்புக்களுமே யாகும்.

பழங்காலத்தில் நமது நாடு மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டுச் சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. மன்னர்கள் பெயர்களை ஒட்டியே அவர்கள் ஆண்ட நாடுகளுக்கும் சேரநாடு சோணாடு பாண்டி

* இது மன்னார்குடியில் நிகழ்ந்த கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் ஆகும்; அன்பர், திரு. நீ. க. அவர்கள் ஒப்பம்பெற்றுப் பதிக்கலாயிற்று.

நாடு என்று பெயர் வழங்கலாயிற்று. இப்போதுள்ள திருவாங்கூர் மாநாடும், மலையாளம் நீலகிரி மாநாடுகளும், கோயம்புத்தூர் மைசூர் முதலியவற்றுள் சிலபாகங்களும் பழைய சேரநாட்டின் அடங்கியிருந்தன என நினைக்கலாம். சென்னைக்குத் தெற்கே திருச்சிராப்பள்ளி வரையில் உள்ள மாநாடுகள் சோழநாட்டுக்குள்ளும் ஏனைய தமிழ் மாநாடுகள் பாண்டிய நாட்டுக்குள்ளும் அடங்கியிருந்தன. மேற்கண்ட நிலவெல்லைகளெல்லாம் ஒரு சமயத்தில் ஒருவர்க்குக் குறைந்தும் மற்றொரு சமயத்தில் விரிந்தும் காலத்திற்கேற்ப மாறுபட்டிருந்ததும் உண்டு. முடியுடைய மன்னர் மூவர்களைத் தவிரக் குறுநில மன்னர்கள் பலர் மலையோரங்களில் ஆணை செலுத்தி வந்தனர். இக்குறுநில மன்னர்கள் முடியுடை மன்னரோடு சிலகாலம் ஒற்றுமையுடையராயும் சிலகாலம் மாறுபட்டும் வந்தனர். வேள்பாரி என்ற குறுநில மன்னன்மீது முடியுடைய மன்னர் மூவரும் ஒருங்கே பகைகொண்டு படையெடுத்துச் சூழ்ந்தனர் என்றதோர் கதையும் உண்டு. இக்குறுநில மன்னருடைய கொடைச்சிறப்பும் வீரச்சிறப்பும் தமிழ்ப் புலவரைப் போற்றும் பண்பும் நம் சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

சோழர்.

சோழவரசர்கள் திருச்சிராப்பள்ளியை அடுத்த உறையூரையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். கி-பி. நாலாம் நூற்றாண்டுவரையில் சோழர்கள் செல்வாக்குடன் இருந்தார்கள். இந்தப் பழஞ் சோழர்களில் கி-பி. 1-வது நூற்றாண்டில் திருமாவளவன் என்று சொல்லப்படும் கரிகாலச்சோழன் முதன்மையானவன். இவன் தமிழ்நாடு முழுவதையும் தன்னடிப்படுத்தியும், வடக்கே இமயமலைவரையில் தனது ஆணை செலுத்தியும் சோழர்களுடைய பெருமையை நிலைநாட்டினான். இவன் காலத்தில் வாணிபம் வளம்பெற்றது. கலங்கரை விளக்கமும் ஆயத்துறைகளும், யவன சீன ஜாவக வணிகர்களின் மாளிகைகளும் இவன் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் திகழ்வனவாயின. வேற்று நாடுகளிலிருந்து கடல்வழியாகக் கலத்தில் கொண்டு வரப்பட்ட குதிரைகளும், நிலவழியாக வண்டிகளில் கொண்டு

வரப்பட்ட மிளகு பொதிகளும், இமயம் மேருமலைகளில் பிறந்த மாணிக்கங்களும், தென்கடலிலே பிறந்த முத்துக்களும், மேற்கு மலைகளில் இருந்த சந்தனமும் அகிலும் இத்தகைய பல நாட்டுப் பொருள்களும் நமது சோழநாட்டுத் தலை நகரிலே விலைபோவனவாயின. காவிரியாறும் பல கிளைகளாகப் பிரிக்கப் பெற்று நாட்டை வளம்படுத்தி வேலி ஒன்றுக்கு ஆயிரக்கலம் என்ன விளைவிக்கச் செய்தது. சைவ வைணவ சைன பௌத்த சமயங்கள் வேறுபாடின்றி அரசனுடைய ஆதரவு பெற்று வந்தன.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த சோழ மன்னர்களும் விதிவயத்தாலோ மதியழிவாலோ தம் கிளைமன்னருடன் ஒற்றுமையில்லாமையால், கி. பி. நாலாவது நூற்றாண்டில் வலிமையோடு பரவிவந்த பல்லவ அரசர்களின் ஆட்சியின் கீழ்பட்டுத் தமது பேரரசொழிந்து குறுநிலமன்னராய் ஏதோ ஒரு மூலையில் அடங்கி வாழ்வாராயினர். பல்லவர்கள் காஞ்சிபுரத்தை தலைநகராகக்கொண்டு சோழநாடு வரையிலும் பேரரசுபுரியத் தொடங்கினர். வடநாட்டு மன்னர்கள் எல்லாம் பல்லவர்களுக்கு அஞ்சி ஒதுங்குவார் ஆயினர். இவர்கள் முதலில் சயின பௌத்த சமயங்களையும் பின்னர் சைவ வைணவ சமயங்களையும் தழுவினர்கள். இவர்களுள் சிறப்புவாய்ந்தவன் ஆன மகேந்திரவன்மன் என்னும் மன்னனே சைவப்பெரியார் ஆகிய திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப் பல இன்னல் விளைத்துப் பின்னர் தானே சைவத்திற்குத் திரும்பினன். இவனால் ஆக்கப்பட்ட கற்கோயில்கள் பல இப்போதும் தமிழ்நாடு எங்கும் காணலாகும். அவற்றுள் சித்தன்னவாசல் குகைக்கோயில் என்பது புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது. அக்கோயிலின்கண் அவன் காலத்துத் தீட்டப்பட்ட சித்திரங்கள் பல இன்றும் உள. அவற்றுள் சில அடுத்தபக்கத்தில் காண்க. இவன் மகன் நரசிங்கப் போத்தரையன் வடநாட்டில் இறுமாப்புடன் வாழ்ந்து வந்த சாளுக்கிய மன்னன் புலிகேசி என்பவனை வெற்றிகொண்டு அவனது தலைநகரமாகிய வாதாபி என்னும் பட்டணத்தையும் அழித்து அங்குத் தன் வெற்றியை நிலைநாட்டினன். இவ்வரச

னுடைய சேனைத்தலைவராகி வாதாபி என்னும் நகரை அழித்தவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய சிறுத்தொண்டர் என்பவர். பல்லவர் காலத்திலேதான் நம் சைவ வைணவப்பெரியோர்கள் பலரும் தோன்றித் தங்கள் பாடல்களாலும் வாழ்க்கை முறையாலும் மக்களுக்குச் சமயப்பற்றை உண்டாக்கி வந்தார்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்களால் பல்லவர் பேரரசு சுருங்கலாயிற்று. அதுமுதல் சோழர்கள் மீண்டும் தலையெடுத்து, தஞ்சை, திருவாரூர், கங்கைகொண்ட சோழபுரம் முதலிய ஊர்களைத் தலைநகர்களாகக் கொண்டு ஏறக்குறையப் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் சிலகாலம் பெருஞ்சிறப்புடனும் சிலகாலம் சற்றுத் தளர்ந்தும் தொடர்ச்சியாகத் தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்தார்கள். பல்லவர்களுடைய மேலாட்சியிலிருந்து சோழ நாட்டை விடுவித்தவன் முதல் ஆதித்தன் என்னும் சோழன் ஆவான். கி. பி. 985-ல் பட்டத்துக்கு வந்த முதலாவது இராசராசன் என்னும் சோழனுடைய ஆளுகையில் இப்போதுள்ள நம் சென்னை இராசதானியில் முக்காற்பங்குக்கு மேலும் இலங்கைத் தீவும் அடங்கியிருந்தன. தஞ்சையில் உள்ள கண்டோர் வியக்கும்படியான பெரியகோயிலைக் கட்டி அதற்கு இராசராசேச்சுரம் என்னும் பெயரையிட்டவன் இவனே. சைவ சமயத்தில் பெரும் பற்றுடையவனாயிருந்தும் ஏனைய சமயங்களில் வெறுப்பில்லாதிருந்தான் என்பதற்கு அவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட பௌத்தக் கோயிலுக்கு இராசராசப் பெரும் பள்ளி யென்று தன்பெயர் கொடுத்தழைக்க உடன்பட்டதும், ஆனைமங்கலம் என்னும் கிராமத்தை மானியமாக விட்டதுமே தக்க சான்றாகும். நம்பியாண்டார் நம்பி திருமுறை தொகுத்ததும் இவ்வரசன் காலத்திலே தான். கி. பி. 11-வது நூற்றாண்டின் இடையிலிருந்து 12-வது நூற்றாண்டின் முதற்பகுதி வரையில் அரசுசெலுத்தி வந்த குலோத்துங்க சோழன் காலத்தில்தான் இராமாநுசர் என்னும் வைணவப் பெரியார் தோன்றினர். இந்த மன்னார்குடியில் உள்ள திருமால்கோயிலைக் கட்டியவனும் இவ்வரசனேயாவான். இதற்குக் குலோத்துங்க விண்ணகரம் என்பது பழம்பெயர்.

சித்தன்னவாசல் சித்திரம்.




ஓர் கணிகை



மற்றோர் கணிகை

சித்தன்னவாசல் சித்திரம்.



தாமரைப் பொய்கையின் ஓர் பாகம்



சமண முனிவர்

சித்தன்னவாசல் சித்திரம்.



மகேந்திரவர்மன்

இந்தப்படங்கள் எனது நண்பர் அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் திரு S. K. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் M. A., உதவியது.

இவன் நாட்டுக்களுக்குப் பல நன்மைகள் செய்து வந்தான். சுங்கம் வாங்குவதை நீக்கினமையால் இவனுக்குச் சுங்கந் தவிர்த்த சோழன் என்னும் பெயர் உண்டாயிற்று.

இவன் காலத்தில் தமிழ்மொழி வளர்ந்தோங்கியது. கீழ் வரும் வெண்பா இவனது சிறப்பை ஒருவாறு புலப்படுத்தும்.

'மூவாத் தமிழ்பயந்த மூந்நூல் முனிவாழி
ஆவாழி வாழி அருமறையோர் — காவிரிநாட்
டண்ணல் அபயன் வாழி அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர் என்பவர் இச்சோழர் மரபினரே.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் இடையிலே அரசாண்ட இறுதி இராசராசசோழன் என்பவன் காலத்தில் சோழநாட்டுக்குப் பலவகைத் துன்பங்கள் நேர்ந்தன. கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவச்சிற்றரசன் தான் தனியரசாக மாறுகொண்டு தோன்றுவான் ஆயினன். வடநாட்டரசர்கள் எதிர்க்கத்தொடங்கினார்கள். மாறவன்மன் சுந்தரபாண்டியன் ஒருவன் தாக்கி வெற்றிகொண்டான். இவ்வாறு பலபடியாகத் தாக்குண்டு, பலபடியாகச் சிறப்புற்றிருந்த சோழர் பேரரசு ஒழிவதாயிற்று.

சோழநாடு பின்னர்ச் சிறிதுகாலம் பாண்டியர் ஆட்சியில் அடங்கியிருந்தது. இக்காலத்தில்தான் டில்லி நவாப்பின் போர்த்தலைவன் ஆன மாலிக் காபூர் என்பவன் தென்னாட்டில் படையெடுத்து வந்து தமிழ் மன்னருடைய நிலையையெல்லாம் கலக்கினான்.

சேரர்.

சேரவரசர்கள் தமிழுக்குப் பலவகையாலும் சங்க காலம் தொடங்கி உதவிபுரிந்து வந்தனர். பெருஞ்சோற்றுதியன் என்னும் சேரமன்னன் ஒருவன் பாரதப்பெரும்போர் நடந்த காலத்தில் இருதிறப்படைக்கும் உணவு அளித்தான் என்று ஓர் சங்கச் செய்யுள் தெரிவிக்கின்றது. பதிற்றுப்பத்து என்னும் நூலில்

சேரர் தமிழுக்குச் செய்த உதவியை நோக்குமிடத்து, எவருள்ளமும் உருகாதிராது. தன்னைப் பாடிவந்த ஓர் புலவருக்கு ஓர் மன்னன் தானும் தன் தேவியும் நீங்கலாகத்தன் நாடனைத்தும் பரிசிலாகக் கொடுத்தான் என்றால் இவர்கள் தமிழ் மொழிமீது கொண்டிருந்த பேரன்பு யாம் அளவிட்டுக் கூறுந்தரத்தில் உள்ளதாமோ?

சேரன் சேங்குட்டுவேன் என்னும் அரசன், இமயமலை வரையில் சென்று தமிழ்வேந்தரின் புகழை நிறுத்தி அங்குள்ள அரசர் பலரையும் அடிமைகொண்டு திரும்பினான். கற்புக் கரசியாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டினவன் இவனே. இவன் தம்பி இளங்கோவடிகள் என்பாரே முத்தமிழ்ப் பெருங் காப்பியம் ஆகிய சிலப்பதிகாரத்தைப் பாடியவர்.

இவர்கள் வாழ்ந்தகாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாம். இவர்களுக்குப் பின்வந்த சேரமன்னர்களுள் குலசேகர ஆழ்வார் என்னும் வைணவப்பெரியாரும், சேரமான் பெருமாள் என்னும் சைவப்பெரியாரும் யாவராலும் அறிந்து கொள்ளத்தக்கவராவர். வஞ்சி, கருவூர், திருவஞ்சைக்களம் முதலியன இவர்கள் தலை நகராக விளங்கியன. பிற்காலங்களில் இம்மன்னவர்கள் தமிழ் நாட்டின் தொடர்பு நீங்கினவர்களாய் மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்வாராயினர். இப்பொழுதுள்ள திருவாங்கூர் திருவனந்தபுரம் அரசரும் இச்சேரர் வழியைச் சேர்ந்தவரென்றே கருதப்படுகிறார்கள். இவர்களுக்குப் பட்டப் பெயரான வஞ்சிபாலர் என்பது இதனை ஒருவாறு வலியுறுத்தும்.

பாண்டியர்கள்.

தமிழ் வேந்தர்கள் மூவர்களில் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டுச் சங்கம் ஏற்படுத்திப் புலவர்களைக் கூட்டி வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியதாகும். தலை யிடை கடை யென்று மூன்று சங்கங்கள் இவர்களால் நிறுவப்பட்டன. தமிழ் நாட்டின் தென்பாகம் கடலில் அழுந்திய காலத்தில் தலைச்சங்கமும் இடைச்சங்கமும் அழிந்து போயின. இச்சங்கங்களில்

எத்தனையோ நூல்கள் வெளிவந்திருந்தும் தொல்காப்பியம் என்னும் அரும்பெருநூல் ஒன்று தவிர மற்றையவற்றைப் பெறும் பேறு நமக்கு இல்லாமல் போயிற்று. கடைச்சங்கத்தாரால் வெளிவந்த நூல்களே இப்போது நமக்குக் கிடைக்கும் சங்க நூல்களாகும். அவையாவன; ஐம்பெருங்காப்பியங்களும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்குகளும், இறையனார் அகப்பொருளும் ஆகும். இவையன்றித் திருக்குறளும் உண்டு.

ஐம்பெருங்காப்பியம் என்பன- சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

பத்துப்பாட்டு என்பன- திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப் படை முதலியன.

எட்டுத்தொகை என்பன- நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியன.

பதினேண்கீழ்க்கணக்கு- நாலடி நானூறு, நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது முதலியவை.

இப்பாண்டியர்கள் தமிழ்ப் புலவர்களை எத்தகையினராக மதித்தார் என்பதனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன் கூறும்

'மாங்குடி மருதன் தலைவனாக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என்நிலவரை.' என்னும்

உறுதியால் நன்குவிளங்கும். பாண்டியர்களுள் பலரும் புலமை பெற்றிருந்தனர். பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனே தென்னாட்டில் ஆரிய வேள்வி முறைகளைக் கொணர்ந்தவனென்பது தெரிகிறது. 6-வது நூற்றாண்டில் களபரர் என்னும் ஓர் மரபினர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிப்

பாண்டியர்களைக் கீழ்ப் படுத்தினர். 7-வது நூற்றூண்டில் மீண்டும் பாண்டியர்கள் கோஙேகோன் என்னும் பாண்டியன் காலத்துத் தலையெடுக்கத் தொடங்கினர். 7-வது நூற்றூண்டிலரசாண்ட கூன்பாண்டியர் தாம் திருஞான சம்பந்தரால் சமணத்தினின்றும் சைவத்திற்குத் திருப்பப்பட்டவர். இவரை நின்ற சீர்நெடுமாறன் என்றும் அழைப்பார்கள். கி. பி. 11, 12 நூற்றூண்டுகளில் பாண்டிய நாடு சோழர்களுக்கு உள்ளடங்கியிருந்தது. 13-வது நூற்றூண்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியனும், ஜடாவர்மன் சுந்தரபாண்டியனும் தோன்றிப் பாண்டிய நாட்டை சோழர் ஆட்சியினின்றும் மீட்டார்கள். சோழ நாட்டிலும் சில பகுதிகளை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள். 14-வது நூற்றூண்டின் இடைப்பாகத்தில் பாண்டிய நாடு சிறிது காலம் மகமதியர்கள் கையிலும் பிறகு விசயநகர நாயக்கவரசர்கள் ஆட்சியிலும் சேருவதாயிற்று.

சோழ, பாண்டியநாடு முழுவதும் 15-வது நூற்றூண்டின் தொடக்கத்தில் தமிழரசர்களின் ஆளுகையினின்றும் நீங்கி வியசநகர மன்னர்களின் ஆட்சியின் கீழ் ஒதுங்குவதாயிற்று. பாண்டியநாட்டில் நாயக்கர் அரசை நிலைநிறுத்தியவர் விசுவநாத நாயக்கர் என்னும் வீரர். இவருக்குத் துணையாகவிருந்து நாட்டுக்குப் பல நன்மைகளையும் செய்தவர் அரிய நாயக முதலியார் என்பவர். விசயநகர அரசராகிய அச்சுதராயரின் சேனைத்தலைவராகிய நாகம நாயக்கனின் மகன் விசுவநாத நாயக்கர் என்பவர். இவர், தங்கள் அரசரின் கருத்துக்கு மாறுபாடாக நடந்த தம் தகப்பனை வெற்றிகொண்டு தம் வீரத்தையும், அரச நன்றியையும், கடமையையும் வெளிக்காட்டிய செய்தி யாவரும் புகழத் தக்கதாகும். பாண்டிய நாட்டில் நாயக்கர்கள் காலத்திலும் பழைய பாண்டிய மன்னர்களின் வழிவந்தவர்கள் ஒரு சிறிது அரசாளும் பதவியை ஏற்று வந்ததுண்டு. கி. பி. 1623 முதல் 1659 வரையில் மதுரையிலரசாண்ட திருமலை நாயக்கர் என்பவர் நாயக்க மன்னர்களில் சிறந்தவராவார். விசயநகர மன்னர்களுக்குக் கப்பம் கட்டும் வழக்கத்தை முதல் முதல் கைவிட்டவர் இவரே யாகும். விசயநகர மன்னர்களது வலிமை

கி. பி. 1565-ல் நடந்த தலைக்கோட்டை போரில் குன்றுவதாயிற்று; வலிமை குன்றவே முன்னம் அடங்கியிருந்த சிற்றரசர்களாகிய தஞ்சை, மதுரை, செஞ்சி நாயக்கர்களெல்லாம் தாங்கள் தாங்கள் தனி அரசர்களாகத் தலையெடுக்கத் தொடங்கினர். ஒரு சிறிது உயிர்வைத்துக் கொண்டிருந்த விசயநகர பேரரசு திருமலைநாயக்கரது சூழ்ச்சியால் அடியோடு மாய்வதாயிற்று. தாம் செய்த நன்றிகெட்ட செயலுக்குத் தக்கபடி திருமலை நாயக்கரும் மகமதிய மன்னர்களுக்குக் கப்பங்கட்டும் படி நேர்ந்தது. இவர் வழியில் வந்தவர்களில் மங்கம்மாள் என்னும் அரசி சிறந்தவராவர்.

தஞ்சையில் நாயக்கர் அரசினை ஏற்படுத்தியவர் சேவப்ப நாயக்கர் என்பவர். இவர் விசயநகர சக்கரவர்த்தியாகிய அச்சுதராயருக்கு நெருங்கிய உறவினர். இவர் குமாரர் அச்சுதப்ப நாயக்கர் (1572—1614). இவர் மந்திரியாகிய கோவிந்த தீக்ஷிதர் என்பவர் கல்வியையும் புலவரையும் மிகவும் ஆதரித்தவர். தஞ்சை நகரிலுள்ள 'ஐயங்கடை ஐயங்குளம்' என்பனவும் ஐயம்பேட்டை என்னும் ஊரும் இவர் பெயரால் நாட்டியவைகளே யாகும். இவரை, பெயரால் குறியாது "ஐயர்" என்று வழங்குவார்கள்.

நாயக்கர்கள் காலத்தில், தமிழ் நாட்டில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து கிறிஸ்தவப் பாதிரிகள் பலர் வந்து தமிழைப் படித்து, தமிழ் நாட்டில் தங்கள் சமயத்தைப் பரவச் செய்தார்கள். இவ்வாறு வந்த பாதிரிகளில் பெஸ்கி என்பவர் சிறந்த தமிழ்ப்புலவர். இவர் இத்தாலியா நாட்டிலிருந்து இங்கு வந்து தமிழ்மொழியைக் கற்று, தமிழ்மக்களும் நாணமுறும் வண்ணம் பெரும்புலமை அடைந்து சிறந்த இலக்கண இலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். தேம்பாவணி என்னும் காவியம் இவர் இயற்றியதேயாகும். முதல் முதல் தமிழில் அகராதி தொகுத்தவர் இவரே யாவார். தாயுமானவர், குமரகுருபரர் முதலிய பெரியார்கள் வாழ்ந்ததும் நாயக்கர் காலத்திலேயே யாகும்.

நாயக்கர்கள் காலத்துக்குப் பின்பு தமிழ் நாட்டில் சில பகுதிகள் மகாராட்டிரர் கையிலும் சிலபாகம் துருக்கர்கள் கையிலும் செல்வதாயின. ஆர்க்காடு என்னும் ஊரைத் தலைநகராக வைத்துக்கொண்டு மகமதியர்கள் ஆள்வாராயினர். தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு மகாராட்டிரர் ஆள்வாராயினர். 18-வது நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பெருங் குழப்பங்கள் உண்டாயின. ஐதர், திப்பு சுல்தான் இருவரும் பல முறையும் தமிழ் நாட்டைக் கொள்ளையடித்தார்கள். ஐரோப்பாவிலிருந்துவந்த வணிகர்களாகிய ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும், உள்நாட்டு அரசர்களுக்குள் உண்டாகும் கலகங்களில் ஒருவரோடொருவர் சேர்ந்து போர் புரிவாராயினர். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரில் சர்போஜி என்பவர் சிறந்தவர். இவருக்குத் துணையாகவிருந்து பல நன்மைகள் புரிந்தவர் ஸ்வார்ட்ஸ் என்னும் பாதிரியார். 19-வது நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஈஸ்ட் இந்தியா கம்பேனியாரது ஆட்சி நிலை பெறுவதாயிற்று; 1858க்குப் பிறகு பிரிட்டிஷ் ராஜ்யத்தில் சேர்ந்து அமைவதாயிற்று. குழப்பமான காலமாகிய 17, 18, 19-வது நூற்றாண்டுகளில் தமிழ்மொழிக்குச் சிறந்த ஆதரவாகவிருந்தவர்கள், இராமநாதபுரம், எட்டியாபுரம் முதலியவற்றின் சமீன்தார்களும், திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனத்தலைவர்களும் சையத்காதர் (சீதக்காதி) போன்ற வள்ளல்களுமே யாவர். 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்கள், இராமலிங்க சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், Prof. சுந்தரம் பிள்ளை முதலியோராவார்கள்.

திருவருள் துணை.

முற்காலத்தில் நாட்டுப்புற ஊர் (கிராம) வாழ்க்கை.

திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள், M. R. A. S.
தஞ்சை.

நமது உயிரும் உடலும் ஒன்று சேர்ந்து நிலைத்திருப்பதற்கு உணவு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்றென உலகம் அறியும் ஆகலின், அவ்வுணவுப் பொருளை நல்கும் உழவுத் தொழிலின் உயர்வு சொல்லாமையே அமையும். உழவுத் தொழில் நிகழ்வதற்குக் ஊர் வாழ்க்கையே இன்றியமையாததாகும். அவ்வூர் வாழ்க்கை முற்காலத்தில் எவ்வாறு நடந்ததென்று தெரிவிப்பதே இச்சிற்றுரையின் நோக்கமாகும். நாகரிகம் என நாம் கருதுகிற பலவகையான புதுமைகள் தோன்றியுள்ள இக்காலத்தில் வாழும் நம்மைப் பார்க்கிலும் முற்காலத்தில் வாழ்ந்து வந்த நம் முன்னோர்கள் மனநிலையில் பெரிதும் இன்புற்றிருந்தவர்களாகவே தோன்றுகிறபடியாலும், மக்கள் வேண்டுவது இன்பம் என்பதே தெளிந்த பொருள் ஆதலாலும், அம்முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒருசிறிது தெரிந்து கொள்வதும் பயனுடையதென்றே கருதப்படும்.

பழங்காலத்தில் ஒவ்வொரு ஊருக்கும் இன்றியமையாது வேண்டப்பட்டனவற்றுள், கோயிலும், குளம் ஆறு வாய்க்கால் முதலிய நீர் வளங்களும், ஊரார் கூடும் பொதுவிடமும் முதன்மையானவை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை

* இதுவும் மன்னார்குடிக் கௌமார குருகுலக் கல்விப் பிரசுரமேயாகும்; திரு. நீ. க. அவர்கள் ஒப்பம் பெற்றுச் சிறு மாறுதல்களுடன் வெளியிடப்படுகின்றது. பொ. தொ.

யான தெய்வத்தன்மையோடு தொடர்பு படுத்தப்பட்டு மக்களால் பாதுகாக்கப்படுவனவாயின. மக்கள் தரத்திற்கேற்பக் கடவுள் நிலையும் பலதிறத்தனவாய்க் கருதப்பட்டதும் உண்டு. அன்புருவாய கடவுளும் உண்டு. அச்சமே உருவாய கடவுளும் உண்டு. மக்கள் உடல் நலத்திற்குத் தூய்மையான நீர் வேண்டப்படுவது ஆகலின் நீர்நிலைகளும் ஒருவகையான தெய்வத் தன்மையை உடையனவாகவே கருதப்பட்டன. ஒழுக்கம், உடல்நலநெறி (Sanitation) முதலிய இம்மையின்பத்திற்கு இன்றியமையாதன எல்லாம் சமயத்தோடு இயைபு படுத்தப் பட்டிருந்தன.

ஊரில் உள்ளோர் எல்லாம் கூடும் பொதுவிடத்திற்கு மன்றம் எனவும், அம்பலம் எனவும் பெயர். அது ஊர் நடுவே ஒரு பெருவெளியிலே அமைந்திருக்கும் ஓர் மரத்தடியாகும். அம்மரம் பெரும்பாலும் ஆலமரமாகவே இருக்கும். ஊரில் உள்ளவர்களுடைய பெருவழக்கைத் தீர்த்துக்கொள்வது முதல் இளஞ்சிறுர்கள் விளையாடுவது வரையில் இந்த மரத்தின் நிழலிலே நிகழ்வவாகும். வழக்கைத் தீர்க்கும் காலத்தில் கரிகூறுவார் எவரேனும் பொய் கூறுவாராயின் அம்மரம் தளிர்வாடிப் பொய்க்கூற்றை வெளிப்படுத்தும் என்று கருதினர்கள். இது

'கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி'

(கலித்தொகை) என்பதனுல் விளங்கும். இம்மரத்தடியில் இளம் பருவத்தே விளையாடும் சிறுவர்கள் இயற்கை எழில் தங்கள் உள்ளத்தை இன்புறச்செய்யவும், உயர்ந்த பல கருத்துக்களும் உள்ளத்தே எழுந்து உறுதி செய்யவும் பெற்றவர்களாய்த் திகழ்ந்தார்கள். இம்மரத்தடியே விளையாடும்சிறுர்கள் தங்களை அறியாதே அம்மரத்திடத்து ஓர்வகைப் பற்றுடையவர்களானர்கள் என்பது,

'ஊன்விளையாடும் வைவேல் உறுவலிசிந்தித்து ஏற்பத்
தான்விளையாடி மேனுள் இருந்ததோர் தனைகல்ஆலை
தேன்விளையாடும் மாலைஅணிந்து பொற்பீடம் சேர்த்தி
ஆன்விளையாடும் ஐந்தூர் அதன்புறம் ஆக்கினுனே.'

என்னும் சிந்தாமணிச் செய்யுளால் விளங்கும். இம்மரத்தின் நிழல் பயன்படுவதைக் கண்ட சிறுர் தாமும் அவ்வாறே பயன்படவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டனர்; தன்னைக் குறைப்பார்க்கும் நிழல் கொடுக்கும் தன்மையைக்கொண்டு, நமக்குக் கெடுதி செய்தவர்க்கும் நாம் நன்மையே செய்ய வேண்டும் என்னும் பாடத்தைப் படித்தனர். பெருமரம் வலியிழந்த காலத்து அதன் விழுதுகள் பலவகையானும் நிலத்தில் காலூன்றி நின்று பாதுகாப்பதைக் கண்டு தாமும் தமது குடியோ நாடோ நலிவெய்தின் தாங்கல் கடனென்று ஓர்ந்து கொண்டார்கள்.

> 'தூங்குசிறை வாவலுறை தொன் மரங்களென்ன
> ஓங்குகுலம் நையஅதன் உட்பிறந்த வீரர்
> தாங்கல் கடனாகும் தலைசாய்க்க வருதிச்சொல்
> நீங்கல் மடவார்கள் கடன்என்றெழுந்து போந்தான்.'
>
> (சிந்தாமணி)

இவ்வாறே பற்பல உயர்ந்தநெறிகளை நமது முற்காலத்துக் ஊர்ச் சிறுவர்கள் எழுத்தறியாத இளம்பருவத்திலேயே கற்று மனவுறுதி அடைந்து பெரும் வீரர்களாய்த் திகழ்ந்து தமக்கும் தம் நாட்டுக்கும் பெருமையை நாடுவார் ஆயினர்.

முற்காலத்தில் நம் ஊர்களில் கைத்தொழில் யாவும் தழைன்பெற விளங்கின. நம் மனத்தாலும் கருதுதற்கு இயலாத மெல்லிய ஆடைகளை நெய்தார்கள். அவ்வாடைகளைப் பற்றிப் பழம்புலவர்கள் கூறும்போது, புகையைப் போன்ற மாசில் தூவுடை என்றும், மூங்கில் தாளைப்போன்ற அறுவை என்றும், பாம்பின் சட்டை உரிக்கப்பட்டதுபோன்ற அறுவை என்றும், 'இந்தரகோபம் என்னும் பூச்சிபோன்ற சாயம் தோய்க்கப் படாமலே நிறம் அமைந்த துகில்' என்றும் பல படியாகக் கூறினர்.

உழவுத் தொழிலே தலை சிறந்திருந்தது. தங்கள் முயற்சியால் வேலி ஒன்றுக்கு ஆயிரக்கலக்கணக்கில் கண்டு முதல் செய்தார்கள்.

வாணிபம் செய்பவர்கள் தங்கள் பொருளையும் பிறர் பொருளையும் ஒன்றாகவே கருதித் தொழில் நடத்திப் பெரும் பொருளை ஈட்டினர். பெண் மக்கள் வீண் செலவின்றியும் விருந்தினரைப் புறந்தருவதில் குறைபாடின்றியும் விளங்கினார்கள். பாலும் தயிரும் நெய்யும் விற்ற பணத்தைக் கொண்டுத் தங்களுடம்பில் அணிய அணிகலங்கள் செய்வதற்குப் பசும்பொன் வாங்காமல், பயன் தரத்தக்க கறவைகளை வாங்குவார்கள் என்று ஓர் பழஞ்செய்யுள் கூறுகின்றது.

இனி, எவ்வாறு ஊர் அலுவல்கள் நடைபெற்று வந்தன என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு ஊரிலும் பண்டு ஒவ்வோர் அவை இருந்ததென்றும், அந்த அவையில்உள்ள உறுப்பினரை அவ்வூரில் உள்ளவர்களே தேர்ந்தெடுப்பது வழக்கமென்றும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரியவர்கள் நல்ல நூல்களைக் கற்றவர்களாகவும் தூயவாழ்க்கையை உடையவர்களாகவும், கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவர்களாகவும், 35 வயதுக்கு மேல் 75 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். பிறர் பொருளைக் கவர்ந்தோரும் ஊர்க் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டோரும் கள்ளக் கையெழுத்து இட்டவரும், ஏதேனும் குற்றம் செய்து அதனால் கழுதை மீது ஏற்றப்பட்டவரும், ஏதேனும் கைப்பூட்டு(லஞ்சம்) பெற்றுப்பொதுக்காரியங்களுக்கு இடையூறு செய்தோரும் அவர்களுடைய உறவினரும் எக்காலத்தும் கிராம சபையில் உறுப்பினராகும் தகுதியுடையர் ஆக மாட்டார்கள். என்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்களில் கூட்டம் நடைபெறும்; அக் கூட்டத்தில் ஊரகத்தில்உள்ள வகுப்பார் எல்லோரும் கூடி அவரவர் வகுப்புக்குத் தகுதியுடையவர்களில் எவரெவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களுடைய பெயரை ஓர் ஓலை நறுக்கில் எழுதி அச் சபை நடுவே வைக்கப்பெற்றிருக்கும். அவற்றைத் தனித் தனியாக சபை நடுவே வைக்கப்பெற்றுள்ள ஓர் குடத்தில் போடுவார்கள். இந்த நறுக்குகளைப் போடுவதற்கு முன்பு அக் குடத்தில்ஒன்றும் இல்லையென, அக் கூட்டத்தில்

உள்ள வயதில் முதிர்ந்தார் ஒருவர் கவிழ்த்துக் காட்டுவார். கூட்டத்தில் உள்ளார், தங்கள் தங்கள் நறுக்குகளை குடத்தில் போட்டவுடன், குடத்தைக் குலுக்கி, அங்குள்ள அறியாச் சிறுவன் ஒருவனைக்கொண்டு ஊர்ச்சபைக்கு எத்தனை உறுப்பினர்கள் வேண்டுமோ, அத்தனை நறுக்குகளை எடுக்கச் சொல்வார்கள். இவ்வாறு எடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தாம், அந்த ஊர்ச் சபையார் ஆவார்கள். இவ்வாறு கிராமசபை உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்தவரை எடுக்கவேமாட்டார்கள். ஒவ்வொரு ஊர்ச் சபையையும் பல உட்பிரிவுகளாகப் பிரித்து ஊர் அலுவல்களையும் பிரித்துக் கொண்டு பார்த்து வருவார்கள்.

தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், சம்வற்சர வாரியம் என்பன சில உட்சபைகளின் பெயர். சம்வற்சர வாரியர் என்பவர் நியாய விசாரணை செய்வோர். ஏரிவாரியர் என்போர் நீர் நிலைகளைப் பாதுகாப்பவர்.

ஒவ்வொரு ஊரிலும் கணக்கு எழுதுவதற்கு ஓர் கணக்கனை வைத்திருந்தார்கள். ஊர்ச் சபைகள் ஒழுங்குற நடைபெறுகின்றனவா என்று பார்ப்பதற்கு அரசனால் அனுப்பப்படும் மேற்பார்வையாளரும் உண்டு.

நிலங்களை விற்பது வாங்குவது முதலியவற்றிற்கு ஆவணம் எழுதப் பட்டிருந்தன. அவ்வாவணங்கள் காப்பிடப்பட்டும் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டும்) இருந்தன. என்றும் பயன்படக் கூடிய ஆவணங்களைக் கோவில் சுவரில் பொறித்து வைத்தார்கள். நிலத்தைச் செவ்வையாக அளந்து, தரத்திற்கேற்ப வரி விதித்திருந்தனர். நம் முன்னோர்கள் நில அளவில் மிகவும் நுட்பமான அளவு வரையில் அளந்திருக்கிறார்கள் என்பதற்கு, ஒருவேலியில் (1/52428800000) ஐயாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு கோடியே எண்பத்தெட்டுலட்சம் பங்குவரையில்

அளந்திருக்கிறார்கள். இக்காலத்து நிலஅளவுக்கு, நம்முன்னோர்கள் அளவு எந்தவகையில் குறைந்ததென்று யாரும் கூறவியலாது.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஆசிரியரும் உண்டு. ஆசிரியராக உள்ளவர்கள் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மாணுக்கருடைய அன்பையும் பெற்றோருடைய நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள். கிராமத்தில் ஒற்றுமை மிகுந்திருந்தது. ஒருவருக்கொருவர் மனத்தாங்கல் உடையவர் கூட, பொதுநன்மைகளில் ஒற்றுமையாகவே இருந்து வேலை செய்தார்கள். இப்போது செல்வம் என்று மதிக்கப்படும் வெறும் பொருளீட்டத்தை அவர்கள் அடைந்திரா விட்டாலும் சிந்தையின் நிறைவாகிய செல்வத்தை அடைந்து, 'நல்லம் யாம்' என்னும் நடுவு நிலைமையால் தமக்கும் பிறர்க்கும் இன்பத்தைத் தேடி உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய நற்செயல்களும் உயர்ந்த நோக்கங்களும் நம்மை நல்வழியில் ஊக்குவனவாக.

கோளறுபதிகம்—விளக்கமயக்கம்.

திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள், B.A., L.T.,

(32-ஆம் பக்கம் தொடர்ச்சி.)

ஐந்து நட்சத்திரங்களும் (உலக வழக்குப்படி) ஆகாதனவாவது மன்றி முறையே 3, 11, 18, 20, 26-ம் நாட்களுமாகும். இவ்வாறு பொருள் கொள்வதற்கு யாது தடை? இவ்வைந்தையு மொழித்து ஏனைய நாள்கள் 22உடனுய நாள்கள் என்றுபொருள்

கோளின் தவறென்னே? கயப்பாக்கம் திரு. சதாசிவசெட்டியாரவர்கள் 9, 9+1, 9+7, 18, 6 என்று அசுவதி முதலெண்ணி 'ஒன்பதொடொன்றோடு ஏழ்' என்றதொடருக்குவலிந்துபொருள் கொள்வானேன்? ஒரு 'ஒடு' என்பதை முதலில் பிரித்துக் கூட்டிப் பொருள்படச் செய்வதேன்? 'பதினெட்டொடாறும்' என்பதற்கு 18-ம் 6-ம் என்றவர் முன்றொடருக்கு 9ஐத் தனி எண்ணாகவும் பொதுவாகவுங் கொண்டு 9 ஒடு 1 (பத்தாகவும்), 9 ஒடு 7 (பதினாறாகவும்) கூட்டுவானேன்? அங்ஙனம் கூட்டினாலன்றி தற்காலப் பஞ்சாங்கப்படிப் பொருள் கூற வழியில்லாததனாலா? 'செட்டியாரவர்கள் உரையே கொள்ளத்தக்கது' என்று பெருமை பாராட்டுவதெங்ஙனம்? முன்னர் யான் கார்த்திகைமுதனாகக்கொண்டு இடர்ப்பாடொன்றுமின்றி பொருட்படுத்தி யிருப்பதைக் கவனிக்க.

இந்த 'ஒடு' என்ற உருபுச்சொல் பின்வருஞ் செய்யுளில் ஒன்று மூன்றும் அடிகளில் பன்முறை வருவதையும் அதன் பொருளையும் நோக்குக. அது நம் நாயனாரது இரண்டாம் திருமுறை, திருமுல்லைவாயிற் பதிகத்தில் நான்காவது செய்யுளாக வருவது,

'ஒன்றொன் றோடொன்றும், ஒருநான்கோடைந்தும் இருமூன்
[றோடேழும் உடனாய்
அன்றின் றோடு என்றும் அறிவான வர்க்கும் அறியாமை
[நின்ற அரனூர்
குன்றொன் றோடொன்று கொடியொன் றோடொன்று குழுமிச்
சென்றொன் றோடொன்று செறிவாய் நிறைந்த திருமுல்லை
[வாயிலிதுவே'

இதற்குப்பொருள் கூறியவர் 1+1+4+5+6+7=24 ஆன்ம தத்துவங்களையும், 1+(1×1)+4×5+2×3×7=1+1+20+42=64 கலைகளையும் குறிக்குமென்பர்.

(3) வராகமிகிரர் கி. பி. 587 ஆறாம் நூற்றாண்டுக் கடைசி வரை வாழ்ந்தனர் என்பர் வடமொழி இலக்கியவரலாறு ஆக்கிய மாகடானல் என்பவர். (A. A. Mac. Donnel, Sanskrit Literatur, p. 435) அவர் 'ஹோரை சாஸ்திரம்' முதலான நூல்களை

இயற்றியவர், வடஇந்தியாவில் உச்சயினிநகரத்தினர். திருஞான சம்பந்தர் தமிழகமிருந்தவர். இவர் காலம் 7-ம் நூற்றாண்டுத் தொடக்கமென்றும் முதற்பாதியென்றும், 5, அல்லது 6 நூற்றாண்டென்றும் கூறுவர் ஆராய்ச்சியாளர். 7-ம் நூற்றாண்டின் துவக்கமாயின் அப்பெரியாரின் நவீன சோதிடக் கொள்கை தென்னாட்டிற் பரவுதற்குப் போதுமான காலமும் போக்கு வரத்து வசதியுமில்லாதிருந்தனவாம். அந்நூற்றாண்டின் நடு வரை எம் நாயனாரிருந்தனரெனின் அது பொருந்தாதென்பர் தத்துவப்போதகப் பேராசிரியர் திரு. பெ. சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள், அன்னார் கூறும் நியாயம் அடிக்குறிப்பில்வரும் ஆங்கில வாக்கியங்களால் விளங்கும். 'சௌந்திரிய லகிரி' என்ற நூலாசிரியராகிய சங்கராச்சாரியார் கி. பி. 630—55ல் இருந்தவரென்றும், அந்நூலில் நாயனாரை எம் 'திராவிட சிசு' என்றும், அன்னாருக்கு நிகழ்ந்த பேரற்புதமாகிய 'பார்வதிதேவி பாலளித்தமை' யை வியந்து கூறப்பட்டிருக்கிறதென்றும், அவ்வாறு பயபக்தியோடு துதிப்பதற்கு இருவருக்கும் இடையே இரண்டொரு நூற்றாண்டாயினுங் கழிந்திருக்க வேண்டுமென்றும் ஆதலால் திருஞான சம்பந்தர் காலம் 5 அல்லது 6-வது நூற்றாண்டாக விருத்தலாமென்றும்* முடிவு கூறியிருப்பதனுல்

---

* 'The Hon'ble Mr. Pelang adduces certain Aound seasons for placing Sankara in the sixth century, while Mr. I F. Fleet C. I. E., the Editor of the Indian Antiguary has equally cogent seasons for helieoing that he lived about 630—55 A D........she tone of veneration in which this philosopher refers to Sambandha froves beyond doubt, not only that the letter lived before him but that there was *a considerable interval of time between the two*. (p. 676).......Any how the opinion of so well informed a person as Mr. Casie Chitty, and the (*halapurva Pattayam* he cites, cannot but show that *it is not violent assumption to allow on interval of a century or two between Sambandha and Sankara of the 7th century*, (p.680) *The Madras Christian College Magazine, March, 1892.*

வராகமிகிரர் காலத்திற்கு முன் நாயனார் காலமென்று ஊகிக்க இடமுளது. ஆனது பற்றி வராகமிகிரரின் அசுவினியைத் தலை நாளாக வென்றைமல் கார்த்திகையையே தலைநாளாகக் கொண்டு பழையவுரையாசிரியர்கள் நாள்களை எண்ணினர் போலும். மாமகா வித்வான் மணிமேகலைக்கு அரும்பதவுரை வரைந்துளதில் மிகிரரைப்பற்றி எழுதியிருப்பதை நம் தமிழா சிரியர் மேற்கோளாகக் கொண்டுளர். பாத்திரம்பெற்றகாதை 42-ம் அடி 'ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்றபின்' என்பதற்கு விசாகம் 14-ம் நாளென்று ஆசிரியர் (கி. பி. 2, 3 நூற்றாண்டிலிருந்தவர்) குறிப்பிட்டிருப்பது குற்றமன்றென்க என்று மாமகா வித்வான் உ. வே. சாமிநாதய்யரவர்கள் கூறுவதற்கும், மிகிரரின் கொள்கையை எடுத்துக் காட்டுவதற்கும் சந்தர்ப்பம் யாதென விளங்கவில்லை. திரு. கய. செட்டியாரவர்கள் அசுவினி முதல் கணக்கிட்டதற்குக் களை கண்ணுதற் பொருட்டோ பண்டிதரவர்கள் அச்சான்று பகர்ந்தனர் என்று நினைப்பதற்கு இடமுளது.

இதுகாறும் கூறியவற்றால் 'கொண்டதே கொள்கை, கண்டதே காட்சி' என்று சாதித்தலும், பிறருரையை ஆய்தலின்றிப் பெருநகையாடலும், சோதிடக் கொள்கைகளை வேறுபாடுடையனவென்பதைக் கருதாமலும், நவக்கிரகங்களைப் போன்று நம் நாயனார் 27 நாள்களையுங் குறிப்பிட்டிலரென்று உடனிருந்து வாழ்ந்தவர்போன்று துணிந்து ஆரிடங்கூறுதலும், ஒருவருரையே சால்புடைத்தென்று ஓரஞ்சொல்லலும் ஆராய்ச்சியாளரின் சிறந்த குணங்களும் குறிகளுமாகாவென்பன தமிழ்ப் பொழில் பெற்று மெய்ப்பொருளுணர விழையும் திருவிடத்தினுள்ள தமிழறிஞர்கள் காணுதல் கடமையாம். 'நாளுங் கிழமையும் நலிந்தோர்க்கில்லை'யென்ற நறுந்தொகையுண்மை போன்று 'நாளுங்கோளும் நாயனார்க்கு* இல்லை' என்று விளக்குவதே கோளறு பதிகத்தின் முதல் இரண்டாஞ் செய்யுட்களின் உட்கிடையாகுமெனலாம்.

---

* அருந்தவப்பெருந்தகை.

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார்
தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்
குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி துணர் 7. மலர் 12. பக்கம் 576.)

இத்துணையும் கூறியவாற்றால், கிளி, மயில், மலை என்றாற் போல்வன செந்தமிழ் நிலத்து வழக்குச் சொல்லாய்க் கொடுந் தமிழ் நிலத்தினும் கற்றோர்கேயன்றிக் கல்லாதார்க்கும் இயல்பாகத் தம்பொருளை உணர்த்தலால் 'இயற்சொல்' எனப் பட்டன என்பதும், அவ்வாறன்றி அவ்வியற் சொற்களைக் குறித்த வேறு சொற்களாய்க், கிள்ளை, மஞ்ஞை, வரையென வருவன, கல்வியேதுவா னன்றிப் பொருணர்தல் அரிதாதலும், ஒருபொருள் குறித்த பலசொல்லாய் வருதலும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாய் வருதலும் ஆகிய திரிபுடைமையால் 'திரிசொல்' எனப்பட்டன என்பதும், 'திரிசொல்' என்புழிக் கருதப்பட்ட திரிபு என்பது மேற்கண்டவாறு பொருள்பற்றிய திரிபேயன்றி உறுப்புத் திரிதலும் முழுவதும் திரிதலும் எனப் பட்ட சொற்பற்றிய திரிபு அன்றென்பதும், திரிபு எனினும் வேறுபாடு எனினும் ஒக்குமென்பதும் முடிந்தவாறு காண்க.

'தன்னானே உரைக்கப்பட்டதெனினும் பிறவற்றையெல்லாம் திரியவும் திரியாமையும் கொண்டார்; இதனைத் திரியாமையே கொண்டார் எல்லாரும்..............' என்று இறையனார் களவியல் முதற்சூத்திர வுரையிலே நக்கீரனார் குறித்த பொருள்பற்றிய திரிபே ஈண்டுக் கொள்ளப்படும்.

திரிசொல் என்னும் தொகைநிலை.

திரிசொல் என்பது திரிந்தசொல் திரிக்கப்பட்ட சொல்

என்பது பொருந்தாதென்று மேலே மறுக்கப்பட்டது ஆக லானும் 'திரிசொல்' என்புழித் திரிதலாகிய புடை பெயர்ச்சி வினையின்மையானும், அது வினைத்தொகை யெனப்படாது; திரிபாகிய பண்படுத்த சொல்லாதலால் பண்புத்தொகையே யாம்; 'உயர்திணை' 'பணிமொழி' என்பனபோல, ஆகவே 'திரிசொல்' என்பது இயற்சொல் ஈறு திரிவது பற்றிய காரணக் குறியன்று. அல்லதூஉம், பெயர்வினை இடை உரி எனப் பட்ட நான்கு சொல்லினுள்ளும் ஈறு திரிவனபற்றி அவ்வவ் வியலுள் ஆசிரியர் சூத்திரங்கள் வகுத்தோதினர். அவ்வாறு ஈறு திரியும் சொற்களெல்லாம் அரிதுணர் பொருளனவெனப் படும் ஆயினும் ஒருசொல் பலபொருட்குரியவாதலும், பலசொல் ஒரு பொருட்கு உரியவாதலும் ஆகிய திரிசொல்லிலக்கணம் பெற்றனவல்ல ஆகலின் அவை திரிசொல்லெனப் படா என்பதே துணிபு.

எனவே, 'என்மனார்' என்பது வினைத்திரிசொல் என்ற தெய்வச்சிலையார் கொள்கையும் நச்சினார்க்கினியர் கொள்கையும் பொருந்தாமை அறிக. இனி அது சேனாவரையரும் சிவஞானமுனி வரும் கொண்டவாறு செய்யுண் முடிவு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால வினைமுற்றுச்சொல் என்பதே முடிந்த இலக்கணமாகக் கொள்க. இவ்வாறு செய்யுண் முடிபு கோடற்கு ஒத்து அதி காரப் புறனடைச் சூத்திரமாகப் பேராசிரியரும் திருக்கோவை யார் உரையுட் கூறினார்.

ஆகவே, இயற்பெயர், இயலசை, இயற்சீர், இயன்மொழி வாழ்த்து என்றாற்போலும் சொற்றொடர்களிலெல்லாம் இயல் என்றும் சொல்லுக்குச் செம்பொருள் இயல்பு என்பதேயாம்.

குறிப்பு:—நன்னூல் உரையாசிரியர் பெயர்வினை இடை உரி யென்ற நான்கு சொல்லினும் திரிசொற் கொண்டார் ஆயினும், நன்னூ லாசிரியர் கருத்து, தெய்வச்சிலையார் கருத்தை ஒட்டிப் பெயர்வினை இரண் டினும் கோடலே என்பது 'இயற்சொற் றிரிசொல் இயல்பிற் பெயர்வினை, யென விரண்டாகும் இடையுரி அடுத்து, நான்குமாம்' என்னும் சூத்திரக் கிடக்கை முறையால் உய்த்துணரப்படும்.

இயல் என்பதற்கு இயலுதல் என்று ஆண்டுச் சிலர்பொருளுரைத்துப் போந்ததெல்லாம் தம் 'அஃகி அகன்ற அறிவின்' பயன் தோன்றக் கூறியவாறேயாம்.

இயல், இயல்பு, இயற்கை, தன்மை, இலக்கணம் என்பன ஒருபொருட் கிளவி.

'மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.'

'எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென் றாயீரியல.'

'நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே.'

'பிண்டப் பெயரும் ஆயியல் திரியா.'

'அளபெடை யெல்லாம் அளபெடை இயல.'

'செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.'

'அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே.'

'இயற்பகை நாயனார்' என்புழியெல்லாம் இயல் என்பது இயல்பு என்னும் பொருட்டேயாதல் கண்டு கொள்க. அன்றியும், 'இயல்பு' என்பதற்கு மறுதலைச்சொல் 'திரிபு' என்பதே.

இனிப் புணரியலுள் இயல்பு என்பதற்கு மறுதலையாக விகாரம் என்னும் வடசொல் வழக்குப் பிற்காலத்ததே—தொல்காப்பிய நூல் வழக்குத் திரிபு என்பதே. இதனை,

'மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.'

'மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே.' என்னும்.

சூத்திரங்களில் ஓதியவாற்றானும் அறிக. ஆகவே இயற்சொல் என்பதற்கு மறுதலைச்சொல் திரிசொல் என்று துணிந்து கொள்ளப்படும்.

‘இயற்சொல்’ என்னும் தொடர்மொழிப் பொருள்.

இதனை,

‘அவற்றுள், இயற்சொற் றாமே,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.’

என்னும் சூத்திரமே ஆடிபோலச் செறிந்து இனிது விளக்குவதாகும். இச்சூத்திரத்துக்கு உரையாசிரியர் நால்வரும் ஒரு கருத்தினராகவே உரைகூறினர். ஆயினும் அவ்வுரைகளுள் சேனாவரையர் உரையே விளக்கமானது. அவர் உரை வருமாறு:- அந்நான்கனுள், இயற்சொல் என்று சொல்லப்பட்ட சொற்றாம் செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்தும் தம்பொருள் வழுவாமல் உணர்த்தும் சொல்லாம். அவையாவன நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னும் தொடக்கத்தன.......... திரிபின்றி இயல்பாகிய சொல் ஆகலின் இயற்சொல் ஆயிற்று. எ-து

அச்சூத்திரத்தில், ‘செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி’ என்பதற்கு, செந்தமிழ் நிலத்தார் வழங்கும் வழக்கத்திற்குப் பொருந்தி’ யென்று இளம்பூரணரும், ‘செந்தமிழ் நாட்டு வழக்கொடு பொருந்தி’ என்று தெய்வச்சிலையாரும், செந்தமிழ் நிலத்தின்கண்ணே வழங்குதலோடு பொருந்தி என்று நச்சினார்க்கினியரும் பொருள் உரைத்தார். அங்ஙனம் உரைத்தால், இயற்சொல் என்பது, செந்தமிழ் நிலத்து வழங்கும் மொழிகள் பலவாதலால், அவற்றைக் குறிக்கும் போலும் என்னும் ஐயம் நிகழாமல், ‘அந்நிலத்து வழக்காதற்குப் பொருந்தி’ யென்றார் சேனாவரையர். ‘வழக்காதற்குப் பொருந்தி’ என்றதனால், செந்தமிழ் நிலத்திலும் உலகவழக்குச் சொல்லாய்க் கல்வியெய்துவா ரன்றிக் கல்லாதாரும் எளிதிற் பொருளுணரப்பாலது என்று விளக்கினர்.

இனித் தெய்வச்சிலையார் 'அந்நிலத்துப் (செந்தமிழ் நிலத்துப்) பட்ட எல்லா நாட்டினும் ஒக்க இயறலின் இயற்சொல் ஆயின; இவற்றைச் செஞ்சொல் எனினும் அமையும்' என்று கூறினார்.

'இயற்சொல்' என்பதை 'இயல்பாகிய சொல்' என விரித்துரைத்துக் கொண்டார் சேனாவரையர். அக்கருத்து இளம்பூரணருக்கும் நச்சினார்க்கினியருக்கும் ஒத்ததே. தெய்வச் சிலையாரோ (எல்லா நாட்டினும் ஒக்க) 'இயறுதலால் இயற் சொல்' என்று விரித்துரைத்துக் கொண்டார். இங்ஙனம் தெய்வச்சிலையார் அத்தொகைமொழியை விரித்தது அத்துணைப் பொருத்தமானதன்று. ஆயினும் அவர் கூறியபொருள் ஏனையோர் கொண்ட பொருளின் பெரிதும் வேற்றுமையானதன்று. அது நிற்க,

'திரிபின்றி இயல்பாகிய சொல்லாதலின் இயற்சொல் ஆயிற்று' என்ற சேனாவரையர் கூற்றிலே, திரிபின்றி என்றதனால் இடர்ப்பாடு உளதாயிற்று. சூத்திரத்திலே தம்பொருள் வழாமல் இசைக்கும் என்று ஓதப்பட்டதன் கருத்து வேறு; 'திரிபின்றி' என இங்கே உரைக்கப்பட்டதன் கருத்து வேறு. சேனாவரையர்,

'செந்தமிழாகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்' என்ற

நன்னூற் சூத்திரத்துள், திரியாது என்ற சொல்வழக்கைக் கண்டு, அந்நன்னூலார் கருத்தோடு ஒட்டி, இங்கே 'திரிபின்றி இயல் பாகிய சொல் இயற்சொல்' என்றார்போலும். ஆயின், 'திரியாது' என்றதனால் நன்னூலார் கருதியதுவேறு, 'திரிபின்றி' என்றதனால் சேனாவரையர் கருதியதும் வேறு. ஆசிரியர் தொல் காப்பியனார் 'தம்பொருள் வழாமை' என்றதைக் குறித்தற்கே நன்னூலார் 'திரியாது' என்று ஓதினாராவர். சேனாவரையர் 'திரிபின்றி' என்றதன் கருத்து பொருட்டிரிபன்றிச் சொற்றிரிபு பற்றியதாம். இங்ஙனம் சொற்பற்றித் திரிபு கூறுதல் பொருந்தாதென்பது திரிசொல் ஆராய்ச்சியுள் காட்டப்படும்.

பிற்காலத்து இலக்கண விளக்க நூலாரும் இயற்சொல் என்பதன் பொருள்பற்றி சேனாவரையர் கூறியாங்கே கூறினர்.

நன்னூற்கு நல்லுரை விரித்த சங்கர நமச்சிவாயப் புலவர், இயற்சொல் என்பதன் இலக்கணத்தை நன்கு விளக்கிக்கூறினர். அவர் கூறியவாறு:—செந்தமிழ் நிலத்து மொழியாகிய அந் நிலத்துமொழியுள் மேற்கூறப்படும் திரிசொற்போலாது கற்றோர்க்கும் கல்லாதோர்க்கும் ஒப்ப விளக்கும் தன்மையுடைய உலக வழக்குச்சொல்லே இயற்சொல்லாகும்' எ-து. அவர் 'திரியாது' என்பதற்குத் 'திரிசொற்போலாது' என்று பொருளுரைத்த வாறு நோக்குக. ஆகவே சேனாவரையர் 'அவற்றுள் இயற் சொற்றாமே' என்னும் சூத்திரப்பொருளாகக் கூறியதும், சங்கர நமச்சிவாயப் புலவர் 'செந்தமிழாகி—இயற்சொல்' என்ற சூத் திரப்பொருளாகக் கூறியதும் கருத்துவகையான் முழுவதும் ஒத்திருப்பது காணலாம். ஆயினும் சேனாவரையர் பின்னர்த் 'திரிபின்றி இயல்பாகிய சொல் இயற்சொல் என்ற அளவு சங்கர நமச்சிவாயப்புலவர் உரைக்கு ஒவ்வாது. இனி,

இயற்சொல்லின் பாகுபாடு.

பெயர், வினை, இடை, உரிபென்னப்பட்ட நால்வகைச் சொல்லினும் இயற்சொல் உளவென்பது தொல்காப்பியவுரை யாசிரியர் எல்லாரும் கொண்ட கொள்கை.

நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயப் புலவர் மாத் திரம், பெயர் வினை இடையென்னும் மூன்றினுமே இயற்சொல் உளவாமென்று கொண்டு, உரிச்சொல்லினும் இயற்சொல் உள தென்ற முன்னையுரையாசிரியர் கொள்கையை மறுத்தார். அவர் அவ்வாறு மறுத்தற் கேதுவாயிருந்தது,

'பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்.' என்னும்

நன்னூற் சூத்திரம். அச்சூத்திரத்தில் 'செய்யுட்குரியன உரிச் சொல்' என்று கூறப்பட்டதனால் அது வழக்கிற்கு உரியதன் றெனக்கொண்டு, இயற்சொல்லாக வாராதென்று கருதினர்

போலும். அற்றேல் அவர் கருத்துத்தவறுடைத்தாம். என்னை? ஆசிரியர் தொல்காப்பியனார் உரிச்சொல்லை வெளிப்படவரும் உரிச்சொல் எனவும் வெளிப்பட வாரா உரிச்சொல் எனவும் இரண்டு வகை கொண்டார் என்பது,

'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொன் மேன' என்னும்

சூத்திரத்தால் விளங்கும். அவற்றுள் வெளிப்படவரும் உரிச்சொல் என்பது உலக வழங்குச் சொல்லாகிய இயற்சொல்லேயாம்.

'உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.'
'புரை உயர்வாகும்.'
'பயப்பே பயனும்.'
'பசப்பு நிறனாகும்.'
'இயைபே புணர்ச்சி.'
'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி.'
'மழவும் குழவும் இளமைப் பொருள.'
'மாலை இயல்பே.'

என்னும் உரிச்சொற் சூத்திரங்களிலே கண்ட மிகுதி, உயர்வு, பயன், நிறன், புணர்ச்சி, சுழற்சி, இளமை, இயல்பு என்னும் இச்சொற்களும் இவை போன்றன பிறவும் வெளிப்பட வந்த உரிச்சொல்லாகிய இயற்சொல் என்பதற்குத் தடையென்னை?

'செய்யுட்குரியன உரிச்சொல்' என்ற நன்னூலார்க்கு அவை செய்யுட்கே யுரியன வழக்கிற்கு உரியன வல்ல என்பது கருத்தன்று. செய்யுள் வழக்கிற்கு விசேட வுரிமையுடையன என்பதே கருத்தாம். செம்மை வெண்மை நன்மை தீமை வன்மை மென்மை இளமை என்பன—செந்தாமரை வெண்ணீறு நல்லவர் தீநட்பு வலியர் மெலியர் இளையர் என வழக்கில் வருவன வல்லவோ? அவையெல்லாம் இயற்சொற்றாமே. ஆகலின் உரிச்சொல்லுள்ளும் இயற்சொல் உளவெனவே துணிந்து கொள்க. இனி,

திரிசொல்லிலக்கணம்.

இவ்விலக்கணம்பற்றி உரையாசிரியர் பலரும் உண்மை துணியலாற்றாது தடுமாறுவாராயினர். அதற்குக் காரணம் ஆசிரியர் தொல்காப்பியனார் அத்திரிசொல்லின் பொது விலக்கணத்தையே

'ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி.' என்னும் சூத்திரத்தால் ஓதி, அதன் சிறப்பிலக்கணத்தைப் பிறிதோரிடத்து ஒருவகையான் ஓதி, அதனை உய்த்துணர வைத்தனர், உய்த்துக் கொண்டுணர்தல் என்பதோர் உத்திபற்றி. அதனையறியாது இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் என்னும் இவர் மூவரும் அவ்விலக்கணத்தைப் பழுதுபடக் கூறினார். தெய்வச் சிலையார் ஒருவாறே தடுமாறாமல் உரை கூறினார். திரிசொல்லின் சிறப்பியல்பை ஆசிரியர்

'அவற்றுள், இயற்சொற் றாமே,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.'

என்னும் சூத்திரத்தில் ஓதியவாற்றானே உய்த்துணர வைத்தார். அச்சூத்திரத்துள், 'வழக்கொடு சிவணி' என்றதும் 'தம்பொருள் வழாமை இசைக்கும்' என்றதும், வழக்கொடு சிவணாததும் தம்பொருள் வழாமை இசைக்காததும் ஆகிய திரிசொல்லை விலக்கியவாறு. செந்தமிழ்நிலத்து 'வழக்கொடு சிவணாமையும்' 'தம்பொருள் வழாமை இசையாமையுமே' திரிசொற்குச் சிறப்பியல்பு என்பது பெற்றும். இக்கருத்துக்கொண்டே நன்னூலார்

'ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் என்ப' என்னும் சூத்திரத்தால் அவ்விலக்கணத்தை விளங்கவுரைத்தார். இச்சூத்திரத்தில் 'அரிதுணர் பொருளன' என்றது 'செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணாமை' என்பதையும் 'தம்பொருள்

வழாமை இசையாமை' என்பதையும் கருதி வேறோராற்றால் கூறப்பட்டது. இதனை நோக்காது மேற்குறித்த உரையாசிரியர் மூவரும், இயற்சொல்லே தன் வாய்பாடு திரிந்து வழங்கப் பெற்றமையால் திரிசொல்லெனப் பெயர் பெற்றனவெனவும், அத் திரிபு இயற்சொல்லின் ஒரு கூறு நிற்ப ஒரு கூறு திரிதலும் (உறுப்புத் திரிதலும்) அவ்வியற்சொல்லே முழுவதூஉம் திரிதலும் என இருவகைப்படுமென்றும் கூறி,

'கிளி' என்பதே 'கிள்ளை' யெனவும்

'மயில்' என்பதே 'மஞ்ஞை' யெனவும் ஒரு கூறு நிற்ப ஒரு கூறு திரிந்தன எனவும்,

'மலை' யென்பது 'விண்டு' 'விலங்கல்' 'அடுக்கல்' என முழுவதுந் திரிந்தன எனவும் உதாரணம் காட்டினர்.

தெய்வச்சிலையார் கொள்கையோ அம்மூவர் கொள்கையொடும் படாதது, அவர்,

'மலை' என்பதற்குக் 'குன்று' 'வரை' யெனவும்,

'குளம்' என்பதற்கு 'மூழி' 'பாழி' யெனவும்,

'வயல்' என்பதற்கு 'செய்' 'செறு' எனவும் வருவன ஒருபொருள் குறித்த வேறு சொல்லென்றும்,

'துருத்தி' யென்பது 'யாற்றிடைக் குறையையும் தோற் கருவியையும் உணர்த்தும்;

'ஆழி' யென்பது 'கடலையும் நேமியையும் வட்டத்தையும் உணர்த்தும்; இவை வேறுவேறுபொருள் குறித்த ஒருசொல் லென்றும் கூறியொழிந்தார். இயற்சொல்லே ஒருகூறு நிற்ப ஒரு கூறு திரிதலும் முழுவதும் திரிதலும் இவர் கொண்டிலர். மேற்கண்டவாறு வேறுவேறு சொற்கள் ஒருபொருள் குறித்தும் ஒருசொல்லே வேறு வேறுபொருள் குறித்தும் வருதலே திரி யென்பதும், அத்திரிபுடைய சொல் திரிசொல்லெனப்பட்ட தென்பதும் இத் தெய்வச்சிலையார் கொள்கையாகும். இவர் இயற்சொல்லால் உணர்த்தப்படும் பொருண்மேல் வேறுபட்ட வாய் பாட்டால் வருவன திரிசொல்லாகும் என்றும் கூறினர்.

இனித் திரிசொல்லின் பாகுபாடு.

இளம்பூரணர் :—பெயர் வினை இடை உரியென்னும் நான்கு சொல்லினும் திரிசொல் வருமென்று கூறினர் ஆயினும் பெயர்ச் சொல்லுள் மாத்திரம் உதாரணம் காட்டி யொழிந்தார்.

சேனாவரையர் :— திரிசொல் பெயராயல்லது வாராது என்றார். உதாரணமும் பெயர்ச்சொல்லே காட்டினார்.

தெய்வச்சிலையார் :—திரிசொல் பெரும்பான்மை பெயர்ச் சொல்லாயும் சிறுபான்மை வினைச்சொல்லாயும் வரும் என்றார். ஆயினும் பெயர்ச்சொல் ஒன்றற்கே உதாரணம் காட்டி வினைச் சொற்பற்றி உதாரணம் காட்டாதொழிந்தார். இவர் வினைத் திரிசொல் என்றதற்குத் திரிசொற்பற்றிய சூத்திரவுரையிலே உதாரணம் காட்டினாரிலர் ஆயினும், 'என்ப' என்னும் முற்றுச் சொல் 'என்மனார்' எனத்திரிந்து நின்றது என்றார். (சூ. 1-உரை)

'வருதேம்' 'உண்டேம்' என்பன 'வருவோம்' 'உண்போம்' எனத் திரிந்தனவென்றார். (வினை சூ. 2-உரை.)

'வாழ்க' என்னும் வியங்கோட்சொல் 'வாழி' 'வாழிய' 'வாழியர்' எனவும், 'ஓம்புக' என்பது 'ஓம்பல்' எனவும் 'ஓதுக' என்பது 'ஓதல் வேண்டும்' எனவும், 'அருளுவாராக' என்பது 'அருளுவார்' எனவும் திரிந்தனவென்றார். (ஷை சூ. 29-உரை) 'என்றார்' எனற்பாலது காலமயக்கத்தால் 'என்மனார்' எனவந்தது என்றார் (ஷை சூ. 50-உரை) இவைமெயல்லாம் வினைத் திரிசொல் என்பது இவ்வுரையாசிரியர் கருத்துப்போலும்,

மேலும், 'செய்யாய்' என்னும் முன்னிலை வினைச்சொல் 'செய்' என நின்றதும், வினையெச்சம் முற்றாய்த் திரிந்தனவும் ஒரு வாய்பாட்டு வினையெச்சம் பிறிதொரு வாய்பாட்டு வினை யெச்சமாகத் திரிந்தனவும், செல் என்பது சென்றி எனவும் நில் என்பது நின்மே எனவும் திரிந்து நிற்பனவும் இவை போல்வன பிறவும் வினைத்திரிசொல் என்பதும் இவ்வுரை யாசிரியர் கருத்துப்போலும்.

இனி, நச்சினார்க்கினியர் :—அவ்வியற்சொல் திரிசொல்லாங் கால் பெரும் பான்மை பெயராகவும் சிறுபான்மை வினைத்திரி

சொல்லாகவும் திரிதலன்றி இடையும் உரியுமாகத் திரிந்துவாரா என்றார். இவர் வினைத்திரிசொல் என்றதற்குக் காட்டிய உதாரணங்கள் :—கேட்டைவாயாயின், செப்பிமின், ஈங்குவந்தீத்தாய், புகழ்ந்திகுமல்லரோ, என்மனார், என்றிசினோரே, பெறலருங் குரைத்து என்பன போல்வன. இவை சிறிது நிற்பத் திரிந்தன வென்றார்.

இவர் வினைத்திரிசொல் என்றதுபற்றிச் சிந்தாமணி முத்தி-செய்-292 உரையுள்ளே எழுதிய பகுதி ஒன்று உண்டு. அது வருமாறு:—

'தமிழ்ப்பாடையில் உலக வழக்காகிய இயற்சொற்களில் ஒரு வினையை உணர்த்துதற்கு ஒரு சொல் வழங்குதலன்றி இருசொல் வழங்குதலின்மையின் 'சிறை' யென்னும் சொல்லும் 'கட்டு' என்னும் சொல்லும் பரியாயச் சொல்லன்றி வேறுவேறு பொருடருஞ் சொற்களாம். 'சிறை' தடுத்துக் காத்தலை உணர்த்தும் 'கொல்லுதல்' 'அகப்படுத்தல்' 'தகைத்தல்' என்றாற்போல ஆசிரியன் முழுவதூஉம் திரித்த சொற்கள் பரியாயச்சொற்களாம். 'சிக்க' என்பது திசைச்சொல்.

'கட்டினன்' என்னும் சொல் 'உண்டான்' 'வந்தான்' 'போயினன்' என்பனபோலப் புடைபெயர்ச்சித் தொழில் உணர்த்தும் சொற்கு வேறோர் சொல்லின்றி நிற்கும். இதற்கு, 'வீக்கினன்' 'பிணித்தான்' 'யாத்தான்' என்றாற்போல ஆசிரியன் முழுவதூம் திரித்துக்கொண்ட வினைத்திரிசொற்கள் பரியாயச் சொற்களாம். இது 'பசுவின் முலையைக் கட்டினன்' 'பாம்பின் வாயைக்கட்டினன்' என்றாற்போலப் புடைபெயர்ச்சித்தொழில் புலப்படாமலும் நிற்கும், இவ்விரண்டும் வேறு வேறுபொருள் தருதலின் ஒன்றற்கொன்று பரியாயம் ஆகாமையின், 'சிறை' யென்னும் சொல்லிடத்துக் 'கட்டு' என்னும் சொல்லின்பொருள் பிறத்தல் இல்லை—எ-து.

இதனால் 'கட்டினன்' என்பதற்கு 'வீக்கினன்' 'பிணித்தான்' 'யாத்தான்' என வருவன வினைத்திரிசொல்லென உணர்த்தினராயிற்று.

வினைத்திரிசொல் வேண்டின தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் இருவருள்ளும் தெய்வச் சிலையாரது கொள்கை வினைச்சொல்லின் ஈறுதிரிந்தனதே வினைத்திரிசொல் என்பது. நச்சினார்க்கினியர் கொள்கை மேற்கூறியாங்குக் 'கட்டினான்' என்பதற்கு 'வீக்கினான்' 'பிணித்தான்' 'யாத்தான்' என்றாற்போல வருவனவும், வினைச்சொல் ஈறு திரிந்தனவும் வினைத்திரிசொல் என்பது.

'வழக்கு வழிப்பட்ட சொல்லீறு திரியினும்
படைத்துக் கொண்ட சொல்லொடு சிவணித்
திரிசொல் என்றே செப்பினர் புலவர்
வரிவளைப் பணைத்தோள் மடநல்லோயே.' என்றொரு

பிறநூற் சூத்திரம் 'சிதைவெனப் படுபவை வசையற நாடின்' என்னும் மரபியற் சூத்திரவுரையுள்ளே 'பொருளில மொழிதல்' என்பதற்கு மேற்கோளாகப் பேராசிரியரால் காட்டப்பட்டது. இச்சூத்திரக் கருத்துப்பற்றியே உரையாசிரியர் எல்லாரும் மேற்கண்டவாறு திரிசொல் இலக்கணம் கொண்டுரைத்தார் போலும்.

தெய்வச்சிலையாரும் நச்சினார்க்கினியரும் வினைச்சொல்லுள்ளும் திரிசொல் வேண்டினாராகச் சேனாவரையர் பெயர்ச்சொல் ஒன்றிலேமாத்திரம் திரிசொற்கொண்ட காரணம் யாதோவெனின், வினைச்சொல்லும் உரிச்சொல்லும் அடியாக வினைப்பெயரும் பண்புப்பெயரும் தோன்றுதலால் அவை திரிசொல்லாகப்பெறும் இலக்கணமே இலக்கணமாக, வினைச்சொல்லும் உரிச்சொல்லும் தனியாகத் திரிசொல் இலக்கணம் வேண்டா ஆகலானும் உரியியலினும் திவாகரம் பிங்கலம் முதலிய நிகண்டுகளினும் ஒருசொல் பலபொருட் குரியனவாய் வருவனவும், பலசொல் ஒருபொருட் குரியனவாய் வருவனவும், வினைச்சொல்லேயாக உரிச்சொல்லேயாக, எல்லாம் பெயர்ச்சொல்லாகவே வைத்து ஓதவேண்டுதலானும், இடைச்சொற்குத் தான் சார்ந்த மொழியின் தொடர்பாற்றலாற் றோன்றும் பொருளன்றி தனக்கென வேறுபொருள் இன்மையானும், அவை திரிசொல்லெனப் படுதற்கு உரியனவல்லவென்னும் கருத்துப்போலும்.

விக்குதல் பிணித்தல் யாத்தல் என்பன கட்டுதல் என்னும் ஒருபொருள் குறித்த பலபெயர்த்திரிசொல் என 'முடியவே' அவ்வினைமுற்றின் வாய்பாட்டால் வேறு திரிசொல் வேண்டாமை உணர்க. இவற்றையெல்லாம் நன்குணர்ந்த சங்கர நமச்சிவாயப் புலவர், 'இயற்சொல் திரிசொல் என்றது அவற்றின் எழுத்துக்கள் திரியாமையும் திரிந்தமையும் கருதியன்று; வானரத்தின் முகம் தன்னியல்பாய் இருந்ததேனும், நரர்முகச் செவ்விக்கு மறுதலைப் பட்டமை கருதி வலிமுகம் எனப்பட்டதுபோலக் கல்வியேது வானன்றி இயல்பாகத் தம்பொருளை உணர நிற்றலின் இயற்சொல் என்றும் அவ்வியல்பிற்கு மறுதலைப்பட்டுக் கல்வியேதுவால் தம் பொருளை உணரநிற்றலின் திரிசொல்என்றும் கூறப்பட்டது என்றார்.

இலக்கணக்கொத்து நூலாரும், கிளியென்பது கிள்ளையென வும் மயில் என்பது மஞ்ஞையெனவும் திரியும் என்பார் கூற்றை (சூ. 125-உரையுளே) மறுத்துரைத்தார்.

இனிச் சிவஞான முனிவரும் இவ்விலக்கணம்பற்றி இலக் கண விளக்கச் சூறுவளியில் விளங்க வுரைத்தனர். அவர் உரை வருமாறு:—

'அருமையானன்றி இயல்பால் பொருளுணரும் சொல்லை இயற்சொல் எனவும், அதனின் வேறாய் அரிதுணர் பொருளன வாகிய சொல்லைத் திரிசொல் எனவும் கூறிய உண்மை நோக் காது 'யான்' 'யாம்' 'நீ' 'நீர்' என்பன 'என்' 'எம்' 'நின்' 'நும்' எனத் திரிந்தாற்போல 'மலை' என்னும் சொல்லே 'விலங்கல்' 'அடுக்கல்' என்றற்றொடக்கத் தனவாய்த் திரிதலின் திரிசொல் எனப்படும் எனவும், அது திரியுங்கால் 'கிளி'யென்பது 'கிள்ளை' யென உறுப்புத் திரிந்தும், 'தத்தை' யென முழுவதும் திரிந்தும் வருமெனவும் கூறினர். 'மலை' யென்பதே 'விலங்கல்' 'அடுக்கல்' என்றற்றொடக்கத்தனவாகத் திரியுமெனின், அவை யெல்லாம் ஒரு சொல்லெனல் வேண்டும். அவ்வாறன்றி 'ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும்' எனவும் ஆவி, உயிர், உடம்பு உறுப்பு ஒற்று உடல் புள்ளி யென்றற்றொடக்கத்தன வற்றைப் பரியாய நாமங்களெனவும் அவர் தாமே கூறுதலான்,

அவர்க்கு அது கருத்தன்றென மறுக்க. அப்பரியாய நாமங்கள் எல்லாம் பெரும்பான்மையும் ஒவ்வொரு காரணம்பற்றி வருதலின், வேறு சொல்லேயாம் என்பது.'

எனவே இயற்சொல் திரிசொல்லென்னும் இவற்றின் இலக்கணம்பற்றிச் சங்கர நமச்சிவாயப் புலவரும் சிவஞான முனிவரும் கூறிய பொருளே ஆசிரியர் கருத்திற்கு ஒத்ததெனத் துணிந்து கொள்க.

(தொடரும்.)

௳

வித்துவான் வேதாசலய்யர் என்பார் போலிமறுப்பு.

'கொன்றைமலர் வேய்ந்த செஞ்சடைக் கூத்தனும்,
குன்றுபக எறிந்த வென்றிகொள் வேலனும்,
கைம்மா முகனும் கமலத்தன் கேள்வனும்,
நான்மறை பயின்ற நாவுடை யொருவனும்,
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டமுடைச் செல்வனும்,
கடனிலக் கடவுளும் காடுகெழு செல்வியும்,
நாவின் கிழத்தியும் பூவின் கிழத்தியும்,
வேந்த னிலைகெடுத் தோங்குமலை யழுத்திக்
கடன்முகந் துண்டு பொதியில்வாழ் முனிவனும்,
கூற்றங் குதித்த மார்க்கண் டேயனும்,
வான்மீகி முனிவனும் கான்மீது படர்ந்து
ஈரஞ்சு தலையொடு நாலஞ்சு கரமறுத்து
இலங்கையர் வேந்தனை வலந்தொலை யிராமனும்,
நெருப்பொடு நீரினைப் பணிகொண் டுருத்திகழ்
காழிப் பிள்ளைமுதல் நால்வரும், ஆழி
அறிதுயி லமர்ந்தோன் அருளுடைப் பெரியரும்,

நாவினும் செவியினும் சுவைத்தினி தருந்திய
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி யன்றே'
தெய்வமொழி யென்பது!

இத்தகைய பெருந்தமிழ் மொழிக்குப் பிறவாயாக்கைப் பெரியோன் அருளிச்செய்தவாறே இயலிசை நாடகம் என்னும் மூவகையிலக்கணமும் வகுத்துரைத்த அகத்தியனார் மாணாக்கர் முந்நால்வருள்ளும் முதன்மையெய்தினோர் ஆகிய தோல்காப்பியனரால், இப்பொழுது வடமொழி வழக்கில் உள்ள நான்குமறைகளும் வியாதரால் வகுக்கப் பட்டதற்குப் பல்லாயிரவாண்டுகட்கு முன்னே, பாண்டி நாட்டுக் கடல் கொண்டொழிந்த கபாடபுரத்தின் கண்ணே இடைச்சங்கம் நிலவிய காலத்தே, தொகுத்து இயற்றப்பட்டு, அவ்விடைச் சங்கத்திற்கும் கடைச்சங்கத்திற்கும் நூலாக வழங்கப்பெற்று, மாபுராணம் பூதபுராணம் முதலிய நூல்களுக்கு முற்பட்டதாய், நன்னூல் இலக்கணவிளக்கம் முதலிய பின்னூல்களுக்கெல்லாம் முதனூலாய், எல்லாத் துறைகளினும் நிரம்பிய இலக்கணம் உடைமையால் மற்றையெல்லா நாட்டுமொழிகளினும் சிறப்புடையதாய், இன்றுகாறும் வழக்கு வீழ்ந்து ஒழியாத மேம்பாடு உடையதாய், மற்றையெல்லா நாட்டுமொழி வல்லார்க்கும் புதிய அறிவொளி அளித்து அகவிருள் துடைத்து மண்ணுலகில் படரும் செஞ்ஞாயிறென விளங்கும் இயற்றமிழ் இலக்கணமாகிய தோல்காப்பியத்தின் பகுதிகளாகிய எழுத்து, சொல், பொருள் என்னும் அதிகாரம் மூன்றனுள்ளும் நடுவணதாகிய சொல்லதிகாரத்திற்கு,

வளம்படு கல்வியின் இளம்பூரணரும்,
மெய்யுணர்வு சான்ற தெய்வச்சிலையரும்,
சொல்லாடல் ஒல்லாக் கல்லாட னாரும்,
பேரா உரைவலிப் பேராசிரியரும்,
வானோர் புகழுடைச் சேனாவரையரும்,
எச்சமில் கலையுணர் நச்சினார்க்கினியரும்,

ஒழியாப் பொருளுரையெழுதி அழியாப் புகழுடம்பு எய்தினார். அப்பால்,

தமிழுலகு புரிந்த தவத்தினால் தோன்றித்,
திருவாவடு துறை ஒருவா தமர்ந்தோர்
ஐவரை யகற்றி அறுவரை அழுத்தி,
வளிவரை நிறுத்தி ஒளியுரு வெய்தி
அளப்பருந் தமிழோடு ஆரியப் பரவை
ஒருங்குண் டமிழ்ந்த குறுமுனி ஒப்பப்,
பாடியம் விரித்துப் பாக்கள்பல புனைந்து
பன்னிரு வர்க்குநூல் பாங்குறப் பகர்ந்து
வரைபகு வேலினும் கூரிய மதியுடைத்
தெய்வப் புலமைச் சிவஞான முனிவர்
இருமொழிக் கடற்கும் வரம்புவே றமைத்து
ஒருதனித் தமிழ்விளக் குயர்மலை யேற்றித்
தொல்காப்பிய வுரைத் துரிசறக் கடைந்து
ஆலமர் யோகத்து மாதவன் என்னச்
சூத்திர விருத்தியென் றொருபெயர் புனைந்த
திருமணிச் செப்பிற் பொருண்மணி செறித்தாங்கு
அளித்தனர் புலவர் யாவரும் கொளவே.

இம்முனிவர் பெருமான் 'கொடுங்கால் குலவரை யேழேழ் பொழில் எழில் குன்றும் அன்றும்' கலங்காத மனவுறுதி யுடையார். அவர் இயற்றியருளிய நூல்களும் உரைகளும் 'விண்ணைமடங்க விரிநீர் பரந்து வெற்புக் கரப்ப, மண்ணை மடங்க வருமொரு காலத்தும் மன்னி நிற்கும்' மேம்பாடு வாய்ந்தன.

இங்ஙனம் தொல்காப்பியம் என்னும் அரும்பெருநூலும் அதன் அரிய வுரைகளும் இத்தமிழுலகமேயன்றி ஏனைய உலகங் களும் அறிவொளியுற நிலவுறும் இக்காலத்தே, பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் என்பார் ஒரு புலவர் தோன்றித் 'தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக் குறிப்புரை' யென ஒன்றெழுதி வெளியிட்டனர். அவர் அறிவில் ஒருவாற்றால் சிறந்தார் ஆயினும், அடிப்பட்டு வந்த தமிழ்ப் பயிற்சியின்றி, வடமொழியொடு ஆங்கிலமொழியை முன்னர்ப் பயின்று அவ் விருமொழிப் பற்றும் தம் மனத்தில் உறைத்ததன் பின்னர்,

நம் அருந்தமிழ்மொழியை, அவர்க்கும் எமக்கும் மகப்பருவத்திலே இருமுது குரவரையும் அம்மே அப்பா என்று அழைக்க ஈன்றாளால் கற்பிக்கப்பட்ட குருமொழியை, நம்மை யீன்றான் என்றும் பயின்ற ஒருமொழியை, திருஞான சம்பந்தப்பெருமான் பசித்தழுவார்போல் அம்மே அப்பா என்று கூவியும், அண்டங்கள் எல்லாவற்றையும் ஈன்றும் கன்னியாகிய தாயின் திருமுலைப் பாலை உண்ணுதற்கு உரியதாகிய பெருமொழியைப் பேச்சு வழக்கின்பொருட்டுப் புறக்கணிப்போடு பயிலத் தொடங்கினார். ஆயினும், நல்ல இயற்றமிழாசிரியரை அடுத்து முறையாகப் பலகால் கேட்டல் வேண்டும் என்னும் முறைமையை இகழ்ந்து, அவ்வடமொழிப்பற்றுத் தம்மைப் பிடர்பிடித்து உந்த, ஆங்கில மொழி வன்மையாகிய துணைவலியைமதித்து, அளவிறந்தூக்கித் தொல்காப்பியத்தின் தலைமையையும் தொன்மையையும் மறுத்து வடமொழியை உயர்த்துக் காட்டல்வேண்டும் என்னும் நோக்கத்துடனே அத்தொல்காப்பியவுரைகளை ஆராய்ந்தார் என்பது அவர் குறிப்புரையாலே வெளியாயிற்று.

தொல்காப்பியம் என்னும் முழுமுதற்றனித் தமிழ்நூல், இப்போதை வழக்கிலேயுள்ள இருக்குமுதலியமறைகள் நான்கிற்கும் முற்பட்டதென உரையாசிரியர் நச்சினார்க்கினியர் என்னும் நான்மறையாளர் கூறியது பசுமரத்தாணியாகக் கிடக்கவும், இக்குறிப்புரையாளர் அது அந்நான் மறைக்கும் பிற்பட்டதெனச் சாதிக்கப் புகுந்தார். அந்நான் மறைகளுக்கும் பிற்பட்ட வடநூல் வழக்கை மேற்கொண்டே தொல்காப்பியர் நூலியற்றினார் எனக்கூறினார். அவர் உத்தேசியம் விதேயம் என்னும் வடநூல் இலக்கண முறைப்படியே தொல்காப்பியனார் ஒவ்வொரு சூத்திரத்திலும் ஒரு பொருளையே கருதி, எழுவாய் ஒன்றும் பயனிலை ஒன்றுமாக ஒரு தொடர்ப்பட்டு வரவே சூத்திரம் செய்தார் என்றும், ‘உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே’ என்றாற்போலும் பலஎழுவாயும் பலபயனிலையும் இயைந்து பலதொடர்ப்பட இயற்றப்பட்ட சூத்திரங்களை ஒரு தொடர்ப்பட உரையாசிரியர் உரையாதது குற்றமென்றும் கூறி, உரையாசிரியர் சேனாவரையர் முதலியோருடைய உரையை

மறுப்பார்போல அருந்தவ முனிவர் தொல்காப்பியனாரையும் மறுத்தார். 'இருமொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்தவர்' என்று சிவஞான முனிவரால் பாராட்டப்பட்ட சேனாவரையே மறுத்தோம் என்னும் பெயர்பெறின், பண்டை உரையாசிரியர் எல்லோரினும் யாம் சிறந்த அறிவுடையோம் என்று பிற்காலத்தாரால் பாராட்டப்படலாம் என்று எண்ணினார். அவர் அம்மட்டோ! யாம் பேரறிவுடையேம் என்று தம்மைத்தாமே மதித்து இறுமாந்திருக்கும் புலவரெல்லாம் இன்னும் நிலைகண்டுணராத ஆழத்தையுடைய உரைகளையும் நூல்களையும் படைத்தருளிய சிவஞான முனிவரையும் மறுத்தற்குச் சொற்றுற்று கொண்டு கனைத்தெழுந்தார்.

‘துனிக்கொள்பர் எறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க் கிறுதி யாகி விடும்’ என்பது பொய்யாமொழியன்றே. வடநூல் இலக்கண முறைமைக்கும் தமிழ்நூல் இலக்கண முறைமைக்கும் சிற்சிலவிடங்களிலே ஒற்றுமை தோன்றும். அவ்வொற்றுமை ஆங்கிலம் முதலிய பிறமொழிகளினும் உண்டு. வேற்றுமை எட்டுள என்பது வடநூலுட் கூறப்பட்டது. தமிழ்நூலினும் கூறப்பட்டது. அவ்வாறே, ஆங்கிலத்திலும் கூறப்பட்டது. அதனால் வேற்றுமை எட்டுளஎன்னும் கோட்பாடு வடநூலினின்று தமிழில் எடுத்தாண்டதென்றால் அது மடவோர் கூற்றேயாம். ஆங்கில நூலார் அவ்வெட்டு வேற்றுமையை வடநூலினின்று எடுத்துக்கொண்டனரோ? தமிழ் நூலினின்று எடுத்துக் கொண்டாரோ? இனி வடநூல் இலக்கண முறைமை போல ஒற்றுமையின்றி, வேற்றுமையுற்ற தமிழ்நூல் இலக்கணங்கள் மிகவும் பலவாம். அவற்றுள் தலை சிறந்தன, மொழி முதற்கண் வரும் எழுத்துக்கள் இவை, ஈற்றில் வரும் எழுத்துக்கள் இவை, இடையில் மயங்கும் எழுத்துக்கள் இவை யென்னும் தமிழ் நூல்வரையறை. இவ்வரையறையே, தீண்டாச்சாதியார் என்று சிலரைச் சேரியில் ஒதுக்கி வைத்தாற்போல வடமொழியைப் புறத்தே ஒதுக்கிவைத்த எல்லையாம். இதனாலும் தமிழ் வடமொழியினும் மேலானதென்பது துணிக. தீண்டாச்சாதியார் ஆயினும் அவரை ஒருகால் ஒருபயன்நோக்கி

நன்மக்கள் வேண்டுவதும் உண்டு. அவ்வாறே ஒரோவோர் வடமொழியைத் தமிழ்மொழியில் கலத்தலும் உண்டு. நந்தனர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோர் தமிழந்தணரிடைக் கலந்துகொண்டனர்; அவர் குலவேறுபாடு நீங்கினமையால். அவ்வாறே வடமொழியும் ஒரோவழிக் கலந்து கொள்ள வேண்டுமாளுல், அவ்வடமொழியின் வேறுபாடு ஒழிந்தாலன்றி அமையாது.

ட, ர, ல என்னும் எழுத்துக்கள் தமிழ்மொழியினும் உள்ளன; வடமொழியினும் உள்ளன. அவ்வெழுத்துக்கள் மொழி முதலிலே வரலாம் என்னும் நியதி வடநூலில் உண்டு. தமிழில் அவைமொழி முதற்கண் வரலாகாது. டம்பம், ரசம், லோபம் என்று வடமொழியில் வரலாம். தமிழ்மொழியில் வரலாகாது. வரவேண்டின் இடம்பம் இரதம் உலோபம் என்று திரித்துக் கொள்ளல்வேண்டும். ரத்நம் என்னும் வடசொல் தமிழில் அரதனம் என்று திரிந்து வரல்வேண்டும். டமருகம் என்பது தமருகம் எனத்திரியும். பக்தியென்பது பத்தியென்றும் அதிவியாப்தியென்பது அதிவியாத்தியென்றும், விஷயம்பாஷை என்பன விடயம் பாடை என்றும் திரியும். ஆசிரியர் தோல்காப்பியனர்,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'
'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என்று

இலக்கணம் விளக்க ஓதினர். நன்னூலாரும் முதனூற்கருத்துப் பிழையாமலே சூத்திரம் ஓதினர். அவ்வாறன்றி வடசிறப்பெழுத்துத் திரியாமல் தமிழில் எழுதப்பட்டுவரின், அதுமுற்கூறிய தீண்டாதார் எனப்பட்டார் தம் அழுக்குடம்புடன் அந்தணர் குழாத்திடைப் புக்கவாறே போலும். அவ்விருமொழிச் சிறப்பெழுத்தும் கலந்துவந்த மொழியின் வடிவமும், அவ்விருவரைப் பிறப்பும் கலந்துதோன்றிய பிறப்பின் வடிவமே போல இரண்டினும் சேராது நிலையின்றி ஒதுக்கப்படுவதாகும். இக்கருத்தேபற்றிப் போலும் ஒன்பது சுவையுள் நகைச்சுவை பயப்பனவாகப் பேராசிரியர் மெய்ப்பாட்டியல் உரையில்

எடுத்துக் காட்டியவற்றுள், ஆரியர் கூறும் தமிழும் ஒன்று எனக் காட்டியவாறும். ஆரியர் என்றது ஈண்டு வடமொழி மாத்திரம் கற்ற வடநாட்டாரை. நாடகத் தமிழிலேயும், வடசொல் வடவெழுத்தொருவி வரல்வேண்டும் என்பது சிலப்பதிகாரவுரையிலும் கூறப்பட்டது காண்க.

இங்ஙனமாகவும் குறிப்புரையாளர் விஷயம், அபிவிருத்தி என்றாற்போலும் சொற்களை எழுத்துத் திரிக்காமலே வழங்கினர். இவர்க்கு இதுவே இலக்கணமாகப் பின்னுள்ளோர் கொள்ளல்வேண்டும் என்னும் கருத்துப்போலும். பண்டை இலக்கண நூல் உரைகளிலேனும் இலக்கியவுரைகளிலேனும், இவ்வகைப் பிறழ்ச்சி காணப்படாது. இப்பிறழ்ச்சித் தோற்றமும் ஒரு நூறு ஆண்டுகட்கு உட்பட்டதாகும். தமிழ் இலக்கணம் தெரியாத அறிவிலிகள் ஒருவர்க்கொருவர் எழுதிய திருமுகம் முதலியவற்றிலே அது பயின்று வந்தது. எனவே அஃது ஓர் இழி வழக்காக இருந்தது. பின்னர் அது பாடசாலைகளிலே கீழ் வகுப்புப் பிள்ளைகளுக்குப் பாடபுத்தகமாக வெளியிடப்பட்டவற்றுள்ளே நுழைந்தது. அதை இப்போது புலவர் என்று பெயர் படைத்தாரும் பயிற்சிவயத்தால் விடார் ஆயினர்.

இப்பிழையை வடமொழியோடு தமிழ்மொழி கற்றாருள் பலர் இக்காலத்து உணர்ந்திலராயினும் தமிழ்கற்ற ஆங்கிலத் துரைமக்கள் அதனை உணர்ந்தே உள்ளார். சில ஆண்டுகட்கு முன் மதுரையில் பேசிய மாரிச பாங்கிசர் என்னும் ஆங்கிலேயர் இது பெரும் பிழையென்று சுட்டிக் கூறினர். அவர் கூறியும் தமிழ் மக்களுள் சிலருக்கு நாணம் உண்டாகவில்லையென்றால், அது எத்தன்மைத்து?

'பிறர்நாணத் தக்கது தானாணான் ஆயின்
அறம்நாணத் தக்க துடைத்து' என்னும் திருக்குறள் அவர் பொருட்டுக் கூறியதே யாம்.

ஆங்கிலத்திலே உரையெழுதுவார் அவ்வாங்கிலவெழுத்தோடு பிறவெழுத்துக்களைக் கலந்து மொழியாக எழுதுகின்றனரா? வடமொழியாளர் தம் உரைநடையில் தமிழெழுத்துக்

களைக் கலந்து எழுதுகின்றாரா. இல்லையே! அங்ஙனமாகத் தமிழில் உரைநூல் எழுதுவார்மாத்திரம் அவ்வரம்பு பிழைத்தல் ஆகுமா? இவர் தாமிருந்த கோட்டைத் தாமே குறைத்தலை நினையாராயினர்.

இனி 'ராசமாபுரி' 'முனிராசன்' எனத் தமிழ் நூலாசிரியரும் நூலுள் புகுத்தினரே யெனின், அதுவே இலக்கணம் என்பது அவர்க்கும் கருத்தன்று. அங்கே இகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கதென்பதே அவர் கருத்து. இதனைச் சிவஞானமுனிவர் பலவிடத்தும் கூறியவாற்றானும் அறிக.

தமிழ் இலக்கணம் அறியாத சிலர் இக்காலத்து இளஞ் சிறார்க்கென்று அமைத்த பாட புத்தகங்களிலே ரேக்ளா, டங், காடமாரம் என்ற சொற்கள் காட்டினர். இவ்விழிவழக்குச் சொற்கள் சிறார்க்குப் படிப்பில் ஊக்கமுண்டாக்கும் என்பது அவர் கருத்து. இவ்விழிவழக்குச் சொற்கள் பயிலாத முற்காலத்தே உலகம் வியக்கும் தமிழ்ப்புலவர் விளக்கமுற்றிருந்தார் என்பதை அவர் உணர்ந்திலர். அன்னரோடு பயிற்சி வயத்தால் குறிப்புரையாளரும் அவ்விழிவழக்குச் சொற்களைத் தாம் எழுதிய வேறோர் சிறுவர் இலக்கண நூலில் எடுத்தாண்டனர். சொல்லிலக்கணம் சிறிதும் அறியாமையால் பிறகு என்றாற்போலும் இழிசொற்களையும் பயில வழங்கினர். வழுவமைத்த சொற்கள் நூல் வழக்கில் ஒரோவழிவரினும், உரையெழுதுவார் பெரும்பாலும் வழாநிலையாக எழுதல்வேண்டும் என்னும் பண்டை உரையாசிரியர் வழக்கை இகழ்ந்து, வழுவமைதிபயின்றுவர எழுதினர். அவர் தமிழ் உரை நடைக்கும் ஆங்கிலமொழி உரை நடைக்கும் வேற்றுமை தெரியாமையாலே பெரும்பாலும் ஆங்கிலமொழி நடையில் எழுதினர். அடிப்பட்டு வந்த தமிழ்க்கல்வியின்றி, தொடக்கத்திலிருந்து ஆங்கிலத்திலும் வடமொழியினும் நெடிய ஆயுட் காலத்தைப் போக்கித் தமிழைப் புறம்பழித்தல்வேண்டும் என்னும் கருத்துடன் பயின்றார்க்கு அதன் அருமை எங்ஙனம் விளங்கும்? 'பூப்பின் புறப்பாட்டு ஈராறு நாளும் தலைவியை நீத்தகன்றுறையாநுதல் வேண்டிய தலைவன், பரத்தை பூத்தநாளிலேமட்டும் தலைவியைச்

சார்ந்து உறைவாராயின், இல்லறத்தின் அருமை எங்ஙனம் தெரியும்? இதனால் ஆங்கிலமொழி நடையைப் பழித்தவாறு அன்று. அந்த நடையும் வேறு, தமிழ் நடையும் வேறு; ஒன்றோடொன்று கலத்தல் இழிவு என்பதே. சில நாட்கட்கு முன்னர் தமிழ் நாட்டில் இருந்த ஆங்கிலமொழியில் பெரும் புலமை வாய்ந்தார் ஒருவர், ஆங்கிலத்தில் சில செய்யுள் இயற்றி ஓர் ஆங்கிலக் கவிவாணர் ஆராய்ச்சிக்கு விடுத்தபோது, இத்தனை உழைப்பும் (ஆங்கிலமொழியிலன்றித்) தம் தமிழ்மொழியில் மேற்கொண்டிருந்தால், மிகவும் மேன்மையதாயிருக்கும் என்று அவர் கூறிவிட்டார். இப்பொழுதும் ஆங்கிலத்தில் பெரும் புலமையை நாடுவார், இளம்பருவத்திலே ஆங்கிலவாசிரியரிடத்துக்கல்வி பயில்கின்றார். இக்குறிப்புரையாளர் பண்டைத்தமிழ் உரையாசிரியர் உரை நடையைப் பொருட்படுத்தாமையாலே இவர்க்கு இருமொழிக் கலப்பு உரைநடை வாய்த்ததேயன்றித் தெள்ளிய நற்றமிழ் உரைநடை வாய்த்திலது. இவர் இப்புதிய கலப்புவுரைநடையைத் தோற்றுவித்த ஆசிரியராகத் தம்மைப் பிற்காலத்தார் கொண்டாட வேண்டுமென்னும் கருத்தினர் போலும்.

இங்ஙனம் தமிழ்ஞாயிற்றினை மறைக்க வந்த கோளெனத் தோன்றிய இவர் குறிப்புரையை அகற்றி, தமிழின் தொன்மையையும் தலைமையையும் விளக்கல் வேண்டுமென்ற பெரியார் பணியை மேற்கொண்டு, யாம் அக்குறிப்புரைக்கு மறுப்புக்கள் எழுதி நம் கரந்தைத் தமிழ்ப் பொழிலிலே வெளியிட்டாம். இதுகாறும் முப்பத்தாறு மறுப்புக்கள் வெளிவந்துள்ளன. அம் மறுப்புக்கள் குறிப்புரையாளர்க்குக் கிடைத்தே உள்ளன. அவரும் எம்மறுப்புரை முற்றுப்பெற்றதன் பின், வேண்டுமாயின் மறுப்பெழுதுவாம் என்று கூறியொழிந்தனர்.

இவ்வாறாக, எமது மறுப்புரைக்கு மறுப்புரை எழுதும் கடப்பாட்டினையுடைய குறிப்புரையாளர் வாளாவிருக்கவும், சென்னை வித்துவான் P. S. வேதாசலய்யர் எனத் தம் பெயர் குறித்தார் ஒருவர் சொல்லதிகார வாராய்ச்சிக் குறிப்புரை

மறுப்பின் மறுப்பு ' என எழுதிவிட்டது சென்ற மாசித்திங்கட் பொழிலிலே வெளியிடப்பட்டமை கண்டாம். அது எம்முடைய மறுப்புக்களுள் 1, 2, 5, 6, 9, 10 என்று குறிக்கப் பட்டவற்றைப் பற்றியதென்று காணப்பட்டது. யாம் எம்முடைய மறுப்புக் களிலெல்லாம் குறிப்புரையாளர் கூற்று முழுவதும் அப்படியே எழுதி, அதன்மேல் எம் உரையையும் விளங்க எழுதி விடுத்துளோம். எம் மறுப்பிற்கு மறுப்பெழுத வந்த ஐயரோ, குறிப்புரையாளர் கூற்று இது, எம் மறுப்புரை இது, அதன்மேல் தம் மறுப்புரை இதுவென்று விளங்க எழுதாமல், எம் கூற்றுக்களுள் ஒரு சில மொழிகளை யெடுத்துக் காட்டி, அதன்மேல் தம்கருத்தைக் குறித்தார். எம் மறுப் புரையை மறைத்தே எழுதினர். முற்பகுதிகளிலே, குறிப் புரையாளர் கூற்று இது, அதுபற்றி யாம் மறுத்துரைப்பது இதுஎன்று யாம் எழுதியதனை நோக்கினலன்றி, இவர் இன்னது பற்றி மறுப்பெழுதப் புகுந்தார் என்று, அதனைப் படிப்போர் அறிந்து கொள்ள மாட்டார். அதனல் அவர் மறுப்புரை தக்கவாறு எழுதத் தெரிந்தவர் அல்லர் என்பதையும், தம்மறிவானன்றிப்பிறர்தூண்டுதலால்அதனைஅவர்எழுதப்புகுந்தார்என் பதையும் விளக்கினர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்து ஒரு சூத்திரத்தையேனும் எடுத்தாண்டாரிலர். பண்டைய விலக் கணத்திற் பிறழ்ந்து புதிதாய் வந்த வழக்கும் தழுவப்படும் என்பதற்கு விசாகப் பெருமாளையர், ஆறுமுகநாவலர், சடகோபராமாநுசர் இவர்கள் நன்னூற்கு எழுதிய காண்டிகை உரைக்குறிப்புக்களை மேற்கோளாகக் காட்டினர். தொல்காப்பிய வுரையாசிரியர் சேனவரையர் நச்சினர்க்கினியர் முதலியோரை இவர் கனவிலும் அறியார் போலும். அந்தோ பாவம்! இவர் என் தொல்காப்பிய வாராய்ச்சியில் தலையிடல்வேண்டும். இவர் உயர்தரப்பாடசாலைச் சிறர்க்குப் பாடம் சொல்ல அற்றைக் கன்று மேற்குறித்த நன்னூற்காண்டிகை உரைகளைப் பார்த்துத் தாம் பாடம்பண்ணிக்கொண்டு போகற்பாலர். யானையோடு யானை பொருகின்ற போர்க்களத்தே ஓர் பூனைக்கு என்ன வேலை? இரும்படிக்கும் களத்தில் ஈக்கு என்ன வேலை? யாம் இப்பொருள்

பற்றி இன்னது எழுதினேம் என்பது தெரியாமலே இவர் மறுப்புரையென நிகழ்த்துகின்றார்.

இவ்வையரும் தமிழ்மொழியினும் வடமொழியே சிறந்த தென்று சாத்திரியார் பாடிய பாட்டிற்கு ஒத்திசைப் பாராயினர். 'வடநூல் உணர்ந்தார்க்கன்றித் தமிழியல்புவிளங்காது' என்று சிவஞானமுனிவர் சூத்திரவிருத்தியில் கூறியதன் கருத்தைப் பிறர் சிலர்போல் இவரும் பிறழ வுணர்ந்து வடமொழி சிறந்த தென்பாராயினர். அங்ஙனம் சிவஞானமுனிவர் கூறியதன் கருத்து தமிழிலக்கணத்திற்கும் வடமொழியிலக்கணத்திற்கும் சிலவிடத்து உள்ள ஒற்றுமையும் சிலவிடத்துள்ள வேற்றுமையும் தமிழிலக்கணத்திற்குரிய உயர்வும், அவ்விருமொழியிலக்கணமும் ஒருவாறு உணர்ந்து ஒப்புநோக்கினார்க்கன்றி விளங்கா தென்பதே யாம். அவர் தமிழிலக்கணம் சிலவிடத்து வடமொழியிலக்கணத்தொடு மாறுபட்டுவருதலும் உண்டென்று கூறியதனை இவர் அறியார் போலும். 'உரைநடை காலத்துக் கேற்றபடி வரைதல் பயனளிக்குமே யல்லது பல திரிசொற்களைப் பெய்து வரைதல் சிறப்பின்று. மரபியலின்கண்ணே பேராசிரியரும் அவ்வக்காலத்துக்கு ஏற்ற நடையானே வரைதல்வேண்டும் என்றனர். ஆகலின் உரைநடையைப் பற்றி ஆய்தல் பயனில் சேயலாம்' என்று இவ்வையர் எழுதினர்.

பேராசிரியர் மேற்குறித்தவாறு தொல்காப்பிய மரபியலிலே எந்தச் சூத்திரத்தின் உரையிலே கூறினார்? ஓரிடத்தும் கூறினாரிலரே. அவர் முற்காலத்து வழக்கு வழுவேன்று களையப்படுமோயினன்றே பிற்காலத்து வழக்கைத் தழுவிக்கோள்வது என்று கூறிப் பிற்காலத்து வழக்கைக் கொள்ளலாகாதென்றே மறுத்தார். ஆனந்தக்குற்றம் என்பதோர் இலக்கணம் பிற்காலத்தார்கொண்டதனைக் கொள்ளத் தக்க தன்றெனவே மறுத்தார். அங்ஙனம் ஆகவும், அவ்வக்காலத்துக்கு ஏற்ற நடையானேவரைதல் வேண்டுமென்று பேராசிரியரும் கூறினர் என்ற ஐயர்கூற்றுப் பொய்யேயாம். ஆகவே, இவர் தொல்காப்பிய மரபியலும் பிறவியலும் பார்த்தறியார் என்பதே தேற்றம்.

'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.' எனவும்,

'கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.' எனவும்,

தெய்வப்புலவர் திருவள்ளுவனார் கூறியதனை இவர் கடைப் பிடித்து ஒழுகாதது இரங்கத் தக்கதொன்றாம்.

காலத்துக்கேற்ற கோலம்பூண்டு உரையெழுதலாம் என்னும் துணிவினாலே போலும் இவர் P. S. வேதாசலய்யர் என்று தம்பெயரைத் தமிழினும் தலைக்குறிப்பெழுத்துக்களை ஆங்கிலத்தினும் எழுதியது. இது கூத்தாடும் அரங்கின்கண் நகைச்சுவையூட்ட ஆடுவார், தலையில் ஆங்கிலர் கோலத்தையும் உடலில் அந்தணர் கோலத்தையும் பூண்டு ஆடுவான் தோன்றிய வாறு ஒக்கும். இவர் தலைக்குறிப் பெழுத்துக்களையும் தமிழில் எழுதியதனால் வரும் கேடென்னையோ?

இத்தனை இழுக்குடைய ஐயர், யாம் இருவேம் உரைப் போர் எதிர்ந்தகாலை, நடுவுநிலைமை கொண்டு நிகழ்வதைப் பார்த்திராமல், சாத்திரியாரைத் தாங்குதற்கு ஒருப்பட்டு மறுப்பெழுதுதற்கு எழுந்த தென்னை?

1. சாத்திரியாரோடு இவர் ஒருசாலை மாணாக்கராகக் கல்வி பயின்றவரா?

2. சாத்திரியார் பால் இவர் பாடம் கேட்டவரா?

3. சாத்திரியாரும் இவரும் கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் போன்ற உயிர்த் தோழரா?

4. சாத்திரியாருக்கு மறுப்பெழுதும் ஆற்றல் இல்லை யென்பது கண்டு தாம் எழுத முற்பட்டனரா? அவ்வாறாயின் அது சாத்தியாருக்கு இழிதகவாம் அன்றோ?

5. சாத்தியாரால் ஏவப்பட்டதனால் மறுப்பெழுதப் புகுந்தனரா, அன்றித் தாமாகவே எழுதப் புக்கனரா?

6. சாத்திரியார் ஐயரை வாதத்தில் வெள்ளோட்டம் விட்டு வேடிக்கை பார்க்கின்றாரா?

7. ஐயரைக் கொண்டு ஓர் மறுப்பெழுதி விட்டால் அதனிலே எம்மனத்தைச் சுழலச் செய்யலாம்; அதனை எம் மறுப்புக்கு இடையூறுண்டாக்கலாம் என்று சாத்திரியார் கருதினார்?

8. அன்றி, ஐயரே இவ்வாதத்தில் தாம் வென்றாலும் தோற்றாலும் புகழேயென்று கருதி மறுப்பெழுதப் புகுந்தாரா?

அவர் கருத்து யாதாயினும் ஆக. வித்துவான் வேதாசல ஐயர்க்குத் தொல்காப்பிய வாராய்ச்சி மிகவும் சேய்மையில் உள்ளது என்பதே தேற்றம். இது நிற்க.

இனி, ஐயர் 'மறுப்பின் மறுப்பு' என எழுதியவற்றுக்கு விடை தருவாறுகூறி எம்முடைய மறுப்பை வலியுறுத்தலும் எமக்குக் கடனாயிற்று.

(தொடரும்.)

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

21-ஆம் ஆண்டு விழாத் தலைவர்



பண்டிதர், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் அ	ஆங்கீரச, ஆனி.	மலர் ௩.

உ

உக-ஆம் சங்க ஆண்டுவிழாவின் அவைத்தலைவர்
பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
திருச்சிராப்பள்ளி.

முகவுரை.

தமிழ்த் தெய்வத்தின் எழுச்சி கண்டின்புற விழைந்து குழுமியிருக்கும் சான்றோர்களே!

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 21-வது ஆண்டு விழாப் பேரவைக்கு வந்து இந்நிலைக்களத்தில் அமர்தற்கும் யான் உரியனாமையை உன்னின் பலப்பல எண்ணங்கள் தோன்றி என் உள்ளத்தைக் கவர்ந்து விடுகின்றன. எனது தகுதியின்மையை என்போல் அறியவல்லார், யாருமிலரென்பது இப்பொழுது தெளிவாயிற்று.

இச்சங்கத்தின் தலைவரும், அமைச்சரும் முதலாய அறிஞர்கள் தம்மோடு நெடுநாட் பழகிய என் இயல்பினை அறிந்திலரெனக்கூறுதல் பிழையாம் எனின், உயர்ந்தவற்றையே உள்ளுதலுடைய அவர்கள் உள்ளத்தில் எனது சிறுமைதோன்றாதிருத்தல் இயல்பேயாம் என்பேன். இனி இதனைப் பாரித்

துரைத்தலைவிடுத்து, என்னையும் இந்நிலையில் இருக்கப்பணித்த அவர்களது பேரன்பிற்கும், அவ்வன்பிற்கு உறுதுணையாக நின்ற இறைவனது திருவருட் குறிப்பிற்கும் கையடையாகி, அவை இயக்கும்வழி இயங்குதலே கடப்பாடெனக் கருது கின்றேன்.

பெரியோர்களே!

உலகின்கண் மன்னுயிர்ப் பன்மையுள் மக்கட் பிறப்பினர் உயர்ந்தாராதலும், மன்பதையுள்ளும் ஒருவரோ, ஓர் குழு வினரோ, நாட்டினரோ உயர்ந்தாராதலும் அறிவின் சிறப்பா லென்பது கண்கூடு.

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். பிறிதொன்று மிலரேனும் அறிவுடையார் யாவு முடையராவரென்றும், பிற வெல்லாம் உடையராயினும் அறிவில்லார் ஒன்றும் இலராவர் என்றும் கூறிய அவரது விழுமிய கருத்துப்பெரிதும் சிந்தித்தற் குரியதொன்றாம். அறிவு வளர்ச்சிக்குக் கல்வியே கருவியாக வுள்ளது. கல்வி, கேள்விகளின் பின் அறிவுடைமை என்னும் அதிகாரத்தைவைத்து முறைப்படுத்திய வள்ளுவர் கருத்து அஃதாதல் தெள்ளிது. 'கற்றல் கேட்டலுடையார் பெரியார்' என்னும் ஆளுடைய பிள்ளையார் அருண்மொழியும் அன்னதே. கேள்வியும் கல்வியுள் அடங்கும். ஆதலின் கல்வியைக் கேள்வி என்னும் பெயரால் வழங்குதலுமுண்டு. நம்மை உண்மை மக்களாக்க வல்லது கல்வியே என்பதும், கல்வியால் அறிவு வளரப்பெறேமாயின் நாம் விலங்குகளோடொப்ப வைத்து மாக்கள் என்னும் பெயராற்கூறுதற்கு உரியமாவேம் என்பதும்

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"
"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களால் இனிது விளங்கும். நம்மை அறிவுவகையால் மக்களாக்குவதாய், துன்பந்துடைப்ப தாய், எழுமையினுந் தொடர்ந்து உறுதியளிப்பதாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் பயப்பதாய்

உள்ள கல்வியினும் பெறத்தக்க விழுப்பேறு யாதுளது? இத் தகைய கல்வியின் சிறப்பை இற்றையோரினும் பண்டைத் தமிழ்ப் பெரியோர் நன்குணர்ந்திருந்தனரென்பது பழந்தமிழ்ப் பனுவல்களால் இனிது புலனாகின்றது.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

எனக் கூறியவன் ஒரு பழைய தமிழ் வேந்தனாவன். உலகம் போற்றும் பொதுமறையருளிய திருந்தகு தெய்வத் திருவள்ளுவரும் கல்வியின் சிறப்பனைத்தையும் பலபட விரித்துரைத்த தன்றி, பெற்றோர் தம்மக்கட்கு ஆற்றும் உதவியாவது அவரைக் கல்வியில் வல்லராக்குதல் என அஃதொன்றனையே சிறந்தெடுத் தோதினாரன்றோ! அறிவுருவாகிய திருவாதவூரடிகள் திருச் சிற்றம்பலக் கோவையுள்ளே கல்வி நலங்கூறல் என்னுந் துறை யுள்வைத்தோதிய

"சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா வளவுசென் றாம் பலத்துநின்ற
ஓரள வில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போல்
ஏரள வில்லா வளவின ராகுவ ரேந்திழையே"

என்னுஞ் செய்யுள் கல்வியின் சிறப்பையும், கற்றோரெய்தும் பயனையும் எவ்வளவு பெருமிதத்துடன் உரைக்கின்றது பார்மின்! பல்லாயிரவாண்டுகளின் முற்றோன்றிய ஒல்காப் பெருமைத் தொல்காப்பியமென்னும் தமிழியனூலுள்ளே

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

எனப் பெருமிதம் பயப்பனவற்றிற் கல்வியே முன்வைத்துக் கூறப்படுதலுங் காண்க. அகத்திணையியலில்,

"வாயினுங் கையினும் வகுத்த பக்கமோ
டூதியங் கருதிய வொருதிறத் தானும்"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியது ஒரு தலைமகனது கல்வியின் நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது. உண்மைப் பொருளிடத்தும் அதற்கேற்ற ஒழுக்கத்திடத்தும் பாகுபடுத்

தோதிய நூல்களாற் பெறும் பயனைக் கருதியவழியும் தலைவன் பிரிவனென்பது இதன் கருத்து. வாய் என்பது உண்மை யென்னும் பொருளிலும், கை என்பது ஒழுக்க மென்னும் பொருளிலும் ஈண்டு வந்துள்ளன. அறிஞர்களே! இப்பொழுது நமக்கும், கல்லூரிகளிற் பயிலும் நம் பிள்ளைகட்கும் ஏற்றபடி பொருள் கொள்ளுமாறு இப்பகுதி அமைந்திருப்பது மிக்க மகிழ்ச்சி யளிப்பதாகும். பல தீஞ்சுவைப் பண்டங்களை முப்பொழுதும் கையுடன் வாயிற்கொண்டு நுகரும் பயனுடைத் தாகிய கல்வி என இதற்குப்பொருள் கொள்ளுதல் பெரிதும் பொருத்தமன்றோ!

இங்கெடுத்துக்காட்டிய சில மேற்கோட் குறிப்புக்களி னின்றே வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாகிய தமிழகத்தே பண்டை நாளிற் கல்வி பெருகியிருந்த தென்பதும், தமிழ்மொழி சால வளம்பெற்றிருந்த தென்பதும் ஒருவாறு புலனாம். தலைசிறந்த புலவரென யாங்கணும் ஒரு சிலரை யேனும் காண்டலரிதா யிருக்கின்ற இற்றை நாளிற்போலன்றி, பண்டு ஒரு நூற்றாண்டினுள் நல்லிசைப்புலவர் ஐந்நூற்றுவரின் மிக்கார் திகழ்ந்தனரென்னில், அப்பொழுது தமிழ்ப்புலமை எவ்வளவு உயரிய நிலையை அடைந்திருத்தல்வேண்டும். கற்றூர் தொகை எத்துணையாகப் பல்கியிருத்தல்வேண்டும். அங்ஙனம் கல்வி வளம்பெற்ற பொழுது நாட்டிற் பிற நலங்களும் ஒருங்கு வாய்ந்திருத்தல் இயல்பேயன்றோ? கல்வியின்றியே உயர்நிலை யடைந்ததென்று காட்டத் தகுந்த நாடொன்று பண்டேனும் இன்றேனும் உண்டோ? தமிழ் நாட்டில் எப்பொழுது கல்வி சிறந்திருந்ததோ அப்பொழுது தமிழ் மக்களாயினர் அறனும் மறனும் ஆற்றலும் மிக்காராய்ப் பிறரெல்லாம் கண்டு உட்கு மாறு பெருமதிப்புடன் வாழ்ந்துவந்தனரென்பதும், வேளாண் மையும் வாணிகமும் வேறு தொழிற்றிறங்களும் நாட்டிலேபல்கி யிருந்தன வென்பதும் நாம் காணலாகின்ற வரலாற்றுண்மை யாம். இனி, என்று அத்தகைய கல்வி தலையெடுத்து விளங்கு மோ, என்று தமிழ்மக்களனைவரும் கல்வியிற்சிறந்து திகழ்வரோ

அன்றே நம் தமிழ்நாடு துறக்கமும் விழையுஞ் சிறப்புடை நாடாகும் என்க.

இனி, கல்வியானது உலகில் வழங்கும் பலமொழிகளானும் எய்தற்பாலதே யெனினும், தாய்மொழியிற் கற்றலென்பது ஒவ்வொருவர்க்கும் பிறப்பானுரிய கடன்களுள் விழுமிய தொன்றாம். அன்றியும் நாட்டு மக்களனைவரும் கல்வி கற்று அறியாமையினீங்குதற்கு வேற்று மொழியைத் துணையாகக் கொள்ளுதல் ஆற்று வெள்ளத்தைக் கடக்க மண்குதிரை கொண்டது போலும் பயனில் செயலேயாகும். இந்நாட்டிலே எத்தனை ஆண்டுகளாக எவ்வளவு பொருட்செலவும் முயற்சியுங் கொண்டு ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றன? அங்ஙனம் கற்பித்தும் ஆடவரினும் மகளிரினும் கற்றார் எத்துணையராகவுள்ளார்? இன்னும் எத்தனை யாண்டுகள் செல்லினும் யாவரும் அம்மொழி வாயிலாகக்கல்வி பெறுதல் கூடுமோ? இதனைச் சிந்தித்துணர்வது அறிஞர் கடனாகும். அம்மட்டோ! தம் நாட்டின் பழையநிலையினையும், தம் முன்னோரின் பல்வகைப் பெருமைகளையும் அறிந்து இன்புறுதற்கும், அவ்வாற்றால் ஊக்கமும் உரனுங்கொண்டு தம் நாட்டை வளம் படுத்த முயல்வதற்கும், முந்தையோர் கைக்கொண்டொழுகிய சீரிய நெறிகளைக் கடைப்பிடித்து இம்மை மறுமைப் பேறுகளை பெய்துதற்கும் தாய்மொழிக் கல்விபோல் உறுதுணையாவது பிறிதுண்டோ! கூறுமின். ஒரு நாட்டிலே பண்டுதொட்டு வழங்கிவந்து மக்களுடைய குருதியிற் கலந்திருப்பதும், பின்னும் அந்நாட்டில் என்றும் நிலைபெற்றிருக்கற்பாலதுமாகிய மொழியன்றோ அங்கு வழி வழியாக வாழும் மாந்தர்க்கு அறிவின் செல்வத்தை வரையாது வழங்குதற் குரியதாகும்.

இனி, நம் தாய்மொழியாகிய அருமைத் தமிழ்மொழியோ நெருநற்றோன்றிய தன்று; நிரம்பா இலக்கணத்ததுமன்று. ஆராய்ச்சியாளர் எவரும் இன்னும் தமிழின் தொடக்கம் கண்டறிந்தாரில்லை. பல்லாயிர வாண்டுகளின் முன்பே திருந்திய நிலை யெய்தியதும், வரம்பிட்டு வைத்த இலக்கண நுண்மை

வாய்ந்ததும், உலகெலாம் ஒரு தாலயிலிடினும் ஒப்பி நிற்கும் பெருமைவாய்ந்த தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், திருவாய்மொழி போலும் நூற்களாகிய மூல பண்டாரங்களை யுடையதும், முனிவரும் மன்னரும் முதலாய முன்னோர் பலரும் சுவைத்துச் சுவைத்து ஆராவின்ப நுகர்ந்து பலபடப்பாராட்டிப் போற்றிவந்ததும், என்றும் தன் இளமை யெழில் சிதையாது நின்று நிலவுவதுமாகிய இனிமை மிக்க தமிழே நாமனைவரும் போற்றிப்பயில்வதற்குரியதும், நம்மைவளர்த்துஉறுதியளிக்குந் தன்மை வாய்ந்ததுமாகிய மொழியாம்.

ஆன்றோர்களே !

தமிழின் பழமை பெருமைகளை யெல்லாம் முன் இச்சங்க விழாநாட்களில் மெய்யன்பர்களாகிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், மறைமலையடிகள் முதலான புலமை மிக்கோர்கள் பல படியாக விரித்துரைத்திருத்தலாயினும், எனதாற்றல் பெரிதும் சுருங்கிய தாகலானும் யான் அவற்றை விரியாது விடுக்கின்றேன். எனினும், தமிழ்மக்களாகிய நாமனைவரும் பண்டைச் செந்தமிழாகிய இலக்கணங்களை யெல்லாம் துறைபோகக் கற்று அவைகூறும் விழுப்பொருளை நுகர்ந் தின்புறலும், தமிழின் பழமை பெருமைகளையும், பண்டைத் தமிழ்மக்களின் மேதக்க சிறப்புக்களையும் பாராட்டிப் பயனெய்தலும் வேண்டுமெனத் தெரிவித்தல் ஈண்டு எனது கடனாகின்றது. பழமையினையும் பெருமையினையும் பாராட்டுதலிற் பயனின்றெனக்கூறும் அறிஞர் சிலருமுண்டு. தாம் கற்று வல்லராதலுமின்றி, மொழியையும், நாட்டையும் வளம்படுத்தற்குரிய முயற்சியை மேற்கோடலுமின்றி வாளா மடிந்திருந்து, பழமை பெருமை பேசுதலிற் பயனின்றென்பதே அன்னார் கருத்துமாகும். அவ்வாறன்றிப் பண்டை நூற்களின் துறைகளிற் றிளைத் தின்புறுவோர் அவற்றைப் பாராட்டாதிருத்தல் வேண்டுமென்பது எங்ஙனம் பொருந்தும்?

“ என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க்—குன்றுத

செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வ திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்"

என்பது முதலிய செய்யுட்கள் பலவற்றூற் பண்டைச் சான்றோ ராலேயே ஏத்திப் போற்றப் பெற்ற திருக்குறள் என்னும் தெய்வத் தமிழ்நூலைக்கற்று அதன் சொற்பொருள் மாண்புகளை யுணருமொருவர், அந்நூலையும், அதனையியற்றிய பெருநாவலர் பெருமானையும் பாராட்டாதிருந்தால் சாலுமோ? கலித்தொகை முதலிய சங்கச்செய்யுட்களின் அமிழ்தூங் கைக்கும் சுவையிற் றிளைத்தவர் அவற்றையியற்றிய நல்லிசைப் புலவர்களின் புல மைத்திறத்தினை வியவாதிருத்தல் எங்ஙனம் கூடும்? தமது குடி யிடத்தும், மொழியின் கண்ணும், நாட்டின்பாலும் உயரிய மதிப்பும் பற்றும் வைத்திருப்போரே ஆண்மையும் ஊக்கமும் உடையராய் மேன் மக்களாதல் ஒருதலை.

"மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவன் மாறியான் பிறக்கே"

என்று வஞ்சினங் கூறிய பூதப் பாண்டியன் தனது நாட்டினிடத் தும், பிறந்த குடியினிடத்தும் எத்துணைப் பெருமித எண்ண முடையனென்பதனைச் சிந்தித்துப் பார்மின்!

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை"

என்றுரைத்த நெடுஞ்செழியன் தமிழின்பாலும் தமிழ்ப்புலவ ரிடத்தும் வைத்த உயர் மதிப்பிற்கும் எல்லையுளதோ?

ஆதலின் அன்பர்களே, நாம் நமது பண்டைச்செந்தமிழி லக்கியங்களைப் பயின்று அவற்றாலறியப்படும் நம்முன்னோரா கிய புலவர், வேந்தர், வள்ளியோர், வீரர் என்றின்னோரின் பெருமைகளை யெல்லாம் உணர்ந்து உணர்ந்து பாராட்டுதல் போல நமக்கு ஆண்மையும் ஊக்கமும் அளிக்கவல்லது வேறொ ன்றில்லை யென்பது உண்மை உண்மை.

"மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
ஈயென இரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவென்"

என்ற சோழன் நலங்கிள்ளியின் வஞ்சினமொழியைப் படிக்குங்கால் அவனுடைய படைவீரமும் கொடைவீரமும் முதலிய பண்புகள் நம்உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து புத்துணர்ச்சியும் புத்துயிரும் தருகின்றன.

"முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்"

என்பதனை நினையின் பாரியின் வள்ளன்மை நம் உள்ளத்தை அள்ளிக்கொண்டு விடுகின்றது.

"இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்று வீழ்ந்தன்று அவன் அருநிறத்தியங்கிய வேலே"

என அதியமான் துஞ்சியகாலை ஔவையார் கூறிய மொழிகள் நம் நெஞ்சினை உருக்குகின்றன.

பண்டைத் தமிழ்ச்சங்கத்து நல்லிசைப் புலவர்கள் பாடித் தொகுத்தவற்றுட் புறநானூறு என்னும் ஒரு நூலால் மட்டும் நாம் எய்தலாகும் உணர்ச்சி நிலத்தினும் பெரிது, வானினு முயர்ந்து; கடலினும் அளத்தற்கரிது. பண்டை நற்றவத்தால் இத்தகைய நூற்செல்வத்தைப் பெற்றுவைத்துள்ள தமிழ்மக்களாகிய நாமனைவரும் அவற்றை நுகர்ந்து வீறெய்தி உலகில் எனையரும் நுகர்ந்து பயனெய்துமாறு எடுத்து வழங்குதல் வேண்டாவோ? கூறுமின்; கூறுமின்.

இனி, புதிய புதிய கலைகளும், புதிய புதிய பொறிகளும் தோன்றி, முன்பு கனவிலுங்கருதி யறியாத வியத்தக்க நுண்டாண்வினைகள் எண்ணிறந்தன விரியும் இற்றை நாளிலே, மக்களுடைய ஊக்கம் நிலத்தளவில் அடங்காது திங்கள் மண்டிலத்

திலும் சென்று காண்குதுமெனப் பாய்ந்தெழுகின்ற இற்றை நாளிலே பழங்கதைகளைப் படித்துப் பயனென்னே என்றுரைப் பாருமுளர். அவர் கூற்று ஒருபுடை உண்மையுடையதே. அத்தகைய புதிய கலைநெறிகளிற் சென்று பயனடைய முயல்வது யாவர்க்கு முரிய கடனே. ஆனால், பண்டையிலக்கண விலக்கியத் தீஞ்சுவை நூற்களைக் கல்லாது விடுதலினாலே அவையெல்லாம் கைவந்து விடுமோ? அல்லதூஉம், புதிய கலைகளைப் பயிலுதல் மாத்திரத்தானே யாவும் இயற்றவல்ல அறிவு நுட்பமும் வினைத்திட்பமும் எய்தலாகுமோ? இந்நாட்டிலே புதிய கலைகளாகின்ற அறிவியனூல்களைப் படித்துப் பட்டம் பெற்றவர் எத்தனையாயிரவர் உளர்? அவரெல்லாம் கண்ட புதுப்பொறிகள் யாவை? அவரியற்றிய நுட்ப வினைத்திறங்கள் யாவை? வசுவும், இராமனும் (ஜெ. ஸி. போஸ், ஸி. வி. ராமன்) முதலிய இரண்டோரறிஞர் தாமே நுண்பொருள் காணும் ஆற்றல் பெற்றுளர்? அவர்களும் பழமை பாராட்டுவோராகவே யுள்ளனர். ஆதலின், நுட்ப வினைகள் இயற்றுதற்குக் கல்லூரியிற் கலை பயிலுதல் ஒன்றுமே அமையாது. புதியன காண வேண்டுமென்னும் ஆர்வமும், கூரறிவும், விடா முயற்சியும், கெடா வூக்கமும் வேண்டும். அவை பெறுதற்கு உள்ளம் உரனுடைத்தாதல் வேண்டும். மக்கள் வறுமையானும் பிணியானும் நலிவெய்தலின்றி, பாவேந்தர்களியற்றிய காப்பிய நாடகக் கவிதை நலங்களை நுகர்ந்து இன்புறும் பொழுதிலன்றி அறிவும் உள்ளமும் உரம்பெறமாட்டா. எனவே, நாம் எவ்வகையான வினைத்திறனாற்றுதற்கும் முதற்கண் வேண்டப்படுவது நல்லிசைப் புலவர்களியற்றிய சுவைபழுத்த செய்புட்களின் இன்பங்களை நுகர்ந்தும் பன்னருஞ் சிறப்பின் முன்னையோரின் விழுமிய பண்புகளைப் பாராட்டியும் மகிழ்ச்சியிற்றிளைத்தலே யாம். மற்றும், கல்வி என்பது சில நிகழ்ச்சிகளையும், பொருள்களையும், அவற்றினியல்புகளையும் அறிவது மாத்திரமன்று. ஊக்கமும் மகிழ்ச்சியும் விளைத்து, உள்ளத்தைப் பண்படுத்தி, உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவித்து உயர்நெறியிற் செலுத்துவதே உண்மையான கல்வியாம். புதியனவாகிய அறிவியற் கலையாராய்ச்சியிற்சிறந்து

புதுப்பொறிகள் கண்டு நுண்மாண் வினைபுரியும் மேனாட்டினர் ஏனோருஞ் சிறப்பாகத் தம்இலக்கியங்களைப் பலபட ஆராய்ந்து கற்றுக் களிகூர்ந்து, அவற்றையும் அவற்றையியற்றிய புலவர் பெருமக்களையும் எத்துணையாகப் பாராட்டுகின்றனர் என்பதனை அறியினும் பண்டையிலக்கியங்களைப் படித்தலிற் பயனின்றெனக் கூற எவரும் ஒருப்படாரென்க.

இனி, நம் தமிழ்மொழியின் இற்றை நிலை என்னை? அதனை வளம்படுத்தி மக்கள் நலம்பெற்றோங்குதற்குச் செய்யற்பாலன யாவை? என்பனபற்றி எனக்குத் தோன்றுவன சில கூறுவல். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பிருந்த தமிழ் வேந்தர்கள் தாங்கள் தமிழ்கற்றுப் புலமையிற் சிறந்து விளங்கியதனோடு, சங்கங்கள் நிறுவித் தமிழாராய்ச்சி செய்வித்தும், கற்றுவல்ல புலவர்கட்கு வேண்டுவன நல்கி அவர்களை நன்கு மதித்துப் போற்றியும் வந்தனர். சோழன் கரிகாற் பெருவளவன் பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசிலளித்தான். சேரர் குல வேந்தர் பலர் பதிற்றுப் பத்துள் ஒவ்வொரு பத்துப்பாடினோர்க்குப் பன்னூறாயிரம் பொன்னும், பிறவும் பரிந்தளித்தனர். குமணன் முதலிய வள்ளல்கள் புலவர்கட்குத் தம்முயிரையும் வழங்க ஒருப்பட்டிருந்தனர். அந்நாளில் ஆடவரேயன்றி மகளிருள்ளும் பற்பலர் புலமையிற்சிறந்து விளங்கினர். இடைக் காலத்தே பல்லவராட்சியில் அத்துணையின்றேனும் ஒருவாறு தமிழ் புரக்கப்பெற்றுவந்தது. சமணப்புலவர்களால் அரியபல நூல்கள் இயற்றப்பெற்றன. சைவசமய குரவர்களியற்றிய தேவார திருவாசகத் திருமுறைகளும், ஆழ்வார்களியற்றிய திப்பியப் பிரபந்தங்களும் உலகமுள்ளவரை நிலைபெற்று உயிர்கட்குப் பேரின்ப வீட்டினை நல்க வல்லன. அதன் பின்னர் முதற் குலோத்துங்கன் முதலிய சோழமன்னர்களின் ஆட்சியில் தமிழ் மீட்டும் வீறுற்றெழுந்தது. செயங்கொண்டார், கம்பர், ஒட்டக் கூத்தர் என்னும் கவிச்சக்கரவர்த்திகள் தோன்றித் தமிழை வளம்படுத்தினர். தமிழ் வேந்தர்களின் ஆட்சி நிலை குலைந்த பிற்காலத்திற்றான் புரப்பாரற்றுத் தமிழ் வளர்ச்சி

குன்றுவதாயிற்று. குறுநிலமன்னர் சிலராலே அது தன்னிருப்பினைக் காட்டிக் கொண்டிருந்தது. இரண்டு நூற்றாண்டுகளின் முன் சேது வேந்தர் சிலர் தமிழை ஒருவாறு புரந்து வந்தனர். திருவாவடுதுறையினும் தருமபுரத்தினும் நிலைபெற்ற சைவ மடங்கள் தமிழையும் சைவத்தையும் போற்றிவந்தன. பாண்டி நாட்டிற்றோன்றிய சிவஞான முனிவர், குமரகுருபரவடிகள் என்னும் இருபெரும் புலவரும் முறையே இம்மடங்களைச் சார்ந்து பெருமையெய்தினர். இறைவனருளால் அம்மடங்கள் இன்றும் இருக்கின்றன. திருப்பனந்தாள் மடத்தின் தலைவரவர்கள் வித்துவான் தேர்வில் முதன்மையாய்த் தேறுவோர்க்கு ஆயிரம் வெண்பொன் அளித்து வருவது மகிழ்ச்சிக் குரியது.

தமிழின் இற்றைநிலை யாவர்க்குந் தெரிந்தது தான். தமிழ் கற்பாரும், கற்பிப்பாரும், புரப்பாரும் அருகிவிட்டனர். தமிழின் சுருங்கிய நிலைகண்டு மனம் உளைந்த பாண்டித்துரையென்னும் தமிழர் கோமானால் முப்பதாண்டுகளின்முன் மதுரையம்பதியிலே தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்று, அதன் சார்பிலே தமிழ் கற்பிப்பதற்கு ஓர் கல்லூரியும் அமைக்கப்பெற்றது. தமிழ்த் தேர்வுகளும் ஏற்படுத்தப்பெற்றன. அதன் பயனாகப் பண்டைத் தமிழ் நூற்களின் பெயர்களும் அறிதற்கு இடனின்றியிருந்த எம்போல்வார் பலர் அவற்றையறிந்து சிறிது சுவைக்கவும் நேர்ந்தது. பின், இருபதாண்டுகளின் முன் இச்சங்கத்தலைவரது அருமைத் தம்பியாராகிய தமிழ்ப்பற்றே உருவெடுத்தாற் போன்ற இராதாகிருட்டினனார் என்னும் திருமகனால் இச் சங்கம் நிறுவப்பெற்றது. வரம்பில்லாத தமிழ்ப்பற்றும் தூய உள்ளமும் உடையோர்களாலே நிறுவிப் போற்றப் பெற்று வரும் இச்சங்கமானது நாடோறும் வளர்ந்து தமிழின் சுவையைப் புலப்படுத்தி யாவரையும் தமிழ்ப் பற்றுடையராக்கி வருவது கண்கூடு. இங்ஙனமெல்லாமிருந்தும், பல காரணங்களாலே கற்பவர் தொகை அருகி விட்டமையாலும், கற்பவர்களும் இம்மை வாழ்வு கருதி ஆங்கிலக் கல்வியொன்றனையே மேற்கொண்டு விட்டமையாலும், ஆங்கிலக் கல்விக்கு நிலைக்களனாகவுள்ள சென்னைப் பல்கலைக் கழகமானது தமிழில் அரு

வருப்புற்ற தறுகணாளரின் செல்வாக்கிற்குட்பட்டு இருபதாண்டு களின் முன் அதற்கு ஒதுக்கிடமும் தாராது புறக்கணித்தமை யாலும் தமிழ்மொழியானது பெரிதும் இரங்கத் தக்க நிலையை எய்தியது. இச்சங்கம் போன்ற பல இடங்களிலிருந்து தமிழ் மக்கள் செய்த முறையீடு சென்னைப் பல்கலைக் கழகத்தின் செவிக்கெட்டியது. நாட்டு மொழிகளிற் பற்றுடையார் சிற்சிலர் முயற்சியால் தமிழ் முதலிய மொழிகள் சில ஆண்டுகளாகப் பின்னும் அதில் இடம் பெறுவவாயின. அதன்கண் தமிழ் மொழியானது சிறப்பு வரிசையில் இன்னும் தனக்குரிய முத லிடத்தில் வைக்கப் பெறவில்லையாயினும், ஆங்கிலங்கற்கும் தமிழ் மாணவர்கள் தமிழும் பயிலுதற்கு இடமளித்தும், தமி ழுக்குத் தனிப்பட்ட வித்துவான் தேர்வினை ஏற்படுத்தியும், தமிழாராய்ச்சியின் பொருட்டு ஆராய்ச்சி நிலையம் அமைத்தும் சென்னைப் பல்கலைக்கழகம் செய்துவருமுதவியை நாம் பாராட்டு தல்வேண்டும். இத்தகைய செயல்கட்கு உறுதுணையாயிருந் தவர்களில் தமிழறிஞராகிய திருவாளர் கா. நமச்சிவாய முதலியா ரவர்களும் ஒருவரென்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி யளிப்ப தாகும். எனினும் ஆராய்ச்சி நிலையம் முதலியன அமைத்துப் பொருள் வழங்கும் அளவானே பல்கலைக் கழகத்தின் கடமை தீர்ந்ததாகி விடாதென்றும், அவை செய்யும் செயல்முறைகள் தமிழ் வளர்ச்சிக்குப் பொருந்தியுள்ளனவா என்பதனை நன்கு கண்காணித்தலும், தமிழ் வளர்ச்சிக்குரிய பிறவும் அது மேற் கொண்டு செய்துவர வேண்டுமெனவும் அடுத்தடுத்து நினைப் பூட்டி வருவது இச்சங்கம் போன்றவற்றின் கடமை.

தமிழின் பழைய நூற்றுறைகளையும், தமிழரின் பழைய நாகரிகச் செய்திகளையும், கலைகளையும் ஆராய்ந்து வெளிப் படுத்தியும், தமிழ் மக்கள் கைத்தொழில் முதலியவற்றில் மேன்மை யுறுதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தியும் தமிழுக் கும் தமிழ் மக்களுக்கும் ஆக்கம் விளைத்தலையே முதல் நோக்க மாகக் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப் பெற வேண்டுமென்னும் முயற்சி 1925-ம் ஆண்டு முதல் 1927-ம் ஆண்டு முடிய நடைபெற்றதனைப் பலர் அறிதல் கூடும். அதன்

சார்பாக நடைபெற்ற முதற் பெருங்கூட்டம் 23—8—1925ல் இச்சங்கக் கட்டிடத்திலேயே நிகழ்ந்தது. பின்பு நிகழ்ந்த வற்றை இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. அம்முயற்சி யைச் சென்னை அரசாங்கத்தினரே ஏற்றுக் கொண்டு, அதனை ஆராய்ந்து துணிதற்கு ஓர் குழுவினை நியமித்தனர். அதற்கு அமைச்சராக இருந்தவர் இப்பொழுது சென்னை மாகாண அரசி யலில் அமைச்சராகவிருக்கும் கனம் பி. டி. ராஜன் அவர் களே. அக்குழுவினர் தமிழ் நாட்டின் பல பகுதியிலுமுள்ள அறிஞர் பலரோடும் உசாவி, முடிவில், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவது இன்றியமையாததே எனவும், அதற்கேற்ற இடம் திருச்சிராப்பள்ளியே எனவும் தம் துணிபுரைத்தனர். அவ்வளவில் அது நின்றுவிட்டது. அம் முயற்சி அறவே கைவிடப்பெற்றதற்குக் காரணம் என்னை? தன வணிகர் கோமானாகிய செட்டிநாட்டரசர் கனம் அண்ணாமலை அவர்கள் வரையாவள்ளன்மையுடன் பெரும்பொருள்வழங்கி அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் தோற்று வித்தமையேயாகும். இது முற்கூறிய தமிழ்ப்பல்கலைக் கழகத் தின் நோக்கங்கொண்டு தோற்றுவிக்கப் பெற்றதாகலின் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்மக்களின் ஆக்கத்திற்கும் இஃதே அமையு மென்னுங்கருத்தால் முன்னெழுந்த முயற்சியைக்கைவிட நேர்ந் தது. அண்ணாமலைப்பல்கலைக்கழகம் அது தோற்றிய நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றதெனவே எண்ணுகிறேன். எனினும் தமிழ் மக்களாயினோர் இச்செய்திகளை அடிக்கடி அதன் நினை வுக்குக் கொண்டுவருதல் கடனாகும்.

பூகோளம், சரித்திரம், கணிதம் என்பவற்றையும், பிற புதிய அறிவியல் நூல்களையும் தமிழில் எழுதுவித்தலும், தமிழ் வாயிலாக அவற்றைக் கற்பித்தலும் செய்யவேண்டுவது முற் கூறிய இருபல்கலைக் கழகங்களுக்கும் உரியகடனாகும். ஆங்கில மொழிந்த எல்லாப் பாடவகைகளையும் உடனே தமிழ் வாயி லாகக் கற்பித்தல் சாலாதெனின், அவற்றை யாண்டுதோறும் ஒவ்வொன்றாக வேனும் வெளிப்படுத்திக் கற்குமாறு செய்தல் வேண்டும். இவ்வகையினும் அவ்விருபல்கலைக் கழகங்களையும்

வற்புறுத்துவது தமிழ்ச் சங்கங்களுக்கும், நாட்டின் பற்றும் மொழிப் பற்றுமுடைய தமிழ்மக்களுக்கும் உரியகடனாகின்றது. ஆங்கிலத்திலுள்ள அறிவியல்நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்குமிடத்துத் தமிழின் தூய்மையைப் பாதுகாத்தலும் வேண்டும். எத்துறையிலாயினும் வேற்று மொழிச்சொற்களை வரம்பின்றிப் புகுத்தியெழுதப்படும் நூற்கள் தமிழின்பெருமைக்குக்கேடு விளைப்பனவேயாகும். அறிவியல்நூற்பொருள்களைக் குறிக்குஞ்சொற்கள் தமிழில் அகப்படா என்போர் அறிவும், முயற்சியும் சுருங்கியோரேயாவர். இருமொழியினும் புலமையுடையோர்கள் கூடி மடியின்றி முயன்றால் எத்தகைய பொருளுக்கும் தமிழ்ச்சொல் காண்டல் அரிதன்று. ஒருவாற்றானும் தமிழ்ச்சொல் அமைத்தல் இயலாதாயின் பிறசொற்களைத் தமிழ் முறைக்கியையத் திரித்து ஏற்றுக் கொள்ளுதல் குற்றமாகாது. அதற்கும் ஓர் எல்லைவேண்டும். நமக்கு வேறு எம்மொழியிடத்தும் எத்துணை வெறுப்புமின்று. பல்லாயிர ஆண்டுகளாக இயல்வரம்பு சிதையாது போற்றப்பெற்று வந்த நம் இனிய மொழியின் வனப்பினையும் தூய்மையையும் பாதுகாவாது விடுதல் பெரியதோர் ஏதமாமென்பதே நமது கருத்து.

இனி, உயர்தரப் பள்ளிகளிற் பயிலும் மாணுக்கர்கள் ஆங்கிலமொழிந்த பாடப்பகுதிகளைத் தாய்மொழியிற் கற்று விடையெழுதலை அரசாங்கத்தினர் உடன்பட்டிருக்கவும், உயர்தரப்பள்ளிகள் பெரும்பாலனவும் நாட்டாண்மைக் கழகங்களின் கீழே நம்மவர் ஆட்சிக்குட்பட்டிருக்கவும் அவற்றை ஏன் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்க முந்துகின்றிலரென்பது விளங்கவில்லை. தற்பொழுதுள்ள ஆசிரியர் சிலர் தமிழறிவு சாலாதவராயின் அதன்பொருட்டு இங்ஙனஞ் செய்தல் நாட்டின்பாலும் மொழியினிடத்தும் பற்றுடையவர் செயலாகுமா? இத்தஞ்சையின் பெருநாட்டாண்மைக் கழகமே தமிழ் வாயிலாகக் கற்பித்தலைப் புறக்கணித்தது என்னின் வேறு யார் மீது நாம் குறை கூறுவது?

இனி, ஆங்கிலக்கல்லூரிகளிற் பயிலும் மாணுக்கர்களுக்கும் நாம் கூறவேண்டுவதொன்றுண்டு. தமிழ் எழுத்துப்படிக்கும்

மாணாக்கர்களிலேயே பெரும்பாலர் தமிழிற் சிலவரிகள் தாமும் பிழையின்றியெழுத ஆற்றலற்றவரா யிருக்கின்றனர். கீழ் வகுப்புக்களிலிருந்து தமிழ் புறக்கணிக்கப்பட்டு வருதலையே இது காட்டுகின்றது. ஆசிரியர்களும், பாட புத்தகங்களும், தேர்வு முறைகளும் இதற்குக் காரணமாயினும், மாணாக்கர் களிடத்தில் தமிழ்ப்பற்றில்லாதிருத்தலே சிறந்தகாரணமாகும். முன்பு ஆங்கிலத்திற் பெரும் புலமையெய்திப் பட்டம்பெற்ற பலர் தமிழ்ப் புலமையிலும் சிறந்து விளங்கினர். ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், ஆசிரியர் பூண்டி அரங்கநாத முதலியா ரவர்கள் முதலானோர் எய்தியிருந்த தமிழ்ப்புலமையும், தமிழ்ப் பற்றும் மிக வியந்து பாராட்டற்குரியன. தமது தாய்மொழி யிற்பற்றும் பயிற்சியுமில்லாதோர் ஆங்கிலங்கற்று நாட்டிற்கு யாது பயன் விளைப்போராவர்?

இப்போது தமிழ் வித்துவான் தேர்வுக்குப் படிப்போர் தொகையும், தேறுவோர் தொகையும் பல்கி வருதல் மகிழ்ச்சி யடைதற்குரியது. ஆனால் அப்பட்டம் பெற்றவர்கள் அதனைத் தம் படிப்பிற்குத் தொடக்கமெனநினைந்து மேலும்மேலும் பல நூல்களையும் கற்றலும், அதன் பயனாக அரிய ஆராய்ச்சி யுரை களை எழுதி வெளியிடுதலும் செய்வாராயின் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தோராவர்.

ஆராய்ச்சியுரைகள் எழுதுவோரைக் குறித்தும் சிறிது கூறுதல்வேண்டும். ஆராய்ச்சியை மேற்கொள்வோர் தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு இயைபுள்ள பலவற்றையும் நன்கு கற்றறிதல்வேண்டும். பண்டைநூற்களின் கருத்துக்களை நுனித்துணர்தல் வேண்டும். இக்காலத்து ஆராய்ச்சி செய் வோர் சிலர் பண்டுதொட்டு வருங்கொள்கையுடன் மாறுபட்டு உரைத்தலே ஆராய்ச்சி யாமெனவும், அதுவே தம்மறிவை மிகுத்துக் காட்டுமெனவும் கருதி, யாதோராதரவுமின்றித் தாம் கருதியவாறெல்லாம் புரைபட்ட கொள்கைகளை வெளியிட்டு அரங்கின்றி வட்டாடி வருகின்றனர். தொல்காப்பியத்தையும், சங்க விலக்கியங்களையும், திருக்குறளையும் ஒப்பற்ற நூல்

ளெனப் பாராட்டிப் பேசுவோர் அவற்றின் கருத்துக்குமாறாகக் கடவுள் வழிபாடு முதலிய சிரிய கொள்கைகளைப் புறம்பழித்துரைப்பதென்னை? பழைய தமிழ்நூற்கள் யாவும் உலகிற்கு நிமித்த காரணமாகிய கடவுள் ஒருவர் உண்டென்னும் கொள்கையும், உயிர்கள் அவரை வழிபட்டு உய்யவேண்டுமென்னுங் கொள்கையும் உடையனவே. தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தொடக்கத்திலேயே கடவுள் வாழ்த்துக் கூறினர். அதன்கண் அவர்,

> "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்"

என்றுரைத்தது பெரிதும் சிந்திக்கற்பாலதன்றோ? சமணருநம் புத்தர்களும் வடமொழி தென்மொழிகளை நன்கு கற்றுப் புலமையடைந்திருந்தும், அவற்றின் கருத்துக்குமாறாக, முழுமுதற்கடவுளின் உண்மை கொள்ளாமையாலன்றோ,

> "ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா
> அதமிலி யமணொடு தேரரை
> வாதில்வென் றழிக்கத் திருவுள்ளமே"

என, மூன்றுமாண்டில் உண்மைஞானம் கைவரப்பெற்ற ஆளுடையபிள்ளையார் இறைவன்பால் விண்ணப்பித்து நின்றனர். ஆதலின் அறிஞர்களே! தமிழாராய்ச்சிசெய்வோர் கடவுளும், இருவினைப்பயனும் முதலியன இல்லையென்றுரைக்கும் இன்மைப்படுகுழியில் விழாது, கல்வியறிவின்பயனைத் தலைப்படுவோராயிருத்தல் வேண்டும். காய்தலுவத்தலின்றி நடுநின்றுபுரியும் ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இஃது ஒத்தமுடிபாகும். பண்டைச்சான்றோரொருவர்

> "நல்லதன் நலனும் தியதன் றீதும்
> இல்லை யென்போர்க் கினனா கிலியர்"

என்று கூறியிருப்பதைக் கருத்திற் பதிப்போமாக. இனி, இச்சங்கமும், இதுபோன்ற வேறுகழகங்களும் மேற்கொள்ள வேண்டிய தமிழ்ப்பணிகளைச் சுருங்கவுரைத்து இவ்வுரையை முடிப்பல். தமிழை வளம்படுத்தற்கு நாம்செய்ய வேண்டிய

வற்றை நினைத்தால் இதுகாறும் ஒன்றும் செய்திலோம் என்றே கூறுதல்வேண்டும். மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்த தென்று நாம் பாராட்டுகின்ற தமிழுக்கு நாம் என்னவொப்பனை செய்திருக்கின்றோம்? செவ்விதின் ஆராய்ந்து எழுதப்பெற்ற தமிழ்மொழி வரலாறுஇல்லை. தமிழ்ப்புலவர் வரலாறும்இல்லை. பண்டை யிலக்கியங்களைப்பற்றிய சிறந்த ஆராய்ச்சியுரைகளும் இல்லை. கம்பராமாயணம் என்பது காப்பியவரசாகத்திகழ்வது. அதுநமக்குக் கிடைத்திருக்கின்ற விலைமதிக்கலாகாத மாணிக்க மாகும். புலவர்கள் அதில்எத்தனையோ வகையான ஆராய்ச்சி கள்செய்வதற்கு இடனுண்டு. இருந்தும், ஒன்றும் செய்யப் பட்டிலது. திருத்தமானதொரு பதிப்பைத்தானும் அதுபெற் றிலது. பெரியபுராணமும் ஆராய்ச்சிக்கு நிலைக்களனாகவுள்ளதே. கலித்தொகை முதலியசெய்யுட்களின் அழகுகளையும் பலபடி யாக ஆராய்ந்து வெளியிடுதல்வேண்டும். தமிழுடன் ஆங்கிலப் புலமையும் வடமொழிப் புலமையும் உடையோர் இத்தகைய ஆராய்ச்சித்துறையில் இறங்குதல் இன்றியமையாதது. இன்ன னைய பலபணிகளால் தமிழணங்கை அணிசெய்தற்குத் தமிழ்ச் சங்கங்கள் முற்படுதல்வேண்டும். பணியியற்றவல்ல புலவர் களைத்தோற்றுவிப்பதும் தமிழ்ச்சங்கங்களின் கடமையே. மகா மகோபாத்தியாய சாமிநாதையரென்னும் பேரறிஞரொருவரால் தமிழ்மொழி எத்துணைநலம் பெற்றுள்ளது. நாம் இங்ஙனமெல் லாம் நமதுபழந்தமிழைப் பற்றியும், பழந்தமிழ்ப் பெருமக்களைப் பற்றியும் பேசுதற்கு வாய்தந்த வள்ளல் அவரன்றோ? அப்பெரி யார் இன்னும் பல்லாண்டு நல்லுடம்புடன்வாழ்ந்து மற்றும் செய்யக் கடவனவாகிய தமிழ்ப் பணிகள் பல செய்ய வேண்டு மெனத் தமிழ்த் தெய்வத்தின் திருவருளைச் சிந்திப்போமாக. அவர்கள் போல் மற்றுஞ்சிலரேனும் பணியாற்றவல்லார் இருப் பின் தமிழ் எவ்வளவு உயர்நிலை யடைதல் கூடும்? ஆகலின் ஆராய்ச்சியறிவு சான்ற தக்கபுலவர்கள் தோன்றுதற்குத் துணை யாயிருப்பது தமிழ்ச் சங்கங்களின் முதற்கடனாகும்.

இனி, இக்கரந்தைத் தமிழ்ச் சங்கமானது தோன்றிய நாள் தொட்டு வரம்பில்லாத தமிழ்ப்பற்றுடன் தனது ஆற்றலுக்

கியைந்த தமிழ்ப்பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறது. தமிழ் மக்களுக்குத் தமிழிலே சிறந்த பற்றினை யுண்டாக்கியது இச் சங்கமென்று கூறுவது சிறிதும் புனைந்துரையாகாது. ஆண்டு தோறும் பெரும்புலவர்களை அழைத்து விரிவுரையாற்றுவித்துச் சிறப்பாக ஆண்டுவிழாக் கொண்டாடியும், தலைசான்ற புலமை யுடைய தமிழ்ப்பெருமக்களின் திருநாட்களையும் அங்ஙனமே கொண்டாடிப் போற்றியும் யாவர்க்கும் தமிழின்கண் ஆர்வத் தையும் பற்றையும் விளைவித்து வருகிறது. ஆராய்ச்சிமிக்க உயர்ந்த கட்டுரைகளைத் தாங்கி வருகின்ற "தமிழ்ப் பொழில்" என்னும் சிறந்த பத்திரிகையைத் திங்கடோறும் வெளியிட்டு வருகிறது. 8-வது வகுப்புவரையுள்ள இலவசப் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்தி எளிய பிள்ளைகள் பலரைக் கண்ணுடையவ ராக்குகின்றது. இது நேரில் தமிழ் வளர்ச்சியுடன் இயை புடையதாகத் தோன்றாவிடினும், சிறந்ததோர் அறச்செயலா மென்பது அனைவர்க்கும் ஒத்தது. அன்றியும் இதிற் கற்போர் தமிழில் நல்ல பயிற்சியும் பற்றும் உடையராதலையும், இவர்கள் பின்னாளில் சங்கத்தின்பால் மிக்க ஆதரவு காட்டலாகுமென்ப தனையும் நினைத்தால் தமிழ் வளர்ச்சியுடன் இச்செயலும் இயைந் ததேயாகும். எனினும் நேர் முகமாகத் தமிழ் வளர்ச்சிக்குச் செய்யவேண்டிய, நான் முற்குறித்த சிலவற்றைச் செய்யத் தொடங்குவது இன்னும் இன்றியமையாததேயாகும். ஆயின் அவற்றை எங்ஙனம் செய்வது? சங்கம் என்பது புலவர்களும் பற்றுள்ள உறுப்பினர்களும் சேர்ந்த தொகுதிதானே? அவர்கள் தங்கள் பொருளாலும் புலமையாலும் உதவிற்றிலரென்னின், வேறு துறைகளில் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான பொருள்களை வாரியிறைக்கும் தமிழ் நாட்டுச் செல்வர்கள் இதற்குச் சிறிதும் உதவ முன் வந்திலரென்னின், சங்கம் என் செய்யும்? தம் உடல்பொருள் ஆவியையெல்லாம் தமிழுக் கென ஒப்புவிக்கும் ஒருபத்து உமாமகேசுவரர்கள் நம் சங் கத்திலே தமிழ்நாட்டிலே தோன்றி விடுவார்களாயின் அன்றே தமிழ்மொழி உயர்நிலையுற்றதாமென்க.

ஆன்றோர்களே, இது காறும் அறிவாற்றல் சுருங்கிய என்புன் மொழிகளைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த

றங்கட்கு என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன். ஒருதமிழ்ப் புலவன்பெறும் பேறுகளுள் இதனிற்சிறந்த தொன்றில்லை யென்னத்தக்க இத்தகைய பெருஞ்சிறப்பினை எனக்களித்த பேரன்புடைய இச்சங்கத்தலைவரும், அமைச்சரும் முதலான வர்கட்கு எனதுநன்றியறிவு உரியதாகுக. புழுவினும் கீழ்மை யுடையஎன்னையும் இப்பொழுது இந்நிலையில் இருக்கப்பணித்து இதனை நிறைவேற்றுநின்ற செம்பொருளின் திருவருளை எங் ஙனம் போற்றவல்லனாவேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உக-ஆவது ஆண்டு விழாவில் கூடிய தமிழ் மக்கள் ஒருமித்துச் செய்த முடிபுகள்.

---

* க. சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்ப் பெரும் பேராசிரியரும் (மகாமகோபாத்தியாயர்) தமிழ் மொழிக்கு அரும் பெரும் தொண்டு செய்து வருபவருமாகிய திருவாளர் உ. வே. சாமிநாதையர் அவர்கட்குக் கலைநூல் முதுபுலவர் (Doctor of Literature) பட்டங் கொடுக்க முடிவு செய்திருப்பதைப் பற்றி இச்சங்கத்தார் மிக்க மகிழ்வெய்தி மேற் கூறிய பல்கலைக் கழகத்திற்கு நன்றியறிதலையும் பட்டம் பெற்ற ஐயரவர்கட்கு மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

* உ. சென்னைப் பல்கலைக் கழகத்தார், செட்டிநாட்டரசரும் கல்விக்கொடை வள்ளலுமாகிய பெருந்திருவாளர் (Honorable) பெருமை மிக்க திவான்பகதூர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கட்கு அறநூல் முதுபுலவர் (Doctor of Laws) பட்டம் கொடுக்க முடிவு செய் திருப்பதைப்பற்றி இச்சங்கத்தார் மிக்க மகிழ்வெய்தி அப்பல்கலைக் கழகத் திற்கு நன்றியறிதலையும், பட்டம் பெற்றவர்க்கு மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

* இவ்வடையாளமிட்டவை அவைத் தலைவரவர்கள் முன்மொழிய அவையோரால் ஏற்கப்பட்டன.

* ௩. இச்சங்கப் பேரன்பரும், சங்கத்தே திருநாவுக்கரசர் திருவுருவப்படம் அமைத்து, ஆண்டுதோறும் பெரும்பொருள் அளித்துத் திருவிழாவினைச் சிறக்க நடத்தி வந்தவருமான தஞ்சை மகர்நோம்புச்சாவடி திரு. ம. உலகநாத பிள்ளை அவர்கள் அண்மையில் இறைவன் திருவடி நீழல் எய்தியது இச்சங்கத்திற்கு ஆற்றொணாத்துயரை விளைப்பதாகும் என இச்சங்கம் முடிவு செய்கிறது.

* ௪. தமிழ்மொழியை வளர்ப்பதற்கு முயன்றுவரும் சங்கங்களை அவையாவும் ஒன்று சேர்ந்து உழைக்கவும், ஆண்டுதோறும் ஒவ்வோரூரில் தமிழ் மகாநாடு கூட்டித் தமிழ் வளர்ச்சிக்கு உரிய முடிபுகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் வழிகளில் முயலவும் இச்சங்கத்தார் வேண்டுகின்றனர்.

* ௫. தமிழ் மக்கள் அனைவரும், நல்லொழுக்கத்தைப் பரப்பும் சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்குமாகத் தம் வருவாயில் தாமே ஆய்ந்து குறிக்கும் ஒருபங்கை ஒதுக்கி வைத்து, அந்நோக்கோடு உண்மையாகவும் திறம்படவும் தொண்டு செய்யும் சங்கங்கள் வாயிலாய், அப்பொருளின் பெரும் பகுதியைச் செலவிட்டு ஒப்புரவாற்ற வேண்டுமென்று, இச்சங்கம் அவர்களை வேண்டிக் கொள்ளுகின்றது.

* ௬. தமிழரெல்லோரும் நல்ல தமிழ் நூலொன்றை நாடோறும் குறைந்தது பதினைந்து நிமிடநேரமேனும் பொருளுணர்ச்சியோடு படித்து வரும் முறையை மேற்கொள்ள வேண்டுமென்று இச்சங்கம் வேண்டிக் கொள்ளுகின்றது.

* ௭. ஆங்கிலம் கற்கும் தமிழ்மாணவர், பி. ஏ., எம். ஏ., பட்டங்கட்காகப் படிக்கையில் தமிழை ஒரு விருப்ப பாடமாக (Optional) எடுத்துக் கொள்ள அவர்களை இச்சங்கம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது:

* ௮. தமிழ்ப் புலமை வாய்ந்த தக்க இளைஞர்கள் பலர் இசைக் கல்வி கற்கச் சிதம்பரம் இசைக் கலாசாலைக்கும் மருத்துவக்கல்வி கற்க மருத்துவக்கல்லூரிக்கும் சென்று தேர்ச்சிபெறல் தமிழ்வளர்ச்சிக்கு ஏற்ற தொன்றாம் என்று இச்சங்கம் கருதி அவர்களை அங்ஙனம் செய்யுமாறு வற்புறுத்துகிறது.

௯. தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளிக்கவல்ல ஆற்றல் வாய்ந்த பிறமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழரிடையே பரப்புதல் இன்றியமையாத தென இச்சங்கம் கருதுவதோடு, அத்தொண்டை நிறைவேற்றுதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினையும்,

சென்னைப் பல்கலைக் கழகத்தினையும், சைவ வைணவ மடங்களையும் இச் சங்கம் வேண்டுகிறது.

முன்மொழிந்தார் :—திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,
பி. ஏ., பி. எல்.

வழிமொழிந்தார் :—திரு. K. சம்பந்தம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி.

ம. சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழ் பி. ஏ. 'ஆனர்ஸ்' பட்டம் வழங்க மிகுவிரைவில் ஏற்பாடு செய்யும்படிக்கு அக்கழகத்தாரையும், அதற்குத் தகுந்த வகுப்புக்களை அரசாங்கக் கல்லூரிகளில் ஏற்படுத்த அரசாங்கத்தாரையும் இச்சங்கம் வேண்டுகின்றது.

முன்மொழிந்தார் :—திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,
பி. ஏ., பி. எல்.,

வழிமொழிந்தார் :—திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள்.

* மக. சென்னை இராசதானிக் கல்லூரி, கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி முதலாய அரசர் கல்லூரிகளில் B. A., வகுப்பில் ஐந்தாம் பகுதித் (5th Group) தமிழ்ப்பாடங்கள் பயிலுதற்குரிய வசதிகளை ஏற்படுத்துமாறு இச்சங்கம் அரசியலாரை வேண்டுகின்றது.

மஉ. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வித்துவான் படிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் உதவிச் சம்பளத்தொகை முழுவதையும் தமிழ் வித்துவான் படிப்பிற்காகப் பயன் படுத்துவதோடு, வடமொழி வித்துவான் சிரோமணிப் படிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் உதவிச் சம்பளத் தொகையில் எஞ்சுவதையும் பிறதுறைப் படிப்பிற்காகச் செலவிடாது தமிழ் வித்துவான் படிப்பிற்கே செலவழிக்கப்பட வேண்டுமென்றும், தமிழ் 'ஆனர்ஸ்' படிக்கும் மாணவர் அனைவர்க்கும் உதவிச்சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் இச்சங்கத்தார் வேண்டிக் கொள்ளுகின்றனர்.

முன்மொழிந்தார்; திரு. ந. மு. கோவிந்தராசநாட்டாரவர்கள்பி .ஏ., எல். டி

வழிமொழிந்தார் : திரு. T. S. அருணாசலம்பிள்ளை அவர்கள்.

மரு. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோமணி வகுப்புகளுக்கு ஒப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் முதலாய பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத்த அவர்களை இச்சங்கத்தார் வேண்டுகின்றனர்.

முன்மொழிந்தார் : திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,
பி. ஏ., பி. எல்.

வழிமொழிந்தார் : திரு. பண்டிதர் R. P. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள்.

௰௪. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் கருநாடக சங்கீதத்தைப் போலவே தேவாரம் திருவாய்மொழி முதலிய தமிழ்ப் பண்முறைகளையும் மாணவர்கள் கற்குமாறு விதிக்க வேண்டுமென இச்சங்கத்தார் அப்பல்கலைக் கழகத் தலைவர்களை வேண்டிக் கொள்கின்றனர்.

முன்மொழிந்தார் : திரு. க. மு. கோவிந்தராசநாட்டாரவர்கள் B. A., L. T.
வழிமொழிந்தார் : திரு. R வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், பண்டிதர்.

* ௧௫. இராமேச்சுவரம் தேவத்தானத்தார் நடத்திவரும் கல்லூரியில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தனித்தமிழ் வித்துவான் தேர்வுக்குரிய வகுப்புகளை ஏற்படுத்துமாறு இச்சங்கம் வேண்டுகின்றது.

* ௧௬. தமிழ் நாட்டுத் தனியரசாக விளங்கும் புதுக்கோட்டை அரசாங்கத்தாரைத் தமது ஆட்சியில் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு தனித் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி நடத்துமாறு இச்சங்கம் வேண்டி நிற்கின்றது.

* ௰௭. தருமபுர ஆதினமும் திருப்பனந்தாள் ஆதினமும் தம் மாதினத்துத் தமிழ் நூல்களை நன்காராய்ந்து அச்சிட்டு நன்கொடையளித்துப் பரப்பி வருவதையும், திருப்பனந்தாள் ஆதினம் தமிழ்வித்துவான் தேர்தலில் முதலில் தேர்பவர்க்குப் பொருளாதரவு சிறக்க அளித்து வருவதையும் பெரிதும் பாராட்டுவதோடு பிற மடாலயத் தலைவர்களும் இங்ஙனம் தமிழ் வளர்க்க வேண்டுமென்று இச்சங்கம் மன்றாடிக் கேட்கின்றது. மேலும் மிகப்பலர் பயின்று தேறும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தேர்ச்சிக்கும் அத்தகைய பரிசு ஒன்று ஏற்படுத்த இச்சங்கம் அன்னோர்களை வேண்டுகின்றது.

* ௰௮. தமிழ் நாட்டில் செல்வமிக்க சைவ வைணவத் திருக்கோயில்களில் வரும் மிகுந்த வருமானத்தின் (Surplus-income) ஒரு பகுதியைத் தமிழ் வளர்ச்சிக்கும் ஒரு பகுதியை சைவ வைணவ சமயபோதனைக்கும் பயன்படுத்தும்படி இச்சங்கம் அவ்வாலய அறநிலைத் தலைவர்களையும் இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தையும் வேண்டுகின்றது.

௰௯. பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் தமிழ்ப்பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் கழக உறுப்பினர், நிரம்பிய தமிழறிவாளர்களாயிருக்க வேண்டுமென்றும், அக்கழகத்தார் அச்சிலேறியவைகளை யெல்லாம் பாட புத்தகங்களாக ஏற்படுத்துவதைவிட்டுச் சிறந்த ஆராய்ச்சி செய்து தக்க புத்தகங்களையே பாடமாக ஏற்படுத்த வேண்டுமென்றும், இச்சங்கத்

தார் அக்கழகத்திற்கு இச்சங்கத்திலிருந்து சில உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும் உரிமை கொடுக்க வேண்டுமென்றும் இச்சங்கத்தார் சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்கின்றனர்.

முன்மொழிந்தார்:—திரு. பண்டிதர் R. P. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார் :—திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

உ0. சென்னைப் பல்கலைக் கழகச் செனட் சபைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தனுப்ப இச் சங்கத்திற்கு உரிமை அமைக்கப்பட வேண்டுமென்று இச்சங்கம் அரசியலாரை வேண்டுகின்றது.

முன்மொழிந்தார் : திரு. சாமி வேலாயுதம்பிள்ளை அவர்கள் பி. ஏ., எல். டி.

வழிமொழிந்தார் : T. S. அருணாசலம் பிள்ளை அவர்கள்.

* உக. உயர்தரக் கலாசாலைகளில் மேல்வகுப்புக்கு மாணவர்களை மாற்றும்போது மற்றைப்பாட எண்களோடு (Marks) தாய் மொழியின் பாட எண்களையும் ஒருங்கு மதித்து மாற்றுமாறு செய்யும்படிக் கல்வித் துறைத்தலைவர்களையும் கலாசாலைத் தலைவர்களையும் இச்சங்கம் வேண்டிக் கொள்ளுகின்றது.

* உஉ. பள்ளியிறுதி வகுப்புத் (S. S. L. C.) தேர்வில் தாய்மொழியோடு மொழி பெயர்த்தலையும் சேர்த்துத் தகுதி நோக்குவது, மாணவர்களுக்குத் தாய்மொழியைப் படிப்பதிலுள்ள ஊக்கத்தைக் குறைத்து விடுவதால் தாய்மொழி வினாத்தாள் எண்களோடு, மொழிபெயர்ப்பு எண்ணைச் சேர்க்காது, தாய்மொழியைத் தனிப்பாடமாகவே வைக்குமாறு, பள்ளியிறுதி வகுப்புத் தேர்வுக்கழகத்தாரை (S. S. L. C., Board) இச்சங்கம் வேண்டிக் கொள்ளுகின்றது.

உ

திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் கண்ட சில செய்திகள்.

திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள், ஆசிரியர், திருவையாறு.

திருப்புறம்பியம் என்பது சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்றாகும். இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இது சைவசமய குரவர்கள் நால்வர்களாலும் பாடப்பட்ட பழைமையும் பெருமையும் வாய்ந்தது.

இவ்வூர் முதல் இராசராசன் காலத்தில் சோழமண்டலத்தில் அண்டாட்டுக் கூற்றத்துட்பட்டிருந்தது என்பது கல்வெட்டால் புலப்படுகிறது. இதற்குப் பாராந்தகச் சோழச் சதுர்வேதி மங்கலம் என்று ஒரு பெயரும் உண்டு. விக்கிரம சோழன் கால முதல் பிற்காலத்துச் சோழர்கள் காலம் வரை அப்பெயர் மாறி விக்கிரமசோழவளநாட்டு இன்னம்பர்நாட்டுத் திருப்புறம்பியம் என்று வழங்கி வந்திருக்கிறது.

இது பிற்காலத்துச் சோழர்களில் முதல்வனும் கி. பி. 880 முதல் 907 வரை அரசாண்ட முதல் ஆதித்தனால் எடுப்பிக்கப்பட்ட மிகப் பழைய கற்றளியையுடையது. இவ்வாலயத்திற்கு ஆதித்தேச்சுரம் என்ற பெயர் உண்டென்று சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எனவே இவ்வாலயம் கி. பி. 907க்கு முன்னரே கட்டப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய சைவ சமய குரவர்களால் பாடப்பட்டுள்ளமையின் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலும் இந்த ஆலயம் பெருமையுடன் விளங்கியிருத்தல்வேண்டும்.

இவ்வூர்ப் புராணத்தில் இவ்வாலயத் தெழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒரு வணிகப் பெண்ணின் திருமணங் குறித்துச் சான்று பகர்ந்தார் என ஒரு வரலாறு காணப்படுகின்றது. அதற்கேற்ப இங்கு இறைவன் திருப்பெயரும் சாட்சி வரத நாதர் என வழங்கி வருகின்றது. சிலப்பதிகாரத்து வஞ்சின மாலையுட் காணப்படும் "வன்னிமரமு மடைப்பளியுஞ் சான்றாக, முன்னிறுத்திக் காட்டிய மொய் குழலாள்" என்ற தொடரும் மேற்கூறிய வரலாற்றையே குறிக்கின்றது. சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இவ்வரலாறு அந்நூல் தோன்றிய காலமாகிய கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னரே நிகழ்ந்து தமிழ் நாடெங்கும் பரவியதாதல் வேண்டும். ஆகவே இத்திருப்புறம்பியத்திலுள்ள ஆலயம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்ததென்பது புலனாம்.

இவ்வாலயம் முதல் ஆதித்தன் கால முதல் இராசராசன் I கங்கைகொண்ட சோழன், முதற் குலோத்துங்கன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாங் குலோத் துங்கன், மூன்றாம் இராசராசன் முதலான சோழ மன்னர்களுடைய கல்வெட்டுக்களைத் தன்னகத்துக் கொண்டுள்ளது. இதில் விசய நகர வேந்தனது கல்வெட்டு ஒன்றும் உண்டு.

இவ்வாலயத்தில் சற்றேறக்குறைய நூறு கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளெல்லாம் அக்காலத்திய தமிழ்வேந்தர்களாகிய சோழர்களும், அவர்களது அமைச்சர்களும், படைத் தலைவர்களும் பிறரும் புறம்பயத் தெம்பெருமானுக்கு நித்திய நைமித்தியங்களுக்கும் திருநந்தா விளக்குகளுக்கும் நிபந்தங்கள் விடுத்ததையும் பல அணிகலன்கள் கொடுத்ததையும் விளக்குகின்றன.

இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்கின் தமிழகத்தின் வரலாற்றை முறையாக ஆராய்ந்தறிய விரும்பும் வரலாற்று ஆராய்ச்சியாளர்க்கு எத்துணையோ அரிய செய்திகள் எளிதில் கிடைக்குமென்பது திண்ணம். இத்தலத்தைப் பற்றிச் சில செப்பேடுகளும் உள்ளன. இச்செப்பேடுகளாலும் கல்வெட்டுக்

களாலும் அறியக்கிடக்கும் சில உயரிய செய்திகளை அடியில் குறிப்போம்.

திருவாலங்காட்டுச் செப்பேட்டினாலும், உதயேந்திரச் செப்பேட்டினாலும் திருப்புறம்பியத்தில் ஒரு பெரும்போர் நிகழ்ந்த செய்தி வெளியாகின்றது. சோழ மன்னனாகிய முதலாம் ஆதித்தன், பாண்டியன் இரண்டாம் வரகுணன், சேரன் தாணுரவி ஆகிய மூவரும் பல்லவ வேந்தனாகிய அபராசித விக்கிரம வர்மனையும், அவனுக்குத் துணையாகப் போந்த கங்க அரசனாகிய இரண்டாம் பிருதுவிபதியையும் திருப்புறம்பியப் போரில்வென்று புறங்காட்டி ஓடச்செய்தனர். இரண்டாம் பிருதிவிபதி இப்போரில் கொல்லப்பட்டான்.

இப்போரின் பயனாக முதலாம் ஆதித்தன் சோழமண்டலத்திற்கு அரசனானான். கி. பி. 880க்கு அணித்தாக இப்போர் நிகழ்ந்திருக்கவேண்டும். இந்துதேச சரித்திர நிகழ்ச்சியில் பிளாசி யுத்தம் எத்துணைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றதோ அத்துணைச்சிறப்புடையது இப்புறம்பியப்போரென்பது நன்கு அறியத்தக்க தொன்றாம்.

உதிரம் படிந்ததோப்பும், பிருதுவிபதியின் நடுகல் அமைந்ததோர் சிறு கோயிலும் புறம்பியப் போரைத் தற்காலத்தார் நினைவு கூறுதற்கு ஏற்ற சின்னங்களாக இன்றும் நிலைபெற்றுள்ளன. எனவே தமிழக வரலாற்றில் குறிக்கத் தக்க பெருமையமைந்தது இவ்வூரென்பது ஈண்டு அறியத் தக்க தொன்றாம்.

இனி, இவ்வாலயத்திலுள்ள மூன்றாங் குலோத்துங்கனது கல்வெட்டு ஒன்று முத்து முளைக்கன்று, அறம்பயந்தவிநாயகர் என்று இரு விநாயகர்களைக் குறிப்பிடுகிறது. இவர்கள் பள்ளியறை நாச்சியாருக்கு எதிரிலிருப்பவரும் சந்நிதிக்கு எதிரில் கீழ வீதியில் இருப்பவருமாகிய இரு விநாயகர்களாக இருத்தல் வேண்டும். இவ்விரு விநாயகர்களில் இவருக்குரித்து இப்பெயரென்று இதுபொழுது திட்டமாகக் கூறுதற்கில்லை. இவ்வேந்தனது மற்றொரு கல்வெட்டு இவ்வூரில் ஆண்டார் கடியா பரணர் மடம் என்று ஒரு மடம் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

இனி மூன்றாம் இராசராசன் காலத்தில் வீதி விடங்க விழுப்பரையன், அவனுடைய உடன் பிறந்தான் அகில நாயக விழுப்பரையன் என்ற இருவர்களும் இச்சிவாலயத்தில் திருவலஞ் சுழி உடையார், புற்றிடங்கொண்டார் என்ற இருவர் படிமங்களை எழுந்தருளிவித்து நிபந்தங்களை விட்டிருக்கிறார்கள்.

இஃதே போன்று திரிபுவன தேவர்க்கு யாண்டு 35-இல் திருப்புறம்பிய முடையானான செம்பியன் பல்லவரையன் குடந்தைக் கீழ்க்கோட்டமுடையார் கோயில் முதல் பிரகாரத்துக் கிழைத் திருமாளிகையில் திருப்புறம்பிய முடையார் படிமத்தை எழுந்தருளிவித்துப் பூசைக்கும் அமுதுபடிக்கும் நிபந்தங்கள் விட்டிருக்கிறான். இச்செய்தி திருவாளர். தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் வெளியிடப்பட்ட நாகேச்சுரரது திருக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களால்* (குடந்தைக் கீழ்க் கோட்டத்து கல்வெட்டுக்களால்) புலனாகிறது.

இதனால் ஒருவர் தனக்கு பற்றுள்ள வேற்றூரிலுள்ள, இறைவனைத் தனதூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளிவித்து வழி பாடாற்றும் வழக்கம் உண்டென்பது தெரிகிறது.

இனி மேற்குறித்த வீதி விடங்க விழுப்பரையனும் அவனது உடன் பிறந்தான் அகில நாயக விழுப்பரையனும் மூன்றாம் பிரகாரத்தில் அறம் உரைத்த நாயனாரை எழுந்தருளி வித்த செய்தியும் இம்மூன்றாம் இராசராசனது மற்றொரு கல் வெட்டால் புலப்படுகிறது.

எனவே இச்சிவாலயத்திற்கு மூன்றாம் இராசராசனது காலத்தில் மூன்று பிரகாரங்கள் இருந்திருத்தல்வேண்டும். இதுபொழுது இரண்டு பிரகாரங்களே உள்ளன. மூன்றாம் பிரகாரம் எப்பொழுது அழிவுற்றது என்பது புலனாகவில்லை.

இவைகளே இத்திருப் புறம்பியத்தைப் பற்றி யாம் ஆராய்ந்த சில செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் காணப் பட்ட உயரிய செய்திகளாகும். மற்றொரு முறை ஏனைய கல் வெட்டுக்களையும் ஆராய்ந்து அதில் காணப்படும் செய்திகளையும் குறிப்பிடுவாம்.

---

* தமிழ்ப்பொழில் துணர் 6 மலர் 6, 7, 8.

உ

பரணர்.

திரு. வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்தரக்கலாசாலை, திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 7. பக்கம் 295.)

கரிகாலன் :—

இவன் சோழநாட்டிற் சிறந்த அரசுபுரிந்து வந்த பேரரசன் என்பதும், இவன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி யென்பதும், இவன் இளமையிற் கருவூரில் தன் அம்மான் இரும்பிடர்த் தலையாருடன் இருந்த காலை, சோழநாடு அரசிழந்து அல்மர கழுமலத்திலிருந்த சான்றோர் சிலர் அரசுவாவொன் றனுப்பி இவனைக் கொணர்வித்துத் தமக்கு அரசனுக்கிக் கொண்டமையும், அரசாட்சியில், தன்னையிளையனெனக் கருதிய சான்றோர் உவப்ப முறை செய்தமையும், நாங்கூர் வேளிடை மகட்கொண்டு ஆதிமந்தியென்னும் பெண் மகளைப் பெற்றதும், உறையூரினின்றும் போந்து காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராக்கிக் கொண்டமையும், வெண்ணி, வாகை முதலிய விடங்களில் தன்னையெதிர்த்த வேந்தர் வேளிர் முதலிய பலரைவென்றதும், நாட்டின்கட் காடுகொன்று நாடாக்குதல், குளம்தொட்டு வளம்பெருக்குதல் முதலிய அருஞ்செயல்களால் நாடு வளம் பெறச் செய்தமையும், காவிரிக்குக் கரைகட்டி அதன் பெருக்கினைப் பயன்படுத்தினதையும் பிறவற்றையும் முன்னர் விரித்துரைத்திருத்தலின், இங்கு இவனை ஆசிரியர் பரணர் தம் பாட்டுக்களாற் சிறப்பித்த திறம்மட்டில் கூறப்படுகின்றது.

ஆசிரியர் பரணர் இவன் தந்தையாகிய சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் புறத்தில் "வாள், வலந்தர மறுப்பட்டன" என்று தொடங்கும் பாட்டிலும், இவனை

அகத்தில், "அரப்போழவ்வளை தோள்நிலைநெகிழ" என்றும், "பிணார் மோட்டுநந்தின் பேழ்வாயேற்றை" என்றும் தொடங்கும் பாட்டுகளிலுஞ் சிறப்பித்திருக்கின்றார்.

இப்பாட்டுக்களுள் "வாள், வலந்தர மறுப்பட்டன" என்ற பாட்டில் உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னியின் வாள், தாள், தோல், குதிரை, யானை முதலியவற்றின் இயல்புகூறி, "நீ, இவ்வியல்பினையுடைமை யாகையால் நின்னைச் சினப்பித்த வருடைய நாடு தாயில்லாத குழந்தையைப்போல ஒழிவின்றி, வருந்தியழும்" என்பார்,

"அனையை யாகன் மாறே...............
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே"

என்று பாடுகின்றார்.

இனி, இவனேந்தியவாள், "வாள் வலந்தர மறுப்பட்டன, செவ்வானத்து வனப்புப் போன்றன" என்று சிறப்பிக்கப் படுகின்றது. இதன்பொருள்:—பகைவரைக் கோறலால் குருதிக் கறைபடிந்து சிவந்து தோன்றும் வாள் செவ்வானத்தின் அழகு பெற்றது. என்பது. போர்க்களம்புகுந்து பகைவர் சேனையைச் சாடுங்கால் நின்றும், பெயர்ந்தும், ஓடியும் பொருதலின், காலில் அணிந்த கழல்கள் தம் அருப்புத் தொழில் தேய்வுற்று, கொல் லேற்றின் கோடுகளை யொத்தன என்பார், "தாள், களங் கொளக் கழல் பறைந்தன, கொல்ல் ஏற்றின் மருப்புப் போன்றன" என்றும், இவன் கைக்கண் எடுத்த கேடகம், பகைவர் விடும் பலவாயஅம்புகளால் துளைப்பட்டு, விற்பயிற்சி புரிவோர் பழகுதற்குத் தொடுத்து நிறுவிய இலக்கத்தை யொத்தது என்பார், "தோல், துவைத்தம்பின் துளைதோன்றுவ, நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன" என்றும், குதிரைகள் எதிரியை எறிதற்குரிய காலம் நோக்கி இடமாகவும் வல மாகவும் செலுத்தப்பட்டுச் செல்வன, முகக் கருவியாற்றேய்ந்து குருதிதோன்றிய வாயையுடைமையால் மான் முதலியவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலிகளை யொத்தன என்பார், "மாவே, எறிபதத்தான் இடங்காட்டக், கறுழ்

பொருத செவ்வாயான், எருத்துவவ்விய புலிபோன்றன" என்றும், யானைகள், பகைவரின் மதிற்கதவுகளை முறித்துவெகுண்டு உலாவுவன நுனைதேய்ந்த வெளிய கொம்புகளையுடையவாகையால், உயிருண்ணும் கூற்றை யொத்தன என்பார், "களிறு, கதவெறியாச் சிவந்துராஅய், நுதிமழுங்கிய வெண்கோட்டான் உயிருண்ணும் கூற்றுப் போன்றன" என்றும், நீ தான், அசைந்த தலையாட்டமணிந்த கதியையுடைய குதிரையாற் பூட்டப்பட்ட பொற்றேரின் மேலே பொலிவொடு தோன்றுதலால் கரிய கடலின் கண்ணே ஓங்கியெழுகின்ற செய்ய ஞாயிற்றினது ஒளியையுடையை" என்னும் பொருளில், "நீயே, அலங்குளைப் பரிஇயிவுளிப், பொலந்தேர் மிசைப் பொலிவுதோன்றி, மாக்கடல் நிவந்தெழுதரும், செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ" என்றும் கூறினர்.

இதன்கண், "வாள், வலந்தரமறுப்பட்டன, செவ்வானத்து வனப்புப் போன்றன" என்பது முதல், "நீ செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ" என்பது வரை, மன்னவன் புகழையும், "நின்னை உடற்றியோர் நாடு, தாயில் தூவாக் குழவிபோல, ஓவாது கூவு" மென்றது, இவனைப் பகைத்தோர் நாடு கெடுவது குறித்து இரங்குதலையும் குறித்தலின், இது "குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை" யென்ற துறைக்கண் அடங்கும்.

இனி, "அரம் போழ்வளை தோணிலை நெகிழ" என்னும் பாட்டு அகத்தில் தலைமகன் வினைமுற்றி மீண்டமை தோழி புணரத் தலைமகள் சொல்லிய துறைப் பொருண்மை யறியக் கிடக்கின்றது.

இதன்கண், தலைவி யொருத்தி இராப் பொழுதின்கண் வாடைக் காற்று வீசுதல் கண்டு, அதனை முன்னிலையாக்கி, அது தனக்குச் செய்யும் வருத்தத்தையும், அதனை நீக்கவல்ல தலைவன் விரைந்து வந்தவிடத்து இவ்வாடையின் குளிர் தனக்கு வருத்தம் செய்பலாகாமை குறித்து அவ்வாடை வாளாதே ஓடுமென்றும் கூறி, அதற்குக் கரிகாலன்முன் போர் குறித்து நின்ற வேந்தர் முதுகிட்டோடியதனையும் கூறுகின்றாள். இக்

கூற்றில் முற்பகுதி வாடையை முனிந்து கூறுவனவும், பிற்பகுதி கரிகாலன்முன்னர் வேந்தர் வெந்நிட்டோடினமையும் உணர்த்துவனவாம். அம்முதற் பகுதி,

"அரம்போ ழவ்வளை தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நோதல் வேண்டி
ஈர்ங்கா ழன்ன வரும்புமுதி ரீங்கை
ஆலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையண லேய்ப்பக்
கோளுறு குவளைப் போதுபிணி யவிழப்
படாஅப் பைங்கண் பாவடிக் கயவாய்க்
கடாஅ மாறிய யானை போலப்
பெய்து வறிதாகிய வோங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
பனிபடூஉ நின்ற பானாட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய வலைத்தி; முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுட் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
*　　　*　　　*　　　*

ஓடுவை மன்னால் வாடை! நீ யெமக்கே" (அக. 125)

என்பது. இதன்பொருள், ஏ, வாடையே! குளிர்ந்த விதை போலும் அரும்பு நிறைந்த ஈங்கைப்புதர் ஆலங்கட்டிபோலும் வெள்ளிய மலர்கள் பரந்து, கூரியவெண்மையான மயிர் நிறைந்த கறுத்த கபோலத்தையொத்து விளங்க, கொள்ளுதலமைந்த குவளையின் அரும்புகள் முறுக் கவிழ்ந்து மலர, உறங்குதலில்லாத பசிய கண்களையும் பரந்த அடியையுமுடையவாய் மதம் பொழிந்து மாறியதனால் விளர்த்துத் தளர்ந்து நிற்கும் யானையைப்போல மழை பெய்தமைந்ததனால் விளர்த்து மேலே செல்லுதலையுடைய மேகங்கள், கரிய விசும்பின் கண், திசை தோறும் சென்று திரிய, பனிதோன்றி வருத்தும் கங்குல் யாமத்தின்கண், நின்னையெதிர்க்கும் மாறுபாடில்லாத இக் காலத்தில் தமித்தோர் வலியுடைமையை யாராயாது தண்ணென்று வீசி யாம் நின்னை வெறுக்கும்படி எம்மை வருத்து

கின்றாய். அரத்தால் அறுக்கப்பட்ட அழகிய வளை தோளிடத் திலிருந்து நெகிழ்ந்துநீங்க, தனக்குரிய இலக்கணத்தால்முற்றுப் பெறாத வாழ்க்கை முற்றுதல் கருதிப் பலரும் கைதொழும் முறைமையினையுடைய கடவுட்டன்மை யமைந்த செய்தொழி லொன்றை மேற்கொண்டு சென்ற காதலர் விரைந்து வருவா ராயின், நீ எம்மை நின் பனியால் வருத்துதல் இயலாது ஒடு வாய் காண்; இனி நின்பனிப்பும் அறவேயொழிந்தது, என்பது,

“கைதொழு மரபிற் கடவுட் சான்ற செய்வினை” என்பது தேவர் காரணமாகப் பிரிந்து செய்யும் வினையென்பர் ஆசிரியர் இளம்பூரணர். “பலரும் கைதொழும் மரபினையுடைய கடவுட் டன்மையமைந்த செய்வினை எனவே, ஓதற் பிரிதலென்பது பெற்றாம்; “சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே” (தொல். பொ. 192) என்பதனாற் கிழவனுங் கிழத்தியும் இல்லறத்திற் சிறந்தது பயின்றக்கால் இறந்ததனாற் பயனின்றாதலின், இல் லறம் நிரம்பாதென்றற்கு, “நிரம்பா வாழ்க்கை” என்றார்” என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டிப் பிரிந்தாராயினும், அவர் பிரிவினாலுளதாகிய மெலிவு தன் மெய்க்கண் நின்று தோன்றக் காட்டுதலின், “அரம்போழ் அவ்வளை தோள்நிலை நெகிழ” என்று கூறினாள். “ஈர்ங்கா ழன்ன அரும்பு முதி ரீங்கை” யென்ற பாடத்துக்கு இரவமரத்தின் விதையை யொப்ப அரும்பு மிக்க ஈங்கை” யென்று பொருள் கொள்க. “ஈர்ங்காழன்ன திரங்குகண் வறுமுலைச், செம்முதுபெண்டு” (புறம். 276) என்றார் பிறரும். ஈங்கையென்பது ஒருவகைப் புதலாதல், “வெண்கொடி யீங்கைப் பைம்புதல்” (ஐங். 456) என்பதனானு மறிக. ஈங்கை, வால்வீதாஅய், மையணலேய்ப்ப எனமுடிக்க. இது மாரிக்கண்மலரும் புதலாதல்பற்றி, “ஈங்கை வால்வீதாய்” என்றார். மன், ஒழியிசை.

இனி, இதன் பிற்பகுதி,

“விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த

பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடையு நன்பக லொழித்த
பீடின் மன்னர் (போல், ஓடுவை)" என்பது.

இ-நன்பொருள், விரிந்த சாமரையால் விளங்கிய செலவினை யுடைய நல்ல குதிரைகளோடு கூடிய அஞ்சத்தக்க சேனையுடன், தான் கொள்ளக் கருதிய நாடுகளிற் றங்கி வெற்றி கொண்டமை யால்பெற்ற மிக்க செல்வத்தினையுடைய கரிகாலன் முன்சென்று போர் செய்ய மாட்டாராய், வாகைப் பறந்தலையென்னுமிடத்து அவன் வென்றிகொள்ள, போர் செய்தற்கு ஏற்ற காலமாயினும் தம் ஒன்பது குடையும், படையும் களத்தே விட்டுச்சென்ற சிறப்பில்லாத வேந்தர் (ஓடியது போல நீயும் ஓடுவாய்) என்பது.

சூடாவாகையென்பது வாகையென்னு மிடத்துக்கு வெளிப் படை; "பூவாவஞ்சி" என்பது போல. குலமன்னர்க்குத் தம்மினின்று நீக்கலாகாதன குடையுமுடியுமாதலால், குடையை யொழித்த இவ்வேந்தரைப் "பீடின் மன்னர்" என்றார். நன் பகல், என்பது அவர் வென்றியெய்துதற் குரியகாலம் வாய்த் தமையுணர நின்றது.

கரிகாலன் முன்னின்று போர் செய்தற்கு வந்தோர் ஒன் பதின்மராயினும், அவன் முன்னிற்கலாற்றாது தம் குடையும் படையும் இழந்து சென்றதுபோல, ஏ, வாடையே, நீயும் நின் இபக்கமும் பனிப்புமிழந்து நீங்குவை யென்றாளாம்.

இனி, "பிணர் மோட்டுநந்தின் பேழ்வாயேற்றை" (அகம் 246) என்று தொடங்கும் அகப்பாட்டுத் தலைமகனொருவன் புறத் தொழுக்கத்தினை மேற்கொண்டொழுகுவான், தன் மனைக்கட் போந்து வாயில் வேண்டிய வழி, தோழி, ஐயனே! நீர் புறத் தொழுக்கத்தே நின்றால் விரும்பப் பட்ட பரத்தையொருத்தி யொடுநெருநல் புனலாடினையென்றும், அதனாலெழுந்த அலருரை கரிகாலன் வெண்ணி யென்னுமிடத்தே முடிவேந்தரும் வேளிரும் பொருதோட வென்றியெய்த, அச்சிறப்பறிந்த அழுந்தூர்

மக்கள்செய்த ஆரவாரத்தினும் பெரிதாயிருந்ததாகலான், யாம் வாயில் நேரேம் என மறுக்கும் பொருண்மை புணரக் கிடக்கின்றது.

இதன்கண், தலைவன் புனலாடவெழுந்த அலர் கூறித் தோழி வாயில் மறுக்கும் பகுதி,

"பிணர்மோட் டுநந்தின் பேழ்வா யேற்றை
கதிர்மூக் காரல் கள்வ னாக
நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்
மலிநீ ரகல்வயல் யாண ரூர!
போதார் கூந்தல் நீவெய் யோளொடு
தாதார் காஞ்சித் தண்பொழில் அகல்யா
றாடினை யென்ப நெருநை யலரே
* * * *
தொய்யா வழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே." என்பது.

இதன் பொருள், சருச்சரைபோலும் பெரிய வயிற்றினையுடைய நத்தையின் அகன்ற வாயையுடைய ஆணும், கதிர்த்த மூக்கினையுடைய ஆரலும், சுரிவளையுமாகிய இவை நெடிய நீர் நிறைந்த பொய்கையின்கண் தத்தம் துணையொடு புணர்ந்துவைகும் நீர் மிக்க அகன்ற வயல் சூழ்ந்த புதுவருவாயினையுடைய ஊரனே! முன்னாள் போதுகளணிந்த கூந்தலினையுடைய நின்னால் விரும்பப் பட்டாளொருத்தியோடு நீ, தாது நிறைந்த காஞ்சி மரம் செறிந்த குளிர்ந்த பொழிலின் அருகோடும் அகன்ற யாற்றின்கண் புனலாட்டயர்ந்தனையென்ப. அதனாலெழுந்த அலர் வளக் குறைவில்லாத அழுந்தூர் என்னும் ஊர்க்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிராநின்றது என்பது.

கள்வனென்றது சுரிவளையை. "ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கெல்லாம் ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப" என்ற சூத்திரக் கருத்தினானே, "பிணர்மோட் டுநந்தின் பேழ் வாயேற்றை" என்று கூறினார். (பேராசிரியர், தொல். பொ. 604). "யாறுங் குளனுங் காவு மாடிப், பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப" (தொல். பொ. 149) என்றதனால், தலைவன்

பரத்தையொடு புனலாடுதலமைந்தது. நந்தின் ஏற்றையும், ஆரலும், சுரிவளையும் தத்தம் துணையொடு புணரும் ஊரனாயினும், நீ அவ்வாறின்றி, பரத்தையொடு கூடிப்புனலாடி அலர் விளைக்கின்றனை என இதன்கண் இறைச்சி தோன்றியவாறு காண்க.

இனி, சரிகாலனது வெற்றி கூறும் பகுதி,

"காய்சின மொய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய் வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே" யென்பது.

இதன்பொருள்: பகைவரைக் காய்தற்குரிய சினமும் வலிமையும் பெரிய பெயரையுமுடைய கரிகால் வளவன் ஒலி மிக்க கள்ளினையுடைய வெண்ணியென்னு மிடத்துக் கீர்த்தி பொருந்திய மன்னர்கள் வெகுண்டு செய்த போரில், ஒலிக்கின்ற இசையினையுடைய முரசங்கள் போர்க்களத்தே வறிது கிடப்ப, பதினொருவகை வேளிர்களோடு வேந்தர் பலர் வீழ, அவர் தம் மிக்க வலிமையைச் சிதைத்த காலத்து, செல்வக் குறைபாடில்லாத அழுந்தூர் என்னும் ஊர்க்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிருந்தது, என்பது.

பெரும்பெயர்க்கரிகால் என்பதற்கு, "பெரும்பெயர்முருக" (முருகு. 269) என்புழிப் போலப் பெரும் பொருளையுடைய கரிகாலன் என்றும், பொருளாவது வெற்றித்திரு என்றும் கூறினுமாம். ஆர்கலி நறவின் என்பதற்கு நீர்வெள்ளம்போல் மிக்குற்ற கள்ளினையுடைய வென்றுரைப்பினுமாம். "புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்" (புறம். 343.) என்றார் புறத்தினும். தொய்யா, செல்வக்குறைவுபடாத. "தொய்யாவுலகத்து நுகர்ச்சியுங் கூடும் "(புறம். 214) என்புழிப்போல உயர்ந்த விருப்பம் என்று கூறுதலுமாம்.

ஊடற்பொருண்மைத்தாகிய மருதத்தின் புறமாதலால் தன்னை வெண்ணியென்னு மிடத்து முற்றிய வேந்தரையும் பதினொரு வேளிரையும் கரிகாலன் தன் படையைச் செலுத்தி அவர்தம் படையைத் தள்ளி வென்று, அவர் தாமும் தம் முரசமும் படையும் போர்க்களத் தொழியப் பொருத அகத்தோன் முற்றிய முதிர்வு எனப்படுந்துறைத்தாகிய உழிஞையைக் கூறினர். "உழிஞைதானே மருதத்துப்புறனே" என்பது விதி. தொல். பொ. 64.)

பலநிலங்களினும் சென்றுஆண்டுத் தன்னை யெதிர்ந்த பகை மன்னர்களைப் பொருது வென்று வாகைசூடிப்போந்த கரிகாலன் வாகைப் பறந்தலைக் கண்ணும் பல வேந்தரை வென்ற செய்தியும் வாகைத் திணையின் பாற்பட்டு, தலைவன் பிரிந்த விடத்து வருந்தும் தலைவியின் நிலைமை கூறும் பகுதியோடி ணைத்து இதன் முன்னைப் பாட்டிற் கூறப்பட்டது. "வாகை தானே பாலையது புறனே" என்றார் ஆசிரியர்.

இங்ஙனம், தாம் பாடத் தொடங்கிய அகப்பொருளுக் கேற்பப் புறப்பொருளும் இணைத்துக் கூறும் கருத்தினராய ஆசிரியர் பரணர், கரிகாலன், வாகைப் பறந்தலையில், வென்றி யெய்தினமையும், வெண்ணியென்னுமிடத்துத் தன்னை முற்றி யோரைப் பொருதழித்தமையும் உவமமுகத்தாற் கூறினர். இவர், கரிகாலன் காலத்துக்குப்பிற்பட்டவர் என்று கருதுவோர் இச்செய்திகள் யாண்டும் யாவராலும் பாராட்டிக் கூறப்படும் சிறப்பு நோக்கிக்கூறினராவர் என்பர். சேரமன்னர்கள், சோழ வேந்தர் ஆகிய இருபெரு வேந்தரையே சிறப்பித்துக் கூறிய இவர் பாண்டி மன்னருள் ஒருவரையும் சிறப்பிக்காமையாலும், அம்மன்னருட் சிறந்தோர் செயலும் யவராலும் பாராட்டிக் கூறப்படுவதுண்மையின், "யாது மூரே யாவருங் கேளிர்" எனுங் கருத்தினராய புலவர் பெருமக்கட்கு ஒருவரை வியத் தலும், ஒருவரை இகழ்தலுமின்மையின், கேள்விமாத்திரை யாற் பெற்ற பொருள் குறித்துப் பாடுவோர், அவருள் (பாண் டிய வேந்தர்) ஒருவரையும் பாடுவராகலினாலும், அது செய்யாத இவர்தம் காலத்து நிகழ்ந்த செய்தியே கூறினரெனக் கோடல் வேண்டும்.

உ

ஐயவினா.

திரு. மீ. போ. இராமநாதன் செட்டியாரவர்கள்,
மாபூஸ்கான் பேட்டை சோழபுரம்.

புறப்பொருள் வெண்பாமாலை.

இந்நூலில் 'உழிஞைத்திணையுள் உழுவித்திடுதல்' என்னுந்துறைக்கமைந்து விளங்கும்

"எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
கழுதையேர் கையொளிர் வேல்கோலா—வுழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம்"

என்னும் இப்பாவினகத்தும் இப்பாவிற்கு முன்னமைந்த

"எண்ணார் பல்லெயில் கழுதை யேருழுவித்
துண்ணா வரகொடு கொள்வித் தின்று"

என்னும் இக்கொளுச் சூத்திரவகத்துங் காணப் படும் 'வரகு, கொள்' என்னு மிருமொழிகட்கும், புறப்பொருள் வெண்பாமாலை நூலுரையாசிரியர் நிரலே கவடியெனவும், குடைவேலெனவும் உரை கண்டுள்ளார்.

இவ்வுரையோடு இந்நூலைப் பதிப்பித்த பெருவேளாண்மையாளராகிய பெருந்திருவாளர் ஐயரவர்கள் சேர்த்த 'அரும்பத முதலிய வற்றி னகராதிப் பகுதியில், கவடி—பலகறை, (57) குடைவேல்—உடைமரம்' (57) என எழுதப்பட்டுள்ளன. இம்மொழி களின்பொருள்களை யுணர்த்துமென்பது,

"பட்டி கவடி யலகு பலகறை" (பிங்கலம்)
"உடை குடை வேலே" (பிங்கலம்)
"உடையென்ப குடை வேலாகும்" (சூடாமணி)

என்னும் இந்நிகண்டிரண்டானும் புலனும். என் கையகத்துள்ள அகராதி யொன்று மிதனை வலியுறுத்தி நிகழ்கின்றது.

இங்ஙனந் நிகழினும், உணவுப் பொருளாகிய வரகிற்குங் கொள்ளிற்குங் கவடு, குடைவேல் என வேறு பெயர்களுள்ளனவோ எனவுன்னி அவ்விரு நிகண்டையு நோக்கினேன்! நோக்கினேற்கு,

"மருவு கோத்திரவம் வரகென லாகும்" (பிங்கலம்)
"காணங் குளுத்தங் கொள்ளெனக் கருதுவர்" (பிங்கலம்)
"கவர்தரு பயறு முற்கம் காணமே குலத்தங்கொள்ளாம்"
(சூடாமணி)

எனக்கூறி யவற்றிற்குப் பெயர்களிவையென வறிவுறுத்தின. (வரகின் பெயரை மொழியாது சூடாமணி மௌனஞ் சாதித்த தென்னவுன்னியோ வறிகிலன்.) அங்ஙனம் புணர்த்தினும் என்னம் பொருநப்பட்டிலது.

இவ்வகையாக யான் நோக்குதற் காரணமென்னையென் றிலோ 'பலகறை'யை வித்தும் வழக்கமுண்டாத முளையாப் பொருளாகிய பலகறைக்கு 'வித்து' என்பதை முதலாகக் கொண்ட பெயர்களை வினைகளோ முடிக்குஞ் சொற்களாக நிறுத்தின் மரபு வழுவாகாதா? பின் வருங் கொள் என்பதற்கு இனமாய பொருளையன்றோ கூறியிருக்கவேண்டும், என எழுந்த ஐயமே யாகும். இவ்வையங்கொண்ட வென்றன்னை அவ்வையத் தன்னையே நீக்கின; பின்வரும், மாதவச் சிவஞான முனிவர் திருவாக்கும், அவ்வாக்கிற் குரையிட்ட மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் மாணவர் குழுவினுளொருவராகிய வித்துவான் தி. க. சுப்பராயச் செட்டியாரவர்கள் நலவுரையும்.

அவை வருமாறு,

"இடித்து வெளிசெய்து நகரெங்கணு நுழைந்தாங்
கடுத்த படைவார் வயிறலைத் தனமிரங்கக்
கொடுத்திடு வளங்கள் பலகொள்ளை கொடுபண்ணி
னெடுத்துவரு வெள்வரகு கொள்ளுட னிறைந்து."

(காஞ்சிப்புராணம்.)

(உரை)

பண்ணின் எடுத்துவரு வெள்வரகு கொள்ளுடனிறைந்து-முல்லை நிலத்திற்றுங் கவர்ந்து வந்த வெள்ளிய வரகைக் கொள்ளொடு விசி.

கொள்ளும் வரகும் முல்லைநிலக் கருப்பொருள்களாதலால் முல்லைநிலத்திற் கவர்ந்து வந்த வென்றும். இதுவுழி ஞைத்திணையுள் உழுவித் திடுதற்றுறை.

எழுதெழில் மாடத் திடனெலா நூறிக்
கழுதைகயேர் கையொளிர் வேல்கோலா—வுழுதகற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதால்
கள்விரவு தாரான் கதம்" என வருதல் காண்க.

இவ்வையம் பற்றியெழுதிய இச்சிறுகட்டுரையைக் காணும் புலவர் ஐயங்களைத்துய்வு தருவாரென நம்புகிறேன்.

மதிப்புரை.

தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி எனும் புத்தகம் யாழ்ப்பாணத்து நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் எழுதப் பெற்றது. தமிழ்மொழி ஆக்கத்தின் இயல்பினைப் புதிய முறையில் கூர்ந்து ஆராய்ந்து, தாம் கண்ட முடிபுகளைத் தமிழறிஞர் படித்துப் பயனடைவர் என்ற பெருநோக்குடன் வெளியிடப் பட்டுள்ளது. மொழியியனூல் (Philology) வல்லார் தமிழ் மொழியின் ஆக்கமும் இயலும் எத்திறத்தனவென்று நிலை கண்டுணர்ந்து தமிழறிஞர் ஏற்சத்தக்கதோர் இயனூல் ஒன்றனை எழுத இதுகாறும் முற்படவில்லை. சிற்சில தமிழ்மொழிகளின் பிறப்பு வளர்ச்சி பற்றிய குறிப்புகளை ஒரோ வழி ஆராய்ந்து சில அறிஞர்கள் எழுதியமொழி வரலாற்றுக் குறிப்புகள் ஆங்காங்கு சிதறுண்டு கிடக்கின்றன. தமிழ்மொழியின் இயலை முறைப்பட எழுத முதலில்முயன்றவர் மாகறல் கார்த்திகேய முதலியார். ஆனல்இவ்வறிஞர்கள் கண்டமுடிபுகளைத் தமிழுலகம்

ஒருபொருட்டாக எண்ணி ஆய்ந்ததாகவோ ஏற்றதாகவோ கூறு தற்கில்லை. இதுபோது தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி என்ற நூலினை இயற்றிய சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்மொழியே யன்றி ஆங்கில மாதிய மேனாட்டு மொழிகளையும், மொழியியலை யும் நன்குகற்றவர். தாமியற்றக் கருதும் 'தமிழ்ச்சொற் பிறப் பகராதி' என்ற நூலுக்கு முகவுரையாகவும், சொற் பிறப்பின் இயலினை விளக்கும் ஒரு இலக்கண நூலாகவும் தமது மதி நுட்பத்தாலும், உலைவிலா உழைப்பாலும் இவ்வரிய நூலை இயற்றியுள்ளார். தமிழ்ச் சொற்களும், பிறமொழிச் சொற் களும் தமிழ்ச்சில அடிச்சொற்களின்றும் (Root-Words) பல்கி ஆக்கம் பெற்றன என்னும் திரண்ட முடிபை மெய்ப்பித்தற் குரிய மொழி வளர்ச்சியின் இயல்களை இந்நூல் விளக்குவதாகும். இது ஒரு வியத்தகும் கொள்கை ஆதலால், இதில் நாட்டப் பெறும் கருத்துக்களைத் தமிழகத்திலுள்ள மூதறிஞர்கள் நுணித்தாராய்ந்து முடிபு காணுங் கடப்பாடுடையார்.

புரவலரும், போற்றுவாரும் அற்றுத் தமிழ்வளங் குன்றிய இந்நாளில், திருப்பனந்தாள் ஆதீன கர்த்தராகிய திருவாளர் காசிவாசி. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இவ்வரும் பணியை மேற்கொண்டு, தமது வரையாத வள்ளற்றிறத்தால் வெளியிட்டு, தமிழகத்துள்ள அறிஞர்கள் கையில் இந்நூலை விலையின்றிச் சேர்ப்பிக்கும் கடப்பாட்டைத் தாமே பூண்டது காலத்தாற்செய்த பேருதவியெனத் தமிழுலகம் போற்றுதற் குரிய சிறந்த தொண்டாகும்.

போ. தோ.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௮	ஆங்கீரச, ஆடி.	மலர் ௪.

உ

துறையூர் மாநாடுகள்.

தமிழ்ப்புலவர், தமிழ்மாணவர், தமிழர், ஆகிய முத்திறத்தினரும் ஒருங்கு சேர்ந்து தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு இன்றியமையாத சாதனங்களை ஆய்ந்து அமைத்தற் பொருட்டு, இம்மதி 23, 24 நாட்களில் துறையூரில் இம்மாநாடுகள் கூடின. ஒக்கரை, துறையூர்களிலுள்ள தமிழன்பர்களின் பேரூக்கத்தாலும் உலைவிலாமுயற்சியாலும் பேரவை, உறையுள் முதலியன செவ்விதின் அமைக்கப்பெற்றிருந்தன; தமிழரும் ஆயிரக்கணக்கினராய்க் குழுமியிருந்தனர்; இம்மாநாடுகளைக் கூட்டி நடத்திய அன்பர்களின் தமிழ்த்தொண்டு தமிழகத்தின் நன்மதிப்பிற்குரியதாகும்.

தமிழர் அனைவரும் தமிழ்க் கல்வியை நன்குபயிலவும், கலைநூல்கள் தமிழில் வெளிவரவும், அவற்றைக் கற்பிக்கவும், வழிதுறைகளைத் திட்டஞ்செய்யவும், தமிழ் நாட்டிலுள்ள கல்விநிலையங்களிலும், கல்வித் துறைகளிலும், தமிழ் வளர்ச்சிக்குரியனவற்றை அமைக்கவும் வேண்டுமென்பதே இம்மாநாடுகளின் நோக்கம். தமிழ் நாடெங்கும் சிதறுண்டிருக்கும் தமிழ்க்கலைவளர்ச்சியில் கருத்துடைய மூதறிஞர்கள் ஒன்று கூடி, இச்சீரிய நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய சாதனங்கள் யாவையெனச்

சிந்தனைசெய்து ஏற்ற முடிபுகளைச் செய்யவேண்டும். கருமத்தில் கருத்துடையவர்களும், கல்வி நிரம்பியவர்களும் ஆள்வினையுடையவர்களுமாய ஒருசிலர்கூடி அமைதியுடனிருந்து செய்வன தவிர்வனவற்றைச் சூழ்ந்து முடிவுசெய்யவேண்டும். அவ்வாறெல்லாமின்றி மாநாட்டின் சிறந்த நோக்கம் யாதெனத்தானும் தெரிந்துகொள்ள முடியாத சில பலர் கூடியிருந்து, விழாச்சிறப்பிலும் ஆரவாரங்களிலும் காலத்தைக் கழித்து, சுருங்கிய நேரத்தில் பலதிறப்பட்ட முடிபுகளை ஆய்ந்து முடிக்கத்துணிவது பயனிலுழிவென நன்கு புலனாயிற்று.

திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் தமிழ்ப்புலவர் மாநாட்டின் தலைமையையும், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தமிழ்மாணவர் மாநாட்டின் தலைமையையும், திரு S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் தமிழர் மாநாட்டின் தலைமையையும், ஏற்றருளியது சாலப்பொருத்தமுடையதே. இம்மூவரில் இருவர் மிகவும் காலந்தாழ்த்து வந்தமையால் மாநாடுகள் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கமுடியாது காலமும் அவலமாய்க் கழிந்தது. இவருள் ஒருவர் காலங்கடந்து வந்ததோடமையாது, மாநாட்டை விரைவில் முடித்துவிட்டு வேறு அலுவல்களில் படரும் கருத்துடையராயுமிருந்தனர். மாநாட்டில் நிறைவேற்றுதற் பொருட்டு வந்த முடிபுகளைக் கண்ணுற்று, அவற்றினைச் செப்பஞ் செய்வதும், கொள்வன தவிர்வனவற்றை ஆய்வதும் தமது கருமமெனத் தலைவர்கள் கருதினாரில்லை. வரவேற்புக் கழகத்தினர் ஆராய்ச்சிக் குரியனவென்று தேர்ந்து கொடுத்த முடிபுகளைத்தானும் பேரவையில் வைப்பதற்கு நேரமில்லையெனக்கூறி தமிழர் மாநாட்டின் தலைவர் மிகப்பலமுடிபுகளைப் புறக்கணித்துப் போந்தது போற்றத்தகும் முறைமையல்ல. மாநாட்டின் நோக்கத்தினை நன்குணராத ஒருசிலர் முறைபிறழ்ந்து அடாதன செய்ய முற்பட்டதைக் கடிந்து பாதுகாவாதும், அன்னார் தொடுத்த அழிவழக்குகளை வாதிக்க இடந்தருதற்கு அஞ்சி நடுநில்லா தொதுங்கியும், தலைவரவர்கள் மாநாட்டின் உரிமைகளை நெகிழ விடுத்தது வருந்தத் தக்க தோன்றும்.

இம்மாநாட்டில் நிறைவேறிய முடிபுகள் கீழ்வருவனவாகும்:—

1. தமிழ்மொழியின் திட்ப நுட்பங்களைத் தமது நுண்மாண் புலமையினால் ஆய்ந்துதவிய தமிழ்ப்பெரும் வள்ளல் திரு. பா. வே. மாணிக்கம் நாயகர் அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை நீத்ததுபற்றி இம்மாநாடு வருந்துகிறது. அவர் இயற்றிய நூல்களை வெளியிட வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

முன்மொழிந்தார்:—தலைவர்.

2. ஆங்கிலக் கல்லூரிகளில் ஆங்கில மொழிந்த கலைநூல்கள் அனைத்தும் மாணவரின் தாய்மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும்.

கல்லூரிஆசிரியர்கள் எக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், போதிய தமிழ்மொழிப் பயிற்சியுள்ளவர்களா யிருத்தல்வேண்டுமென்றும், அதனைக் காண்பதற்கு ஒரு தேர்தல் வைக்கவேண்டுமென்றும் கல்வித் தலைவர்களையும் கலாசாலைத் தலைவர்களையும் இம்மாநாடு வேண்டுகிறது.

இம்முடிபை நிறைவேற்றுதற்கு வேண்டும் புத்தகங்கள் எழுதுவது முதலிய முயற்சிகளை இன்னே தொடங்கவேண்டுமெனவும் தீர்மானிக்கிறது.

முன்மொழிந்தார்:—க. வே. உமாமகேசுவரம்பிள்ளை, B.A.B.L.,
வழிமொழிந்தார்:—சாமி T. S. வேலாயுதம்பிள்ளை, B.A., L.T.,

3. சென்னை பல்கலைக்கழகத்தார், அண்ணாமலை பல்கலைக் கழகத்தார் ஆகியோர் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோமணி வகுப்புக்களையொப்ப தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சகலமத வேதாந்த சித்தாந்தப் பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத்தும்படி அக்கழகத்தினரை இம்மாநாடு வேண்டுகின்றது.

முன்மொழிந்தார்:—மு. நடேசமுதலியார் அவர்கள்
வழிமொழிந்தார்:— கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

4. தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு பெண்கள் முன்னேற்றமும் இன்றியமையாதாகையால்பெண் மக்களுக்கும்

போதிய கல்வியை அளிக்க தமிழ்நாட்டினர் இன்னே முற்பட வேண்டுமென இம்மாநாடு வேண்டுகிறது.

முன்மொழிந்தார் :—திருமதி. இந்திராணி பாலசுப்பிரமணியம்.
வழிமொழிந்தார் :—திருமதி. குஞ்சிதம் குருசாமி. B.A., L.T.,

5. தமிழ் நாட்டில் செல்வமிக்க திருக்கோயில்களிலும் மடங்களிலும் இருந்துவரும்மிகுந்த வருமானத்தை (Surplus Income) நூல் நிலையங்கள், வாசக சாலைகள், தமிழ்க் கலாசாலைகள் அமைத்தல் ஆதிய தமிழ் வளர்ச்சிக்குரிய துறைகளில் பயன் படுத்தும்படி அவ்வாலய அறநிலையத் தலைவர்களையும், அவற்றின் பாதுகாப்புக் கழகத்தினையும் இம்மாநாடு வேண்டுகிறது.

முன்மொழிந்தார் :—பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்.
வழிமொழிந்தார் :—திருவாளர் ஐ. குமரசாமிபிள்ளை அவர்கள்,

6. ஆங்கிலம் கட்டாய பாடமாக இருந்து வருகிறநிலையில் நந்தாய்மொழி யல்லாத இந்தி ஆகிய பிற மொழிகளையும் கட்டாய பாடமாக்குவது மாணக்கர்கட்குப் பல்வகை இன்னல்களை விளைக்குமென அக்கொள்கையை இம் மாநாடு கண்டிக்கிறது.

முன்மொழிந்தார்:—திருவாளர். T. V. சுப்பிரமணியம் அவர்கள்
வழிமொழிந்தார்:—திருவாளர். சாமி. சிதம்பரனுர் அவர்கள்.

இத் தீர்மானங்கள் ஆட்சிக்கு வருதற்கான துறைகளில் தமிழறிஞர்கள் முயல வேண்டுவதும், வடமொழி ஆங்கிலமாதிய பிறமொழிகளிலுள்ள கலைநூற் றொகைகளையும், இயல் இசை நாடகம் ஆகிய இலக்கியங்களையும், தெய்வப் பனுவல்களையும் தமிழ் மக்கள் எளிதில் கற்குமாறு நூல்கள் எழுத ஒரு நூல் வெளியிட்டு கழகமும், இவ்வருங் கலைகளை மாணவர் பயிலுதற்கு தனித்தமிழ்க் கலாசாலை, உயர்தரக் கலாசாலை, தொழிற்கலாசாலை, ஆதிய பலதிறத்தனவாகிய கலாசாலைகயும் ஆங்காங்குளை நிறுவுதற் பொருட்டு தமிழக வெல்லையிலுள்ள கலைவாணர்கள் ஒருங்கே முயல வேண்டுவதும் இன்றியமையாத கருமங்களாம்.

த. வே. உமாமகேசுவரன்

உ

துறையூரில் நடைபெற்ற
தஞ்சை திருச்சிராப்பள்ளி சில்லா தமிழ்ப்புலவர் மாநாட்டில்
அம்மாநாட்டுத் திறப்பாளர்,
மகிபாலன்பட்டி,
பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,

நிகழ்த்திய பேருரை.

(6—8—1932.)

திருவருட்பாங்கால் தஞ்சை திருச்சித் தலைநகருட்பட்ட தமிழர் மாநாட்டின் சார்பில் நடைபெறும் இத்தமிழ்ப் புலவர் மாநாட்டைத் திறந்துவைக்கும் பணியை அடியேற்குக் கட்டளையிட்ட நுங்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியறிவையும் முதலிற் றெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

புலவர் பெருமக்களாகிய நீவிர் ஒருங்கே கூடிச் சிறந்த பல செயல்களைப் பற்றிச் சூழ்ந்து முடித்தற்குரிய மாநாட்டுக் கதவத்தின் வலிய தாழுக்கோலைத் திறத்தற்குரிய திறவுகோல் என் கையில் உள்ளதாக நினைந்தது வியப்பைத் தருகின்றது. யானோ இன்ன பணிக்கு எவ்வாற்றானும் வலியுடையேனல்லேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். புலங்கொளற்குரிய விலைவரம்பில்லா பொருள் பல நிறைந்த பெருங் கருவூலமாகிய இம்மாநாட்டைத் திறத்தற்குரிய திறவுகோல், வலியற்றானொருவன் கைக்கணுளதாயின், அவ்வரும்பொருளைக் கவர விழையும் பிறர் அதனை வலிந்து பற்றிக் கோடற்கு எளிதாம் என்பதையும் நீங்கள் நன்று உணர்வீர்கள். அங்ஙனம் நெகிழ்ந்து போதலின்றித் தமிழன்பர் தம் உரிமைச் செல்வத்தைத் தாமே நுகர்ந்து இன்புறுதற்பொருட்டு இம்மாநாட்டுத் திறப்பில் யான் முற்பட நினைந்தது, புடைசூழ்ந்து நிற்கும் நுந்துணைவலி பற்றியேயாம். ஆற்றல் சான்ற இத்துணைத் தமிழன்பர்களும்

விழிப்புடையராய்ச் சூழ்ந்திருக்குங்கால் நம் உரிமைச் செல்வத்தைக் கரவிற் கவர எண்ணுவார் எங்ஙனம் உட்புகுத முடியும்? ஆகவே அச்சம் ஒரு சிறிதுமின்றி நிறைவேற்றலாம் என்னும் துணிவுடையனாய் இப்பணியிற் றலைப்படலானேன். தமிழ்ப் புலவர் பெருமக்களாகிய நமக்குரியவற்றைச் சூழ்ந்து முடித்தற்குரிய ஆற்றல் நம்பாலே அமைந்திருப்பவும், யான் சில கூறத்துணிதல் மிகையெனக் கருதல் கூடும். ஆயினும் பேரறிஞர் பலர் கூடும் ஓரவைக்கள வாயிலைத் திறந்து வைப்போனொருவன், அவர் கட்டளைப்படி அதனுட்புகும் பெரியோரை நோக்கி, "இன்று நீவிர் இன்னசெயல்களைச் சூழ்தற்கு இதன் கட்புகுவீராக" என நினைவுறுத்தற் பொருட்டுச் சில கூறுதல் கட்டளையிகவாக் கடப்பாட்டின் பாலதாம் எனக்கொண்டு என் சிற்றறிவிற்றோன்றிய சில செய்திகளை ஈண்டு வெளிப்படுத்த எண்ணுகின்றேன்.

இங்குத் திறந்து வைக்கப்பெறுவது தமிழ்ப்புலவர் மாநாடாகும். நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி பண்டைக் காலத்தில் இற்றை ஞான்றினும் எத்துணையோ பன்மடங்கு அகன்ற நிலப்பரப்பைத் தனக்குரியதாகக் கொண்டு விளங்கிய தென்பதும், குமரியோடு வடவிமயத் தொருமொழிவைத்துலகாண்ட சேரலாதனால் குமரிமுனைதொட்டு இமயமலை வரையும் இறைமொழியாக வழங்கப் பெற்றதென்பதும், தொன்மையிற் றனக்கு நிகராக இக்காலத்து வழங்கும் மொழிகளுண் மிகச் சிலவன்றி இல்லை எனத்தக்க நிலையிலுள்ள தென்பதும் நீவிர் நன்று உணர்வீர்கள். ஆதலின், இவைபற்றி யான் விரித்தல் வேண்டாவென நினைக்கின்றேன். செப்பமிக்க இயலமைப்பும், அவ்விலக்கணங்களுள் வேறு எம்மொழிக்கும் இல்லாது தனக்கெனச்சிறப்பு முறையினமைந்த பொருளிலக்கண ஒழுங்கும், முதிர்நலச் சொற்களும் சிதைவில் நுண்பொருள்களும் தங்கி நின்றொளிருஞ் சங்கநூற்றொகையும், புன்னுனிப்பனியில் மன்னு மாமலைபுரந் தன்னிநின் றொளிர்தல் போலச் சிற்றளவினவாகிய சொற்றொடர்களிற் சிறந்தமைந்தன வாகிய பெரும் பொருள் தோன்றத்திகழும் அறமுதனுதலிய திறனமை

நூல்களும், அன்பினைந் திணை யகவொழுக்க நேர்மையும், தொடர் நிலைச் செய்யுட் சுவைநலக்கனிவும், குறிக்கோள் பற்றிய அறிவியல் நூல்களின் திட்பநுட்ப அமைவும், காதன்மிக்கு ஓதுவார் கேட்பார் கல்லினும் வலிய உள்ளநிலையையுங் கரைத்து அவர்தமை அன்புருவாக்கி இறைதிருவருட்கு இனிதின் ஆளாக்கும் இசைநலந்தழீஇய அருட்பாசுரப் பகுதிகளும், இன்னும் பற்பல துறைகளைப்பற்றி நின்று திகழும் நூற்றொகை களும் தன்பான்மிளிர, இனிமைபாங் குணத்தை இயைந்து, தட்பமுந் தகவும் ஒட்பமும் ஒருங்கமையப் பெற்று, எல்லாம் வல்ல இறைநிலைபோல் என்றும் நின்று நிலவுவது நந்தென்றமிழ் மொழியேயாம். இத்தகைய தனித்த நந்தமிழின் சால்பினைப் பற்றிப் பற்பல பெரியோர்களும் அவ்வப்போது பல கல்விக் கழகங்களிற் பேசியும் எழுதியும் வெளியிட்டுள்ளார் ஆதலின் அதனையே யானும் ஈண்டு விரித்துக்கூற முற்படுதல் வேண்டாத தொன்றென அமைகின்றேன்.

இனிப் புலமையாவது யாதென ஆராய்தல் இன்றியமை யாததாகும். ஒரு நூலை ஆசிரியர் முகமாகக் கற்ற வளவினானும் இயன்முறை தெரிக்கும் நூற்பாக்களையும், எடுத்துக் காட்டாஞ் செய்யுட் பகுதிகளையும், சொற்பொருள் அறிந்துகொள்ளும் அவ்வளவினானும் புலமை நிரம்புவதன்று. இவ்வெல்லாம், சிறந்த புலமையின் உறுப்புக்களாமன்றி உறுப்பியாகா. ஒன் றனை ஊன்றிப் படிக்குங்கால், படிக்கப் படுஞ்சொற் குழுவி னின்று, உணரப்படும் பொருட்கண் உள்ளம் உறைத்து நிற்பச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மைத்தாகிய உயிர் அவ்விழுமிய பொருட்கண் பிரிப்பின்றிக்கலந்து அப்பொருட் பயனை நுகர் தலும், நுகர்ச்சிப் பின் வெளியுலகத்து மீண்டு நினைவு கூர்தலும், தீர்ந்த உண்மைகளைக் கடைப்பிடித்துத் தங்குறிக் கோளாக ஒழுக்கியலின் மேற்கோடலும் மேற்காட்டிய உறுப்புக்களோடி யைந்தழி, ஒருவாறு புலமை நிரம்பியதாகக் கொள்ளலாம். புலமையின் குறிக்கோள் உலகியற் பொருளளவின் இருப்பின் அது சிறுமையெய்தி மாசுடையதாகும். அறிவை ஒளிவலி

யுடையதாக்கி அகலமுறச் செய்து அவ்வகன்ற ஒளி விளக்கத்தின் கண்ணே முன்னர்க் காணப்படாதனவும் உலப்பிலா இன்ப விளைவிற் கேற்றனவுமாகிய அரிய பல நன்பொருள்களை அகக் கண்ணாற்கண்டு இன்புறுதலாகிய வாழ்க்கையே புலமை வாழ்க்கையாகும். ஓரளவுட்பட்ட சில பல நூல்களை வினவுவார் கருத்துக் கியைய விடையிறுக்கு முகமாகக் கற்றுத் தகுதிச் சீட்டுப்பெறும் அவ்வளவில் புலமை தன் நிறைவை யெய்தியதாக எண்ணி விடலாகாது. பயிலுந்தோறும் பயிலுந்தோறும் பண்புடையாளர் தொடர்பு எங்ஙனம் இனிமை சான்று பயன் விளைக்குமோ, அங்ஙனமே மீண்டும் மீண்டும் கற்குந்தோறும் உயரிய நூல்களின் நன்பொருள் நலங்கள் நம் உள்ளத்தை யீர்த்துத் தம்பாற் படுத்துப் பேரின்புறுத்துவனவாம். மிக விரைந்தோடும் வெள்ளப் பெருக்கினையுடைய ஆற்றின் நீர்ச் செலவாற்றலை ஒருவன் அளக்க நினையின், அதன்கண் அவன் எதிரேறிச் செல்ல வேண்டுவதே இன்றியமையாததாகும். அவ்வாறின்றி அந்நீர்ச்செல வோடியைந்து அதனான் ஈர்த்துச் செல்லப்படுவனாயின் அவ்வாற்றலின் நிலை இற்றென உணரகில்லான். அங்ஙனமே உயர்நிலைப் பாவலர் மயர்வற வாக்கிய விழுப்பொருள் நிறைந்த செய்யுட்களின் சொற்பொருளொழுக்கில், நம் நுண்ணறிவு எதிரேறிச் செல்லல்வேண்டும். அங்ஙனஞ்சென்று அச்சொற்பொருள்களின் வன்மை வனப்புக்களை ஆராய்ந்தளக்க முயலின், அச்செய்யுளாசிரியன் ஆழ்ந்த நினைவிற் கண்டுவைத்த அரும்பொருண் மணிகளின் இயலொளியை உண்மையாகக் கண்டு இன்புறலாம். ஆராய்ந்து தெளிதற்கு முன் அச்சொற்பொருள்களோடு எதிர்த்து நிற்றலே நன்றாம். பொருணலந் தெளிவின் பின் அச்சொற்பொருள்களோடு நம் அறிவை இரண்டறக் கலப்பித்து அவற்றின் வண்ணமாக நின்று அசைவறும் நிலைபெய்தி இன்ப வெள்ளத்துட் டிளைத்தல் வேண்டும். ஒரு சிறந்த நூலாசிரியன் குறிக்கோள் இன்னதெனத் துணிந்தாலன்றி அவன் பலவாறு பன்னிப் பன்னி யுரைக்கும் உரைப்பொருளின் உண்மைக் கருத்து அறியப்பட்டதாகாது. சிறந்தோங்கு முடிபொருளைச் செப்பனிட்டுத் திறம்

படவுரைக்க முற்படும், புலவன், பருந்தின் வீழ்ச்சிபோற் செய்மையினின்றே முடிபொருட்குரிய சார்வுப் பொருள்களின் மெல்லமெல்லத் தலைப்பட்டுச்செல்லுவன். அச்செலவின் நிலையை அந்நெறி நின்றே யுய்த்துணர்தல் வேண்டும். செல்வழிக்கட் கண்டனவே தீர்ந்த பொருளென எண்ணிவிடலாகாது. நூலுரையாசிரியர்களின் கருத்துப் படர்ச்சியில் நம் அறிவுத்தொடர்ச்சி பின்னிடல் நன்றன்று. அயரா வுழைப்பிற்கு அகப்படாத அரும்பொருள் யாதுமின்று. தொடர்நிலைச் செய்யுட்களின் உயிரனைய சுவைநலம் விராய ஒலிப்பொருளையுணர்தலின் நம் அவா முற்படவேண்டும். சுவை நலங் கனிந்த அவ்வொலிப்பொருள் தங்குதற்குரிய இடனமையாப் பாடல்கள் உயிரற்ற வெற்றுடல் போல்வனவாம். வெற்றுடலை அணிகலன் புனைந்து காண்டல் பின்னர்க் காணலாகாத இறுதிக் காட்சியாக முடியுமென்பது அறிந்ததொன்றே. அங்ஙனமே சுவைநல மளைந்த ஒலிப்பொருள் விரவாப் பாடல்களில் அணி நலனளவிற் காண்டல் மீண்டுங் காணவேண்டும் என்ற விழைவற்ற நிலையில் நிகழ்வதாம்.

மதிவலி மிக்க முதுபுலவனிடத்தினின்றுந் தோன்றிய பாடல் நங்கைக்குத் திட்ப நுட்பந் தெளிவு விளக்கம் இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்பொருட் குழுவே அழகிய உடலும், சுவைநலந்துதும்பும் ஒலிப்பொருளே உயிருமாம். இந்நங்கைக்கு உவமை முதலிய அணிகளே அணிகலன்களாம். அழகுக்கழகு செய்தல்போல இவ்வணிகள் சேர்க்கப்படினும், இப்பாடன் மெல்லியற் பாவை நல்லாளின் இயற்கை வனப்பு மிக்க நல்லுடலைச் சார்ந்து உவமை முதலிய அணிகளே, சிறந்த அழகுபெற்றுத் திகழ்வனவாம். இங்ஙனம் இயற்கை நலம்மிக்குச் செயற்கை நலனையு மேற்றுத்திகழும் இத்தகைய பாடல் நங்கையைக் கூடி நுகர்தற்குரிய இளநலஞ் சான்ற மணமகன் இயல்பை இயம்பவும் வேண்டுங்கொல்! அன்னான் இலக்கிய இலக்கண நூலறிவானும், மதிநுட்பத்தானுஞ் சிறந்து மலர்ந்து, மணப்பருவம் வாய்க்கப்பெற்றுக் கட்டழகுவாய்ந்த பாடல் நங்கையைக் காண்டலிற் காதன் மிக்குடையனாய் அவ்

பேறுகுறித்துத் தவம்புரிந்த தனிப்பெருஞ் செல்வனாதல் வேண்டும். வேட்கை முயற்சியும் தவப்பயனும் ஆகூழ்வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி அப்பாடல் நங்கையின் பரிசுணர்தல் அரிதாகும். இன்ன பாடல் நங்கையைப் பண்புடன் வேட்ட காதற் கொழுநனுங் கலைவல மணமகன் அந்நங்கை நலனெலாம் நன்னர் நுகர்ந்து புலநிரம்பின்பம் பொருந்திய வாழ்க்கையிற் றலைப்படுங்கால், அவ்விருவர் தம் இரண்டற்ற தன்மையினெழுந்த இன்ப நிலையே உருவெடுத்தாங்கு மழவிளம் பாடற் குழவிகள் தோன்றும். இந்நன்மக்கட் பேற்றினையுடைய நன்புல இல்லறவாழ்க்கையிற் றலைப்பட்டு நிரம்பினோரே உண்மைப் புலவராவர். கண் முதலிய அறிவுக் கருவிகளால் காண்டற்கியலாத நுண்பொருள்களையெல்லாம் நுண்மாணுழைபுலமாகிய உட்கருவியாற் செய்யுளுலகத்திற் கண்டு இன்புறுதல் கூடும். அவ்வளவினமையாது அவ்வுட்புறக் கருவிகளுக்கு மெட்டாதப்பாற்பட்ட திருவருளாற்றலின் சிறிய நிலையின் ஒரு சிறு கூற்றினையாதல் செவ்விய புலமை முதிர்ச்சியின் பயனாகிய மெய்யுணர்விற்கண்டு இன்புறுதற்கு முயலவேண்டும். அவ்வின்பப் பேறொன்றே, நம் புலமை வாழ்க்கையில் அரிதின் முயன்று அடைதற் பாலதாகிய முடிந்த பயனாகும். முதற்கண் மனமொழி முதலிய உட்புறக் கருவிகள் செந்நிலையுறுதற் கமைந்த விழுமிய நூலறிவு, முடிவில் திருவருள்நிலையின் தெளிவு கைவரப் பெறுதற்குரிய சிறந்த கருவியாகிய மெய்யுணர்வைப் பயந்து நிற்கும். அம்மெய்யுணர்வொன்றே தன் பயனாகிய உயர் வொப்பிலாப் பேரின்பத்தை விளைப்பதாகும். உலக வாழ்க்கைபோலப் புலமை வாழ்க்கையும், இன்னிலை துறவுநிலை என இருதிறப்பட்டு நிகழுமாறும் இக்குறிப்புக்களான் உணரலாம். கல்வியே கற்புடை மனைவியாகவும், செல்வப்புதல்வரே செழும் பாடலாகவும், கற்ற துணர விரித்துரைத்தலாகிய சொல் வளனே இன்னிலைக்கு வேண்டிய பொன்னிலையாகவும் கொண்டு இல்லறப் புலமை வாழ்க்கையைச் செவ்வன் நடாத்திய செம்புலச் செல்வனொருவன், முடிவில் மெய்யுணர்வு கைவரப் பெற்று அதுவாயிலாகத் திருவருள் நிலையையுணர்ந்து அவ்

வருணிலை யின்பத்திற் றிளைப்பின், அந்நிலையே துறவறப் புலமைவாழ்க்கையாகும். உண்மைப் புலமையின் சிறந்தகுறிக் கோள் இதுவே யாம்; முடிந்த பயனும் இதுவேயாகும்.

மிகச்சிறந்த இந்நிலைக்கு நம்மையாளாக்கும், இப்புலமைச் செல்வத்தை இவ்விழுமிய நோக்குடையராகவே நம்பெரியார் மேற்கொண்டிருந்தனர். அன்னார் குறிக்கோள் அன்னதாக, அவர்க்கு இம்மை நலம் முட்டின்றி நடைபெறுதற்கு வேண்டும் பொருளும் முதலியன கொடுத்துப் போற்றுதற்கு, வரையா தளிக்கும் வள்ளன்மை மிக்கார் பலரை அவ்வப்போது திருவரு ளாற்றல் உதவி வந்தது. சிறந்துயர்ந்த குறிக்கோளொன் றைக் கடைபிடித்துத் திருவருட்டுணை கொடு முயல்வார்க்கு, அதனை நிறைவேற்றுவிக்கும் இறையருள் இடைக்கண் வேண்டு வனவாகிய பிறவெல்லாம் பல்லாற்றானும் உதவி அவரைத் தளரவிடாது அளித்துக் காக்கும் என்பது, நம் பெரியார்கண்ட உண்மை. புலமையின் குறிக்கோள் மிகச்சிறந்துயர்ந்த அறிவு வளர்ச்சியா னெய்தும் உலப்பிலா இன்பப் பேறாகவும், அதனை மறந்து அழிதன் மாலையதாகிய குறுகிய உலக இன்பமே யெனக் கொள்ளப்படுமாயின், அது நிறைவேறுந் துணையும் அப்புலமை நின்று பின்வளர்தலின்றி ஒழியும் இயல்பினதாகும். அந்நிலையி லமைந்த புலமையுஞ் சிறியதே யாம். இற்றைஞான்று கல்வி பயிலும் மாணவர்கள் தொடக்கத்திற் கொள்ளும் நோக்கம் பெரும்பாலுந் தம் வாணாளில் உடலோம்பலாகிய அவ்வள விலேயே அமைந்துள தென்பது யாவரும் உணர்ந்ததொன்று. இக்குறுகிய நோக்கம் மேற்கொண்டு பயில்வோர் ஒருவகை யாகத்தேர்வில் வெற்றிபெற்ற பின்னர், அக்குறுகியதம் நோக்க மாகிய பொருட்பேறு நிறைவேறுதற்குரிய முயற்சியிற் றலைப் படுகின்றனரேயன்றிக் கற்ற கல்வியின் விழுமிய பயனைப் பெறுதலில் வேட்கை யுடையயராகக் காணப்பட்டிலர். ஆசிரியனை யடுத்துக் கற்றது தம் புலமைக்குக் காற்கூறு மத்துணையே யல்லாமல் முற்றும் நிரம்பியதாகா தென்பது நம் பெரியார் கண்டது. காணுதனவெல்லாங் காண்டற்கும் கேளா தனவெல்லாம் கேட்டற்கும் அறிவுலகத்து நிகழும் வியத்தகு

அருஞ் செயல்களை யுணர்ந்து இன்புறுதற்கும் நிரம்பிய புலமையே சிறந்த கருவியாகும். இவ்வுயரிய நோக்கங்களை நிறைவேற்றுதற் குரிய புலமையை உடலோம்பற்கு வேண்டிய பொருளளவில் பயன்படுத்த எண்ணுதல், பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழ எண்ணுவதனோடு ஒக்கும் என்ப. சிறந்துயர்ந்த நோக்கங்களை மேற்கொண்டு திருவருளுணர்ச்சியிற் றலைப்படும் புலமைச் செல்வம் வாய்ந்து விளங்கிய நம்பண்டைத் தமிழ்ப்புலவர் பெருமக்களைப் பண்டைத் தமிழ் நிலவேந்தர்கள் எத்துணைப் பெருமை பாராட்டிப் போற்றி யொழுகினர் என்பதற்குப் புறநானூறு முதலிய நம் அரிய தமிழ் நூல்களே தக்கசான்றாக மிளிர்வனவாம்.

தமிழ்நில மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைத் தம் உயிரினுஞ் சிறந்தாராக மதித்தொழுகிய செய்திகள் பற்பல உள்ளன. அம்மன்னர்க்கு, அரசியற்குரிய சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சராகவும், அறிவுரை கூறி நன்று தீதுணர்த்தி நல்லாற்றின் நிறுத்தும் ஆசிரியராகவும், அவர் குடிக்கண் உடன்றோன்றினார் முதலியவரோடு கலாம்விளைகாலை நடுநின்று அறவுரைகூறி அதனைத்தீர்த்து அன்பு நிலைப்படுத்தும் அக்குல முதியோராகவும் விளங்கினோர் நம் தமிழ்ப்பெரும் புலவரேயாவர். முதுமையின் றளர்ச்சியிற் கதுமெனநேரும் இறப்பு முதலியவைபற்றி அச்சம் நிகழாவண்ணம் உடல் இளமை பொருள் முதலியவற்றின் நிலையாமைகளை நெஞ்சத்திற் பதியுமாறு எடுத்துரைத்து மெய்யுணர்விற் றலைப்படுத்தும் அறவோராகவும், காதலிகந்து கைவிடப்பட்ட கற்பரசியரை அவர்தங் கணவரோடிணைத்து நீதிபலகூறி நெறிபிறழா வண்ணம் வாழ்க்கை நிலைப்படுத்தும் நல்லுறவினராகவும், விளங்கிய பெருமை நம் தமிழ்ப் புலவர் பாலதேயாகும். தந்தை தாயர் முதலியோரை இழந்து வருந்தும் இளம்பருவத்துப் பெண் மக்கட்கு அத்தந்தை தாயர் முதலிய உறவாகநின்று நீதி வழாதநிலையிற் பாதுகாத்து நட்புக்கடனாற்றிய பெரியாரும் புலனழுக்கற்ற நம் தமிழ்ப்புலவர் பெருமானே யாவர். புணர்ச்சிபழகுதல் இன்றி உணர்ச்சிவாயிலாகவே நட்புமுதிரப்

பெற்றும், அந்நாட்டார்க்கு இறுதிநேர்ந்துழி அதுதெரிந்து தம் உயிரையும் உடனுய்த்து அன்புக்கட்டுற்றிய ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும் நம் தமிழ்ப்புலவரே யாவர். இங்ஙனம் அரசர்பாற் புலவரும் புலவர்பால் அரசரும் அன்பு வழிப்பட்டு ஒழுகிய சிறந்த வரலாற்றுப் பகுதிகள் பலவாம். தன்னைப் பாடிவந்த ஒரு புலவர்க்கு ஏதுங்கொடுக்கும் நிலையிலில்லாத ஒரு வள்ளல், "தலையினைக் கொண்டுபோய்த் தம்பி கைக்கொடுத்து விலையினைப் பெறுக" வெனச் சொல்லியும், அவ்வள்ளற்பெருமான் உள்ளமறிந்த புலவர் பெருமான் மறுப்பேமாயின் மற்றொருவர்க்கு இங்ஙனங் கூறிக்கொடுக்க நேரின், மன்னர் பெருமானை யிழக்க நேருமே என்று அஞ்சி அத்தலை தன் உடைமை எனவும், அதனை யான் வேண்டுங்காற் பெறுவேனெனவும், பெறுங்காறும் யார்க்கும் இதனைக் கொடுத்தலாகாது எனவுங்கூறி, அவ்வள்ளலோடு பகைஞனாகிய தம்பியின் மனத்தைக் குழைவித்து அன்புரிமைப்படுத்து ஒன்றுபடச் செய்து இன்புற்றதும் நினையுங்கால், செந்நெறிப்படரும் மன்னவருள்ளமும் சொன்னெறிப்புலவர் தூயவுள்ளமும் எத்துணைச் சிறந்துயர்ந்த நிலையில் உள்ளனவென்பது நன்று புலனாம். இந்நிகழ்ச்சி அறிவுடைப்பாரகத்தை யுருக்கும் பான்மையதென்பதை யாவருமுணர்வர். புலனழுக்கற்ற தூய பெரும் புலவர்களையும் அருண்மிகு நெஞ்சத்தினராகிய புரவலர்களையும் இரு கண்ணெனப் பெற்றுத் திகழ்ந்த நம் தமிழ் நிலம் இற்றை ஞான்று ஒற்றைக் கண்ணிழந்து மற்றொரு கண்ணும் ஒளி நலங்குன்றப் பெற்று ஒடுங்கிக் கிடத்தலை யுன்னுங்கால் எத்தகைய தமிழ்மகனும் வருந்தாமலிருக்க முடியுமா!

பண்டை யரசர்பாற் புலவர்பெற்ற பரிசிலை எண்ணுங்கால் மிக்க வியப்பைத் தருவதாகும். நூறாயிரக் கணக்கான பொற்காசுகளையும், முற்றூட்டாகப் பல நிலத்தொகுதிகளையும், விலையுயர்ந்த ஆடை அணிகலன்களையும், யானை, தேர் முதலியவைகளையும் வரையாது வழங்கப்பெற்று மகிழ்கூர்ந்த செய்தியைப் பண்டை நூல்களான் உணர்தலோடு இன்னும் அப்பரிசில்

நிலங்களைப் பற்றிய ஆவணங்களாலும் அப்புலவர் வழித் தோன்றலின் ஆட்சியாலும் கண் கூடாகவும் காண்கின்றோம். புலவர் பாடும் புகழுடையாரன்றோ தானே இயங்கும் வானவூர் திக்கண் இவர்ந்து செல்லும் நல் வினையாளர் என என்னப் பட்டனர். புலவராற் பாடப்பெறுவது ஒன்றே தம் வாழ்க்கையின் பயனெனக் கொண்டுமகிழும் முன்னை வேந்தர் நன்னருள்ளம் எத்துணைச்சிறந்ததென்பதை விரித்துரைக்கவும் வேண்டுங்கொல்! "குறித்த பகைவனை வென்று வெற்றிமாலை புனையேனுயின் உயர்ந்த கல்வி கேள்விகளையுடைய மாங்குடிமருதன் தலைவனுகவுள்ள பலர்புகழுஞ் சிறப்பு வாய்ந்த புலவராற் பாடப்பெறுது என் நிலவெல்லை நீங்குக" என்று சூளுரை பகர்ந்த தமிழ்ப்புல வேந்தன் உள்ளப்பாங்கை உள்ளிப்பார்மின்!. குறித்தாங்கு இன்னது செய்யேனுயின் இன்ன தீவினையாளனுவேன் என்னுஞ் சூளுரையில் புலவராற் பாடப்பெறுத தொன்று பெருந்தீவினைப்பயனெனக் கொள்ளப்படின், அன்னுர் பாடற்பேறு அரசர் தம் வாழ்க்கைக்கு எத்துணை விழுமியதெனக் கருதப் பட்டதென்பதை உற்று நோக்குமின்கள்! இத்தகைய சிறந்த நிலையிலிருந்த நம் முன்னைத் தமிழ்ப்புலவர் வழித்தோன்றல்களாகிய இக்காலத்துப் புலவர்பெருமக்கள் நிலை சிறிது வருந்தத் தக்கதாக வுள்ளது. புலவர்க்குரிய உயரிய நோக்கங்களும் வரவரக் குறுகிவருகின்றன. அவரைப் புரக்குமியல்பினராகிய திருவுடையார் நிலையும் புலமைக்கு மதிப்பளிப்பதாக இல்லை. எதற்கு எதுகாரண மென்பதை ஈண்டு ஆராய வேண்டா. அவரவர் கடமையையறிந்து மேற்கோடலே சிறந்ததாகும். கல்வி, அறிவின்பத்தையளித்து வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தற் குரியதாம் என்னும் நம் புலமையின் விழுமிய நோக்கத்தைத் தளரவிடாது மேற்கொள்ளுவோமாயின், நம்மைப் புரத்தற்குப் புரவலரும் கடவுளரும் நம் பக்கலில் தாமே அணுகித் தம்கடமையைப் புரிய முற்படுவர். இவ்வுண்மையை நம் புலவர்பெருமக்கள் உறுதியாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இனிப் பழங்கதையே பேசிக் கொண்டிருந்தலிற் பயனின்று. செய்வன இன்ன தவிர்வன இன்னவென்னுஞ் சூழ்ச்சியிற்றலைப்பட்டு நல்லன காண்டலும் அவற்றைத் தாழாது செயலின் மேற்கோடலும் வேண்டும். விலக்கியன ஒழிதலும் அறமென்பவாகலின், முதலில் நம் புலவர் பெருமக்கள் தம் வாழ்க்கையில் தீய குணஞ் செயல்கள் நெருங்க இடந்தராமல் அவற்றைக் களைதல்வேண்டும். தீயன களைந்தாலன்றி நல்லன செய்தற்கு இடனமைதல் அரிது. தவிர்வனவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடன் மிகையாகாதென்றெண்ணுகின்றேன். ஒருவரையொருவர் புறங்கூறுதல், இல்லனகூறி எள்ளி நகையாடல், தம் அறிவினும் மற்றையோரறிவு தாழ்ந்ததென வாய்ப்பறை அறைதல், ஆகூழால் ஒருவர்க்குக் கிடைக்கும் ஊதியங் கண்டு நெஞ்சம் புழுங்கல், பிறரறிவிற் கண்டுரைத்த சுவை நலமிக்க சொற்பொருள் நலங்களைக் கேட்டுணர்ந்து உவகையுறாமை, ஒருகால் தம்புலமை யுள்ளம் தன்னையறியாது உவகையுறத் தொடங்கின் அதனைச் சினந்து மேலெழவிடாது அடக்கி விடுதல், மொழியறிவுத் துறையில் தாம் மேம்பட்டதாக எண்ணிக் கடவுணிலை யுணர்ச்சியிற் றலைப்படாதிருத்தலே புலமை மாண்பெனக் கருதல், கடவுள் கலைபுருவினன் என்பதை மறந்து கல்விக்கும் கடவுட் கொள்கைக்கும் இயைபின்றென எண்ணல், கற்ற கல்விக்குத் தக நிற்கவென்னும் பொருளுரையைப் பொருட் படுத்தாமற் கல்விக்கும் ஒழுக்கந்திற்குமதொடர்பின்றெனக் கோடல், இகலிலர் எஃகு உடையராய்த் தம்மிற் குழீஇ யின்புறுதலை விடுத்துப் பல் பிறப்பினுந் தொடர்ந்த பகைஞரெனக்கொண்டு ஒருவரை யொருவர் வெறுத்தல், தமக்கே பிறர் உதவிபுரியற் பாலர்; தாம் பிறர்க்கு ஒல்லும் வகையானும் உதவிபுரிய முற்படல் தம் புலமை மாண்புக்கு ஏலாதென நினைத்தல், பிறர் கூறும் நல்லனகொண்டு இன்புறுதற்கு உள்ளம் ஒருப்படாமையோடு அந்நல்லனவற்றையும் தீயனவாகத் திரித்துக் கூற முற்படுதல், உண்மை தெளிதற்கு நடுநின்றாராய்ந்து தங்கொள்கை மறுக்கப்படுமாயின், அதனைப் புலமைக்கு அழகென ஏலாது மறுத்தாரை முனிந்து வருத்த

முழுதல் முதலிய இன்னோரன்ன தீயகுணஞ்செயல்களை அறவே ஒழித்தல் நன்று. பண்டைப் பிறப்பின் தொடர்பால் ஒரோவழி, அவை முற்படினும் தம் மதிவலியால் இயன்றாங்கு விலக்க முயலல்வேண்டும். அவ்விலக்கு முயற்சி பயன்பட்டிலதெனினும் தம்பால் நிகழ்ந்த இவை தீயனவென்றுணர்ந்த அவ்வளவிற் பயன் உண்டென்ப ஒரு சாரார். இத்தீய குணங்களில் ஒரோவொன்றுடையாரும், சில பலவுடையாருமாக உலகத்துப் பலர் காணப் படுவர். ஏதேனும் இருப்பிற் களைதல்வேண்டும் என்பதை நினைவுறுத்தற்குக் கூறியதேயன்றிப் புலவரெல்லாரும் இத்தீயகுணஞ்செயல்கள் உடையரெனக்கொண்டு கூறியதன்று. ஒரு பிழையுமில்லாத தூய தன்மை கடவுளிடத்தன்றி மக்களுட் காண்டலரிது. ஆயினும், மக்கட் பொதுவாகவுள்ள பிழைகளைப் புலமைச் சிறப்பாற் களைதற்கு முற்படவேண்டுவதே புலமைப் பேற்றின் கடமையாகும் ஓராராய்ச்சியில் ஒரு காலத்தில் தமக்குக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு ஒருவகையாக முடிக்கப் பட்டதொன்று, பிறிதொருகாலத்திற் பிறசான்றுகளால் தவறுடையதெனத் தாமே கண்டாதல், பிறர் கூறக்கேட்டாதல் உண்மை தெளிய வரின் அப்பொழுது தம் பிழைபட்ட முன்னைக் கொள்கையைக் கைவிட்டு உண்மைக் கொள்கையைத் தழீஇக்கோடலே புலமையின் சிறப்பாகும். பின்னர் எத்துணைத் திட்ப நுட்பமான சான்றுகள் கிடைப்பினும் மாறுபட முன்னர்க்கண்ட முடிவினின்றும் வேறுபடேம் என்னுங்கொள்கை தவறுடையதாகும். உண்மைநிலை காண்டற்கு பலவாறு சூழ்ந்து ஒருமுடிபுக்கு வருதலும் பின்னர் அது தவறுடைத் தெனக்கண்டவழி அதனை மாற்றிக் கோடலும், நடுநிலைப் புலமையுடையார்க்கு இயல்பேயாம். ஒரு சிலபுலவர் தம்மைச் சிறந்த ஆராய்ச்சியாளரென உலகம் மதிக்கவேண்டும் என்னும் வேட்கை யுடையராய்ப் பண்டை நூலுரை வரலாற்று முறைகளில் தவறில்வழியுந் தவறுகளை ஏற்றிக் கூறிவருகின்றனர். அக்கூற்றுக்கள் அவர் தம்புலமைத் தவறுதலையே புலப்படுத்துவனவாம். அவரறியாமையால் அங்ஙனங்கூறின், அஃதொரு பெருந்தவறாகாது; அறிவுடையார்

தேற்றத் தேறுவராகலின். அறிந்து கூறுவரேல் அதுபுலமைக்கு இழுக்காகும். பழையன கழிதலினும் புதியன புகுதலினும் முறையே தீமையும் நன்மையும் அறிந்து கோடல் நன்று. காலநிகழ்ச்சிக்கு ஏற்பன ஏலாதன என்பதை நெடிது சூழ்ந்து முடிவு செய்தல்வேண்டும். தம்மொழிக்கு ஏற்றங்கூறமுற்பட்டுப் பிறமொழிகளைப் பழித்துரைத்தலுந் தவறாகும். தம் மொழிக்கண் இல்லாத சிறப்பொலி எழுத்துக்கள் வேற்றுமொழிக்கண் இருத்தல் கண்டு அவை எதற்கு ? என ஒரு புலவர் ஒரு பேரவையில் எள்ளி நகுவரேல், அவர் புலமையினியல்பை எவ்வாறு கருதலாம். ஒருவன் பாலுள்ள பொருளளவினும் மற்றொருவன் பால் மிகுதியான பொருள் இருப்பின், அது பற்றி அவன் எள்ளப்படுதல் யாண்டுங் காணுததொன்று. ஒரு குழுவில் உரைக்கப்படும் பொருளுரை அவ்வளவினன்றிப் பரந்த அறிவுலகத்துக்கும் ஏற்ப விளங்குதலன்றோ நலமாகும்.

இன்னோரன்ன இழுக்கு நெறிகளில் நம்புலமை வாழ்க்கையை நடத்தலாகாது. ஒருவரைப் புனைந்து பாடுங்கால், “அவர் செய்யாதனவற்றைச் சொல்லி அவர் குணங்களைக் கூறு தலையறியாததாகும் எம்முடைய சிறிய செவ்விய நா ” என்ற புலவர் பெருமான் அறிவுரையை நினையுங்கால் நம் தேனினு மினிய செந்தமிழ்ச் சுவையுணர்ந்த நாவானது ஒன்றுகூற முற்படுங்கால் எவ்வளவு நடுநிலையுடன் சீர்தூக்கியறியும் உளத்தோடு கூடியெழவேண்டும் என்பது நன்கு புலனும். கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூருமையும், பிறர்க்கு இன்னல் விளைக்கும் பொய்ம்மொழி புகலாமையும், இடரினுந் தளரினுங் கடவுட் கொள்கைக்கு மாறுபடச் பேசாமையும், நடுநிலை யிகந்து நவிலாமையும், பயனில்லன பகராமையும், ஆகிய இன்னோரன்ன செயல்களே நம் தமிழ்ச் சுவையுணர்ந்த நாவிற்கு உரியனவாம் என்பதை யுணர்ந்து கடைப் பிடித்தல்வேண்டும். புலத்துறை முற்றிய நலத்துறையும் அன்பரீர் !

இனி நாம் செயற்பாலன இன்னவென்பதைப் பற்றிச் சிறிது நினைவு கூர்வோம். பண்டுமிகப் பரந்த நிலப்பகுதி

களைத் தனதாகக் கொண்டிருந்த நம் பால்வாய்ப் பசுந்தமிழ், தன்னைப் புரப்பார் துணைசுருங்கி வந்தமையானும், பிறமொழிகள் அம்மொழியாளர் பெருக்கத்தால் வளர்ச்சியெய்தித் தன் நிலவெல்லையைக் கூறுகொள்ளக் கொடுத்துத் தன்னிடம் சுருங்கப்பெற்றமையானும், கற்பார் நோக்கம் வரவரக் குறுகி வந்தமையானும், திருவருளுணர்ச்சி முதலிய உயரிய நோக்கங்கள் சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டு வருகின்றமையானும், தன்னகத்துள்ள சிறந்த பல முதுநூல்களைக் காலமாறுபாட்டால் நீருண்ண நெருப்புண்ண நிலமுண்ணக் கொடுத்து இழந்தமையானும், தன்னைப் பயில்வார்க்கு இம்மை இன்புதவும் பொருட்பேற்றுக்கு இக்காலத்து அரசியல் இடந்தராமையானும், பிறவாற்றானும் தன் ஆக்கங் குன்றி நிற்கின்றது. ஒருநாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலையெய்தல் அரிதாம். மொழிவளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம். எந்த நாடு தன்மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும். ஆதலின், தமிழ்ச் செல்வர்களும் தமிழ்ப் புலவர்களும் விழிப்புடையராய் நின்று நம் உடைமையை விளக்கமுறப் பேணல்வேண்டும். நம் மொழி வளர்ச்சியில் நாம் செயற்பாலன பலவாகும். முதலாவது இற்றைநாள் தமிழ் வழங்கும் நிலம் எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு சிறந்த கல்லூரி யமைதல்வேண்டும். அத்தமிழ்ப் பெருங்கல்லூரி தமிழ் நாட்டின் நடுவண் நீர் நிலவளங்கள் நிறைந்த அகன்ற இடத்தில், ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கிருந்து, கல்வியை உயரிய நோக்கங்களோடு பயிற்றவும் பயிலவுந் தக்க முறையில் நிலைபெறல்வேண்டும். இம்மை நலம் பெறற்குரிய மருத்துவப், தொழிற்கல்வி முதலிய பயிற்சிகளும் உடன் நிகழ்தல் இன்றியமையாததாகும். அக்கல்லூரியின் உறுப்புக்களாகப் பல நிலையங்களமைந்து அவற்றால் தமிழ்க்கு வேண்டற்பாலனவாகிய பிறமொழி நூல்கள் மொழிபெயர்க்கப் பட்டும், புதிய உண்மையாராய்ச்சிகள் செய்யப்பட்டும், பல நூலுரைகள் வெளிவரல் வேண்டும். தமிழ் நாடு முழுதும்

இதுகாறும் நிறுவப்பட்டனவும், இனி நிறுவப்பெறுவனவுமாகிய பல கல்வி நிலையங்களெல்லாம் அத்தமிழ்ப் பெருங்கல்லூரிக்குக் கிளைகளாக அமைதல் வேண்டும். சிறந்த நூலுரைகளையாக்கிப் புலமை யரங்கேறினார்க்குத் தகுதியான பட்டங்களும் பரிசுகளும் வழங்கி அவரைப் பெருமைப் படுத்தல்வேண்டும். தமிழியல்பை நன்குணராது ஆரவார நீர்மையராய்ப் போலி நூலுரைகளை வெளிப்படுத்தித் தமிழகத்திற்கும் தமிழ்மொழிக்கும் இழுக்குண்டாக்கும் போலிப் புலவர்களை அறிந்து அறிவுறுத்து அவரை நல்லியற் புலவராக்க முயல வேண்டும் உண்மைத் தமிழறிஞரை ஒடுங்கியிருக்க விடாமல் சிறப்பிடன் அளித்து உவகையுறுத்தல் வேண்டும். இபல்வரம்பு உடைய நம் மொழிக்கண் அவ்விரம்பிகந்து வெளிப்படும் புலத்துறைக் கொல்லாப் போலி நூலுரைகள், செவ்விதின் ஆக்கப்பட்ட சீரிய நூல்களுக்குக் களைகளாக நெருங்கிப் படர்ந்து தீங்கு புரிகின்றனவாதலின், அக்களைகட்டல், சொல்லேருழவராகிய தமிழ்ப்புலவர் கடனும். அக்களை களையப்பட்டாலன்றி நம் செழுந்தமிழ்ப் பைங்கூழ் வளர்தற்கு இடமின்றாகும். தீஞ்சுவை மிக்க திருவருட் கனியை நமக்குதவத்தோன்றிய செழுந் தமிழ்ப் பைங்கூழைப் பல்லாற்றானும் போற்றிக் காத்தாலன்றோ அந் நற்பயனை நன்கு பெறமுடியும். ஆங்கிலம், வடமொழி முதலிய வேற்று மொழிகளிலுள்ள பல துறைப்பட்ட அரிய நூல்களை அவ்வம் மொழியோடு தமிழ் கற்ற மதிநுட்ப முடைய புலவர்களைக் கொண்டு விளக்கமான சிறந்த முறையில் மொழி பெயர்ப்பித்து வெளிப்படுத்தல் வேண்டும். இத்துறை தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றதொன்றாகும். வேற்று மொழிகளிலுள்ள ஒரு திறப்பட்ட பல நூல்களை நன்கு பயின்று அவற்றின் திரண்ட கருத்துக்களை தொகுத்துத் தனித்தமிழ் நூலாக வெளிப்படுத்தல் சாலச் சிறந்ததாகும். இத் துறையில் தமிழ்ப் புலவர் முற்படுவாராயின், மேல் வகுப்புப் பயிற்சிக் குரிய பலதிறப்பட்ட நூல்கள் தமிழில் இல்லையே என்னுங் குறை ஒழிந்துவிடும். இக் குறை கொண்டு பல்கலைக் கழகத்தார் தமிழ் வளர்ச்சிக்குத் தடைகூறும் குறையும் ஒழியும்.

மொழி பெயர்ப்பால் ஒருமொழி, நூல்வளர்ச்சி பெறுதல் அம் மொழிப் புலவர் இயன்மதி யாற்றற்கு அத்துணைச் சிறப்பின் றென்பது உண்மையெனினும், இயற்கையாகப் பல புதிய சிறந்த நூல்களை மதிவலியால் ஆக்கும் ஆற்றல் வளர்ச்சிபெப் றுங்காறும் மொழிபெயர்ப்புச் செயலை மேற் கோடலால் இழுக்கின்று என்பது என் கருத்து. இது கருதியே மொழி பெயர்த்து அதர்ப்படயாத்தலையும் நூல்வகையுள் ஒன்றெனக் கண்டனர் தொல்காப்பியனாரும் என்க.

சென்னைப் பல்கலைக் கழகத்தையும், அதனினும் தமிழ் வளர்ச்சிக்கு மிக நெருங்கிய இயைபுடைய அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தையும், தெய்வத் தமிழுஞ் சைவத் துறையுஞ் செழித்தோங்க எழுந்த திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் முதலிய செல்வமலி சைவமடங்களில் விளங்குந் தலைவர்களையும், தமிழ் நிலத்துச் சிற்றரசர்களையும், தமிழன்பர் களாகிய மற்றைத் திருவுடையாரையும் மேற்காட்டிய தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன செய்யும் வண்ணம் இன்னோரன்ன புலவர் மாநாடுகள் கேட்டுக் கொள்ளல் வேண்டும். சற்றுக் காலத் தாழ்வில் பயன் பெறுவதாக இருப்பினும் அதுபற்றி வெறுத்துப் பேசாமல் மீண்டும் மீண்டும் வேண்டிக் கோடல் நன்றாம். அன்போடு பன்னாள் அழைத்தால் இறைவனும் வெளிப்பட்டு அருளாமலிருக்க முடியாது. ஆதலின், சைவா தினத்துத் தலைவர்களையும், பிற அன்பர்களையும் அன்புக் கயிற்றாற் பிணிக்க முயல்வதே அறிவுடைமையாகும். இம் மாநாடு பல புலவர் பெருமக்கள் வாழ்ந்த சோழவளநாட்டில் தஞ்சை திருச்சித் தலைநகர்களுக்குரியதாக இத்துறையூரில் முதலிற் றொடங்கப் பெறினும், திருவருட் பாங்கால் இது வரும் ஆண்டுமுதல் தமிழ்வழங்கும் நிலங்கள் எல்லாவற்றுக்கும் பெதுவெனக் கொள்ளப்பட்டு ஒவ்வோராண்டினும் ஒவ்வொரு தலைநகரினும் கூடித் தமிழ்மொழிக்கும் தமிழ்ப்புலவர் முதலிய மக்களுக்கும் நலம்பயக்கும் வண்ணம் திருவருட்டுணை கொண்டு தமிழன்பர்கள் செய்தல் வேண்டும். செல்வரும் புலவருமாகிய தமிழ்மக்கள் தம்மில் வேறுபாடின்றி ஒற்றுமையுடன் ஒருங்கி

யைந்து தமிழன்னையைப் பேணமுன்வரின் அவ்வன்னை தன் மக்களின் நலம் வளர வாழ்த்துவள் அன்னையின் வெறுப்புக்கு மக்கள் ஆளாதல் நலமன்று. தமிழன்னை தன் மக்களாகிய நம்மை உளங்குளிர்ந்து வாழ்த்துவாளாயின் நம்வாழ்க்கை சிறந்த இன்பப் பேறுடையதாகும் என்பதை உறுதியாகக் கடைப்பிடிப்பீர்களாக.

இனிப்புலமை வாழ்க்கைக்குக்கு வேண்டுவன பலவுள வெனினும் புலவர் மாநாட்டைத் திறந்து வைக்கும் ஒருவன் கடமை இதனினும் நீண்டு சேறல் முறையன்றாதலின் இம் மட்டில் அமைகின்றேன். நங்கட்டளைப்படியே திருவருட்டுணை கொண்டு இம்மாநாடு திறக்கப் பெறுகின்றது. புகுதுங்கால் முதற்கண் எல்லாம்வல்ல இறைவன் திருவருளை நெஞ்சார நினைமின்! தமிழ்த்தாயை வாழ்த்துமின்! யான்கூறியவற்றுட் கொள்ளுவன கொண்மின்! இன்னும் புலமை வாழ்க்கைக்கு வேண்டுவன சூழ்மின்! சூழ்ச்சி முடிவிற்றுணிவு எய்துமின்! அத்துணி பொருளைத் தாழாது செய்யமேற்கொண்மின்! நாகரிகமிக்க உலகங்களால் நம் தமிழ்ப்புலமை பாராட்டப் பெறும் வண்ணம் ஒழுகுமின்! புலமைவாழ்க்கையின் சிறந்த நோக்கங்கள் நிறைவேற்றப் பெற்று நல்லின்பம் எய்துமின்! இதுகாறும் என் சிற்றுரையைச் செவியேற்று உளங்கொண்ட நும்பொறுமைக்கு என் வணக்கம் உரியதாகுக.

நேரிசை வெண்பா.

மன்னுந் தமிழ்ப்புலவர் மாநாடிம் மாநிலத்திற்
பன்னும் இறைவனருட் பான்மையால்—எந்நாளும்
ஓங்கி வளர்க உலப்பிலா வின்பநலந்
தாங்கி வளர்க தமிழ்.

உ .

துறையூர், தமிழ்ப்புலவர் மாநாட்டில்
தமிழ்ப்பெரும் புலவர்
திரு. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய

வரவேற்புரை.

நாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவிர்! ஓவாத் தமிழ்ப் பற்றுடைய நற்செல்விர்!

நுங்கள் வரவு தமிழ்மொழி விறுபெற்றோங்கும் தகை சான்ற நல்வரவாகுக. நுங்கள் நாண்மீன்கள் என்றென்றும் நின்று நிலைபெறுவனவாக.

தொல்கேள்வித் துறைபோகிய நுண்மாணுழை புலமுடைய புலவர்பலர் இகலின்றி ஒருங்குகூடி அளவளாவித் தமிழ்ச்சுவை நுகரும் இன்பத்தை நோக்கத் துறக்கவின்பம் இறப்பச் சிறிதென்ப. வானோர்க்குமரிய அச்செஞ்சொலின் பத்தை இன்று நீவிரெல்லாம் நுகர்ந்து ஏனோர்க்குமளிக்குமாறு கூடியிருக்கும் இத்துறையூரைத் தமிழ்த் துறையூர், தவத் துறையூர் என்று போற்றுதல் தகும்! தகும்!!

அறிஞர்களே! ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சியைப் புலப்படுத்துவனவற்றுள் முதன்மையானது அந்நாட்டு மொழி வளர்ச்சியாமென்பதனை யாரும் மறுக்கவியலாது. எந்நாட்டில் எக்காலத்தில் மொழிவளர்ச்சி தலைசிறந்து விளங்குகின்றதோ அக்காலத்து அந்நாடு பல்வகை நாகரிகமேம்பாடுமுடையதாய்த் திகழ்தல் கண்கூடு. நமது தமிழ் நாட்டு வரலாற்றுடன் தமிழ் மொழி வளர்ச்சியை ஒத்து நோக்குங்கால் இவ்வுண்மை நன்கு தெளிவாம். சங்கங்களிருந்து தமிழாராய்ந்த நாளில், வேந்தர்களும் வள்ளல்களும் தமிழைப் போற்றிய நாளில், ஆடவரும் மகளிருமாகப் புலவர் ஆயிரவர் திகழ்ந்த நாளில், ஒப்பற்ற தீஞ் சுவைச் செழுந் தமிழ்ப் பாடல்களும் பனுவல்களும் தோன்றிப்

பல்கிய நாளில், நமது தமிழகத்திலே மக்களெல்லாரும் அறிவும் ஆற்றலும் மிக்கு விளங்கினர்; வேளாண்மையும் வாணிகமும் பல்வகைக் கைத்தொழிலுமாகிய செல்வ வளர்ச்சித் துறைகளெல்லாம் சிறப்புடன் நிலவின; அரசியற்றுறையோ அரசெனத் திகழ்ந்தது; தமிழ் வேந்தர்களின் வீரமும் வண்மையும் முறைசெய்யுந் திறனும் வியந்து போற்றுதற்குரியன வாக இலங்கின. மொழி வளர்ச்சி சுருங்கியதென்றோ அன்றே நாடும் பீடழிந்து நின்றது. ஆகலின், நாட்டு வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் ஒன்றோடொன்றியைபுடைய வாதல் ஒருதலை.

இப்பொழுது நமக்குள்ள பெருமை யெல்லாம் நம் முன்னோரின் பெருமையேயாகும். அன்னோர் காடுகெடுத்துப் பண்படுத்திவைத்த விளைபுலங்களில் அவர்கள் அகழ்ந்து கரைகோலி வைத்த காவிரி முதலிய ஆறுகளும் ஏரிகளும் நீரினையுதவ விளையும் உணவினையுண்டும், அவர்கள் போற்றி வளர்த்துதவிய தமிழினைப் பேசியும் வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் வரம்பிட்டு வைத்த வாழ்க்கை நெறிகளே அறிவும் முயற்சியும் இல்லேமாயினும் நம்மை வழிநடத்துவனவாக வுள்ளன. நாமாக உழந்து தேடியது யாதுளது? ஓரோவழி உயரிய பண்புகளும் செயல்களும் நம்மிடையே காணப்படின் அவையும் அம்முன்னோரின் வழிவந்தமையால் நமக்குக் கிடைத்த பேறுகளென்றே கூறுதல் பொருந்தும்.

இங்ஙனம் பல்லாற்றானும் நமது நிலை சுருங்கியதாயினும் இனிப் பெருகுதற்கு வழியில்லாது போகவில்லை. கீழ்நிலையின் வரம்புகண்ட நாம் இனி மேனிலையிற் றிரும்பாது வேறென் செய்வது? கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த வீரக்குடியினர் வாழ்ந்தது எமது தமிழகம் என்பதனை எண்ணின், கரிகாலனும் செங்குட்டுவனும் நெடுஞ்செழியனும் முன்னான வீரமன்னர்கள் வீறுடனாண்டது எமது தமிழ் நாடென்பதனை உன்னின், நக்கீரர் கபிலர் வள்ளுவர் இளங்கோவடிகள் முதலாய நல்லிசைப் புலவர்கள் பல்லிசை நிறுத்தது எமது தண்டமிழ் நாடென்பதனை நினையின் அவை

எமக்கு ஊக்கமும் உரனும் உண்டாக்காது போமா? ஆண்மை மிக்க வீரர் வழியில், அரசர் வழியில், வள்ளியோர் வழியில், தெள்ளியோர் வழியில் வந்தயாமோ அறிவு குன்றி, ஆண்மை குறைந்து, பிடிழுந்து வாடி நிற்போம் என்னும் உணர்ச்சி எம்மை உயர் நெறிக்கண் உந்தாது சாமா? "இனி நாம் அழுங்கிக்கிடவோம்; நாடெங்கும் தமிழினை முழக்கச் செய்வோம்" என்றெழுமின்! தளரா ஊக்கமுடன் உழைமின்! நாமும்உயர்ந்தோம். நமது நாடும் உயர்ந்தது.

கல்விச் செல்வர்கள்!

தமிழ்ப் புலவரென்பார் தமிழகத்திலே ஓர் குறுகிய கூட்டத்தினரல்லர்; விரிந்தசிந்தையுடைப் பெருந்தக்கோர்கள் அன்னவரேயாவர். தமிழ்ப் புலவரின்றித் தமிழகம் என்பது யாண்டுளது? "யாம் தமிழரேம்; எமது பிடுடைத் தமிழகம்; எம் விறலுடை முன்னோர்" என்று கூறிக்கொள்வ தெல்லாம் தமிழ்ப் புலவர்களால் வந்த பேறல்லவோ? தம்முடைய பழைய பெரிய அறிவுச் செல்வங்களையெல்லாம் வழி வழியாகப் பாது காத்து வந்து நாட்டின் பெயரை நிலைநாட்டுவோர் புலவர் என்பதில் ஐயமுண்டோ? பண்டுதொட்டுப் புலமைசிறந்து விளங்கி னோரெல்லாம் ஒரு நாழி உண்டியின் பொருட்டுக் கற்றோ ரல்லர். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும் தமிழாராய்ந்ததனைப் பழங்கதையென ஒதுக்கு வார் ஒதுக்குக. முக்குற்றமற்ற முனிவர்களும், முடிசார்ந்த மன்னர்களும் செந்தமிழ்ப் புலவர்களாய்த் திகழ்ந்தனரே. பாலைபாடிய பெருங்கடுங்கோ, கணைக்காலிரும் பொறை என்னும் சேர மன்னர்களும், நலங்கிள்ளி, கிள்ளிவளவன், நல்லுத்தரன், கோப்பெருஞ் சோழன் என்னும் சோழமன்னர்களும், ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், தலையானங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன், அறிவுடைநம்பி, இளம்பெருவழுதி, நல்வழுதி, குறுவழுதி, உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிமன்னர்களும், பிறரும் சங்ககாலத்தே தம் உடலோம்புதற் பொருட்டோ தமிழ் கற்று நல்லிசைப்புலமை பெய்திச் சிறந்தனர்? இத்தகைய வேந்தர் பெருமக்களெல்லாம்

புலவர் வரிசையிற் சேர்ந்திருப்பது தமிழ்ப்புலவர்கட்குப் பெருமிதம் பயப்பதொன்றும். ஆனால் அரசர்களாலேயே புலமைக்குப் பெருமையுண்டாயிற்றெனல் அமையாது. புலமையால் அவர்கள் பெருமையெய்தினரெனக் கூறுதல் பெரிதும் . பொருந்தும். நிலனாளுஞ் செல்வத்தினும் புலனாளுஞ் செல்வம் மேதக்கதேயாகும். புலவர்களுக்குள்ளே புலமைத்திறத்தாலன்றிப் பிறப்பு முதலிய வேறெவ்வகையாலும் பெருமை சிறுமையில்லை. முடியுடை வேந்தராயினும், வேட்டுவராயினும், பாணராயினும் புலவரென்ற வகையில் ஒரு நிகரானவரே. திருக்குறளென்னும் தெய்வத் தமிழ்மறையை "வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நன்னெஞ்சம், சிந்திக்க கேட்கசெவி" என்று உள்ளமுருகிப் போற்றினவன் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டி வேந்தனவன். திருக்குறளை இங்ஙனம் போற்றினவன் அதனையியற்றிய பெரு நாவலராகிய வள்ளுவனாரையும் தெய்வமாகக் கொண்டு பரவினானவன் என்பதில் இழுக்கென்னை? ஆகலின் தமிழ்ப் புலவரென்பார் யாவரும் ஓரினத் தவரென்பதனைக் கடைப்பிடிமின்.

> "கற்றவர்க்கும் நலநிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
> யுற்றவர்க்கும் வீரரென்றுயர்ந்த வர்க்கும் வாழ்வுடைக்
> கொற்றவர்க்கும் உண்மையான கோதில்ஞான சரிதராம்
> நற்றவர்க்கும் ஒன்றுசாதி நன்மை தீமையில்லையால்"

என்பது எங்கட்கு மறை மொழியாகும். உலகில் வேறெவ்வெவர் எவ்வகை வேற்றுமை யுடையராய்த் தொலையினும் தொலைக. தமிழ்ப் புலவராகிய எங்கட்குள் எத்துணையும் வேற்றுமையின்றெனச் சாற்றுமின்.

இனி, முன்னாளில் மூவேந்தரும் பிறரும் தமிழைப் புரந்தனர்; தமிழ்ப்புலவரைப் போற்றினர்; இந்நாளிலோ தமிழ்ப் புலவரும் பிறரால் நன்கு மதிக்கப் பெறவில்லையே என நீவிர் கூறுதலுங் கூடும். அங்ஙனம் கூறுவதில் உண்மையின்றென யான் உரைக்கின்றிலேன். எனினும் ஒன்று கூறுவதுடையேன். தமிழ்ப்புலவர்கள் ஏனோர் பாலுள்ள இக்குறையினை எடுத்துரைப்பதைக் காட்டினும் தம்பாலுள்ள குறைகளை முந்துற

அறிந்து களைதல் கடனாகும். பண்டை நாளிலே தமிழ்ப் புலவ ரென்றால் இலக்கிய விலக்கணங்களைத் துறைபோகக் கற்றுப் பலகலையிலும் வல்லுநராய்ப் புலத்துறை முற்றி விளங்கினர். வாய்மையும் அன்பும் மற்றும் பல குணங்களும் நிரம்பித் திகழ்ந்தனர். அங்ஙனமாகலின் அவர்களை நல்லிசைப் புலவர் என்றும், பொய்யா நாவினர் என்றும், சான்றோர் என்றும் யாவரும் போற்றுவாராயினர். வேந்தர்கள், வள்ளல்கள் முதலாயினர் அவர்கள்பால் மிகுமதிப் புடையராய் வரிசைபல வழங்கி மகிழ்வித்து வந்ததன்றி, அவர்களில் ஒவ்வொருவரைத் தமக்குச் சிறந்த நட்பாளராகக் கொண்டு, அன்னோர் பாடும் சுவைமிக்க தமிழ்ப் பாக்களைக் கேட்டு இன்புற்று மகிழ்ந்தும், அறிவுரைகளால் தம் பிழையினை யோர்ந்து திருந்தியும் வந்தனர். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், 'என் மாற்றரசைப் போரிலே தாக்கி முரசுடன் அவர்களைக் கைப்பற்றேனாயின், யான் இத்தன்மையனாகுக' என வஞ்சினங் கூறுமிடத்து,

> " ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் றலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
> புலவர்பாடாது வரைக வென்னிலவரை "

என்று கூறியிருப்ப தொன்றே அக்காலத்துப் புலவர்களிடத்து வேந்தர்கள் வைத்திருந்த எல்லையில்லாத பெருமதிப்பிற்குப் போதிய சான்றும். உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழும் சிறப்பினையுடைய புலவர் என்று கூறும் அருமையைப்பாருங்கள். புலவர்கள் எனது நாட்டினைப் பாடாது விடுக என்பது அவன் கூறிய வஞ்சினமாயின், தன்மீதுள்ள வெறுப்பால் அவர்கள் அங்ஙனம் பாடாது விடுத்தலைத் தனக்கு எவ்வளவு இகழ்ச்சியாக அவன் கருதியிருந்தல் வேண்டு மென்பதனை ஓருங்கள். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை என்ற அரசனைக் காணச் சென்ற மோசிகீரனார் என்ற புலவர் அவனது வீர முரசு நீராடச் சென்றிருந்த காலையில் அதனை வைத்தற்குரிய முரசு கட்டிலில் அறியாது ஏறித் துயின்றனர். அதனை

வந்து கண்ணுற்றான் அரசன். தனது வழிபாட்டிற் குரிய சிறப்பினையுடைய முரசு வைக்குங் கட்டிலில் அவர் துயிலு வதைக் கண்டும் சிறிதும் வெகுளாது, தனது கையால் சாமரை கொண்டு அவருக்கு விசிறிக்கொண்டு நின்றான். துயிலினின் றெழுந்தபின், தாம் முரசு கட்டிலில் துயின்றதனையும், அரசன் விசிறினதையும் அறிந்த புலவர் மிக வியந்து அவனைப் பாராட்டிப் பாடினர். அம் மன்னவன் புலவரிடத்து எத்துணை அன்பும் மதிப்பும் வைத்திருந் திருந்தல் வேண்டும்? இங்ஙனம் எத்தனையோ பல சான்றுகள் உள்ளன. இன்னும் பிற்காலத் திலிருந்த கம்பர் முதலான புலவர்களுக்கு வேந்தர்கள் சிவிகை சுமந்தது முதலிய வரலாறுகளும் கேட்கப் படுகின்றன. அவர் களுடைய புலமையின் பெருமை என்னே? நம்மை அவர் களோடு ஒப்பிடுதல் யாங்ஙனம்? இக்கால நிலையில் படிப் படியாக நம் உரங்குன்றி வந்துள்ள நிலையில், வேறு பல துறை களிற் கருத்தைச் செலுத்த வேண்டியுள்ள நிலையில், நாம் அவ் வளவு பெரும் புலமை யடைதற்கு வாய்ப்பு இன்றேனும், தமிழ் இலக்கிய விலக்கணங்களில் ஓரளவாவது அழுந்தமான பயிற்சி யைப் பெறுதல் நமக்குரிய கடனாகும் என்பதனை அறியற் பாலம். தமிழ்ப் புலவரென்போரை விடுத்து, ஏனையரை நோக் கியும் ஒன்று கூறுதல் வேண்டும். தமிழ் நூல்களில் ஒன்றை யேனும் படியாத என் இளந் தோழர்களும், பிறரும் தங்கட்குத் தமிழில் அளவு கடந்த பற்றுள்ளதாகப் பலகாலும் பேசுவதை நாம் கேட்கின்றோம். அஃது உண்மையான பற்றாமா? தமிழ் நூல்களைக் கற்று அவற்றின் பயனை நுகர்வதன்றோ தமிழ்ப் பற்றுள்ளவர்க் குரிய முதற்கடன்? அங்ஙனமின்றித் "தமிழ் தமிழ்" என வானளாவக் கூச்சலிடுவ தெல்லாம் ஏதோ வேறு பயன்கருதிய செயலாவதன்றி உண்மையான தமிழ்ப் பற்றாகா தென்பது ஒருதலை. கழிந்த நாட்களில் தமிழ் நூல் கற்பதற்கு இயலாது போயினும், இனி யாம் தமிழ் கற்பேம் என உறுதி கொண்டு நாடோறும் சிறிதேனும் பயின்று வருவரேல் அவரது தமிழ்ப் பற்றை யாம் பாராட்டுதல் பொருந்தும்.

இனி, "தன்னைத் தலையாகச் செய்வானும் தான்" என்ற படி, தமிழ்ப்புலர்கள் தம்மைஉயர்த்திக் கொள்வதற்கு அவர்கள்

நல்ல கல்வி யுடையராதல் ஒன்றுமட்டும் போதாது. விரிந்த உள்ளமும் சிறந்தபண்புகளும் வேண்டும். பண்டைநாளிலிருந்த புலவர்கள் பரிசில் கருதி யாரையும் எங்ஙனமும் பாடினரென்று கூறுதல் பொருந்தாது. அவர்கள் தாம் குற்றமற்ற பண்புகளுடையராய் இருந்ததோடு, வேந்தர்களாயினும் பிறராயினும் தவறுடையராகக் காணப்படின் சிறிதும் அஞ்சாது அவர்களை நெருங்கி அறிவு கொளுத்தியும் வந்தனர்.

"நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்"

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி"

"அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண் தட்டோரே
தள்ளா தோரிவண் தள்ளா தோரே"

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம்
ஆற்றா மைந்நிற் போற்றா மையே"

"கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறைமையின் மடிவிலை யாகி
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர்"

"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில் மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ

....

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்

இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகன் ஞாலம்"

" நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசன் கொற்றம்
அதனால், நமரெனக் கோல் கோடாது.
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையையாகி இல்லோர் கையற
நீ, நீடு வாழிய நெடுந்தகை"

என்பன போல்வன வெல்லாம் புலவர்கள் அரசர்கட்கு எத்தகைய அறங்களை அறிவுறுத்தி வந்தன ரென்பதனைக் காட்டுகின்றன. சோழன் நலங்கிள்ளி யென்பானும் நெடுங்கிள்ளி என்பானும் ஒருவர்க் கொருவர் பகைஞராய்ப் போர் தொடுத்த காலைக் கோவூர் கிழார் என்னும் புலவர் அவர்கட்கு அறிவு கொளுத்துமாறு பாடிய பாட்டுக்கள் அவரது அஞ்சாமையையும் உயர்குணத்தையும் புலப்படுத்துகின்றன.

ஒரு காலத்தே இளங்கண்டீரக்கோ இளவிச்சிக்கோ என்ற இரண்டு சிற்றரசர்கள் ஒருங்கு கூடியிருந்த விடத்திற் சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் கண்டீரக் கோவைக்கை குலுக்கிச் சிறப்புச் செய்து விச்சிக்கோவை அங்ஙனஞ் செய்யாது விட்டனர். அது விச்சிக்கோவிற்கு சிறிது வருத்தத்தையுண்டாக்க, அவன் அதன் காரணத்தை உசாவினன். அதற்குப் புலவர் கூறிய விடையாவது, "தம் கணவர் சேய்மைக்கட் சென்றிருப்பின், பெண்டிரும் பாடிவந்தோர்க்குப் பரிசில் கொடுத்தனுப்பும் உயர் குடியிற் பிறந்த கண்டீரக்கோன் ஆகலின் யான் அவனைப் புல்லினேன். நீயும் வள்ளலாகிய நன்னன் வழியில் தோன்றியவனும், உயர் குணமுடையவனும் ஆயினும் நம் முன்னோருள் ஒருவன் புலவர்கட்குக் கதவு அடைத்தானாதலின் நுங்கள் மலையை எம்மவர் யாரும் பாடாது விட்டனர்; ஆதலின் யானும் நின்னைத் தழுவிற்றிலேன்" என்பது. இதிலிருந்து

ஓர் குடும்பத்தில் யாரேனும் தகாதசெயல் செய்யின் அக் குடும்பத்திலே தோன்றினோர் எவரையுமே புலவர்கள் மதிப்ப தில்லை என்பது புலனாகின்றது. பெண்பாற் புலவர்களும் அஞ்சாமையும், அருஞ்செயல் புரியும் ஆற்றலுமுடையரா யிருந்தன ரென்பதற்கு அதியமானிடமிருந்து ஔவையார் தொண்டைமானுழைத் தூது சென்ற வரலாறு சான்றாம். அத்தகைய அஞ்சாமையும், அருந்திறலும், பெருந்தன்மையும் இற்றை நாளில் தமிழ்ப் புலவர்கட்கு வேண்டும். ஏதோ சிறிது பொருள் கிடைத்தாற் போதுமென்று தம் நிலைமைக்குத் தகா வாறு பிறரைத் தொடர்ந்து அவர்கள் மனைவாயிலைப்பற்றி நின்று பெருமைகெட வொழுகுவது தமிழ்ப் புலவர்கட்குச் சிறிதும் அடாது. அத்தகைய இழிதகவு யாரிடமேனும் காணப்படின் அன்னாரைப் புலவர் கூட்டத்திற்குப் புறகு என நீவிர் ஒதுக்குதல் வேண்டும். சுருங்கச் சொல்லின் பிறரெல்லாம் தம்மிடம் மதிப்பு வைக்குமாறு நடந்து கொள்வது தமிழ்ப் புலவர் கடனாம். மற்றும் உலகநடை யறிதலும் இன்றியமையாதது.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்"

என்பது மெய்ம்மொழியன்றோ? உலகிலே நன் மக்களாயுள் ளாரின் நோக்கங்களும் கொள்கைகளும் நடைமுறைகளும் எங்ஙனம் உள்ளன வென்பதை அறிந்து அவற்றிற்கேற்ப ஒழுகுதலே உலகத்தோடு பொருந்த வொழுகுதலாகும். தாம் எவ்வளவுதான் பழம் பனுவல்களில் அழுத்தமான பயிற்சியுடை யராயினும் இக்காலத்து அறிவு ஆராய்ச்சித் துறைகளைப் புறக் கணித்திடுதல் சாலாது. பழைய நூல்களைப் புதிய முறையில் ஆராய்தலும்; புதுநூல்கள் எழுதுதலும் வேண்டும். இவ்வகை யில் தமிழ்ப்புலவ ரனைவரும் தமிழன்னைக்குப் பெரிதும் கடன் பட்டிருக்கின்றனர். முற்காலத்துப் புலவர்கள் தம் வாழ்க் கையைச் செம்மையுற நடத்துதற்குத் தமிழ்ப்புலமை யொன் றையே கருவியாகக் கொண்டிருந்தாரு மல்லர். அவர்கள் பல வகை வாணிகமும், பிற தொழில்களும் நடத்தி வந்தனரென் பது அவர்கள் பெயருடன் வழங்கும் அறுவை வாணிகன், கூல

வாணிகன், பண்ட வாணிகன், பொன் வாணிகன், வண்ணக்கன் என்பன முதலிய அடைமொழிகளால் விளங்குகின்றது. இந் நாளிலும் புலவர்கள் அத்தகைய வினை முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

தண்டமிழ்ப் போற்றும் திண்டிறலுடையீர் !

இதுகாறும் தமிழ்ப் புலவர்கள் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ளுதற்குரிய நெறிகள் சிலவற்றை எனது சிற்றறிவிற்குத் தோற்றியவாறு கூறினேன். விரிவஞ்சிக் கூறாது விட்டனவும் உள. இனி, அரசாங்கத்தினரும், பல்கலைக் கழகத்தாரும், நாட்டாண்மைக் கழகத்தினர் முதலிய நாட்டுச்செல்வர்களும் தமிழ்ப் புலவர்கட்கு ஆற்றவேண்டிய கடன்கள் பலவுள்ளன. அவற்றை யெல்லாம் நான் இங்குக் கூற ஒருப்பட்டிலேன். என்னினும் அறிவின் மிக்க பலர் இக்கூட்டத்திலிருக்கின்றீர்கள். நீங்க ளெல்லீரும் கூடிச் சூழ்ந்து ஒருமித்துச் செய்யும் முடிபுகளை அரசாங்கத்தினர் முதலாயினோர்க்கு அறிவிப்பீர்களென்று நம்பு கிறேன். ஒன்றுமட்டும் நான் குறிப்பிட விரும்புதலுடையேன். உயர்திறப் பள்ளிகளிலாக, கல்லூரிகளிலாக தமிழாசிரியராயுள் ளார் அங்குள்ள ஏனையாசிரியன்மாருடன் எல்லா வகையினும் ஒத்த நிலையினராக வைக்கப்பெறவேண்டும். இப்பொழுது பல் கலைக் கழகத்தின் எந்த அவையினும் தமிழ்ப் புலவர்க்கென இடம் யாதுமில்லை. மக்கட்கு நாட்டின்பற்றும் மொழிப்பற்றும் வளர்ந்துவரும் இந்நாளில், எல்லாக் கலைகளையும் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்க வேண்டுமென அறிஞர் பலரும் வற்புறுத்து கின்ற இந்நாளில், தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழ்ப் புலவர்க்கென இடமில்லாதிருப்பது பெருங்குறையாம். அது விரைவில் அகற்றப்படவேண்டும். வித்துவான் தேர்வில் வெற்றிபெறுவோர் பட்டம் பெறும் நாளில் ஆங்கிலப்பட்ட தாரிகளோடொப்ப நிலையங்கி (Gown) தரித்துக் கொள்ள வேண்டுமென இவ்வாண்டு முதல் விதித்துள்ளார்கள். இவ்விதி இவர்களை நன்கு மதிக்கவேண்டுமென்னும் நன்னோக்கங்கொண் டியற்றப்பட்டதாயின் இவர்களும் பல்கலைக் கழக அவைகளின் அங்கத்தினர் பதவியை விரும்பி நிற்கவும், வாக்குரிமை அளிக் கவும் உரிமை தருதல்வேண்டும். நேற்று நடந்த சென்னைப்

பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் சென்னை மாகாணக் கல்வியமைச்சராகிய பெருந்திருவாளர் திவான்பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து அவர்கட்கு நாட்டினிடத்தும் நாட்டு மொழியினிடத்தும் உள்ள பெரும்பற்றுத் தெள்ளிதின் விளங்குகிறது. பிறகலைகளை நாட்டுமொழி வாயிலாகக் கற்பிப்பதன் இன்றியமையாமையை அவர்கள் பலபடியாக வற்புறுத்தியுள்ளார்கள். அவர்கள் தமிழர் மகாநாட்டுத் தலைவராக இங்கே எழுந்தருளியிருப்பதை, நாம் கருதியன கைகூடுமென்பதற்கு அறிகுறியாகக் கொள்ளக் கடவேம். தமிழ் நாட்டின் செல்வத் தோன்றல்களுக்கும், நாட்டாண்மைக் கழகங்களின் தலைவர்கள் முதலாயினார்க்கும் ஒன்று கூறுகின்றேன். நீங்கள் பண்டைநாளிற் புரவலர்கள் போலத் தமிழ்ப் புலவர்க்குப் பன்னூறாயிரம் பொன் பரிந்தளிக்கவேண்டுமெனவும், நாடும், ஊரும், நடைநவில் புரவியும், களிறும், தேரும் வரிசையின் வழங்க வேண்டுமெனவும் கேட்கின்றிலேன். நும்மின்மிக்காராக மதித்துப் போற்றவேண்டுமெனவும் கேட்கின்றிலேன். யான் கேட்பதெல்லாம் நீங்கள் அவர்களை அவமதியாதிருக்க வேண்டுமென்பதே. தமிழ்ப்புலவர்கள் யாதேனும் காரியமாகவோ காரியமின்றியோ நுங்களிடை வருவரேல் அவர்கட்கு இருக்கையளித்து முகமன் கூறுதலேனும் நீவிர் புரிதல்வேண்டும்.

அரும்பெறற் புலவர்களே! தமிழ்ப் பற்றுடைய பெரும்பெயர்ச் செல்வர்களே!! இம் மாநாட்டிற்கு நுங்களை வரவேற்கு முகத்தால் என் கருத்திற் றோன்றிய சிலவற்றை வெளியிட்டதனை நீங்கள் பொறுத்தருளல் வேண்டும். யான் கூறியவற்றில் பிழை யாவன வுளவேல் அவற்றை ஒதுக்கி விடவும், நீங்கள் கண்ட நல்லனவற்றைத் தெரிவிக்கவும் நுங்கட்குக் கடப்பாடுளது. யான் சோணாட்டின் குணபாலாகிய தஞ்சையைப் பிறப்பிடமாகவும், குடபாலாகிய திருச்சிராப்பள்ளியை வினையாற்றிடமாகவும் கொண்டிருப்பதும், இந்நாட்டிலுள்ள தமிழாசிரியருள்ளே ஆண்டினாற் பெரும்பாலும் முதுமையுற்றிருப்பதுமே நுங்களை வரவேற்கும் பேற்றினை எனக்கு அளிப்பனவாயின. புலவர்கள் மேன்மையுறவும், தமிழ்மொழி தழைக்

கவும், நாடு நலம் பெற்றோங்கவும் இத்தகைய மாநாடுகள் கூடுவது இன்றியமையாததென்பதை அனைவிரும் அறிவீர்கள். இக்கருத்தினைக் கொண்டே சில ஆண்டுகளின் முன் திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் முன்னின்று மும்முறை 'தமிழ்ப் பண்டிதர் மாநாடு' நடாத்தினோம். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் அக்கூட்டங்கட்கு வந்து சிறப்பித்தார்கள். அப்பொழுது சென்னை வளர்நெறி அமைச்சராயிருந்த பெருந்திருவாளர் திவான்பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்களும் ஓர் கூட்டத்திற்குத் தலைவராக வந்திருந்தனர். தமிழ் மக்கள் அனைவரும் இரங்குமாறு நம்மை நீத்தகன்ற திருமிக்க, பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் அம் மாநாடுகட்கு உறுதுணையாக நின்று கடனாற்றினர். திருவாளர் தி. மூ. நாராயணசாமி பிள்ளையவர்களும் அதற்கு ஆதரவாக இருந்தமையை இங்கே மகிழ்ச்சியுடன் குறிப்பிடுதல்வேண்டும். இப்பொழுது இத்தகைய கூட்டங்களில் நம்மை உட்படுத்தி இயக்கிக் கொண்டிருக்கிற ஒரு பேராற்றல் நம்மில் ஒருவராக உருக்கொண்டு கரந்தையம்பதியினின்று இங்கு வந்திருத்தலை எல்லீரும் அறிவீர்கள். அது நல்லுடம்புடன் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துவதன்றி நாம் செய்யற்பாலது யாது? இப்பொழுது தமிழர் மகாநாட்டிற்கும், தமிழ் மாணவர் மகா நாட்டிற்கும் வாய்த்தமைபோலவே தமிழ்ப்புலவர் மகா நாட்டிற்கும் இருபெருந்தக்கார்கள் திறப்பாளராகவும், அவைத் தலைவராகவும் வாய்த்திருப்பது நமது பெரும் பேறாகும். திறப்பாளராகிய திருவாளர் பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியாரவர்களின் புலமை மாண்பினை வியந்து புகழாதார் யாருமிரார் என்பது தேற்றம். தென்மொழி; வடமொழி என்னும் இருமொழிப் புலமையும் ஒருங்குடைய நமது பண்டிதமணியார் நாடோறும் அரிய நூல்களை ஆராய்ந்து நுண்பொருள் கண்டு அவ்வின்பத்தில் திளைத்தலையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ள பெருவாழ்வுடையவர்.

தலைவராகிய திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களைத் தமிழ் நாட்டிலுள்ள ஐபாட்டைச் சிறுவர் சிறுமியர் முத

லாக முதுக்குறைவுடைய பெரியோர் காறும் யாவரும் அறிவர். அவர் "நல்லாசிரியற்கும்" ஆசிரியர்; பலதிறத்து மாணவர் கட்கும் ஆசிரியர்கட்கும், புலவர்கட்கும், நூல்கள் எழுதியும், பதிப்பித்தும் வெளியிடும் பேருதவியாளர்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித்தருவதில் முனைந்து நிற்கும் முதறிஞர்; தமிழ்ப்புலவர்கள் பெருமிதத்துடன் வாழ வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாக நிற்கும் பீடுடையார்; அவரைக்குறித்து இன்னும் கூறுவேனாயின், நீவிர் யார் கூறு தற்கு, யாம் அறியோமா? என நீங்கள் என்மேற் சினங் கொள்ளுதலுங் கூடும்.

புலவர் பெருமக்களே, தங்கள் எல்லோரையும் மனமு வந்து வரவேற்கின்றேன்; வாழ்த்துகின்றேன். அங்ஙனமே, திறப்பாளரும், தலைவருமாகிய இருபெரியார்களையும் வரவேற் கின்றேன்; வாழ்த்துகின்றேன். அவர்கள் தங்கள் பணியை உளமுவந்தேற்று ஆற்றுமாறு தங்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். நல்வரவு! நல்வரவு!! வாழ்க! வாழ்க!!

வாழி தமிழ்மொழி வாழி தமிழகம்
வாழி தமிழர்கள் வாழி புலவரே.

உ

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்.

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(456-வது பக்கம் பார்க்க.)

மறுப்பு 33 தொடர்ச்சி.

'எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப.'
'தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.'
'அவைதாம், தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்'

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களால், முடிக்கும் சொல்லும் முடிக்கப்படும் சொல்லுமென இருவகைப்பட்ட சொற்களுள்ளே முடிக்கும் சொல்லை எஞ்சுபொருட் கிளவி என்பதும் எச்சக் கிளவியென்பதும் ஆசிரியர் ஆட்சிநோக்கிய குறியென்பது உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

இளம்பூரணருக்கும் அதுவே கருத்தென்பது 'இறப்பின் நிகழ்வின் எதிர்வின்' என்னும் சூத்திரவுரையுள் 'எக்கால் அவை (முற்றுச்சொல்) தம் எச்சம் பெற்று நின்றன அக்கால்' என அவர் குறித்தது கொண்டும் துணியப்படும்.

இனி வழிநூல் செய்த நன்னூலார் ஆட்சியும் அதுவே யென்பது,

'பெயர்வினை உம்மைசொல்..................
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்.'

---

* இப்பகுதித்தான் ஓர் காரணத்தால் முன்னமே அச்சிற் பதிக்கப் படாமல் நின்று விட்டது. அதனை இப்பால் தேடியெடுத்துப் பதிப்பிக்க லாயிற்று. இதனை அடுத்துவரும் 34-வது மறுப்புரையும் அப்படியாயிற்று.

'உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும்.'

'எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.' என்று அவர் ஓதியவாற்றான் அறிக.

மறுப்பு 34.

'அங்குச் சென்ற பிறகு' 'அதன் பிறகு' 'விளி மரபு இறுதியாகக் கூறிப் பிறகு' எனப் பிறகு என்பதோர் இழி வழக்குச் சொல்லைச் சாத்திரியார் தம் உரையுள் பயில வழங்கினர்.

இச்சொல் தொல்காப்பிய முதலிய நூல்களிலேனும் அந் நூல்களின் உரைகளிலேனும் பண்டைச் சான்றோர் இலக்கியங் களிலேனும் வழங்காமை காண்க. பிறக்கு என்பதோர் சொல் சான்றோர் செய்யுள் வழக்கில் வந்தது. அதுவும் இடம்பற்றிப் பின் என்னும் பொருளில் வந்தது. 'அடிபிறக் கிடாதவர்' என்று வீரர் குறிக்கப்படுவர். பிற்காலத்தார் மொழி மரபு பிறழ காலப்பிற்பாட்டைக் குறித்து இம்மொழியை வழங்கினர். அவ்வாறே இவரும் வழங்கியது தொல்காப்பிய நூலாராய்ச்சி யுரைக்குப் பொருந்தாமை அறிக.

உ

வித்துவான் வேதாசலய்யர் என்பார் போலிமறுப்பு.

(மறுப்பு—1. யாம் எழுதியது.) தொல்காப்பியச் சொல் லதிகார வாராய்ச்சிக் குறிப்புரையாளர் ஆகிய பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார், அதற்குத் தாம் எழுதிய முக வுரையிலே 'அனைவாது கருத்துக்களும்' என்று எழுதினர்.

'அனைவரது கருத்துக்களும்' என்புழி 'அது' என்பது ஆறும் வேற்றுமை உருபு. அது 'சாத்தனது தலை' என்றாற் போலப் பின் வருமொழி அஃறிணை ஒருமைப் பொருண்மைக்கு குறித்த வழி வருவது. பின்வருமொழி அஃறிணைப் பன்மைப் பொருள் குறித்ததாயின், 'சாத்தன கைகள்' 'என கால்கள்' என்றாற் போல அகரவுருபே வரத்தகும். 'சாத்தனது கைகள்' 'எனது கால்கள்' என்னின் வழூவாம். இவ்விலக்கணத்தை வரையறுத்து, நன்னூல் ஆசிரியராகிய பவணந்தியார்

'ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம்.' என்று சூத்திரம் விளங்க ஓதினர்.

நன்னூலுக்கு முதனூலாகிய தொல்காப்பியம் என்பது அதற்கு முதனூலாகிய அகத்தியத்தினின்றும் தொகுத்துச் செய்யப்பட்ட நூலாதலின், அந்நூலாசிரியர் ஆறும் வேற்றுமைக் குரிய உருபுகளை யெல்லாம் எடுத்தோதாமல் 'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்னும் உத்திபற்றி 'ஆறுகுவதே, அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி........' யென அதுவுருபு ஒன்றனையே எடுத்தோதினர். ஆயினும் அத் தொல்காப்பியவுரையாசிரியரெல்லாம் முதனூலாகிய அகத்தியச் சூத்திரத்தைப் பற்றியும் இலக்கிய வழக்குப் பற்றியும் அது வோடு ஆது அ என்னும் உருபுகளும் ஆறும்வேற்றுமைக்குரியன வென்றும், அது ஆது என்பன முற்கூறியவாறு ஒருமைப் பொருண்மைக்கும் அகரவுருபு பன்மைப் பொருண்மைக்கும் வருமென்றும் குறித்தார்.

'ஆறனுருபே அது ஆது அவ்வும்
வேறொன்றுரியதை தனக்குரியதை என
இருபாற் கிழமையும் மருவுற வருமே' என்பது

அகத்திய சூத்திரம் ஆகலின், 'அனைவரது கருத்துக்களும்' என்று குறிப்புரையாளர் எழுதியது குற்றம் என்று எம்மால் மறுக்கப் பட்டது.

எம்மறுப்பின்மேல் மறுப்பென எழுதப்புகுந்த வித்துவான் வேதாசலவையர் என்பார், 'அனைவரது கருத்துக்களும்'

என்ற குறிப்புரையாளர் கூற்றுக் குற்றமன்றெனவும், பிற்காலத்து வழக்கிலே அதுவுருபு வருமொழி அஃறிணைப் பன்மைப் பொருண்மையிலும் வந்துள்ளதென்றும், ஓர் ஐம்பது ஆண்டுகட்குள்ளாக ஆங்கிலப் பாடசாலை மாணவர்க்கென ஆசிரியர் விசாகப்பெருமாள் ஐயர், ஆறுமுகநாவலர், சடகோபராமானுஜாசாரியார் இவர்களால் எழுதப்பெற்ற நன்னூற் காண்டிகை உரையிலே 'எனது கைகள்' என உதாரணம் காட்டப்பட்டதென்றும் கூறினார்.

மேலும், 'நம்பிமகன்' என்றாற்போலும் உயர்திணைப் பெயர்த்தொகை விரியுங்கால் நம்பிக்கு மகன் என விரியுமேயன்றி நம்பியது மகன் என விரியாது என்பது பற்றித் தொல்காப்பியனார் 'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின் அதுவென் உருபு கெடக் குகரம் வருமே' என்று ஓதிய சூத்திர விதிக்கு மாறாகப் பிற்காலத்து இலக்கியங்களிலே 'அரனது தோழன்' 'துன்றவர் தமது செம்மல்' 'நினதடியாரொடல்லால்' என வழங்குற்றமையால் அவற்றையும் அக்காண்டிகையுரையாசிரியர் புதியன புகுதல் கொண்டு உதாரணம் காட்டினார், எனவும் கூறினார். ஆகவே இவ் வித்துவான் தம் கூற்றுக்கு ஆதாரமாகத் தொல்காப்பிய வுரையாசிரியருள் ஒருவரையும் கொண்டாரிலர். நன்னூலுக்கு முன்னை உரைசெய்த மயிலைநாதர் சங்கரநமச்சிவாயர் இவரையும் கொண்டாரிலர். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலப் பாடசாலை மாணவர்க்கென எழுதிய மேற்குறித்த மூவர் காண்டிகை உரைகளுமே ஆதாரமாகக் கொண்டார். இவர்க்குத் தொல்காப்பிய ஆராய்ச்சியின் தொடர்பு எற்றுக்கோ? மேற்குறித்த காண்டிகையுரையாசிரியர் மூவரும் நல்லிசைப் புலமை வாய்ந்தவர் என்பதிலே ஐயம் இல்லை. ஆயினும் அவர் முக்குணவயத்தால் ஒரோவழி மயங்கிப் பிழைபட உரைத்தனவும் பிழையல்லவென்று கோடல் முறையாகுமா? இம்மூவரும் முன்னையிலக்கணத்திற்கு மாறாகப் புதிய இலக்கணம் விதிப்பதற்கு அதிகாரிகள் ஆவரா? அதிகாரிகளாவரேனின் இவர் நன்னூலின் வேறாக ஓர் இலக்கண நூல் இயற்றுதற்குரியராயினும் ஆகுக; அவ்வாறன்றி ஆறன்

ஒருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக்கு அவ்வும் உருபாம்' என்ற சூத்திரத்தின் கீழே பன்மைக்கு அதுவுமாம் என உரைக் கட்புகின் அது மாறுகோளக் கூறல் என்னும் குற்றமாதலோடு அந்நன்னூற் சூத்திரத்தையும் நின்று பயனின்மை யென்னும் குற்றத்தின்பாற் படுத்தல் அறிக.

'எனது கைகள்' என உலகத்து இழிவழக்கில் வந்ததே யன்றி எந்த இலக்கியத்தினும் வந்ததில்லை. இதனை நன்னூற்குச் சிறந்த உரையெழுதிய மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயரும் காட்டினரிலர். ஆகலின் காண்டிகை யுரையாசிரியர் உதாரணமாகக் காட்டியது தவறென்றே கொள்ளப்படும். ஆகவே 'அவைவரது கருத்துக்களும்' என்று குறிப்புரையாளர் எழுதியது ஆறும் வேற்றுமை உருபிலக்கணத்தை நன்குணராத குற்றமென்றே அறிவுடையோர் துணிவர். அது குற்றமன்றென்று சாதிப்பதற்கு வித்துவான் வேதாசலவையர் அக் காண்டிகையுரை உதாரணத்தைத் துணையாகப் பற்றியதும் ஆற்றுவெள்ளத்தில் அமிழ்கின்றவர் வைக்கோற்றுரும்பைத் துணையாகப் பற்றியவாறு போலும் என்க.

அற்றேல், நல்லிசைப் புலவர் எனப்பட்ட விசாகப்பெருமாளையர், ஆறுமுக நாவலர் சடகோப ராமானுசாசாரியார் இவர்கள் மூவரும் ஒருங்கே மயங்கி யுரைத்தாரென்றல் சாலுமோவெனின், நன்று வினயினீர், ஒருவர் சென்ற வழியே பிறர் சிலர்ஆராயாது சேறல் உலகியல்பேயென்று ஆசிரியர் சிவஞான முனிவரும் கூறினர் ஆதலின் அது சாலுமென்றொழிக. அச்சிவஞான முனிவர்க்குப் பிற்பட்ட காலத்தே, ஆங்கிலக் கலாசாலைகளிலே ஆங்கிலமொழியோடு தமிழையும் கற்கப் புகுந்த மாணாக்கர்க்கு, ஆங்கில மொழியைத் தமிழினும் தமிழ்மொழியை ஆங்கிலத்தினும் மொழிபெயர்த்தல் இன்றியமையாது வேண்டப்பட்டதாகவே, தமிழ் உரைநடையானது ஆங்கிலமொழி நடையோடு விரவலுற்றுச் சிறிது மாறுபாட்டை அடைந்தது. சிவஞான முனிவருக்கும் மேற்குறித்த நன்னூற் காண்டிகை யுரையாசிரியர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப்புலவராக இருந்தோருள் பெரும்பாலார்

அவ்வாறு மாறுபட்ட தமிழ் உரைநடையே கைக்கொண்டு எழுதினார். மேனாட்டிலிருந்து இங்கு வந்து தமிழ்ப் புலமையெய்தினோர் ஆகிய போப்பையர் என்பார் தமிழ்மொழிக்காகச் செய்த அருப்பெருந் தொண்டுகள் பலவே. ஆயினும் அவர் இயற்றிய தமிழிலக்கணத்தினும், உரைகளிலும் மொழி பெயர்ப்புக்களினும், தமிழ் நடை இலக்கண முறைமைக்கு ஒவ்வாதன வாய்க் காணப்பட்டனவும் பலவே. ஆங்கிலத்தில் 'Give me ten or eight' என்றுள்ள தொடர் மொழியைத் தமிழில் மொழி பெயர்க்குங்கால் 'பத்தேனும் எட்டேனும் எனக்குத் தா' என்றலே தமிழ் உரைநடை. 'பத்து அல்லது எட்டுத் தா' என்றலே இக்காலத்து மொழி பெயர்ப்பு முறை. ஆங்கிலக் கலாசாலைகளிலே சிறந்த தமிழ்ப் புலவராக வீற்றிருந்தாருள்ளும் பெரும்பாலர் இவ்வாறு எழுதினார். அவர் 'அல்லது' என்னும் சொல்லிலக்கணமும் அச்சொல்லின் முடிபு பிழைத்தலும் நோக்காராயினர். இவ்வாறு அவரால் தமிழ் உரை நடை பிழைப்புற்றன மிகப்பல. அவற்றையெல்லாம் ஈண்டுக் காட்டப்புகின் இவ்வுரை மிக விரியும். இது நிற்க, வடமொழிகள் வடசிறப்பெழுத்துக்களது உருவம் திரிக்கப்படாமலே தமிழில் விரவிவர வழங்கலுற்றதும் இவ்விடைப்பட்டகாலத்தே தான். ஒருவர்க்கொருவர் எழுதும் ஓலை யென்பது திருமுகம் என்னும் பெயர் படைத்து உலாவியது ஒழிய, கடிதம் என்ற பதம் தோன்றியதும், அத்திருமுகத்தின் தொடக்கத்தில் மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய என்றாற்போல எழுதும் வழக்குத் தோன்றியதும் இக்காலத்தே தான். இவ்வழக்கைத் தமிழ் நூலுரைகளிலும் புகுத்தாத புலவர் யாவர்?

(தொடரும்.)

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௪	ஆங்கிரச, ஆவணி.	மலர் ரு.

தஞ்சை, திருச்சி ஜில்லாத்

தமிழ்ப் புலவர் மகாநாட்டிற்குத்

தலைமை வகித்த

திருவாளர். கா. நமச்சிவாய முதலியார்

நிகழ்த்திய

விரிவுரை

அருந்தமிழ்ப் புலவீர்,

இன்று, இப்புலவர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க நேர்ந்த சிறப்பினைக் குறித்து யான் பெரிதும் மகிழ்கின்றேன். அது, தலைமை வகிக்கும் பெருந்தன்மையால் அன்று; என் உற்ற நண்பராகிய, திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் எனக்கு எழுதிக் கேட்ட காலத்தே, அரும் புலவராகிய உங்களையும், பெருந்தகையராகிய மற்றையோரையும் கண்டு களிக்க நேர்ந்த நல்வினையை நோக்கியே யாகும்.

உங்களுக்கு யான் எடுத்துக் கூறும் செய்திகள் ஒரு சிலவே யாம். அவை, உங்களுக்கு முன்னரே தெரிந்திருப்பினும் இருக்கலாம். முற்றும் தெரியாதவற்றை எடுத்துரைப்பது அத்துணைச் சிறப்புடையதன்று. தெரிந்தவற்றைக் கொண்டே தெரியாதனவற்றை விளக்கிக் காட்டுதல் சாலச் சிறந்த முறையாகும்; அவ்வகையில், தமிழ்மொழி யெழுச்சியின்பொருட்டு எனக்குத் தோன்றிய சிலசெய்திகளை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கல்வி, செல்வம், ஒழுக்கம்முதலிய நல்லியல்புகளில்உயர்ந்து விளங்கிய ஒருவனுக்கு மகனாகப் பிறந்தவன், அவ் வியல்புகளில் இழி நிலைமை யுடையவனாயின், தன்னை, இன்னார்மகன் என்று வெளிப்படத் தெரிவித்துக்கொள்ளாமையே சிறப்பாகும். அது போல, பண்டைக்காலத்தே எந்நாட்டினும் சிறந்து விளங்கிய நந்நாட்டின் சிறப்பைப்பற்றி, இந்நாளில் இழிதகைமை யெய்தியுள்ள நாம் எடுத்துப்பேசி மகிழ்வதில் யாதும் பயனின்றாம்; ஒருவாறு நாம் அனைவரும் ஒத்துழைத்து முற்கால நிலைமையை அடைவோமாயின், இக்காலத்தில் நாகரிகம் பெற்ற நாடுகளின் ஒரு மூலையிலாயினும் நிற்க இடம் பெற்று வாழக் கூடும்; இக்கால நாகரிகங்களுள் நல்லவற்றைக் கைக்கொண்டு முன்னுக்கு வர முயல்வோமாயின், பெரிதும் சிறப்புற வாழலாம். இரண்டும் இன்றி, இடை நிலையில் நிற்போமாயின், இடைப்பட்டவரே யாவோம்.

முற்காலத்துச் சிறப்பியல்புகளில் முக்கியமானவை; ஜாதி மத வேற்றுமை இன்மை; ஆடவரும் பெண்டிரும் தம்முள் மனமொத்து, மணம் புரிந்து, மகிழ்ந்து வாழ்ந்தமை; பெண்டிரும் கல்விகற்று, புலமைவாய்ந்திருந்தமை; புலவர் மாந்தராலும் மன்னராலும் போற்றப்பெற்று வாழ்ந்தமை; பெண்டிர் வீரமுடையராய் விளங்கினமை; மாந்தர் அக்கால நிலைக்குவேண்டிய கருவிகளைக் கொண்டு கைத்தொழில் புரிந்தமை; திரைகடலோடி வாணிகம் செய்தமை; மக்கள் வீரத்தோடுபோர்புரிந்தமை வீர மக்களுக்குக் கல் நட்டமை; போர் செய்யும் முறைமை யறிந்

திருந்தமை; இவை முதலிய பலவாம். இக்காலத்தே மேற் கண்ட செயல்களுக்கு மாறான செயல்களே நம்மிடத்து நடை பெறுகின்றன. அத்தகைய நல்லியல்புகள் நம்மிடத்து ஒரு சிறிதேனும் இக்காலத்தில் இருக்குமாயின், நாம் நலம்பெற்று நாகரிகமுற்று வாழலாமே! அவையெல்லாம் மாறி, தன்னலமும் தற்புகழ்ச்சியும் கொண்டு, நாம் இவ்வுலகில் இடம் பெறாமல் ஏங்கி யிருத்தல் அழகோ?

நண்பர்களே, புலவர் மகாநாடு என்றால், புலவர்களும் பண்டி தர்களும் கூடிய பெருங்கூட்டமாகும். இவர்களுள் சிலர், கல்விச் சாலைகளிலும் கல்லூரிகளிலும் பண்டிதர்களாக இருப்பவராவர். சிலர், தமிழையே தம் வாழ்நாள் முழுதும் கற்றுத் தேர்ந்த அறிஞராவர். அதனால்தான் பொதுப்பட, புலவர்மகாநாடு என்று இம் மகாநாட்டுக்குப் பெயரமைத்திருக்கலாம் போலும்.

இனி, பண்டிதரோ இக்காலத்தே பலரும் வெறுத்து, இழிவு படுத்திக் கூறும் நிலையில் நிற்கின்றனர். வடநாட்டில், பண்டிதர் என்பது ஒரு பட்டப்பெயராகச் சிறப்புற விளங்க, இந்நாட்டில் அஃது இழிவுபட்டு வழங்கக் காரணம் என்ன? பல வுள; 1. தந்தை, தான் கல்வி கற்றபோது இருந்த பண்டிதரைப் பழித் துரைக்கக் கேட்டு, அவன் பிள்ளையும் அதே முறையை அனு சரிப்பது; 2. அங்கிலம் கற்றோர் பலர் பண்டிதரை வெறுத்து, இழித்துக் கூறப்புகுந்தமை; 3. பண்டிதர் தாமே தம்மை இழித் துக்கொண்டு, பிறர்பால் எளிமையாகப் பேசுதல்; 4. பாடசாலை மாணக்கரிடம் பண்டிதர் பரிவுகொண்டோ அல்லது அடங்கியோ பேசி, வகுப்பை அடக்கும் முறை அறியாது மயங்கி நிற்றல்; 5. பண்டிதர் தம் பெருமைகளைப் பலகாலும் எடுத்துப் பேசி மாணக்கர் நகையாட நிற்றல்; 6. பண்டிதர் சம்பளக் குறை வினால் மற்றையோர் இழித்துக்கூற, மாணக்கரும் அவரோடு சேர்தல்; இவை முதலிய பலவாம். இக் குற்றங்களுட் பெரும் பாலன, அங்கிலம்கற்றோரிடத்தும் காணப்படுதல் வெளிப்படை. ஆயினும், அது, பண்டிதரிடத்துப் பெரும்பான்மையும், அங்கிலம் கற்றோரிடத்துச் சிறுபான்மையும் அமைந்துள்ளமை பலரும்

அறிவர். மேற்காட்டிய குற்றங்களெல்லாம் சில யாண்டுகளுக்கு முன்னர் இருந்த பண்டிதரிடத்துக் கூறலாமே யன்றி, இக் காலத்துப் பண்டிதரிடத்து அவற்றையெல்லாம் ஏற்றிக்கூறுவது மிகையாகும். பண்டைய வழக்கம் பற்றி இக்காலத்தே சில பண்டிதர் உளர் என்பது உண்மை. தமிழையே தம் பயனாகக் கொண்டு கல்வி யறிவு சான்ற புலவர் பலர் இக்காலத்தே விளங்கு கின்றனர். அவர்கள் நாகரிகம்பெற்ற நன்னடக்கை யுடையவர். அவர்கள்பால் குற்றங்கூற அத்துணை நியாயம் இல்லை.

அன்பர்களே, நம் நாட்டில் செல்வர்களா யிருப்பவர்கள், அல்லது துரைத்தனத்தார், அல்லது மடாதிபதிகள் முதலியோர் மேற்கண்ட குறைகளை நீக்க, இப்பண்டிதர்களுக்குச்செய்ததுணை தான் என்ன? பண்டிதரோ ஓர் ஆசிரியரை யடுத்து, அவர்வழிப் பட்டு, அவர் சொன்னதைச் செய்து, வாவென வந்து, இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப் படித்தவர். ஆக, அவர், தம் வாழ்நாளில் கண்ட ஆசிரியர் ஒருவரேயாவர். அவரது குணத்திற் பழகிக் குறிப்புரைகளைக் கொண்டவர். அங்கிலம் கற்றவர்களோ எனின், பற்பல பாடங்களைப் பற்பல ஆசிரியர் கற்பிக்கப் பற்பல வாறு கற்றவர். திரம் மிகுந்தவர்; ஆசிரியரை நோக்கி ஐயங்களைக் கேட்டு நீக்கிக்கொள்பவர். ஆசிரியரோ சம்பளம் பெறுவதனால் ஒருவாறு அடக்கி விடை சொல்லக் கடமைப்பட்டவர். தமிழா சிரியரோ எனின், தடுத்துக் கேட்டால், 'தக்ஷணமே சுவடியைக் கட்டிவை' என்பர். அங்கிலம் கற்போருக்கு அத்துணைச் சிறப் பியல்புகளிருந்தும் போதாமல், அவர்கள் போதனைமுறைக் கலா சாலையில் ஓராண்டுபயின்று பரிக்ஷையில் தேறுகின்றனர்; பட்டம் பெறுகின்றனர். கீழ்த்தரப் படிப்புள்ளவர்க்கும் அத்தகைய ஏற்பாடு உண்டு. அந்தோ! நம் தமிழ்ப் பண்டிதர்களுக்குக் கைகொடுக்க ஒரு செல்வர் இல்லையே! ஒரு மடாதிபதி இல்லையே! துரைத்தனமும் துணை செய்ய வில்லையே! என்ன செய்வது? இப்பொழுதுதான் அண்ணாமலை யூனிவர்ஸிடியில் சிறிது ஆதரவு கிடைத்திருக்கின்றது.

நெடுங்காலமாக விளங்கிவரும் சென்னைச் சருவ கலாசாலை இவ்வகையில் சிறிதும் ஊக்கங் கொள்ளாமல் கைசோர விட்டிருப்

பது தமிழ்மொழி செய்த தவக்குறையே யாகும். சென்னை யூனிவர்ஸிடியார் இதைக் கவனித்து, தமிழ்மொழி முதலான நாட்டு மொழிகளுக்கு வித்வான் கலாசாலையும் போதனை முறைக் கலாசாலையும் விரைவில் ஏற்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன். இக்குறைவை யெண்ணியெண்ணிப் பண்டிதர்களும் புலவர்களும் வாளா இருந்துவிடலாகாது. தமிழன்னையின் மக்களாகிய தமிழ்ப் புலவர்கள், தமதன்னையை, பற்பல வகையான நூல்கள் எழுதியும் ஆராய்ச்சிகள் செய்தும் உண்மைகளை யுணர்ந்தும் அவ்வாடை யணிகளால் அழகுபெறச்செய்து, விளங்கச்செய்தல் வேண்டும். அவற்றிற்கான முறைகள் எவை?

மேல்நாடுகளில் புதப்புதுக்கருத்துக்கள் தோன்றுகின்றன; புதுப்புதுபொறிகள் வெளிவருகின்றன; புதப்புதுஆராய்ச்சிகள் கிளைக்கின்றன. அவ்வகைகளில் நாமும் முயன்று தேர்ச்சி பெறல்வேண்டும். கடலையடுத்த நாட்டில் வாழ்பவர் கடல்மேற் செல்லப் பின்வாங்கார், மனஞ்சலியார் என்பது ஓர் உண்மை. அவ்வகையில் தமிழ்மக்கள் பண்டைக் காலத்தில் ஒருவாறு சென்றனரேயன்றி, பின்னர் அம்முயற்சி வரவரக் குறுகி அழிந்து ஒழிந்தது. நம்முடைய வீரமும் தீரமும் நாளடைவில் அழிந்து ஒழிந்தன. 'பந்திக்கு முந்திக்கொள், படைக்கு பிந்திக்கொள்' என்னும் பழமொழியும் வழங்கலாயிற்று. இயற்கை நலன்களையும் இயற்கைப் பொருள்களையும் வியந்து பாடியபுலவர் இக்காலத்தே வெற்றுரைகளைக் கூட்டிச் செய்யுள் செய்து வியப்புறுகின்றனர். இவையெல்லாம், இனி வேண்டவே வேண்டா. நமது தமிழ்நாடு—நமது இந்தியநாடு—இனி முன்னுக்கு வரவேண்டுமாயின், புலவர்கள் எழுதல் வேண்டும். செய்யுள் என்றால் இயற்கைப் பொருள்களைப்பற்றி—இயற்கை இன்பங்களைப் பற்றிச் செய்தல் வேண்டும். அவரவர் கருத்துக்கள் நன்கு பொருந்தக் கதைகளை அமைத்து, உரைநடையாகவோ, செய்யுளாகவோ செய்தல் வேண்டும். சிறுவர்க்கும் சிறுமிகளுக்கும் இன்பமான இனிய எளிய பாட்டுக்கள் செய்தல்வேண்டும். தமிழ்மொழியின் மீதும் தமிழ் நாட்டின்மீதும் மாந்தர் மனம் செலுத்தி வியக்கும் வண்ணம் புதுப்புதுப் பாட்டுகள் செய்தல்வேண்டும். பாடும் திற

முன்னோர் இவ்வாறு பற்பலவாகப் பாட்டுக்களைச் செய்வாராக! கருத்துக்கு ஏற்ப இசைகளைக் கூட்டுதல் வேண்டும். அவை இசைப்பாட்டாகவும் இருக்கலாம்.

உரைநடை எழுதும் வன்மை வாய்ந்தோர் பற்பலவான உரைநடை நூல்கள் எழுதல்வேண்டும். மோட்டார்கார், ஏரோப் ளேன், ஏர்ஷிப், எலெக்ரிஸிடி முதலியவற்றைப்பற்றிச் செய் யுள்கள் எழுதின் யாதுபயன்! இவை எல்லாம், உரைநடை நூல்களாக வெளிவருதல் நலம். சிறிது கற்றவர்களுக்கும் பெரிதும் பயன்படும்படி, சிறியவும் பெரியவுமான நூல்கள் வெளி வருதல் வேண்டும். பிஸிக்ஸ் கெமிஸ்ட்ரி முதலிய சாஸ்திரங் களில் மேலாகவாவது அறிவு வேண்டும். தீக்குச்சியைக் கிழித் துத் தலைகீழாகப் பிடித்தால் நன்றாக எரியுமென்று பலரும் அறிவர். ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டால் மட்டும் காரணம் சொல்லத்தெரிசாது. பஞ்சபூதங்கள் என்றால் இன்னவையென்று தெரியும். ஆயினும், அவை தனிப் பொருளோ, கலவைப்பொருளோ என்று கேட்டால் சொல்லத் தெரியாது. இதுவரையில் கண்டுபிடித்துள்ள தனிப்பொருள்கள் எத்தனை என்றாலும் சொல்லத்தெரியாதே! நம்மவர், கிரகங்கள் ஒன்பதே என்பர். இக்காலத்தே கண்டுபிடித்துள்ள கிரகங்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை என்று சொன்னால் சிரித்துப் பரி காசம் செய்வர். சூரியனுக்கும் ஒளி கொடுக்கும் கிரணங்கள் உண்டென்றும், சூரிய கிரணங்களைப் பிடித்து இரவில் மின்னொளி விளக்குக்கள் வைக்கப் போகிறார்கள் என்றும் சொன்னால் உங்களுக்கு வெகு வியப்பாக இருக்கும். முடிவில் இதெல்லாம் ஆகுமோ என்பீர்கள். இவற்றை எல்லாம் கொஞ்சம் கொஞ்ச மாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாத தன்றோ?

பண்டிதர்களா யிருப்பவர்கள்—புலவர்களா யிருப்பவர்கள் இலக்கிய இலக்கணங்களையேயன்றி, உலகத்தில் வழங்கும் சாஸ்திர ஞானத்தையும் கொஞ்சமாவது பெறுதல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் நூல்கள் வெளி வருதல் வேண்டும். இக் காலத்தே விஞ்ஞான சாஸ்திரங்களை எழுதப் புகுவோர், சிறு

நூல்களை எழுதுவதை விட்டு, பெரு நூல்கள் எழுதுவதாகப் பாவித்துத் தாறுமாருக எழுதுகின்றனர். இஃது அங்கிலம் படித்தவர்கள் செய்யுங் குற்றம். இம்மட்டோ? பிழையான சொற்களையும், பிழையான வாக்கியங்களையும் அமைத்து, மிகும் இடங்களையும், மிகாத இடங்களையும் தெரியாமல் எழுதி விடுகின்றனர். அதைக் கண்டால் தமிழ் கற்றவர் அருவருத்துத் தள்ளுகின்றனர். அவற்றையே பண்டிதரைக்கொண்டு செய்தாலோ, கடின சொற்களையும், கடின சந்திகளையும் அமைத்து, கற்போர்க்கு விளங்காதவாறு செய்து விடுகின்றனர். இரண்டிடத்தும் இடர்ப்பாடுதான்! இதற்கு என்ன செய்வது?

அங்கிலம் கற்ற விஞ்ஞான சாஸ்திரியும் தமிழ்ப்புலவரும் ஒன்றுகூடுதல் வேண்டும். சாஸ்திரி, விஷயத்தைச் சொல்ல வேண்டும்; பண்டிதர் தெளிவான உரைநடையில் எழுத வேண்டும்; புத்தகம் எழுதி முடிந்தபின் அவ்விருவர் பெயராலும் அது வெளிவருதல் வேண்டும்; ஊதியமும் இருவர்க்கும் உரித்தாதல் வேண்டும். அவ்வாறின்றேல், அங்கிலம் கற்றவரேனும் தமிழுங்கற்று தமிழ்ப்புலவராதல் வேண்டும். அல்லது, தமிழ்ப் புலவரேனும் அங்கிலங்கற்று அங்கிலப்புலமையடைதல் வேண்டும். இவ்வளவும் செய்தால் தான், நந்தம் தமிழ்மொழி தலையெடுத்து விளங்கும்.

இப்போது சென்னை யூனிவர்ஸிடியார், புதிதாகப் புஸ்தகம் எழுதுகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாக ஏற்பாடு செய்திருக்கின்றனர். அது, இக்காலத்து விஞ்ஞான சாஸ்திரங்களைப் பற்றியாவது, ஆராய்ச்சியைப் பற்றியாவது, சரித்திர ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றியாவது, இன்டெர்மீடியேட் வகுப்புக்குப் பாடம் வைக்கத் தக்கதாக இருக்கவேண்டும் என்கின்றனர். ஆயிரம் ரூபாய் பரிசளிப்பது அவர்கள் கடமை. புஸ்தகத்தின் உரிமை எழுதுவோர்க்கே உரியது. பாடமாக வைக்கப் பெற்றால் அதன் பயனும் ஆசிரியருக்கே உரியது. ஆதலால், பண்டிதர்களுக்கும், அங்கிலம் கற்றவர்களுக்கும் இஃது ஒரு பேராதரவாகும். அதனுல், யான் மேற்சொன்னபடி இருவரும் ஒத்துழைத்தால் ஏற்ற ஊதியம் பெறலாம். இவ்வகையில்

நமது நாட்டிலுள்ள செல்வர்களும், மடாதிபதிகளும் உதவிசெய்வார்களானால் நலமாக இருக்கும். அஃதாவது—புதிய புதிய நூல்களை எழுதுவோர்க்குப் பெருந்தொகை பரிசளித்தால், பெரும் பயன் விளையுமன்றோ. அண்ணாமலை யூனிவர்ஸிடியாரும் தருக்க சம்பந்தமாக நூல் எழுதுவோர்க்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாக வாக்களித்திருக்கின்றனர். திருப்பனந்தாள் மடத்துச் சுவாமிகளும் வித்வான் பரிக்ஷையில் முதன்மையாகத் தேர்ச்சியடைகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளித்துவருகின்றனர். இவ்வாறே மற்றைய மடாதிபதிகளும் செய்வார்களாயின் எத்துணை நலமாயிருக்கும். அவர்கள் சமய சாஸ்திரங்களோடு விஞ்ஞான சாஸ்திரங்களும் விரவி வரும்படி செய்தல் சிறப்பாகும்.

அன்றியும், கோயில்அதிகாரிகளும் இவ்வகையில்முயலுதல் வேண்டும். பெரிய கோயில்கள் ஒவ்வொன்றையும் அடுத்து ஒரு பாடசாலை அமைக்கலாம். இப்போது, ஆரம்ப பாடசாலைகளில்சிலவற்றை ஒன்றுசேர்த்து, செலவைக் குறைக்கத் துரைத்தனத்தார் முயல்கின்றனர். நமது நாடோ, கல்வியிற் குறைவானது; கீழ்ப்பட்டது. நாகரிகம்பெற்ற நாடுகளில் எத்தனைபேர் படிக்கவில்லையோ அத்தனைபேரே நமது நாட்டில் படித்தவர்கள். இங்கிலந்து முதலிய மேல்நாடுகளில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்கு நாலைந்து பேருக்கும் குறைவாகும். ஜப்பான் தேசத்தில் நூற்றுக்குப் பத்திலும் குறைவாகும். நமது நாட்டிலோஎன்றால், எழுதப்படிக்கக் கற்றவர்களின்தொகை நூற்றில் பத்துக்கு மேற்படாது. இக்குறையைக் கண்டால், கோயில்களை அடுத்துப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்பது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்றோ. ஆதலின், பெரியபெரிய கோயில்களை அடுத்துப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று ரிலிஜஸ் எண்டோளமேண்ட் போர்டார் வற்புறுத்துவது, அவர் தம் கடமையாகும். தமிழ்மொழி மேலும் மேலும் தழைத்தோங்க வேண்டியாயின், கல்வியைப் பரப்புதற்கே ஏற்பட்டுள்ள மடாலய கர்த்தர்கள் ஆங்காங்கே பாடசாலைகளையும், கலாசாலைகளையும், கல்லூரிகளையும் அமைப்பது தம் முதற்கடமையாகக் கொள்ளவேண்டும். இவ்வகையில், கிறிஸ்தவப் பாதிரி

மார்கள் நடத்திவருதலை நாம் கவனித்து மேற்கொள்ளவேண்டும். கல்விநலம் தழைத்தால், பிறநாடுகளின் நாகரிகஉணர்ச்சி பெருகி, புதுப் புதுக் கருத்துக்களும், விஞ்ஞான சாஸ்திர விஷயங்களும் நூல்வாயிலாக வெளிவருமன்றோ?

பண்டிதர்களுக்கு யதேச்சை வேண்டும். ஆனால், அஃது, அகங்காரமும், அடக்கமின்மையும் அணுகினதாக—கலந்ததாக இருத்தல்கூடாது. யதேச்சை ஓரிடத்தில் பெருமையும், ஓரிடத்தில் சிறுமையும் அடைகின்றது. செல்வன் குற்றமுள்ள ஒன்றைச் சொன்னாலும் மற்றையோர் அது செல்வச்செருக்கென்று சொல்வதை விட்டு, 'தீரமுள்ளவன், வீரமுள்ளவன், அஞ்சாதவன், நல்லதோ கெட்டதோ எதையும் துணிந்து தெடுத்துச் சொல்பவன்' என்று புகழ்ந்து கூறுவர். ஏழ்மையான பண்டிதன் நல்லதொன்றைத் துணிந்து சொல்வானாயின், அவன் கர்வி என்றும், செருக்குள்ளவன் என்றும், பேச அரியாதவன் என்றும், என்னதான் உண்மை சொன்னாலும் அவைக்கு அடங்கிப் பேச வேண்டாவோ என்றும் இழித்துக் கூறுவர். இஃது உலக இயல்பு. அதனால், கல்வியோடு செல்வமும் சிறிது சேர்ந்திருத்தல் வேண்டும். பண்டிதர்களின் நிலை இவ் வகையில் மாறுபடுகின்றது. அனேக உயர்தர பாடசாலைகளில் பண்டிதருக்குச் சம்பளம் முப்பது ரூபாய். இருபத்தைந்தே உள்ள பாடசாலைகளும் உள. இவர்களைக் கண்டால் மற்றவர்களுக்கு ஏளனம். இல்லாதவன் பொல்லாதவன்' என்பதும், 'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆதலின், பண்டிதர்களது நிலைமை உயரவேண்டும். அங்கிலம் படித்த ஒருவர் ஆரம்பத்திலேயே 75 ரூபாய் சம்பளம் பெறவும், பண்டிதர்கள் அந்தச் சம்பளத்தை எட்டிப் பார்க்கவும் பெறாத நிலைமையில் இருப்பது என்னே? கொஞ்சம் உயர்ந்த சம்பளம் தரும் திரிசிராப்பள்ளி ஜில்லாபோர்டையும், கோயம்புத்தூர் ஜில்லாபோர்டையும் என் மனமார வாழ்த்துகின்றேன். அவர்களும் ஒரே நிலையான சம்பளத்தை ஏற்படுத்துவார்களானால், இன்னும் நலமாக இருக்கும்.

அஃதாவது, எல். டி., பரிசைஷயில் தேறினவர்களுக்கும், பண்டித பரிசைஷயில் தேறிப் போதனா முறையில் பயின்றவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் சம்பளம் அமைப்பதே சிறந்த முறையாகும். யான் சொல்லுவது சற்று யோசித்தால் உத்தமம் என்பது எவருக்கும் புலப்படும். இதைக் கேட்டவுடனே சிலருக்கு—அங்கிலங் கற்றவர்களுக்கு—டிஸ்ட்ரிக்டு போர்டு பிரஸிடெண்டுகளுக்கு — பண்டிதர்களுக்கு அவ்வளவு சம்பளமா? அவ்வளவு ஆசையா! என்று தோன்றக்கூடும். ஆயினும், ஒரு காலத்தே பண்டிதர்கள் சரிவரச் சம்பளம்பெறுவார்கள் என்பது திண்ணம். இப்போது தலைமைப்பண்டிதர்களுக்கு ரூ. 50 முதல் ரூ. 80 வரையும், இரண்டாம் பண்டிதருக்கு ரூ. 40 முதல் ரூ. 60 வரையுமாவது திட்டம் ஏற்படுத்துதல் முறையாக இருக்கும். இதனைக் கல்வித்துறைத்தனத்தாரும் டிஸ்ட்ரிக்டு போர்டு பிரெஸிடெண்டுகளும் பெரிதும் கவனிப்பாராக! 'குறைந்த சம்பளத்துக்கு நிறைந்த புலமைவாய்ந்த பண்டிதர்களும் வருகிறார்களே! நாங்கள் ஏன் அதிக சம்பளம் கொடுத்து இவர்களை அமைத்துக் கொள்ளவேண்டும்' என்று சிலர் கேட்கின்றனர். இந்தக் கேள்வி எந்த உத்தியோகத்துக்குத்தான் பொருந்தாது? ரூ. 3000 கொடுக்கிறோம் என்றால் ஹைகோர்டு ஜட்ஜுகள் வரமாட்டார்களா? ரூ. 25—30 கொடுத்தால் போதும் என்று வருகிற பி. ஏ.க்கள் எத்தனை பேர்? வறுமைப்பட்ட நாள்களில் இத்தகைய குறைபாடுகள் இருக்கவே கூடும். என்னுடைய கட்சி அஃதல்ல. ஒரே பாடசாலையில் ஒரே நிலையில் உள்ள உபாத்தியாயர்களுக்கு ஏற்றத் தாழ்ச்சியான சம்பளம் ஏற்பாடுவானேன் என்பது ஒன்றேயாம். S. S. L. C. பரிசைஷயில் இப்போது அங்கிலத்தையும் தேச பாஷையையும் ஒரே நிலையில் நிறுத்தி, ஒரே முறையில் பார்க்கின்றனர். அவ்வாறிருக்க, அவற்றைக் கற்பிக்கும் உபாத்தியாயர்களின் சம்பளத்தில்மட்டும்வேற்றுமை ஏற்படுத்துவானேன்? சம்பளமட்டும் உயருமாயின் பண்டிதர்களும் பரீதச்சையுற்று விளங்குவார்கள் என்பது உண்மை.

நண்பர்களே, பண்டிதர்களாகிய உங்களுக்கு ஒன்று சொல்லுவேன். உண்மையை உறுதிபடக் கூறும் வன்மை வேண்டும்.

அதாவது, உண்மை கண்டு உண்மையை உரைத்தலாகும். எஃது உங்களுக்கு உண்மை என்று தோன்கிறதோ அதே உண்மையாக உரைத்தல் வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுதல் கூடாது. அந்நிலையே சிறந்த நிலை. சில இடங்களில் தலைமை உபாத்தியாயர்கள் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன். அதாவது—'எங்கள் பண்டிதர் ஒன்றும் சொல்வதில்லை. கேட்டால் மயங்குகிறார்; இதைப்பற்றி உங்கள் கருத்து என்னவென்றால், "அங்கே எப்படியோ அப்படித்தான்" என்கிறார் என்பது முதலியனவாம். இஃது ஒரு வகையில் உண்மையாக இருப்பினும், ஒரு விஷயத்தைப் பற்றித் தலைமை உபாத்தியாயர் தாம் சார்ந்திருப்பதாக குறிப்புக் காட்டி, 'இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்றால், துணிவுஇல்லாத பண்டிதர் அப்படித்தானே சொல்ல வேண்டிவரும். புஸ்தகங்களைத் தேர்ந்து பாடமாக அமைப்பதில் இவ்விஷயத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்; உண்மை விளங்கும்.

மற்றொரு குறை உங்கள் மேல் ஏற்றிக் கூறுவதுண்டு. அஃதாவது, வகுப்பை நடத்தும் முறை பண்டிதர்களுக்குத் தெரியாது என்பதாம். பிள்ளைகள் அடங்குவதில்லை, பண்டிதர் பிள்ளைகளுக்கு பயப்படுகிறார் என்பதுமாம். யான் முற்கூறியது போலப் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு வழிவழியாக வந்த எளனத்தினால் இஃது ஒருவாறு பொருந்தும். ஆயினும், இக்காலத்தே பெரும்பாலான பண்டிதர்களுக்குப் பிள்ளைகள் அடங்கியிருத்தல்போல மற்றையோர் வகுப்பில் இல்லை என்பது பலரும் அறிவர். பண்டிதரிடத்து எளிமைத்தன்மை காட்டும் குணம் விட்டொழிந்தால், மேற்கண்ட குறைபாடுகளெல்லாம் அறவே விட்டொழியும். இதற்கும் பெரும்பாலும் சம்பளக் குறைவே காரணமாகும்.

இனி, பாடம் சொல்லும் முறையைப்பற்றி சிறிது சொல்லுவேன். பண்டிதர்களுக்குப் பெரும்பாலும் செய்யுட் பாடத்திலேயே இஷ்டம் அதிகம். ஏனெனில், தாங்கள் சிறு வயதில் கற்ற பாடங்களே பெரும்பாலும் பாடமாக அமைக்கப்படு

தலின், அவற்றைத் தம் மனம் போனவாறே கற்பித்து விடலாம் என்பதாகும். உரைநடைப் பாடங்கள் கதை ரூபமாக அமைந்திருந்தால் பண்டிதர் மனதைக் கவரும். அதற்கும் மேற் கூறியதே காரணமாகும். விஷய உணர்ச்சியும் விஞ்ஞான சம்பந்தமான பாடங்களாகவும் இருப்பின், அவருக்கு அத்துணை விருப்பம் இராது; காரணம், ஒருமுறை இருமுறை பார்த்தாலொழிய அவற்றைப் பாடஞ்சொல்ல இயலாது. ஆதலின், பண்டிதர்கள், எவ்வித எளிய பாடமாயினும் அதை எந்த முறையில் கற்பித்தால் நலமாக இருக்குமென்று உய்த்துணர்ந்து கற்பித்தல் வேண்டும். சில புலவர்கள் இம் முறையை இக் காலத்தே பெரிதும் ஆதரித்து வருகின்றனர். பாடங்களை ஒரு முறை வீட்டில் பார்ப்பது தம் புலமைக்குக் குறைவென்று எண்ணும் எண்ணம் சில பண்டிதர்களுக்கு உண்டு. கல்வி நிலையில் சிறந்து விளங்கிய பெரும் புலவராகிய, டாக்டர். மில்லர்துரை அவர்களும், அன்றுடம் தாம் போதிக்கவேண்டிய பாடங்களை வீட்டிலேயே பார்த்து வருவார்; தாம் எத்தனையோ முறை முன்னரே படித்துப் போதித்த பாடங்களாயிருப்பினும், அன்று பார்க்க அவகாசமில்லாவிடில், வகுப்பில் வந்து, 'மாணவர்களே, உங்கள் பாடத்தை யான் இன்று வீட்டில் பார்க்கவில்லை; அதனால் இன்று உங்கள் பாடத்தை நடத்த வல்லேனல்லேன். பழைய பாடங்களைப் படியுங்கள்' என்பது வழக்கமாம்.

அத்தகைய மேதாவியே, அவ்வாறு சொல்லியிருப்பாராயின், நாம் அவ்வாறு செய்வதில் இழிவு உண்டாவது எங்ஙனம்? உவப்பும் உல்லாசமும் உண்டாகும்படி கற்பிப்பதே சிறப்பாகும். அதுவே தாய்மொழியில் மாணக்கர்களுக்கு இன்பம் உண்டாகச்செய்யும் சிறந்த வழியாகும். பாடங்களைப் போதிக்கையில் உண்மைகண்டு உரைத்தலையே உபாத்தியாயர் தம் கொள்கையாகக் கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாக, 'நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங்காலத்தில்' என்னும் செய்யுளைப் போதிக்கையில், நண்டு கருவுயிர்த்தால் இறந்துபடுகிறதா என்ற விஷயத்தை உணர்ந்து சொல்லவேண்டும். அக்காலத்து இருந்த

அறிஞர்கள் கண்ட உண்மை அது; இக்காலத்தில் உள்ள விஞ்ஞானசாஸ்திரிகள் அதன் உண்மையை உணர்ந்து அஃது இறந்துபடுகிறதில்லை என்கிறார்கள் என்று சொல்லவேண்டும். குளவி, புழுவைத் தன்னினம் ஆக்குகிறது என்பதன் உண்மையையும் விளங்க உரைத்தல்வேண்டும். ஞானசாஸ்திரத்தில்கூறியிருக்கும் உதாரணமாயிற்றே; அதை எப்படிப் பொய்யென்று சொல்லுவது! என்று நழுவ விடக் கூடாது. காலம் செல்லச்செல்ல ஆராய்ச்சி மிகும். ஆராய்ச்சி மிகவே உண்மை வெளிப்படும். ஆகவே முன்சொன்னவர்கள் கண்ட உண்மை அது; பின் வந்தவர்கள் ஆராய்ந்து சொன்ன உண்மை இது என்று பிள்ளைகளுக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

இனி நன்றி கூறுவேன்; தமிழ்த் தொண்டையே தம் தொண்டாகக் கொண்டுள்ளவராகிய, திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களுக்கும், வரவேற்புப் பத்திரம்வாசித்த திரு. வேங்கடசாமி நாட்டாரவர்களுக்கும், இம்மகா நாட்டைத் திறந்து வைத்த பண்டிதமணி. கதிரேசஞ் செட்டியாரவர்களுக்கும் இம் மகாநாட்டைச் சிறப்பாக நடத்திய மற்றைத் தமிழ்ப் பெருமக்களுக்கும், இப்பேரவைக்கண் வந்து குழுமியிருக்கும் புலவர் பெருமக்களுக்கும் என் உளமார்ந்த வணக்கம் உரியதாகுக.

நண்பர்களே, இதுவரையில் யான்சொல்லிவந்த விஷயங்கள் மிகை என்று தோன்றுகிறது. ஏதோ சில விஷயங்களை எடுத்துச் சொல்லாவிட்டாலும் மகாநாடு நிறைவுபெறாது. தலைமை வகிப்பவர் தம்முடைய கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது ஒரு முறை. உங்கள் எல்லாரையும் என் எதிரில் கண்டு, உங்களோடு கூடிக் குலாவி இன்பமடைவது ஒன்றே எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. யான் உங்களில் ஒருவன் என்பதை மட்டும் உங்கள் உள்ளத்தில் கொள்வீர்களாயின் அதுவே யான் பெற்ற பெரும்பேறு என்பதை ஒரு நாளும் மறவேன். இப் புலவர் மகாநாடு இனிது வாழ்க! இது போன்ற மகாநாடுகள் ஆங்காங்கே எழுந்து ஓங்கி என்றும் நிலவுக! தமிழ்ப் புலவராகிய நமக்கெல்லாம் இன்னருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக!

உ

துறையூர் தஞ்சை—திருச்சி ஜில்லா

தமிழ் மாணவர் மகாநாட்டின்

வரவேற்புத் தலைவர் திருவாளர்

K. C. M. வெங்கடாசல ரெட்டியார் அவர்கள்,

நிகழ்த்திய

வரவேற்புரை.

பெரியோர்களே, தமிழ் மாணவர்களே!

இந்த நாளில் உங்கள் அனைவர்களையும் ஒருசேர இங்கு சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். இம்மகா நாடு இதற்குக் காரணமாக இருப்பதால், முதலாவதாக அதற்கு நன்றி செலுத்தக் கடைப்பட்டுள்ளேன். இக்காலத்தில் நிகழ்ந்து வரும் உலக நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக இருப்பன ஜன சமூகத்தின் அபிப்பிராயங்களே ஆகும்.

முற் காலத்தைப்போல எவனே ஒருவன் சொல்லும் சொல்லை எவரும்கேட்டு அதன்படி நடப்பது என்பது இக் காலத்தின் நெறியல்ல. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும், அதை நிலைநாட்டவும், நிறைவேற்றவும் விரும்புகின்றனர். அவ்வாறு தனித்தனியே, ஒவ்வொருவரு மனிதனுடைய அபிப்பிராயத்தைக்கேட்டு நடப் பது என்பது அசாத்தியமாகையால், பலருடைய அபிப்பிரா யத்தை ஏககாலத்தில் தெரிந்துகொள்வதற்கே மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. இவ்வாறு கூட்டப்படும் மகாநாடுகள் பெரும்பாலும், நற்பயன்களையே அளித்திருக்கின்றன. பல அரசாங்கத்தினரும், தனிப்பட்ட அரசாங்கத்தினரும், தங்கள் தங்கள் காரியங்களை மகாநாடுகள் வாயிலாகவே முடிவு செய்து வருகிறார்கள். தற்காலத்தில் அன்னிய நாடுகளில், மகாநாடு முடிவு செய்யாத விவகாரமே கிடையாது என்று ஒருவாறு துணிந்து கூறலாம்.

நம்முடைய நாட்டிலோ ஜனங்கள் ஒன்றுகூடி, தன்னயம் கருதாமல் பொது விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து அபிப்பிராயங்கள் கூறுவதென்பது ஒருபுதிய செயலாகவே எண்ணப் படுகிறது. ஒரு கிராமத்திலோ, ஊரிலோ, செல்வாக்குடையவன் ஒருவன், அறிந்தோ, அறியாமலோ ஏதேனும் ஒரு அபிப்பிராயத்தைக் கூறினால் அவ்வபிப்பிராயத்தையே மற்றவர்களும் பின்பற்றுவதென்பது நீண்டகாலமாக இருந்துவரும் வழக்கம். சமீபகால முதற்கொண்டுதான் இவ்வழக்கம் சிறிது சிறிதாகத் தளர்ந்து ஒழிய ஜனசமூக அபிப்பிராயம் தலைதூக்கிவர ஆரம்பித்துள்ளது. அதற்கு இம்மகாநாடே ஒருசான்றாகும்.

நம் நாட்டில் மகாநாட்டு உணர்ச்சி என்னும் வித்து இப்பொழுதுதான் முளைக்க ஆரம்பித்து உள்ளது என்றே கூறலாம். அம்முளை நன்றாக வளர்ந்து பயன் தரும்படியாகச் செய்விப்பது நம்மவர்கள் கடமையாகும். மேல் நாட்டில் மகாநாடுகளுக்குப் பிரதிநிதிகளாக வருவோர் தாங்கள் பேசப்போகும் விஷயங்களை பற்றி திர ஆலோசித்து முடிவு செய்துகொண்டு வருவர். மகாநாட்டில் விவாதம் நடக்கும்பொழுது தங்கள் கருத்துக்களை ஒழுங்காகவும், கோவையாகவும், ஆதாரங்களுடனும் எடுத்துக் காட்டுவர். பிறர் ஒருவர் தாம்கூறிய விஷயங்களில் குறைகள் இருந்து எடுத்துக் காட்டினால் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுவதற்கு ஒருபொழுதும் பின்வாங்க மாட்டார். தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்கும் தன்மை மகாநாட்டிற்கு ஒவ்வாத ஒரு செயலாகும். இது போன்ற இன்றியமையாத விஷயங்களை நம்மவர்களும் கைப்பற்றி நடப்பார்களானால், எண்ணிய பயன்களை மகாநாடுகளின் மூலமாக எய்தலாம் என்பதில் ஐயமில்லை.

நம்முடைய நாட்டில் வயதுமுதிர்ந்த பெரியோர்கள் கூட்டங்கள் கூடி, விஷயங்களைப் பற்றித் தீர்மானிப்பது சகஜமே. ஆனாலும், மாணவர்கள் மகாநாடு நடைபெறுவது ஓர் அருகிய செயலென்றே சொல்லலாம். அதைக்காட்டிலும் 'தமிழ் மாணவர் மகாநாடு' கூடுதல் என்பது ஓர் புதிய செயலென்றே சொல்லலாம்.

தமிழ் மாணவர் மகாநாடு என்ற சொற்கள் எனக்கு இரண்டு விதமான பொருள்களை ஞாபகப்படுத்துகின்றன. ஒன்று:— தமிழ் நாட்டிலுள்ள மாணவர்களின் மகாநாடு என்பது. இரண்டாவது:—தமிழ் மொழியைக்கற்கும் மாணவர்களின் மகாநாடு என்பது. ஆக இவ்விருவருக்கும் ஏற்புடைத்தாக இம்மகாநாடு இருக்குமென்று எண்ணுகின்றேன்.

தமிழ் மாணவர் என்ற நிலையில் இருப்பவர், இவ்வயதில் இருப்பவர், அல்லது இவ்வயதிற்கு உட்பட்டவர் என்று சொல்லமுடியாது. எவரெவர் தமிழைப் பேணிப் படிக்கின்றார்களோ, அவரவர்கள் அனைவரும் தமிழ் மாணவர்களே ஆவர். இக்காலத்தில் தமிழ்கற்கும் மாணவர்கள் நிலையைப் பற்றியும், அவர்களுக்கு நேர்ந்துள்ள சௌகரிய அசௌகரியம் பற்றியும் ஆராயாமல் இருப்பதற்கில்லை. தமிழ் மாணவர்கள் கலாசாலையில் சிற்சில பரிக்ஷைகளை உத்தேசித்து தமிழைக்கற்கும் மாணவர்களாகவும், தமிழினிடத்து ஆர்வங்கொண்டு தக்க ஆசானிடத்தில் தமிழ்கற்கும் மாணவரென்றும் இருவகைப்படுவர். கலாசாலையில் கற்கப்படும் தமிழைப்பற்றியும் அதற்கு ஏற்பட்டுள்ள பாடபரிக்ஷை திட்டங்களைப்பற்றியும் கவனிப்பதற்குப் பற்பல கூட்டங்கள் உண்டு. அவைகளிலுள்ள குற்றநற்றங்களைப் பற்றி இம்மகாநாடே ஆய்ந்து தேர்ந்து தீர்மானிக்கவேண்டும். முற்காலத்தில் ஓர் தனித்த ஆசானிடத்தில் தமிழ்கற்ற மாணவனுக்குள்ள அசௌகரியங்கள் இக்காலத்தில் தமிழ் கற்கப் புகுபவனுக்கு இல்லையென்றே கூறலாம். பிறருக்கு பல நூல்களையும் எடுத்து போதிக்கவல்ல நல்லஆசிரியர்கள் ஏககாலத்தில் ஒரு ஜில்லாவிற்கு பத்துபேர்கள் இருந்தார்கள் என்றுகூட கூறமுடியாது. புத்தகங்களோ, ஏடுகளில் எழுத்தாணியால் எழுதப்பட்டுப் பொன்னினும் அரிதாகக் கிடைக்கும். ஏட்டுச் சுவடி வைத்திருந்தவர்கள், தங்கள் உயிரைக் கொடுப்பதற்கு ஒருப்பட்டாலும், ஒரு சுவடியைக் கொடுப்பதற்கு ஒருப்படமாட்டார்கள் என்று கூறுவர். முற்காலத்தில் தமிழ்நாடு முற்றும் சுற்றித்தேடிப்பார்த்தாலும், கம்ப இராமாயணச் சுவடி நூறு பிரதிகள் இருந்திருக்குமா வென்பது சந்தேகம். இனி

சங்க நூல்களைப்பற்றி சொல்லவே வேண்டுவதில்லை. ஒரு மாணவன் ஒரு சுவடியைப்பார்த்து பிரதிகள் செய்துகொள்வதென்றால் அவன் வாழ்நாளில் ஒரு பாகம் அதற்கே போய்விடும். பிறகு ஆசிரியரை அடுத்து, அவர் சமயம்பார்த்து குற்றங் குறை அணுகாமல் கற்பதற்கே இருந்த நிர்பந்தங்கள் பல.

இக்காலத்தில் கற்கும் மாணவனுக்கு இருக்கும் சவுகரியங்கள் பலவென்றே கூறலாம். எந்தெந்த நூலைக் கற்க விரும்புகின்றானோ அந்தந்த நூலை அப்பொழுதப்பொழுது பெற்றுக் கொள்ளலாம். ஒரு நூலைப்பற்றி பலர் எழுதிய அபிப்பிராயங்களையும் உரைகளையும் ஒரு சேர வாசிக்கலாம். ஒரு நூலிலே தேர்ச்சிபெற்ற பலரிடத்துஞ் சிறிது காலத்திற்குள் சென்று தங்கள் ஐயங்களை எல்லாம் களைந்து கொள்ளலாம். இத்தகைய பலவசதிகளிருந்தும், இக்காலத்தில் காவியம் பாடும் கம்பரைப் போலவோ, நிந்தை பாடும் காளமேகத்தைப் போலவோ, கற்பனை கூறும் சிவப்பிரகாசரைப் போலவோ, மொழி பெயர்ப் பாற்றல் படைத்த சிவஞான முனிவரைப் போலவோ, இனிய நடையில் திரிபும், யமகமும் கூறும் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரைப் போலவே, புலவர்கள் இல்லாமலிருப்பதற்கு காரணம் புலனாகவில்லை. இம்மகாநாடு இவ்விஷயத்தைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய நலமுண்டாகுமென்று கருதுகின்றேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் மொழி வளர்ச்சியைப் பொறுத்திருக்கின்றது. முன்நாளில் நம்நாடு இருந்த நிலை வேறு இந்நாளில் நம் நாடு இருக்கும் நிலை வேறு. இக்காலத்தில் அயல் நாட்டு நாகரிகங்களும், கலையுணர்ச்சிகளும், சிறிது சிறிதாக நம் நாட்டில் பரவத் தலைப்பட்டுள்ள இக்காலத்தில் நம் முன்னோர்கள் மனதாலும் எண்ணியறியாத புதுமைகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. நம்முன்னோர்கள் ஒரு மாத காலத்தில் செய்த பிரயாணத்தை இப்பொழுது நாம் ஒரு நாளில் செய்கிறோம். ஏதோ ஓர் இடத்தில் அமைக்கப்பட்ட பொறியின் வன்மையால் ஓர் ஊரிலுள்ள இருட்டையே ஓட்டி

ஒளியைப் பெறுகிறோம். சரீரத்தினுள் உண்டாகி புறக் கண்ணுக்குப் புலனாக சிறு புண்ணையும் மின்சார உதவிகொண்டு தற்பொழுது வைத்திய நிபுணர்கள் காண்கிறார்கள். அலை யினால் அலைக்கப்பட்டு கடல் நீரால் நனைந்து சிறு படகுகளிலும் பாய் கப்பலிலும் சென்ற பிரயாணம் போய், ஆட்டங்களோடும் பாட்டுகளோடும் மிதக்கும் மாளிகைகளில் கடலில் சஞ்சரிக் கிறார்கள். நிலத்தில் இடம் பெறாத மாந்தர் முப்பது அடுக்கு கள், நாற்பது அடுக்குகள் என்று சொல்லக் கூடிய மாடிகள் கட்டி, விண்ணுலகத்தை தொடப் பார்க்கின்றார்கள். செத்தவன் பாடிய பாட்டையும், இருந்தவன் வேறு இடம் பாடும் பாட் டையும், ஒருவன் ஒரே இடத்திலிருந்து கொண்டு கேட்பதற் கேற்ற வசதிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருவன் தன் கண் முன்பாகவே கையையோ காலையோ சேதிக்க அவ்வுணர்ச்சி யறியாதவாறு இருப்பதற்கேற்ற மருந்துகளைக் கண்டுபிடித்து உபயோகிக்கிறார்கள். இன்னும் இவைபோன்ற விசித்திரங்கள் இக்காலத்தில் எண்ணிறந்தன உள. இன்னும் நாளேற ஏற நம்முடைய காலத்திலும் நம்முடைய சந்ததியார் காலத்திலும் உண்டாகக் கூடிய அற்புதங்கள் எத்தனையோ?

இவ்வாறு தோன்றும் அற்புதங்கட்கெல்லாம் அடிப்படை யாக இருப்பன பல சாஸ்திரங்கள் உணர்ச்சியும், ஆராய்ச்சியுமே. மேல்நாட்டில் ஒவ்வொரு சாஸ்திரத்தை பற்றியும் ஒவ்வொரு வாரத்திலும் வெளிவரும் நூல்கள் பல. நம்முடைய கண் ணுக்கு முன் புலனாகும் சூரியக் கதிரைப்பற்றி நம்மவர்களில் பெரும்பாலார்க்கு என்ன தெரியும்? ஒன்றுமே தெரியா தென்று கூறலாம். சூரியக் கதிரில் எத்தனை வர்ணங்கள் உண் டென்றும், அவ்வர்ணங்களின் இயல்பு என்னவென்றும், அக் கதிரால் உலகில் நிகழ்ச்சிகள் எவைகள் என்றும் நம்மவர் அறிவரோ? மேல்நாட்டில் ஒளி என்பதைப்பற்றி எத்தனை புஸ்தகங்கள் எழுதி இருக்கின்றார்கள். அப்புஸ்தகங்களில் சொல்லும் விஷயங்களில் நூற்றில் ஒரு பங்கை நம்மவர்களுக்கு எளிதில் விளக்கக் கூடிய புஸ்தகம் ஏதேனும் தமிழ் மொழியில்

உண்டோ? என் அறிவிற்கெட்டிய வளவில் இல்லை என்றே எண்ணுகின்றேன். இவ்வாறே ஒளி, வெப்பம், தட்பம், மின்னொளி முதலியவைகளைப்பற்றி தமிழர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடிய நூல்களும் இல்லை என்றே கூறலாம்.

தமிழ்மொழி வளர்ச்சியுற்று தமிழ்நாடு முன்னேற வேண்டுமாயின், பல கலைகளைப்பற்றிய நூல்கள் எல்லாம், வெளிவர வேண்டும். இதைப்பற்றி முக்கியமாக ஆராய்ச்சி செய்ய வேண்டுவது இம்மகாநாட்டின் கடமையாகும்.

தமிழ் மாணவர்களின் மனோநிலையும் அவர்கள் நோக்கமும், ஒருவாறு திருத்தமுற வேண்டுமென்பது என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம். பஞ்ச காவியங்களையும், பதினெண் கீழ் கணக்கு நூல்களையும், பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளையும், பாரத, இராமாயண நூல்களையும், அந்தாதி, கோவை, முதலிய பிரபந்தங்களையும், படித்தலே தமிழ் அன்னைக்குச் செய்யும் பெருந் தொண்டாக எண்ணிவிடக்கூடாது. அவைகளில் விற்பத்தி பெறுவதோடு, முன்னைய தமிழர்களின் வாய்மையும், சுதந்திரத்தையும், அஞ்சா ஆண்மையையும், அவர்கள் கைக்கொள்ள முயலவேண்டும். நாளொன்றிற்கு ஒருரூபாய் கிடைத்து விட்டால் போதுமென்ற எண்ணம் போய், மணிக்குக் குறைந்தது ஒருரூபாய் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாக வேண்டும். ஜனசமூக வாழ்க்கை என்பது வேறு, துறவி வாழ்க்கை என்பது வேறு. ஜனசமூக வாழ்க்கையில் இருப்பவன், அச்சனசமூகம் அறிவிலும், பொருளிலும் எவ்வாறு விருத்தியடையக்கூடும் என்பதை யோசித்து யோசித்து, அதற்கு ஏற்ற முறைகளில் முயற்சிக்க வேண்டும். "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளுக" என்ற மொழிகள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் உங்கள் கண்ணுக்கு முன்பாக நிற்க வேண்டும். இவ்வாறு நம்மனப்பான்மையை மாற்றிக்கொள்வதற்கு ஏற்ற முறைகளை இம்மகாநாடு ஆராயவேண்டும். இது போன்ற பல விஷயங்களை ஆராய்ந்து முடிவு செய்வதற்கே, நீங்கள் இங்கு கூடியுள்ளீர்கள்.

இத் துறையூரிலிருந்து இயங்க நிற்கும் இம் மகாநாடாகிய மரக்கலத்தை திரைகளாலும், திடல்களாலும், மலைகளாலும், அழிவுறாமல் நடத்தித்தருவதற்கு நல்லதோர் மீகாமனைப் பெற்றுள்ளிர்கள். அவர்தான் எனது நண்பராகிய திருவாளர் கலியாணசுந்தர முதலியாராவர். அவர் தலைமையின் கீழ் இம் மகாநாடு வெற்றியுறுமென்று நம்புகிறேன். மீண்டும் உங்களை மிக்க மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

துறையூர், திருச்சி ஜில்லா

தமிழ் மாணவர் மகாநாடு

திறப்பாளர்

திருவாளர் இராவ் சாஹிப்

C. M. இராமச்சந்திர செட்டியார் B.A., B.L.,

அவர்கள் இயற்றிய

விரிவுரை.

அன்பார்ந்த ஐயன்மீர்,

மெய்ப்பொருள் திருவருளினால் இதுகாறும் அறியாமையால் மயங்கி உறங்கிக்கிடந்த நம் தமிழ் மக்கள் அப்பெரும் உறக்கத்தினின்றும் விழித்து தாம்அடைந்துகிடக்கும் நிலையை அறிய முயல்கிறார்கள். தாம் உறங்கின நாட்கள் எல்லாம் ஏனையோர்கள் விழித்திருந்ததினால் அடைந்துள்ள நன்னிலைமையைக்கண்டு தம் நிலைமைக்கு ஒப்பிட்டுப் பார்த்து துயர்

உறுகிறார்கள். இப்போதாவது விழித்துக் கொண்டோமே என்று மகிழ்ந்து இனிமேல் தாமதியாது கடந்த நாள் அடைய வேண்டியிருந்த முன்னேற்றம் முழுதும் கூடிய விரைவில் விடா முயற்சியின் பயனாக அடைவோம் எனும் உறுதிப்பாட்டை உட்கொண்டு வருகிறார்கள். இவ்வருமையான தாகம் ஒவ்வொருவர் நெஞ்சினும் ஊன்றிவருவதின் பயனாகவே இப்பெரும் கழகம் இங்கே கூடுகின்றது. எவ்விதக்கிளர்ச்சிக்கும் ஊக்கமே பெரிதும் வேண்டற்பாலது. ஊக்கமும் இளமையோடு சார்ந்தே உறவாடும். ஆகவே இளமைவாய்ந்த மாணவர் கூட்டுறவு இப்பெரும் இயக்கத்திற்கு இன்றியமையாததே. மாணவர்களின் ஒத்துழைப்பும் ஊக்கமும் தமிழர் கொண்டுள்ள இப்பெரும் இயக்கத்திற்கு உறுதியானதோர் வெற்றியைத் தருமன்றோ?

இளைஞர் இயக்கம்.

தற்காலத்தில் பற்பல நாட்டார்களும் அடைந்துவரும் வளமைகளின் வரலாறுகளை நாம் ஆராயுங்கால், அவர்கள் எல்லாம் இளைஞர்களின் ஊக்கத்தாலும், பேரன்பினாலுமே முன்னேற்றம் அடைந்தனர் எனக்கண்டுகொள்ளலாம். கிழக்கே ஜப்பானியரும் சீனரும் முற்போக்கு அடைவதற்கு அவரவர்களின் இளைஞர்களே காரணம் அன்றோ. மேற்கே, துருக்கியரும் எகிப்தியரும் முன்னேறுவதற்கு அவர்களில் இளைஞர் இயங்கின நிலையன்றோ. இனியும் முன்னேறியுள்ள ஏனைய நாடுகள் எவ்வாறு முன் வந்துள்ளன? இதை ஆராயுங்கால் நம் தமிழரினும் இளைஞர்களே முன்னேற்றத்திற்கு ஊன்றுகோல்களாக இருக்கத்தக்கவர்கள் என்று அறியவேண்டும். இளைஞர்களில் வலிமை இருப்பதொன்றே இவர்கள் புரியக்கூடியஉதவிக்கு ஒரு சாதகம் என்று நாம் ஆறுதல் அடையக்கூடாது. வெறும் வலிமை எவ்வியக்கத்தையும் நன்முடிவுக்குக் கொண்டு செலுத்தாது. அறிவின்பாலபட்ட வலிமையே சிறந்த உதவி ஆகும். அவ்வறிவைத்தேடும் இளைஞர்களே மாணவர்கள் ஆவார்கள். ஆகவே அத்தகைய மாணவர்களால் ஒத்துழைக்கப்பட்ட எந்த இயக்கமும் வெற்றிதரும் என்பதில் ஐயம் இல்லை. எனவே, மாணவர்கள் தமிழர் முன்னேற்றம் என்ற இப்பெரும் இயக்கத்தில்

ஈடுபட்டு ஊக்கத்துடன் வேலைசெய்ய முன்வந்திருப்பது மெச்சத்தக்கதோர் நற்குறி ஆகும். இதுகாறும் உறங்கிக் கிடந்த நம் பெரியோர்கள் இனி நம் இளைஞர்களின் இனிய முறுவல் வாய்ந்த முகங்களைக்கண்டு அக மகிழ்ச்சியுடனும் முக மலர்ச்சியுடனும் நற்குறிகண்டு இனி நாம் கொள்ளும் செயல்கள் இனிதே முடியும் என்ற உறுதியும் நம்பிக்கையும் கொண்டு முன்னேறுவார்கள் என்பதில் தடையில்லை. அவர்கள் கொள்ளும் நம்பிக்கைக்கு ஏற்றபடி மாணவர்களும் என்றும் விடா முக மலர்ச்சியுடன் இயங்குவார்களாக.

அன்றும், இன்றும்.

தமிழர்கள் உறங்கத் தொடங்கினதற்கு முந்தி எவ்வாறு இருந்தனர், உறங்கி விழிக்கத்தொடங்கும் இக்காலத்தில் எவ்வாறு இருக்கின்றனர், என்ற இரு தோற்றங்களையும் கூர்ந்து நோக்குவது பயன்தரத்தக்கதோர் ஆராய்ச்சியாகும். ஆனால் ஒரு சிலர் பண்டைப் பெருமைகளைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை, இனி நடக்கப்போகும் செய்கைகளையே ஆராயவேண்டும் என்பர். அக்கொள்கை சரியே; என்றாலும் நம் பண்டை முறைகளை நடந்தபடி அறியாவிடில் இனி நடக்க இருக்கும் முறைகளை வெற்றிதரத்தக்கபடி நாம் கையாள முடியாது. ஆகவே பண்டை வரலாறும் ஆராயவேண்டியவைகளில் ஒன்றாகும். தமிழர் உறங்கினதற்கு முந்தி படிப்பு முறைகளை ஆராய்ந்து தேர்ச்சிபெற்று அகத் தத்துவங்களுக்கு இணங்க அதன் இலக்கணங்களை நன்கு வகுத்திருந்தனர். தற்காலத்தில் கல்வி முறைகளில் தேர்ச்சிபெற்ற மேற்கத்திய நாட்டார்களோ அக்காலத்தில் கல்வி என்னும் பதத்தையும் அறியாத காட்டுமிராண்டிகளாக இருந்தனர். அவ்விதம் உன்னத நிபுணத்துவம் வாய்ந்த தமிழர்களோ தற்போது 100-க்கு 90 விழுக்காடு எழுத்துவாசனை அறியாத அறிவிலிகளாக இகழப்படுகிறார்கள். உலகமெல்லாம் புகழப்பெற்ற ஆராய்ச்சிகளைக் கொண்ட அவர்களது தமிழ்மொழியோ அவர்கள் மக்களாலும் அவர்கள் போற்றும் பல்கலைக் கழகத்தார்களாலும் புறக்கணிக்கப்பட்டு நிற்கின்றது. மேற்கத்திய நாடுகளில் அரசியல் தத்துவத்தை அறியாது தடிபெடுத்தவன் தண்டக்காரன் என்ற

முறையில் கொலை களவு புரியும் வாள்வீரர் கையில் அடங்கியிருந்த முற்காலத்தில் நம் தமிழர் அரசியல் தத்துவங்களை நன்கறிந்து ஆறங்கம் கொண்ட குழுவினர் மதிமொழிக்கேற்ப மன்னர்கள் செங்கோல் செலுத்தி வந்தனர். தற்காலத்திலோ தமக்கென்று தன்னரசு இன்றி பிறரரசிலும் பெரும்பதவி கிட்டும் வகையின்றி சீர்குலைந்து தவிக்கின்றனர். வாணிபத்தில் சிறந்து விளங்கும் பல நாட்டார்கள் வாணிபத்தின் பொருளும் அறிந்திராத பண்டைக் காலத்தில் தமிழ்ப் பெருமக்கள் நெடுந்தூர நாடுகளுக்குக் கலங்கள் ஏறிச்சென்று "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற மொழிகளுக்கிலக்காக பல பொருள்களிலும் பெரும் வர்த்தகம் செய்துவந்தனர். தற்காலம் நகரத்தார் தவிர ஏனையோர் கப்பல் ஏறுவது என்றால் பெரும் பாவமாக நினைக்கின்றார்கள். இந்த மூளைச்சிதைவு என்று வந்ததோ, எவ்வாறு தோன்றிற்றோ? முற்காலத்தில் நாட்டு அன்பில் ஈடுபட்டு அதன் பெருமையை பிற நாடுகளுக்கு சென்று புகுத்தியும் பொருளாதார விரிவை எண்ணி பிற நாடுகளைப் பிடித்தும் குடியேற்றினதும் இப்போது நினைத்தால் கனவு கண்டதுபோல் ஆகிவிட்டது. இது உண்மையோ என்றும் நம் பெரியார்கள் ஐயமுறவும் கொள்வார்கள். சாவகம், பலி, கம்போடியா என்ற தீவுகளுக்கும் நாடுகளுக்கும் அழைத்துக்கொண்டு சென்று காட்டினாலொழிய இவைகளை நம்புவார்களா? நம் முன்னோர்கள் ஒருமொழி, ஒருவகுப்பு, நீதியின்பாற்பட்ட ஒரு சட்டம் இவைகளைக்கொண்டிருந்தார்கள் என்றால், பல மொழிகள், பல ஜாதிகள், பல சமயங்கள், இயற்கை நீதியினை உருட்டித்தள்ளும் பல சட்டதிட்டங்கள் இவைகளைப் புகுத்தப்பெற்றிருக்கும் நெல்லிக்காய் மூட்டையினர் ஆகிய தற்காலத் தமிழர் தம் முன்னோர்களின் கொள்கைகளை எவ்வாறு அறிவார்கள்? தன் கணவன் போர்க்களத்தில் எய்போல விழுந்து உயிர்விட்டதைக் கேட்ட பெண்மணி தன் கொங்கையில் பால் அருந்தும் மகனை பிடித்து முன்னிறுத்திக் கச்சுக்கட்டி வாளைக் கையில் கொடுத்து போர்க்களத்திற்குச் செல்லும்படி கட்டளையிட்ட இந்நாட்டில் பட்டாசு வெடி என்றால் பத்தடி பயந்தோடும் நிலைக்கு வந்துவிட்டோமல்லவா?

இத்தனை மாறுபாடு எவ்வாறு வந்தது? நமது உறக்கம் இத்தனை இழிவினைத் தந்துவிட்டதா? இனியாவது இப் பெரும் உறக்கத்தினின்று எழுந்திருங்கள், விழியுங்கள், நோக்குங்கள், அறியுங்கள், ஊக்கம் கொள்ளுங்கள், செய்கைகள் முயலுங்கள், செய்கைகள் செய்யுங்கள்!

படிப்பு முறை.

படிப்புமுறையில் நந்தமிழர்கள் ஆழ்ந்துகிடக்கும் இழிந்த நிலையை நாம் பன்னிப்பன்னி பேச வேண்டியதில்லை. அளவிறந்து நெருங்கி வாழும் நம் நாட்டினர்க்குள் 100க்கு 90 பேர் தம்பெயரை எழுதும் அதி அற்புதச்செயலை இதுகாறும் அறியார்கள் அல்லவா? இத்தன்மைய பண்டித சிரோமணிகள் பட்டி மண்டபம் ஏறுவதெப்படியோ? எத்தனைப்பேர்கள் இக்குறையினாலே விவகாரத்திலும் இழிந்த சனங்களின் சதிகளிலும் சிக்கி பொருள், நிலை, சாந்தம் இவைகளை இழந்து கெடுகிறார்கள். நாட்டிற்கும் வீண் பாரமாக நிற்கிறார்கள். இவ் வஞ்ஞான இருட்டைப் போக்கி அறிவு என்னும் ஒளியைத்தருவது நம் நாட்டு மாணவரின் கடமையன்றோ? இதை நினைத்தே நம் நாட்டிற்கு வந்த முன் ஒரு ஆங்கிலன் பொறுக்கி எடுத்த சில மாணவர்களுக்குப் புதிய அறிவு முறைகளைக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று தாமாகவே ஏனைய நாட்டுப்புறத்தார்களுக்குத் தாம் கற்ற அறிவுச் சுடரின் ஒளியைக் கொடுக்கச் செய்வார்கள் என்று வீண் பிரமை கொண்டு உபதேசித்து அம்முறைகளைப் புகுத்தினான். ஆனால் நம் தமிழரிடம் அவன் முறைகள் பலிக்கவில்லை. இப்போது நமது நாட்டினர்க்குள் படிப்பு புகும் விகிதத்தைக் கவனித்தால் இன்னமும் 200 ஆண்டுகள் சென்றால்தான் தமிழர்கள் எல்லோரும் கையெழுத்துசெய்ய தெரிந்தவர்கள் ஆவார்கள்! இம் முறை நமக்கு ஏற்குமா, தமிழ்த்தாய்க்குப் பொறுக்குமா? ஐயன்மீர்! இம்முறைகளின் குறைகளை ஆராய்ந்து தெரிந்து அவைகளை நீக்கி விரைவில் படிப்பேறும் புது முறைகளைக் கைக்கொள்வது உங்கள் கடனல்லவா?

மொழிச் சிறப்பு அறிதல்.

தற்காலத்தில் அரும் பெரும் மொழிகள் எனப்பாராட்டப் படும் சில நாட்டு மொழிகள் எழுத்து வடிவம் பெறுதற்கு முன்பே தமிழ்மொழி பல துறைகளிலும் கலைகளிலும் தலை சிறந்து விளங்கிவந்தது. என்றாலும் தமிழ்மொழி பயிலும் நம் தென்னாட்டுப் பல்கலைக்கழகம் தமிழ்மொழியை வெகு ஆண்டு களாக சிறந்த மொழித் தொகுதிகளில் சேர்க்கக்கிடையாது. அக்கழகத்தின் கூட்டம் ஒன்றில் தமிழ்மொழிக்காக ஒரு ஆராய்ச்சிப் போதகரை ஏற்படுத்தவேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தின்போது ஒரு பிரசித்திப்பெற்ற உறுப்பினர் தமிழ்மொழியில் வல்லுநர் ஒருவரும் தென்னாட்டில் கிடையாது என்றும் தமிழ் நன்கு அறிந்த ஒருவர் பாரிசு நகரத்தில்தான் இருக்கிறார் என்றும் அவரைத் தருவிக்க முடியாததலால் தமிழுக்கு ஒருபோதகஸ்தானம் வேண்டிய தில்லை யென்றும் எதிர்த்தார். இவ்விதப்பேச்சும் பேசத்தக்க ஒரு அதோ கதியில் தமிழ் மொழி வந்து விட்டது பரிதவிக்கத்தக்கதே. தமிழ்மொழி ஆராய்ச்சிக்குப் பல்கலைக்கழகம் மாத்திரமேயன்றி பலஆராய்ச்சிக்கழகங்களும் நாடெங்கும் ஏற்படுத்தல் வேண்டும். அவைகளில் பெரும் போதகர்களேயன்றி பல ஆராய்ச்சி மாண வர்களும் பாடுபடல்வேண்டும். பாடுபட வேலை இல்லாமல் இல்லை. அப்பாடு படக்கூடிய வேலையை அறிந்தார்களில்லை, பாடுபடுவோர்களும் இல்லை என்பதே பெருங்குறைவு.

தமிழ் மொழிக்குத்தக்க ஆதரவு.

நம் தமிழர்க்குள் வறுமை மிகுந்துகிடக்கின்றது. ஏனைய நாட்டில் புலவர்கள் செல்வவான்களாகவும் பிரபுப்பட்டம் பெறு பவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆனால் நம்நாட்டிலே வறுமைப் பட்டம் பெற்றும் அதனை வெளியில் பிறர் மனம் கரையவும் எடுத்துக்காட்டும் நிலையில் இருக்கிறார்கள். புலவர்களே இந் நிலையில் வருந்தினால் மாணவர்களைப்பற்றிக் கூறுவானேன்? செல்வர்கள் மக்களுக்கு தமிழில் பற்றே கிடையாது. ஏழை மக்கள் சிறிது தமிழ் கற்றால் அதனை அபிவிருத்தி செய்ய அவர்கள் நிலைமை இடம்தராது. அவர்கட்கு உதவி புரியச்

செல்வர்களும் நிலையங்களும் அணுகார்கள். இது வெளிப்படை. ஏனைய நாடுகளில் செல்வர்களும் நிலையங்களும் மொழிப்பற்றி னாலே ஆர்வமிக்கு வேண்டும் அளவும் உதவி புரிய முன்வரு வார்கள். தமிழ் அபிவிருத்திக்கென்று ஏற்பட்ட நம் சமய நிலையங்கள் இவ்வகையில் எதுகாறும் உதவி புரிய முன் வருகின்றன? அந்நிலையங்கள் தக்க வழிகளில் நம் பொருள்களை பயன்படுத்தாவிட்டால், அவைகளை வற்புறுத்தியாவது பயன் படுத்தச் செய்தல் நம் கடமை அல்லவா?

மாணவர்க்கு உதவி.

ஆராய்ச்சி முறையில் பாடுபடும் மாணவர்களுக்கு அவர்கள் மூளையைச்சரியாக செலுத்தும் வல்லமையாவது நாம் தரல் வேண்டும். அதற்காக அவர்கள் உண்ண உணவும், உடுக்க உடையும் அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். பல் கலைக்கழகத்தாரும் மடாலயங்களையன்றி ஸ்தல ஸ்தாபன சங்கத்தார்களும் உதவி புரிய முன் வருதல் வேண்டும். வாணி பச் சங்கத்தார்களும் தம் இலாபத்தில் ஒரு பகுதி இப்புனித வேலைக்கு ஒதுக்கிவைத்தல் வேண்டும் ஊர்ச்சபையார்கள் முன் காலத்தில் நம் நாட்டில் கோயில் பரிபாலனத்திற்கும் சமயப் பிரசாரத்திற்கும் பாடசாலைகளுக்கும் உதவிபுரிந்ததாகக் கல் வெட்டுகள் புகழ்கின்றன. தற்கால ஊர்ச்சபைகள் இவ்வகை யில் எத்துணைப்பாடுபடுகின்றன? அவைகளின் வருவாய்களில் 100-க்கு 15 மடங்கேனும் கல்விக்கு ஒதுக்கி வைத்து, மாண வர்களின் உதவிக்காக ஒரு பெரும் பாகத்தை உதகரிக்கவும் முன்வரவேண்டும். நம் அளவிறந்த தேவாலயங்களில் இதற் காக ஏன் ஒருபாகம் நிறுத்திவைக்கக்கூடாது? தாசிக்கும் வேசிக்கும் பாணப்புகைக்கும் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியையாவது மீதம் செய்து மாணவர் படிப்புக்கு ஏன் தரல் கூடாது? பண்டைக் காலத்தில் இவ்வித அறம் ஆலயங்களால் நடத்தப்பெற்றதேயாம். இது ஒரு நூதனம் அல்ல, எந்தச் சமயத்தை அழிக்கக்கூடிய முறையும் அல்ல என்று தாழ்மை யுடன் கூறலாம். இந்தியன் ஒருவன் அமெரிக்காவில் உள்ள டாரண்டோ பல்கலைக்கழகத்தில் அவர்களுடைய கல்வி முறை

களை அறிந்து இந்தியாவில் அவர்கள் பெருமையை வெளிப் படுத்தும் எண்ணத்துடன் அந்த ஊர்ப்பல்கலைக் கழகத்தார் ஒரு பெருந்தொகையை சமீப காலத்தில் உதவி புரிந்தார்கள். ஒரு இந்தியனும் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டான். தமிழர் நாகரீகத்தை வெளிநாடுகளில் தெரியப்படுத்தும் பொருட்டு வெளிநாட்டு மக்களில் ஒருவருக்கு நம் தமிழர் உதவி செய்துத் தருவிக்க எண்ணமும் இவர்கள் மனதில் உதிக்குமா? ஆகவே மாணவர் உதவி வகையில் நம் தமிழரின் எண்ணம் எத்தன்மை யது என்று நாமே அறிந்து கொள்ளலாம். இதனை நன்னிலை மைக்கு மாற்றினாலொழிய நம் தமிழ்மொழி முன்னேறாது.

சரித ஆராய்ச்சி.

தமிழர்களோ பண்டைக்காலத்து நாகரீகம் வாய்ந்தவர்கள். அவர்களது இனிய தமிழ் மொழியோ இத்துணைப்பண்டையது எனக்கூறவுளவும் கிடையாது. ஆனாலும் அவைகளின் பண்டைய மேன்மையைக் காட்டக் கூடிய ஒரு தக்க சரித்திரமாவது வரலாறாவது இருக்கிறதா? கணக்கில்லாத பெரும் புலவர்கள் தமிழ் நாட்டில் தோன்றியும் ஒரு கவிசரிதத்தை எவரேனும் எழுதினார்களா? சமீபகாலத்தில் தோன்றிய தெலுங்கு, வங்கம், இந்தி, இம்மொழிகளுக்கு எத்துணைச்சிறந்த வரலாற்று நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னமும் அவைகளை காலத்திற்கேற்றபடி விருத்தி செய்ய எத்தனை சங்கங்கள் முன் வந்துள்ளன? அப்படியானால் தமிழ் மொழியில் சரிதம் எழுதக்கூடிய பொருள்கள் இல்லையோ என ஐயுறலாம். அதுவன்று, பல்லாயிரக்கணக்கான பொருள்கள் ஏடுகளிலும் கல்லெழுத்துகளிலும் மறைந்து கிடக்கின்றன. அவைகள் உண்டு என்ற ஒரு சிறு சங்கதியையும் தமிழர்க்கு மேற்கு நாட்டு நிபுணர்கள் சொல்லவேண்டி வந்தது. நம் ஆலயங்களில் இருக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டு களில் நம் நாட்டுச்சரிதம், நம்மொழிச் சரிதம் அழியாமல் கிடக்கின்றது. சமீபத்தில் நிலை பிறழ்ந்த அன்பினால் சில சமய அன்பர்கள் ஆலயங்களைப் புதுப்பிக்கும்போது சில கல்வெட்டுகளை அழித்துவிட்டார்கள். அன்னார் அவைகளின் உண்மையான மதிப்பை அறிந்தவர்கள் அல்ல. அவர்கள் புதுப்பிப்பதற்குச்

செலவழித்த இலட்சக்கணக்கான பணங்களும் அவர்கள் அழித்த ஒரு கல்வெட்டிற்கு ஈடாகாது. இது கிடக்க, இக்கல்வெட்டுகளை ஆராய்ந்து அறிந்து நம் நாட்டுச் சரிதத்தை வெளியிடுவது யாருடைய கடமை? நம் அருமை மாணவர்களின் கடமையே யாகும். அரசியலார்கள் சில உத்தியோகஸ்தர்களை நியமித்து கல்வெட்டுகளைப் பிரதி எடுத்துப் பதிப்பிக்கச் செய்துள்ளார்கள். அவர்கள் பிரதியெடுத்து பதிப்பித்துள்ளது 1900 ஆண்டுவரைக் குமே ஆகும். மற்றும் 5 ஆண்டுகளின் கல்வெட்டுக்கள் இன்னமும் அச்சில் இருக்கின்றன. ஆகவே சென்ற முப்பது ஆண்டுகளின் கல்வெட்டுகளும் மாணவர்களின் ஆராய்ச்சிக்குளட்டாமல் இருக்கின்றன. ஆனால் ஆந்திரர்களோ இத்தனை மந்த கதியை பொறுக்காமல் அரசியலாருடன் வாதாடி தாம் தனியாக பதிப்பிப்பதற்காக அனுமதி பெற்றிருக்கிறார்கள். கன்னடிய மொழிக்கு மைசூர் அரசியலார் வேண்டியமட்டும் உதவிபுரிந்து வருகிறார்கள். தம் நாட்டில் உள்ள சகல கல்வெட்டுகளைப் பதிப்பித்ததன்றி கல்வெட்டுகளில் கிடைத்துள்ள செய்யுள்களை கால வரிசையாகப் பதிப்பித்துள்ளார்கள். இதனாலே செய்யுளிலும் மொழியானது எவ்வாறு அபிவிருத்தி அடைந்தது எனக்கண்டு கொள்ளலாம். தமிழ் மொழிக்கோ இவ்வித உதவி புரிவார் ஒருவரும் இல்லை. சாசனப்பதிப்பு இலாகாவிலே தமிழ் நன்கு அறிந்தவர்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள். நம் தமிழ்ப் புலவர்களுக்கோ சாசனம் இன்னதென்றே தெரியாது. எட்டுப் பிரிதிகளில் உள்ள செய்யுள்களும் புலவர்களுமேயன்றி வேறு எதுவும் அறியார்கள். திருவண்ணாமலைக் கோபுரத்திலும், சிதம்பரச்சுவரிலும், திருச்சி மலைக் குகையிலும் அழகான செய்யுள்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன என்றால் அவர்கள் பிரமைகொண்டு நம்பவே மாட்டார்கள். ஆகவே நம் தமிழ்க் கவி சரிதத்தைச் செவ்வையாகவும் உண்மையாகவும் அறிய வேண்டு மென்றால் நம் மாணவர்கள் அரசியலாரை எதிர் பார்க்காது ஆலயங்களில் உள்ள கல்வெட்டுகளை தாமே படித்து எழுதவேண்டும். இதற்கு பேர் உதவி புரியக்கூடியவர்கள் அவ்வவ்வாலயத்து அதிகாரிகளேயாவார்கள். மேல் நாடுகளில் ஒவ்வொரு பண்டைச் சின்னத்திற்கும் ஒவ்வொரு சரித நூல் இருக்

கிறது. நம் நாட்டிலும் ஒவ்வொரு ஆலயத்திற்கும் உண்மைச் சரித நூல் வேண்டாமா? தலமான்மியங்களைக் கட்டிவைக்கும் காலம் வந்துவிட்டது. உண்மைச்சரிதம் புறப்படும் காலம் தோன்றிவருகிறது. இதனை வீண்போக்காமல் பயன்படுத்து வது நம்கடமை. மாணவர்கள் உதவி பெறுமல் அலையும் இக் காலத்தில் ஆலய நிர்வாகிகள் ஒவ்வொரு மாணவரை நியமித்து தம் ஆலயத்துச் சரிதத்தை ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்து வது நல் நோக்கமாகும். நம் பண்டிதப் பெருமக்களும் இந் நூதன முறைகளில் ஈடுபட்டு நாட்டு அன்பிற்கும் கைங்கரியத் திற்கும் தம் பொருள் வருவாயிற்கும் வழி தேடிக்கொள்வார் களாக!

புத்துயிர், புத்துணர்ச்சி உண்டாக்கல்.

இயற்கையின் அமைதியில் அசைந்து கொண்டிருப்பது, உயிர்; அசைவற்றிருப்பது இறப்பு; பெருகிக்கொண்டிருப்பது உயிர்; குறைந்துகொண்டிருப்பது அழிவு அல்லது இறப்பு. இவ்விதி உலகத்தில் ஒவ்வொரு நிலைக்கும் உண்டு தேசத்திற் கும் அத்தேசத்து மொழிக்கும் இதே விதிதான் அமையும். தமிழ் மொழியும் உயிருடன் நீண்டகாலம் இருக்க வேண்டும் என்னில் அது அசைந்துகொண்டும் பெருகிக்கொண்டும் இருக்க வேண்டும். அதாவது புது உணர்ச்சியும் புது எண்ணங்களும் ஏற்படவேண்டும். அவ்விதம் ஆனல்தான் புத்துயிர்தோன்றும். அவ்வித புத்துயிருக்குக் குறி புது எண்ணங்களுடைய நூல் களும் புது உணர்ச்சிகொண்ட செய்யுள்களுமே ஆகும். இவை இல்லாதவரையிலும் அல்லது குறைந்து வரும்வரையிலும் மொழிக்கு அழிவும் இறப்பும் தோன்றிவரும். தற்காலத்தில் நம் தமிழ்மொழி வளர்ச்சியைச் சிறிது கருதுங்கள். புதிய செய்யுள் ஏதாவது இயற்றப்படுகிறதா? அல்லது மாசிகைகளி லாவது புது உணர்ச்சிகொண்ட செய்யுள்கள் தோன்றுவது உண்டா? பாரதியாரைத் தவிர்த்து இதுவரை வேறு எப் பண்டிதர் இத்துறையில் ஈடுபட்டார்கள்? வங்கம், தெலுங்கு, இந்தி, மலையாளம் இவைகளில் பாருங்கள். புதுக்கவிகளும் புது நூல்களும் நாள்தோறும் பெருகுகின்றன. நமது மக்கள்

புது எண்ணம் எண்ண ஆற்றல் இல்லாதவர்கள் ஆகிவிட்டார்கள். புதுகதை, புதுகட்டுரை யாதாவது வெளிவருகிறதா? மற்ற மொழிகளிலிருந்து பொழுது போக்குக்காக எழுதும் நவீனங்களாகிய உயிரற்ற பதுமைகளையே நம் பண்டிதர்கள் சிருஷ்டிக்கிறார்கள். "மலரவன் ஒவ்வமாட்டா வண்டமிழோர் செய்யும் உயிருடன் கூடிய மாயாஉடம்புகள்" நம் நாட்டில் எங்கே செய்யப்படுகின்றன? ஆகவே தமிழுக்கு அழிவு காலம் வந்துவிட்டதா? நம் அருமை மாணவர்கள் வங்காளி மொழி அழிவுற இருந்த காலையில் புத்துயிர் தந்த வங்காளக்கவிச்சக்கரவர்த்திகள் போல நம் தமிழும் அழிவுறாமல் புத்துயிர் பெற ஏன் முன் வரக்கூடாது?

குறைவுகளை அறிந்து நீக்கல்.

இவ்விதம் ஆருயிர் பெற்று தமிழ்மாது சிறப்புடன் வளர்வதற்கு அவள்கொண்ட சில குறைவுகளை நீக்குவது அவசியம். நமது மொழி முற்றுப்பெற்ற மொழி என்று நாம் இக்காலத்தில் தற்புகழ்ச்சி செய்துகொண்டிருத்தலில் பயனில்லை. பண்டைக் காலத்தில் அதற்கேற்க சிறந்தே விளங்கிற்று. ஆனால் தற்காலத்தில் காலதேச வர்த்தமானங்களை யொத்து பல மாறுதல்கள் செய்தே தீரவேண்டும். ஜ, ஷ, ஹ முதலிய எழுத்துக்கள் இல்லாமல் இருந்து 100 ஆண்டுகளுக்கு முன்னர் நம் மொழியில் புகுத்தப்பட்டன. அதனால் மொழி தாழ்ச்சி அடைந்ததா? நூதன விஞ்ஞானப் பொருள்களை உணர்த்தும் சொற்கள் நம் மொழியில் இயற்றிச் சேர்க்கவேண்டாமா? விஞ்ஞான நூல்கள் ஆராய்வதற்கு இதர மொழிகளுக்கே ஏக வேண்டுமா? ஆங்கிலம் முதலிய முற்போக்குப் பாஷைகள் எவ்வாறு புதப்புதுச் சொற்களை ஏற்றுக்கொள்ளுகிறதோ அவ்விதமே நம் தமிழ் மொழியும் புதுச் சொற்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். பழைய முறைகளையே வைத்துக் கொண்டிருந்தால் நன்னூலார் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்று ஏன் சொல்லவேண்டும்? நம் பண்டிதர்கள் பழைய புராணங்களை மாத்திரம் ஓதிக்கொண்டிருத்தலை விட்டு புது முறைகளையும் தழுவவேண்டும். இந்தி மொழியார் நூதன

முறைகளைக் கையாட ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போலவே தமிழர்களும் ஒன்றை ஏற்படுத்துதல் வேண்டும். சமீபத்தில் தருமபுர ஆதீனத்தார் தம் ஆசிரியர்கள் இயற்றிய சித்தாந்த சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளிப்படுத்துவது மெச்சத் தக்க காரியமாகும். அவ்விதமே வேறு மொழிகளிலிருந்தும் அரிய நூல்களை தமிழில் ஆக்குவது போற்றக் கூடிய செயலாகும். ஏனைய ஆதீனங்களும் இவ்வரிய கைங்கரியத்தைக் கைக்கொள்ளுவார்களாக!

பல கலைகளையும் ஆராய்தல்.

சமயமும் இலக்கணமும் இலக்கியமுமே ஒரு மொழிக்கு ஏற்ற உருப்புகள் என்ற கொள்கை மாறவேண்டும். இம் மூன்றைத் தவிர தமிழர்கள் வேறு எந்த கலையைப்போற்றி னார்கள்? விஞ்ஞான சாத்திரங்கள், தொழில் நூல்கள், முதலான பல துறைகளில் ஏன் நூல்கள் பிறக்கவில்லை? இவை இல்லாத, வழி ஒரு மொழியும் சீரும் சிறப்பும் ஏற்காது. பூதத்வம், பூத நூல், உடல்நூல், ரசாயனம், ககோளம், வைத்தியம், கணிதம், உயிர்நூல், முதலிய பல இயற்கை நூல்களும், தர்க்கம், நியாயம், சட்டம் முதலான தத்துவங்களும் தமிழருக்கு இன்றியமையாத நூல்களாகும். இவைகளுக்குத் தக்கபடி மொழியை விரித்துக் கொள்ளல் அவசியம். நம் மாணவர்கள் இவ்விதப் புது நூல்கள் இயற்றுவதில் ஈடுபடவேண்டும். இவ்வாறு தமிழைப்பெருக்கி வரின் அம்மாது யாதொரு குறைவும் இன்றி சிறந்த அணி கலன்கள் அணிந்து 32 இலக்கணங்களும் வாய்ந்த யுவதியாக விளங்குவாள். அப்போது தான் வரந்தருவார் அருளிய 'தமிழ் மாது வளருகின்றாள்' என்ற வாக்கு உண்மையாகும்.

உடற் பயிற்சி.

நம் தமிழ் மாணவர்கள் தம் மூளைகளைப் பெருக்கி அறிவை விலாசப்படுத்திக் கொண்டிருந்தால் போதுமா? அவர்கள் உடம்புகளை யார் பார்த்துக்கொள்வது? உணவு பெறுவதன் சார் பாக இருக்கும் கூக்குரல் ஒன்றுண்டு. அதனை நம் பெரியார்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் ஆனால் உணவுமட்டும் இருந்தால்

போதுமா? உடலை நோயற்ற நிலையில் வைத்திருக்க முயல வேண்டாமா? ஒரு கோலுக்கு அங்கியும் தலைக்குட்டையும் அணிந்தால் தமிழ்ப்பண்டிதனுவான் என்ற நினைவு அடியோடு மறைய வேண்டும். ஆதிகாலத்தில் முன்வைத்த காலைப் பின் வாங்காது மார்பில் வேல் தாங்கி உயிர் துறந்த வீரர்களைப்போல் நம் மாணவர்கள் இருக்கவேண்டும்.

> "கல் நின்றுன் எந்தை கணவன் களப்பட்டான்
> முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று
> கைபோய் கணை உதைப்ப காவலன் மேலோடி
> எய்போல் வீழ்ந்தான் என் ஏறு"

என்று தன் மகனைக் குறித்து இக்காலத்தில் எந்த தமிழ்மாது உரையாடமுடியும்? உடலை வலப்படுத்துதலில் நம் மாணவர்கள் முற்காலத்து மக்களைப்போன்று உடற்பயிற்சி பெறல்வேண்டும்.

குறிக்கோள் கோள்ளல்.

எத்தொழில் செய்யினும் குறிக்கோள் ஒன்று அவசியமாக இருத்தல் வேண்டும். நம் தமிழர் குறிக்கோள் என்பதைச் சிறிதேனும் எண்ணுவாரில்லை. "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று அப்பர் பெருமான் நெஞ்சழிந்து உரைத்ததை நம் தமிழர் கவனித்தது கிடையாது. எத்தொழிற்கும் குறிக்கோள் கொள்ளும் காலையில் படிப்பிற்கும் அது இன்றியமையாதது எனக் கொள்ளல் வேண்டும். படிப்பினுடைய குறிக்கோள் "வால் அறிவன்நல் தாள் தொழல்" என்றார் நாயனர். இது உயிரின் மேம்பாட்டைக் குறித்தது. அதனை அடைதற்கு நம் ஒழுக்கம், நடை இவைகளைச் சீர்படுத்திக்கொள்ளல் வேண்டும். நம் தமிழ்ப்புலவர்கள் சிறுபான்மையோர் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் ஒத்துடைமை இல்லை என்று நடித்துக்காட்டுகிறார்கள். அப்படியாகில் மாணவர்கள் எவ்வாறு இவ்வுயரிய குறிக்கோள்களைக் கொள்வது? இனி உயிரைப்பற்றிய குறிக்கோளோடு கல்வியின் பயன் முடிந்தது எனக்கொள்ளல் சரியன்று, உடலைப்பற்றிய குறிக்கோள் மிகவும் மேலானது. நாம் எடுத்துக்கொள்ளும் படிப்பினுல் நம் உடற்பாதுகாப்பிற்கு ஏதாவது பயன் உண்டா என்பது முன்னமே அறிந்து தெளிந்து

உறுதிப்படுத்திக்கொண்டே பின்னால் அதனை நோக்கிப் பாடு படல்வேண்டும். நம் தமிழ் மாணவர்கள் யாதொரு குறிக் கோளும் கொள்ளாமல் ஏதோ பாடங்களைப் படித்துவிட்டுப் பின்னால் தம் தொழிலுக்குப் பயன்பெறாமல் கடந்த நாள் எல் லாம் வீணாக்கித்திரிகிறார்கள். தம் மனோநிலை எவ்விதம் ஓடுமோ அதனை அறிந்து அதன் சார்பான பாடங்களைப்படித்து அதன் மூலம் பொருள் பெறக்கூடிய வழிகளைத் தேடல்வேண்டும். கணிதத்தில் ஆவல் கொண்டவன் சரித்திரத்தையும் சித்திரத் தில் ஆவல் கொண்டவன் நெசவுத்தொழிலையும் கற்க ஆரம்பித் தால் எவ்வாறு தம் தம் குறிக்கோள்களை அடையக்கூடும். வெறும் ஆத்மார்த்தமாகவும் ஞானமயமாகவும் அறிவுமயமாகவும் உள்ள படிப்பேயன்றி தம் உடல் பெருக்கும் வகையானதும் பலன் நிரம்பத் தரக்கூடியதுமான கைத்தொழில் வாணிபம் முதலிய படிப்புகளை நம் சிறுவர் அதிகம் எடுத்துக்கொள்ளல் வேண்டும். மேற்கு நாடுகளில் உள்ளவைபோல் நம் நாட்டிலும் தொழில் பாடசாலைகளை அதிகப்படுத்தவேண்டும்.

சிக்கனம்.

நமது மாணவர்கள் சிக்கனம் என்பதை அறிவதே இல்லை. எத்தனை சிறுவர்கள் நாட்டுபுறத்திலுள்ள தம் பெற்றோரை விட்டு நகரங்கள் சேரும்போது அருமையாகத் தம் பெற்றோர் சேமித்துவைத்த பொருள்களை ஒரு கணத்தில் உதறி விடு கிறார்கள். இதனால் பெற்றோர்களும் தாமும் மீள முடியாத் துன்பத்தில் பிற்காலத்தில் ஆழ்ந்துவிடுகிறார்கள். கலாசாலையில் படிக்கும் மாணவர்கள் தம் அருமைக்காலத்தை வீணாக்காமல் பயன்படத்தக்க வழிகளிலும் துறைகளிலும் கவனம் செலுத்து தலும் சிக்கனமாகும். தம் அறிவை அதனால் விலாசப் படுத் திக்கொள்வதோடு அவர்கள் பொதுஜன ஊழியமும் செய்ய முடியும். பிறருடைய துயரங்களைப் போக்குதலில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருத்தல்வேண்டும். ஏழை மக்களுடைய கண்களில் நீர் வரவொட்டாமல் தடுப்பதில் உள்ள நன்மையைக் காட்டிலும் வேறு புண்ணியம் எதுவுண்டு? அதற்கு அவசியமான சில தொழில்களைக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இலகுவான

வைத்தியம், சுலபமான மருந்துப் பிரயோகம், சுகாதார ஏற்பாடுகள், சிக்கன முறைகள் இவைகளை நன்றாகத் தெரிந்து கொண்டு ஏழை மக்களிடை ஒழிவு நேரங்களில் சென்று நல் லுதவி புரியவேண்டும். இத்தொழில்களை மாணவர்களே ஏற்கத் தகுதி உடையவர்கள். கடற்கரைகளிலும், ஆற்றோரங்களிலும், சிட்டாட்டங்களிலும், சங்கித நடனக் கச்சேரிகளிலும் பொழுதுபோக்கு மண்டபங்களிலும் வீண் காலம் கழிப்பதைக் காட்டிலும் பொதுஜன சேவையிலும், வாசக சாலையிலும், சொற் பொழிவுகளிலும் ஒழிவு நேரத்தைப் பயன்படுத்துவது மிக நல்லது. ஒரு கூட்டத்தில் பேசச்சொன்னால் எனக்குத் தமிழில் பேசவராது என்ற நாணங்கெட்ட வார்த்தை தமிழ் மக்களிடம் தான் வருகிறது. வட இந்தியாவில் ஆங்கிலத்தில் எத்துணைப் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் அவன் எழுதுவதும் பேசுவதும் தன் தாய் மொழியில்தான் என்று தமிழர் அறியவேண்டும்.

போதுமக்கட் சேவை.

நமது தமிழ் நாட்டில் பெரிய நகரங்களில் தமிழ் மாணவர் இருந்து வாசிக்க மாணவர் விடுதி ஒன்றேனும் உண்டா? இதனை யாரேனும் சிந்தித்ததும் உண்டா? அபரிமிதமான செல்வத்தை மடங்களில் நிறைத்துவைத்துள்ளார்கள். அச்செல்வம் மாணவரின் பொருட்டே சேர்க்க பட்டது. அப்படி இருந்தும் எவரேனும் அது எவ்வாறு பயன்படுகிறது என்று கேட்பார் உண்டா? நம் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளாவிட்டால் வேறு எதுதான் இவர்களால் செய்ய முடியும். திக்கில்லாத ஏழைக் குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் விடுதிகள் ஏதேனும் உண்டா? சென்னை மகாணத்தில் 129 அனாதை ஆச்சிரமங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றிரண்டு தவிர மற்றவை எல்லாம் கிருஸ்தவப் பெரும் தகையார்களுடையதே. நம் தமிழ் மக்களுக்காக ஒன்றேனும் கிடையாது. நாளுக்குநாள் நாட்டில் ஏழைக் குழந்தைகள் அதிகமாகி அவர்கள் பிச்சைக்காரர்களாகித் திருட்டு, விபசாரம் இவைகளில் ஆழ்ந்து கெடுகிறார்கள். இலட்சக்கணக்கான இச்சிறுவர்களை மீட்டு ஆச்சிரமங்களில் வைத்து

அவர்களை மனிதர்களாக்கி விடுவது யாருடைய கடமை? மாணவர்களே! நீங்களாவது இப்புனித கைங்கரியத்தை மேற்கொண்டு நமது நாட்டை இழிவிலிருந்து மீட்டுவீர்களாக.

முடிப்புரை.

ஐயன்மீர், இறுதியாக ஒரு வார்த்தை. நமது நாடு, நமது மக்கள், நமது மொழி, இவை எல்லாம் முன்னேற்றம் அடைவதற்கு உங்களையே எதிர்பார்க்கின்றன. நீங்கள் ஊக்கம்கொண்டு வேலை செய்யப் புறப்படின், உங்களைத் தடுப்பார் இலர். ஆனால் எத்தனையோ இடையூறுகள் வரக்கூடும். அவைகளைப் பொருட்படுத்தாது உங்கள் அதி உன்னதமான குறிக்கோளையே எப்பொழுதும் நெஞ்சில் இட்டுக்கொண்டு முன் செல்வீர்களாக. முயற்சியில் தளர்வடையாது முன் செல்வில் இகழ்ச்சி என்றும் வராது. உங்கள் ஊக்கத்தின் பேரில் தான் நாட்டு நிலைமை நிற்கிறது. ஆகவே இன்று முதல் நீங்கள் தணியாத தாகம் கொண்டு முன் செல்லுங்கள். தாகம் முழுவதும் சாந்தியாகும் வரையில் முன் வைத்த காலைப் பின் வாங்காதீர்கள். இதுவே உங்கள் கடமை ஆகும்.

இனி, மாணவர்களின் நன்னிலைமையைக் குறித்து என் நெஞ்சில் தோன்றியவையும் இதுகாறும் எடுத்துரைத்தவையும் ஆன எண்ணங்களை உங்கள் ஆராய்ச்சிக்கு விட்டிருக்கிறேன். அவைகளையும் அவைகளைச்சார்ந்தவைகளையும் இன்றைய மகாநாட்டில் நீங்கள் ஆராய்வீர்கள், உங்கள் ஆராய்ச்சியின் பலனாக நீங்களும் நம் மொழியும் நம் நாடும் பெரும் நன்மை பெறும் வண்ணம் மெய்ப்பொருள் அருள் சுரப்பதாக! நான் இம்மகா நாட்டைத் திறந்துவைக்க அருகனல்லாவிடினும் என் மீது வைத்துள்ள பேரன்பினால் இம்மகாநாட்டு அமைச்சர்கள் எனக்குத்தந்த பொறுப்பிற்காக அன்னார்களுக்கு என் நன்றி கூறி இம்மகா நாட்டைத் திறந்து வைக்கிறேன்.

இன்பும் அன்பும் எங்கும் தங்குக!

ம. ரா.

உ

வித்துவான் வேதாசலய்யர் என்பார் போலிமறுப்பு.

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி 160-வது பக்கம் பார்க்க.)

இப்பொழுது 'சாசனபத்திரம்' என்றும் 'பந்தகபத்திரம்' என்றும் எழுதப்படுகின்றன உளவே. இவை யிரண்டும் வடமொழித்தொடரே. இவையும் அக்காலத்துத் தோன்றியனவே. இவற்றிற்குத் தமிழ்ப்பெயர் யாவையோ? அவை இன்னவென்று உலக வழக்கு முறையில் யாரேனும் இப்போது அறிந்தார் உளரோ? புலவருள்ளும் தொல்காப்பியம் செவ்வனே கற்றுணர்ந்தாரன்றிப் ஏனையோர் அறியார். 'சாசனபத்திரம்' என்பதற்குப் பண்டைச் செந்தமிழ்ப் பெயர் 'விலைத்தீட்டு' என்பது 'பந்தக பத்திரம்' என்பதற்கு 'ஒற்றிக்கலம்' என்பது பெயர். (பத்திரம் என்பதற்குக் கலம் என்பது). இதனை 'இயற்கையின் உடைமையின்' என்னும் ஆறும் வேற்றுமைச் சூத்திரத்துள், 'கலத்தின் முதலின்' என்றதனாலும், அச்சூத்திரவுரையுள் 'சாத்தனது விலைத்தீட்டு' 'நிலத்தது ஒற்றிக்கலம்' 'ஒற்றியதுமுதல்' என அவற்றிற்குக் காட்டப்பட்ட உதாரணங்களாலும் அறிக. இவ்வருந் தமிழ் வழக்கை மீண்டும் என்று காண்பேம்? தமிழ்ப்பகைஞர் ஒழிந்தஞான்று அன்றோ! நற்றிணை உரையாசிரியர் ஆகிய பெரும்புலவர் நாராயணசாமி ஐயர் பிறப்பிடமாகிய பின்னத்தூரைச்சார்ந்த ஊர்களிலே எழுபது ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட ஒற்றிக் கலங்களிலே 'இன்ன காலத்தில் யான் இன்னபடி செய்யாவிட்டால் (பொருளைக் கொடாவிட்டால்) சூரியனூர் புகுந்தவன் அடையும் நரகத்தை அடைவேனாக' என்று எழுதப்பட்ட முறை இனியொரு முறை எழுதப்படுமா? அது கிடக்க. காலம் என்பது மிக வன்மையுடையது.

'சீலமும் தருமமும் சிதைவில் செய்கையும்
சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய
மூலம் வந்துதவிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ.' (கம்பர்)

ஆதலின் மேற்கண்டவாறு நம்அருந்தமிழ்க்கு நேர்ந்த கோளாறு கட்கெல்லாம் காலம் என்பது ஒரு காரணமாயிற்று. அதுவே யன்றி, அவ்விடைப்பட்ட காலத்தில் சங்க விலக்கியங்களும் இலக்கணங்களும் முற்றும் வெளிப்படாமையும் ஒருகாரணமாம். ஆதலால் அக்காண்டிகையுரையாசிரியரெல்லாம் தொல்காப்பிய நூல்வழக்கையும் நன்னூலார் கருத்தையும் முரணில்லாது அறிய மாட்டாராயினர். அஃது எற்றாயினும் ஆக; 'எனது கைகள்' என்று அவர் காட்டிய உதாரணம் தவறென்றே துணிக.

இவ்வாறு இழுக்கினோர் காண்டிகை உரையாசிரியரேயல்லர். இலக்கியங்களின் முடிவுகண்டு பிங்கல நிகண்டு என்றும் 'சூடா மணி நிகண்டு' என்றும் நூல் தொகுத்தோரும் ஒரோ வழி இழுக்காதார் அல்லர்.

'அளகு' என்பது மரபுபற்றி வருவதோர் பெயர். இது பற்றித் தோல்காப்பியனார்

'கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங்காலை அளகெனல் அமையா.'
'அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே.' என்று

மரபியலுள் ஓதினர். இதனால் 'கோழி' 'கூகை' 'மயில்' என்னும் இவற்றின் பெடையே 'அளகு' என்னும் பெயர் பெறும் என்பது முடிந்தது. இவ்வாறாகவும், சூடாமணி நிகண்டு நூலார் 'அயர்வுறு கோழி கூகை அல்லாப்பெண் அளகென் றோதும்' என்று ஓதினர். இது தோல்காப்பியனார் ஓதிய இலக் கணத்துக்கு நேர்மாறாம். முன்னைய நிகண்டாகிய பிங்கலத் தினும் அப்படியே ஓதப்பட்டது. இங்ஙனம் மாறுபட்ட இரண்டு கொள்கைகளுள் கொள்ளத்தக்கது யாது? தள்ளத் தக்கது யாது? 'தோல்காப்பியனார்' எல்லா நூலாசிரியர்க்கும் முதனூலாசிரியர் ஆதலின் அவரோடு மாறுபடுதல் கூடாது'

என்று பேராசிரியரும் கூறினர். ஆதலின் தொல்காப்பியனார் ஒதியதே இலக்கணமாகக் கொள்ளப்படும். சங்க விலக்கியங்களிலே பெரும்பாணாற்றுப்படையுள் 'மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்' என்புழி 'அளகு' என்பது கோழியின் பெடையை உணர்த்தியது. கூகைப் பெடைக்குப் பெயராய் வருவது சிந்தாமணியுள் காணலாம். இவ்வாறாகவும்,
'மனையளகு வள்ளைக் குறங்கும் வடநாட' (திருவள்ளுவமாலை)
என்புழி 'அளகு' என்பதற்குக் 'கிளி முதலிய பறவைப்பேடுகள்' என்று பொருள் கூறினர் ஆசிரியர் சரவணப்பெருமாள் ஐயர்.

'அசுணம்' என்பது இசையறிவதோர் விலங்கு என்பது கலித்தொகை சிந்தாமணி நற்றிணை முதலிய பண்டையிலக்கியங்களாலும் நச்சினார்க்கினியர் முதலியோர் உரையாலும் தெள்ளிதின் உணரக்கிடந்தது. பிங்கல நூலினும் சூடாமணி நிகண்டினும் 'அசுணம்' என்பது ஓர் பறவையாகக் கூறப்பட்டது. இம் மாறுபாட்டினைப்பற்றி இப்போது ஆராய்ச்சிசெய்த அறிஞர்கள் பலரும் நிகண்டு நூலார் கூறியது தவறென்றே முடித்தார். இவ்வாறாக இந்நிகண்டு நூலாரும் பிறரும் மயங்கி உரைத்தமைக்குக் காரணம் அவர்க்கு அக்காலத்தில் அச்சங்க நூல்கள் கிடையாமையே என்பதன்றி வேறு இறுத்தற்கு இடனில்லை. சங்க நூல் வழக்கில்வந்த எண்ணிறந்த சொற்கள் நிகண்டுகளில் காட்டப்படவில்லை. இதுவே சங்கநூல் அவர்க்குக் கிடையாமைக்குச் சான்றாகும்.

'அரனது தோழன்' என்பதன் இலக்கண முடிபு. 'அரனது தோழன்' என்னும் தொடர்மொழி குபேரனுடைய பெயர்களுள் ஒன்றாகச் சூடாமணி நிகண்டில் கண்ட பாடம். 'அரன்' என்பதும் 'தோழன்' என்பதும் உயர்திணைப் பெயர்கள். 'தோழன்' என்பது முறைப்பெயருள் அடங்கும். நூல் வழக்கிலேஅவ்விரண்டு சொல்லும் 'அரன்றோழன்' எனத் தொகையாக வருதலே பெரும்பான்மை. அது உரைவழக்கில் வருங்கால் 'அரனுக்குத் தோழன்' என்றே வருதல் வேண்டும். ஏனென்றால் 'அது' என்னும் உருபும் 'அ' என்னும் உருபும்

வருவது உடைமைப் பொருள் அஃறிணைப் பொருளாயவிடத்தே யாம். உடைமையும் உடையதும் 'அரன்றோழன்' என உயர் திணைப் பெயராயவிடத்து, அது அரனுக்குத் தோழன் எனவே விரியும். இவ்விலக்கணத்தை மயக்கற விதிப்பது,

'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.' என்னும்

தொல்காப்பியச் சூத்திரம். அச்சூத்திரவுரையுள், 'நம்பிமகன்' என்னும் தொகைச்சொல் விரியுங்கால் 'நம்பிக்கு மகன்' என விரியுமேயன்றி 'நம்பியது மகன்' என்று விரிதல் கூடாது என்று எல்லா வுரையாசிரியரும் கூறினர். அவ்வாறே நன்னூலின் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயரும் கூறி, அவ்விதிக்கு முரணில்லாமலே 'அவனுடைய விறலி' 'அவனுடைய விறலியர்' என 'உடைய' என்பது இசையெச்சமாய் வருமென்றார். ஆகவே 'அரனது தோழன்' என விரித்துக்கூறின், அவ்வழக்கு இச்சூடாமணி நிகண்டிலன்றி வேறெந்த நூலுரையினும் காணப்படாமையால், அது இலக்கண வழுவேயாமென்றொழிக. தொன்மை நூலாகிய தொல்காப்பியத்தின் விதியை மாற்றுவதற்குச் சூடாமணி நிகண்டு நூலார்க்கு அதிகாரம் ஏதுமின்மை அறிக. ஆகவே 'அரனது தோழன்' என்பது எழுதுவோரால் நேர்ந்த பாடப் பிழையென்று கொண்டு அதனை 'அரனுடைத் தோழன்' என்று திருத்தல்வேண்டும். 'உடைய' என்பது சொல்லுருபென்பாரும் உளர். சேனாவரையரும் 'தம்முடைய தண்ணளியும் தாமும் தம்மான்றேரும்' என்பதை உதாரணம் காட்டினர்.

இனி, 'குன்றவர் தமது செம்மல்' என்பதன் முடிபு. இத்தொடர்மொழி கந்தபுராணத்தில் கண்டது. 'அரனது தோழன்' என்பதுபற்றி மேற்கூறிய இலக்கணம் இதற்கும் ஒக்கும். ஆகலின் இதனைக் 'குன்றவர் தமக்குச் செம்மல்' என்று திருத்திக் கொள்வதே முறையாம்.

இனி, 'நினதடியார்' என்பதன் இலக்கணமுடிபு. 'நள்ளேன் நினதடியாரொடல்லால்' என்பது திருவாசகத்தில் கண்டது. இங்கே 'அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்'

என்னும் சூத்திரத்திற்குத் தொடர்பு ஏதும் இல்லை. 'அடி' யென்பது அஃறிணைப் பெயர்ச்சொல். ஆகவே 'நினதடி' என வருதலில் பிழையொன்றும் இல்லை. 'நினதடி' யென்பது பகுதியாகநின்று ஆர் விகுதியேற்று 'நினதடியார்' என வந்தது. 'தமதாரார்' என்றாற்போல. பண்டை நூல்களைப் பிற்காலத்தில் ஏட்டில் எழுதுவோரால் நேர்ந்த பாடப்பிழைகள் மிகப்பலவென்பது எல்லாரும் அறிந்ததே. ஆகவே 'அரனது தோழன்' 'குன்றவர் தமது செம்மல்' என்றாற்போல்வன வெல்லாம் அவ்வாறு பிழைபட்ட பாடமே. அற்றேல் அவற்றைப் பதிப்பித்தோர் திருத்தாமை யென்னையோவெனின், அவர் ஏட்டில் கண்டதைக் கண்டவாறே பதிப்பித்தற்குரியரே யன்றி அவற்றைத் திருத்தற்கு அதிகாரமிலர் என்க. ஆராய்ச்சியாளராயின் அவற்றைத் திருத்தற்குரியர் என்க. இத்துணையும் கூறியவாற்றால் 'அனைவரது கருத்துக்களும்' என்ற ஒரு பிழையை மறைப்பதற்கு 'மேற்குறித்த பல பிழைபட்ட உதாரணங்களைப் போலி மறுப்புரையாளர் எடுத்துக்காட்டியது, 'ஒட்டை வெள்ளரிப் பழத்திற்கு ஒன்பது பூண் கட்டியவாறு போலும்.' 'அனைவரது கருத்துக்களும்' என்று சாத்திரியார் எழுதியபோது இவ்விலக்கணத்தை ஆராய்ச்சி செய்திலர் என்பதே, முடிந்த முடிபாம்.

(தொடரும்.)

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் அ	ஆங்கீரச, புரட்டாசி.	மலர் சு.

ஒளியும் வண்ணமும்.

அ. சீனிவாசாசாரியாரவர்கள், B.A.,L.T., சீவில்லிப்புத்தூர்.

கைவினை முற்றிய கவின்பெறும் ஓவியமொன்றைக் கண்டு ஒருவன் மகிழ்வெய்துங்கால், அதன்கண் அமைந்த வண்ண வழகும் வடி வழகுமே அவனது உள்ளத்தைச் சிறப்பாகக் கவர்ந்து இன்பத்தை நல்குகின்றன. வாலறிவன் வரைந்த இணைபற்ற ஓவியமாயிலங்கும் இயற்கையின் பேரெழிலை ஒருவன் தன் இருகண்களாலும் முகந்து பருகி மெய்ம்மறந்து நிற்குங் காலை, அவனுள்ளத்தைச் சிறைப்படுத்துவன, இயற்கையிற் காணும் பொருள்களின் வடிவு வண்ணங்களின் வகைகளும் தொகைகளுமன்றோ? அவ்விரண்டினுள்ளும், வடிவழகைப் புலப் படுத்தி அதற்கொரு விழுப்பத்தை யூட்டுந் தரத்தது ஒளியே யாதலானும், அவ்வொளியின் வகைகளே வண்ணங்களாத லானும், வண்ணவழகே சாலச் சீரியதாகும். காலைப் போழ் திலும் மாலைப்போழ்திலும் கதிரவச் செல்வன் தனது செங்கரங் களால் வானக் கிழியின்கண் வனப்புறத்தீட்டும் சித்திர வகை களின் மெத்திய பொற்புமுழுதும், ஆய்ந்து பார்க்கின், வண்ண

வழக்கையே அடிப்படையாகக் கொண்டதாகும். எண்ணிலவாய வண்ணங்களெல்லாம் நிரல்பட அமைந்து வளம்பெறத் திகழும் வானவில்லின் உரைக்கொணாச் செவ்வியினைக் கண்டு இறும்பூதும் இன்பமும் எய்திய மாந்தர் இளைஞரும் முதியாரும் உள்பட எண்ணிறந்தோரே யாயினும், அவ்வண்ணங்களின் இயல்பையும் வானவில்லின்கண் அவை நிரல் படத்தோன்றும் காரணத்தையும் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் ஆராய்ந்தறிந்தோர் ஒருவருமே யிலராயினர்.

ஓவியம் வல்லான் ஒருவன் தன் எழுதுகோலைப் பலப்பல வண்ணங்களிற் றோய்த்து ஒரு வெண்ணிற எழினியின்கட் டீட்டுங்காலை, அவ்வெழினி அவ்வவ்வண்ணங்களைப்பெற்று மிளிர்வதை மேலெழுந்த பார்வையாகச் நோக்கிச் சிந்திக்கும் மக்கள் வெண்மையை வண்ணமின்மை யென்றும், ஒவ்வொரு வண்ணமும் ஒரு பொருளினுக்குக் கூட்டப்படுவதொன்றே யென்றும் கருதுதல் இயல்பேயாகும். ஆயினும் உண்மை அதுவாகாதென்பது கூர்ந்து நோக்குவார்க்கு விளங்கற்பாலதாகும். யாங்ஙனமெனின், பச்சைக் கண்ணாடியின் வாயிலாக ஓர் இருட்டறையின் கட்புகும் ஒளி நிறமற்ற கண்ணாடியின்வாயிலாக உட்புகும்ஒளியினும் அளவு குறைந்திருக்கக் காணப்படுகின்றது; வெண்கதிர்கள் வீசுங்காற் பொருள்கள் தெள்ளிதிற் புலனாதலும், பச்சைக் கதிர்களோ செங்கதிர்களோ வீசுங்கால் ஒளி மழுங்கியதாகத் தோன்றுதலும் காட்சியளவை யான் உணரப்படும் உண்மைகளாம். இவை மெய்யாகலின், வெண்ணிறத்திற்கு ஒரு வண்ணத்தை யூட்டுங்கால் அவ்வண்ணம் தோன்றுவதாக நினைத்தல் இயைபுடையதன்றாம்; வெண்கதிர் ஒருவாறு ஒளியை இழக்குங்கால் வண்ணம் தோன்றுவதாகக் கருதலே பொருத்தமாகும். கதிரவன் அரவுக்கோளின் வாய்ப்பட்டுத் தன்னொளியைச் சிறிது சிறிதாக இழக்குங் காலத்து உலகப் பொருள்களின் தோற்றத்தையும் பொலிவையும் உற்று நோக்குவோமாயின், செம்மையும் பசுமையும் மஞ்சளுமாய வண்ணங்கள் நனி தீட்டப்பட்டுள்ள பொருள்கள் முதற்கண் மறைவதையும், வெண்சுதையாற் குயிற்றிய மாடங்கள் இறுதியிலேயே புலப்படாதொழி

வதையும் காணலாம். ஆதலின் வெண்மை வண்ணம் செவ் வண்ணத்தினும் நீல வண்ணத்தினும் ஒளிமிக்க தோன்றாது ஒளி குன்றியதாதல் பெறப்படுகின்றது. வெண் சுவர்க்குக் காவிவண்ணம் ஊட்டும்போதும், விளக்குகளைச் சூழும் கண்ணாடி கட்குப் பச்சைவண்ணம் ஊட்டும்போதும், நாம் ஒருவாறு ஒளிக் கதிர்களை இழக்கிறோம் என்னும் உண்மை மாணவராலும் இவ் வாழ்வோராலும் நினைவில் நிலைநிறுத்தற்குரிய தொன்றாகும்.

இப்பேருண்மையைச் சோதனை வாயிலாக ஆராய்ந்து நிறுவியவர் நியூட்டன் என்னும் பேரறிஞரே. அவர் ஒருகால் முப்பட்டைக் கண்ணாடியின் தன்மைகளையெல்லாம் தேர்தல் முறையானே ஆராய்ந்து வரலாயினர். ஒளிக்கதிரொன்று முப் பட்டையாடியினுட் புகுங்காலும் பின்னர் வெளிவருங்காலும், செல்லும் ஆற்றினின்றும் விலகி அக்கண்ணாடியின் அகன்ற பகுதியை நோக்கித் திரும்புவதையும், இன்னும் வெண்கதி ரொன்று இங்ஙனம் புகுந்து வெளியேறுங்கால் அது பல்வகை வண்ணக் கதிர்களாக விரிந்து பிரிந்து சிதறுவதையும் அவர் நோக்கினர். அவ்வண்ணக் கதிர்களைச் செங்குத்தாக ஒரு வெண்சுவரின்மீது விழச்செய்யுங்கால் அவை வரிசையாக நீண்ட பட்டைகள் வடிவாக அமையும் அழகையும், சுவரின் தொலைக் குத் தக்காங்கு பட்டைகள் ஒவ்வொன்றும் நீட்சியும் அகலமும் மிகுந்து தோன்றும் நேர்மையையும் கண்டு வியந்தார். அவ் வண்ணப் பட்டைகளின் தொகுதிக்கு 'வண்ண நிரல்' எனும் பெயரிடுவோம். செம்மையும் ஊதாவும் இருமருங்கிலும், இடையே மஞ்சள் பசுமை நீலம் முதலிய பலவும் வரிசையாக அமைவதோடு, ஒரு வண்ணமும் அடுத்த வண்ணத்தோடு மரு வுங்கால் முன்னது படிப்படியாகக் குறைந்தும் பின்னது இறை யிறை மிகுந்தும் வருதலானே இடையுள்ள கலப்பு வண்ணங்கள் பலவும் மிளிர்வதையும் நுணுகி நோக்கினர். இன்னும் இவ் வண்ண நிரலின்கண்ணுள்ள பைங்கதிரையோ அன்றிப் பிறி தொரு வண்ணக் கதிரை மட்டுமோ மீண்டும் இன்னொரு முப்பட்டைக் கண்ணாடியின் வழியாகப் புகுத்தி வெளிவரச் செய்யின், அவ்வண்ணக் கதிரொன்றே, ஆடியிற் புகுமிடத்தும்

அதனின்று வெளியேகுமிடத்தும், இயங்கும் நெறியினின்றும் பண்டுபோல் விலகி ஆடியின் அகன்ற பகுதியை நோக்கித் திரும்பினும், தன்னிறங் குன்றாதும் மாறுபடாதும் செல்லுதலையும் ஆராய்ந்தறிந்தார். இவையனைத்தானும் அவர் ஆய்ந்து பெற்ற முடிபுகளாவன:—(1) பல்வகைத்தாய வண்ணங்கள் ஒன்றுகூடி ஒருநெறிப்பட்டுச் செல்லுங்கால், அவைதம்முட் கலந்தொன்றாகி வெண்கதிராகத் தோன்றுகின்றன. (2) ஒருநெறிப்பட்டேகும் பலப்பல வண்ணக் கதிர்களடங்கிய வெண் கதிர்ப்பிழம்பு முப்பட்டையாடியில் முட்டுங்கால், ஒவ்வொரு வண்ணக் கதிர்க்கும் உரிய நெறிவிலகும் அளவு ஒன்றையொன்றொவ்வாது வேறுபடுதலின், அப்பிழம்பு பிரிவுபட்டுத் தனித்தனிக் கதிர்களாக இயங்குகின்றது. வெண்கதிரின் இயல்பை இங்ஙனம் பிரிக்குமுறையானே நிலைநாட்டிய பின்னர், அதனையுடைமையாது தொகுக்குமுறையானும் அம்மெய்மையினைத் தேரும் விழைவால், அப்பேரறிஞர் (நியூட்டன்) வண்ணநிரலின்கட் பிரிவுபட்டேகும் வண்ணக் கதிர்களனைத்தையும் (முன்னைய முப்பட்டையாடியின் அடிக்கு நேராகமுடியும், அதன் முடிக்கு நேராகஅடியும், அமையுமாறு) மாறிப்பிடிக்கப்பட்ட இன்னொரு முப்பட்டையின் வழியாகச் செலுத்தினார். அப்போது, அவர் அகமகிழ்வெய்த, அவையனைத்தும் மீண்டும் நெறிவிலகி (இரண்டாவது ஆடியின் அடியை நோக்கித் திரும்பி) ஒன்றோடொன்று இணைந்து மருவி ஒருநெறிப்பட்டு வெண்கதிராக வெளிக்கிளம்பின. இதனால் அவரது முடிபுகள் உறுதிபெறலாயின.

இவைகளின் சார்பாக வேறு சில உண்மைகளையும் அவர் உசாவியறிந்தார். செவ்வண்ணந் தீட்டிய கண்ணாடியின் வழியாக வெண்கதிர் புகுங்கால், அது மறுபுறத்துச் செங்கேழூரப் பெறுதல் என்னையோவெனின், வெண்கதிர்க்குக் கண்ணாடி தனது செவ்வண்ணத்தை ஊட்டுவதனாலன்று என்க; அவ்வண்ணத்தை யூட்டுந்திறன் அதன்பால் இல்லையென்க; பின்னையோவெனின், வெண்கதிரினில் அடங்கிய வண்ணக் கதிர்கள் பலவற்றுள் செங்கதிரொழிந்தஏனையகதிர்கள் அக்கண்ணாடியின் வழியே புகவொண்ணாமையானும், செங்கதிரே புகுந்து வெளி

பெருகல்பற்றியும் என்க. இங்ஙனமே ஒளி புகாப்பொருள்களின்மீது கதிரவனது வெண்கதிர்கள் படுங்கால், அவை தத்தமக்குரிய வண்ணக் கதிர்களொழிந்த ஏனையவற்றை விழுங்கி விடுதலின், அவ்வொரு வண்ணமே மீண்டு கண்ணினைச் சார்கின்றது. செந்தாமரை மலரொன்று செக்கர் வண்ணமுடையதாகத் தோன்றுவதன் காரணம், அதன்மீது விழும் வெண்கதிர்களில் அடங்கிய வண்ணக்கதிர்கள் பலவற்றுள் செங்கதிரொழிந்தவற்றை அது உண்டுவிட்டுச் செங்கதிரைமட்டும் உமிழ்தலேயாகும். செங்கதிர்க்கற்றை பைந்துகிலொன்றின்மேற் பாயும்போது, பைங்கதிர்களொழிந்த ஏனையவற்றை விழுங்கும் இயல்பு அதற்கு வாய்ந்திருத்தலான், அத்துகிலின்மீது பட்டு மீளும் கதிர் இல்லாதுபோக, ஒளியற்ற கருந்துகிலாகவே அப்பைந்துகில் தோன்றும். கருந்துகிலின்மீது வெண் கதிர்கள் வீழினும், எவ்வகை வண்ணக்கதிர்கள் வீழினும், அனைத்தையும் அது விழுங்குதலின், பட்டு மீளும் கதிர் ஒன்றுமில்லாதொழியும்; அதனின்றும் இறையும் ஒளி கண்ணிணையைச் சாராமையின், அது ஒளியற்றுக் கரியதாகின்றது. வெண்டுகிலின்மீது வீழும் கதிர்கள் வெண்ணிறத்தனவாயினும், அன்றி ஒரே வண்ணத்தனவாயினும்; அவை முழுதும் அதன்மீது பட்டு மீளும்; இக்காரணத்தால் வெண்டுகில் வெண்கதிரொளி வீசுங்கால் வெண்மையாயும், வண்ணக் கதிரொளி வீசுங்கால் அவ்வண்ணந் தோய்ந்ததாகவும் தோன்றுகின்றது. இவையனைத்தாலும் அறியக் கிடப்பது யாதெனில், ஒருபொருளே அதன்மீது ஒளிக்கதிர்கள் வீழாதவழிக் கரியதாகவும், பைங்கதிர்கள் வீழுங்கால் பசுமையுடையதாகவும், செங்கதிர்கள் வீழுங்கால் செவ்வண்ணத்ததாகவும், வெண்கதிர்கள் பட்டு மீளுங்கால் வெண்மையுடையதாகவும் காணப்படுதலானும், இஃதன்றியும் ஒளிக்கரங்களால் வருடப்படாதவழி ஒருபொருளின் இருப்பும் வண்ணமும் புலப்படாமையானும், வண்ணம் என்பது ஒரு பொருளின்கண் இயல்பாகவே அமைந்ததொன்றல்ல என்பதே. வண்ணமென்பது அதனைக் காணுவாரது மனத்திற்றோன்றும் ஓர் உணர்ச்சியே யன்றி வேறன்று; நமக்குப் புறம்பேயுள்ளன

அவ்வுணர்ச்சியை யளிக்கும் திறமை வாய்ந்த வானலைகளேயாம் அவ்வலைகள் கட்புலனாற் காண்பரியனவாய் யாதொரு வண்ணமு மற்றனவாய் இருப்பினும், நமது கட்புலனது துணையால் வண்ண புணர்ச்சியை நம்மகத்தே எவ்வாறோ தோற்றுவிக்கின்றன. சுருங்கக்கூறின், வண்ணமென்பது அலங்கலிற் றோன்றும் அரவுபோல ஒரு தோற்றமேயன்றி உள்பொருளல்ல.

வான்பொருளிற் றோன்றும் அலைகளே ஒளி யுணர்ச்சியை எழுப்புகின்றன என்று முன்னர்க் கூறினோம்; வண்ண வேறுபாடுகட்கும் அவ் அலைகட்கும் உரிய தொடர்பினையும் காட்டுவாம். ஒருவாவியின் நடுவே நிற்கும் ஒரு சிறுவன் வட்டப்பலகையால் தண்ணீரின் மீது பன்முறை அடித்து நீரலைகளை எழுப்புவதாகக் கொள்வோம். நொடிப் பொழுதிற்கு ஒருமுறை அவன் நீரை முறையாக அடித்து வருவானாயின், அப்போது எழும் அலைகள் ஒன்றன்பின் னொன்றாய் விரைந்து வருதலின் ஓரலையின் மேட்டிற்கும் அதனை யடுத்து வரும் அலையின் மேட்டிற்கும் இடையே சிறிது தொலையே உள்ளதாகும்; அதனால் அவை குற்றலைகள் எனப்படும். மூன்று நொடிப் பொழுதிற்கு ஒருமுறை ஓரலையைக் கிளப்பி வருவானாயின், அப்போது எழும் அலைகள் முன்னையவற்றோடு ஒப்பிடுங்கால் நெட்டலை களாகும்; எவ்வாறெனின் ஓரலையின் மேடு வெகுதொலை யூர்ந்து சென்ற பின்னரே அடுத்த அலையின் மேடு அதனைத் தொடரக்கூடு மாதலான். ஆக, அலைகளின் நீளம் குறுகுதற்குரிய ஏது அலையெழும் விரைவின் மிகுதி யொன்றே. நீரலைகளைப் போலாது வான் பொருளிற் பரவும் அலைகள் கழிபெரும் விசையொடு கடுகியியங்கும் நீர்மையனவாகும். ஒளியெனும் உணர்ச்சியை நம்பால் தோற்றுவிக்கும் வானலைகட்குள் மிக நெடியன, செவ்வண்ணத்தை யுண்டாக்கும் அலைகளே. இச் செக்கரலைகள் ஒரு விநாடிக்கு (செகண்டிற்கு) நானூறு இலக்கங் கோடி வீதம் எழுவன வென்றும், விரைவு மென் மேலும் மிகுதலானே முறையே வண்ணநிரலின் கண் அமைந்த அடுத்த வண்ணங்கள் பலவும் தோன்றுவன வென்றும், இறுதியிலுள்ள ஊதா வண்ணம் ஒரு விநாடிக்கு

எண்ணூறு இலக்கங் கோடி அலைகள் எழுவதால் தோன்றுவது என்றும் ஆன்ற அறிஞர் தமது நுண் புலமையால் ஆய்ந்து கண்டுள்ளனர். ஒரு விநாடிக்கு எண்ணூறு இலக்கங் கோடியினும் விஞ்சிய விரைவோடு தோன்றும் அலைகளும் உள வெனினும் அவைகளைப் பற்றும் ஆற்றல் கட்புலனுக்கு இல்லாமையின், அவை ஒளியுணர்ச்சியைத் தோற்றுவிக்க மாட்டாது கண்ணிற்குப் புலப்படாது மறைவாக இயங்குகின்றன; இங்ஙனமே ஒரு விநாடிக்கு நானூறு இலக்கங் கோடிக்குக் குறைந்த விரைவுடன் எழும் அலைகளும் கட்புலனால் உணரப்பட வொண்ணாத நீர்மையன வாகின்றன.

வண்ண நிரலை யுண்டாக்குதற்கு முப்பட்டையாடி யொன்று இன்றியமையாத தொன்றல்ல; சிறிய நீர்த்துளி யொன்றே போதியதாகும். கார்காலத்தே நீல வானத்தை நிமிர்ந்து நோக்குங்கால் வண்ண வழகால் சிறுவர்முதல் முதியார் ஈறாக அனைவரது கண்ணையும் மனத்தையும் கவரும் வானவில், உண்மையாகப் பார்க்குமிடத்து, மிகப்பெரும் வண்ண நிரலே. கதிரவனது வெண்கதிர்கள் முகிலின்கண் உள்ள நீர்த்துளி களின் வழியாக ஊடுருவிச் செல்ல முயலுங்கால், ஒவ்வொரு கதிரும் ஒரு துண்டுளியினுள்ளும் நுழைந்து உட்புறத்துப்பட்டு (வெளியேகாது) மீண்டு, வரும்வழியில் துளியை விட்டு மறித்தும் காற்றுக்குட் புகும் இடத்துச் சிதறுண்டு வண்ணநிரலின் வடிவடைகின்றதாகலின், சாலவும்பெரியவண்ண நிரலொன்று விளைந்து தோன்கிறது. காலையிற் கதிரவன் கிழக்கமருங்கால் வானவில் மேற்கிலும், மாலையிற் கதிரவன் மேற்கமருங்கால் வானவில் கிழக்கிலும், நடுவே முகில் உள்ள பொழுது உண்டாகும் காரணமும் இதனால் அறியப்படும். கதிரவனொளி யொருமருங்கும் நீருண்ட காளமுகில் நடுவிலும் இல்லாதபோது வானவில் மற்றொரு மருங்கில் தோன்றுவதில்லை.

சிறியன இகழேல்*

அ. சீனிவாசாசாரியார் அவர்கள் B.A., B.L., சீவில்லிப்புத்தூர்.

அற்பமே நிறைவினை ஆக்கும்,அந் நிறைவும்
அற்பமா காதெனச் சிற்பநூ லறிஞர்†
செப்பினர்; அதனாற் சிறியன இகழேல்.
இப்புவி யரங்கினில் ஏற்றமும் திறனும்
கற்றுமா வேடம் புல்குதல்[1] விழையேல்.
செயுஞ்சிறு தொழிலே சிறிய தாமெனக்(கு)
உயும்வழி, அதுவலது ஒன்றிலை பிறிதெனும்
கருத்தோ டியற்றித் திருத்த முறுக.
எய்தும் தொழிற்கண் எய்திறன் அனைத்தையும்
பெய்திடு வோரே பெருமையிற் பிறங்குவர்.[2]
இட்டிகை[3] அடுக்கியே எழுப்புவர் மாளிகை;
தட்டுமேல் தட்டாய்ச் சமைப்பர் கோபுரம்;
இறைஇறை[4] செய்தே நிறைவுறும் பெருந்தொழில்.
ஐயெனச்[5] சிகரம் அணைதல் ஒண்ணுமோ?
பையப் பையப் படர்வழி ஏறத்
தாழாது உஞற்றித் தாள்[6] வழுக்குற்று
வீழா வண்ணம் விழிப்போ டமர்ந்து
குறியது நோக்கும் நெறியின் நீங்கார்
உயர்நிலை எய்துதற் குரியவர்; ஏனையோர்
துயர்நிலை வெம்பவச்[7] சுழிவழிப் பட்டுச்
சாலவும் வருந்தி ஓலமிட் டலைவர்.

---

* இது, "Little Things" (சிறு காரியங்கள்) என்ற தலைப்புடன் "Justice" (ஜஸ்டிஸ்) பத்திரிகையில் 13-6-32 அன்று வெளி வந்த ஆங்கிலப் பாட்டைத் தழுவி எழுதப்பட்டது.

† மைக்கல் ஆஞ்சலோ.

1. தரித்தல் 2. உயர்வர், நிறைவர், ஒளிர்வர். 3. செங்கல். 4. அணு, கடுமை. 5. விரைவுக்குறி. 6. முயற்சி (காலடியுமாம்.) 7. கொடிய பிறவி.

மாடம் உயர்தலில் வாஞ்சை உடையோர்
பாடும்[1] மெலிவும்[2] படுதலா னல்லது
விரகால்[3] அடையார்; சரதம்[4] ஈதே.

பகுதியொவ் வொன்றையும் பாங்குற அமைக்கின்
தொகுதியும் அத்துணைத் துளக்கம்[5] நண்ணிடும்.

படிமிசைப் பிறந்த பலரும் மாண்பின்[6]
முடிமிசை வயங்கும் மொய்ம்பினைப்[7] பெற்றிலர்.

ஆயினும் நமக்கென வாய்ந்த வேலையை
நாளும் சிறிது நலமிகச் செய்யின்
நீளும் நம்தகை,[8] நிலைஉயர்ந் துய்வம்.

ஒல்லுவ[9] தாற்றின் வெல்லுவம் இறுதியில்.

வினையிற் சிறுமையும் மேன்மையும் தங்கா;
நினையிற் செய்திறன் நீர்மையால் அமைவன.

மிகச்சிறி யனஎன் றிகத்தில் உளவோ?
அணுவினும் புகுந்திறை[10] ஆட்டுதல் மெய்யெனில்,
பணிவுடன் சிறுதொழில் பண்பட ஆற்றலும்
இறைவனை வழிபடு முறைமையின் பாற்படும்.

புகழ்தலும் இலரே புலவோர்[11] பெரியன;
இகழ்தல் சிறியன அதனினும் இலரே.

நம்செயல் அனைத்தின் நயம்தெரி காலை
எஞ்சா திவர்ந்திடும்[12] மிகச்சிறு செயலும்,
பொற்பூண் போலப் பொறை[13] மிகும்; ஆதலின்
அற்பமென் றொன்றிலை அவனியிற் பொருளே.

---

1. உழைப்பு. 2. இளைப்பு. 3. சூழ்ச்சி, ஆசை. 4. உண்மை. 5. விளக்கம். 6. புகழ். 7. திறமை. 8. தகுதி. 9. இயன்றது. 10. கடவுள். 11. ஞானிகள். 12. படரும், ஏறும். 13. கனம், (பொன்னாற் செய்த ஆபரணங்கள் போல.)

உ

வித்துவான் வேதாசலய்யர் என்பார் போலிமறுப்பு.

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி 200-வது பக்கம் பார்க்க.)

(மறுப்பு இரண்டாவதைப் பற்றியது). 'சார்புப்பொருளை' என்று சாத்திரியார் எழுதியது பிழையென்றும், 'சார்பு பொருள்' என்றெழுதுவது திருத்தம் என்றும் யாம் மறுத்ததனை ஐயர் ஏற்றுக்கொண்டு எழுதிச்செல்பவர் 'அது (யாம் மறுத்துரைத்தது) ஏற்றமுடையதே' யென்று எழுதினர். இவர் இவ்வாறு எம்மை நன்குமதித்துக் கூறிய கூற்றிற்கு நன்றி பாராட்டும் கடப்பாடு உடையோம் ஆயினும், அவர் 'ஏற்புடையதே' என்பதற்கும் 'ஏற்றமுடையதே' என்பதற்கும் வேற்றுமை தெரியாதவராய் எழுதியதற்கு இரங்குகின்றோம். இங்ஙனம் தம்கருத்தை உணர்த்துதற்குரிய சொற்கள் கிடைக்கப்பெறாமல் தடுமாற்றம் அடைவார் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண வுரையாராய்ச்சியுள் தலையிட்டது வியப்பேயாம். 'கருவி நூல்களாகிய நிகண்டு, முதலிய நூல்களைக் கல்லாதார் 'குன்று முட்டிய குரீஇப்போலவும் குறிச்சி புக்க மான்போலவும், இடர்ப்படுவர்' என்பது இதுதான்.

(மறுப்பு 5, 6 பற்றியது) இவற்றைப்பற்றிய மறுப்பென ஐயர் எழுதிய குறிப்பு இன்னவென்று அவர்க்குத்தான் தெரியுமோ தெரியாவோ அவற்றைப் படிப்பார் எவரும் தெரிந்துகொள்ளக் கூடியனவாக இல்லை. யாம் மறுப்புரையென எழுதியதனைத்தும் முன்னர்க் காட்டி அதன் பின்னாகத் தம் மறுப்புரையை நிகழ்த்துவாராக. இலக்கண விளக்க நூலாரைத் துணைகொண்டு தம் மறுப்பு விளக்க முடித்துக் காட்டுவாராக.

(மறுப்பு 9 பற்றியது) 'தெய்வச்சிலையார் உரைப்பிரதியை மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் (எனக்குக்) கொடுத்தார்' என்று சாத்திரியார் முகவுரையுள் குறித்தார். 'எனக்குத் தந்தார்' என்று எழுதுதலே இலக்கணமுறை. 'எனக்குக் கொடுத்தார்' என்று எழுதியது தவறென்று மறுத்தோம். எமது மறுப்புக்கு ஆதாரமாகத் தொல்காப்பியச் சூத்திரவுரைகளையும் நன்னூற் சூத்திரவுரைகளையும் எடுத்துக் காட்டி அவற்றுள் இன்னவுரை கொள்ளத்தக்கது இன்னவுரை கொள்ளத்தக்கதன்று என்று விளங்கக் கூறினோம். அன்றியும் அந்த முறை பிறழ்ந்து நூல்களிலே வழங்கலுற்றன வழுவமைதியென்று கொள்ளப்படுமேனும் உரையாசிரியர் உரைநடையில் வழாநிலையாகவே எழுதல் வேண்டுமென்றும் கூறினோம்.

இப்பொழுது ஐயரோ தோல்காப்பியர் இவ்விலக்கணம்பற்றிக் கூறியமுறை இக்காலத்து மாறி வருகின்றதென்று கூறுகின்றார். தோல்காப்பியனார் கருத்துக்கு மாறான இலக்கணங்களைக் கொள்வான் என்? நேர் வழியிருக்கக் கோணல் வழியில் புகுவான் ஏன்? 'புதியன புகுதல்' என்பதனால் கொள்ளுகின்ற இலக்கண முறைகள் சிலவுள. அவையெல்லாம் தொல்காப்பியம் என்னும் முதனூற்கொள்கையோடு முரணாத வழியேயாம் என்று மேலும் உரைத்தாம். கடைப்பிடிக்க.

பிற்காலத்து நூல்களிலும் இவ்விலக்கணம்பற்றி இலக்கண விளக்கநூலார் நன்கு ஆராய்ந்து 'கொடுத்தல்' என்னும் சொல் படர்க்கைக்கே உரியதென்றும், 'தருதல்' என்னும் சொல் தன்மைக்கே உரியதென்றும் கூறினர். அது கொண்டேனும் ஐயர் மயக்கம் ஒழிவாராக. அதனாலும் மயக்கம் ஒழியாராயின், தென்னாட்டிலே நகரவணிகரென்று சொல்லப்படும் (நாட்டுக் கோட்டைச்) செட்டிமார்களுள் பெண் பிள்ளைகளை வினவியேனும் மயக்கொழிவாரக. 'நான் அவனுக்குக் கொடுத்தல் வேண்டும்' 'அவன் எனக்குத் தரல் வேண்டும்' என்றே சொல்லல் வேண்டும். 'நான் அவனுக்குத் தரல் வேண்டும்' 'அவன் எனக்குக் கொடுத்தல் வேண்டும்' என்று சொல்லின் வழுவாம் என்று அப்பெண் பாலார் இன்றும் கூறுவர். எனவே

இஃதோர் மரபுபற்றிய இலக்கணம் என்பதும் அம்மரபு வழுவலாகாதெனவும் அறிந்து கொள்க. இம்முறை மாறிவரினும் வழுவமைதியென்று கொள்ளப் படும் என்று கொண்டு உரை நடை பெழுதுவார் அவ்விலக்கணமே அறியாரென விடுக்க.

'எனக்குக் கொடுத்தார்' என்று வழுப்படச் சாத்திரியார் எழுதியது மேற்குறித்த இடத்து மட்டேயன்று. முகவுரை 17 வது பக்கத்தில் மூன்றிடங்களிலே அவ்வாறே எழுதினர். ஆகவே அவர் இவ்விலக்கணம் பற்றிய சூத்திர வுரைகளைப் படித்த அளவிலே வைத்துக் கொண்டவராவரேயன்றி, அவ்விலக்கண வழுவின்றி உரை யெழுதல் வேண்டும் என்பதை அறிந்தவரல்லர் என்பதே தேற்றம்.

(மறுப்பு—10—பற்றியது). 'இவ்வாராய்ச்சியில் கூறப் பட்டன அனைத்தும் குற்றமில்கூற்று என்ற எண்ணம் எனக்கு ஒருபோதும் இல்லை' யென்று சாத்திரியார் முகவுரையுள் எழுதினர்.

அதற்கு மறுப்பாக யாம் எழுதியது:—'இதுவும் தமிழ் உரை நடையன்று. ஆங்கில மொழி நடையே. எனக்கு என்னும் நான்காம் வேற்றுமைக்குப் பொருட்டொடர்புடைய முடிபில்லை. வேற்றுமை மயக்கம் என்பதற்கும் இடமில்லை. 'குற்றமில் கூற்றென்பது என் கருத்தன்று' என்பது தமிழ் உரைநடை என்பது.

அதன்மேல் வித்துவான் ஐயர் எழுதிய விடை:—'அருளிலை இவட்கென அயலார் நிற்பழிக்குங்கால்' என்ற கலியடிக்கு 'அருள் இவட்கு இல்லையென்று.......' என உரை வகுத்தனர். இவ்வுரைநடையும் ஆங்கில நடையோ? இங்ஙனம் வருவது வேற்றுமை மயக்கமே யாம்' என்பது.

இனி இவ்வித்துவான் கூறிய விடை பொருத்தமானதன் றென்று காட்டுவாம். 'எண்ணம் எனக்கு ஒருபோதும் இல்லை' யென்ற சாத்திரியார் கூற்றிலே வேற்றுமை மயக்கமாகக் கொள் வதற்கு இடமில்லையென்று யாம் முன்னமே கூறினமாகவும்

எமது குறிப்பை அவர் உணர்ந்து கொள்ளாது பொருத்தமற்ற ஓர் உதாரணத்தைக் காட்டிச் சாத்திரியார் வளைவை நிமிர்க்கப் பார்க்கிறார். இவர்

'.முதலும் சினையும் எனவும்,
இடமும் இடத்து நிகழ்பொருளும் எனவும்,
பண்பும் பண்புடைப் பொருளும் எனவும்,
வினைமுதலும் வினையும் எனவும்

கூறப்படும் பொருள் வேற்றுமை யிலக்கணத்தையும் தொழிற் பெயரோடு பண்புப் பெயரிடையுள்ள வேற்றுமையையும் தெரிந்து கொண்டாரிலர். வேற்றுமை மயக்கம் என்பதொன்றும் இவர் பெயரால் தெரிவர். இன்ன வேற்றுமை உருபும் பொருளும் இன்ன வேற்றுமை உருபும் பொருளுமாக மயங்குதற்குரியன என்னும் இலக்கணவரையறை அறியார். சாத்திரியார் கூற்றில் வந்த 'எனக்கு' என்பதன் எழுவாய் வேற்றுமைப் பொருளாகிய 'யான்' என்பதற்கும் 'எண்ணம்' என்பதற்கும் என்ன தொடர்பு? கலிப்பாவடியில் வந்த 'இவட்கு' என்பதன் எழுவாய் வேற்றுமைப் பொருளாகிய 'இவள்' என்பதற்கும் 'அருள்' என்பதற்கும் என்ன தொடர்பு? என்று நோக்கின், முன்னது வினைமுதலும் வினையுமாகிய நிலையில் உள்ளதென்பதும் பின்னது பண்புடைப் பொருளும் பண்புமாகிய நிலையில் உள்ளதென்பதும் அறியலாகும். பண்புடைப்பொருளும் பண்பும் ஆகிய நிலையில் உள்ள பொருள்கள் இடமும் இடத்து நிகழ்பொருளும் ஆகிய நிலையில் நிற்பதும் ஒரோவழி உண்டு. எவ்விடத்து அருள் உள்ளது (இல்லை) யென்று வினவெழுப்பின் அவளிடத்து உள்ளது (இல்லை) யென்று விடையிறுத்தல் சாலும். 'இடமும் இடத்து நிகழ்பொருளும்' என்பனவற்றை வடநூலார் 'ஆதார வாதேயம்' என்பர். எனவே, 'அருள்' என்னும் பண்பிற்கு 'அவள்' என்பது பண்புடைப் பொருளாவதன்றியும் அதற்கு ஆதாரமும் ஆயிற்று. ஆகவே 'அவள்' என்பது இடப் பொருண்மைக்குரிய ஏழாம்வேற்றுமை உருபேற்று அவளிடத்து அருள் இல்லை' யென வருதற்குரியதாகும். 'எனக்கு—எண்ணம் இல்லை' யென்புழியோ எண்ணம் என்பது தொழிற்

பெயர். எனவே வினையென்பதாயிற்று. எண்ணுதலாகிய தொழிற்கு 'யான்' என்பது வினைமுதலாயிற்று; 'யான்' என்பது அத்தொழிலுக்கு ஆதாரம் எனப்படுவதன்று; அதற்கு ஆதாரம் என்பது அத்தொழில் நிகழ்ந்த விடமேயாம். ஆகவே ஈண்டு 'யான்' என்பது ஆதாரப் பொருண்மைக்குரிய ஏழாம் வேற்றுமை உருபேற்று 'என்னிடத்து' என வருதற்குரியதன்று; 'அவர் வாழ்தல் இலர்' 'அவர் சாதல் இலர்' 'அவர் உண்டல் இலர்' 'அவர் பார்வை யிலர்' என்பனவற்றை 'வாழ்தல் அவரிடத்து இல்லை' 'சாதல் அவரிடத்து இல்லை' 'உண்டல் அவர்கண் இல்லை' 'பார்வை அவர்கண் இல்லை' யென முறையே வாய்பாடு மாற்றியுரைக்கின் பொருந்தாமை அறிந்து கொள்க.

இனி, இம்மறுப்பில் குறிக்க சாத்திரியார் உரைநடை தமிழ் உரைநடை யன்றெனவும் ஆங்கிலவுரைநடை யெனவும் யாம், குறித்தது எப்படியென்று வித்துவான் ஐயர் வினவினர். இவர் 'கூறுவன அனைத்துங் குற்றமில் கூற்று என்ற எண்ணம் எனக்கு ஒருபோதும் இல்லை' என்ற வாசகத்துள் 'ஒருபோதும்' என்னுஞ்சொல் நின்று பயனென்னை? 'என்ற' என்புழி என்றற் றொழிற்கு வினைமுதல் யாது? 'என்ற எண்ணம்' என்புழி 'என்ற' என்னும் பெயரெச்சம் தொல்காப்பிய விலக்கணத்தின்படி எவ்வகைப் பெயரைக் கொண்டு முடிந்தது? அத்தொடரை விரித்து முடித்துக் காட்டுவது எப்படியென்று ஆராய்ந்து தெரிவிப்பாராயின், அவர்க்கு அது தமிழ் உரைநடை யன்றெனவும் ஆங்கிலவுரைநடையே யெனவும் விளங்கும் என்க. சாத்திரியார் ஆங்கிலவுரைநடையைத்தழுவி யெழுதியன கணக்கிறந்தன. அவற்றுள் சிலவே முன்னர்க்குறித்தேன். அவர் தம் முகவுரையுள் 'வித்துவான் திரு—நாராயணையங்கார் அவர்களுக்கு என் நன்றியைக்காட்டுகின்றேன்.' 'வித்துவான் மு. இராகவையங்கார் அவர்களுக்கும் என் நன்றியைக் காட்டச் சொற்கள் உளவோ.' என்றும் எழுதினர் அல்லரோ? அவர்களுக்கு நன்றியைக் காட்டுவது எப்படியோ? இவ்வாறு தமிழ்ப்புலவர் யாரேனும் எழுதுவார் உளரோ? இதுதானும் தமிழ் உரைநடை

வழக்கோ அதுவன்றி ஆங்கிலவுரை நடைவழக்கோ? இதனை யேனும் வித்துவான் ஐயர் ஆராய்ந்துபார்த்து தமது ஐயம் தெளிந்து கொள்வாராக.

இத்துணையும் கூறியவாற்றால், வித்துவான் வேதாசலவையர் 'மறுப்பின் மறுப்பு' என எழுதியனவெல்லாம் மாருதம் அறைந்த பூளையாய்ப் போயினவாறு கண்டு கொள்க. அவர் தம் மறுப்புக் களைத் தாவீபுலாக நியாயமாக நிகழ்த்தினதாகக் குறித்தார். அவர் தாவீபுலாக நியாயமாக நிகழ்த்தியதெல்லாம் தமக்குத் தொல்காப்பிய வாராய்ச்சி சிறிதும் இன்மையும் தாம் ஒன்றை யொன்றுகப் பிழைபடவுணர்ந்து 'விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறு'—மேயாம். தமிழ் உரைநடை காலத்துக்கு ஏற்றபடி வரைபலாம் என்று பேராசிரியரும் மரபியலுரையுள் கூறினர் என்ற இவர் பிதற்றுரையே இவர் தொல்காப்பிய வாராய்ச்சி சிறிதுமில்லார் என்பதற்கு அமையும் சான்றாயிற்று என்க.

முற்றும்.

தஞ்சை - திருச்சி ஜில்லா

தமிழ் மாணுக்கர் மகாநாடு

துறையூர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையுரை

அன்பார்ந்த சகோதரிகளே, சகோதரர்களே,

தஞ்சையும் - திருச்சியும் ஒன்றிக் கூட்டிய தமிழர் மகா நாட்டுச் சார்பில், இன்று இவண் ஈண்டியுள்ள தமிழ் மாணுக்கர் மகாநாட்டில் தலைமை வகிக்கும் பேற்றை எனக்கு வழங்கிய உங்கள் அனைவர்க்கும் எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். தமிழர் மகாநாட்டுக்கு ஓர் அமைச்சரும்,

தமிழ்ப்புலவர் மகாநாட்டுக்கு ஒரு புலவரும் தலைமை பூண்டது சால்பேயாகும். தமிழ் மாணக்கர் மகாநாடும் சிறப்புடைய ஒருவர் தலைமையில் கூடுவது முறைமை. உடல் உரமும் உள்ளக் கிளர்ச்சியுங் குன்றி ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் எனது தலைமையை நீங்கள் விழைந்தது எற்றுக்கு என்பது விளங்கவில்லை. உங்கள் துணைகொண்டு நீங்கள் குறித்த கடனாற்ற ஒல்லும் வகை முயல்கிறேன். குற்றங் குறைகள் நிகழுமேல் மன்னிப்பீர்களாக.

சோழ நாடு

இக்காலத் தஞ்சை - திருச்சி ஜில்லாக்களின் பரப்பு, இடைக்காலச் சோழநாட்டின் பெரும்பகுதியைக் கொண்டது என்பது உங்கட்குத் தெரியும். இக்காரணம் பற்றி இம்மகா நாட்டைச் சோழநாட்டு மகாநாடு என்று கொள்ளுதற்கும் இடனுண்டு.

சோழநாடு தொன்மை வாய்ந்தது; மாண்புடையது; நாகரிகத்தில் முதிர்ந்தது. அதன் வளம், அரசு, வண்மை, வீரம், கல்வி, தொழில் முதலியன சரித்திர ஆழியில் பதிந்து கிடக்கின்றன.

சோழ நாட்டின் இயற்கை போற்றற்குரியது. மக்கள் வாழ்விற்கு ஏற்ற பெற்றியில் அஃது அமைந்திருக்கிறது. வெம்மையால் வெந்து எரிதலும், தண்மையால் நடுக்கி வீழ்தலும் சோழநாட்டு இயற்கையிலில்லை. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும் சோழநாட்டுச் செல்வங்களாய் மக்களுக்கு இன்பூட்டுகின்றன.

'வான்பொய்ப்பினும் தான் பொய்யா'க் காவிரி, பாட்டெனப் பரந்து, கிளைகிளையாகப் பிரிந்து, கால் காலாய் விரிந்து சோழநாட்டை அணி செய்கிறது. காவிரிப் பயனைச் சோழநாடு நுகர்தலால், அது புனல் நாடாய்ச் சோறுடைத்தாயது போலும்!

சோழநாட்டு மன்னர்களின் வீரமும், வண்மையும், பிறவும் ஆட்சி முறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குவன.

சோழ மன்னர் வீரம் இமயம் வரை முட்டியது ஈண்டு நினைவிற்கு வருகிறது. சோழ மன்னரின் மாண்புக்குக் கரிகாற் பெருவளத்தான் வரலாறு ஒன்று சாலும்.

கண்ணகியென்னும் வீரத்தாயையும், மணிமேகலை என்னும் அறச் செல்வியையும் ஈன்ற பெருமை சோழநாட்டிற்கு உண்டு. அவர்கள் வழிச் சிலப்பதிகார மென்னுங் கற்பகமும், மணிமேகலை யென்னுங் காமதேனுவும் பிறந்தன. காதலின்பமும், அதன் வழிக் கடவுளின்பமும் ஒன்றித் தேங்கும் அமிழ்தக் கடல் நம்பெருஞ் சிலப்பதிகாரம். அஃதீன்ற மகவு மணிமேகலை.

சோழநாட்டிற் றோன்றிய அன்பர் பலர்; அறவோர் பலர்; பாவலர் பலர்; வீரர்பலர். அவர்தம் மொழிகளும் செயல்களும் உலகைப் பல வழியிலும் வளர்த்து வருகின்றன. சோழ நாட்டை ஓர் ஓவியக்கூடல் என்றுங் கூறலாம். சோழநாட்டுப் பழம்பெருங் கோயில்கள் ஓவியக்காட்சி வழங்குதல் வெள்ளிடைமலை. வேறுபல சிறப்புக்களும் சோழநாட்டை அழகு செய்கின்றன.

சிலம்பையும் மேகலையையுந் தந்தசோழநாடு இப்பொழுது இருக்கிறதா? அச்சோழநாடு மறைந்து விட்டது. அதன் நிலப்பரப்புமட்டும் இப்பொழுது இருக்கிறது. நாடு என்பது வெறும் நிலப்பரப்பை மட்டுங் குறிப்பதன்று. அரசு கல்வி வாழ்வு நாகரிகம் முதலியன சேர்ந்த ஒன்று நாடு என்பது. மறைவுற்ற சோழநாட்டைச் சரித்திரத்திற் பரக்கக் காணலாம். சரித்திரத்தில் அக்காலச் சோழ நாட்டையும் இக்காலச் சோழ நாட்டையும் ஒப்பிட்டு நோக்கிச் சோழ நாட்டை நன்முறையில் பண்படுத்தல் வேண்டும்.

சரித்திரம் வீணுக்கு ஏற்பட்டதன்று. அது பாடத்துக்கும் பட்டத்துக்கும் மட்டும் ஏற்பட்டதன்று. முற்கால தற்கால நலந்தீங்குகளை யுணர்ந்து, தீங்கைக்களைந்து நலத்தைக் கொண்டு, ஒழுங்குபட்ட வாழ்வு நடாத்த வழிகோலிக்கொள்ளுதற்குச் சரித்திர உலகம் ஏற்பட்டது. சரித்திரக் கண்கொண்டு எதையும் ஆராயவேண்டுவது நம் பெருங் கடமை.

ஆராய்ச்சித்துறை நன்றாது, ஒன்றைப் பழமை என்றதும் அதனைப் போற்றவோ தூற்றவோ புகுவதும், அவ்வாறே ஒன்றைப்புதுமை என்றதும் அதனைத் தூற்றவோ போற்றவோ புகுவதும் பகுத்தறிவுச்செயல்கள் ஆகா. பழமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம். அங்ஙனே புதுமையில் தீயனவும் இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழமை புதுமை என்னும் அளவில் நின்று ஒன்றைத் தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமையாகாது. அதன் அதன் தன்மைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமை.

தற்கால உலகிற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது. அவ்வாராய்ச்சிக்குரிய பலதிறக் கல்வித் துறைகளைப் பயிலும் பருவம் எது? உங்கள் சிரிய செம்மைப் பருவம் என்று சொல்லவும் வேண்டுமோ? வருங்கால உலகுக்குரிய ஆக்கங்களைத் தம்மாட்டு மாணுறஆக்கும் முயற்சியில் தலைப்பட்டுள்ளோர் மாணக்கராவர் என்று சுருங்கச் சொல்லலாம். இப்பருவமுடைய நீங்களல்லவோ நாட்டின் செல்வம்?

வருங்கால உலகை ஆக்கும் வாய்ப்பு உங்களிடமிருக்கிறதெனில் உங்கள்பொறுப்பு எத்தகைத்து என்பதைஉன்னுங்கள். உங்கள் பொறுப்பு, பெரிது! பெரிது! கடலினும் பெரிது! இப்பொறுப்பு வாய்ந்த மாணக்கர்கட்குரிய கடமைகள் பலப்பல. அவைகளை இம்மகாநாட்டுத் தலைமையுரையில் எங்ஙனம் விரித்துரைப்பது? இன்றியமையாத மிகச் சிலவற்றை மட்டும் ஈண்டுச் சுருங்கச் சொல்ல முயல்கிறேன்.

உடலோம்பல்

'சுவரை வைத்தே சித்திரம் எழுதல் வேண்டும்' என்பது பழமொழி. எதற்கும் உடல்நலன் வேண்டற்பாலது. பெரும் பொறுப்பை ஏற்கப்போகும் நீங்கள் உடல் நலனைப் பேணுதல் வேண்டுமா வேண்டாமா என்பதை உன்னுங்கள். கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக் கழுத்தும், பீடுநடையும் உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்.

"இஃதென்ன மாயும் உடல்; இவ்விழிந்த உடலைப் போற்றி ஓம்பப் புகுதல் அறியாமை" என்று சிலர் சொல்வதுண்டு. அருமை மாணுக்கர்களே! இப்போலிக் கூற்றுக்குச் செவி சாயாதேயுங்கள். உடலை வெறுத்தல், பெண்ணை வெறுத்தல், மண்ணை வெறுத்தல், பொன்னை வெறுத்தல் முதலியவற்றைக் கொண்ட வெறுப்புத்துறவு, நாட்டிற்கு என்புருக்கி நோயாய், நாட்டை அலைத்து அரித்துக் குலைத்து வருகிறது.

தனு கரண புவன போகங்கள் ஆண்டவனுல் அளிக்கப் பட்டன. அவைகளை ஏன் நீத்தல்வேண்டும்? அவைகளை நீத்தல் என்பது ஆண்டவன் படைப்பையே அவமதிப்பதாகும். தொல்காப்பியனுர் திருவள்ளுவனுர் முதலிய அறிஞர்கள் மொழி களை எடுத்துக் காட்டிப் பொல்லாத் துறவுக்கோளை நிருத்தச் சிலர் முயல்வதை யான் அறிவேன். அவர்தங் கூற்றுக்கு உரை யாசிரியர்களின் கூற்றுக்கள் துணை நிற்குமேயன்றித் தொல் காப்பியனுர் திருவள்ளுவனுர் கூற்றுக்கள் துணை நில்லா.

தொல்காப்பியனுர் திருவள்ளுவனுர் உள்ளிட்ட பெரி யோர்கள் பொல்லாத "வெறுப்புத்துறவை" அறிவுறுத்தவில்லை என்பதையும், இயற்கையோடியைந்த இன்ப அன்பு வாழ்வை நடாத்தி, உலகுக்கு நலஞ்செய்யும் பேரறத்தை ஓம்புமாறு அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறுர்கள் என்பதையும் என்னுடைய நூல்கள் பலவற்றில் ஒல்லும் வகை விளக்கியிருக்கிறேன். "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் நூலினும், "முருகன் அல்லது அழகு" என்னும் நூலினும் சிறப்பாக இயற்கையறத்தை வலியுறுத்தி "வெறுப்புத்துறவு" இயற்கைக்கு மாறுபட்ட தென்பதைக் கடாவிடைகளான் நிறுவிக் காட்டியுள்ளேன். விரிவு ஆண்டுக் காண்க.

சில மாணுக்கர்கள் உடலை ஓம்பாது, இரவும் பகலும் ஏடுகளைக் கட்டியழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் வாழ்வு இரங்கத்தக்கதாக முடியும்; சில விடங்களில் அவ்வாறு முடிந்ததும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அளித்த அரிய உடலை நல்வழியில் ஓம்பாதாரை இயற்கையன்னை ஒறுத்தே

தீர்வான். அவ்வொருத்தனுக்கு ஆளாகாத வழியில் உடலை ஒப்பவேண்டுவது உங்கள் கடன்; தலையாய கடன் என்றுங் கூறுவேன்.

மாணாக்கர்கள் பார்வைக் கினியராயிருத்தல் வேண்டும். இளமை அழகுள்ள விடத்தில் இனிமையுண்டு. மாணாக்கர் உடலில் இளமை மணங்கமழின் அதன்கண் அழகொளி வீசும். "கண்கொளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப - விண் கொள்ளாப் பேரொளியான்" எனவருஉஞ் சேக்கிழார் மொழியின் பொருளாக மாணாக்கர்கள் இலங்க விரும்புவார்கள் என்றே நினைக்கிறேன். கம்பனும் "கந்தனை யனையவர் கலைதெரிகழகம்" என்று கூறியதும் கண்டுக் கருதற்பாற்று.

இளமை அழகுக்கு இயற்கை வாழ்வு வேண்டற்பாலது. அதற்கு முதலாவது ஒழுங்குவேண்டும். இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒழுங்கு என்னுங் கோட்டின் வழியே இயங்குகிறது. ஆகவே, இயற்கையோடியைந்த வாழ்விற்கு ஒழுங்கு இன்றியமையாதது.

நம்மிடத்தில் ஒழுங்கில்லை என்று உலகமே நம்மீது பழி சுமத்துகிறது. லார்ட் நார்த்கிளிப் என்பார் "கண்டவிடங்களில் எச்சில் துப்புதலும், வாழ்வில் ஒழுங்கீனமும் இந்தியரை விட்டகலாத குற்றங்கள்" என்னுங் கருத்துப்பட ஒருபோது சொற்றனர். இக்குற்றங்கள் நம்பால் ஊடுருவிக் குருதியிற் கலந்து நிற்றல் உண்மையே. "ஒழுங்கு ஊராளும்" என்பது பழமொழி. ஐரோப்பியர் வாழ்வில் ஒழுங்குஎன்பது ஊடுருவிப் பாய்ந்து நிற்கிறது. அவர்தம் ஒழுங்கு, ஊரையும் ஆள்கிறது; உலகத்தையும் ஆள்கிறது. அவர்களிடத்திலிருந்து நாம் கற்கத் தக்கனவற்றுள் ஒழுங்கும் ஒன்று.

ஒழுங்கை மாணாக்கர்கள் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுவார்களானால், வருங்காலத்தில் நாடே நன்னிலை எய்தும். படுக்கைவிட்டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலியன குறித்தகாலத்தில் நிகழுமாறு பயிற்சி செய்யின், அவைகளினின்றும் வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கிற்கு வரும்.

காலையிலும் மாலையிலும் உலவுதல் நல்லது. உலாவரலில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதவர் ஏதாயினும் வேறுவிதப்பயிற்சி செய்யலாம். அன்னார் குதிரை ஏற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலிய வற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம். பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

தீட்டிய அரிசியைத் தள்க; கொழியல் குத்தரிசியைக் கொள்க. கீரை காய் கனிகளை உண்க. காப்பி டீ கொக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளனீர் முதலியன அருந்துக. வாதுமை, நிலக்கடலை, தேங்காய் இவைகளில் கொழுமையுண்டு. எதையும் அளவறிந் துண்பது சால்பு. மட்பாண்டச் சமையல் நல்லது. பசியெழுந்தபின்னை உண்ணும் பயிற்சி உடலோம்புவதாகும். வேளைக்குவேளை பசியெழும்பு வது உடலோம்பு முறையைப் பொறுத்திருக்கிறது. சுருட்டு பீடி சிகரெட் முதலியவற்றைக் கனவிலுங் கருதாதேயுங்கள். தரைச் செலவு கடற் செலவு முதலியனவும் உடலோம்பலுக்குத் துணை செய்வன.

உடற்பயிற்சியை ஒழுங்காகச் செய்தும், பொருந்திய உணவைத் திருந்த உண்டும், நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச் செய்யப் பயிலல் வேண்டும். இல்லையேல், உடல் நலனுறாது. தீய எண்ணங்கள் நரப்புக் கட்டைக் குலைத்து, நரப்புக் குழாய் களில் நஞ்சூட்டி, உறுப்புக்களை அரிக்கும்.

மனிதன் எவன்? அவன் எதனால் ஆக்கப்படுகிறான்? 'மனி தன் எண்ணம்'. அவன் எண்ணத்தால் ஆக்கப்படுகிறான். எண் ணங்கட்கு நுண்ணிய உருவங்கள் உண்டென்பதும், நிறங்கள் உண்டென்பதும் இந்நாளில் ஆராயப்பட்டுவருகின்றன. இங்கே சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் பிரான்சு தேசத்து டாக்டர் பாரடக் என்பார். எண்ணமே மனிதனைக் காரியப்படுதலால் எத்தகை எண்ணம் நெஞ்சில் எழுதல் வேண்டும்?

நல்லெண்ணங்களைப்பற்றி பேசலாம்; எழுதலாம். பேச்சும் எழுத்தும் என் செய்யும்? மன்பதையைச் சுற்றி எத்துணையோ

நிலைகள் சூழ்ந்து நிற்கின்றன! 'ஜனநாயகம்' என்னும் 'நாகரிகத்தாய்' ஈன்று வரும் நச்சுக் குழவிகள் பெருகிக் கொண்டே போகின்றன. பத்திரிகை யுலகிலும் தேர்தல் திரு விழாவிலும் ஈடுபட்டவர்கட்கு அக்குழவிகளின் இயல்பு நன்கு தெரியும். மன்பதையை அடிமையாக்கும் பேய்கள் கோடிக் கணக்கில் நடமாடுகின்றன. அவைகளிடையில் மக்கள் நல் லெண்ணமுடையவர்களாக வாழ்தலின் அருமையை விளக்க வேண்டுவதில்லை. பின்னை எங்ஙனம் நல்லெண்ணங்களை நெஞ்சில் பிறக்கச் செய்வது?

உள்ளத்தின் இயல் ஒன்றைச் சார்ந்து நிற்பது. அச் சார்பு தீயதாயிருந்தால் தீய எண்ணம் பிறக்கும். நல்லதாயிருந் தால் நல்ல எண்ணம் பிறக்கும். தீய எண்ணத்துக்குரிய சார்புகள் பலஉண்டு. நல்லெண்ணத்துக்கும் சார்பு வேண்டு மன்றோ? "மனநெடுந் தேரேறிப்" பாருங்கள்.

தீய எண்ணங்கட்குத் தாயகமாயுள்ள தத்துவங்களைக் கடந்து கடந்து அறிவாய் அன்பாய் இன்பாய் நிற்கும் ஒன்றிருக் கிறது. அவ்வொன்றைப் பல மொழியில் பலவாறு பலர் அழைத்துப் போந்தனர். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம் - திரு நாமம்பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ" (திருவாசகம்) எனவும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (திருமந்திரம்) எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளையும் நோக்குக. பேர்களைப்பற்றிப் பெரும் போர் களும் அறியாமையால் நிகழ்ந்து வருகின்றன. அப் போராட் டமும் தீய எண்ணங்களை உண்டுபண்ணுவதேயாகும். சமயப் போரிடுவோரைப் பார்க்கினும் நாத்திகர் நல்லவர் என்பது எனது கருத்து. உலகில் இழிந்த ஒன்று சமயப்போரேயாகும். உண்மைச் சமயம், போரிடுமாறு அறிவுறுத்தவில்லை. சமயம் வேறு; சமயவாதம் வேறு. சமய வாதத்தைச் சமயமாக் கொண்டு சிலர் சமயத்தையே தாக்குகிறார். அது தவறு. இது நிற்க.

நல்லெண்ணத்துக்குக் கொழுக் கொம்பாக அன்புக் கடவுளைக் கொள்வது சிறந்தவழி. நெஞ்சம் மேலானபொருளை

நினைந்து நினைந்து பண்படும்போது, அதன்பால் அம்மேலான பொருள்களின் இயல்கள் படிகின்றன. அவை படியப்படிய நல்லெண்ணங்கள் பெருகும். இம்முறையின் இன்றியமையாமை, உள்ளத்தின் இயலை நன்கு ஆராய்ந்துணர்ந்த வில்லியம் ஜேம்ஸ் முதலிய பேரறிஞர்கட்கும் விளங்கியிருக்கிறது.

"அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய் யானிதற் கிலனோர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே சீருடைச் சிவபுரத் தரைசே."
—மாணிக்க வாசகர்.

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு, நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று, வனைந்துவனைந் தேத்துதுநாம் வம்மின்உல கியலீர் மரணமிலாப் பெரு வாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர், புனைந்துரையேன் பொய்ப்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன் பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே".
—இராமலிங்க சுவாமிகள்.

இச்செம்மொழிகளை நோக்கி உண்மையுணர்ந்து, இளமை தொட்டே தியானப்பயிற்சி செய்தால் வாழ்வில் நலன் விளையும்.

தியானம் என்பது பொது. அதற்குரியமுறைகள் அவரவர் அறிவு ஆற்றல் இயல்பு முதலியவற்றிற்கேற்ற வண்ணம் தாமே அமையும். எல்லாங்கடந்து அறிவாய் அன்பாய் இன்பாய் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை அவரவர் விரும்புமாறு நினைக்கலாம்.

மக்கள் அனைவரும் ஒரு நெறிபற்றி நடப்பதில்லை. ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்றில் ஒவ்வொருவித விருப்பம் நிகழ்தல் இயல்பு. எல்லாரும் ஒருவித உணவு கொள்கிறாரில்லை; எல்லாரும் ஒருவகைக் கல்வி பயில்கிறாரில்லை; எல்லாரும் ஒருவித உடையணிய விரும்புகிறாரில்லை. இப்பலவகையால் விளையும் பயன்மட்டும் ஒன்றே. அவ்வாறே தியான முறைகள் அவரவர் இயல்புக்கேற்பப் பலபடினும், விளைவு மட்டும் ஒன்றே என்பது உன்னற்பாலது. விரிவஞ்சி இவ்வளவில் நின்று மேற்செல்லுகிறேன்.

கல்வி

உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்ப்பட நேரும். அறிவோம்பலுக்குக் கல்வி வேண்டற்பாலது. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமைப்பருவம் என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே "இளமையிற் கல்" என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் பெரிதும் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டுங் கல்வியாகாது. தொழிற்கல்வி முதலியனவுங் கல்வியின்பாற் பட்டனவே.

கல்வித் துறைகள் பலதிறத்தன. அவைகளுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவுபெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும்.

இக்காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்குப் போற்றற்குரியதே. ஆனால் பெரும் பான்மையோர் அக்கல்வியை எந் நோக்குடன் பயில்கிறார்? உத்தியோக நோக்குடன் என்று சொல்ல வேண்டுவதில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக்கிறது? அவர்தம் நிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. வேலையின் பொருட்டு இளங் கொழுந்துகள் படுந் துன்பம் அளவிடற் பாலதன்று. இவ்வேளையில், உத்தியோக நோக்குடன் கல்விபயிலுதல் வேண்டாமென்றும், அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டுமென்றும், இயற்கை அன்னை எச்சரிக்கைசெய்த வண்ணமாயிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணுக்கர்கள் செவிசாய்த்து நடப்பார்களாக; செவிசாய்த்து அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழிற்றுறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவார்களாக.

நமது நாட்டில் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமாயிருக்கின்றன. அவைகளுள் ஒன்று, எம்மொழியிற் கல்வி பயிலவேண்டுமென்பது. சீர்குலைந்த ஒருநாட்டில் - கட்டில்லா ஒரு நாட்டில்-கலையறிவிழந்த ஒரு நாட்டில்-தலை கீழாராய்ச்சிகள் பல நாளுக்கு நாள் பெருகுதல் இயல்புபோலும்!

தாய் மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய் மொழிப் புலமை நிரம்பப்பெற்ற பின்னை வேறு பலமொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல்வேண்டும். "தாய் நாடு" என்னும் பெயர், தாய் மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

மேல்நாட்டினர் ஒவ்வொருவரும் தாய்மொழிப் பற்றுடையராய் வாழ்தல் கண்கூடு. காலஞ்சென்ற அறிஞர் கிரிபத்தைப் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவர் அயர்லந்து தேசபக்தர்; ஐரிஷ்மொழியில் புலவர். ஐரிஷ்மொழியின் ஆக்கத்தால் அயர்லந்துக்கு நலன் விளையும் என்று உறுதிகொண்டு, அதை வாழ்விடை நடாத்தி, அவர் வெற்றியும் பெற்றார். வட இந்தியரும் தாய்மொழிப் பற்றுடையவராகவே வாழ்கிறார். கவி மன்னராகிய ரவீந்திர நாதர், கீதாஞ்சலி என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் எம்மொழியில் யாத்தனர்? தந்தாய்மொழியாக உள்ள வங்கத்திலன்றோ அச்சிரிய நூலை அவர் முதல் முதல் யாத்தனர்? பின்னரே அவர் அதனை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதினார். கல்விக் கடல் என்று போற்றப் பெற்ற பாலகங்காதர திலகரை நீங்களறிவீர்கள். அவர் ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்; அம்மொழியிலுள்ள பல கலைகளை ஆய்ந்தவர். அப்பெரியார் மூன்று முறை சிறை புகுந்தபோது சிறைக் கோட்டத்தில் கீதாரகசியம் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றினார். அவர் அதை எம்மொழியில் எழுதினார்? தந் தாய் மொழியாக உள்ள மகாராஷ்டிரத்திலன்றோ அவர் அதை எழுதினார்? காந்தியடிகளை நோக்குவோம். அவரும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அவர் எழுதும் ஆங்கிலம் ஆங்கிலேயராலேயே போற்றப் படுகிறது. 'ஹிந்தி மொழி இந்திய நாட்டு மொழியாதல் வேண்டும்' என்று முயன்று வருவோருள் அவர் தலையாயாரென்பதும் உங்கட்குத் தெரியும். இக்காந்தியடிகள் தமது வரலாற்றை எம்மொழியில் எழுதினார்? ஆங்கிலத்தில் எழுதினாரா? அல்லது ஹிந்தியில் எழுதினாரா? அவர் எற்றுக்குத் தமது வரலாற்றைத் தம் தாய் மொழியாக உள்ள கூர்ஜரத்தில் எழுதிக்காட்டினார்? இப்பெரி

யார்களின் வாழ்வுஞ்செயலும் பிறவும் உலகுக்கு எடுத்துக் காட்டுகளாக நின்று துணைசெய்வன. தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்று என்பதை அவர்கள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல உணர்ந்தே தாய்மொழிக்கு ஆக்கந்தேடினார்கள். ஆங்கிலம் பயின்ற இக்காலத் தமிழன் ஒருவன், ஒரு துறையில் பெரியனாய்த் தன் வரலாற்றைத் தான் எழுதும் வாய்ப்பு, தனக்கு நேருமேல், அவன் அதைத் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் புகுவானா அல்லது ஆங்கிலத்தில் எழுதப்புகுவானா என்று கேட்கிறேன். நீங்களே விடை இறுத்தல் வேண்டும். தமிழனுக்குத் தாய்மொழிப் பற்றுப் போதிய அளவிலில்லை யென்பது உலகறிந்ததொன்று. தமிழனுக்குத் தாய் மொழியினிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ, அன்றே அவன் வாழ்வு மணம்பெறும்.

“கலைகளை எல்லாம் தமிழிலேயே போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பாக விஞ்ஞானக் கலைகள் இல்லையே” என்னுங் கேள்வி பிறக்கிறது. இஃது அறிவு செறிந்த கேள்வியாகாது. இக்கேள்விக்கு அறிஞர்கள் செவ்வ னிறையும் அவ்வப்போது இறுத்திருக்கிறார்கள். தமிழைக் குறைகூறும் ஆங்கிலம் பயின்றவர்களை நோக்கி, “விஞ்ஞானக் கலைகள் எல்லாம் முதல் முதல் ஆங்கிலத்திலா முகிழ்த்தன? விஞ்ஞானக் கலைகளிலுள்ள குறியீடுகளெல்லாம் ஆங்கிலமா?” என்று வினவுகிறேன். விஞ்ஞானத் துறையில் சிலபுதுமைகள் பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன; சில ஜர்மானியரால் காணப் பட்டன; சில ஆங்கிலராலுங் காணப்பட்டன; மற்றுஞ் சில மற்றமற்றவர்களாலுங் காணப்பட்டன. அவரவர் தாம்தாம் கண்ட புதுமைகளை முதல்முதல் தம்தம் தாய் மொழியில் வரைந்துவிடுகிறார். அவைகள் பின்னே பலமொழிகளில் பெயர்த்தெழுதப்படுகின்றன. இம்முறையில் மேல்நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. அம்மொழிபெயர்ப்பு முறை யைத் தமிழர்கள் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது.

குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றுங் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சி யுண்டென்பது இயற்கை நுட்பம். இக்காரணம்பற்றியே கலப்பு மணம் முதலியன உலகுக்கு அறிவுறுத்தப்படுகின்றன. கலப்பென்று தமிழையே மறைக்க முயல்வது தமிழுக்கு ஆக்கந் தேடுவதாகாது. தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும்

கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, "தமிழ் மொழியில் அறிவுக் கலைகள் இல்லை" என்னும் பழம்பாட்டை நிறுத்தி, "அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம்" என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறைபாடுகள் பலவுடைய) அண்ணுமலைப் பல்கலைக் கழகம் இத்துறையில் சிறிது நாட்டஞ் செலுத்தி வருவது உவகை யூட்டுகிறது. கலைகள் யாவும் தாய் மொழிவழி மாணுக்கர்க்கு அறிவுறுத்தப்பெறுங்காலமே தமிழ்த் தாய் மீண்டும் அரியாசன மேறுங் காலமாகும். பல துறைக் கலைகள் தாய்மொழி வாயிலாகப் போதிக்கப்பட்டால் மாணுக்கர் பலர் விரைவில் எளிதில் அவ்வக்கலைகளில் வல்லவராவர். இப்பொழுது கலைகளைப் பயிலுதற்கு வேறு மொழிப்புலமையும் தேவையா யிருக்கிறது. அதனுல் கலைகளின் அறிவு, தமிழ் மக்களிடைப் பரவாமற் போகிறது. மாணுக்கர்கள் அறிவுக் கலைகளைப் பயில்வதில் பேரூக்கஞ் செலுத்துவார்களாக. அவை களால் வாழ்வுக்கும் நாட்டுக்கும் பலவழியிலும் நலன் உண்டு.

தமிழ்மொழியில் காவியக்கலைகள் நிரம்பி இருக்கின்றன. தமிழர் தம் பண்டைச் செல்வங்களைக் காவியங்களிற் காண லாம். வித்துவான் பரீட்சை முதலியன இப்பொழுதுதோன்றி யிருத்தலால், மாணுக்கர்களுக்குத் தமிழ்காவியங்களைப் பயிலும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தமிழ்க் காவியப் பயிற்சியில் சில புது முறைகள் கொள்ளப் பெறுதல் நலம். கதைக்கும் பதவுரைக்கும் இலக்கணக் குறிப்புக்கும் மட்டும் காவியங்களைப் பயில்வதால் காவியங்களின்நோக்கம் நிறைவேருது. ஆங்கிலமுந் தமிழும் பயின்றவர்கள் அடிமை யுணர்வின்றிக் காவியங்களை ஆராய்ந்து பல நுட்பங்களை இப்பொழுது வெளியிட்டு வருவது ஆறுதலளிக்கிறது. இடைக்காலத்தில் வீழ்ந்துபட்ட தமிழ்க் காவிய உணர்வுக்கு இந்நாளில் புத்துயிரளித்தது ஆங்கில உணர்வு என்பதை மறத்தலாகாது.

காவியங்களிலுள்ள கதைகள் மீது கருத்திருத்திச் சிலர் காவியங்களைக் குறை கூறுகிருர். காவியங்கள் கதைக்காக மட்டும் எழுதப் பட்டன அல்ல என்பதை அச்சகோதரர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கதை ஒரு திருடனைப்பற்றிய தாகவு மிருக்கலாம். அவன் வரலாற்றைக் காவியமாக எழுதும் வாய்ப்பு ஒரு சிறந்த புலவருக்குக் கிடைக்கலாம். அவர் அக் கதையை ஒரு சார்பாகக்கொண்டு அக்காலத்து நிலைமையும் வாழ்வும் பிறவும் பொருள, இயற்கையின்பஞ் செறியத்திறம் படப் பாடுவார். திருடன் செயலைப் புலவர் எவ்வாறு வருணித்

துள்ளார் என்பதை நோக்கி இன்புறவேண்டுவது நமது கடமை. காவிய மெழுதிய புலவரைக் குறைகூறுவது அறியாமை. காவிய ஓவியம் எழுதவேண்டுவது அவர்தங் கடமை. புகைப்படங்களில் திருடன் படம் எடுப்பதில்லையோ? படக்காரனுக்குத் திருடனானால் என்ன? மற்றவனானால் என்ன? அவன் படம் நன்றாயிருக்கிறதா இல்லையா என்பதையே அறிஞர் நோக்குவர். திருடன் கதை எழுதுவோருந் திருடுமாறு எவர்க்கும் அறிவுறுத்தமாட்டார். திருட்டின் இழிவு திருடன் கதைவாயிலாக வெளிவரும் முறையிலேயே அவன் கதை அவரால் எழுதப்படும்.

ஒரு கல்லில் பொருள் பொதிந்த ஓர் அழகிய ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. அறிஞர் பலர் அவ்வோவிய வனப்பையுஞ் சிறப்பையும் கண்டு ஓவியமாகிறார். அவ்வேளையில் அவ்வழியே ஓவிய நுட்ப உணர்வில்லாத ஒருவன் போந்தான். ஓவியத்தை மகிழ்ச்சியுடன் நோக்கி அதன்பெற்றியைப் பேசுவோரை அவன் கண்டு, "இக்கல்லை இவர்கள் இவ்வளவு போற்றிப் புகழ்கிறார்களே" என்று எள்ளிப்போனான். அவன் நிலையும், காவியங்களைக் கதைக்காக மட்டும் பார்ப்பவன் நிலையும் ஒன்றே.

மனதுக்கு இயற்கை இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்கவல்ல முறையில் பழம்பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன. பரபரப்பு மிகுந்த இக்கால உலகில் அத்தகைக் காவியங்கள் அமைதல் அரிது. இளமைக் காவியப் பயிற்சி பின்னை வாழ்வில் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஓவியத் துறையிலும் மாணாக்கர்கள் பயிற்சிபெற முயல்வார்களாக. ஓவியத்துக்கும் காவியத்துக்கும் வேற்றுமை பெரிதும் இல்லை. இயற்கை நுட்பங்கள் ஓவியமாக வரையப்படுகின்றன. காவியங்களில் அவைகள் எழுத்தால் எழுதப்படுகின்றன. இரண்டும் இயற்கைப்படங்களே யாகும். இவைகள் நம்மையும் இயற்கையையும் ஒன்றுபடுத்தப் பாலம்போலத் துணைசெய்யும்.

ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலயங்களிற்புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலை மீதிவர்ந்து, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள். ஆண்டவன் இயற்கை ஓவியத்தைக் கண்டுகொண்டு

மகிழுங்கள்; மண்வழங்கும் பரந்த பசுமையிலும், வெண்மையிலும், நீலத்திலும், விண்வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள்; காலையில் நீலக்கடலில் இளஞாயிறு வானிலும் கடலிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்:—அருவி முழவும், குயில் குரலும், வண்டிசையும், மயில் ஆலலும், மலர்மணமும், தேனினிமையும், தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாக, இயற்கை அன்னையைப் பாருங்கள். ஆங்கே சூழ்ந்துள்ள செடிகொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்றுநோக்கிச் "சிலசெடிகள் பூமியிற்படர்தலும், சிலசெடிகள் எழுந்து நின்றலும், சிலகொடிகள் நீண்டுநீண்டு படிந்தும் சிலகொடிகள் சுருண்டுசுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள்கிளையும், சில மரங்கட்கு விழும், கிளிக்கு வளைந்த மூக்கும், யானைக்குத் துதிக்கையும், மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்" என்று உன்னுங்கள். அந்தியில் ஞாயிறு அமரும் கோலத்தையும், பறவைகள் பறந்து செல்வதையும், கால்நடைகளின் மணியோசையையுங் காணுங்கள்; கேளுங்கள். நீலவானில் வெண் திங்கள் தோன்றித் தண்ணிலவு பொழிவதை நோக்குங்கள். அந்நிலவு பசுமைக்கானிலும் பைங்கூழிலும் வெண்மணலிலும் நீலக்கடலிலும் படிந்து வழங்கும் அழகுக் காட்சியில் மூழ்குங்கள். மூழ்கி இன்புற்று, மலையினின்றும் இழிந்து, வென்றி அடல்விடைபோல் நடந்து வீடுசேருங்கள். இவ்வாறு இயற்கைக் கழகத்தில் பயின்று பயின்று, சங்கப்புலவர்கள், இளங்கோ, திருத்தக்கதேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பன், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கிறார்கள் என்று ஆராயுங்கள்; பழைய கோயில்களிலும் மன்றங்களிலும் நுழைந்து, சிற்பர்கள் இயற்கைத் திருக்கோலத்தை எவ்வாறு ஓவியங்களில் வடித்திருக்கிறார்களென்பதையும் வரைந்திருக்கிறார்களென்பதையும் உணர ஓவியங்களை ஊன்றி நோக்குங்கள். நந்தமிழ்க் காவியங்களும் ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் ஓம்புவதை உணர்வீர்கள்.

இசைப் பயிற்சியும் இன்றியமையாதது. இசைபாட, இயற்கை சிலர்க்குத் துணைசெய்யும்; சிலர்க்குத் துணைசெய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. இரண்டுமில்லா வாழ்வு கொலை வாழ்வாகும்.

பழைய தமிழர்கள் இசைத்துறையின் நிலைகண்டவர்கள் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த 'ழ' கரங்களை நினைக்கும்போதே அமிழ் தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர்தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அவ்யாழ் எங்கே? இறந்துபட்டது என்று சொல்ல விரைந்து நிற்கிறோம். பழந்தமிழர்கள் நமக்கு வழங்கிய உயிர்ச் செல்வங்களை அழிக்கவோ பிற்காலத் தமிழர்களாகிய நாம் பிறந்தோம்? போன கலைகள்போக. உள்ள கலைகளை யாதல் காக்கும் எண்ணமாவது தற்காலத் தமிழர்களிடை எழுகிறதா? ஆவேசத்துக்கும் பரபரப்புக்கும் திக்கிளர்ச்சிக்கும் இரையாகும் பாழ்நெஞ்சம் கலைகள்மீது செல்லுமா? தமிழ்த்தாயின் யாழுங் குழலும் சிறுமையுற்றுக் கிடக்கின்றன. 'ஹார்மோனிய' ஒலி கேட்குங் காது, குழலிசை கேட்க விரும்புங்கொல்!

இசைப்புலவர்தொகை நாட்டிற் பெருகப்பெருக, நாடு, பலவழியினும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணுக்கர்கள் கருத்துச் செலுத்துவார்களாக.

நாடகக் கல்வி, வாழ்விற்கு வேண்டாம் என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கல்வியால் தீமை விளைந்த போது அதைச் சிலர் அழிக்க முயல்வதுண்டு. தற்போது நாடகம் நன்னிலையிலில்லை என்பதை ஈண்டு விளக்கவேண்டுவ தில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க மேல் நாட்டு நாடகக் கல்வியின் கூட்டுறவும் வேண்டற்பாலது. நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணுக்கர்களை அதன்கண் தலைப் படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர்கள் முயல்வார்களாக.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே." —அப்பர்.

தமிழர் யார்?

தமிழ் நாட்டில் தற்போது தமிழர் எவர் என்னும் போர் நிகழ்ந்து வருதல் உலகறிந்ததொன்று. இதைப்பற்றி ஒரு முடிவு காணவேண்டுவது அறிஞர் கடமை. அம்முடிவு காண் டற்கு இங்கே இன்று வாய்ப்பு நேர்ந்திருக்கிறது என்று கருது கிறேன்.

ஈண்டுத் தமிழர் என்னும் பெயரால் ஒரு பெரும் மகா நாடும், அதன் சார்பில் வேறிரண்டு மகாநாடுகளுங் கூடியிருக்

கின்றன. இம்மகாநாடுகளின் நோக்கம் என்னை? தமிழர்களின் முன்னேற்றம் என்று சுருங்கச் சொல்லலாம். தமிழர்கள் முன்னேற்றம் இன்றியமையாதது. அம்முன்னேற்றம் தமிழர் களின் ஒருமைப்பாட்டைப் பொறுத்து நிற்றலை எவரும் மறத்த லாகாது தமிழர் எவர் என்பதிலேயே கருத்து வேற்றுமை இருக்கும்பொழுது, தமிழர் எப்படி முன்னேற்றம் அடைதல் கூடும்? கருத்து வேற்றுமையால் தோன்றும் பிணக்கும் பிரிவும் பிளவும் வாளா கிடக்குமோ? அவைகள் தத்தங் கடன்களை ஆற்றிக்கொண்டேயிருக்கும்; ஆற்றிக்கொண்டிருத்தலையும் நாம் பார்த்து வருகிறோம். எரியும் பகையும் பூசலும் தமிழ் நாட்டை அலைத்து அரித்துப்பாழ்படுத்தல் கண்கூடு. இக்குறைபாட்டை நீக்கித் தமிழர்கட்குள் ஒற்றுமை நிலவச்செய்து தமிழ் நாட்டை ஒரு சிறந்த நாடாகச் செய்ய அறிஞர்கள் முற்படுவார்களாக.

தமிழர்கள் தொன்மை வாய்ந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதுபற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகள் பலப்பல. அப்பரந்த ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டுவதில்லை. தமிழர்கள் தொன்மை, சரித்திர காலத்தையுங்கடந்து, அதற்கு மேலும் மேலுந் துருவிச்சென்று நீண்டு போவது. அதை ஒருகால எல்லைக்குள் கட்டுப்படுத்தல் இயலாது.

இமயம் நீரிடை மூழ்கிக் கிடந்தபோதும், இந்துமகா சமுத் திரம் நிலப்பரப்பாக இருந்தபோதும் தமிழ் மக்கள் வாழ்வு நடாத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு நிலநூல் நீர்நூல் உயிர்நூல் முதலியவற்றில் வல்லார்தம் ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

தமிழ் மொழியின் இயலே தமிழின் தொன்மைக்குப் பெருஞ் சான்றாக நிற்கிறது. உலகில் நிலவும் பல மொழிகளுள் நந்தமிழ் மொழி மெல்லோசையுடையதென்பது வெளிப்படை. மெல்லோசை மொழி நேற்று இன்று தோன்றியிராது. மொழி யோசை, நாளுக்கு நாள் மென்மையினின்றும் வன்மையிலேயே வளர்ந்து போகும் நீர்மையது. ஆதலின் மென்மை மொழி தொன்மை வாய்ந்ததாகவே இருத்தல் வேண்டும்.

உள்ள தமிழ் நூல்களை நோக்குவோம். அவைகளுள் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். தொல்காப்பியக் காலத் தைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளி வந்திருக்கின்றன. வேதம், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் பாகுபாடு பெறுதற்கு முன்னரே, தொல்காப்பியம் யாக்கப்பட்டதென உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். "........நான்கு

கூறுமாய் மறைந்த பொருளும் உடைமை யான் நான்மறை யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர் வணமுமென்பாருமுளர். அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் வேத வியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறி வினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்...'' என்று அவர் கூறியிருத்தல் காண்க. தொல்காப்பியர் காலம் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுக்கு முன்னர் என்றும், ஐயாயிரம் ஆண்டுக்கு முன்னர் என்றும், மூவாயிரம் ஆண்டுக்கு முன்னர் என்றும் ஆராய்ச்சிக்காரர் பலவாறு கூறுப. பிந்திய காலத்தையே நாம் கொள்வோம்.

தொல்காப்பியத்தின் மொழிநடையும், உள்ளுறையும் தமிழரின் தொன்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் துணை செய்யும் என்று நம்புகிறேன். தொல்காப்பிய மொழி மிகவும் வளமுடையது; பண்பட்டது; விழுமிய கருத்துக்களை இழுமென் மொழியால் எளிதில் மலர்விக்கும் ஆற்றல் வாய்ந்தது அவ்வளமும் பண்பும் ஆற்றலும் மொழி தோன்றிய நாளிலோ அல்லது சற்றுப்பின்னரோ உருக்கொள்ளல் அரிது. தொல்காப்பியத்தில் ஒலி நுட்பம், ஒலி திணிந்து எழுத்தாதல், அளபெடை உயர்திணை அஃறிணை, ஆகுபெயர் அன்மொழித்தொகை முதலியனவும், அகம்புறம் என்னும் வாழ்வுக் கூறுபாடு, அகத்துக்கும் புறத்துக்குமுள்ள தொடர்பு, அரசு, போர்முறை, காதல்நுட்பம் உள்நிகழ்ச்சி, மெய்ப்பாடு, உள்ளுறை இறைச்சி, கூர்தல் (உள்ளது சிறத்தல்-Evolution) முதலியனவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நாகரிகத்துறைகள் யாவும் எத்துணை எத்துணை நூற்றாண்டுகட்கு முன்னர் அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருத்தல் வேண்டும் என்பதை உன்னுங்கள். தமிழ்மக்கள் காட்டுமிராண்டிகளா யிருந்து, கைக்குறி, கட்குறி, ஒலிக்குறி முதலியவாற்றான் கருத்துக்களை உணர்த்தி, பின்னை எழுத்து சொல் பொருள் முதலியவற்றைக் கண்டு, மொழியை வளப்படுத்திச் செப்பஞ் செய்தற்கும், நாகரிகத் துறைகளைக் காண்டற்கும், அவைகளை வாழ்வினிடை நிலைபெறுத்தற்கும், தொல்காப்பியத்துக்கு முன்னர் எத்துணை எத்துணை ஆண்டுகளாகியிருத்தல் வேண்டும்! அக்கால எல்லையை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. சுமார் 2,000 ஆண்டுகட்குமுன்னர் என்று ஒருவாறு ஊகஞ்செய்து கூறலாம். ஆகவே தமிழரின் தொன்மைக்கு வரையறை வேண்டுவதில்லை. இத்தொன்மை வழி வழி வந்தவர்கள் தமிழர்களாவார்கள்.

அத்தூய தமிழர்கள் மட்டும் இப்பொழுது தமிழ்நாட்டில் வாழ்கிறார்களில்லை. அவர்களுடன் வேறு பலமக்களும் குடி புகுந்து நிலைத்து விட்டார்கள். பழந் தூய தமிழர் வழி வந்த தமிழர்களும், இடையே குடி புகுந்து நிலைத்த சிலருஞ்சேர்ந்த ஓரினமே தற்போதுள்ள தமிழினமாகும். இந்நாளில் தூய தமிழர் இன்னாரென்றும், குடிபுகுந்து நிலைத்த தமிழர் இன்னா ரென்றும் பிரித்துக் காட்டல் எவராலும் இயலாததொன்று. வெவ்வேறு புலங்களிலிருந்து அவ்வப்போது குடிபுகுந்தவருடன் அவரவர்தம் வழக்க ஒழுக்கங்களுங் குடி புகுந்தன. அவ்வழக்க ஒழுக்கங்களும் தூய தமிழ்மக்களிடைப் பரவலாயின. தூய தமிழர்களா யிருந்தவர்களும் தாங்கள் விரும்பியவாறு அவ்வப் போது மற்றவர்கள் வழக்க ஒழுக்கங்களை ஏற்று, அவர்களுடன் கலந்து அளவளாவி ஒன்றுபட்டார்கள்.

கலப்பு என்பது இயற்கை. உலகில் எம்மொழியும் எந் நாடும் எவ்வினமும் தோன்றியவாறே கலப்பின்றித் தனிமைத் தூய்மையுடன் என்றும் ஒரு பெற்றியாய் நிலவுதல் அரிது. அவைகளில் கலப்பு உறுதல் இயல்பு. அதைத்தகைதல் எவ ராலும் இயலாத தொன்று. ஒரு நாட்டில் மற்றொரு நாட்டார் புகுந்து, அந்நாட்டில் நிலைத்து, அந்நாட்டவரோடு கலந்து விடுவாராயின், அவரும் அந்நாட்டவராகக் கருதப்படுவர். இதற்கெனச் சில நாடுகளில் சில விதிகளும் ஏற்பட்டிருக் கின்றன. ஆகவே, உலகில் எவ்வினமும் கலப்பற்றதாயில்லை என்பது ஈண்டுக் கருதற்பாலது. கலப்பால் வளர்ச்சியே உண்டு. அதனால் கேடு உண்டெனில் இயற்கை அதற்குத் துணை நில்லாது.

தமிழர் யார்? தொன்றுதொட்டுத் தமிழைத் தாய் மொழியாக் கொண்டவரும், தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவருந் தமிழராவர் என்று கூறலாம். இவருள் சைவரிருக்கலாம்; வைணவரிருக்கலாம்; அருகரிருக்கலாம்; புத்த ரிருக்கலாம்; கிறிஸ்தவரிருக்கலாம்; இஸ்லாமானவரிருக்கலாம்; ஆத்திகரிருக்கலாம்; நாத்திகரிருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதை மட்டும் மறத்தலாகாது.

ஈண்டுச் சங்கத்தார் காலநிலை நினைவிற்கு வருகிறது. அவர் அனைவரும் ஒரு கொள்கையுடையவரல்லர். அவருள் சைவர் வைணவர் அருகர் புத்தர் முதலியோரிருந்தனர். அவரனைவருஞ் சகோதரநேயத்துடன் வாழ்ந்து போந்தனர். காரணமென்னை?

அவர்கள் கருத்து, சமயவேற்றுமை மீதும் பிற வேற்றுமைகள் மீதுஞ் சென்றதில்லை. அவர்கள் தங்களைத் தமிழர்கள்-சகோதரர்கள்-என்று எண்ணி ஒருமையுளங் கொண்டு, தமிழ்த் தாய்க்குச் சேவை செய்தார்கள்.

சேரன் செங்குட்டுவன், இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார் இவர் மூவரும் ஒருசமயக் கொள்கையுடையவரா? இல்லை. ஒருவர் சைவர்; மற்றொருவர் அருகர்; இன்னொருவர் புத்தர். இவர்களுக்குள் எத்தகைய ஆன்மநேய உரிமைப்பாடு நிலைத்திருந்தது! தமிழ் மாணக்கர்களே! சிந்தியுங்கள். சேரன் செங்குட்டுவனும் இளங்கோவும் ஒரு தாயின்வயிற்றிற் பிறந்த சேய்கள். ஆனால் அவர்கள் வெவ்வேறு சமயக்கொள்கை யுடையவர்களாக வாழ்ந்தார்கள். அவர்களிடை எரி பகை பூசல் எழுந்தனவா? ஆன்ம நேயமன்றோ ஊடுருவியிருந்தது? உண்மைத் தமிழன்புக்குமுன் சிறுசிறு வேற்றுமைகள் எல்லாம் ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போலாகும். அவர்களைப் போல் ஏன் இக்காலத் தமிழர்கள் வாழ்தலாகாது?

வேறு புலங்களிலிருந்து தமிழ்நாடு புகுந்தவர் மிகச் சிலராகவேயிருப்பர். அவர் அவர் வழக்க வொழுக்கங்கள் தமிழர்களிடைப் பலவாறு பரவியிருத்தல் வேண்டும். அதனால் தமிழ்நாட்டு மக்களிடைச் சமயக்கொள்கையிலும் பிறவற்றிலும் எத்துணை வேற்றுமைகள் காணப் பட்டாலும், அம்மக்களெல் லாருந் தம்மைத் தமிழர் என்று உணர்ந்து நடப்பது சாலும் அவ்வுணர்வை எழுப்புவது ஈண்டுக் கூடியுள்ள மகாநாடுகளின் சிறந்த நோக்கமாயிருத்தல் வேண்டும்.

பலவழியிலும் சிதறுண்டு கிடக்கும் தமிழ் இனத்தை ஒருமைப்படுத்தற்கு உறு கருவியாயிருப்பது தமிழ் மொழியே யாகும். சமயக் கொள்கையிலும் பிறவற்றிலும் மாறுபாடு கொண்டுள்ளவர்களும் மொழியில் ஒன்றுபடுவார்கள். தமிழ் நாட்டை ஒருமையில் நிறுத்துதற்கு மொழியன்றி வேறொன்று இப்போது இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள். சமயத் திலும் பிறவற்றிலும் சமரசக் கொள்கை பாராட்டும் அறிஞர் மிகச் சிலராகவேயிருப்பர். "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில் விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை" (தாயுமானர்) என்னும் பொதுமையை மன்பதை செயலில் கடைப்பிடித் தொழுகினல், ஆன்மநேய ஒருமைப்பாடு எளிதில் கூடும். தமிழ் மக்களிடை அச்சமரசம்

பரவும் வரை, பிணக்குக்கு இடமில்லாத ஒன்றைக் கொண்டே அவர்களை ஒன்றுபடுத்தல் வேண்டும். அதற்கு மொழியினும் வேறு ஒன்று இந்நாளிலிருப்பதாகத் தெரியவில்லை.

இங்கிலாந்தில் எத்தனையோ வகுப்பார் எத்தனையோ சமயத்தார் குடியேறி ஆங்கிலராகி விட்டனர். ஆண்டுள்ள யூதர்களை ஆங்கிலேயரல்லரென்றும், ஆங்கிலம் அவர் மொழியன்று என்றும் எவரால் கூறுதல் கூடும்? அதற்கென ஆண்டோர் இயக்கம் தோன்றினால், அஃது எள்ளி நகையாடப் படுமன்றோ? "இங்கிலாந்தைத் தாய்நாடாகக் கொண்டவன் எக்கொள்கையுடையவனா யிருந்தாலென்ன" என்றே அறிஞர் கருதுவர்.

தமிழ்நாட்டில் ஆரியர் தமிழர் பிரிவு பெரிதும் பேசப் படுகிறது. ஆரியர் தமிழ்நாட்டில் குடிபுகுந்ததைச் சரித்திர உலகங் கூறிக்கொண்டிருக்கிறது. அதை வாழ்விடை ஏன் பாராட்டிப் பகைமை வளர்த்தல் வேண்டும்? ஆரியர் தமிழ் நாட்டிடைக் குடிபுகுந்து பல்லாயிரம் ஆண்டுகளாகி விட்டன. இப்பொழுது "தூய ஆரியர் இன்னார்" "தூய தனித் தமிழர் இன்னார்" என்று எவரே பிரிக்கவல்லார்? ஒரு நூற்றாண்டு ஓரினத் தாரும் மற்றோரினத்தாரும் ஓரிடத்தில் வாழ நேரின், அவர் தந்தனிமையும் இவர் தந்தனிமையும் மறைந்து கலந்த இனம் உருக்கொண்டு எழும். இயற்கை நிலை இவ்வாறாகப் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்துவரும் ஆரியர்க்கும் தமிழர்க்கும் கலப்பு ஏற்பட்டிராதென்று கருதுவது மதி யுடைமையாகுங்கொல்!

பார்ப்பனர் ஆரியரென்றும், பார்ப்பனரல்லாதார் தமிழ ரென்றுஞ் சிலர் கருதுகிறார். பிறபுலங்களிலிருந்து தமிழ்நாடு போந்தவர் சிலர் என்பதும், அவர் தம் வழக்க ஒழுக்கங்களைத் தமிழரும் ஏற்றனர் என்பதும் மேலே சொல்லப்பட்டிருக் கின்றன. மிகச் சில ஆரியர் தமிழ்நாட்டில் புகுந்திருக்கலாம். அவர்தம் வழக்க வொழுக்கங்கள் தமிழர் பலரால் ஏற்கப் பட்டிருக்கலாம். தூய ஆரியராதல் தூய தமிழராதல் இப் பொழுது இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இந் நாளைய தமிழருள் சிலர் கிறிஸ்து பெருமான் திருவடித் தொண்டராகிறார். இக்காரணத்தால் அவர் எபிரேயராகி விடுவரோ என்று கேட்கிறேன். ஆரிய வழக்க வொழுக்கங்கள் பார்ப்பனரல்லாதாரிடமும் குலவிக் கொண்டிருத்தல் ஈண்டுக் கருதற் பாலது.

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பூசலையொட்டி, வட மொழி தென்மொழிப் பிணக்கும் எழுந்து திருவிளையாடல் புரிகிறது. வடமொழி பார்ப்பனர் மொழியென்றும், தென் மொழி பார்ப்பனரல்லாதார் மொழியென்றும் எவரோ புனைந்து விட்டனர். அது தமிழ் நாட்டை இடர்ப்படுத்துகிறது. வட மொழியை பார்ப்பனரும் பயிலலாம்; மற்றவரும் பயிலலாம். வடமொழி நூல்கள் பார்ப்பனராலும் எழுதப்பட்டிருக்கின்றன; மற்றவராலும் எழுதப்பட்டிருக்கின்றன. வடமொழி பாரத நாட்டுக்குரிய பொதுமொழி. உலகம் போற்றத்தக்க கலைகள் அம்மொழியில் அமைந்திருக்கின்றன. சைந நூல்கள் ஏராள மாக அம்மொழியில் எழுதப்பட்டிருத்தலும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. 'வடமொழி பார்ப்பனருக்கே உரியது' என்னுங் கூற்றை சைநர்கள் ஏற்பதில்லை.

தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர் தமிழைப் பயிலாமலும், தமிழ்த் தாய்க்குச் சேவை செய்யாமலும் இருக்கிறாரில்லை. முன்னாள் தொட்டு அவருந் தமிழ்த்தாயின் சேய்களாக நின்றே தமிழ்த்தொண்டாற்றி வருகிறார். தமிழ் நாட்டில் பிரிவுகள் பெருகப் பெருகத் தமிழ்த்தாய்க்குச் சிறுமையும் பெருகும் என்பதை அறிஞர்கள் கருதுவார்களாக.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்) எனவரூஉம் புறநானூற்றுப் பெரு மொழியை நோக்குக. இவ்விழுமிய கொள்கையுடையார் தமிழர் என்பதைஉணர்க. இவர் வழிவழிவந்த இக்காலத் தமிழர் சிறுமைப் பிரிவுகளில் கருத்திருத்தல் அறமாகாது. 'பழந்தமிழர் பழந்தமிழர்' என்று பேசுவதால் என்னபயன்? அவர்கள் வழி நிற்க முயல்வது பெருந்தகைமை யாகும்.

பார்ப்பனரிடத்தில் குறைபாடுகளில்லை என்று சொல் வதற்கில்லை. குறைபாடுகள் மற்றவர்களிடத்திலுமுண்டு. மன் பதையில் குறைபாடுகள் உறுதல் இயல்பு. அவ்வப்போது அவைகள் சீர்திருத்தஞ் செய்யப்பெறுதலும் இயல்பு. சீர் திருத்தக்காரரும் பிடிவாதக்காரரும் பார்ப்பனரிலு மிருக்கிறார்; மற்றவரிலும் இருக்கிறார். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்பது போன்ற பழந்தமிழர் கொள்கை பரவப் பரவக் குறை பாடுகள் இரிந்தோடும். எரிபகையால் குறைபாடுகள் நீங்குத லரிது. சிலவேளைகளில் அவைகளால் பிடிவாதமே பெருகும். இன்னும் இது குறித்து விரித்துக்கூற என் மனம் விரும்பவில்லை.

இந்நாளில் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட அனைவரையும், தமிழ் நாட்டில் குடிபுகுந்து நீண்ட காலமாக நிலைத்து வாழ்வோரையும் தமிழராகக் கொள்ள வேண்டுமென்பது எனது கொள்கை. அவ்வாறு கொண்டு தமிழ்த்தாய்க்குத் தொண்டு பூண்டொழுகுமாறு இளமை மாணுக்கர்களாகிய உங்களை வேண்டுகிறேன். தமிழ் நாட்டில் 'அவர் வந்த கதையையும் இவர் போன கதையையும்' சரித்திரத்தில் படியுங்கள்; ஆனால் அதை வாழ்விடை நுழைத்துப்பிரிவு பிளவு பிணக்குகளை உண்டாக்கித் தமிழ்மக்களின் ஒருமைப் பாட்டைக்குலைத்துத் தமிழ்த்தாயை இன்னும் புண்படுத்தாதேயுங்கள். நீங்கள் இளைஞர்கள். உங்களை நோக்கியே விண்ணப்பஞ் செய்கிறேன்.

அருமைத் தமிழ் மாணுக்கர்களே! உங்கள் நாட்டை நோக்குங்கள். அஃது எப்படியிருக்கிறது? அருமைத் தமிழ் நாடு சின்னு பின்னமாகச் சிதறுண்டு கிடக்கிறது. காரணம் என்னை? தலைபாயகாரணம் என்னை? தாய் மொழியைப் பேணுமை-அதனை ஓம்பாமை-அதன் பால் பற்றுள்ளங் கொள்ளாமை. தமிழ்த்தாயின் நிலையை உன்ன உன்ன உள்ளங்குழைகிறது. உலகிலுள்ள எல்லாத் தாய்மார்களினும் நந்தமிழ்த் தாயே மிக இழிந்த நிலையுற்றிருக்கிருள். ஒருபோது முடியணிந்து, கோலேந்தி, கலையணிந்து அரியாசனம் வீற்றிருந்த நம் அன்னை - எல்லார்க்கும் மூத்த நம்பெரும் அன்னை - இப்போது எந்நிலையிலிருக்கிருள்? அவள் முடியிழந்து, கோலிழந்து, கலையிழந்து, நலமெலாமிழந்து கிடக்கிருள். அவள் உடற் கூறுகளெல்லாம் ஊறுபட்டுக் கிடக்கின்றன; அவள் முகமெல்லாம் குறுமறுக்கள் எழும்பி அவள் எழிலைக் கெடுத்து வருகின்றன; அவளிருக்கத் துச்சிலுமில்லை. அவளைத் தூறும் புற்றும் மூடிக்கொள்ளுமோ என்றும் அஞ்சுகிறேன். அவளைப் பழையபடி அரச அவையில் கொலுவீற்றிருக்கச் செய்யும் பொறுப்பு எவருடையது? உங்களுடையது; உங்களுடையது என்று அறை கூவுகிறேன். தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் தமிழராகப் பார்க்கும் நெஞ்சம் உங்கள் பால் அரும்பி மலர்வதாக. அம்மலர் பிலிற்றும் இன்பத்தேன் தாயின் நோய்களையெல்லாம் போக்குவதாக.

சீர்திருத்தம்

உலகம் பலவிதம். ஒவ்வொரு விதமும் இயற்கைச் செந்நெறியில் இயங்குவது ஒழுங்கு. அவ்வியற்கை ஒழுங்கு நியதி

எனப்படும். எது எது நியதியினின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பஞ் செய்ய இயற்கை விழையும் ஒன்று சீர்திருத்த மென்பது. இச்சீர்திருத்த மில்லையேல் உலகம் வளர்ச்சியுறாது. இயற்கையின் நோக்கம் உலகை வளர்த்துக் கொண்டு போவது. அவ்வளர்ச்சிக்குச் சீர்திருத்தம் இன்றி யமையாதது.

தற்கால உலகம் பலதுறைகளில் கேடுற்றுக்கிடக்கிறது. இதற்குச் சிறந்த காரணம் ஆட்சிமுறைகளில் அடிக்கடி நேரும் மாறுதல்களாகும். தற்கால அரசியல் உலகம் பெரிதும் மேல் நாட்டையே குருமூர்த்தமாகக் கொண்டிருக்கிறது! எல்லாவற் றிற்கும் இந்நாளில் மேல் நாடு தேவையாயிருக்கிறது! மேல் நாட்டு அரசியல் முறைகட்குத் தற்போது சோதனைக்காலம் நேர்ந்திருக்கிறது. சோதனை ஜெர்மெனியில் துவங்கப்பட்டிருக் கிறது. முடிவை உலகம் பேராவலோடு எதிர்நோக்கி நிற்கிறது. ஆட்சி முறைகளில் நிலைத்த அமைதி நிலவின், பலதுறைகள் செம்மையுறும். அதுவரை ஆங்காங்கே சீர் திருத்தக் கூக்குரல் எழுந்து கொண்டேயிருக்கும்.

அஃறிணை யுலகம் பெரிதுஞ் சீர்திருத்தத்தை விரும்புவ தில்லை. அவ்வுலகம் இயற்கைவழி இயங்கலால் அதற்குச் சீர் திருத்தம் தேவையில்லை. பகுத்தறிவுடைய உயர்திணை யுலகம் இயற்கைச் செந்நெறியினின்றும் அடிக்கடி வழுக்கி வீழும் இயல் பினதா யிருத்தலால், அதற்குச் சீர்திருத்தம் தேவையாயிருக் கிறது.

பழைய தமிழர்கள் பெரிதும் இயற்கையோடியைந்த இன்ப வாழ்வு நடாத்தினார்கள். அதனால் இயற்கை வளர்ச்சிக்கு அவர்கள் வாழ்வு துணை நின்றது. பின்னை அவ்வாழ்வு குலைந் தமையான், இயற்கை வளர்ச்சி தடைபடலாயிற்று. இயற்கை வளர்ச்சி தடைபடும் இடத்தில் பலதிறச் சிறுமைகள் உறுதல் இயல்பு.

பழந்தமிழ் நாட்டில் நிலப்பாகுபாடு இருந்ததேயன்றிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதிப் பாகுபாடு இருந்த தில்லை. மக்களுள் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது இடை நாளில் குடிபுகுந்ததொன்றே யாகும். இதற்கு 'இவர்காரணர் அவர் காரணர்' என்று சொல்வதால் என்ன பயன் விளையப் போகிறது? எவராலோ குறைபாடு நுழைந்து விட்டது. அக் குறைபாட்டைப் போக்க முயல்வது அறிவுடைமை. எவர் காரணரென்று போரிடுவது அறிவுடைமையாகாது.

பிறப்புச் சாதியினின்றும் பெண்ணடிமை, தீண்டாமை முதலிய நச்சுக் குழவிகள் பிறந்தன. இச்சிறுமைகளைப் போக்க எழுந்த பேச்சுக்களும் எழுத்துக்களும் மலையெனவுங் கடலெனவுங் குவிந்தும் பரந்துங் கிடக்கின்றன. இவைகளைப் பற்றிப் பேசிப்பேசி என் நாவும் தழும்பேறி விட்டது. எழுதி எழுதி என் கையும் மரத்துவிட்டது. இடைக் காலத்தில் தோன்றி இந்நாளில் பெருந்துன்பம் விளைத்துவரும் நோய்களை எப்படிப் போக்குவது? இவைகளைப் போக்கப் பல மருந்துகள் சொல்லப்படுகின்றன. சிறந்த மருந்து, கலப்பு மணமேயாம். இம்மணம் பரவப்பரவப் பெருகப் பெருக மக்களுக்குள் சகோதரநேயம் வளர்தற்கு இடமுண்டாகும்.

கலப்பு மணத்துக்குப் பெண்ணுரிமை இன்றியமையாதது. பழந்தமிழர் காலத்தில் பெண்ணுரிமை இருந்தமையால் களவு மணம் நடைபெற்று வந்தது. காதல்மணம் கலப்பு வழியில் நடைபெறத் தொடங்கினால் சாதிப்பேய் தானே ஓடும். அப் பேய் ஓடினால் பெண்ணடிமை ஏது? தீண்டாமை ஏது? எல்லாம் ஒழியும். இதற்கு எவர் விரைந்து முனைந்து வருதல்வேண்டும்? இளைஞர்கள் இளைஞர்கள் என்று சொல்ல வேண்டுவதில்லை.

தீண்டாமைக் கொடுமை எத்தகைத்து? தீண்டாமை கொண்ட நாடு பொலிவிழத்தல் திண்ணம். நமது நாடு பொலி விழந்திருத்தல் கண்கூடு. எங்கெங்கே தீண்டாமை! அந்தோ! பொது விடங்களிலும் நீர் நிலைகளிலும் கோயிலிலுமா தீண்டாமை! என்ன கொடுமை! என்ன கொடுமை! இக் கொடுமையைப்பற்றிப் பேசிப்பேசி எழுதி எழுதிப் பார்த்து, உடல் நலன் இழந்துள்ள இவ்வேளையில்,

அன்றிலும் பேடும் அழகா யுலவிவரும்
வென்றிப் பரங்குன்ற வேலவனே!—நன்றுடைய
நின்பெயரால் தீண்டாமை நின்பெயரால் சாதிநெறி
வன்னெஞ்சர் செய்தனரே வம்பு.

தெய்வ மணங்கமழுஞ் செந்தமிழின் தேன்பாயுஞ்
செய்ய பரங்குன்றச் செல்வமே!—வையமதில்
தீண்டாமை எண்ணு நெஞ்சம் தீண்டுமோ நின்னடியைத்
தீண்டாமை மன்பதைக்கே தீட்டு.

ஆண்டவ நின்றன் அறிகுறி யாகிய ஆலயத்துள்
தீண்டல் தீண்டாமை சிறத்தலால் அன்பர்கள் செல்வதெங்கே
வேண்டல்வேண் டாமை கடந்தவர் வாழ்வும் விரதமுஞ்சூழ்
பாண்டிய நாட்டுப் பழமுதிர் சோலைப் பரம்பரனே.

என வரும் பாக்களை யாத்து, ஆண்டவனை நோக்கி முறையிடுகிறேன்; அழுகிறேன். ஆண்டவன் திருவருள் என்றுதல் நலஞ் செய்யும் என்னும் உறுதி எனக்குண்டு. நீங்களும் அவ்வுறுதி கொண்டு திண்டாமை மனதைத் துறந்து வாழ்வு நடாத்துங்கள். திண்டாமை தானே ஒழியும்.

கொலை களவு கள் காமம் பொய் முதலிய பாவங்கள் பரவுதற்குரிய வினைகள் பெருமிதமாக இக்கால உலகில் நிகழ்ந்து வருகின்றன. அப்பாவங்களின் வளர்ச்சிக்கு இடந்தருவது இயற்கை வளர்ச்சியைத் தகைவதாகும். ஆதலால் மாணாக்கர்கள் சிலத்தை வாழ்வில் கடைப்பிடித் தொழுகுவார்களாக. இதற்குத் தியானம் வேண்டற்பாலது என்று மேலே சொல்லியிருக்கிறேன்.

காப்பிக்குடி, சுருட்டு பிடி சிகரெட் குடி முதலியன வாழ்விற்கு இன்றியமையாதனவல்ல. இளைஞர் உலகம் இவைகட்குப் பாழாகிறது. இப்பாழுக்கு இரையாகாதிருக்குமாறு மாணாக்கர்களை எச்சரிக்கை செய்கிறேன். இயற்கைக்கு மாறுபட்ட வினைகளில் தலைப்படாது, இயற்கையோடியைந்த வினைகளில் தலைப்படுதல் நலம் என்று சுருங்கச் சொல்கிறேன்.

சகோதரிகளே! சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிடுதற்கு என் மனம் எழவில்லை. இது காறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்கட்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக. வருங்கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்விபயின்று, விஞ்ஞானக்கலைகளில் ஊக்கஞ் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவு கொண்டு, அவைகளின் இயற்கை அமிழ்தை யுண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பண்படுத்தித் தமிழ்த் தாய்க்குச் சேவைபுரிய விரைந்து நில்லுங்கள்; தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாயிருக்கிறாள்; அவளைப்பற்றியுள்ள பிடைகளெல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்; எழுங்கள்; இளம்பரிதிகளே! சாதிவேற்றுமை பெண்ணடிமை திண்டாமை முதலிய கட்டுகள் இரிந்தோடத் தமிழ்க் கதிர் பரப்பி எழுங்கள்; எழுங்கள்.

" எவ்வுயிர்க்கும் அன்பாயிரு "

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் அ } ஆங்கீரச, ஐப்பசி. { மலர் எ.

மண்ணுலகம்.

இ. மு சுப்பிரமணிய பிள்ளை தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு ஹைஸ்கூல், நான்குநேரி.

க. தோற்றுவாய்.

நாம் வாழும் இம் மண்ணுலகத்தின் அமைப்பைப்பற்றி நம்மவரில் பெரும்பாலோர் செம்மையாக அறியாமல் இருக்கிறோம். "இது எங்கிருந்து தோன்றியது? இதன் உருவம் எத்தகையது? இரவு பகல்கள் எங்ஙனம் உண்டாகின்றன? பருவங்கள் எவ்வாறு மாறுகின்றன? அண்ட கோளத்தில் நம் உலகநிலையாது?" என்பனவாய பல வினாக்கள் ஆராய்ச்சியாளர் உள்ளத்தில் தோன்றுகின்றன. 'இவைகளைப்பற்றி எண்ணித் தெளிந்த பெரியோர் முடிபுகள் யாவை?' என ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

உ. மண்ணுலகத் தோற்றம்.

ஒரு முட்டையிலிருந்து உலகம் தோன்றியதென்பதே பண்டைக்கால மக்கள் பலர் கொண்டகொள்கை. ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள எகிப்து நாட்டினர்

நீரிலிருந்து உலக முட்டை தோன்றி இரண்டாக வெடித்து மண்ணும் விண்ணுமாயிற்று என எண்ணினர். ஐரோப்பா கண்டத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள நார்வே நாட்டினர் அம் முட்டை ஒரு பெரிய பறவையால் இடப்பட்டது எனக் கூறினர். ஆரியமக்கள் தமது கடவுளாகிய நான்முகன் பலநாள் கருவுற்று ஒரு தங்கமுட்டையைப் பெற்றதாகவும் அதிலிருந்தே உலகங்களெல்லாம் தோன்றின எனவும் புராணங்களில் வரைந்துளர். கடவுள் ஒரு பெரிய பறவையாக உருவங்கொண்டு கடல்மேல் பறந்து உலக முட்டையை ஈன்றார் என பாலினீசியா என்ற நாட்டினர் இன்னும் நம்பி வருகின்றனர். உலகின் பல பகுதியினரும் இங்ஙனம் ஒரேவிதமாக எண்ணியதற்கு ஏது இன்னதென விளங்கவில்லை.

இரவி முதலிய விண்மீன்களெல்லாம் உருண்டை வடிவமாகத் தோன்றுதலால் அனைவரும் அவை முட்டையிலிருந்துதான் தோன்றின என எண்ணினர்போலும். பிற்காலத்தில் இக்கொள்கை தவறானதென்று கருதப்பட்டு உலகத்தோற்றத்திற்குப் பற்பல கொள்கைகள் வெளியிடப் பெற்றன. இரவியை நடுவிடமாகக் கொண்டு எல்லாவற்றுக்கும் அப்பாலுள்ள கோள்வரை பரந்திருந்த புகைப்படலமாக நமது இரவியும் கோள்களும் ஒருகாலத்தில் இருந்தன என்பது முதற்கொள்கை. "இந்த எரிப்படலம் எப்போதும் சுழன்று கொண்டிருந்தது. இது குளிரக்குளிரப் பல கோள்கள் தோன்றி நடு இடமாகிய இரவியைச் சுற்றிச் சுழலத்தொடங்கின. இரவி இன்னும் எரிப்படலமாகவே இருக்கிறது." என அக்கொள்கையினர் கூறி வந்தனர். இக்கொள்கை சில காலம் நின்றது. பின், சில அறிஞர், "இரவியின் மூடியிலிருந்து சில முடிச்சுகள் தோன்றி வேகமாக எறியப்பெற்று உருண்டை வடிவோடு நடுவிடமாகிய இரவியைச் சுற்றுகின்றன. அவைகளே கோள்கள்." என ஒரு கொள்கையை நாட்டினர். இது ஒரு நூற்றாண்டு நிகழ்ந்தது.

இதுபற்றி இக்காலத்தார் கொள்கை பின் வருவது. பகலவன் ஒரு எரிப்படலமாக இருக்கிறது. சில காலங்களில்

அதனினும் பெரிய விண்மீன் அதை நெருங்கிவரும். அப்போது அவ்விண்மீனுக்கு நேராகவுள்ள இரவியின் உடலில் முட்டையனைய ஒரு கொப்புளம் தோன்றுகிறது. அது அப்பெரு விண்மீனின் கவர்ச்சித்திறனால் உண்டாகிறது. அக்கொப்புளம் இரவியிலிருந்து பிரிந்து அவ்விண்மீனால் இழுக்கப்பெற்றுச் சென்று, அக்கவர்ச்சித்திறன் நமது இரவியின் இழுப்பினால் தடுக்கப்படும் இடத்தில் நின்றுகொண்டு இரவியைச் சுற்றிவரத் தொடங்குகிறது. இவ்வாறே சனி, வியாழன், வெள்ளி முதலிய கோள்களெல்லாம் தோன்றின. இங்ஙனம் தோன்றிய கோள்களில் ஒன்றுதான் நாம் வாழும் மண்ணுலகம்.

௩. மண்ணுலகின் உருவம்.

பண்டைக்கால மக்கள் உலகம் தட்டையாக இருந்ததென்று நம்பியிருந்தனர். நம்மைச் சுற்றிப் பார்க்குமிடத்துத் தோன்றும் அடிவானம் வட்ட வடிவினதாக இருக்கிறது. அதுவே விண்ணும் மண்ணும் தொடும் இடமெனவும், ஒரு பெரிய ஆற்றினால் சூழப்பட்டு வட்டமான தட்டையுருவினதே மண்ணுலகம் எனவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாபிலோனியர்கள் எபிரேயர்கள் முதலிய பலரும் எண்ணினர்கள்.

மிகப்பெரிய உருவினதான இவ்வுலகம் அந்தரத்தில் பற்றுக்கோடில்லாமல் நிற்பதுபற்றி அவர்களுக்கு ஐயம் நிகழ்ந்தது. அதனால் அவர்கள் அதுபற்றிப் பல வியப்பான செய்திகளைக் கூறிவந்தனர். நார்வே நாட்டினர் நரகத்தில் வேரூன்றிய ஒரு பெரிய அசோகமரம் பூமியைத் தாங்கிக்கொண்டு விண்ணுலகத்தில் கிளை வீசியிருந்ததாகக் கூறினர். ஆரியமக்கள் பூமியை எட்டுத் திசையிலும் எட்டு யானைகள் தூக்கி நிற்பதாகவும் அந்த யானைகள் ஒரு பேருருவினதாகிய ஆமையின் முதுகில் நிற்பதாகவும், ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்ற முதற்பாம்பு (ஆதி-முதல்; சேடன்-பாம்பு; முதலில் தோன்றிய பாம்பு) தனது தலைகளில் பூமியைச் சுமந்து கொண்டிருக்கிறதாகவும் தலை வலியெடுக்கும்போது வேறுதலையில் பூமியை மாற்றுவதனாலேயே பூமியதிர்ச்சி

உண்டாகிறதென்றும் நம்பினார்கள். ஆரியமக்களுடைய இத்தகைய கொள்கைகள் தென்னிந்தியாவில் பரவி அவர்களும் தமிழ் மக்களோடு கலந்தகாலந்தொட்டு தமிழ் மக்களில் கல்வி யறிவில்லாத பலர் பூமி தட்டையாகவே இருக்கிறது என்று இன்னும் நம்பிவருவதோடு கீழ் பூமி ஒன்று இருக்கிறதாகவும். அதற்குப்போகும் வழிகள் பல இருப்பதாகவும் எண்ணி மயங்குவாராயினர். சில பழைய கோவில்களிலுள்ள நிலவறைகளைக் கீழ் பூமி வழிகளெனப் பலர் இப்போதும் காட்டுகின்றனர்.

பண்டைத் தமிழ் மக்கள் பூமி உருண்டையானதுதான் என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள். பூமியின் நிழல் மதியின்மேல் வட்டமாக விழுதலினாலே பூமி உருண்டையாகத்தான் இருக்கவேண்டுமென அவர்கள் தெளிந்தார்கள். இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளின் முன்னிருந்த அரித்தாட்டில் என்ற பேரறிஞர் மண்ணுலகம் உருண்டையாகத்தானிருக்கவேண்டுமெனப் புகன்றார். அவர் தமது கொள்கைக்கு ஏதுக்களாக மதி மறைவுக் காலங்களில் பூமியின் நிழல் மதியின் மேல் வட்டமாக விழுதலையும், மேலிருந்து மண்மேல் விழும் பொருள்கள் ஒரே நடுவிடத்தை நோக்கி விழுதலையும் வடக்கிலும் தெற்கிலும் நெடுந்தூரம் சென்று பார்க்குமிடத்து முதலில் நாம் பார்த்த விண்மீன்கள் சில தெரியாது மறைதலையும் நாம் பாராத விண்மீன்கள் சில புதிதாகப் புலனாதலையும் எடுத்துக் காட்டினார்.

இட்டலி முதலிய ஐரோப்பிய நாடுகளில் மக்கள் கூறிவந்த பண்டைக் கொள்கைகளை விட்டு விலகி யாராவது பேசுவாரே யானால் அவர் அரசரால் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டார். இங்ஙனம் செய்யும்படி தூண்டியவர் சமயத் தலைவராகிய போப் என்பவரே. புதிய கண்டம் ஒன்று இருக்கிறது என்றுகூறி அதனைக்காணத் துணிந்த கொலம்பஸ் என்பவர் தாம் அவ்வாறு செய்வதற்கு ஸ்பெயின் நாட்டின் அரசர் மூலமாகப் போப்பின் ஆணையைப் பெறவேண்டியதாயிற்று. தமது கொள்கைக்கு மாறாகச்சென்ற அரசர்களையே பிற அரசர்களைத் தூண்டித்

தண்டித்து வந்தார் போப் என்றால் அச்சமயத் தலைவர் கொண்டிருந்த பேராற்றலை என்னென்பது? பதினேழாவது நூற்றாண்டில் கலிலியோ என்பவர் தண்டிக்கப்பெற்றார். இதனால் மக்கள் அறிவு முன்னேற்றமடையாமல் பழைய குருட்டுக் கொள்கைகளை ஆராயுமளவிற் கூடச்செல்லாமல் பல நூற்றாண்டுகளாகத் தடையுற்று நின்றது. அறிவு வளர்ச்சி எவ்வளவு காலைக்குத்தான் தடையுண்டு நிற்கும்? கல்வியறிவு பரவப்பரவ மக்கள் துணிவுடையவரானார்கள். அதனால் அவர்கள் பொருத்தமற்ற பண்டைக் கொள்கைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து விட்டுப் பொருத்தமான கொள்கைகளைத் தகுந்த ஏதுக்களால் நிறுவுவாராயினர். அவர்கள் தமது நுண்ணறிவினாற்றலால் கண்ட முடிவு மண்ணுலகம் உருண்டை உருவினதென்பது. அதை நிலைபெறுத்த அவர்கள் கூறும் ஏதுக்கள் ஏழு அவைகளைக் கீழே கூறுவோம்.

1. விண்ணிலே காணப்படுகின்ற மீன்கள் பலவும் உருண்டை உருவினவாகவே இருக்கின்றன. அவைகளில் ஒன்றேனும் வேறு விதமாக இல்லை. ஆதலின் அவைகளுள் ஒன்றாக இருக்கிற மண்ணுலகமும் உருண்டையாகவே இருத்தல் வேண்டும்.

2. நாம் தரையிலிருந்து பார்க்கிற பொருள்களைக் காட்டிலும் அதிகமான பொருள்களை ஒரு குன்றில் நின்று காணலாம். தரையில் பல உயர்ந்த பொருள்கள் இடையில் நின்று மறைக்கின்றன என்றால் எங்கும் ஒரே பரப்பாக இருக்கிற கடலுக்குச் செல்வோம். அங்கே நாம் கரையிலிருந்து பார்க்கிற தூரத்தைக் காட்டிலும் அதிகமான தூரத்தை அங்கே சற்று உயரமான இடத்தை அடைந்தால் காணலாம். பூமி தட்டையாக இருந்தால் உயரமான இடத்திலிருக்கும்போது புலனாகும் பொருள்களும் கீழேயிருக்கும் போதே விளங்கத் தெரிய வேண்டும். பூமியின் உருண்டையான வடிவமே வெகு தூரத்திலிருக்கும் பொருள்கள் தெரியாமைக்குக் காரணம்.

3. தட்டையானதாகக் காணப்படும் கடலின் ஓர்பகுதியில் கி. பி. 1870-ல் ஒரு சோதனை நடைபெற்றது. ஒரே நேர்

கோட்டில் முப்மூன்று மைல்களுக்கப்பால் இருக்கும்படி மூன்று தூண்கள் நடப்பெற்றன. அவை மூன்றும் தண்ணீர் மட்டத்திற்குமேல் 13-அடி 4-அங்குலம் இருந்தன. தூர நோக்கக் கண்ணாடியால் அவைகளின் முதல் மூன்றும் தூண்களின் உச்சியை அளவு வைத்துப் பார்க்குமிடத்து நடுவிலிருந்த தூண் அவை யிரண்டினும் ஐந்தடி உயரமாக இருந்தது. இதனால் மண்ணுலகத்தின் வளைவு மூன்று மைல்களில் ஐந்தடி வேறுபாடுடையதாக இருக்கிறது என்ற உண்மை கண்டு பிடிக்கப் பட்டது.

4. கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிற கப்பலின் உச்சியே முதன்முதலாகக் கரையிலிருப்போருக்குத் தெரிகிறது. பின் அது நெருங்க நெருங்க நடுப்பகுதியும் அடியும் புலனாகின்றன. இது போலவே கரையைவிட்டுப் போகும் கப்பலின் அடிப்பகுதியே முதலில் மறையத் தொடங்குகிறது. பின் முறையே நடுப்பகுதியும் உச்சியும் மறைகின்றன. பூமி உருண்டையாக இராமல் தட்டையாக இருந்தால் தூரத்திலிருக்கும்போதும் கப்பலின் முழு உருவமும் தெளிவாகத் தெரிதல் வேண்டும். அவ்வாறு தெரியாமையால் மண்ணுலகம் உருண்டையாகத்தான் இருக்கவேண்டும்.

5. மண்ணுலகில் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு விலகாமல் ஒரே திசையை நோக்கிச் சென்று கொண்டிருப்போர் தாம் புறப்பட்ட இடத்திற்கே மறுபடியும் வந்து சேர்கிறார்கள். இக்காலத்தில் உலகைச் சுற்றி வருவதென்பது மிகவும் சுலபமான வழக்கமாக இருக்கின்றது. அறிஞர் பலர் அடிக்கடி உலகைச் சுற்றிச்சுற்றி வருகின்றனர். உலகம் தட்டையாக இருந்தால் நாலா பக்கங்களிலும் அது முடிந்திருக்கவேண்டும். அதற்கப்பாற் செல்ல முடியாதபடி முடிவிடம் சூழ இருக்க வேண்டும். உலகைச் சுற்றி வருவோர் ஒருவராவது இதுவரை அவ்வித முடிவிடத்தை எங்கும் கண்டதில்லை. இதனாலும் பூமி உருண்டையென்பது வெளிப்படுகிறது.

6. நிறைமதிக் காலத்து சிலவேளைகளில் மதியின்மேல் உலகின் நிழல் விழுகிறது. அதனால் மதிமறைவு (சந்திர

கிரகணம்) ஏற்படுகிறது. இவ்வுலக நிழல் எக்காலத்திலும் வட்டமாகவே காணப்பெறுகிறது. உருண்டையான பொருள் தான் வட்ட வடிவான நிழலை வீசும். ஆதலின் வட்டமான நிழலையுடைய மண்ணுலகும் உருண்டையானதாகவே இருத்தல் வேண்டும்.

7. இரவு ஒரே நேரத்தில் உலகின் பற்பல இடங்களிலிருந்து விண்ணை நோக்கினல் விண்மீன்கள் வெவ்வேறு இடங்களில் காணப்படுகின்றன. சென்னையிலிருந்து பார்ப்போருக்கு உச்சியிற் காணப்படும் ஆறன் கூட்டம் என்ற கார்த்திகை விண்மீன் பம்பாயிலிருந்து பார்ப்போருக்கு உச்சியிற் காணப்படாமல் கிழக்கே சரிந்து காணப்படுகிறது. இரங்கூனிலிருந்து பார்ப்போருக்கோ மேற்கே சரிந்து தோன்றுகிறது. இரங்கூனில் விடிந்து சற்று நேரங்கழித்தே சென்னையில் விடிகிறது சென்னையில் இரவி தோன்றிய பின்னரே பம்பாயில் தோன்றுகிறது. சென்னையில் இரவி மறைவு முன்னரே இரங்கூனில் மறைந்து விடுகிறது. அதாவது இரவி மேற்கிற்காட்டிலும் கிழக்கே முன்னரே தோன்றி மறைகிறது. மண்ணில் ஒரு பகுதியில் பகலாக இருக்கும்போது மற்றொரு பகுதியில் இரவாக இருக்கிறது மண்ணுலகம் தட்டையாக இருந்தால் அதன் மேலுள்ள எல்லா இடங்களிலும் ஒன்று போல விடிவதும் ஒன்றுபோல இருட்டுவதுமாகவே இருக்கும். அவ்வாறு இல்லாமல் வெவ்வேறு விதமாக இருத்தலினாலே உலகம் உருண்டையாகத் தான் இருக்கவேண்டும்.

ச. நாளும் ஆண்டும்

வியாழன், வெள்ளி முதலிய கோள்கள் ஞாயிற்றினிடம் தோன்றி அதனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன எனப்படித்தோம். கோள்களும் விண்மீன்களும் கலந்து விண்ணிற் காணப்படுகின்றன. அவைகளைப் பிரித்தறிவதெப்படி?

விண்மீன்கள் நமது ஞாயிற்றைப் போலவே எரிந்து கொண்டிருக்கும் உருப்பொருள்கள். ஞாயிறு நமக்கு அருகிலிருத்தலினாலேயே! பெரிய உருவினதாகத் தோன்றுகிறது.

கோள்களோ ஞாயிறாகிய விண்மீனைச் சுற்றிவரும் பொருள்கள், இரவில் எண்ணிறந்த விண்மீன்களுக் கிடையே கோள்கள் மிளிர்வதை நாம் காண்கிறோம். கோள்கள் விண்மீன்களைப் போல எரிந்து ஒளி வீசாமல் நமது இரவியின் ஒளியையே கண்ணாடி போல் வெளிவிடுகின்றன. அவைகள் மிகவும் சிறிய உருவின. இருந்தாலும் அவைகளிற் சில விண்மீன்களினும் பெரிய உருவினவாகக்காணப்படுகின்றன. வெள்ளி மிகச்சிறியதேனும் மிகப் பெரியதாகக் காணப்படுகிறது. ஏனெனில் கோள்கள் நமக்கு மிகவும் கிட்ட இருக்கின்றன. விண்மீன்களோ அளவிடற்கரிய தூரத்திலுள்ளன. நமது கை மிகச்சிறியதேனும் தூரத்திலுள்ள கோபுரங்களையும் மலைகளையும் மறைக்கிறது. 'அப்படியானால் நாம் விண்மீன்களையும் கோள்களையும் பார்த்தவுடனே எவ்வாறு கண்டுபிடிப்பது?' என்றால் விண்மீன்கள் விட்டு விட்டு மின்னுகின்றன, கோள்களோ எப்போதும் ஒன்றுபோல ஒளி வீசுகின்றன. நாம் கோள்களின் உடலைப்பார்ப்பது போல விண்மீன்களின் உடலைப்பார்ப்பதில்லை. விண்மீன்கள் உள்ளத்தால் அளவிடற்கரிய தூரத்தில் மின்னும் ஒளியாகவே தோன்றுகின்றன.

நாம் இரெயில் வண்டியில் போகும்போது, உண்மையில் ஓடுவது நம்வண்டியே; ஆனாலும் நம்வண்டி அசையாதிருப்பது போலவும் வண்டியின் இருபுறங்களிலும் உள்ளபொருள்கள் மிகவிரைவாக ஓடுவன போலவும் நாம் காண்கின்றோம். அது போலவே நாம் வாழும் மண்ணுலகம் அளவிடமுடியாத வேகத்துடன் ஞாயிற்றைச்சுற்றி வருகிறது. இருந்தாலும் அது ஒருசிறிதும் அசையாதிருப்பது போலவும் ஞாயிறுமுதலிய விண்மீன்களோ நம்மைச்சுற்றி வருவன போலவும் காணப்படுகின்றன.

உண்மையில் அசையாதிருந்தும் நம்மைச்சுற்றிவருவது போலக் காணப்படும் ஞாயிறும், உண்மையில் அதனைச்சுற்றி வருகின்ற செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கோள்களும் விண்ணில் போவது போலக்காணப்படும் வழி "விண்வழி" யென்றும் "ஞாயிற்றுவழி" எனவும் பெயர் பெறும். அவ்வழி ஓர் வட்டமாக இருக்கிறது இவ்வட்டத்தில் கோள்கள்

நிற்கும் நிலைகளை அளந்தறிவதற்கு இருபத்தேழு நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகள் அவ்வழியிலுள்ள அசையாத விண்மீன்களை அடையாளமாகக் கொண்டு அறியப்படுவன. இவைகளுள் முதலாவது நிலை குதிரைத்தலைபோல் உருவமைந்துள்ள விண்மீன் கூட்டங்களால் அறியப்பெறுவது. அதன் பெயர் அசுபதிநாள். இது ஐப்பசி என்றும் பெயர் பெறும். இரண்டாவது நிலை அடுப்புப்போலுள்ள மூன்று விண்மீன் தொகுதியால் அறியப்பெறுவது. அதன் பெயர் பரணிநாள். இது அடுப்பு நாள் என்றும் சொல்லப்பெறும். இவ்வாறே கார்த்திகை முதலிய பெயர்களையுடைய ஏனைய இருபத்தைந்து நிலையங்களும் ஒவ்வொரு விதமான உருவத்தையுடைய விண்மீன் தொகுதிகளைத் தமக்கு அடையாளமாகக் கொண்டு அறியப் பெறுவன.

இங்ஙனம் இருபத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப்பெற்றுள்ள விண்வட்டம் தம்முள் இரண்டேகால் இரண்டேகால்விண்மீன்களையுள்ளடக்கிய பன்னிரண்டு பெரும் பகுதிகளாகவும் பிரித்தறியப்படுகிறது. இப்பன்னிரண்டு பிரிவுகளும் எவ்வாறு பிரிக்கப்பெற்றனவென்றால் நமது பூமி விண் வட்டத்தை எத்தனை நாட்களிற் சுற்றிவருகிறதோ அக்கால அளவைப் பன்னிரண்டு பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு வீடாகவும் கருதப்பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் பூமிவாழ்கின்ற காலஅளவே மாதங்களாம். காலத்தை மதிப்பது மாதம்; இதுமதி யெனவும் சொல்லப்படும்.

இவ் வீடுகள் இருக்கை யெனவும் இராசி யெனவும் படும். இருக்கை என்பது கைவிகுதிபெற்ற தொழிற்பெயர் ஆகு பெயராயிற்று. அதுபோலவே இருச்சி என'சி' விகுதி பெற்ற தொழிற் பெயரே ஆகுபெயராய் இராசிஎன மருவிற்று. இவ் வீடுகள் தம்மிடத்தில் அமைந்துள்ள விண்மீன்களில் முதலதைக்கொண்டு பெயர் பெற்றன. சித்திரை நாளை முதலாவதாகக் கொண்டுள்ள வீடு சித்திரைவீடு. வைகாசி நாளை (விசாகம்) முதலாவதாகக் கொண்ட வீடு வைகாசிவீடு. இங்ஙனமே ஆனிவீடு, ஆடிவீடு, ஆவணிவீடு, புரட்டாசிவீடு,

ஐப்பசிவீடு, கார்த்திகைவீடு, மார்கழிவீடு, தைவீடு, மாசிவீடு, பங்குனிவீடு என்பன பெயர் பெற்றன. (ஆனி-மூலம்; ஆடி-உத்திராடம்; ஆவணி-அவிட்டம்; புரட்டாசி-பூரட்டாதி; ஐப்பசி-அசுபதி; கார்த்திகை-கார்த்திகை; மார்கழி-மிருகசீரிடம்; தை-பூசம்; மாசி-மகம்; பங்குனி-உத்திரம்.) சித்திரை வீட்டில் பூமிதங்கும் காலமே சித்திரைமாதம். இந்தமாதத் தொடக்கத்திலேயே ஞாயிறு பூமியின் நடுப்பகுதிக்கு நேராக உச்சியில் காணப்படும். ஆகலின் சித்திரைமாதமே முதன்மாதமாகக் கருதப்பெறுகிறது. வைகாசி வீட்டில் பூமிதங்கும் காலமே வைகாசிமாதம். இவ்வாறே ஆனி முதலிய மாதங்கள் ஏற்பட்டன. சித்திரைமுதல் பங்குனிமுடிய உள்ள பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து ஓர் ஆண்டு எனக் கணக்கிடப்படுகிறது.

இங்ஙனமாகப் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்கள் பூமியின் சுழற்சியைக் கொண்டு காலத்தைக் கணிக்கத் தொடங்கினர். இரவி பூமியைச் சுற்றவில்லை, பூமியே இரவியைச் சுற்றுகிறதென முதன்முதல் அறிந்த பேரறிஞர் தமிழ்மக்களே. சித்திரைவீட்டில் பூமி நுழையும் போது இரவி ஐப்பசி வீட்டில் புகுந்து போகக் காணப்படும். ஐப்பசி வீடுமேட இராசி எனவும் பெயர் பெறும். ஆதலால் சித்திரை மாதம் மேடஇரவி, மேடமதி எனவும் அழைக்கப் பெறும். ஆரியமக்களும் மேல் நாட்டினரும் பூமியின் சுழற்சியை அறியாராய் இரவியே சுழல்கிறதென நம்பினவராதலின் தமது முதல் மாதத்திற்கு மேடரவி எனவும் மார்ச்சு மாதம் எனவும் பெயரிட்டனர். அதனால் மேடவிராசியை முதல் இராசியாக எண்ணினர். மேல் நாட்டினர் இங்ஙனம் எண்ணினர் என்பதற்கு "The Ram, the Bull (ஆடு, காளை)" எனத்தொடங்கும் பழம்பாடலே தக்கசான்றாகும். மேல் நாட்டினர் இக்காலத்தில் மார்ச்சுமுதல் ஆண்டைத்தொடங்கும் தம் பண்டைவழக்கை விட்டு விட்டு பதினோராவது மாதமாக இருந்த ஜனவரி மாதத்திலிருந்து தொடங்குகின்றனர். இதனால் ஒன்பதாவது மாதமாக இருந்த நவம்பர் (நவம்-ஒன்பது) பதினோராவது மாதமாகவும், பத்தாவது மாதமாக

இருந்த திசம்பர் (தசம்-பத்து) பன்னிரண்டாவது மாதமாகவும் ஆயின. ஆனால் பிரான்சில் பண்டை முறையே இன்றும் உள்ளது.

ஒரு மாதம் ஏறத்தாழ முப்பது நாட்களை உடையது. நாள் என்பது யாது? இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள். இரவி (இரவைச் செய்பவன்) இல்லாத காலம் இரவு. பகலவன் (பகலச் செய்பவன்) இருக்கிற காலம் பகல். இரவும் பகலும் எவ்வாறு உண்டாகின்றன?

பண்டைக்காலத்தில் பூமியின் வடபகுதியில் இரவி மண்டிலத்திற்கும் உயரமான மேரு மலை என்ற பெரியமலை இருந்த தென்றும், அம்மலையை இரவியும் ஏனைய விண்மீன்களும் சுற்றிவந்தன எனவும், அம்மலையின் இப்பக்கத்தில் இரவி வரும்போதுதான் பகற்பொழுது என்றும், மலைக்கு அப்பால் இரவி போவதே இரவுப்பொழுது எனவும் மக்கள் நம்பியிருந்தனர். மேல் நாட்டினருக்கும் இதுவே நம்பிக்கை. கி. பி. 540 ல் இருந்த கிறிஸ்தவ வணிகனாகிய காஸ்மாஸ் என்பவன் இக்கொள்கையைப் பரவச் செய்தான். ஆனால் அவனுக்கு எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் அலெக்சான்டிரியா நகரிலிருந்த அரிஸ்டார்க்கஸ் என்பவன் பூமியின் சுழற்சியே ஞாயிற்றின் தோற்றத்திற்கும் மறைவுக்கும் காரணம் என்று கண்டுபிடித்தான். அக்காலத்தில் அதனை ஒருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வுண்மை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகள் மறைந்திருந்து பின் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் ஈற்றிலும் பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்த கோப்பர்நிக்கஸ் என்ற அறிஞனால் நிலைநாட்டப்பெற்றது.

அசைவற்றிருக்கும் ஞாயிற்றைச் சுற்றிவருகிற பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது. அது தன்னைத்தானே சுற்றவில்லையானால் பூமியின் ஒருபகுதி எப்போதும் பகலாகவும் மற்றொருபகுதி எப்போதும் இரவாகவுமேயிருக்கும். விரைவாகப் போகும் கப்பலிலிருக்கும் நமக்கு கரை நம்மைவிட்டு விரைவாக விலகுவதுபோலக் காணப்படும். அங்ஙனமே விரைந்து சுழலுகின்ற பூமியின் மேலிருக்கிற நமக்கு ஞாயிறு

கிழக்கே தோன்றுவதுபோலவும் மேலே ஏறி வருவது போலவும் பின் மெல்ல மெல்லக் கீழே இறங்கி மேற்கே மறைவது போலவும் காணப்படுகிறது. மண்ணுலகம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுழல்வதனாலேயே இரவி கிழக்கே தோன்றி மேற்கே மறைவதாகத் தோன்றுகிறது. இரவி தோன்றி மறை காலம் பகல், மறைந்து தோன்றும் காலம் இரவு. இவ்வாறாக இரவும் பகலும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. இரவும் பகலும் சேர்வது ஒரு நாள். பூமி ஒருமுறை இரவியைச் சுற்றி வருவதற்குள் அது தன்னைத்தானே முந்நூற்றறுபத்தைந்தேகால் முறை சுற்றிக் கொள்கிறது. அதாவது அது ஒருமுறை இரவியைச் சுற்றிவருவதற்கு 365¼ நாட்கள் ஆகின்றன. அதுவே ஓர் ஆண்டு. இங்ஙனமாக நாளும் ஆண்டும் மாறி மாறி வருகின்றன.

௫. பருவங்கள்

மண்ணுலகம் இரவியைச்சுற்றிவரும் வழி சரியானவட்டமாக இல்லை. அதனால் அது ஆண்டின் ஒருபகுதியில் மற்ற வேளைகளைக்காட்டிலும் இரவியின் கிட்டவருகிறது. அதுதான் செல்லும் வழிக்குச்செங்குத்தாக நிமிர்ந்து சுற்றி வருமானால் பருவ மாறுதல் உண்டாகாது. ஏனெனில் வெய்யோனின் வெப்பம் எப்போதும் ஒன்று போலவே பூமியின்மேல் விழும். பூமியின் நடுப்பகுதியில் எப்போதும் தாங்க முடியாத வெப்பமான கோடை காலமாகவே இருக்கும், ஏனைய பகுதிகளிலும் ஒரு காலத்திலிருக்கும் வெப்பநிலையே எக்காலத்திலும் மாறாது நிலைபெறும். ஆனால் பருவங்கள் அவ்வப்போது மாறுவதை நாம் காண்கிறோம். இதற்குக் காரணம்யாது? பூமி செங்குத்தாக நிமிர்ந்திராமல் ஒருபுறம் சற்றுசரிந்த கோலத்துடன் இருக்கிறது, அச்சரிவும் எப்போதும் ஒரே திசையை நோக்கித்தான் அமைந்துள்ளது. இச்சரிவே பருவங்களின் மாறுதலுக்கு ஏதுவாகும். பூமி சரிந்திராமல் நிமிர்ந்திருந்தால் ஓரூரைவிட்டு அகலாமல் ஆண்டு முழுதும் கூர்ந்து நோக்குவாருக்கு முதல் நாளில் பகல் பதினைந்து நாழிகைக்கு ஞாயிறு எவ்விடத்தில் தோன்றுமோ அதே இடத்தில் தான் அதே வேளையில் அப்

போதும் அதுதோன்றும். இரவி அங்ஙனம் எப்போதும் ஒரே இடத்தில் தோன்றுவதில்லை. சில மாதங்களில் தலைக்குமேலே தோன்றுகிறது. சில மாதங்களில் தெற்கே சரிந்து தோன்றுகிறது. சில மாதங்களில் வடக்கே சரிந்து காணப்படுகிறது. இதனால் பூமி எப்போதும் ஒரே திசையை நோக்கிச்சற்று ($23\frac{1}{2}^{\circ}$) சரிந்திருக்கிறதென்பது நிலைபெறுகின்றது.

பூமியின் நடுக்கோட்டைத் தாண்டித் தென்பகுதியை நோக்கி இரவி செல்லத் தொடங்குவது ஆடிமாதத் தொடக்கத்தில் தெற்கே சென்று தென் எல்லையை (Tropic of capricorn) அடைந்து அது வடக்கு நோக்கித் திரும்புவது ஐப்பசி மாதத் தொடக்கத்தில் அது பூமியின் நடுக்கோட்டைத்தாண்டி வட பகுதியில் புகுவது தைமாதத் தொடக்கத்தில், அது வட எல்லையை (Tropic of cancer) அடைந்து மறுபடி தெற்கு நோக்கித் திரும்புவது சித்திரை மாதத் தொடக்கத்தில், தை மாத முதல் ஆடிமாதம் வரை பூமியின் வடகோடி (North Pole) எப்போதும் பகலாகவே இருக்கும். அக்காலம் தென்கோடியில் (South Pole) எப்போதும் இருட்டுத்தான், இம்மாதிரியே ஆடி மாதமுதல் தைமாதம் வரை தென்கோடி எப்போதும் பகலாகவும் வடகோடி எப்போதும் இரவாகவுமே இருக்கும்.

௬. அண்டகோளத்தில் நம் உலகின் நிலை.

மண்ணுலகம் இரவியிலிருந்து தோன்றிற்று எனப்படித்தோம். சரிசமமான பக்கங்களையுடைய கண்ணாடியால் இரவியின் ஒளியைக் கண்டு ஆராய்ந்தால் பூமியிலமைந்துள்ள பொருள்கள் பெரும்பான்மையும் இரவியில் காணப்படுவதை அறியலாம்.

எரிக்காற்றோடு எந்தப் பொருளாவது சேரும்போது ஏற்படுவதே எரிதல். எந்தப் பொருளிலாவது வெப்பத்தை ஏற்றினாலும் எரிதல் ஏற்படும். இந்த விதிகள் உண்மையானால் நாம் வாழும் மண்ணுலகும் எரிந்து தானே போயிருக்கவேண்டும்? ஆம், பூமியின் மேற்பாகம் முழுதும் எரிந்து தான் போயிற்று. கடல்களெல்லாம் எரிந்து போயின; நீர்க்காற்று எரிந்துபோன

தனலேயே பல இடங்களிலும் காணப்பெறும் நீர்தோன்றிற்று. கடல்களும், பெருங்கடல்களும் எரிந்ததோடு தரையும் எரிந்தது தான். நாம் மண்ணையாவது, கல்லையாவது, மலையையாவது எரிக்க முடியாது; ஏனெனில் இவைகளெல்லாம் எரிக்காற்றோடு சேர்ந்து எரிந்ததன் பயனாக ஏற்பட்டவைகளே. மண்ணுலகம் எரியுருண்டையாக இருந்து, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், குளிரத் தொடங்கிய காலத்தில் தான் இவைகள் எரிந்து முடிந்தன. உயிர்ப் பொருள்களைத் தவிர ஏனைய அத்தனையும் தரையில் எரிந்து அவிந்தனவே.

விண்ணில் நாம் காண்கின்ற விண்மீன்களெல்லாம் நமது ஞாயிற்றைப்போலவே ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஞாயிறாக இருக்கின்றன. அவைகளிற் பல நமது ஞாயிற்றைக்காட்டிலும் அளவிறந்த ஒளியையும் உருவையும் உடையன. மனிதன் தான் வாழும் இந்தப் பெரிய மண்ணுலகில் ஒரு அணுவினும் சிறிய பூச்சியே. இந்த உலகமோ தானமைந்துள்ள பெரிய இரவித் தொகுதியில் ஒரு அணுவே. நமது இரவியோ அண்ட கோளத்தில் ஓர் அணுத்தூசியே.

இருந்தாலும் மனிதனுடைய மனம் இந்த அண்ட கோளத்தின் பெருமையை இவ்வளவென்று அறிய ஆற்றலுடையதாக இருக்கிறது. ஒளி விண்மீன்களிலிருந்து வந்து மனிதனுடைய கண்களிற் படுகிறது. அந்த ஒளி எவ்வளவு தூரத்திலிருந்து பூமிக்கு வருகிறதென்பதை மனம் ஊகித்தறிகிறது. ஒளி புறப்படும் தூரம் மனத்தாலும் கண்ணாலும் மட்டுமே அளந்தறியக் கூடிய அளவு அதிகமாக இருக்கிறது. மனவேகம் ஒளிவேகம் இவைகள்தான் ஒளியை அளந்தறிவ தற்கு உதவுகின்றன. மனம் ஒன்றை நினைத்தவுடனே பூமியிலிருந்து இரவியிடமோ, கோளிடமோ, அல்லது விண்மீனிடமோ போய்ச் சேருமாறு அவ்வளவு வேகமுடையதாக இருக்கிறது.

மனோவேகத்திலும் ஒளியினுடைய வேகம்தான் மிகவும் திட்டமானதாக இருக்கிறது. இதுவரை அறிவாற்றலால் கண்டு பிடிக்கப்பெற்ற தூர அளவு கருவி இவ்வொளிதான்.

இது மாறு நிலையுடையது. இதனால் அண்டகோளத்தின் பரப்பு, விண்மீன்களின் உருவம், பருமன் இவை இத்தன்மையன என அளந்தறியலாம்.

நமது இரவி ஒரு நொடிக்கு பத்துப் பன்னிரண்டு மைல் போகிறது. அது தன் பக்கத்திலிருக்கிற விண்மீனை அடைய வேண்டுமானால் 75000 ஆண்டுகளாகும். மணிக்கு அறுபது மைல் வேகத்திற்போகும் புகைவண்டி நமது இரவியை அடைய 175 ஆண்டுகளாகும். அவ்வண்டி வியாழனை அடைய 900 ஆண்டுகளும், சனியையடைய 1633 ஆண்டுகளும் ஆகும். அவை அவ்வளவு தூரத்திலமைந்துள்ளன.

மண்ணுலகின் வாழ்க்கைக்கும் அழகுக்கும் ஞாயிறே காரணம். அளவிட முடியாத காலமாக ஞாயிறு இடை. விடாமல் இரவும் பகலும் ஒளியையும் வெப்பத்தையும் வீசிய வண்ணமிருக்கிறது. நமக்கு வருகிற ஒளியும் வெப்பமும் அதனிடமிருந்தே வெளிவருவன. நமக்குக் கிடைப்பன இரவி யினிடமிருக்கும் மொத்தத்தில் இரண்டாயிரம் கோடியில் ஒரு பங்குதான். இருந்தாலும் இந்த ஒளியும் வெப்பமுமே உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதன. இவை இன்றேல் உலகப் பொருள்களும் இன்றாம். இரவியினிடமுள்ள ஒளியும் வெப்பமும் நம்முடைய பூமியைப்போல இரண்டாயிரம் கோடி பூமிகளிலிருந்தாலும் அவைகளையெல்லாம் காக்கும் தன்மையன.

மண்ணுலத்தின் குறுக்களவு எண்ணாயிரம் மைல். இரவியின் குறுக்களவோ 865,000 மைல். பூமியின் சுற்றளவு 25,000 மைல். இரவியின் சுற்றளவோ அளவிட முடியாதது. இரவியைப் பத்திலக்கம் துண்டுகளாக்கினால் அதில் ஒரு துண்டு நமது பூமியைவிடப் பெரிதாயிருக்கும். ஆனால் ஞாயிற்றுக்குக் கனம் மிகவும் குறைவு. பூமியினும் ஞாயிறு மூன்றிலக்கம் பங்குதான் அதிக கனமாயிருக்கிறது. மண்ணுலகம் குளிர்ந்து நெருங்கிக் கனத்திருக்கிறது. அது பெரும்பாலும் நீராகவும் கட்டியாகவும் ஆய்விட்டது. ஞாயிறோ வெப்ப ஆவியாகவே இருக்கிறது. அந்த வெப்பம் முழுவதையும் நமது பூமி

பெற்றால் கல், மணல், இரும்பு எல்லாம் உருகி அது இரவியைப் போலவே ஆய்விடும்.

நமது பூமியிலிருந்து ஞாயிறு 93,000,000 மைல்களுக்கப்பால் இருக்கிறது. அது சற்று அப்பால் விலகினால் பூமி இறுகும். இப்பால் நெருங்கினால் எல்லாம் தீப்பற்றி எரியத் தொடங்கும். நமது இரவி மண்டிலம் முழுதும் அழிந்து போனால் அண்டகோளத்தில் ஒரு விண்மீன் மட்டுமே மறைந்ததாகும். நமது மண்ணுலகம் அழிந்துபோனால் அதிலும் ஒரு அணுத்தூசியே மறைந்ததாம்.

தருமபுரி போர்டு உயர்தர அங்கிலப்பாடசாலையின் தமிழாசிரியர்

சகவனம்—சிவப்பிரகாசம் பிள்ளை நிகழ்த்திய

தாய் மொழித் தொண்டு

என்னும் சொற் பொழிவின்

உட்கிடை.

*அகவற்பா.

திருமலி ராசைச் செந்தமிழ்ச் சங்கத்
தரும்பெற லன்பிர்! அணவுக பன்னலம்!
குழலும் யாழும் பழித்த கொள்கையின்
மழவுடை யமிழ்தத் தமிழ்மொழி மாண்பை
மறந்தும் மறைத்துந் தாய்க்கொலை சால்பெனும்

---

* இஃது 1923-ல் இராசைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவிற்கு ஆசிரியர் திருமரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A., L. T., செப்பி யருளியது.

புறந்திரி புன்மைப் பொல்லார் வலியால்
தமிழணங் கரசு தணந்து சிறுமையின்
அமிழ்ந்தலை வுறுமிவ் வறக்குறை நாளில்
அவள்பெருஞ் சிறப்பை யறிந்தறி வித்து
நவநாட் கேற்ப நலம் வளி நல்கல்
தமிழ்மொழி பேசுந் தனயர் தலைக்கடன்.
ஆதலின்,
தென்றனி நாடு திடம்பெற் றோங்கற்
கின்றமிழ்ப் பற்றிங் கின்றியமை யாதென
விளக்குமின்! வேறுநாட்டவர் திறம் விளம்பியும்,
தொன்மையு மினிமையுந் தகவு ரியற்கை
நன்மையுந் தெய்வத் தன்மையு நவையில்
இலக்கண வரம்பு மிலக்கியப் பரப்பும்,
அலக்கண் தவிர்க்கும் அறம் அன் பறிவீ
நூலின் சிறப்பும், நூறாயிர மாய்க்
காலங் கழியவுங் கழியா வழக்கும்
இன்னன பன்னல மிசைவது தமிழென
மன்னிய உண்மையை மனங்கொள உரைமின்!
உலகறி மொழியி லுயர்ந்தன விரண்டே;
இலகவ் விரண்டினு மெந்தமிழ் சிற்சில
வகையிற் சீரியதா மெம் மொழியும்
மிகைபடப் பேசல் வெளிற்றுரை யென்மின்!
ஆயின்,
பண்டைப் பெருமை யொன்றே பாராட்டி
இன்றைச் சிறுமை எண்ணா திருத்தல்
தீமையாதலின், சிந்தைசெய் தொன்று சேர்ந்
தூமையுங் குருடும் உரமகல் நெஞ்சும்
புல்லிய வாழ்க்கையே போதுமென் றமையும்
மெல்லிய நோக்கும் மேவுநஞ் சோதரர்
உறக்கந் தவிர்ந்தெழுந் துயர்வன செய்யக்
கறுப்பிலின் கடுமொழி கருத்தாய்ப் பகர்மின்!
நந்தமிழ் நூல்களை நலமுறப் போற்றலோ

டந்தடோர் பிறமொழி யருநூல் தமையெலாம்
மொழிபெயர்த் துந்தமிழ் மொழிக்கு வளர்தரல்
இழிவுறு விழுச்செய லென்ன உணர்த்துமின்!
நந்தமிழ்க் கன்பர் நமக்குயி ரன்பர்
செந்தமிழ் பகைப்போர் தீயவர், மாற்றார்,
என்றுளங் கொண்மின்! இயல்நெறி வழுவிய
சாதியுஞ் சமயமுஞ் சமர்செயுங் கொடுமை
பாதியி னெடுக்கப் பார்க்கலா மிதனால்
மெய்யே,
பொருளா லெளியேம் புரிவதவ் வளவென
மருளுற வேண்டா; வாய்மையும் அடக்கமும்
திருவருட் டுணையுஞ் செறியின் என்னுகா?
இனியே,
கல்வியுங் கேள்வியுங் கவின்பெறு நடையும்
அல்லும் பகலும் ஆங்காங் கோங்கச்
செந்தமிழ்ப் பரமா சாரியன் சீரருள்
முந்திப் பொழியநும் முயற்சி வாழியவே!

வேண்டுகோள்

(வேறு)

உலகஞ் செழிக்கத் தமிழ் தழைய
　　ஆக்கந் தரு மாரம்ப நிலைக்
கலையை வளர்க்கு மாசிரி யக்
　　கண்ணுண் மணிகாள்! நமதன்னை
மலையிற் பிறந்தாள்; மூவேந்தர்
　　மடியிற் றவழ்ந்தாள்; மாநிலத்து
நிலையி லுயர்ந்தாள்; சிறப் பிழந்து
　　நிற்கக் கண்டீர், நேரிதோ? (1)

நந்தம் உயிரை, வாழ் வளிக்கும்
நறிய தமிழை, அமு தொழுகுஞ்
சொந்த மொழியைப் புறத் ததறத்
துணிந்தோர் பணிந்து துணுக் கமுற
முந்தும் நமது தமிழ் வழக்கில்
முழங்கு நயமும் நலம் பலவுஞ்
சிந்தை யார எளிய வருந்
தெளியும் வகைநீர் செய்ம் மினோ! (2)

இயலி னினிய நடை வரைவீர்!
இயற்கை யழகை யிசைத் துகப்பீர்!
பயிலும் பிறநாட் டுண்மை யெலாம்
பயனோ டறிய மொழி பெயர்ப்பீர்!
துயில லொழிவீர்! தமிழ் நிலைமை
துன்னு மமய மெதிர் வரலால்;
அயல புரிந்து மொழி காவா
தந்தோ கழித லழ கன்றே! (3)

தெய்வத் தமிழை யாசிரி யச்
சிறப்பி னோரை நனி காக்கத்
துய்ய விரதங் கொண்டிலகுந்
துரைக ளிருவர் நமக் குண்டால்!
மெய்கொ ளிராச மாணிக் கம்
வியக்கும் புலமைக் கிருட்டின வேள்
செய்ய விவர்தம் நிழல் வதியச்
செய்த தவத்தீர்! வாழி யரோ! (4)

மனோன்மணீயமும் மதுரமொழிகளும்

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

மனோன்மணீயம் என்னும் நாடகம் ஆங்கிலேயப் புலவர்களிற் பெருமை வாய்ந்த செகப்பிரியரென்ற ஷேகஸ்பியராலாக்கப்பெற்ற நாடகங்களின் நடையில் ஆலப்புழை பெருமாள் பிள்ளை குமாரர் திருவனந்தபுரம் முதற்றரக் கல்லூரியில் தத்துவஞானப் பேராசிரியராகப் புகழெய்திய இராவ் பகதூர் சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்களால் ஏறக்குறைய நாற்பதாண்டுகட்குமுன் வரையப் பெற்று வெளியிடப்பட்டது. அதன் முக்கிய பாகங்களிற் சில கிறித்தவ கலாசாலைப் பத்திரிக்கையில் ஆக்கியோரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. இவ்வருமையான நாடகம் நண்பர்கள் பலரால் நன்கு மதிக்கப்பட்டுளது. இதில் சில பகுதிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் இடைத்தர மாணவர்கட்குப் பாடமாக ஏற்படுத்தப்பட்டன. இந்நாடகத்தின் இரண்டாவது வெளியீடு ஆசிரியரின் சீர்வாய்ந்த மாணவராகிய திருவாளர் சிவராச பிள்ளை பி. ஏ. என்பவருடைய விரிந்த ஆங்கில முன்னுரையுடன் திரு. வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல். என்பவரால் 1922-ல் தமிழுலகத்திற்கு அளிக்கப்பட்டது.

மனோன்மணி கதைநாயகி, பாண்டியவரசன் சீவகனின் அருமை மகள். அவளுடைய தோழி வாணி. இருவரும் மணம் புரியத்தக்க வயதுவாய்ந்த நங்கைகள். சேரமன்னன் புருடோத்தமன் உருவத்தை மனோன்மணி கனவிற் கண்டு காதலுற்றனள். நடராசன் வாணியின் காதலன். வழுதியின் அமைச்சன் குடிலன். குடிலன் மகன் பலதேவன். குடிலனுடைய சூழ்ச்சியால் திருநெல்வேலி வழுதிக்கு உறைவிடமாயிற்று. அதன்கண் புதிய அரண்மனை அமைக்கப்பெற்றது. களங்கமற்ற வழுதி களங்கமே உருவெடுத்தாற் போன்ற குடிலனை முற்றிலு நம்பினன். அரசியலை நடாத்திய வமைச்சன்

அரசகுமாரியை மருமகளாக்கி அரசியலையுந் தன் மகனுக்காக் கைப்பற்ற வெண்ணினன். வழுதி மன்னனின் குலகுருவாகிய சுந்தரமுனிவர் குடிலனுடைய மனப்பாங்கை யறிந்து அதனைத் தடுக்குமாறு மறை வழியொன்று செய்து அதன்வழியே அக் கொடியனுக்குத் தீங்கு நிகழவும் மனோன்மணிக்கு நன்மை விளையவுஞ் செய்தனர். குடிலன் சூழ்ச்சியை நன்கறிந்த சேர மன்னன் குடிலனைக் கைது செய்து அவனைச் சுருங்கை வழி நடத்தி வந்து வழுதியிடம் ஒப்புவித்து அவன் மகன் சோர்வுற் றேங்கத்தான் முனிவரருளால் தென்னன் மகளை மணந்தனன். வாணியும் நடராசனின் வாழ்க்கைத் துணையாயினள். யாவரும் வமாப்புற்றனர். பாண்டியனுமாசி கூறினன்.

" பள்ளவுவர்க் கடலிற் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ள முவந்தோடி யொன்றுனும்—விள்ளா
மணியின தொளியு மலரது மணமும்
அணிபெறு மொழியி னருத்தமும் போல
இந்நிசியாக வெஞ்ஞான்றும்
மன்னிய வன்புடன் வாழ்மதி சிறந்தே."

இவ்வரிய நாடகத்தில் பல அரும் பெரும் பொருண் மொழிகளும் மதுர மொழிகளும் மறக்கலாகாப் பூட்கைகளுமுள. அவற்றி னமைப்பு வியக்கத் தக்கதாகும். அவற்றிற் சில இவண் வருவனவாம்.

1. இக்குங்கைக்கும் I. i. 150 (இக்கு-கரும்பு)
2. எருதின்றெனு முன மென்ன கன்றென்று I. ii. 17
3. தானறியாப் பேயாட்டந் தானே I. ii. 72
4. வெருட்டின னுய்போலோடிடும் வெருவில்
துரத்துங் குரைக்கும் தொடரும் வெகுதொலை I. ii. 104-5
நூறுக் கேட்கினும் நூலறி வென்செயும் ஷை 113
5. நெருப்பையுங் கறையானரிக்குமோ I. ii. 147
6. மணற் சோற்றிற் கற்றேடுதல் மானும் I. iii. 46
7. பூவையை வளர்த்துப் பூனைக்கியவோ I. iii. 110 (பூ-கிளி)
8. எரிமேலிட்ட விழுதாய் — ஷை 175 (இழுது-நெய்)

9. விசும்பி லரும்பிய வம்புலி யாயினுங் கொணர்வன் I. iv. 4
10. தாய்க்கு மொளித்த சூலோ? தையால்! ஷை 7
11. பிள்ளையில்லாச் செல்வங்கள்ளியிற்
சோறே போலப் பேரேயன்றி
வேறே பென்பயன் விளைக்கும். ,, 35-5
12. நேசமில் வதுவை நாசகாரணமே ,, 76
(வதுவை-மணம்)
13. இரும்புங் காந்தமும் பொருந்துந் தன்மைபோல் ,, 100
14. பிஞ்சிற் பழுத்தபேச் சொழி, மிஞ்சலை ,, 106
15. களிமிகு கன்னியருளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம் ,, 167-8
16. புத்திரே சகல சத்தியும்! I. v. 1
17. பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம் ஷை 9
(கற்றை-கதிர்த்தொகுதி)
18. பாச்சி பாச்சியென் றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி யென்பது போலாம் ,, 58-9
(பாச்சி-பால்)
19. யாத்திரை போன நூற்றுவர் சோறடு
பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக
வொருவரை யொருவர் ஒளித்துப் பருமணை
விட்ட கதையா யிருக்குமோ? ,, 93-6
20. ஆத்திரந்தனக்குச் சாத்திரமென்னை? II. 1-39
21. கட்டுக கோவில், வெட்டுக வேரி. ஷை 207
22. அங்கை புண்ணுக் காடியும் வேண்டுமோ?
(கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமோ) ,, 260
23. எதற்குந் திருக்குற ளிடந்தரும்! விடுவிடு. ,, 281
24. கரும்பு கைப்பதுன் வாய்க்குற்றமே. ,, 283
25. வெளுத்த!தெல்லாம் பாலெனு மெய்மை ,, 286
26. கருப்போ தேனோ வென்றவர் களிப்பது
நெருப்பாறும் மயிர்ப்பாலமு மன்றோ? ,, 303-4
27. வாலாற் றேளும் வாயாற் பாம்புங்
காலும் விடமெனக் கருதி ,, 307-8
(காலும்-கக்கும்)

28. உறுப்புக டாமே யுயிரினையுண்ணா
வொருப்படில் விலக்குவ ருளரோ? II. 313-4

29. ஆடவர் காதலுமைதலுங் தையலர்
கூடமாய்க் கொள்ளலு மியல்பே போலும் II. 38-9
(கூடம்-மறைவு)

30. கணிசத்திற்கது காரியத்திற்கிது ஷை 72

31. எந்திழையார் சொல் நீர்மேலெழுத்தாம்;
யாரறிவாருளம்? ,, 105-6

32. சுற்றிச் சுழலினுங் கறங்கொரு நிலையைப்
பற்றியே சுழலும் ,, 130-1
(கறங்கு-காற்றாடி)

33. கல்விசேர் நல்லறிவுளதேல் பொன்மலர் நாற்றம்
பெற்ற வாறன்றோ? ,, 165-7

34. உடல்தினவு அடக்குமா உரைஞ்சிடு தடியென ,, 184
(மா-மாடு)

35. சித்தம் மத்துறு தயிரிற் றிரிந்து II. iii. 10

36. உடல் பொருளாவி யாவையு மொறுத்து ,, 127

37. முட்டாளிவனை விட்டவன் குட்டுப்
பட்டபோதன்றிப் பாரானுண்மை ,, 159-60

38. பெரும் போரிலா நாள் பிறவா நாளே ,, 168

39. அப்பந் தின்னவோ? அதிற்குழி எண்ணவோ
செப்பிய துனக்கு? ,, 179-80

40. வஞ்சிநாட்டுள்ளார் வஞ்சனைக் கஞ்சார்
கெஞ்சிடின் மிஞ்சுவர் மிஞ்சிடிற் கெஞ்சுவர் I. 12-4

41. செறிந்திடுஞ் சிறையினை யுடைத்திடும் புனல்போல் ,, 26
(சிறை-அணை)

42. புலிவேட்டைக்குப் பொருந்துந் தனிலடி
யெலிவேட்டைக்கு மிசையுமோ? ,, 147-8

43. கள்ள மனந்தான் றுள்ளு மென்பதுந்
தன்னுளந் தன்னையே தின்னு மென்பதுங்
குற்றமுள்ளோர் கோழைய ரென்பதுஞ்
சற்றும் பொய்யல

65. அத்தனை துயரும் நம்மழுக் கெலாமெரித்துச்
சுத்தநற் சுவர்ணமாச் சோதித் தெடுக்க
வைத்த வக்கினியென மதித்தலே, உயிர்கட்கு
உத்தம பக்தி ௸ 173-6

66. எய்ப்பினில் வைப்பா யிருந்த பேரருளைக்
கைப்படு கனியெனக் கண்ட பின் ,, 236-7
(எய்ப்பினில்வைப்பு தான் தளர்ந்தும் பிறரைத்தாங்கல்)

67. நெருப்பிடை இழுதென நெக்குநெக் குருகி ,, 244

68. சமையி கட்காஞ் சர்சரவு? ,, 281
(ஆம்-ஆகும்)

69. இட்டகல்லா லெழும் வட்டமாம் விரிதிரை
வரவரப் பெரிதாய்க் கரைவரை வரல்போல்—IV. i. 9-10

70. கடம் பாடாற்றுங் காலம் விடுவதார் ௸ 21
(கடம்-கடன்கடமை)

71. குளிக்கரை யிருக்குங் கொக்கென வடங்கி ,, 32

72. விந்தியம் அடக்கினோன் தந்த நற்றமிழ்மொழி ,, 106
(விந்தியமலை)

73. சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று ,, 146

74. புகழுடம் பன்றி யிவ்விகழு டம்போ மெய்? ,, 163

75. அம்பரந் தருவி லொரு கனியதனுள்
பிறந்திறு மசகம் இவரிலுங் கோடி ,, 166-7
(மசகம்-கொசு)

76. பிறந்தா ரென்போர் புகழுடன் சிறந்தோர் ,, 168

77. இலையேலுடன் சென்று ஒரு கைபார்ப்பேன்? VI. ii. 9

78. எத்தனை பேரையான் பஞ்சாய்ப் பறத்துவன் ,, 12

79. பறைப் பயல் பாவி ,, 18

80. பிஞ்சில் பழுத்த பேச்சினர் ,, 29

81. யாவரே பிணத்தோடாண்மை பாராட்டுவர்? ,, 38

82. பிணத்தோடு பிணக்கெது! சீ. சீ. ,, 42

83. சிறுமையும் பெருமையுஞ் செய்பவர்க் கன்றி
செய்வினை தனக்கெது? ,, 67-8

உடைபடிலுல கெலாங் கெடுமொரு கணத்தில்
கருமருந்தறையிற் சிறு பொறி சிதறினும்
(கருமருந்து-வெடிமருந்து)
பெரு நெருப்பன்றோ? பின்பார் தடுப்பார்? „ 213-7

105. கருத்தெலாங் காண்போன் கடவுள் விரித்த
கருமமே யுலகங் காணற்குரிய „ 240-1

106. சத்தியம் செயிக்கும் „ 254

107. வளையும் வேய்நிமிரும் வளையா நெடுமரம்
(வேய்-மூங்கில்)
கிளையுடன் கெடுமே கிளர் காற்றதனில் V. 1-2

108. களைகிலர் காழ் பெருந்தருக்கள் „
(காழ்-வைரம்)
சேணுயர் தேக்கு திசையெறி சூறையில்
ஆணிவேருட னெழுந்ததிர்ந் தசைந்திறினும்
பேணுவாதனைப் பெரியோர் „ 4-8

109. அரியது செய்வதே ஆண்மையும் புகழும் „ 12

110. வேட்டையா ரோட்டிட வெருவுதீக் குருவி
நீட்டியதன் சிரநீண் மணற் புதைத்துத்
தனதுகண் காணாத் தன்மையாற் பிறரும்
தனதுடல் காணாரென நினைவது போல்
என்னையிம் மயக்கம் மன்னவ „ 14-8

111. தன்னு யிரீவர் தக்கோர் „ 28

112. தக்கோர் செயலெலாந் தனக்கா வலவே „ 40

113. துவாத சாந்தத் துறைபோய் „ 51
(பன்னிரண்டா முயிர்வேதனை)

114. வெங்கரா பிடித்தவை விடினும் விடுமே „ 108
(காரா-முதலை)

115. உரியநீர்விட்டால் முதலையும், விரும்பிய திலகப்பட்டாற்
களிறும் பலமில! „ 124-6
(களிறு-யானை)

166. ஒருவரொரு பொருளறியி னிரகசியம்,
இருவ ரறிந்திடிற் பரசிய மென்ப „ 172-3

117. கைக்கெட் டியபதுதன் வாய்க் கெட்டுதற்குள்
வந்துறு மந்தமில் பிரதி பந்தங்களே ஷை 174-5
(பிரதிபந்தம்-தடை)

118. குருஎண் மழையொடு மிருகாற் றெறிந்த
(குரு-அமாவாசை)

பரவையின் பாடெலாம் பட்ட தென்னுள்ளமே,, 179-80
(பரவை-பரந்த கடல்)

119. நாற்புறம் நெருப்புறின் அளியுந் தனது (தேள்)
வாற்புற நஞ்சால் மாய்ந்திடு மென்ப ,, 190-1

120. நம்புத லெல்லாந் துன்பமே தருவது ,, 210

121. உலகம்புபைத்தியம் பழித்திடும் சத்தியமுணரா ,, 258

122. திருமா முனிவரோ கருநா வுடையர் ,, 271
(கரு-யோசனை)

123. பூருவ புண்ணியம் அன்றே மன்றல் ,, 297
(மன்றல்மணம்)

124. பாண்டமேன் மாற்றலாங் கொண்டபின் என்செப,, 303

125. தனையளுக் குரியது தந்தையே யுணருவன் ,, 341
(தனையள்-மகள்)

126. மிகை தெரிந்தவற்றுள் மிக்கது கொளல் ,, 344

127. சம்மதக் குறியே மௌனம் ,, 364

128. கேளொடு கிளைஞர் v. i. 18
(கேள்-நட்பு, உறபு, சுற்றம்)

129. ஊக்கமே பாக்கியம் மேற்படி ஷை 23

130. பாக்கிய முழெனப் பகர்வதெலாம் பாழ். ,, 24

131. சிந்தை யெப்படியோ வப்படி யென்செயல். ,, 66

132. வேசையர் தங்களாசையின் முயக்கம் (தழுதல்)
அன்றோ இன்றவராற்றிய போர் முறை ,, 81-2

133. கரதலமாமொரு கௌசலம் ,, 126
(கரதலம்-கையிடம். கௌசலம்-வேலைத்திறம்)

134. பண்டிராகவன்றன் பழம் பகை சென்று
(பண்டு-முன்காலம்)

வென்ற தோரிலங்கை விபீஷணன் காத்தவா
றின்றுநீ வென்ற நாடிது காத்திடுவன் ஷை 142-4

135. சித்திரவதையே செய்வேன் பிச்சில் ,, 162

136. மூட்டையேன்?முடிச்சேன்? கேட்டியோ தோழி,, ii. 6

337. கிழவிபேச் சேற்குமோ கின்னரக்காரிக்கு! ஷை 9

138. இட்டகை இட்டகால் இட்டவப்படியே ,, 23

139. நொந்தபுண் ணதனிலே வந்திடும் நாறிடி ,, 30

140. மூடிற்றீயு மூளுமும் மடங்காய் ,, 33

141. நீதிநம்பாலெனில் நேர்வது சயமே ,, 45

142. குருவுந்,தந்தையுஞ் சமம் ,, 51

143. அன்னை தந்தையர் அன்பறியார் சிறூர் ,, 89

144. பாயிருள் தொகுநியும் பரிதியும், கொடிய
வெஞ்சினக் கழுகும் அஞ்சிறைக் கிளியும்
பொருந்தினும் பொருந்தீர் ,,99-102

145. தபமே சுபகாரம் ,, 123

146. போனகந் துறந்து கானகம் புகுந்து (போனகம்-சோறு)
தீயிடை நின்று சாவடைகின்றூர்? ,, 130-1

147. உடலலா லுயிரும் விழியலா லுணர்வும்
கடபட சடமலால் கடவுளுமிலேயேல் (சடம்-பொய்)
வேண்டிய விளைக ,, 164-6

148. அரிவையர் யாரே வெறிகொளார் காணில் iii. 3-4
(அரிவை-25 வயதுப்பெண்).

149. ஈயோவாயி லேறிடநாயே வெந்தது வீடு ,, 42

150. கங்கணங்கட்டிய கருஞெநிதிகாள் ,, 71
(கருதியகாரியத்திற்கு ஆயத்தப்படல்).

151. ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே
பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே ,, 75-6
(பாஷை)

152. மெய்க்குயிர் கைக்குநா விளம்புதல் மானும் ,, 80

153. ஒருகுலத்தொருவன், ஒருமாத்தோரிலே ,, 88

154. உண்மைக்குறைவிடம்; திண்மைக்கணிகலம்,
சத்தியவித்து பத்தியுன்மத்தன்
(உன்மத்தன்-பித்தன், வெறியன்)
ஆள்வினைதனக்காள் கேள்வித்தன் கேள்வன் ஷை 106-8
155. நம்முன் திச்செறி பஞ்சே ,, 144
156. குலந்தேர்வது நற்குணந் தேர்வதுவே ,, 152
157. மனிதரா லாவ தொன்றில்லை மன்னவா!
இனியெலா மீசன திச்சை மேற்படி ,, 156-7
158. நன்மையே யாவும் நன்மையாய் முடியின் ,, 223
159. இருமனதேன் இனி? ,, 227
160. பிரியீர் இனியே ,, 232

மேற்காட்டிய பெரும் பூட்கைகளில் பழமொழிகளும் பொருண்மொழிகளும் உவமங்களும் காணப்படும். இந்நாடகவாசிரியர் நன்கு பயின்ற தமிழ் நூல்கள் திருவாசகம், திருக்குறள், நாலடியார், தேவாரம் ஆதியன வென்பது அடிச்சிறப்பாலும் சொற்றொடர் எதிரொலியாலும் விளங்கும். ஆங்கிலப் பாக்களில் தட்டா தொழுகும் தட்டார் (Gold Smith) செய்த 'முனிவர்' எனும் பாவும், அத்தலைப் பெயருடன் பார்னெலாக்கிய பாவின் பொருளும் அன்றூருக்குப் பழைமை யுடையனவே. இயற்கை யுயிர்களுள் நாய், நாங்கூழ், கவரிமா, ஈ, கொசு, முதலை, தேள், சேவல், திக்குருவி முதலியன உவமைப் பொருள்களாக வந்துதவியுள. பேய்த்தேர், எடுப்பார் கைப்பிள்ளை, பிறவிப் பெளவம், வடக்குநோக்கி, அல்லும் பகலும், குருநாதன், இம்மெனு முன்னம், தூண்டிலின்மீன், எள்விழற்கிடமில்லை, இடியுருண்டாற் போல, கடன் மடை விண்டென, முதலான பெருவழக்கிலுள்ள தொடர்களும் சொற்களும் தோன்றும். தமிழ்நாடு, தமிழ்மொழி, தாமிரவர்ணி. நன்செய் நாடு, சேரநாடு, திருவாழ்கோடு, இவற்றைப் பற்றிய அடிகளும் மனத்தில் வைக்கத்தக்கன. வசிட்டர், பரணர், வியாசர், அகத்தியன், அரிச்சந்திரன் ஆதிய பெரியார் பெயரும் உண்மை விளக்கு முறையிற் காணப்படும். 'களவழி,' 'மறைவழி,' 'சுருங்கை,'- இது ஆசிரியர் பயின்ற லிற்றன் பிரபுவாலாக்கப் பெற்ற அருமை

வாய்ந்த 'சீக்ரேட் வே' The Secret Way என்ற பனுவலி னின்று தேர்ந் தெடுக்கப்பட்டு வழங்கலாயிற்று. சுந்தரர், மனோன்மணி, குடிலன் வருணிப்புகள் வியக்கற்பாலன. ஐந் திணைச் சிறப்பும், ஐந்தெழுத்துண்மையும் ஐம்பொறி வஞ்சமும் ஆங்காங்கு புலப்படும். சிவகாமி சரிதம் தனி நூலாகவே கருதற்பாலது. நாடகப் போக்கிற்குப் பொருந்தாதது. கோடகனல்லூரர் மீது சுந்தரர்க்குள்ள குருவிசுவாசம் மறக்கற் பாற்றன்று. அனைத்தினுஞ் சிறந்தது தமிழ்த்தாய் வணக்கம். மாணவர் பலரும் இதனை மனப்பாடமாகக் கூறுவர். அரச நீதியும், அமைச்சர் தன்மையும், தூதரிலக்கணமும், தர்க்க நூல் ஞானமும், ஆஸ்திக வுண்மையும், உலக நிலையும், இல் வாழ்க்கைத் துயரமும், புருடோத்தமன் பாட்டினுட்பொருளும், தலைத்தவ முனிவர் குணாதிசயமும், ஆறலைக்கள்வ ராண்மையும் பல விடங்களிற்றிகழும். இவ்வாறு பற்பல மணிகள் செறிந்த இந் நாடகவாசிரியர் தந்தலைக் குழவியைத் தமதாசான்கணுள்ள அன்பிற்கும் பயபக்திக்கும் அறிகுறியாக நேர்ந்து விடுத்துளர். 'நலந்தீதினிற் சேய்மை யாயினும் அண்மையா யணுகி யான் மேல் கீழுளளென வுணரும் அமயம், மிகு நேயமுறினும் எட்டா அவாவே தூரத்துறையும் அருமை நண்பனே' என்று போற்றற் குரியர் திருவனந்தை மாராயர் கல்லூரியின் மாசித் தலைவராம் ஆர் ஆர்வி துரையாவர்.

மறுப்பு முறை

திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்.
தலைமைத் தமிழாசிரியர், போர்டேஉயர்தரக்கலாசாலை, திருவத்திபுரம்.

பொழிலன்பர்கள் சென்ற சிலமலர்களில் பின்னங்குடி, திரு. சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய சொல்லதிகாரக் குறிப்புரை நூலை, தமிழ்ப்புலவர் திரு. சோமசுந்தரம் பிள்ளை

யவர்கள் ஆராய்ந்தெழுதிவரும் மறுப்புரையினைக் கன்னுறு தலையன்றி யூன்றி நோக்குதலும் செய்து வருகின்றனர். அம் மறுப்பு, அக்குறிப்புரை நூலைத் தொடக்க முதல் முடிவுகாறும் ஆராயத் தொடங்கியுள்ள தென்பதும், அது மேற்கொண்டுள்ள முறை நடுநிலை இகவாததென்பதும் அன்பர்கள் அறிந்தனவாம். நிற்க, சென்ற மலரில் வித்துவான் திரு. வேதாசலய்யர் அவர்கள் பிள்ளையவர்கள் எழுதிய மறுப்புக்கு மறுப்பொன்று எழுதியிருக்கின்றார். வாதப்பொருளாய குறிப்புரை நூலுடையார் நோக்கத்தைபாதல், பிரதிவாதமாகிய மறுப்புரை நோக்கத்தையாதல் கொள்ளாது, காலத்துக்கேற்ற கோலம் கோடல் வேண்டும் என்னும் நோக்கத்தையுடையராய், ஐயரவர்கள் மறுப்பெழுதத் தொடங்கியுள்ளார். அது மறுப்பு முறையன்று: வாதி பிரதிவாதிகள் இருவரும் ஒரு நோக்கமுடையராய், அதனைச் சாதிக்கு முகத்தால் எழும் பொருள்பற்றி வாதிக்கின்றமையின், அவ்வாதப் பிரதிவாதங்களைத் தூக்குவோர் பிறிதொரு நோக்கமுடையராதல் அமையாதாம்; இருவர் நோக்கமும் வழுவாயவழி, பிறிதொன்றமையும்.

இனி, ஒரு பொருள்பற்றி வாதம் நிகழ, அதனை மறுக்கு முகத்தால் பிரதிவாதம் எழின், இவ்வாதம் முடிவதன்முன், ஒருவர் இடைபுகுந்து தகைதலையன்றி வெற்றுரை தொடுத்துக் காலங் கழிப்பித்தல் தருக்க நெறிக்கும் வழக்குக்கும் ஒவ்வாத செயல் என்ப. குறிப்புரை நூலை வாதப் பொருளாகக் கொண்டு திரு. பிள்ளையவர்கள் பிரதிவாதம் புரிந்து மறுக்கின்றாராகலின், அதற்கிடையிலே, ஐயரவர்கள் மறுப்பெழுதுதல் மறுப்பு முறையன்று.

இனி, பிள்ளையவர்கள் செய்யும் மறுப்புரையின் பாங்கறியாது முன்னுரையிற் கூறியன சில கொண்டு, மறுப்புரை போன்று, ஐயரவர்கள், ஆரியம் படித்தவராதலை யன்றித் தமிழும் தாம் படித்தவராவர் என்பதனைத் தமிழுலகிற் கறிவிக்கின்றனர். வனப்பும் மணமும் வாய்க்கப் பெற்ற மலர் வறிதே கானிடைத் தோன்றி மலர்ந்து கமழ்ந்து வாடுதல்போல் அறிவுடையாருட்பலர் சொல் வனப்பும் அறிவு மணமும் அறிந்து

உலகு இன்புறும் வகைப் பயன்படாது கழிகின்றனர் என்ற புலவர் பொருளுரையை உணர்ந்து, ஐயரவர்கள் முற்போந் நமையால் அவர்க்குத் தமிழ்த்தாயின் தண்ணருள் பெருகுமாக,

இனி, ஐயரவர்கள் குறிப்புரை நூலின் மறுப்புரை குறித்துக் கூறுவார், "திருவாளர் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் வரையும் மறுப்பினைக் கண்ணுற்றேன். அதில் பெரும்பாலும் சாத்திரியார் வரையும் உரைநடையைப் பற்றிய கண்டனமே கூறுவர்" என்கின்றார். ஒரு பொருள்பற்றி எழுந்த உரைக்கு மறுப் பெழுதுவோர், அப்பொருளைக் கண்ணுற்ற துணையானே அமைந்து அதுசெய்தல் மறுப்புமுறையன்று. அப்பொருளுரை களை நன்காராய்ந்த பின்னரே அது செய்தல் முறையாகும்.

"சாத்திரியார் வரையும் உரை நடையைப் பற்றிய கண்டனமே கூறுவர்" என்னும் இஃது உரைநடை அத்துணைச் சிறப்புடைத்தன்று என்று உணர்த்துவதோடு, "ஆதலின் உரை நடையைப்பற்றி ஆய்தல் பயனில் செயலாம்" என்று பின் கூறுவது அவ்வுணர்ச்சியினை வலியுறுவிக்கின்றது. ஒரு மொழி யின் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் காரணமாவது உரைநடைப் பொலிவே என்பதனை எல்லா மொழி வல்லாரும் கூறுகின்றனர், ஒருவன் தன் கருத்துட்கிடந்த பொருளைப் பிறர்க்கு வெளியிடு தற்குப் பெருந்துணையாகும் இவ்வுரைநடை, அப்பொருளைத் தன் அகத்தே கொண்டு, தான் அதற்குப் புறமாய் நின்று விளங்கும் நேர்மை கற்றோரேயன்றிக் கற்க முயல்வாருமறிவர். பொருட் பொலிவு குறைவுற்றிருப்பினும், அதனை வெளிப் படுக்கும் உரைநடைப் பொலிவு அக்குறைவினை நிறைவு செய்து காட்டும் என்ப. சொல்லதிகாரக் குறிப்புரையுடையார்; ஆங் கிலத்திலும் பெரும் புலமை பெற்றவராகலின், அம்மொழிக்கண் உரைநடையைப்பற்றிய கொள்கைகள், சிறந்தோர் கூறியன, பல இருத்தலை அறிவர். ஆரியம், ஆங்கிலம், தமிழ் என்ற மூவகை மொழியினும் பயிற்சி மிக்க அவர், அவற்றின்கண் உரைநடையாக்கம், பொருளாராய்ச்சி முதலிய நெறிகளைக் கண்டிருப்பார். ஆதலின், அவர் கருத்தறியாது ஐயரவர்களை மறுப்பெழுதுதல் முறையன்று.

பொருளின் உயர்வு, தூய்மை முதலிய நலங்கட்கேற்ப, அப்பொருளை வெளிப்படுக்கும் உரையும் உயர்வு தூய்மை முதலிய நலம் பெற்றுத் திகழ்தல் எம்மொழியினும் காணலாம் உயர்பொருளைக் குற்றம் நிறைந்த உரையிடை வைத்துக்கூறுதல் அவ்வுயர்பொருளை யுணர்ந்தார் செயலன்று; அவ்வுணர்ச்சியின் பயனுமன்று. மணியினைப் பொன்னிடை வைத்து அழகு திகழக் காண்பரே யன்றிக் குப்பையிற் கலந்து காணார்; ஒருகால் கிடப்பக் காணில், குப்பையிற் பிரித்துக் காணவே அறிவுடையார் முயல்வர். அங்ஙனமே, தமிழ்மொழிக்கண் ஒப்பும் உயர்வுமின்றித் தானே தனக்கு நிகராய்விளங்கும் தொல்காப்பிய நுண்பொருளை ஆராய்ந்து காண்பவர், அதனை, வெளியிடுங்கால், தூயசெம்மொழி நிறைந்த உரையிடைப்பெய்து உரைப்பர்; வேற்ற வழுநிறைந்த மொழியயினும் உரைஅவரிடைத்தோன்று தலும் செய்யாது; ஒருகால் தோன்றின், அது, அவரது இலக்கணவறிவின்மையைக் காட்டி விடும். இலக்கண அறிவின் முதற்பயனான உரைநடையை ஆராய்தலும் வேண்டுவதே. இதனைக் காணாது "உரைநடையைப் பற்றி ஆய்தல் பயனில் செயலாம்" என்று அவர் கூறுவது மறுப்பு முறையன்று; உண்மையுரையு மன்று. தமிழறிவு சிறிது பெருகவுடையார்க் கன்றித் தொல்காப்பியப் பொருள் இனிது விளங்காதென்ப. அது வாயாகுதல் நடைமுறையிலும் காண்கின்றோம். அதனை ஆராய்ந்து குறிக்கும் அறிவு படைத்தவர், அவ்விலக்கண வறிவின் பயனுப உரைநடை வரைதலிற் பிழையாரன்றே! அன்றியும், இலக்கண ஆராய்ச்சிக்கு எத்துணை அறிவு வேண்டுமோ, அத்துணை அறிவன்றே அவ்வாராய்ச்சியை வெளியிடுதலினும் வேண்டப்படுவது!

இனி, "உரைநடை காலத்துக் கேற்ற நடையானே வரைத[ல்] பயனளிக்குமே யல்லாது பலதிரிசொற்களைப் பெய்து வரைதல் சிறப்பின்று" என்று கூறிய ஐயரவர்கள், "மரபியலின் கண்ணே பேராசிரியரும் அவ்வக்காலத்துக் கேற்ற நடையானே வரைதல் வேண்டுமென்கின்றனர்" என்றார்.

உரைநடை, தமிழ்மொழிக் கண்ணதாயின், சிறிய கூரிய தீஞ்சொற்களால் வழுவின்றி எழுதப்படுதல்வேண்டும், என்னுங் கருத்தினராய் உரை நடையைப் புலவர் ஆராய்வாராக. அதனை யறியாத ஐயரவர்கள் மற்றொன்று விரித்தல் குற்றமாகும். வழுவின்றியன்ற உரைகள் திரிசொற்கள் பெய்து வரையப் பட்டிருக்குமென்பது இவர் கருத்துப்போலும். இன்றேல், இதனை இவர் எழுதுவதன் கருத்து என்னை? இனி, பேராசிரியர் காலத்துக்கேற்ற நடைவேண்டுமென்றனரேயன்றி, வழுமலிவும் பொருளியையின்மையும் பிறவும் ஆகிய குற்றமெல்லாம் நிறைய எழுதுதல் வேண்டுமென்றாரிலர். இங்கே, பேராசிரியர் "மரபு நிலை திரியா" என்ற மரபியற் சூத்திரவுரையில், "முற்காலத்து வழங்கிவந்ததனை வழுவென்று களைய வாயினன்றே பிற்காலத்துப்பிறந்த வழக்கு இலக்கணமெனத் தழீஇக் கொள்வதென்க" என்ற பொருளுரையை ஐயரவர்கள் மனத்துட் கொள்வாராக. இவரோரன்னார் கருத்துட்கொண்டு போலும், சிலர், "ஒருவள்" "பூந்து" முதலிய சொற்களைப் பெய்து நூல்கள் எழுதுதலே யன்றி, இன்டட்டர் மீடியட், பி. ஏ. முதலிய தேர்தல்களுக்குப் பாடங்களாக விதிப்பித்தலும் செய்கின்றனர்.

இனி, "அன்றியும், ஆரியம் படித்தார் தமிழறியார் என்பர்," என்று கூறுகின்றார். பிள்ளையவர்கள் கூறியது உண்மை யுரையே. ஆரியம் படிப்பவர் ஆரியம் அறிவரே யன்றித் தமிழறிதல் யாங்ஙனம் கூடும்? இருமொழியும் ஒருங் குணர்ந்தார் ஒருங்கறிதல் கூடும். ஆரியம் படித்தார், தமிழறிந் திருப்பாராயின், தமிழறிவாராவர்; ஆங்கிலம் அறிந்திருப்பா ராயின், அஃதறிந்தாராவர். ஆரியம் படித்ததனாலே ஒருவன் தமிழையும் அறிந்தானவன் என்பராயின், அவருரையைக்கொள் ளார் அறிவுடையோர்.

இனி, "வடமொழி நூல் உணர்ச்சியுடையாரே தமிழின் உண்மைப் பொருளைத் தெள்ளிதின் விளக்குவர்" என மாதவச் சிவஞான யோகிகளும், தொல்காப்பிய உரையாசிரியர்களுட் சிலரும் விளக்கினர் என்பர். ஒரு மொழியின் இலக்கண ஆராய்ச்சிக்குப் பிற மொழிகளின் இலக்கண அறிவு ஒருவர்

பெறின், அது நன்றே. ஆரிய மொழியின் இலக்கண முறையினும், ஆங்கில மொழியின் இலக்கணமே உரைநடை யாக்கத்திற்கும், சொல் முடிபுகட்கும் ஒருபுடை நெருங்கிய ஒற்றுமையுடைத்தாய்த் தோன்றுதல் கொண்டு, ஆங்கிலமுணர்ந்த ஒருவர், "ஆங்கில நூல் உணர்ச்சியுடையாரே தமிழின் உண்மைப் பொருளைத் தெள்ளிதின் விளக்குவர்" என்பராயின், அஃது எவ்வாறு கோடற்பாலதாமோ அவ்வாறே இக்கருத்தும் கோடற்பாலதாம்.

ஒரு மொழியின் இலக்கணம், எள்ளின் நெய்போலும் என்பவாகலின், அந்நெய்யின் இயல்பாராய்வார், எள்ளை யாராயாது கொள்ளையாராய்தலோடு, பிற மொழியின் இபல பற்றிப் பேசுதல் ஒக்கும் என்க. ஒருகால் ஒற்றுமைப் பகுதிகள் இருக்கலாம். அவற்றைக் காட்டுதல் அறிவுடைமையாகும். இந்நெறியை நோக்காது, ஐயரவர்கள், வடமொழி தென்மொழிகளின் உணர்ச்சி யின்மை யுண்மைகளைத் தொடுத்து நெறி பிறழ்தல் மறுப்பு முறையன்று.

இனி, இவர், பிள்ளையவர்கள் மறுப்புரைகளில் பிழை யெனக்கண்டு காட்டியவற்றுக்கு மறுப்புக் கூறத் தொடங்குகின்றார். ஆராய்தற்கு எடுத்துக் கொண்ட பொருள் இலக்கணமேயாக, பிறிதோர் சின்னூலையும் அதன் உரையையும் சான்று கோடல் அமையாது; அந்நூலே அமையும். உயர்ந்தோர் மனப் பான்மையை அவரிற் குறைந்தார் மனப் பான்மை கொண்டளித்தல் பொருளாராய்ச்சிக்கு விளக்கந் தராது. இவற்றை நோக்காது விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர், வை. மு. சடகோப ராமாநுசா சாரியார் முதலிய நன்னூல் உரைகாரர்களையும் பிற சின்னூல் எழுதினோரையும் காட்டி முடிபு வகுக்கின்றார். இவர்கள் பெரும்பாலும் முன்னோர் கூறுவன வற்றைக் கூறி யாங்குக் கோடலே யன்றி, முன்னோர்போலக் கடாவிடைகளால் தூய்மை செய்த உரைவகுத்தல் செய்வதிலர். இவருட் சிலரொழியப் பலர் தம்முடைய கருத்தே உரைத்திலர். இலக்கண ஆராய்ச்சி செய்பவர், அதனை ஒப்ப, நூலொன்றுளதாயின், அதனையாதல், இன்றேல், அவ்விலக்கணத்தைப்பற்றிப்

பிறர் எழுதியவற்றை யாதல் துணைகோடல் பொருந்துவதாம். அதனிற் பிற்பட்ட நூல்களைக் கருவியாகக் கோடல் மறுப்பு முறை]யன்று.

ஆகவின், புலவர் பெருமக்களாவார் குறிப்புரை நூலையும், அதன் மறுப்புரையையும் முற்றும் தூக்கி நோக்கி, தகுவனவும் தவிர் வனவும் எடுத்துக் காட்டி முடிபு கூறுநிலை யன்றி, இனியும், பலரும் எழுதும் உரை, பாட்டு ஆகிய இருவகை நூல்களையும் ஆராய்ந்து வழுக்களைந்து நம் தமிழ் மொழியினை வளர்த்து வளம்பெறச் செய்வார்களாக. இவ்வகையான மறுப்புக்களும், சொற் போர்களும் எழுந்தமைகாரணமாக, ஆங்கிலம், ஜர்மன், ப்ரெஞ்ச் முதலிய நாட்டின் மொழிகள் வளமுற்றுத் திகழ்கின்றன என்பதையும் நினைவு கூர்வார்களாக.

தமிழ்ச் செய்திகள்.

தமிழ்ப்பரிசு:—சென்னைப் பல்கலைக்கழகத்தார் நடத்திவரும் தமிழ் வித்துவான் தேர்வில் முதன்மைபெறும் மாணவர்க்கு ஒரு ஆயிரம் வெண்பொற்காசுகள் ஆண்டுதோறும் வழங்குவதெனத் திட்டஞ்செய்து அவ்வண்ணமே சென்ற சிலவாண்டுகளாக முதலிடம் பெற்ற வித்துவான்கட்கு திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர் திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமியவர்கள் பரிசு வழங்கி வருதல் தமிழ்நாடு போற்றும் நற்கருமமாகும். சென்ற தேர்வில் முதலிடம் பெற்றவர் திருச்சிராப்பள்ளி தேசக்

கல்லூரியில் உதவி ஆசிரியராயிருந்து இதுகாலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் திருவாளர். பழனியப்ப பிள்ளையாவர். பிள்ளையவர்கள் பரிசு பெற்றமை குறித்து கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் மிகமிக மகிழ்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் தமிழ்த் தேர்விற்குரிய கலாசாலை திருவையாற்று அரசர் கல்லூரி ஒன்றேயாதலால் இத்தேர்வு கருதி போட்டிபோடும் மாணவரின் தொகை மிகச் சிறிதே யாகும். தமிழன்பர்கள் இக்குறைபாட்டினை மனதில் வைத்து மற்றொரு கலாசாலையேனும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நிறுவுதற்குரிய முயற்சியை இன்னே தொடங்குவார்களாக.

கரந்தைத் தமிழ்ச் சங்கக்கல்லூரி :— கலைமகள் விழாவுடன் நடந்து வந்த கல்லூரித் திருநாள் இவ்வாண்டில் சில தடைகளால் 1932-நவம்பர் 4, 5, 6 நாட்களில் நடைபெற்றது. பந்தய விளையாட்டும், பரிசளிப்பும் திரு. கமலத்தியாகராசன் அவர்கள் B. A., L. T., தலைமையிலும், பொருட் காட்சி திரு. K. பட்டாபிராம சாத்திரியார் அவர்கள் B. A., L. T., தலைமையிலும் மாணவர் மாணவிகளின் சொற்பொழிவுகள் திரு. கிருபாசங்கர் பட்டு அவர்கள் B. A., L. T., தலைமையிலும், கணக்காயர்களின் சொற்பொழிவுகள் திரு. C. வேதாசலம் அவர்கள் B. A., B. L., தலைமையிலும் நிகழ்ந்தன. மாணவர்களின் கைவினை முற்றிய செய்பொருள்கள், கண் கவர் வனப்பினவாயிருந்தன; அன்னார் ஆற்றிய சொற்பொழிவுகள் சொல்லழகும் பொருட் பொலிவும் உடையனவாயும், கேட்டார்ப்பிணிக்கும்தகையனவாயுமிருந்தன; கல்லூரித் தலைமையாசிரியர் திரு. சிவ. குப்புசாமியவர்கள் அதிகமான் நெடுமானஞ்சியின் வரலாற்றை நாடகமாக இயற்றியதும், மாணவர்கட்கு நாடகம் பயில்வித்ததும் பாராட்டத் தக்க செய்களாம். நாடகத்திறமை காட்டிய மாணவர்க்கு பதக்கங்கள் வழங்கிய சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி M. R. A. S. அவர்கட்கும், சொற்பொழிவுகள் திறமையுடன்நிகழ்த்திய சரசுவதி, மங்கையர்க்கரசியெனும் மாணவிகட்குப் பதக்கங்கள் வழங்கிய

திரு. K. சம்பந்தம் பிள்ளை B. A., B. L, அவர்கட்கும் ஆசிரியர் திரு. நாகநாதய்யர் அவர்கட்கும், பந்தய விளையாட்டில் திறமை காட்டிய மாணவர்க்குப் பதக்கமளித்த ஆசிரியர் திரு. அட்சயம் அவர்கட்கும் சங்கத்தார் நன்றி செலுத்தும் கடப்பாடுடையார்.

இக்கல்லூரியின் பெருநோக்கு நிறைவேறுதற்குத் தமிழ் மக்களின் பேராதரவு வேண்டப்படுகின்றது.

*　*　*　*　*

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் :—இக்கழகத்தின் பேரவையில் 1932-அக்டோபர் 27-உ நிகழ்ந்த பட்டமளிப்பு விழாவில் சென்னைமாகாணத்தின் கல்வித்தலைவர் இலிட்டில் எயில்சு (Little Hailes) துரைமகனார் நிகழ்த்திய சொற்பொழிவின் ஓர்பகுதி:-

*　*　*　*　*

உங்களில் மிகப் பலர் கீழைத்தேயக் கலைகளில் புலமை பெற்றது குறித்து நான் அகமகிழ்கின்றேன். நீங்கள் தமிழ் மொழியினையும் அதன் பேரிலக்கியங்களையும் கற்பதிலேயே உங்கள் கவனத்தைப் பெரும்பாலும் செலுத்தியிருக்கின்றீர்கள்; இக்கால நிலைக்கேற்ற தமிழ்க் கலையை வளர்க்கும் நோக்குடனே பழய தமிழிலக்கியங்களை ஆராய்ச்சி முறையில் கற்பதினும் சிறந்ததொரு கல்வி, தமிழ் மக்களிடையே அமர்ந்துள்ள இக்கழகத்திற் குரியதேன யான் கருத முடியாது. பொருட்கலை (Economics) இரசாயனக்கலைகளைப் பயிலுதற்கு இக்கழகத்தார் அமைத்திருக்கும் வசதிகளைக்கொண்டு உங்களில் மிகப்பலர் அக்கலைகளில் புலமை பெற்றதை மெச்சுகிறேன். ஆனர்சு (Honours) தேர்வில் தேறியவர்களில் பாதிப்பேர்கள் பொருட்கலையிலும், பாசு (Pass) தேர்வில் தேறியவர்களில் பாதிக்குமேல் பொருட்கலை, இரசாயனக் கலைகளிலும் நீங்கள் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் பொருட்கலையும், இரசாயனக் கலையும் தற்காலக் கலைகள்; உலகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் எல்லாம் அவற்றைக் கற்கலாகும்; சமீப காலத்தில் அக்கலைகள் எவ்விடத்திலும் மிகமிக வளர்ந்திருக்கின்றன. தமிழ்மொழியோ

மிகப் பழமையான தனிச்சிறப்புகளையுடைய பேரிலக்கியங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது; தமிழ் மணங் கமழ்கின்ற சூழலில் தமிழ் பேசும் மக்களிடையே அம்மொழி நன்கு பயிலப்படும். உலகத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் யாவற்றினும் விட தமிழ்க்கலை பயிலுதற்கு இக்கழகமே சாலச் சிறந்ததென்பது மறுக்கவொண்ணாத உண்மை. பழமையான தமிழ்ப்பனுவல்களை புதுமையான ஆராய்ச்சித் திறவுகோலால் திறந்து, ஆய்ந்து கண்ட முறையில் தமிழ்மொழியை வளர்க்க வேண்டியது அவசியம். நீங்கள் அனைவரும் பொருட்கலை, இரசாயனக்கலை ஆதியவற்றைப் பயிலாதொழிந்து, தமிழொன்றையே பயிலவேண்டுமென நான் கூறுவதல்ல; தமிழ்மொழி தமிழ்க்கலை ஆதியவற்றைக் கற்கவும் வளர்க்கவும் இதுகாறும் எத்துணையும் எண்ணாது, அவற்றைப் புறக்கணித்து அவமே காலத்தைக் கழித்தோமென மனதாறவுணர்ந்து வருந்துகின்றேன். சென்ற காலத்தில் தாய்மொழி வளர்த்தலை மறந்ததால் நாம் எய்திய இழிதகவை நீக்குதற்பொருட்டு இக்கழகத்தார் செய்து வரும் நன்முயற்சி நமக்கு மகிழ்வளிக்கிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராய திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும், திரு. C. வேதாசலம் பிள்ளை அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றத்திலும் (Syndicate) கலைமன்றத்திலும் (Acadamic council) இடம் பெற்றது சங்கத்தார் மகிழத்தக்கது. இன்னார் மேற்கொள்ளும் தமிழ்த்தொண்டு செவ்வனம் நிறைவேற இறைவன் திருவருள் புரிவாராக!

இச்சங்கத்தின் உறுப்பினராயும் உண்மை அன்பராயும் இருந்து பல்லாண்டுகளாக இச்சங்கத்திற்கு உதவி புரிந்து வந்த கும்பகோணம் நகர உயர்தரக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திரு. அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஐப்பசி 23-தேதியன்று இறைவன் திருவடி நீழலை அடைந்தனர். அன்னார்ப் பிரிவினால் சங்கம் வருந்துகின்றது.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் அ	ஆங்கிரச, கார்த்திகை.	மலர் அ.

நப்பூதனாரும் முல்லைப்பாட்டும்.

திரு. K. சோமசுந்தரம் அவர்கள் B.A., B.L., தஞ்சை.

கடைச் சங்க மருவிய நூல்களில் இயற்கை வனப்பின் நலத்தைத் தெளிவுறக் கூறுவதில் இணையற்று நிற்கும் நூல் பத்துப் பாட்டென்ப.

> முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து

இவற்றில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை-அகப்பொருளின் திட்ட நுட்பங்களையும் இயல்புகளையும் நயப்படக் கூறுநிற்கும். இங்கு ஆராய்தற்பொருட்டு எடுத்துக்கொண்ட சங்கத்துச் சான்றோராகிய நப்பூதனாரது முல்லைப்பாட்டு அகத்திணை இலக்கணத்திற்கு எவ்வாற்றான் சிற்றிலக்கியம்போல் விளங்குவதெனலைக் காண்குவம்.

பத்துப் பாட்டு சங்ககாலத்தே தொகுக்கப்பட்டமையான் நப்பூதனார் கடைச் சங்க காலத்துப் புலவராவர். இவர் பாடிய

தாக வேறு பாக்கள் கடைச் சங்க மருவிய நூல்களில் காணக் கிடைக்காமையின் இவ்வொரு நூலைக்கொண்டு இந்நல்லிசைப் புலமையாரின் வரலாறு இன்னதென முற்றும் அறிதற்கியலா தாயிற்று. சிறுபான்மையர் இவரது மரபு, சமயம், குணத்தினை அறிய வேண்டுவான் எண்ணி இம் முல்லைப்பாட்டிற் காணப் பட்ட சில சொற்றொடர்களைப் பல்வகையாற் பொருட்படுத்தி, 'நீர் செல நிமிர்ந்த மாஅல்போல' என்றதினுன் இவர் வைணவ ரென்றும், 'திரி மருப்பிரலையொடு மடமானுகள' என்றதினுன் இவர் அடவியில் அலைந்து திரியும் தன்மையவரென்றும், இம்முல் லைப்பாட்டு தலைவியின் துயருழந்திருக்கும் தனிமை நிலைமையை முக்கிய பொருளாகக் கொண்டமையான் இவர் தன் வாழ்நாள் முழுதும் தனிமை நிலைமையாயிருந்து துயருற்றனரென்றும், 'காட்டிடத்தையும் மழைக்காலத்தையும், தலைவிதனிமையினையும் பொருளாகக் கொண்டு இவர் இச்செய்யுள் இயற்றினமையானும் அவையே இவர் குணமெனத் தெளியப்படும்' என்பர். இவ் வாறு நப்பூதனாரது குணத்தினை இவ்வொரு நூல்கொண்டு துருவி நோக்க அவாக்கொண்டு கூறும் கூற்று போந்த வலியினை யுடைத்து. ஏனெனில் இங்கு நப்பூதனார் 'முல்லை' எனும் அக வொழுக்கத்தையே விதந்து கூறுதலில் நோக்கமுடையாராத லால் அகத்திணைக் குரிய முதல்கரு உரிப் பொருள்களையே சிறப்பித்துக் கூறுவர். இதனைப் பின்னர் நன்கு விளக்குவாம்.

'திருமுருகாற்றுப்படை முதலானமற்றை ஒன்பது பாட் டுக்களுக்கும் இம் முல்லைப்பாட்டு மிகவும் தாழ்ந்ததென்பது அவற்றையெல்லாம் ஒப்புநோக்கிப் படிப்பார்க்கெல்லாம் நன் குணரக் கிடக்கும்' என்றார் மறைமலையடிகள். இதற்குரிய காரண மென்னையெனின் அதனையும் அவர் கூற்றால் விளக்கு வாம். '..........இவர் (நப்பூதனார்) ஒழிந்த மற்றைப் புலவர்கள் நம்மனோபாவக உணர்ச்சி சலிப்படையாமல் விரித்து வருணிக்க இசைந்த நன்பொருளை விரித்து வருணிக்கின்றார்கள். இவரோ விரித்து வருணித்தாற் சுவை யுண்டாகாத பொருளையும் அகல மாய் விரித்துச் சொல்லுகின்றார். பாடி வீடு கட்டப்பட்ட தன்மையினை இவர் விரித்துச்சொல்லாமல் இருந்தால் இப்பாட்டு

இன்னும் நன்றாயிருக்கும்!' இவ்வொரு சான்றுகொண்டு இவரை பத்துப் பாட்டின் பத்து நூல்களைப்பாடிய சான்றோர்களுள் மிகத் தாழ்ந்த நிலைமையில் வைத்து நூலிற்கு ஒரு குறு குற்றம் கூறுவது பரிதபிக்கத் தக்கதே. நப்பூதனார் தாமெடுத்துக்கொண்டபொருளை இயற்கைக்கும் திணைக்கும் முரணாகாது அணிவகுத்து வெகு அழகாகப் பாடியுள்ளார். இந்நல்லிசைப் புலமையார் 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்பதை நம் மனோர்க்குப் புலப்படுத்த இம்முல்லைப் பாட்டில் வஞ்சியையும் முல்லையையும் சமத்துவமாக எடுத்துக்கொண்டு 'விரிசீர்த் தெரிகோன் ஓமனன் போல' ஒருபக்கம் கோடாது இரண்டு திணையினைப்பற்றிய பொருள்களை விரிவாகக் கூறி வஞ்சியும் முல்லையும் தம்முள் மாறுபாடாகாது புணையும் இயைபுடைத்தென விளக்கியுள்ளார். பெரியார் கூறிய வாங்கே, பாடிவீடு கட்டப்பட்ட தன்மையினை இவர் விரித்துச்சொல்லாமலிருந்தால் நம்மவர்க்குப் 'பாடிவீடு' இன்னதென்பது புலனாகாது. இவ்வாறு கருத்து முற்றுமறியவொண்ணாத சீரிய தமிழ்ப் பதங்கள் தெளிவுற எடுத்துச் சொல்வாரில்லாமையான், வழக்கற்றும் நம் கருத்திற் கெட்டாமலும் சிதைந்து போயினவென்பதையும் ஈண்டறிக. சிறிதும் முரணாகாது இந்நூலில் இருதிணையின் பொருள் விழுப்பந்தோன்றப் பொருத்திக்காட்டும் வினைத்திறன் நப்பூதனாரைப் போன்ற நல்லிசைப் புலமையோர்களிடத்திலல்லாது பிறரிடத்தில் காணக்கிடையா.

'மக்க ணுதலிய அகனைந் திணையுஞ், சுட்டி யொருவர்ப்பெயர் கொளப்பெறாஅர்' என்றார் இயல் நூலாசிரியர் தொல்காப்பியனார். இதனான் எம்மக்களுக்கும் பொதுவாகிய அகவொழுக்கத்தைச் சிறப்பித்துக்கூறும்பொழுது இத்தகைய அகவொழுக்கம் ஓர்தலைவன் அல்லது தலைவியின்பால் நிகழ்ந்ததெனச்சுட்டிக் கூறின் அது குற்றமுடைத்து, ஏனெனின் அத்தகைய அகவொழுக்கம் பிறர்பால் காணப்படாதெனக் கருதப்படுதலின். இதனால் அகவொழுக்கம் கூறும் நூல்கள் தலைவனது அல்லது தலைவியினது பெயரைச் சுட்டிக்கூறா. உண்மை இஃதாயிருக்க முல்லைப்பாட்டாராய்ச்சியாளர் எத்தகைய சான்றுகள் கொண்டு

நப்பூதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் காலத்தவரெனவும், முல்லைப் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்என்றும் வலியுறுத்தினரென்பதை கண்டுகொள்குவம். “இனித் திருமுருகாற்றுப்படை முதலான பாட்டுக்கள் ஒன்பதும் உள்ளோன் ஒருதலைவனையே குறிப்பிட்டுப் பாடவந்தமையால் இம்முல்லைப் பாட்டிற்குத் தலைவன் பெயர் எழுதப்படவில்லையாயினும், இதற்கு உள்ளோன் ஒரு தலைவன் உண்டென்பது துணியப்படும். இம்முல்லைப் பாட்டை அடுத்திருக்கின்ற மதுரைக் காஞ்சியும், நெடுநல் வாடையும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு விளங்கலால் அவற்றை அடுத்திருக்கின்ற இதுவும் அவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படும். பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னும் இடத்திற் பகையரசருடன் போர்புரியும் பொருட்டுச் சென்றபோது அவன் மனைவி பிரிவின் துயரத்தை ஆற்றிக்கொண்டிருந்த அருமையினையும் அவன் சொன்ன வண்ணம் மீண்டு வந்தமையும் நப்பூதனார் கண்டு பாடினாரென்பதும் புலப்படும். இவ்வாறே நெடுநல் வாடையினும் ஆசிரியர் நக்கீரனார் நெடுஞ்செழியன் மனைவி அவனைப் பிரிந்து வருந்திய துன்பத்தினை விரித்துச்

‘செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணை யோரென
உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
* * * * *
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயிதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை’

என்று கூறுதலோடு நப்பூதனார் கூறுவதையும் ஒப்பிட்டுணர்க. நெடுஞ்செழியன் தமிழில் வல்லவன், சிறந்த கொடையாளி,

அஞ்சாத போர் வீரன் என்பது புறநானூற்றில் அவன் பாடிய 'நகுதக்கனரே' என்னும் செய்யுளால் இனிது விளங்கலானும், தமிழ்ப்புலவர் பலரைச் சேர்த்து வைத்துத் தமிழை வளப் படுத்தி வந்தான் என்பதை 'மதுரைக் காஞ்சி' முதலியவற்றால் தெரிதலானும், இவனையும் இவன் கற்புடை மனைவியையுஞ் சிறப்பித்துப் புலவர் பலர் பாடினரென்பது துணிபு. அற்றேல் இதில் அவ்வரசன் பெயர் சொல்லப்படாமை என்னை எனின்,—அகப்பொருள் ஒழுக்கம் பயின்றுவருகின்ற இதன்கண் அவ்வாறு ஒருதலை மகன் பெயர் சுட்டிச் சொல்லப்படமாட்டாதென........ காட்டினும். இன்னும் நெடுநல் வாடையினும் தலைவன் பெயர் சொல்லப்படாமை காண்க.' (மறைமலையடிகள்)

தக்க சான்றில்லாது முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி யினையும் நெடுநல் வாடையினையும் அடுத்திருப்பதினுன் தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டுள்ளதெனக் கூறுவது தவறுத லாகும். இதனை அறியப் பத்துப்பாட்டின் வைப்பு முறை மையினை ஓர் அரிய ஒப்பற்ற பற்றுக் கோடாகக்கொண்டு மேன் மேலும் புதிய கொள்கைகளைப் புகுத்தி வைப்பதும் பொருத்தி வைப்பதும் இழுக்கு. என்னையெனின் முல்லைப்பாட்டு ஒரோ வழி என் அண்மையிலிருக்கும் தொண்டைமானிளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொள்ளுதலாகாதெனை ஓர் கடாஎழும். மற்றும் இப்பாட்டு தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டி யன் நெடுஞ்செழியனைக் குறிக்குமென்ருல் இப்பாட்டின் வைப்பு முறை மாறுபட்டிருத்தல்வேண்டும். அஃது நெடுநல்வாடைக்குப் பின்னதாகவாவது முன்னதாகவாவது இருக்கநேரிடும். தலைவன் பெயரினைச் சுட்டிக் கூருத நெடுநல் வாடை எத்தலைமகனை பாட் டுடைத் தலைவனுக கொண்டுள்ளதெனின் அஃது தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாட் டுடைத்தலைவனுகக் கொண்டுள்ளதெனத் தெரிவுறக்கூறலாகும். காரண மென்னையெனின் கூறுவாம். நெடுநல் வாடை யிலுள்ள வரி ஒன்றே இச்சங்கையினை நீக்கும். 'பலரொடு முரணிய பாசறைத் தொழிலே' என்றதற்கு உச்சிமேற் புலவர்

கொள் நச்சினார்க்கினியர் 'சேரன் செம்பியன் முதலிய எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறை யிடத்துப் போர்த் தொழில்' எனக் கூறியுள்ளார். எழுவரது வென்றி யடங்கத் தானொருவனாய் நின்று பொருத மன்னர் மன்னன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனென்பது

புனைகழ லெழுவர் நல்வல மடங்க
வொரு தானாகிப் பொருது களத்தடலே என்னும்

புறப்பாட்டானறிந்த [எசு] நேரிய சீரிய சான்று. நெடுநல் வாடையினிற் சிறப்பித்துக் கூறப்பட்ட பாசறையின்காலம், கூதிர்க் காலமெனல் 'குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்,' 'காதலர்ப் பிரிந்தோர் புலம்பப்பெயல்கனைந்து கூதிர்நின் றன்றாற் போதே,' எனும் நெடுநல் வாடையின் வரிகளே அறிவுறுத்தும். முல்லைப் பாட்டினிற் கூறப்பட்ட காலமோ முல்லைத் திணைக் குரிய கார் காலமாகும். பாண்டியன் நெடுஞ் செழியன் தலையாலங் கானம் என்னுமிடத்திற் பகை மன்னர்களுடன் போர்புரியும் பொருட்டுச் சென்றபோது அவன் மனைவி பிரிவின் துயரத்தை ஆற்றிக் கொண்டிருந்த காலம் கூதிர்காலமென நெடுநல் வாடை கூறாநிற்க முல்லைப்பாட்டு அம்மன்னன் தலையா லங்கானத்தில் போர் புரியும் பொருட்டு சென்றபோது அவன் மனைவி பிரிவின் துயரத்தை ஆற்றிக் கொண்டிருந்த காலம் கார் காலமென மறுத்துக் கூறுமோ? மற்றும் நெடுநல் வாடையினிற் பாட்டுடைத் தலைவன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனக் குறிப்பாகக் காணப் படுதல் போன்று முல்லைப் பாட்டினில் அக்குறிப்பினைக் காணேம். தலைவனைப் பிரிந்து அதனான் அப்பிரிவிற் காற்றாது வருந்தின தலைவியின் பரிசினை இவ்விரு பாக்களும் கூறுதலான் இவ்விரு நூலிற்கும் தலைவன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் எனக் குறிக்குமோ? இவ்விரு நூலினையும் ஒப்பிட்டு உற்று நோக்கின் என்? இரண்டும், தலைமகளது பிரிவிற்காற்றாது இரங் கும் பரிசினைக் கூறின் இவ்விரண்டும் ஒருதலைமகளைக் குறிக்கு மென்றறிய ஓர் நியதி யுண்டோ? அஃதேல் இவ்வாறு தலைவரது பிரிவினிற் கிரங்கி வருந்தும் தன்மையையுடைய தலைவியைக்

குறிக்கும் பாக்களெல்லாம் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனது இல்லறக் கிழத்தியையே குறிக்குமோ? ஆதலான் முல்லைப்பாட்டு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ள தென்று கருதப்பட்டுள்ள கருத்து தக்க ஆதாரத்துடன் பெறப்படும் வரையில் ஏற்புடைத் தன்றெனக்காண்க.

(தொடரும்.)

புவியின் புராதனம்.

திரு. பா. நடராசன் அவர்கள், சென்னை (ஆராய்ச்சி மாணவன்.)

நாம் பிறந்து வாழ்ந்து மடிவதற்கிடமாகும் இம்மண்ணுலகம் தோன்றியது என்று?

இவ்வினா அனைவர்க்கும் எழுச்சியை விளைக்கின்றது. பொறியைந்தும் கடந்து நிற்கும் பேருண்மைகளை, மனித அறிவு காலந்தொறும், தேயந்தொறும் நாடி நிற்கின்றது. இன்றேல், உலகில் வேதங்கள் ஒன்றென்றில்லாது, நான்கென்றில்லாது பலவோதியது எவ்வாறு? தத்துவங்கள் இத்தனையென்றில்லாது கோடியாய் நிறுத்தியது எவ்வாறு? சமயங்கள் வரையறையின்றி பற்பல சாதித்தது மெவ்வாறு?

எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்கு நம் இந்து சாத்திரங்கள் எத்தகைய விடையை இறுக்கின்றன? இவ்வுலகந்தான், என்றுவது தோன்றிய தொன்று அல்லது அநாதியா?

முப்பொருளுண்மை செப்பும் சைவ சித்தாந்தம் தெரிப்பதென்ன: பாசமென்னும் மாயாப் பிழம்பை அநாதியென்கையிலே பருமனளவாம் இம்மண்ணுலகையோ, அன்றி அண்டத்துமற்று எவ்வுலகையோ அநாதியெனக் கருதியிலர். பாசமென்னும் சொல்லுக்கு உலகமென்னும் தமிழ்நேர் ஓரளவில், இச்சிறு மபக்கத்தை எழுப்புமெனினும், நுணுகி அறிந்தார்க்கு சித்தாந்த சாத்திரத்தின் கண் வழங்கப்பெறும் 'உலகம்' இப்புவியைக் குறிப்பதன்றென்பது விளங்கும்.

உண்மையில் பற்பல நெறிக்கணும் வேறின்றி விளங்கும் சித்தாந்த வேதாந்த தத்துவங்கள் உலகத்தின் தோற்றத்துடைப்பைக் குறித்தும் ஓரளவிற் கருத்தொன்றிக் காண்கின்றன. ஆக்கமளவிறுதியில்லாத இறைவன் எவ்வாறு ஒவ்வொருயிரையும் படைத்தளித்துத்துடைக்கின்றானோ, அவ்வாறே இவ்வண்டத்தையும் உண்டாக்கிச் சிலகாலம் நிலைக்கச்செய்து மீண்டும் அழிக்கின்றான். ஐம்பூதங்களாலாய இவ்வண்டத்தை ஐம்பூதங்களாலேயே அழிக்கின்றான். மீண்டும் படைக்கின்றான். இவ்வாறே அப்பொராழியானது சுழன்று வருகின்றது. இப்பெருந்தொழில் மட்டும் அநாதியாக நடந்தேறி வருகின்றது. ஒவ்வொரு யுகத்தினிறுதியிலும், ஐம்பூதங்களில் வெவ்வேறு பொருள்கொண்டு சங்காரஞ் செய்கிறான். ஒரு யுக முடிவை நெருப்பாலும், மற்றொன்றைக் காற்றாலும், மற்றொன்றை மண்ணாலும், மற்றொன்றைத் நீராலும் முடிக்கின்றான். சகடக்கால் போலவரும் இச்சுழற்சியிலே, ஆதியில் கிரேதாயுகம் தோன்றுகின்றது. பின் திரேதாயுகமும், பின்துவாபரயுகமும் முடிவில் கலியுகமும் ஆகக் கழிகின்றன. இவை எத்தனை போயினவோ, என்னின் "நுண்மணலினை யொக்கும்" ஆனால் இப்பொழுது நடிவது கலியுகம். இது ஒரு பிரளயத்துக்குப் பின் தோன்றியிருக்கின்றது. இன்றைக்கு கலியுகாதி 5034 ஆகவே இம்மண்ணுலகு தோன்றி 5034 வருடங்களாயின.

மேற்குறித்ததுவே இந்து சரித்திரத்தின் முடிபு. சின்னாட்களுக்கு முன்னே, சென்னைத் தொன்னூல் நிலையத்தைத் துருவிக் கொண்டிருந்தேன். ஆங்கு உலகப் படைப்பைக் குறித்தவோர் ஜைனமத வரலாறு கண்ணுக்குத் தட்டுப்பட்டது. நூறாண்டுகட்கு முன்தொகுப்பட்ட இக்குறிப்பின் ஒருபகுதியை ஈண்டு வரைகின்றேன் "........முன் யுகப்பிரளயத்தில் அக்கினி வருஷம் வருஷித்து உகஸற்ப் பிணியில் பத்து கோடாகோடி கடற்காலமும், இப்போது நடந்து வருகின்ற அவஸற்பிணியிலே நாற்பத்திராயிரம் வருஷம் குறைய பத்து கோடாகோடி கடற்காலமுஞ் சென்று இந்த தீக்காலமாகிய கலிகாலத்தில் 2480 வருஷம் சென்றது. இதக்கு சகாப்தத்தில் சென்ற வருஷம் 1734 இதின்மேல் இந்த தீக்கால சேஷம் 18520 வருஷமும் அதன்மேல் தீக்காலம் 21000 வருஷமுஞ் சென்று இந்த தற்மகண்டத்தில் பூமியில் அக்கினி மழை வருஷித்து யுகப் பிறளயமாம்."

இனி, கிருத்து வேத முடிபு வேறாக விருக்கின்றது. ஏசுநாதன் எழுவதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே கடவுள் இம் மண்ணுலகையும், அதில் ஆதாமையும் ஆதியில் படைத்தார். அதுவரை பரலோகமொன்றே யிருந்து வந்தது! இவை பெருநகைப்பிற் கிடமாயதால் விரிக்காது விடுதலே முறையாம்.

இன்று கலியுகமாயின் கலிஎன்ற சொல்லுக்குத் தீமை என்றில்லாது அறிவு, அல்லது ஆராய்ச்சி என்ற செம்பொருளிருக்க வேண்டும். மக்கள் நம்பிக்கை எதிலும் இழக்கின்றதாக கருதப் படுகின்றது; உண்மையா இது? இல்லை. முன்னினும் முழுதாக நம்புகின்றார்கள், எதில்? அறிவில்; ஆராய்ச்சியில்; பூமி உருண்டை வடிவினதென்று பள்ளிப் பையனும் இன்று நம்புகிறான். இராகு கௌவுவதாலன்றுகிரகணம் ஏற்படுவதென்று நம் தாய்மார்களும் உணர்கின்றார்கள். அன்று இரணியன் பட்ட குருதியே, இன்று மாலை வானில் செக்கர் நிறமாய்த் தேங்கி நிற்பதென்பதை நம் பாட்டியும் மறக்க முயல்கிறாள். எனின், இப்புவியின் தொன்மையைக் குறித்து மேனாடு கண்ட விஞ்ஞானக்கலைக்கு, யாது கூறக்கிடக்கின்றது?

ஆரியமாக்கள் பாரதத்திற் குடிபுகவந்தகாலத்தைப்பலவித சான்றுகளால் கி. மு. 2000 என்று சரித்திர நிபுணர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். அன்று அவர்கள் என்ன காட்சியைக் கண்டனர்? தாம் பொறாமை கொள்ளுமாறுப ஓர் ஒப்பற்ற நாகரிக மக்கள் பல்லாண்டாக நாட்டில் உரன்பெற்று ஓங்கியிருந்ததைக் கண்டனர். இந்த 4000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் எகிப்தியரோடு இடைவிடாது தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்தனரென்பது டாக்டர் கில்பர்டு ஸ்லேட்டரின் கோட்பாடு. எகிப்து நாட்டில் ஆராய்ச்சியாளரால் அகழ்ந்து காணப்பட்ட சிற்சில சின்னங்களிலிருந்து 4000 ஆண்டுகளுக்கு முற்போந்த மனிதன் நம்மையொத்த நாகரீக முடையவனாகியே நிலவினான் என்பது புலனாம். தன் ஆருயிர்த் துணைவியை பொல்லா வினையால் நீத்த அபாக்கியவானான ஒரு கணவன் அவள் ஞாபகக் குறியாக அவள் கல்லறைமீதே, "பிரிந்ததை யன்றிப் பிறிதேதும் பிழை யில்லாள்" என்ற உருக்கும் வாக்கிய மொன்று செதுக்கிருக்கின்றானாம். என்னே மனித உணர்ச்சிகள் எத்துணைச் சிறிதும் மாறுபாடில்லா திருக்கின்றன!

எனவே, 4000 ஆண்டுகளில் மனிதன் மாறுபட்டுள்ளது வெகு சிறிதேயானால் மிக நுணுகிய உயிர்ப்பொருளிலிருந்து புல்லாகிப் பூடாய்ப் பாம்பாகிப் பறவையாய் மிருகமாய் மனிதனாகி முதிர எத்தனைகாலம் பிடித்திருக்கவேண்டும்? அதனை ஆயிரக் கணக்காலன்று கோடிக் கணக்காலன்றோ அளவிடவேண்டும். ஆகவே காலஞ்சென்ற லார்டு கெல்வின் என்பவர் பூமண்டலத்தின் பழமையை 2 கோடி வருடமென்று கணக்கிட்டது நமக்கு ஏதும் வியப்பளிப்பதில்லை.

மனிதன் பூமியாகிய கிரகத்தில் குடிபார்க்கிறவன். ஆகவே மற்றைக் கிரகங்களும் உடுக்களும் என்னென்ன மாறுதல்களடையக் காண்கின்றானோ அம்மாறுதல்களெல்லாம் பூமியும் அடைந்துளதாகக் கருதுகின்றான். ஆகையால் தன்னுடைய கிரகத்தின் உட்பிரதேசத்தைத் தோண்டித் துருவி ஆராய்ந்து சில நூலிலிருந்து (Geology) சரித்திர உண்மையினை அறிய முயல்வதே இயற்கையாகும்.

பூமிக்குளே, மனிதன் எல்லையற்ற தொலைக்குக் கெல்விக் கொண்டிருப்பது ஒல்லாது. ஆனால்உலகின்பற்பலபாகங்களிலும் அநேக மலைச்சுரங்கங்கள் உள. இவற்றில் பல மண்ணடுக்குகளும், மண்ணுறைவுகளும் (Deposits) காணப்பெறுகின்றன. இவற்றின் உதவியால் மனிதன் சரித்திரத்தின் எழுதாப் பழம் பாகத்தை எழுத முயலுகின்றான்.

கெல்வின் பிரபு எவ்வாறு அளவிட்டனரென்று காண்போம். ஆதியில் பூமியானது நெருப்புப் பிழம் புருவத்தில் கொதிக்கும் குழம்புப் பருவத்திலிருந்தது. காலப்போக்கில் அதன் வெப்பம் தணிந்து தணிந்து இற்றைய நிலையை எய்தியிருக்கின்றது. இது எய்துவதற்கே இரண்டுகோடி ஆண்டுகள் பிடித்திருக்கும். இக்கொள்கையை இடிக்குஞ் சாராருளர். சுமார் 30 வருடங்களுக்கு முன் ரேடியம் என்ற ஒருபொருள் உலகில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இது இயற்கையிலேயே வெப்பம் விடும் இயல்வாய்ந்திருக்கின்றது. இம்மாதிரியான பொருட்கள் பல இன்னும் பூமிக்குள்ளிருக்குமாயின் இவை தரும் வெம்மை பூமி இயற்கையாய் ஆறுவதற்குச் சற்றுத் தடையாக வன்றோ இருந்திருக்கும். ஆகவே இவற்றையுங் கணக்கிற் கொள்வதானால் லார்டு கெல்வினின் உழைப்புப்பிழைபடுமன்றோ? லார்டு கெல்வின் தாம் மரிக்கும்வரை இம்மறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் இற்றை விஞ்ஞானப் புலவர் பல்லோர் இம்மறுப்பும் ஓரோவழி ஒவ்வுமென்றே கருதுகின்றனர்.

பழக்கமில்லாச் செல்வச் 'சின்னப் பண்ணையார்' மாட்டுச் சந்தைக்குப்போனால், ஒரு மாட்டின் வயதை அதன் வெளித்தோற்றத்தாலும், உடலமைப்பாலும், சுறு சுறுப்பாதியாலும் நிண்ணயிக்கின்றார். துணைபோய பண்ணையாளோ, அன்றித் துறைபோய தரகனோவெனின், அம்மாட்டின் கடைவாயைப் பிளக்கிறான்; பல்லைப் பிடித்துப் பார்க்கிறான்; வயதைக் கூறி விடுகிறான். ஒரு மரத்தின் வயதை அதற்கண் தோன்றியுள்ள வளையங்களிலிருந்து கண்டு விடலாம். சில மீன்களின் மூப்பை

அவற்றின் புறத்தே எழுந்துளச் சில தழும்புகளால் வரையறுக்கலாம். மண்ணின் தொன்மையினையும் எண்ணிக்கைகொள பல வேறு வழிகளுள. ஆனால் இவற்றினை அறிவதற்கு முன்னர், எரிப் பிழம் புருவத்திருந்து இப்புவனகோளம் இற்றை நிலை திரிந்த தெவ்வாறெனை அறிவது சால்புடைத்தாம்.

மிக நெடுங்கால முன்னே, கொதிக்குங் குழம்புப் பருவத்திருந்த அப்பழங் காலத்தே, பூமியாம் இக்கிரகம் தன் அச்சின் மேல் சுருதற்கு பொண்ணாக் கடு வேகத்திற் சுழன்று கொண்டிருந்தது. அதனைச் சுற்றிலும் நீராவி திண்ணென நெருங்கி அடர்ந்திருந்தது. சூரிய கோளத்தின் சலன சத்தியால் இவ் வக்கினிப்பிழம் பின் புறப் போர்வையாம் நீராவி அடுக்கிலே பேரலைகள் ஆர்த்தன. இவ்வாறு கிளர்ந்த மிகப்பெரும் பேரலை பொன்று வானளாவிச் சேய்மைக்கண் செல்லவே, தன் மூலப் பொருளிருந்து வேறுகித்தண்மதியாகித் துளங்கியது. ஸர்ஜார்ஜ் டார்வின் என்பவர் கணக்குப்படி இந்நிகழ்ச்சி 5½ கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தேறியது.

அழற்பிழம்பாம் பூ மண்டிலம் ஆறஆற, ஆவித்திரள்களும் நீரா யுருக்கொண்டன. அபாரமான இந்த ஆவி அடுக்குகள் அழுத்தலாலே குழம்புப் பருவத்திருந்த இப்புவனகோளம் கோட்ட மில்லாத உருளை உருவந்துறந்து குண்டுங்குழியுங் கொண்டு தோன்றியது. நீண்டாழ்ந்த இப்பள்ளத்தாக்குகளிலே மேற்குறித்த புதுநீர் நிறைந்து நீலத்திரை கடல் மிளிர்ந்தது. நிலைக்கு மிச்சாகர நீர் தட்பம் பெறவே, அடுக்கடுக்காய் மண்டி உறைவுகள் உண்டாயின. உலகின் பரப்பிலுள்ள இவ்வுறைவுகளை தொல்லுலக சரித்திரத்துக்கோர் நல் விளக்காய் ஒளிபெறுகின்றன.

இத்தகைய மண்ணடைப்பங்கள் (Deposits) தோற்றுவதற்கு அலகிலா நெடுங்காலம் பிடித்திருக்கவேண்டும். ஆகையாலே, ஆதியில் ஆராய்ச்சியாளர் உலகத்தின் புராதனத்தை ஆண்டுக் கணக்காலன்றி யுகக்கணக்கால் அளவிட்டனர். மண்ணூற்புலவர் பல்லோர் பாரானது தன் திராவகப் பருவத்திலிருந்து இற்றை

நிலையடைய சில நூறுகோடி ஆண்டுகளுக்குக் குறைவாக எதை யும் கருத முற்படார்.

பூமியின் புறத்தே கடல் தோன்றிய காலவரையைக் கணிக்க மற்றோர் முறையுண்டு. தடிந்தஆவி மண்டிலத்திருந்தே இழிந்தது இப்பேராழியாகலின், ஆதியில் அது தூயநீராய்த் தேங்கியிருத்தல் வேண்டும். எண்ணிலா ஆறுகளின் இடையறு வீழ்ச்சியாலே, சோடியம் என்னும் உலோகம் அத்தூய நீரோடு கலக்கப்பட்டு இன்று கடல் நீர் உப்பு நீராகிவிட்டது. டப்ளின் பல்கலைக் கழகத்து ஜாலி என்னும் பேராசிரியர் சமுத்திரத் துள் நிறைந்துள்ள சோடியத்தையும், ஓராண்டு காலவரையில் பாரெங்குமுள்ள ஆறுகள்கொண்டு சேர்க்கும் சோடியத்தையும் தொகை செய்துள்ளார். பின்னைய தொகை ஆண்டாண்டு சுமார் 16 கோடி டன் என்றும், சமுத்திரத் தெங்குமுள்ள மொத்தம் சோடியத்தினளவு இதைப் போல் இன்னும் 9 கோடி மடங் காவது பெருத்திருக்க வேண்டுமென்றும், ஆகலின் கடல் நீர் இன்றை உப்புநிலை எய்த 9 கோடி ஆண்டுகளாவது பிடித்திருக்கு மென்றும் முடிவு கட்டுகின்றார்.

எனவே, பேராசிரியர் ஜாலியின் மதிப்பு, பிரபுகெல்வினன் மதிப்பை மிஞ்சி நிற்கின்றது. ஸர் ஜார்ஜு டார்வினின் சந்திர மண்டிலத்தின் தொன்மையைக் குறித்த $5\frac{1}{2}$ கோடி வருஷகாலம் என்னும் மதிப்பு இவ்விரண்டிற்கும் இடையுள்ளது. ஆகவே பூகோளம் இந்தத் திண்ணிய நிலை எய்த பிடித்த காலவரையைக் குறித்து இற்றைய விஞ்ஞானப் புலவர்களுள்ளே ஏதுங் கருத் தொற்றுமை யில்லை. ஆயின், எல்லோரும் ஒருங்கே கோடிக் கணக்கிலேயே மதிக்கப் பெறுதல் வேண்டுமென்பது மட்டும் ஏற்றுக் கொள்கின்றனர். 5000 டிகிரி வெப்பமுள்ள ஒரு நிலையி லிருந்து இப்பொழுதைய நிலைக்கு இப்புவனம் குளிர கோடிக் கணக்கான காலம் பிடித்திருக்குமாயின், முப்பதினாயிரம் டிகிரி வெப்பமுள்ள நட்சத்திர நிலையிலிருந்து அது குளிர எத்தனை காலம் எடுத்திருக்கும்!

ஆனல் ஒன்றுமட்டும் உறுதியே; இம்மண்டிலந் தோன்றிய நாளொன்றுண்டு. அது ஒடுங்குங் காலமொன்று முண்டாம். இம்மாதிரியே மற்றைப் புவனங்களும் எழுந்த காலமொன்றுண்டு. அவை அழியுங் காலமொன்றும் பிறக்கும். என்னே! ஒவ்வொரு அணுவும் பிறந்தவொரு காலமுண்டு; அது முடியுமொரு வேளையும் வரும். அங்ஙனமாயின் இறுதியில் என்ன?

மனித மூளை—புல்லறிவு—கிறுகிறுக்கின்றது. யாரறிவார் அவன் பெருமை?

துறையூர், தஞ்சை-திருச்சி ஜில்லா

தமிழர் மகா நாட்டுத் திறப்புரை.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L., திருநெல்வேலி.

தமிழ்ப் பெருமாந்தர்களே!

தமிழ் மொழிக்குத் தற்காலத்தே தஞ்சமாயமைந்த தஞ்சைக்கும், தமிழ்த் திருவானது சிறப்புற்றிலங்குந் திருச்சிக்கும் நடுநிகர்த்ததாய் உள்ள துறையூரின்கண் "தமிழர் மகாநாடு" கூட்டப்படுவது கேட்டுக் கழிபெருமகிழ்வடைந்தேன். இத் தமிழ்ப் பேரவை துறையூரிற் கூடுவதால் தக்க துறையிலே தமிழர் முன்னேற்றம் நிகழும் என்பது திண்ணம். இதுவரை தமிழ்மொழிக் குரிய மகாநாடுகளே பல இடங்களிலுங் கூடியுள்ளன. தமிழர் மகா நாடென்பது, அரசியல் முறையிற் றவிரத் தமிழரது பொதுவான முற்போக்கின் பொருட்டுக் கூடியதாகத் தெரிந்திலம். ஆதலால், இஃதே இந்நாட்டின்கண் முதன்முதற் கூடுந் தமிழர் மகாநாடாகும். இதன் திறப்புக் காலை, சில உரைகள் பகரும் பேற்றினைப் பெரிதாகக் கருதி இத்திறப்புரை கூற இசைந்தேன்.

தமிழ் நாட்டிலே வாழ்கின்றவர்கள் யாவரும் ஒருவகையாகத் தமிழர் என்ற பெயர்க்குரியார் எனினும், தமிழகத்தைத் தாயகமாக உடையராய்ப் பண்டைத் தமிழர் உயர் நாகரிகத்தைப் பேணும் பெருமக்கள் அனைவருந் தமிழர் எனப்படுதற்குச் சிறப்புரிமை பூண்டவராவர்.

உலக வரலாற்றிலே, மிகப் பழமையான காலத்திலே, தமிழகத்தே மக்கள் முதற்கண் தோற்றமுற்று, உலகமெங்கும் பரவினரென்று அறிவியல் நூல்வல்லாருட் பெரும்பான்மையர் கருதுவதால், தமிழகமே உலகினர்க்குத் தாயகமாம் போலும்.

தமிழ் நாட்டோடு தொடர்பில்லாமல் பண்டை உயர்நாகரிகம் யாண்டும் வளர்ந்ததாகத் தெரியவில்லை. ஆதி எகிப்தியர் பாண்டிய நாடாகிய 'பண்டு' நாட்டில் நின்றே எகிப்துநாடு சென்று தமது நாகரிகத்தை வளர்த்ததாகக் கூறியுள்ளார். அவர்களுடைய ஞாயிற்றின் வழிபாடு, நந்தி வணக்கம், நாகர் தொழுகை முதலியனவும் தமிழ் நாட்டிற் நிகழ்ந்தனவே. அவர் மன்னர் பொதுப்பெயராகிய பேரோன் (=Pharoah) என்பது தமிழ்ச் சொல்லே. சுமேரியரது திங்கள் வழிபாடு தமிழ் நாட்டினதே. பாரசீகர் நெருப்பு வணக்கத்திற் சிறந்தவரெனின், பண்டைத் தமிழர் கந்தழி வணக்கமுமஃதே. கிரீக்கு நாகரிகத்திற்கு முன் மத்திய தரைக் கடலிற் நிகழ்ந்த மினோவ நாகரிகத்தினர் வழிபட்ட அம்மை வழிபாடு, நமது கொற்றவை வணக்கமும் உமை வழிபாடுமே. சீனர் பெற்றோர் வழிபாட்டிற் பேர் பெற்றவரெனில், அன்னையுமப்பனு முன்னறி தெய்வமென்பது தமிழ்த்தாயின் கருத்தன்றோ?

தமிழ் மொழியொடு தொடர்பில்லாத பண்டை மொழி யாதுளது? சீனமொழியில் ஞா(ன்) என்பதைக் கேட்டாலே, அச்சொல்லே மலையாள மென்னுமோ? சீனர் தம்மை வானவரென்றால், சேரமன்னன் தன்னை "வானவரம்பன்" என்பது யாது பற்றி? (சீனர்க்குள்ள முன் குடுமி, மலையாளர்க்கு முள்ளது தானே) சாலடியரது பெரும்பதியின் பெயராய ஊர் என்பது

இபற்றமிழ்க் கிளவியே. பாபிலோனிற்கு அருகே கிடைத்த பேஹிஸ்டேன் கற்பலகைகளின் மொழிகள், தமிழ் இலக்கணச் சார்பாயினவே. அவற்றிற் காணப்படும் கோ, நீ என்ற சொற்கள் தமிழ்ச் சொல்லல்லவோ? டாக்டர் கால்டுவேல், மங்கோலிய மொழியொடு தமிழ்மொழியுஞ் சித்திய (Scythian family) பெருங் குடும்பமெனின் வடசினரொடு தமிழரும் ஒருகாலத்தே ஒருமொழி பேசினராவரல்லரோ? ஜெர்மனிக்கு வடக்கே செல்வார், பின்னிய நாட்டிலே (Finland) 'அன்ப' என்று தாயை அழைத்தல் கேட்டு 'அன்னை' யென்ற தமிழ்மொழியை நினைந்து மகிழாரோ? தகப்பனைக் குறிக்கும் 'அப்பி' யென்ற சொல், 'அப்பா' வென்ற தமிழின் திரிபன்றோ? ஐரோப்பிய ருஷியாவில் 'வால்கா' நதிக்கரையில் வாழுமக்கள், 'ஆம், தோல், கோழி' என்ற சொற்களை வழங்குங்கால், அவர்களைத் தமிழர் என்னுமோ? ஆசிய ருஷியாவில், பனிக்கடற் கரையின்கண் வதியும் சாமோ யெட்டியா (Samo-yeddis) வழங்கும் 'அம்மா' என்ற சொல்லுந் தனித்தமிழே. நெருப்பினை அன்னார் 'தீ' என்று தானே கூறுவர். எகிப்தியர் 'ஹோரஸ' என்றால், அது தொல்காப்பியர் கூறும் 'ஓரை'யை நினைவூட்டுமன்றே. கிரீக்கர், அரிசி என்ற சொல்லையும் ஹிப்ரூ மக்கள் துகிம் (= மயிற்றோகை) என்ற சொல்லையுந் தமிழ் வணிகர்பாற் கற்றனதாமே. பெலுச்சிஸ்தானத்தில் வழங்கும் 'பிராகுயி' தமிழினமன்றோ? வட இந்தியாது உள்நாட்டு மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இலக்கண வமைப்பு ஒன்றென்ற காலஞ்சென்ற கனம் பி. டி சீனிவாச அய்யங்கார் கூற்று உண்மையாயின், அவைகளுந் தமிழினம் அல்லவோ. சில பண்டிதர்கள் ஆப்பிரிக்க மொழிகள் சிலவற்றிற்கும் தமிழுக்கும் பொருத்தங் கூறுகிறார்களே!

அமெரிக்காக் கண்டத்தின் மெக்சிகோவில் தோண்டியெடுக்கப்படுங் கற்சிற்பங்கள் தமிழர் வடிவு காட்டுகின்றனவே. ஆஸ்திரேலிய பழங்குடிகள் தமிழ் நாட்டுப் பழங்குடிகளோடு ஒத்த உடலமைப் புடையாரெனின், அவர் நம்மினத்தவரேயோ. இவற்றை யெல்லாம் எண்ணுங்காலை, "யாதும் ஊரே, யாவரும்

கேளீர் " என்ற சங்கப்புலவர் திருமொழி என்றும் நிலைத்த சரித வண்மை தெரிக்கும் பொன்மொழியாதல் காண்க.

தமிழ்மொழி, கிரீக், லத்தீன், ஆரியம், அரபிக், இங்கிலீஷ், ஜெர்மன் முதலிய எந்த மொழிக்கும் பின்னிடாத பெருமையுடைத்தாயிருத்தலோடு, பண்டும், இன்றும், என்றும் மூவாச் சாவாமொழி என்பதை இந்நாட்டிலும், மேல்நாட்டிலும், தமிழ் கற்றறிந்த பலரும் உடன்பட்ட உண்மையாகும். இதன் கல்வி, தமிழர்க்கேயன்றி வடமொழியாளர்க்கும், பிறமொழியாளர்க்கும் வேண்டுவதொன்றே. வடமேற்கு இந்தியாவில் ஆரிய மொழிகள் புகுந்தகாலை திகழ்ந்த நாட்டுமொழி, தமிழினத்தன வாதலின், திராவிடத் தொடர்புகள், வேதத்திலும், பிற்கால வடமொழி நூல்களிலும், வடநாட்டு உள்மொழிகளிலுங் காணக் கிடப்பன எனக் கேம்பிரிட்ஜில் வடமொழிப் பேராசிரியராய் விளங்கிய ஆசிரியர் ராப்ஸன் கூறியது உற்று நோக்கத்தக்கது. இப்போதுள்ள திராவிட மொழிகளிலெல்லாந் தனித்தியங்கும் பேராற்றல் வாய்ந்தது தமிழேயென டாக்டர் கால்டுவேல் கூறியதுங் காண்க.

" Dravidian languages were actualy flourishing in the western regions of Northern India at the period when the languages of the Indo-European type were introduced by the Aryan invasions from the north-west. Dravidian characteristics have been traced alike in Vedic and Classical Sanskrit; in the Prakrits or early popular dialects, and in the northern vernaculars derived from them. "—*Professor Rapson*.

" Tamil the most cultivated, *ab intra*, of all the Dravidian idioms can dispense with Sanskrit altogether if need be, and not only stand but flourish without its aid—*Dr. Caldwell*.

ஆதியிற் பனிமலை தொட்டுக் குமரிமுனைவரை இந்திய நாடெங்குந் தமிழர் பரவியிருந்தமையால், இந்திய நாகரிகம், தமிழர் நாகரிகத்தை அடிப்படையாக உடையதென்பதும், அதைத் தமிழ்மொழியானது கண்ணாடிபோற் காட்டவல்லது என்பதும் டாக்டர் கில்பர்ட் சிலேட்டர் என்பவரால் அழகுற இயம்பப்பட்ட உண்மைகளாம்.

Indian culture with its special characteristic of systematic and subtle Philosophical thought must have come from the people capable of originating and developing it. That capacity would naturally be exhibited in the Evolution of language, and (Tamil) the purest Dravidian language exhibits it in the highest degree, *i. e.* in a higer degree than any other Indian language

—*Dr. Gilbert Slater.*

இதனால், இந்திய நாகரிக சரிதத்தை நன்கறிய விரும்பும் எவரும், பழந்தமிழிலக்கியங்களை ஆய்தல் வேண்டுமென்பது புலனாகும். தமிழ் மொழியின் நாகரிக வளர்ச்சியை ஈண்டு ஒரு சிறிது காட்டுதும்.

தமிழ்மொழியானது செவ்விதின் அமைந்த நெடுங்கணக்குடையது. அதன் எழுத்துக்களைக்கொண்டு எல்லா மொழிகளையும் எழுதிக்கொள்ளுதல் கூடுமென்று காட்டிய பேருதவியாளராகிய, தமிழ் வானத்திற் சற்று நேரத்திற்கு முன் இலங்கி மறைந்த அறிவுக் கதிரவனாகிய திரு. பா. வே. மாணிக்க நாயக்கரவர்கட்கு இவ்வுலகம் என்றுங் கடப்பாடுடையதே. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னே தமிழ் மொழிக்கு எழுத்து அமைந்து விட்டது. தமிழ்ச் சொற்களோ, ஒலிச் செட்டில் (Economy of Sound) தலை சிறந்தன. தமிழ்ச் சொற்றொடர்களோ, இயற்கை நயமுற அமைந்தன. தமிழ் நூற்கருத்துக்கள் எந்நாற் கருத்திற்கும் பின்னிடாத குறிக்கோளை (Ideals) வற்புறுத்துவன. கிறித்துவுக்கு முன்னேயே, அல்லது அவரினுஞ்

சிறப்பாக, அன்பினியல்பை யெடுத்தோதிக் கேடிழைத்தார்க்கும் நன்மையே செய்க என அறிவுறித்தியவர் திருவள்ளுவரன்றே. 'ஒன்றாக நல்லது கொல்லாமை' 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்' 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' 'இறப்ப வரினும் இளிவந்த செய்யார்' என்ற கருத்துக்கள் தமிழர் உயரிய கொள்கைகளாமே. 'சிறை காக்குங் காப்பெவன் செய்யும்' என்றமை மாதர் சுயாதீனத்திற்கு அடிப்படை யன்றே! 'கற்புடைப்பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்' என்ற நுட்பந்தான் தமிழிலன்றி வேறு யாண்டுளது? 'பயன் கருதாது அறமியற்றுக' வென்னப் பகவற் கீதை கூறுமெனின் 'அறவிலை வணிகன் ஆய் அல்லன்' என்ற சங்கப் புலவரினும் அதனைத் தெற்றெனத் தெரிக்க வல்லவர் யார்? இரத்தல் இழிவெனின், 'நல்லாறெனினுங் கொளல் தீது' இரந்து முயிர் வாழ வேண்டின்-பரந்து கெடுக உலகியற்றியான், என்பன மக்கள் சுயமரியாதைக்கு அடிப்படையல்லவா?

மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' 'உழுதநோன்பகடு அழிதின்றாங்கு' 'இடிப்பாரையில்லா ஏமரா-மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்' 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் வேந்தன்' 'கடிதோச்சிமெல்ல எறிக.' என்ற இக்கருத்துக்கள் தாமே இக்கால அரசியற் கொள்கைகளின் அடிப்படையாவன.

உலகினர்க்கு இன்ப வாழ்க்கைக்கு இலக்கணம் தொல்காப்பியத்திலன்றே உளது. காதல் மணம், கலப்பு மணம், என்னுமிக் கருத்துக்கள் ஆதித் தமிழர் உலகிற்களித்த பயன்களல்லவோ? இவை சிற்றின்பப் பகுதியவெனின், பேரின்பப் பாடல்கள் தமிழிலுள்ள அளவு எம்மொழியிலுள்ளன? நாயன்மார்களும் ஆழ்வார்களும் அமைத்த அருளாரமுதப் பெருங்கடல்கள் தமிழ் நிலத்தின் கண்ணேதாம் உள்ளனவாமே.

உடற்காப்புக்குத் தமிழ் மருத்துவ நூலினுஞ் சிறந்தது யாண்டுளது? தமிழர்களது மந்திரம், மருந்து, மணி, யோகம், வாதம், எல்லாம் சித்த மருத்துவ மலையிலன்றோ திகழ்வன. அதனைப் பாதுகாவாமையால் வந்த இழுக்கிற்கு யாவர்காரணர்?

தமிழரது கவின்கலைகள் அவர்களது அழியாத திருக்கோயில்களில் இன்றுந் திகழ்வனவாமே. கட்டிடம், ஓவியம் கற்பணி, இசை, கூத்து. என்பனவற்றின் தமிழரை விஞ்சிய பண்டையர் யாவர். தமிழர் திருக்கோவில் விழாக்களெல்லாம் தமிழர் சோதிடக் கணக்கின்படி நிகழ்வனவே. அது கதிரவன் செலவை வைத்தமைத்த நன்முறையன்றோ?

எக்கலையும் வளர்தற்கு இடங்கொடுத்திலங்குந் தமிழினைத் தமிழர் பாதுகாத்து உலகிற்கு உதவுதல் மெய்த்தமிழர் முதற் கடனாகும்.

உண்மைப் பற்றுடைய தமிழ்க் கல்விமான்களும் செல்வவான்களும் ஒருங்கு கூடித் தக்க முறையில் முயன்றாலன்றித் தமிழ் வளர்ச்சியாவது தமிழர் முன்னேற்றமாவது நிகழ்தல் அரிதாகும். இக்காலத்துத் தமிழர் நிலைமையை நினைக்குங்கால் பலவாண்டுகட்கு முன் டாக்டர், ஜி. யூ. போப் கூறிய இரக்க உரைகள் மனக் கண்ணிற்குப் புலனாகின்றன.

" Although the very ancient, copious and refined Tamil language is inferior to none, it is regarded by most people as the (probably barbarous) Vernacular of a people living somewhere in a remote district of Great Britain's Imperial possessions. Neither does the Indian Government nor do our Universities fully recognise the value of Tamil Literature and so, those who spend their lives in the study of South Indian classics must resemble men seeking for pearls under water," "Classical Tamil is very little studied, yet this key alone can unlock the hearts of millions of the most intelligent and progressive of the Hindu races."

உலகத்திலேயே முதன் முதல் நாகரீகம் படைத்த இத் தமிழ் நாடானது ஒற்றுமையிலுங் கல்வியிலுங் குறைவுபட்டுத் தாய்மொழிப் பற்றின்றித் தளர்வடைந்து சோர்தல் மிகவும் இரங்கத்தக்கது. சிறுபான்மையர், உண்மைத் தமிழ்ப்பற்றுடையாரெனின், செல்வம், அதிகாரம் முதலியவற்றின் துணைவலியின்மையால் அவர்கள் தமது நற்கருத்து நிறைவேறப்பெறாது வருந்துகின்றார்கள். ஒரு சிலர், தமிழ்ப் பொது நூல்களிலே புலமை வாய்க்கப் பெற்றும், பண்டைத் தமிழரது விரிந்த சமயக் கொள்கைகளையும், விழுமிய ஒழுக்கக் கொள்கைகளையும் ஆய்ந்தறிந்து தமிழ்மொழியின் தனிப்பெருமாண்பினை யுணராது, தமிழைப் பிறமொழிகளோடு ஒப்பக் கருதும் மனப்பான்மை யுடையராய்த் தமிழ்ச் சிறப்புப் பேசுவாரை இகழ்தலை மேற்கொண்டுள்ளார்கள். இது மிக்க பரிதாபம் விளைக்கின்றது. மேல்நாட்டு மெய்ப் புலவர்கள் தமிழை உண்மையாகப் புகழ்ந்துரைப்பதைக் கேட்டு, அவர்களை அறிவு குறைந்தவரென்று இகழுந் தமிழருமுளர்! தமிழ்ச் செல்வருட் பெரும்பான்மையர் ஐம்புல இன்பங்களையும் வெற்றதிகாரங்களையும் நாடி அடைவதிலேயே தமது கருத்தையும் பணத்தையும் நேரத்தையும் செலவிடுகின்றார்கள். அவர்களுள் ஒரு சாரார் தமிழ்ச்சிறப்பினைப் பேசினால், பலர் தம்மைப் போற்றுவரென்றெண்ணிப் புறத்தே தமிழையுந் தமிழ் மக்களையும் சிறப்பாகப்பேசி அகத்தே ஒரு சிறிதுந் தமிழ்வளர்ச்சிக்காவது தமிழர்முன்னேற்றத்திற்காவது உண்மையாக உழைத்தலின்றி வறிதே காலங்கழிக்கின்றார்கள்.

தமிழர்கள் நிலைவரமான முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஆழ்ந்த தமிழ் நூற்கல்வியும் அதற்குத் துணையாகப் பயிலுதற்குரிய அறிவியற்கலை, சரித்திரக்கலை முதலியனவும் தமிழ் நாடெங்கும் பரவுதல்வேண்டும். தமிழை வளர்க்கக் கருதுபவர்கள் தமிழ் நூல்களை யாவருங் கற்கும்படி செய்தல் வேண்டும். இக்காலத்திலே தமிழை வளர்க்கும் அறிவாற்றலுடையார் பலர் இருந்தும் தமிழ் வளர்ச்சி செவ்விதின் நிகழாமைக்கு ஒரு காரணம், பொழுது போக்காக வாதல், அறிவின் பொருட்டாதல் தமிழ் உரை நடை நூல்களையாதல் கற்பாரின்

தொகை குறைவா யிருக்கவில்லை. தக்க தமிழ்நூற் பிரதிகளைச் சகாய விலை கொடுத்தாயினும் வாங்குவார் மிகக்குறையாகவே உள்ளார். அணியினும் துணியினும் ஆயிரமாயிரமாகச் செல வழிப்பவர்கள் தமிழ்ப் புலவர்கள் உழைத்தெழுதிய தமிழ்நூற் பிரதிகளுக்கு அரைரூபாய்கொடுக்கவும் பின்வாங்குகின்றார்களே.

தமிழிலே பொது மக்களுக்குப் பயன்படக் கூடிய உரை நடை நூல்கள் எத்துணையோ எழுதப்படவேண்டும். சிறந்த அகராதிகள் இயற்றப்படவேண்டும். ஆராய்ச்சிநூல்களும்மொழி பெயர்ப்பு நூல்களும் பல வெளியாதல் வேண்டும். இவற்றிற் கெல்லாம் கோயில்கள், ஆதீனங்கள், முதலிய பொது நிலயங்களி லுள்ள தருமச் சொத்துக்களின் வரும்படிகளைப் பயன்படுத்த வேண்டிய முயற்சிகள் இதுபோன்ற சங்கங்களால் மேற் கொள்ளப்படவேண்டும். கிறித்தவர்கள் தமது கோயில்களிலே அறிவைச் செவ்வையாக வளர்ப்பது கண்டும், சிவாகமங்க ளெல்லாம் சமய நூல்களையும், பிறநூல்களையும் கோயில்களிற் பேணிப் பயன்படுத்துவதை வற்புறுத்தவும் நமது மடங்களும் கோயில்களும் மூடபக்தி நிலயங்களாய் மூண்டொளிர் கின்றனவே. இது என்ன பரிதாபம்!

தமிழர் முன்னேற்றத்திற் கேற்ற முறையாகத் தொடக் கக்கல்வி நமது சிறுவர் சிறுமியர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். நினைவுக்கு மிகுந்த சுமை ஏற்படுத்தாமல் நமது பண்டைக் கணித வகைகளும் சிறு நீதி நூல்களும் சமய உரை நடைநூல்களும் பலவகை இன்னிசைப் பாடல்களும் எளிதாய்க் கற்றற்குரிய இடமாய்த் தமிழர் மாண்பு விளக்கும் பண்டை வரலாறுகளும் நமது நாட்டுப் பிராணிகளையும் செடி கொடி களையும் பற்றிய விவரங்களும் செந்தமிழிலே போதிக்கப்படும் இலவசக் கல்லூரிகள் ஒவ்வொரு சிற்றூரிலும் நிறுவப்படல் வேண்டும். அவைகளிலே போதகாசிரியர்கள் நல்லொழுக்க மும் ஆற்றலும் இரக்கமும் உண்மைத் தமிழ்ப்பற்றும் உடை யவர்களா யிருத்தல்வேண்டும்.

இக்கல்லூரிகளிலே ஐந்தாண்டு கல்வி கற்றபின் ஆங்கிலக் கலாசாலைகட்குச் செல்ல இயலாதார் உயர்தரத் தமிழ்க்கல்வியும் ஆங்கிலக் கல்வியும் பெறுதற்குரிய கலாசாலைகள் தாலுக்காக்களிலே மாணவர் விடுதிகளோடு நிறுவப்படுதல் வேண்டும். உடற் பயிற்சியும் கைத்தொழிலும் அவற்றிற் கற்பிக்கப்படுதல் வேண்டும்.

பதினாறாண்டளவிலே, மாணவர்களுடைய மனப்பாங்கையும் ஆற்றலையுந் தெரிந்து அவரவர்க்கேற்ற கலையிலாதல் தொழிலிலாதல் அவர்களைப் பயிற்றுதல் வேண்டும்.

அயல்நாடு சென்று கைத்தொழிற் கல்விகற்பதற்கு அறிவு சிறந்த மாணவர்களை அனுப்ப ஒரு நிதி சேர்த்தல் வேண்டும். அங்ஙனம் அயல் நாட்டு முறைகள் கற்றுவந்தவர்கட்கு நம்மவர்கள் ஆதரவளிக்கவேண்டும். அவர்கள் வாயிலாகக்கைத்தொழில் பலவற்றையும் போதிக்கும் நூல்கள் வெளியிடப்படுதல் வேண்டும். கைத்தொழிற் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

தமிழருள் ஏழைகளுக்குக் கல்வியும் வேலையுங்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும். சமயச் சடங்குகளிலும் உலகியற் சடங்குகளிலும் அநாவசியமான ஆரவாரச்செலவுகளையொழித்து எளிமையைத் தொலைக்கவும் கல்வியை வளர்க்கவும் பொருளை வழங்குதல் வேண்டும்.

ஈண்டுக் கூறிய சிலவற்றைத் தொடக்கமாகக் கொண்டு தமிழ்க்கல்வியை வளர்த்தற்குத் துணைபுரியும் எல்லாவற்றையும் நாடிமேற்கொள்ளவும் தமிழர் முன்னேற்றத்திற் குரியவற்றைக் கடைப்பிடித்தற்கும் ஊக்கமும் உழைப்புமுடைய நற்றமிழ் வாணர் கூட்டிய இம்மகாநாடானது நீடுழிகாலஞ் சிறப்புற்றோங்கி எண்ணிய எண்ணியாங்கு பயத்தற்பொருட்டு இறைவன் திருவருள் விலாசத்திலே இப்பேரவை திறப்புற்றுத் திகழ்வதாக.

திருக்குறளும் கம்பரும்

பண்டிதர், திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், நன்னிலம்.

முன்தொடர்ச்சி துணர் எ மலர் ௰௧ பக்கம் 493

35 இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்

(இ-ள்) கழறுதற் குரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன், பகையாய்க் கெடுப்பா ரில்லையாயினும் தானே கெடும். (எ-று)

இத்திருக்குறளை,

கடிக்கும் வல்லரவும் கேட்கு மந்திரம் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றன்ற வேத வோடறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணிய வெண்ணி யாங்கே
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ

என்ற செய்யுளில் அழகுபெற எடுத்தாண்டிருத்தல் காண்க.

36 முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினும்
காயினும் தான்முந் துறும்

(இ-ள்) உயிர் ஒருவனை உவத்தலானும், காய்தலானு முறின், தானறிந்து அவற்றின்கண் அதனின் முற்பட்டு நிற்கு மாகலான், முகம்போல அறிவுமிக்கது பிறிதுண்டோ, இல்லை.

இத்திருக்குறட் கருத்தை,

வண்டுளா ரலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டபோர் பொழுதினிற் றெரியுங் கைதவம்
உண்டெனி னஃதவர்க் கொளிக்க வொண்ணுமோ
விண்டவர் பலபகல் மருவி வீழ்வரோ

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

37 அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

(இ-ள்) தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும். (எ-று).

இத்திருக்குறட் பொருளை,

உள்ளத்தி னுள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாதலால்
கள்ளத்தின் விளைவெலாம் கருத்தி லாவிருள்
பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமோ.

அழிந்தது பிறவி யென்னு மகத்தியல் முகத்திற் காட்ட
வழிந்த கண்ணீரின் மண்ணின் மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னாற் புல்லின னென்று நோன்ற
லெழுந்தினி திருத்தி யென்னு மலர்க்கை யானிருக்கை யீந்தான்

என்ற செய்யுட்களிலும், உவமையை,

மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்குலார் தம் முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணேக்கம் படுதலுங் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்

என்ற செய்யுளிலும் எடுத்தாண்டிருத்தல் காண்க.

38 வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்

(இ-ள்) செய்யத் தொடங்கிய வினையும், களையத்தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட, இரண்டனதொழிபும் ஆராயுங்கால், தீயின தொழிவு போலப் பின் வளர்ந்து கெடுக்கும். (எ-று).

இத்திருக்குறளை,

கருப்பைப் போற்குரங் கெற்றக் கதிர்ச்சுழல்
பொருப்பை யொப்பவர் தாமின்று போன்றினர்

அற்ப மென்று பகையையு மாரழல்
நெருப்பை யும்மிகழ்ந் தாலது நீதியோ

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

39 நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

(இ-ள்) தான் சேர்ந்த நிலத் தினதியல்பானே, நீர் தன் றன்மை திரிந்து, அந்நிலத்தின் தன்மைத்தாம்; அதுபோல மாந்தர்க்குத் தான் சேர்ந்த இனத் தினதியல்பானே, அறிவுந் தன்றன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத் தாம். (எ-று)

இத்திருக்குறளின் கண்ணுள்ள உவமையை,

புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு
குலத்தியல் பழிந்தது கொற்ற முற்றுமோ
வலத்திய லழிவதற் கேது மையறு
நிலத்தியல் நீரிய லென்னு நீரதால்

என்ற செய்யுளிலும், பொருளை

மொய்கொள் சிறடியைச் சேர்ந்த முளரிக்கும் செம்மை யீந்த
தையலா ளமிழ்த மேனி தயங்கொளி தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற் சேர்ந்த வெண்முத்தம் சிவந்த வென்றால்
செய்யரைச் சேர்ந் துளாரும் செய்யராய்த் திகழ்வ ரன்றே

என்ற செய்யுளிலும் எடுத்தாண்டிருத்தல் காண்க.

40 நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டால்
நாண் துறவார் நாணாள் பவர்

(இ-ள்) நாணினது சிறப்பறிந்து அதனை விடாது ஒழுகுவார் அந்நாணும் உயிரும் தம்முண் மாறுயவழி நாண்சிதையாமற் பொருட்டு உயிரை நீப்பர்; உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார். (எ-று)

இத்திருக்குறளை,

நீயுநின் கிளையு மற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினு முறைமை குன்ற வாழ்வனோ வயிரத் திண்டோள்

ஆயிர நாமத் தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண்டுறந் தாவி நச்சி

என்ற செய்யுளில் அழகுபெற அமைத்திருத்தல் காண்க.

41 கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு

(இ-ள்) தமக்குநீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யா நின்றன. ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவன வல்ல. (எ-று).

இத்திருக்குறளை,

ஆரிய னவனை நோக்கி யாருயி ருதவி யாதும்
காரிய மில்லான் போனான் கருணையோர் கடன்மை யீதால்
பேரிய லாளர் செய்கை யூதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மாறி யற்றுமோ வைய மென்றான்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

42 ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்ப தொன்றில்

(இ-ள்) தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழல்லது உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்றில்லை. (எ-று).

இத்திருக்குறட் கருத்தை,

ஆண்டவ னீதுரை செய்ய அஞ்சலித்த மலர்க்கையா ரன்பினோடு
மூண்டபெருந் துன்பத்தான் முறைமுறையின் நிறைமலர்க்கண் [மொய்த்த நீரார்
பூண்டபெரும் புகழ்நிறுவித் தம்பொருட்டால் மேலுலகம் புக்க [தாதை
மீண்டனன்வந் தானவனைக் கண்டனரே யொத்தனரவ் விலங்கற் [றோளார்
பேதைமை யுரைத்தாய் மைந்த உலகெலாம் பெயரப் பேராக்
காதையென் புகழினோடு நிலைபெற அமரர் காண

மீதெழு மொக்குளன்ன யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ இருபது திண்டோ ளுண்டாய்

வென்றிலே னென்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றுளெ னன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்கு மாகில்
பொன்றுத லொருகாலத்தும் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளைமாள்வார் புகழுக்கு மிறுதியுண்டோ

வரமிரண்டளித் தழகனை யிளவலை மலர்மேல்
விரவுபொன்னினை மன்னிடை நிறுத்திவின் னிடையே
உரவு மானமீ தேகினனும்பரு முலகும்
பரவு மெய்யினுக் குயிரளித் தறுபுகழ் படைத்தோன்

என்ற செய்யுட்களில் அமைத்திருத்தல் காண்க.

43 நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

(இ-ள்) ஒருவன் நெருநல் (நேற்று) உளனாயினான் அவனே இன்று இல்லையாயினான் என்று சொல்லும் நிலையாமை மிகுதி யுடைத்து இவ்வுலகம். (எ-று)

இத்திருக்குறளை மேற்காட்டிய செய்யுட்களில் வென்றிலே னென்ற போதும் எனத் தொடங்கும் செய்யுளினிறுதியடியில் 'இன்றுளார் நாளை மாள்வார்' எனக்கூறியிருத்தல் காண்க.

44 ஈட்ட மிவறியிசை வேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை

(இ-ள்) யாம் பிறரின் மிக ஈட்டுதுமென்று பொருளினை ஈட்டன் மாத்திரத்தையே விரும்பி, அதன் பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு, நிலத்திற்குப் பாரமாமத்துணையே (எ-று)

இத்திருக்குறட் கருத்தை,

நீத்தமும் பரவையும் குறுக நெஞ்சிடை
கோத்தவன் புணர்விடைக் குளிப்ப மீக்கொள

> ஏத்தவம் புரியவொன் றீகலான் பொருள்
> காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினான்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

45 நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை

(இ-ள்) அவரவர் குணங்களை ஆராய்ந்தறிந்து அவற்றிற்கியையச் செய்யாவிடின், நன்றான வுபாயஞ் செய்தற் கண்ணும் குற்றமுண்டாம். (எ-று)

நன்றான வுபாயமாவது கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம்.

46 பொது நோக்கான் வேந்த வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர்

எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தம் தகுதிக் கேற்ப நோக்குமாயின் அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழ்பவர் பலர். (எ-று)

இவ்விரு திருக்குறட் பாக்களின் கருத்தையும்,

> என்றலும் வணங்கி நாணி வாய்புதைத் திலங்கு தாளை
> முன்றலை யொடுக்கி நின்ற மொய்ம்பனை யினிது நோக்கி
> பொன்றிணி வயிரப் பைம்பூ ணாரமும் புனைமென் றூசும்
> வன்றிறற் கயமு மாவும் வழங்கி னன்வழங்கு சீரான்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க. இச்செய்யுளில் அழகுபெறத் தீட்டியுள்ள சித்திரமும் நோக்கத் தக்கது.

47 உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்

(இ-ள்) உலகத்தோர் பலரும் உண்டென்பதோர்பொருளை இல்லையென்று சொல்லுவான், மகனென்று கருதப்படான், வையத்துக்காணப்படுவதோர் பேயென்று காணப்படும் (எ-று)

இத்திருக்குறளை,

உலகத்தா ருள்ள தென்ற துள்ளதா மொவிநீர் வேலே
உலகத்தா ரில்லை யென்ற தில்லையா முணருங் காலே
உலகத்தா ருள்ள தென்ற தில்லையென் றுரைக்கு மாயின்
உலகத்துக் கவன்பே யாகும் உண்மையாற் பயனொன் றில்லை

என்ற செய்யுளிற் காண்க.

48 நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

(இ-ள்) ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும். (எ-று)

இத்திருக்குறளிலுள்ள, 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்ற சொற்றொடரை,

நன்றிவித் தாகுநல்லொழுக் குடைய நற்றவ முனிவரை யெல்லாம்
சென்றடி பணிந்து தீவினையறுத்துத் திகழொளி யாடையாபரணம்
என்றுணைத்தோழி மார்கட்கு மவரை யீன்றெடுத் தோர்கட்குமுதவ
இன்றொருநாளு மிருந்துநா மிகு மிலக்குவ விடருற லென்றாள்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

49 இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

(இ-ள்) வினையாற்றனக்கின்பம் வந்துழி அதனை அநுபவியா நின்றே மனத்தான் விரும்பாதான், துன்பம் வந்துழியும் அதனை அநுபவியா நின்றே மனத்தால் வருந்தான். (எ-று)

இத்திருக்குறளை,

இன்பத்துள் இறுமாந்து தோள்நோக்கி ஈன்றமத
துன்பத்துள் அழுந்துவார் தொல்லுலகில் அறியாதோர்

இன்பத்துன் பங்கள் எய்தியபோ தவையெல்லாம்
முன்பற்று விடாதவினைப் பயனென்பார்முழுதுணர்ந்தோர்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

50 பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்று தவர்

(இ-ள்) குற்றமற்றனவாய்ச் சிலவாயவார்த்தைகளை நிரல் படக்கோத்து இனிதாகச் சொல்லுதலை யறியாதார், பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர். (எ-று)

51 சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

யாம் இவ்வினையை இவ்வாற்றாற் செய்துமென நிரல் படச் சொல்லுதல் யாவர்க்குமெளிய, அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கும் அரியவாம். (எ-று)

இவ்விரு திருக்குறட்பாக்களையும்,

சொல்லும் போதற விளிவன சூழ்வு மிருந்து
சொல்லு வார்பெரி தாகவச் சொற்பய னிலாத
சொல்லும் போதறங் கடுகுமாய்ச் சொற்பய னினிய
சொல்லு வாரிலைச் சொன்ன செய்வார்களு மில்லை

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

திருக்குறளை நன்குணர்ந்து இராமாயணத்தை உற்று நோக்குவார்க்கு, திருக்குறள் எடுத்தாளப்பெற்றுள்ள செய்யுட்கள் மிகப்பலவாதல் நன்குவிளங்கும்; அவற்றையெல்லாம் ஈண்டு எடுத்துரைக்கப் புகின் மிக விரியுமாகலின் இக்கட்டுரையை இத்தோடு முடித்துக் கொள்ளுகின்றேன்.

சுப்பிரமணிய சாத்திரியார்
தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்
குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், மன்னார்குடி.

மறுப்பு 36 தொடர்ச்சி பக்கம் 524

இனி, திசைச்சொல் என்பதன் இலக்கணம்.

இவ்விலக்கணத்தைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார்,

'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி.'

என்னும் சூத்திரத்தால் ஓதினார். இச்சூத்திரத்தின் பொருள் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு நிலத்தினும் தாம் குறித்த பொருளை விளக்கும் திசைச்சொல் எ-று. எனவே அவ்வந்நாட்டுத் திசைச்சொல் அவ்வந்நாட்டில் பொருள் விளங்குதல்போல ஏனை நாடுகளில் பொருள் விளங்கா என்பது பெறப்பட்டது. இச்சூத்திரத்தால் செந்தமிழ் நாடு எனச்சிறப்பித்துச் சொல்லப் படுவதொரு நாடு உண்டென்பதும் அதனை அடுத்து கொடுந் தமிழ்நாடு எனப்படுவன பன்னிரண்டு நாடுகள் உளவென்பதும், அக்கொடுந் தமிழ் நாட்டுச் சொற்களுள் ஒரு சில வடசொற்போலத் தமிழ் நூல்களில் வழங்குதற்குரியவென்பதும் பெற்றாம். இச்சூத்திரத்தில் ஆசிரியர் செந்தமிழ் நிலம் என்று குறித்தது இன்னது, கொடுந்தமிழ் நாடு என்பன இவை என்பதுபற்றித் தொல்காப்பிய வுரையாசிரியர் பலரும் பலவாறாகக் கூறினர்.

செந்தமிழ் நாட்டின் எல்லை—வையை யாற்றிற்கு வடக்கு, மருத யாற்றிற்குத் தெற்கு, கருவூர்க்குக் கிழக்கு, மருவூர்க்கு மேற்கு என்பது இளம்பூரணர் உரை. சேனவரையர் உரையும் நச்சினார்க்கினியர் உரையும் அதுவே. தெய்வச்சிலையார் உரையோ

வேறு. அவர் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று சிறப்புப்பாயிரத்தில் குறிக்கப்பட்ட நிலம் முழுவதும் செந்தமிழ் நாடு என்றார்.

கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டாவன :— பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை என்றார் இளம்பூரணர். அவ்வாறே சேனாவரையரும் கூறினார்.

இவ்வுரையாசிரியர் கூற்றினாலே, வையை ஆற்றிற்குத் தென்பால் உள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாடு, செந்தமிழ் நாடு அன்றெனவும், கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்றெனவும் குறிக்கப்பட்டது. வையை ஆற்றிற்கும் மருத யாற்றிற்கும் இடையில் உள்ளதாகிய சோணாடே செந்தமிழ் நாடெனக் கொள்ளக் கிடந்தது.

இனி, தெய்வச்சிலையார் என்பார் கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டும் முற்கூறியவற்றின் வேறாகக் குறித்தார். அவை, குமரியாறு கடல்கோட் படுவதன்முன் அதற்குத் தென்பால் உள்ளதாகியபழந்தீபமும், கொல்லமும், கூபகமும், சிங்களமும்,சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமும், துளுவமும், குடகமும், குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமும் ஆகும்.

இனி, நச்சினார்க்கினியாரோ, இருதலை நாகம்போல, இளம்பூரணர் கொள்கையையும் தெய்வச்சிலையார் கொள்கையையும் கவ்விக்கொண்டு, திசைச்சொற் சூத்திரத்து வந்த 'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்' என்னும் பகுதிக்கு நலிந்து பொருள்கொண்டு, இளம்பூரணர் குறித்த பன்னிருநாடுகளுடன் தெய்வச்சிலையார் குறித்த பன்னிரு நாடுகளையும் கூட்டி, அவ்விருபத்து நான்கு நாடுகளும் கொடுந்தமிழ் நாடெனக் குறித்தார். ஆயினும், செந்தமிழ் நாட்டின் எல்லையை இளம்பூரணர் கூறியவாறே கூறினார்.

இனிப், பிற்காலத்தார்க்கு இலக்கணமாக நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவர் திசைச்சொல் இலக்கணம்பற்றிக் கூறிய சூத்திரம்,

'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.' என்பது

அந்நூற்குப் பின்பு இயற்றப்பட்ட இலக்கண விளக்கச் சூத்திரம் அதன்படியே. இச்சூத்திரத்தில் குறிக்கப்பட்ட பன்னிரு நிலங்களின் பெயர்

'தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்.' என்பதனால் அறிக.

அச்சூத்திரத்தில் குறிக்கப்பட்ட பதினேழு நிலங்கள் இன்னவென்பதை,

'சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக் குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம்
கங்கம் மகதம் கவுடம் கடாரம் கடுங்குசலம் [வங்கம்
தங்கும்புகழ்த் தமிழ்சூழ் பதினேழ்புவி தாம்இவையே.'

என்பதனால் அறிக. ஆகவே இந்நூலார் மேற்குறித்த பன்னிரண்டும் பதினேழும் கூடிய இருபத்தொன்பது நாடுகளும் கொடுந்தமிழ் நாடெனவும் அந்நாட்டுச் சொற்கள் தமிழில் திசைச் சொல்லாக வழங்குதற்குரியன எனவும் கூறினர்.

இவ்விரு பிற்காலத்து நூலாருள்ளும் இலக்கண விளக்க நூலார், செந்தமிழ் நிலத்தின் எல்லையை இளம்பூரணர் கூறிய வாறே கூறினர்.

நன்னூலார் செந்தமிழ் நிலத்தின் எல்லைபற்றி வேறொன்றும் வெளிப்படக் கூறாமையால் அவர்க்கும் அக்கருத்தின் வேறு இல்லைபோலும்.

ஆயினும், நன்னூல் உரையாசிரியருள் சிறந்தவராகிய சங்கர நமச்சிவாயப்புலவர் பாண்டி நாடே செந்தமிழ் நாடு என்றும், புனனாடு என்னும் சோணாடு கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்றென்றும் நாட்டினார். அதற்கு அவரால் காட்டப்பட்ட மேற்கோள்,

'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டியன் எனும் தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத் தினிதிருந்த
மங்கலப் பாண்டி வளநாடென்ப.' என்பது.

இலக்கண விளக்க நூலார், முன்னரே செந்தமிழ் நாடென்பது புனனாடு என உய்த்துணரவைத்துப், பின்னர் அப்புனனாட்டை கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்றாக வைத்து எண்ணியது மேற்கோள் மலைவாதல் அறிக.

இத்துணையும் கூறியவாற்றால் செந்தமிழ்நிலம் என்பதுபற்றி உரையாசிரியர் கொள்கை மூன்று வகையாதல் புலப்படும்.

முதலாவது—இளம்பூரணர் முதலியோர், அது வையை ஆற்றிற்கும் மருதயாற்றிற்கும் இடைப்பட்ட நாடு என்பது.

இரண்டாவது—தெய்வச்சிலையார், அது வடவேங்கடம் தென்குமரி யிடைப்பட்ட நாடு முழுவதும் என்றது.

மூன்றாவது—சங்கர நமச்சிவாயர், அது பாண்டி நாடே என்றது.

இம்மூவர்மாறுகோள் ஒருதலைதுணிபு. தொல்காப்பியனாரோடு ஒருசாலை மாணாக்கர் ஆகிய பனம்பாரனார் கூறிய சிறப்புப் பாயிரத்துள்ளே, முன்னர் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்று கூறிப் பின்னர், 'அந்நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி' என்று கூறாது, 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணி' என்று கூறினமையாலும்,

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைச் செந்தமிழ் கூறும் நல்லுலகத்து' என்று விதந்து கூறுமையாலும், 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்றது பொதுவாகத் தமிழ்மொழி வழக்குள்ள நிலத்தின் எல்லை குறித்ததென்றும், செந்தமிழ் நிலம் என்றது அவ்வெல்லைக்குட்பட்ட ஏகதேசமான நிலம் ஒன்றைப் பிரித்துக் கூறியவாறென்றும் தெரிந்துகொள்ளலாம். ஆகவே தெய்வச்சிலையார் கூற்றுப் பொருந்தாமை உணர்க.

இனி வையை ஆற்றிற்கும் மருதயாற்றிற்கும் இடைப்பட்ட நிலத்தில் பெரும் பகுதியைக்கொண்ட சோணுடே செந்தமிழ் நாடெனக் கொள்ளலாகாதோ எனின், அவ்வாறு ஓர் ஆசிரியரும் கூறினரல்லர். சோணுடு 'சாலி நெல்லின் சிறைகொள் வேலி' ஆயிரம் விளையுட்டாகக் காவிரி புரக்கும் நாடு' என்று சிறப்பித்து ஓதப்பட்டதே. சோழ மன்னருள் பலர் சைவவைணவ சமயங்களைப் பரவச்செய்து கோயில்கள் கட்டிப் புகழ்பெற்றதுண்டு. சோணுட்டின் தலைநகரங்களாகிய உறையூர் காவிரிப்பூம்பட்டினம் முதலியவற்றிலே சங்கப் புலவருள் பலர் தோன்றிச் சிறந்த தமிழ்ப்பாடல் பாடியதுண்டு. தோல்காப்பியனுர் தமிழை மூவேந்தர்க்கும் உரியதாகவே கூறினர். 'மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர், முரசு முழங்குதானை மூவருள்ளும்.' என்பது புறம் 35. ஆயினும், சோழனையேனும், சோணுட்டையேனும், அதன் தலை நகரங்களைப் பேணும் தமிழ் என்னும் அடைமொழி கூட்டி உரைத்ததனைக் காணேம். ஆசிரியர் நல்லூர் நத்தத்தனுர், சிறுபாணுற்றுப்படையுள்ளே, 'எழுவுறழ் திணிதோள் இயறேர்க்குட்டுவன் வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே' என்றும், 'நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன், ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே.' என்றும், கூறிவிட்டு 'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே', என்று கூறினர். இதனல் அவர் பாண்டியனே மூவருள்ளும் தமிழ்ச் சிறப்புரிமை உள்ளவனென்று குறித்தார். 'தமிழ் கெழுகூடல் தண்கோல் வேந்தே' என்று பாண்டியனையே குறித்தது. (புறம் 58). 'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்

உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் டீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்பது திருக்கோவையார்.

சோணாட்டின் கீட்டிசையில் தோன்றி, மேனாடெல்லாம் ஒளிபரப்பிய ஒருகவி ஆழிவேந்தாகிய கம்பரும் பாண்டி நாட்டினையே தமிழ் நாடென்று புகழ்ந்து கூறினர். அதனை அடியில் காணும் பாட்டுக்களால் அறிக.

'துறக்க முற்றார் மனமென்னத் துறைகெழுநீர்
சோணாடு கடந்தால் தொல்லை,
மறக்க முற்றார் அதனயலே மறைந்துறைவர்
அவ்வழிநீர் வல்லைஏகி,
உறக்க முற்றார் கனவுற்றார் எனும் உணர்வினொடும்
ஒதுங்கி மணியால் ஓங்கல்,
பிறக்கமுற்ற மலைநாடோடி அகன் தமிழ்நாட்டில்
பெயர்திர் மாதோ'.—(நாடவிட்ட படலம்)

'அனைய பொன்னி அகன் புனல்நாடொரீஇ,
மனையின் மாட்சி குலாம் மலைமண்டலம்,
வினையினீங்கிய பண்பினர் மேயினர்,
இனைய தென்றமிழ்நாடு சென்றெய்தினர்.'

'அத்திருத்தகு நாட்டினை அண்டர் நாடு,
ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ,
எத்திறத்தினும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ.'—(ஆறுசெல் படலம்)

இனி, சோழமன்னரால் பெருஞ் சிறப்பெய்தி, பெரிய புராணம் பாடிய தொண்டை மண்டலத்துப் பெரியார் ஆகிய சேக்கிழாரும் பாண்டி நாட்டையே தமிழ் நாடென்று புகழ்ந்துரைத்தார். அதனை

'ஆங்கவர் விடமுன் போந்த
அறிவுடை மாந்தர் அங்கண்,
நீங்கிவண் டமிழ்நாட் டெல்லை
பிற்பட நெறியின் ஏகி,

ஞாங்கர் நீர்நாடும் காடும்
நதிகளும் கடந்து வந்து
தெங்கமழ் கைதை நெய்தல்
திருமறைக்காடு சேர்ந்தார். (மங்கையர்க் கரசியார்)

'பூழியர் தமிழ் நாட்டுள்ள
பொருவில் சிர்ப்பதிக ளெல்லாம்
பாழியும் அருகர் மேவும்
பள்ளிகள் பலவு மாகி'

என்னும் பாடல்களால் அறிக.

இத்துணையும் காட்டிய மேற்கோள்களால், செந்தமிழ் நாடு என்பது பாண்டி நாடே எனவும் சோணாடு அன்றெனவும் துணிந்து கோள்க.

இனி, பாண்டி நாட்டிற்போலவே, தமிழை யன்றி வேற்று மொழி பெரும்பான்மைபாக வழங்காத சோணாட்டைக் கொடுந் தமிழ் நாட்டுள் ஒன்றாகவைத்து எண்ணுதல் சாலுமோ எனின், நன்று வினாயினீர்; சோணாட்டில் சான்றோரெல்லாம் செந்தமிழ்ப் பயிற்சியிற் சிறந்தார் ஆயினும், கல்லாதாரிடத்துக் காணப்படும் கொச்சைத் தமிழ் வழக்கு இன்னும் மாறுமலே இருக்கிறது. பாண்டி நாட்டில் கல்லாதாரிடத்திருந்தும் பல அரிய தமிழ் வழக்குச் சொற்களைச் சோணாட்டுப் புலவர் போற்றிக்கொள்ள லாகும். ஆதலின் அது ஓர் கடாவன்றென விடுக. இனிக், கொடுந்தமிழ் நாடு பற்றிய ஆசிரியர் கொள்கை வேறுபாடுகளும் நாலுவகைபாம்.

முதலாவது—(இளம்பூரணர் சேனாவரையர்) பொங்கர்நாடு முதல் அருவா வடதலை ஈறாகவுள்ள பன்னிரண்டும் கொடுந் தமிழ்நாடு என்றது.

இரண்டாவது— (தெய்வச்சிலையார்) அவை பழந்தீபம் முதலாகக் கலிங்கம் இறுகக்கூறித்த பன்னிரண்டு என்றது.

மூன்றாவது—(நன்னூலார்) தென்பாண்டி முதலிய பன்னி ரண்டும் சிங்களம் முதலிய பதினேழும் ஆக இருபத்தேழு என்றது.

நான்காவது— (நச்சினார்க்கினியர்) இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் குறித்தவற்றைக் கூட்டி இருபத்து நான்கு என்றது.

நால்வர் மாறுகோள் ஒருதலை துணிபு.— இருபற்றியாம் புதுவதாகக் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. தெய்வப்புலமைச் சிவஞானமுனிவர் இலக்கண விளக்கச் சூறுவளியில் முன்னமே துணிவு வெளிப்படுத்தினர். ஆண்டு அவர் கூறிய பொருள் ஒவ்வொன்றும் பொன்போலப் போற்றிக்கொளல் வேண்டும். அச் சூறுவளியுரை வருமாறு :—

'தமிழொழி பதினேழ் நிலத்து மொழிகளையும் கொடுந் தமிழ் நாட்டுமொழியோடு ஒப்பத் திசைச் சொல்லெனக் கொண்டார் (இலக்கண விளக்க நூலார்.) ஆசிரியர் தொல்காப்பியனர் அவ் வாறு கொள்ளாமையானும் உரையாசிரியர் சேனவரையர் கூறுமை யானும் வடசொற்போல ஏனை நிலத்துச் சொற்கள் சான்றோர் வழக் கினுள்ளும் செய்யுளினும் வாராமையானும், சிலசொற்கள் இக் காலத்துவரினும் இலக்கணமுறை யன்மையானும் அவை தமிழ்க் குரிய திசைச்சொல் ஆகாவென மறுக்க' என்பது.

திசைச்சொற்கு உதாரணம் ஒரோவொன்றே காட்டினர் இளம்பூரணர். பதிற்றுப்பத்து, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலியவற்றுள் ஒரு சில திசைச்சொல் வழங்கின கண்டு கொள்க.

செப்பு என்பது வடநாட்டுத் திசைச்சொல் என்று தெய்வச்சிலையார் 'நச்சினர்க்கினியர் முதலியோர் எடுத்துக் காட்டினர். அது ஓர் திசைச் சொல்லாயின், ஆசிரியர் தொல் காப்பியனர் தம் நூலுள்ளே 'செப்பும் வினவும் வழா அல் ஓம்பல்.' 'செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு' 'செப்பே வழீஇயினும் வரைநிலையின்றே.' 'எடுத்த மொழி யினம் செப்பலும் உரித்தே.' 'இன்மை செப்பல்.' உண்டென் கிளவி உண்மை செப்பின்.' என அம் மொழியைப் பயில வழங்கார். வடசர், சொல்லுதற்பொருளில் செப்புதல் என

வழங்குதலைக்கண்ட பிற்காலத்துத் தமிழாசிரியருட் சிலர், அது வடசொல்லே தமிழில் திசைச்சொல்லாக வந்ததென்று மயங்கிக்கொண்டார். அதுபற்றி அவரும் அவ்வாறு கூறினர். அது பொருந்தாது, அச்செப்பு என்பது தமிழ்த் திரிசொல்லாய், வடநாட்டார் தமிழ்ச் சொற்களினின்று வாங்கி வழங்கிக் கொண்ட சொற்களுள்ளே ஒன்றுமென்று துணிந்துகொள்க. வடநாடு செந்தமிழ் நாட்டைச் சேர்ந்ததன்று ஆகலான், அச் செப்பு என்பது திசைச்சொல் என்பது ஆசிரியர் தொல்காப்பி யனார்க்குக் கருத்தன்றென மறுக்க.

இனி நன்னூலார்க்கும் 'செப்பு' என்பது திசைச்சொல் அன்றென்பதே கருத்தாதல், அவர் 'மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை' என்னும் சூத்திரத்தால் அதனைத் தமிழ் உரிச்சொல்லாகவைத்து ஓதுமாற்றால் உணர்க.

இனி, பிரயோக விவேகம் என்னும் நூலாசிரியர் தமிழும் ஓர் திசைச் சொல்லே யாம் என்றார். அது எம்மொழிக்குத் திசைச்சொல்லோ? இது வடமொழிப் பித்து தலைக்கேறிக்கூறிய பிதற்றுரையுள் ஒன்றெனத் தள்ளுக.

திசைச் சொல்லிலக்கணம்பற்றிய உரை ஒருவாற்றான் முடிந்தது.

'வடசொல்' என்பதன் இலக்கணம்பற்றிய உரை முன்னமே பல வகையான் விரிக்கப்பட்டது.

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪	ஆங்கீரச, மார்கழி.	மலர் ௯.

இன்ப நிலை.

திரு. வித்துவான், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை திருவத்திபுரம்.

இன்பநிலை என்பது உலகில்வாழும் உயிர்கள் நுகரும் இன்பத்தின் தன்மையென்னும் பொருளைத் தருகின்றது. நிலையென்னும் சொல் நில்லென்னும் முதனிலையிற் பிறந்ததெனினும் "இருண்மல நிலை" "அருளுருநிலை" என்னுமிடங்களில் சேது மடம், ஆசிரியர் நிரம்ப வழகிய தேசிகர் அவர்கள் தன்மையென்றே உரை கூறினாராகலின், இன்பத்தின் தன்மையெனப் பொருள் கொள்ளப்பட்டது. "இன்பநிலை, தானே வந்தெய்தும் பராபரமே" எனத் தாயுமானாரும். "இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுதலோய்" எனத் திருவருட்பாவுடைய இராமலிங்கசுவாமிகளும் கூறியனவற்றிற்கு இவ்வாறு பொருள் செய்தலாகாது. அவற்றின் பொருண்மை பின்னர்த் தானே போதரும்.

இனி, இன்பம் என்பது உடலொடுகூடி உயிர் நுகரும் இருவகைப் பொருள்களுள் ஒன்று. மற்றையது துன்பம் என்பது.

இதனைப் பிற்காலத்தறிஞரொருவர், "இன்பே துன்பமென்று யிரண்டென்ப, மன்னுயிர் மெய்யின் மயங்கியல் பொருளே" என்று கூறினர். இதனைப் பொருளென்ப வாயினும், பொறிகளால் அறியப்படுவதன்று. உயிர், கருவி கரணங்களால் இவற்றை நுகர்தல் செய்கின்றதென்பது, "அருந்தின்பத் துன்பமுள்ளந் தரிசிக்கு அராகமாதி, தருந்தன்வேதனை யாங்காட்சி" (சிவ. சித்தி. அள. 7.) எனக் காட்சியிலக்கணம் கூறுஞ் செய்யுளாலும், "இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போல் துன்பம், உழத்தொறூஉங் காதற்றுயிர்" (குறள். 940) எனவரும் தமிழ் மறையாலும், அவரவர் உணர்வாலும் அறியப்படுகின்றது.

இங்ஙனம், பொறிகளுக் கெட்டாது, உணர்விடையே நிகழ்வதாய இதனைப் பிறர்க்குணர்த்தலும் அரிது; இவ்வருமை குறித்தே நம் பெரியோர்கள், ஒருவனிடை நிகழும் இன்ப வுணர்வினையும் பிறவினையும் அறிதற்குக் கருவியாக மெய்ப்பாடும் அதன் பல வேறு இயல்புகளையும் வகுத்தனர். ஆகவே, அகத்தே நிகழும் இவ்விருவகை யுணர்வும் புறத்தே யறியுங் கருவியே மெய்ப்பாடும் அவிநயமும் என்பது அறியலாம். ஆயினும் "கண்ணினும் செவியினும் திண்ணிதி னுணரும், உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின், நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" (தொல். பொ. 275) என ஆசிரியர் கூறுதலின், அகவுணர்வறியும் கருவியாகிய மெய்ப்பாடுகளும் நுண்ணியோர்க்கே தெரியும் என்பது பெறப்படும். இதனை நோக்குமிடத்து, இன்பதுன்பமாகிய இவ்விரண்டன் நிகழ்ச்சியும் உணர்தற்கரிதாதலேன் என்னும் அவா எழுகின்றது. இவ் வவாவின் வயப்பட்ட நான் ஒருவாறு உணர்ந்ததனை வெளியிடுகின்றேன்.

ஒருவன் தமிழ் நூற் பொருளின்கண் ஐயங்கொண்டானாயின், அதனைப் பலகாலும் மனத்தால் நினைந்தாராய்வன்; அங்ஙனம் கண்ட விடத்தும் அவ்வையமறுதாயின், தொல்காப்பியர், திருவள்ளுவர், திருக்கோவையார் என்னும் மூன்று

நூல்களிலும் விளங்கும் என்ப., 'பல்காற் பழகினும் தெரியா வுளவேல், தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்'' (இலக். கொத்து. சூ. 7) என்பர். இதனை யுட்கொண்ட யான் திருவள்ளுவர் செய்தருளிய திருக்குறளின் கண் இன்பத்தோ டிணைந்துள்ள துன்பநிலை விளக்கப் பெற் றுளது காணப் பெற்றேன். ஒரு பொருளில் உண்மை நிலை யறிதற்கு அதன் மறுதலைப் பொருளின் உண்மை நிலையறிவும் கருவியாமாகலின் அதனை மேற்கொண்டேன்.

"இன்னாமை யின்பம் எனக்கொளின் ஆகுந்தன், ஒன்னார் விழையும் சிறப்பு'' (குறள். 630.) என்பதன் உரையில் ஆசிரியர் பரிமேலழகர் "துன்பந்தானும் உயிர்க் கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் கோட்பா டாகலின், அதனை மாறுபடக் கொள்ளவே, அதற்கிழிவின்றி மனமகிழ்ச்சி யுடையனாய், அதனாற்றொடங்கிய வினை முடித்தே விடும் ஆற்ற லுடையனாமென்பது கருத்து'' என்று கூறுகின்றார். இக்கூற்று, துன்பமாவது உயிர்க்கியல்பன்று என்றும், உயிர் நிற்றற்கு நிலைக்களனாகிய உடலைச் சார்ந்த மனத்திடையே கணப் பொழுதே நிகழும் ஒருவகைக் கோட்பாடாகும் என்றும் கூறுதல் பெற்றாம். பெறவே இதன் மறுதலையாகிய இன்பமும் கணிகமாய் மனத்தின்கண் நிகழ்வதோர் கோட்பாடே என்ப தறியப்படும். எனவே, தான் நிகழ்பொழுது கணமாயும், தன்னையறியலுறும் அறிவைத் தன் வயமாக்கிக் கொள்ளவல்ல தாயும் நிற்றலின், இன்பம் உணர்தன் மாத்திரையே யன்றிப் பிறர்க்கு உரைக்கும் அளவிற் றன்றாதல் உணரப்பட்டது.

இனி, துன்பம் இன்பத்திற்கு மறுதலையாதல்,

"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பக லமையமும் இரவும் போல
வேறு வேறியல வாகி மாறெதிர்ந்
துளவென வுணர்ந் தனையாயின்'' (அகம். 327)

என்பதனாலறியலாம். இங்ஙனம் இவை யிரண்டும் ஒன்றிற் கொன்று மாறெதிர்ந்துளவாயினும், இடையீடின்றித்தொடர்ந்து

வருதலினாலும், இன்ப நுகர்ச்சிக்குப் பின் துன்ப நுகர்ச்சியும், துன்பத்தின் பின் இன்பமும் நிகழும் ஒற்றுமையால் இன்பத்திடத்தே துன்பமும், துன்பத்திடத்தே இன்பமும் ஒருகால் உயிரால் உணரப்படுதலாலும், நம்பெரியோர்கள்,

"தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ" (நற். 294)

என்றும்,

"இன்பமுண் டேல் துன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை;
முன்பு சொன்னால் மோழைமையால்; முட்டை மனத்தீரே!
அன்பரல்லால் அணிகொள் கொன்றையடிகள் அடிசேரார்
என்பர்; கோயில் எதிர்கொள்பாடி என்பதடைவோமே."

என்றும் கூறுவர். (சுந்தரர். எதிர். 8)

இனி, உயிரால் நுகரப்படும் இவ்வின்பம் எவ்வாறு நுகரப்படுகின்றது என்பதனை யாராய்வாம். உயிர், தானே நுகரும் ஆற்றல் உடைய தன்மையின், அஃது உடலோடு கூடி இவ்வின்பப்பயனை நுகர்கின்றது என்பது யாவரும் அறிந்தவுண்மையாம்; அன்றியும் இன்ப நுகர்ச்சி கருதியே உயிர் உடலோடு நெருங்கிய தொடர்பு பெற்றுளதென்பதும் முன்னர்க் காட்டிய 940 ஆம் திருக்குறளால் அறியலாம். இங்ஙனம் உயிர் இன்ப நுகர்ச்சி கருதிக் கூடிய உடல் ஐம்பொறிகளையும், பிறகரணங்களையுமுடையதாய், அவ்வுயிரின் கருத்தினை முற்றுவித்தற்குரிய நெறியினும் நிற்கின்றது. அதனால் உயிர்களாகிய நாம் ஐம்பொறிகளாலும் கரணங்களாலும் இன்பத்தினை நுகர்வோமாயினேம். அழகும் ஒளியும் திகழும் பொருளைக்காணுமிடத்து, அதன் காட்சி நம்பொறியிற்றாக்கியவழி நம்மனம் அதனைக் காண்டற்குரிய பொறியிடை நிலவும் புலனொடுபைந்து கண்டு இன்பம் நுகர்கின்றது; யாழ், குழல் முதலிய இன்னிசைக் கருவிகளின் மெல்லோசை செவியிற்றாக்குமிடத்து மனம்செவிப் புலனொடுபைந்து செவிச் சுவையார்ந்து இன்பம் நுகர்கின்றது. இவ்வண்ணமே பிறபொறி புலன்களாலும் இன்பம் நுகரப்பெறுகின்றது.

இனிப் பொறிவாயிற்பட்ட பொருள் உயிர்க்கு இன்பந் தரும் முறையை, நம் பெரியார் கண்ட முறையை ஒருவாறு சுருக்கிக் கூறுவோம். சர்க்கரையே காணுன் ஒருவன் முதற் கண் பழுப்புச் சர்க்கரையைக் காண்பானுயின், சர்க்கரையாவது பழுப்பு நிறமுடையதென வுட்கொள்வான். பின்னர் அவனே மணற் சர்க்கரையைக் காண்பானுயின், பழுப்புச் சர்க்கரைக் காட்சியாற் கொண்ட கருத்தினைத் திருத்திப் பிறிதோர் கருத்தினைக் கைக்கொள்வான்; அவனே மீட்டும் மாவைப்போலும் வெள்ளைச் சர்க்கரையைக் காணின், சர்க்கரைபற்றிய நிறமும் வடிவுமாகிய கருத்துக்களை விடுத்துச் சர்க்கரை யென்பதோர் உணர்வினையே யுடையவனுவான். ஈண்டு, அவன் கட்பொறியால் சர்க்கரையைக் காண்டல் இந்திரியக் காட்சி என்றும், இக் காட்சியறிவோடு, சர்க்கரையின் நிறம் சுவை முதலிய இயல் பறிந்து அதனைப்பற்றியதோர் உணர்வு கோடல் மானதக்காட்சி யென்றும் கூறுவர். அது,

"உயிரினே டுணர்வு வாயில் ஒளியுரு வாதி பற்றிச்
செயிருறு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
அயர்வில் இந்திரிய ஞான மைம்புலன் சார்ந் துயிர்க்கண்
மயர்வற வந்த ஞானம் மானதக் காண்ட லாமே."

எனவரும். (சிவ. சித்தி. அள. 6)

இனி, இம்மானதக் காட்சியிற் ருேன்றிய பொருள் தானும், இந்திரியக் காட்சியினீங்கி மனத்துட் படுவதற்குள் நால்வேறு வகையில் ஆராயப்பட்ட பின்பே முடிபு செய்யப் பெறுகின்றது. பலவேறு வகைச் சர்க்கரையைக் கண்டவன், பொறிகட்குச் சர்க்கரை புலனுதலும், அவன் மனம் பொறிபுலன்களோடி யைந்து சர்க்கரையைப் பற்றியதும், புத்தி எழுந்து சர்க்கரை யின் நிற முதலிய வேறுபாட்டினை யாராய்ந்து காண்டலும், கண்டவிடத்து, அகங்காரமாகிய கரணம் அவற்றைப் பல முறையும் ஆய்தலும், முடிவிற் சித்தமாகிய கரணம் சர்க்கரை யைப் பற்றியதோர் உணர்வினை நிறுத்தலும் செய்யும்.

இனி, இவ்வுணர்வு தோன்றியவுடன், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் எனும் அறுவகைத் தத்துவங்களுள் காலம், அவன் பழுப்புச் சர்க்கரையைக் கண்டகழிகாலநிகழ்ச்சியையும் பொருத்திக் காட்ட, நியதி, சர்க்கரைக்கே உரியதோர் நிறமும் உருவும் இக்கலையெனும் உண்மையைக் காட்ட, கலை, அவ்வுண்மையைத் தலைப்பட்டு அதன் வகையை யுணர்ச்சிக்கண் எழுதலைச் செய்ய, வித்தையென்பது, எழுந்தவிடத்து, அவ்வுணர்ச்சிக்குரிய அறிவினைத் தூண்டும்; தூண்டுங்கால், புருடனுக்கு அவ்வுணர்ச்சியிடை நசையை யுளதாக்குவது அராகமாம்; அதனால் விரும்பியுணர்ந்த விடத்துளதாகும் இன்ப நுகர்ச்சியால் உயிர்க்கிழவன் தன்னை மறந்துநிற்றல் மாயை என்பதாம். ஆகவே, சர்க்கரையைப்பற்றிய உண்மையறிவு பெற்று இன்பம் நிகழ்தற்குளதாகும் அறிவு நிலை நுண்ணியதாய் விரிந்து நிற்றல் தோன்றும். இச்செய்தியையே சுருங்கிய வாய்பாட்டால் தன்வேதனைக் காட்சியென்ற குறியால், ஆசிரியர் அருணந்திதேவ நாயனார், "அந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி தருந்தன் வேதனையாங் காட்சி" (சிவ. சித்தி. அளவை. 7) என்று கூறியருளினார்.

இச்செய்திகளை மேனாட்டார் பொருட்கும் பொறிக்குமுள்ள இயைபு, (Physical Factor) என்றும், பொறிக்கும் மூளைக்குமுள்ள தொடர்புபற்றிய நிகழ்ச்சி (Physiological Factor) என்றும், மூளைக்கும் மனத்துக்கும் உளதாய தொடர்புபற்றிய நிகழ்ச்சி (Psychical Factor) என்றும் கூறியாராய்ந்து முடிபு காண்கின்றனர். அவர் கூறுவனவும் பொருள் முடிபின்கண் ஒத்தனவேயாயினும், முடிபெய்தும் முறையில் சிலபல வேறுபாடுடைய. அவற்றை யீண்டு விரிப்பிற் பெருகும், நிற்க.

இவ்வண்ணம் பொறி புலன்களாலும், கரணங்களாலும், தத்துவங்களாலும், இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன்வேதனைக் காட்சி என மூவகை நெறியால் உயிர் இன்பம் நுகருமிடத்து, புருடதத்துவத்தின் மேற்பட்டுநிற்கும் மாயைபோந்து களிப்பொருளாய இன்ப நுகர்ச்சியினையும் நீட்டியாது உயிரை

மயக்குதலின், அந்நுகர்ச்சியினை நுகர்ந்தாங்கு நுவலுதல் உயிர்க்கு இயலாமை விளங்குகின்றது. இதனாலும், இன்பம் பிறர்க்குரைக்கும் நிலையை யிறந்து நிற்றல் காணப்படுகின்றது.

இதுகாறும் கூறியவாற்றால் உயிர்கள் நுகரும் இன்பம் புறத்தே உரைத்தற்குரியதன்றாய், நுண்ணுணர் வுடையோர் உணரும்வகை மெய்ப்பாட்டினாற் புலனும் தன்மையுடைத்தாய் நிற்றலே வலியுறுவதாயிற்று. ஆயினும் இன்ப நுகர்ச்சிக்கண், கட்புலன் தொழிற்படுமிடத்துச் செவிப்புலன் தொழிற்படுதலும், செவிப்புலன் தொழிற் படுமிடத்துப் பிற புலன்கள் தொழிற்படுதலும் இல்லையாகலின், இன்ப நுகர்ச்சி சிறுகுவதாயிற்று; நாடகமேடையில் நடிக்கும் ஒருவனைக் காணுமிடத்து, அவனுடைய வேடமும் குறிப்பும் கட்புலனுக்கும், இன்னிசைப் பாட்டும் உரையும் செவிப்புலனுக்கும் இன்பம் பயத்தலின், இவ்விருவகைப் புலன்களும் ஒருங்கு தொழிற்படு மிடத்தே பெறலாகும் இன்பம் முன்னர்க்கூறிய இன்பத்தினும் சிறப்புடைத்தாய நீட்டித்ததோர் இன்பமாமென்பதும் போதரும். மற்று, சுவை மிக்கதொரு பொருளைச் சிறிதுண்டவழி நிகழும் இன்பம் நோக்கிப் பெரிதுண்டவழி வெறுப்பெய்தித் துன்பம் பயத்தலாலும், தேனும் நெய்யும் தம்முள் அளவொத்தவழியும் நஞ்சாய்த் துன்பம் பயத்தலினாலும் இன்பத்தை அக்கணிகமாம் நிலையிலிருந்து பெருக்கிக் கோடல் அரிதாதல் தெரிகின்றது. நாடகக்காட்சி தானும், நெடிது நோக்கியவழி இன்பந்தரு நிலையிற் குறைந்து வெறுப்பினை எழச்செய்தலினாலும், கண்ணும் செவியுமேயன்றி வாய், மூக்கு முதலிய பொறிகளாற் சேர நுகரும் இன்பத்தினை நோக்கக் குறையுடைத் தாதலானும், இன்ப நுகர்ச்சிக்கேற்றதன்றாதல் தோன்றுகிறது. தோன்றி னும் இன்பம் பயக்கும்பொருள் ஒன்றினைச் சிறிது நுகர்ந்தவழி, அமையாது அவ்வின்பத்தினை மிகநுகர்தல் வேண்டுமென்னும் வேட்கையினை அந்நுகர்வான் மனத்துள் எழுப்புதலும், மிக நுகர்ந்தவழித் துன்பமாய் முடிதலும் இன்பத்திடையே காணப் படுகின்றன. படினும், இன்பத்தின் மாட்டெழுந்த வேட்கை மிகுதி அத்துன்பத்தினை நுகர்வார்க்குப் புலனாகாவாறு மறைத்

தலின் இன்பவேட்கையே நிலைபெறுவதாகிறது. கட்புலனாற் கண்டு இன்புறுதற்குரிய பொருளினை, அது பயக்கும் இன்பம், காண்பார் மனத்திற் பெருவேட்கை யெழுப்பி, வேண்டாதன வற்றையும் வேண்டுவிக்குமெனின், கட்புலன் ஒன்றினுலெய்த லாகும் இன்பத்தின் வலியை என்னென்பது! நிலைபேறில்ல தாய், மூவகைத் துன்பத்ததாய், வினைவிளைவுக்கு நிலைக்களனு யுள்ள உடல் அறிந்தோரால் வெறுக்கப்படுமாயினும், அதனைத் துணைக்கொண்டு கட்புலனுல் நுகர்தற்குரிய காட்சியின்பத்தினை நுகரப் பெறுவனேல் அதனையும்வெறுது விரும்புவேன் என்பார்,

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே"

என்றார் நம் திருநாவுக்கரசர். இனிச் செவியால் நுகரலாகும் இசையின்பம் அக்காட்சியின்பத்தினும் விஞ்சித்தோன்றுதலைச் சேக்கிழார் பெருமான் ஆனாய நாயனார் புராணத்தின்கண், உயிருள்ளன, உயிரில்லனவாகிய இருவகைப் பொருளும் இசை யின்பத்து மூழ்கினவெனக் கூறுதலால் உணரப்படுகின்றது, அது,

"ஆனிரை கறுகருந்தி யசைவிடா தருகணையப்
பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றுமிளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமு
மான் முதலாங் கான்விலங்கு மயிர் முகிழ்த்து வந்தணைய,"

"மருவியகால் விசைத்தசையா மரங்கண் மலர்ச்சினை சலியா
கருவரை வீழருவி களுங்கான் யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள் புடை பெயர் வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடை முழங்கா எழுகடலு மிடை துளும்பா"

என வருவது.

இவ்வாறு ஓரோவழி ஒருபொறியால் நுகரப்பெறும் இன் பத்தின் மாண்பு இதுவாயின், ஒன்றோ பலவோகூடி நுகருமிடத்

தெய்தும் இன்பமாண்பும், ஐம்பொறிகளும் ஒருங்கே நுகரும் இன்பத்தின் மாண்பும் ஒன்றையொன்றுமிக்குத் தோன்றுதல் பெறப்படும். படுமாயினும், பொறிகள் ஐந்தல்லதின்மையின், அவ்வைந்தினும் ஒருங்கு நுகரும் இன்பம் சிறப்புடைத் தாதலே துணியப்படுவதாம். அவ்வின்பமே பெண்ணின்பம் என்பது. ஒருவன் பெண்ணின்பத்தை நுகருமிடத்து, அவன் ஐம்பொறிகளும் இன்பமார்தலை ஆசிரியர் திருவள்ளுவனார், "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள" (குறள். 1101) என்றதனால் அறியலாம்.

அன்றியும், ஒவ்வொரு பொறியாலும் தனித்தனி நுகரப் படும் இன்பமும் இன்பமாயினும், பெண்ணின்பத்தையே இன்ப மெனப் பெரியோர் வழங்கினர். அறம், பொருள், இன்பம், வீடு எனக் கூறப்பெறும் நால்வகை உறுதிப்பொருள்களுள் இன்பம் என்றதும் இதனையே. ஆசிரியர் தொல்காப்பியனார் "எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது, தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" (தொல். பொ. 223) என்றதும் இவ்வின்பத் தினையே. இவ்வின்பம் உயிர்கள் உலகியல் வழாது வாழ்க்கைச் சாகாடுகைத்தற்கு உறுதுணையாகும் பெருஞ் சிறப்பினையுடைத் தாகலின் நம்பெரியோர் இதனை யுயர்த்திக் கூறினர். ஆசிரியர் திருவள்ளுவனார், "அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம் புறத்த புகழுமில" (குறள். 39) என்றும், பரூஉமோ வாய்ப் பதுமனார் என்னும் சான்றோர்,

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கின் சீர் சாலாவே
பூப்போ லுண்கண் பொன் போன்மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலோ டெமக்கே" (குறுந். 101)

என்றும், நம்மணிவாசகப் பெருந்தகையார்,

"ஆனந்த வெள்ளத் தழுந்து மோரிருயி ரீருருக் கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத் திளைத்தா லொக்கும் அம்பலஞ்சேர்

ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றா இவ்வணி நலமே"
(கோவை. 307)

என்றும் கூறியருளினர். *ஆகவே, இதுகாறும் நாம் ஆராய்ந்து கண்டு போந்த இன்பத்திறும் இவ்வின்பம் சிறப்புடைத்தென்பதும், இதன் சிறப்பு அறிவுடையோரால் பெரிதும் பாராட்டப் பெறுவதென்பதும் பெறப்படுகின்றன. மேலும் முன்னர்க் கண்ட இன்பம் சிறிதாய வழிப்பெரிது நுகர்தற்பொருட்டு நுகர்வார் மனத்து வேட்கை யெழுப்புதலும் பெரிது நுகர்ந்த வழிவெறுப்பு விளைத்தலும் செய்தல் போலாது, வேட்கை யெழுப்பி, நுகர்வார் நுகர்தற்குரிய தம்மெய் வலியிழந்து உடலைத் துறக்கு ஞான்றும், தன்னின் மிக்கதோர் இன்பமுண்டெனக் காட்டும் சிறப்பினையுடையது.

இவ்வின்பத்தின் இயல்பினை, ஆசிரியர் திருவள்ளுவனார்,

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம்,
செறிதோறுஞ் சேயிழை மாட்டு" (குறள் 1110)

என்றும், மணிவாசகப் பெருந்தகையார்,

"உணர்ந்தார்க் குணர்வரி யோன் தில்லைச் சிற்றம்பலத்தொருத் [தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடை [தோள்
புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும்போகம் பின்னும் புதி [தாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர் கின்றதே"
(கோவை 9)

என்றும் கச்சியப்ப முனிவர்,

---

* மேனாட்டுக் கவிஞர் பெருமானாகிய ஷேக்ஸ்பியரும்

"She is mine own,
And as I rich in having such a jewel,
As twenty seas, if all their sands were pearls,
The water nectar and the rocks pure gold" என்றார்.

ஆயுந்தொறுந் தொறுமின்பந் தருங்கலை யாங்கறிவு
மாயுந்தொறுந் தொறுமின்பந் தரும்வள்ளல் வார்கழல்கள்
தேயுந்தொறுந் தொறுமின்பந் தரும்சந்து தேங்குழல்நிற்
றேயுந்தொறுந் தொறுநேராக இன்பம் சுரந்திடுமே"

என்றும் கூறினர். (தணிகை. களவு. 100)

இவற்றை நோக்குமிடத்து இவ்வின்பம் ஒருகாலைக் கொருகாலை புத்தின்பம் பயந்து வளர்தல் பெறப்படுகின்றது. திருக்கோவையார்க்கு உரை செய்தருளிய பேராசிரியர், "குறைபாடுள்ளதற் கன்றே வளர்ச்சி யுண்டாவது" என்பதனாலும், இவ்வின்பத்துக்கு வளர்ச்சி கூறுதலினாலும், இதுவும் குறைபாடுடையதே யாம். முன்னர் ஒவ்வொரு பொறியின் கண்ணும் எய்திய இன்பம் தன்னின் மிக்கதோர் இன்பத்தின் உண்மை காட்டினமையாலும், உளவெனக் கண்டவை தாமும், தம்மின் மிக்கதென இவ்வின்பத்தைக் காட்டினமையாலும், இவ்வின்பமும் ஒருகாலைக் கொருகாலை வளர்தலாலும் வளர்ந்து முற்றியதோர் இன்ப முண்டென்பது துணியப்படுகின்றது. மேலும் இவ்வின்பத்திற்கு நிலைக்களனாகக் கட்புலனும் பொருள் செவிப்புலனும் பொருள் எனப்பொருள்கள் உளவாதல்போல, வளர்ந்து முற்றிய இன்பத்திற்கு நிலைக்களனாய பொருளொன்றுளதாதல் வேண்டும் என்பதும், இப்பொருள்கள் தாமும் இன்ப நுகர்தற்கு நெடிது நில்லாவாய் மிக்க வழி வெறுக்கப்படுதலால், அப்பொருள் நெடிது நுகர்ந்த வழியும் வெறுக்கப்படுதலின்றி என்றும் நுகர்தற்குரிய இன்ப நிலையமாதல் வேண்டுமென்பதும், இப்பொருள்கள் ஒன்றிற்கொன்றுமிக்குந் தாழ்ந்தும் அழிந்தும் கழிதலால், அப்பொருள் மிக்கதும் ஒப்பதுமின்றி என்றும் அழியா வியல்பினதாகிய பரம்பொருளாதல் வேண்டு மென்பதும், இவ்வின்பங்கள் ஒன்றிற்கொன்று குறைபாடும் சிறுமையுமுடைய சிற்றின்பமாதலால், அப்பரம்பொருளிடை நுகரப்படுமின்பம் பேரின்பம் என்பதும், இச்சிற்றின்ப நுகர்ச்சிக்குக் கருவிகளாக இந்திரியமும், கரணமும் வேண்டுதலால் அப்பேரின்ப நுகர்ச்சிக்குக் கருவிகளாகக் கருவிகரணங்களுக்குக் கழிந்தான பேருணர்வு வேண்டுமென்பதும் பெறப்பட்டன.

ஐம்பொறிகளாலும் ஒருங்கு நுகரப்பெறும் இன்பமும் சிற்றின்பமாதல், "கண்டுகேட்டுற்று மோந்துண் டுழலுமைங்கருவி, கண்டவின்பந் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்" என நம்மாழ்வார் கூறுதலாலறியப்படும். இவ்வின்பநிலை பேரின்ப நிலையுண்மையினைக் காட்டுஞ் சிறப்பு நோக்கிப் போலும், ஆன்றோர், இன்பத்தின்பின் வீடு கூறினர்!

இனி, மேலே ஆராய்ந்துகண்ட பரம்பொருளிடத்தே நுகரப் பெறும் பேரின்பமும், அதனை நுகர்தற்குரிய பேருணர்வும் சிறிது காண்பாம்.

உயிர், தன்மாட்டெய்திய பொருளைக்கலை, நியதி முதலாய தத்துவங்களால் ஆய்ந்து, அப்பொருளிடத்தே ஆராகம்வைத்து இன்பம் நுகருமிடத்து மாயை என்பதொரு தத்துவந் தோன்றி மயக்குதலை முன்னர்க் கூறினோம். அதன் மயக்கத்தால் மயங்கியவழி, இன்ப நுகர்ச்சியும் இடையறுதலின், அஃது இடையறாதவாறு மாயையின் மயக்கத்தை வீட்டுதல் வேண்டும். அதற்குக் கருவி, கருவி கரணங்களால் உணரப்படும் பொருள்களின் உண்மைத் தன்மைகண்டு, அப்பொறி புலன்களின் நீங்கி பேரின்ப நிலைக்களனாகிய பரம்பொருளைக் காணமுயலுதலாகும். உலகிடைத்தோன்றும் ஒவ்வொருபொருளும் பரம்பொருளின் உண்மையைக் கூறும் திறத்தையுடையதாகலின், ஐம்புலனாலும் அப்பொருள்களைக் கண்டு, பின் அவற்றிடை விளங்கித்தோன்றும் பரம்பொருளையும் கண்டு, அப்புலன்களை விடுத்து, தனித்து நின்று நினைத்தல்வேண்டும். "ஐம்புலனால் தான் கண்டகன்றால் அதுவொழிய, வைம்புலனார் தாமார் அதற்கு" (திருவருள் 70) என்பது திருவருட்பயன். உலகியற் பொருள்கள் பரம்பொருளுண்மை கூறும் திறத்தனவென்பது இறைவற்கு உலகமே புருவமென்றும், உலகிடைத்தோன்றும் பொருள்களேயவனுக்கு உறுப்பென்றும், உலகியலில் நடைபெறும் அறிவு, இச்சை, தொழில் எனப்படுவன அவனுக்குக் கரணங்களென்றும் பெரியோர் கூறுவர். மேலும் இறைவன், "தாபர சங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கருளை

வைப்பன்" (சிவ. சித்தி. சு. 2. 28) என்பதனாலும், ஷேக்ஸ்பியர் என்பர் "And this our life, exempt from public haunt, Finds tongues in trees, books in the running brooks, sermons in stones and good in every thing" என்றும் தாமஸ் ஏ கெம்ப்பிஸ் என்பவர் "If thy heart be right, then will every creature be to thee a mirror of life, and a book of holy doctrine" என்றும் கூறுதலாலும் விளங்குகின்றது. இது போதும், "நவசக்தி" யாசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஒருசொற்பொழிவின்கண் "நம்முயிருண்மையறிதற்கு நம்முடல் கருவியாதல்போல, கடவுளுண்மையறிதற்கு இயற்கையே கருவி" யென்றார்; என்று கூறியும் வருகின்றார்.

இனிப் பொருள்நிலை யறிதற்குத் துணைசெய்யும் பொறி புலன்களால் பொருளுண்மை யுணர்ந்தபின், அவற்றைவிடுத்து, அறிவு துணையாக நாம் அதனை யாராயுமிடத்து உண்மை தோன்றி இன்பம் செய்தல் கண்கூடு. கலாசாலை மாணவனொருவன் அரியகணக்கினை *அளவையால் முடிபு செய்தல்கருதி முயலுமிடத்து மயக்கமெய்தினன், உண்ணும்போதும் உறங்கும்போதும் உலவும்போதும் அதுவே நினைவாய் ஆய்ந்து வருங்கால், தவறாது முடிபு செய்தற்குரியநெறி, அவன் அறிவுக்குப் புலனாகின்றது; அம்மட்டோ, அவனையூக்குதற்கேற்ற இன்பமும் உடனெழுகின்றது; இங்ஙனமே, பேரறிஞர்களின் ஆழ்ந்த அறிவாராய்ச்சியின் பயனே இன்று நாம் வானிற்சேறலும் நீர்மேல் நடத்தலும், நிலத்துட் புகுதலுமாம். இவ்வண்ணமே, உலகியற் பொருள்களில் ஒன்றித் தோன்றும் பரம்பொருளை, அறிவாராய்ச்சியால் ஆழ்ந்து நோக்குவார்க்கு, அம்மாணக்கற்குத் தோன்றியதுபோலும் மெய்யறிவு தோன்றி இன்பம் பயக்கின்றது. அவ்வறிவு மிக்குத் தோன்றுதலால் அவ்வின்பம் மிக்குத்தோன்றி மகிழ் செய்வதாயிற்று. அது நுகர்ந்தே, தாயுமானாரும்,

"இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
என நுசித்திட வலியவந்

* Solution of a geometrical rider.

இன்பங் கொடுத்த நினைஎங் கேசநின்பர்
இடையறா தருகி நாயு.
உன்னிய கருத்தவிழ வுரைகுழறி யுடல்தளர்ந்
தோய்ந் தயர்ந்த வசமாகி
உணர்வரிய பேரின்ப வநுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ளபடி காண்" (சுகவாரி. 1)

என்றும், திருநாவுக்கரசர், "சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்—முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு—பந்தித்து நின்ற பழவினை மாய்ப்பன பாம்பு சுற்றி—அந்திப் பிறையணிந் தாடுமையாறன் அடித்தலமே" என்றும் கூறியருளினர்.

முதற்கண், மறைந்து நின்ற இவ்வுண்மை பின்னர்த் தோன்றுதலும் இன்பம் பயத்தலும் நோக்குமிடத்து, இந்நிகழ்ச்சிகட்குக் காரணமாயதோர் பொருள் உளதாதல் வேண்டுமென்பதோர் உணர்வு தோன்றும்; அத்தோற்றப் பொருள் திருவருள் என்றும், அஃது எல்லார்க்கு முளதாகாது, சிலர்க்கே புலனாதல் குறித்து, அதற்கேது, பதிபுண்ணியமென்றும் வகுத்து நம்பெரியோர்,

"புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங் கீழ்நோக்கும்,
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணானாகி
என்றுமிக லோகத்தே முத்திபெறும்" (சிவ. சித். 8. 13.)

என்று கூறினர்.

இங்ஙனம், நாம் பொறி புலன்களால் நுகரும் இன்பம் பரம்பொருளொன் றுண்டென்றும், அதனிடத்தே அறிவினால் நுகரப்பெறும் இன்பம் பேரின்பமென்றும் காட்டினமையால், அதனை நுகர்தற்குரிய நெறியும் காண்டல்வேண்டும். நம்பெரியோர்கள், உண்மையறிவினை மறைத்து நிற்கும் அறியாமையிருட்டு வது புன்மைவினையென்றும், அவ்வறியாமை தீர வேண்டின், உண்மையறிவை நாடித்தொழுதல் வேண்டுமென்றும்

தொழுது பெறும் ஞானம் பின்னரும் மறவாதிருத்தற்குப் பரம்பொருளின் அடியாரிடத்து அன்பும், ஆருயிர்மாட்டருளுமுடையராய் அவ்வடியாரோடு கூடியும், அவர் வேடமும் பிறவும் பரம்பொருளே எனக் கருதியும் ஒழுகுதல் வேண்டும் என்பர். இது

"வினையா லசத்து விளைதலால் ஞானம்
வினை தீரினன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழும்
ஆனத்தா லன்பிற் றொழு," எனவும்,

"செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்களனுத் திசனைசரொடுஞ் செறிந்திட்(டு)
அங்கவர்தந் திருவே டமாலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி
எங்கும் யாமொருவருக்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்றிறு மாப்பெய்திக்
திங்கள்முடி யாரடியார் அடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செப்தி யுடையோரே."
(சிவ. சித்தி. சூ. 12)

எனவும் வரும். மேனுட்டறிஞர், பொறிபுலன்களாற் கண்ட பொருளின் உண்மை நிலையாராய்வான் தனித்து நின்று, மனவுலகின் நினைவுக் குழுவினைக் கண்டு தெளிதல்* என்றும், அந்நனம் செய்தற்கு முதற்கண் அறிவியற் பொருள்களைக் காண்டலும், கண்டவற்றால் மனம், கலுழி நீர்தானே தெளிந்து மணிநீராதல்போல, தானே தெளிந்து அமைதிபெறுதலும், † உரனுடைமையும் ‡ இன்றியமையாதனவென்ப.

---

* "For nowhere either with more quiet or more freedom from trouble does a man retire, than into his own soul particularly when he has within him such thoughts that by looking into them he is immediately in perfect tranquility"—Marcus-Aurelius. † "Peace of mind must come in its own time as the waters settle themselves into clearness as well as quietness; you can no more filter your mind into purity than you can compress it into Calmness."—Ruskin.

‡ "Self-reverence, Self-knowledge, Self-Control,
These three alone lead life to sovereign power "Tennyson.

மற்று, உலகியலில் மாறுதல்பல கணந்தோறும் நிகழ்தலால், அறிவின் திண்மை தளர்தலுண்டாதல் பெரும்பான்மையாதலாலும், அதனால் துன்ப நிகழ்ச்சி எய்துதலாலும், இன்ப நுகர்ச்சி இடையறுமாயினும், பெருந்துன்பங்கள் யாவும் நம் மனத்தினின்றே பெறுதலின், பேரின்பத்தையும் அதனினின்றே கண்டு நுகருமாற்றால் அத்துன்பத்தின் நீங்குதல் வேண்டும்.* இதுபற்றியே மில்ட்டன் என்னும்புலவர்பெருமான் எல்லாம் வல்லது மனமேயாகலின், அம்மனத்தே துறக்கத்தை நிரயமாகவும், நிரயத்தைத் துறக்கமாகவும் நோக்கி நீக்குதலும் கோடலும் செய்யலாம் என்பர்.† திருவள்ளுவப் பெருந்தகையும் "இன்னாமை இன்பம் எனக்கொளின், ஆகும்" என்றனர். இவற்றை நோக்குமிடத்து டென்னிசன் என்பவர் கூறியவாறு துன்ப நிகழ்ச்சிக் கஞ்சாதே, தான் நுகர விரும்பும் இன்பத்தின் பொருட்டுப் பரம்பொருளிடத்து ஆட்பட்டோர் உரனுடையராதலே தக்கதாம்; இதுவே இன்ப நுகர்தற்குரிய இன்ப நிலையுமாம். ஆகவே, இப்பொருள்பற்றி நம் நாவுக்கரசர் கூறிய திருமொழியினைக் கூறி இக்கட்டுரையை நிறுத்துகின்றேன்.

"வானந் துளங்கி லென்மண் கம்பமாகி லென்மால் வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறி லென்தண் கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ் சுண்(டு)
ஊனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுமக்கே."

---

* "The greatest evils are from within us; and from ourselves also we must look for our greatest good"-Jeremy Taylor.

† "The mind is its own place, and in itself,
Can make a Heaven of Hell, a Hell of Heaven"-Milton.

கம்பர் உவமக்கவின்

பண்டிதர், திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நன்னிலம்.

முன்தொடர்ச்சி:— துணர் எ மலர் ம்உ பக்கம் 547

நலனுறு கணவர் தம்மை நவையுறப் பிரிந்துவைகும்
முலையுறு கலவைதீய முள்ளிலா முளரிச் செங்கேழ்
மலர்மிசை மலர்பூத் தென்ன மலர்க்கையால் வதனந்தாங்கி
உலவரும் உயிர்ப் பினோடு நெடிதிருந் துயிர்க்கின்றாரை (46)

இச்செய்யுளில், நாயகரைப் பிரிந்த துயரத்தால், பெருமூச்சு விட்டுக்கொண்டு கையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு, உட்கார்ந்திருந்த பெண்கள், அவ்வாறு கன்னத்தில் கையை வைத்துக் கொண்டிருந்த தோற்றம், முள்ளில்லாத நாளத்தை யுடைய ஓர் செந்தாமரை மலரின்மீது மற்றோர் மலர் பூத்திருந்ததுபோல் இருந்தது எனக் கூறுகின்றார்.

தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவல மீதென
எழுதிய படிவமொத் தெய்துவான் தனை
முழுதுணர் சிந்தையான் முற்ற நோக்கினன் (47)

இச்செய்யுளில், தொழுதகையனாய், துவண்ட மேனியனாய், அழுதழி கண்ணினனாய், சித்திரகூட பர்வதத்திருந்த இராமனைக் காணச்சென்ற பரதனுடைய தோற்றத்திற்கு, அவலச் சுவையின் வடிவம், இதுவே எனத் தெளிவுபெற எழுதிய வடிவத்தை யொத்து எய்திய பரதனை எனக் கூறும் நயம் காண்க.

அரியமஞ்சி னோடஞ்சன முதலிவை யதிகம்
கரியகாண்டலும் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரியகாதலின் ஒருவரோ டொருவரை யுலகில்
பிரிவெனும் துயர்உருவு கொண்டாலன பிணியாள் (48)

இச்செய்யுளில், அசோக வனத்தில் தனித்திருந்து இராமருடை பிரிவாற்றாமையால் துன்புறுகின்ற சீதையை, பிரிவு என்னும் துயரமே ஓர் உருக்கொண்டாலொத்த துயரமுடையவள் எனக் கூறுதல் காண்க.

இருப்புக் கம்பியர்க் கிழைநுழை ஊசியோன் றியற்றி
விருப்பிற் கோடியால் விலக்கெனும் பதடியின் விட்டான்
கருப்புக் கார்மழை வண்ணனக் கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிப கோளவன் மீளரு மாயம் (49)

இச்செய்யுளில், சாதாரணமாய், உலகவழக்கில், கொல்லத் தெருவில் ஊசிவிற்பதுபோல் என வழங்கி வருகின்ற பழமொழியையே உவமையாக்கிக் கூறியிருத்தல் காண்க.

பைப்பையப் பயந்த காமம் பரிணமித் துபர்ந்து பொங்கி
மெய்புற வெதும்பி யுள்ள மெலிவுறு நிலையை விட்டான்
ஐயனுக் கங்கி முன்ன ரங்கையாற் பற்று நங்கை
கையென லாயிற் றன்றே கைபுக்க மணியின் காட்சி (50)

இச்செய்யுளில், சீதையினிடமிருந்து பெற்று வந்த சூளாமணியை, அநுமான், இராமரிடம் கொடுத்தபொழுது, இராமருக்கு அம்மணி, தான் திருமணக்காலத்தில் அங்கி முன்னர்ப் பற்றிய, கையை ஒத்திருந்தது எனக்கூறும் நயம் மிக்க இன்பந் தருவதாகும்.

கண்டகன் மிசைக் காகுத் தன்கழற் றுகள்கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டுமெய் யுணர்வ வன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான் (51)

இச்செய்யுளில், இராமரது காற்றுகள் பட்ட வளவில் கல்லுரு நீங்கித் தன்னுருப் பெற்றுநின்ற அகலிகை, "மெய்யுணர்வ வன்கழல் கூடிய தொப்பப், பண்டை வண்ணமாய் நின்றனள்," எனக் கூறும் உவமை நயம் கூர்ந்து நோக்கத் தக்கது.

மனிதப் பிறவியைப் பெற்றதனாற் பெறவேண்டிய பெரும் பேறு, விடைநிலை யாமென்பது, உண்மை நூல்களெல்லா வற்றிற்கும் ஒத்த துணிபாகும். அவ்வீடாவது யாதோ

வெனின், உயிர், அறியாமை நீங்கி மெய்யறிவு பெற்று இறைவ ேனாடு இரண்டறக் கலத்தலேயாம். அவ்வாறாயின் கடவுள் எங்கிருக்கின்றார் அவரோடு கலப்பதெப்படி யென்றால், கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றாரென்ற உண்மை, அறிஞரனைவர்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகலின், கடவுள், உயிர்களின், உள்ளும், புறமுமாய், அவற்றோடிரண்டறக் கலந்தே யிருக்கின்றார். அங் ஙனமாயின் இறைவன், உயிர்களோடு, இரண்டறக் கலந்தே நிற்கும்பொழுது, அந்நிலையை யடைதற்கென முயற்சிப்பது பயனற்றதும் அறியாமை யின்பாற்பட்டது மாகாதோவெனில், ஆகாது. எவ்வாறெனில் ஈண்டு உயிர் இறைவனோடு கலத்தல் என்பதன் கருத்து அவ்வாறு கலந்திருக்கின்ற தனது உண்மை நிலையை அறிதலே யாம். அறியாமையினால் தனக்கும் இறை வனுக்கு முள்ள இரண்டற்ற நிலையை அறியாதிருந்த வுயிர் அவ் வறியாமை நீங்கி மெய்யறிவைப்பெற்ற காலத்து, இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கின்ற தனது உண்மையை உணர்ந்து கொள்ளுகிறது. எனவே, அறியாமை நீங்க மெய்யறிவைப் பெற்ற ஆன்மா, இறைவனோடு கலந்து நிற்கின்ற தனது உண்மை நிலையை அடைந்ததைப்போல இங்கு கல்லுரு நீங்கப் பெற்று தனது உண்மையுருவைப் பெற்றாள் அகலிகை எனக் கூறும் நயம் போற்றத் தக்கதொன்றாகும்.

> கணங்குழை கருத்தினுறை கள்வனென லானான்
> வணங்குவி லிறுத்தவன் எனத்துயர் மறந்தாள்
> அணங்குறும விச்சைகெட விச்சையி னகம்பா
> டுணர்ந் தறிவுமுற்று பயனுற் றவரை யொத்தாள் (52)

இராமர் மிதிலையில், வில்லை வளைத்த பின்பு, சபா மண்டபத்திற் கழைக்கப் பெற்ற சீதை, வில்வளைத்தவன், தன்னால் முன்கண்டு காதலிக்கப் பெற்றவனே என்பதை யறிந்து தனது துயரமெல் லாம் நீங்கப் பெற்றவளாய், அறியாமை நீங்க, மெய்யறிவையும் அதனாலாம் பயனையும் பெற்றவருக்கு ஒப்பானாள், என இச் செய்யுளிற் கூறுவதும் கருதத்தக்கது.

மெய்யறிவைப் பெறுதலாவது யாது என்னில் ஆன்மா, தேகம், இந்திரியம், அந்தக்கரணம், முதலிய ஒன்றனோடுஞ்

கூடாது தனித்து, அசைவற்றிருத்தலே யாம். இதனையே உண்மை நூல்கள் சும்மா இருத்தல் எனக் கூறுகின்றன. இந்நிலையை அடையப்பெறாத எவரும் வீடடைதல் கூடாதாகும் நூல்களில், இதற்கு வேறாகக் கூறப்படும் உபாயங்களெல்லாம், இந்நிலையை அடைதற்கு அங்கமாகக் கூறப்பட்டனவேயன்றி வேறில்லை. எனவே அவ்வாறு தேகேந்திரிய அந்தக் கரணங்களோடு கூடாது தனித்து அசைவற்றுநின்ற ஆன்மா, பண்டைத் துயரங்களெல்லாம் நீக்கப்பெற்று, ஆங்குண்டாகும் பேரின்பக் கடலில் மூழ்கியிருக்கும் இங்கு இராமரைக் கண்டவுடன், தனது தேகேந்திரிய அந்தக் கரணங்களெல்லாம் அசைவற்று நிற்க, தனது துயரமெல்லாம் நீங்க, ஆநந்தக்கடலில் மூழ்கியவளாயிருக்கும் சிதைக்குக் கருவிகளோடு கூடாது அவ்வாறு தனித்துச்சும்மா இருக்கும் ஆன்மாவை உவமையாக்கிக் கூறுகின்றார். அங்ஙனமாயின் சிதையின் இந்த நிலையையே மெய்யறிவின் நிலையாகக் கொள்ளக் கூடாதோவெனின் கூடாது. ஏனெனில் இங்கு சிதையின் கரணம் முதலியன அசைவற்றிருப்பதற்கு முன்னிலைச் சுட்டே காரணமாகையாலும், அம்முன்னிலை நீங்கிய விடத்து அத்தன்மை நிலைபெறாதாகையினாலும், அதனை மெய்யறிவாகக் கொள்ளுதல் சாலாதாம். இச்செய்யுளை,

> திங்களும் பெருத்திற் றாங்கி ஈயின்றி யிருந்த தீந்தேன்
> ஆங்கணற் பருகி யிட்டு நலனுணப் பட்ட நம்பி
> பூங்குழல் மகளிர் முன்னம் புலம்பல் நீநெஞ்சே யென்றாள்
> வீங்கிய காமம் வென்றார் விளைத்த இன்பத்தோடொப்பாள்

என்ற சிந்தாமணிச் செய்யுளோடு ஒப்பிட்டு நோக்குக.

அன்பர்காள்! இதுகாறும், கம்பர் உவமக்கவின் என்னும் இத்தலைப்பின் கீழ், உவமம் என்பதுபற்றிச் சிறிதுகூறி, கம்பர் ஒரே உவமையைப் பொருளுக்கேற்பப் பல்வேறிடங்களிலும் எடுத்தாண்டிருப்பதற்கும், ஒரு பொருளுக்கு ஒரே உவமையை அப்பொருள் வருமிடந்தோறும் ஞாபகப்படுத்திக் கூறியுள்ளதற்கும், ஒரே பொருளுக்கு இரண்டும் பலவுமான உவமைகள் கூறியிருப்பதற்கும், இயற்கைத் தோற்றங்களுக்குக் கூறியுள்ள உவமங்கட்கும், இவற்றை இடத்திற் கேற்றவாறு உவமை

களாக்கிக் கூறியுள்ளதற்கும், ஓரிடத்துக் கூறிய உவமையைப் பின்னோரிடத்து விளக்கிக் காட்டியிருத்தற்கும் இடத்திற்கேற்ற வாறு உவமை கூறியிருத்தற்கும், இவ்வாறே மற்றும் பல்லாற் ருற்கூறியுள்ள உவமைகட்கும் உதாரணமாக, சிற்சில செய்யுட் களை எடுத்துக் காட்டினேன். பல்லாயிரக் கணக்கான செய்யுட் களில், சில நூறு செய்யுட்களை பொழித்தொழிந்தனவெல்லாம், உவமை யழகோடு விளங்கும். கம்பராற்செய்யப்பெற்ற இராமா யணம் போன்ற, ஒரு பெருங்காவியத்திலுள்ள, உவமை நயங் களையெல்லாம் எடுத்துக் கூறப்புகின் மிக விரியுமாகலான் இக் கட்டுரையை இத்தோடு முடித்துக் கொள்ளுகின்றேன்.

தஞ்சை—திருச்சிஜில்லா

தமிழர் மகாநாடு, துறையூர்

இம்மகாநாட்டினைக் கூட்டி தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு இன்றியமையாத வழிதுறைகளைக் கண்டு தமிழர் முன்னேற்றத் திற்கு அடிகோல வேண்டுமெனவும், இம்முயற்சி முட்டின்றி முடிதற்கு எளியேனது உதவியும் வேண்டற்பாலதெனவும் இங் குள்ள தமிழன்பர் சிலர் என்னிடம் தெரிவித்தனர். இச்செய்தி பெருவியப்பையும் மலைப்பையும் விளைத்ததெனினும், தாய் மொழியின் ஆக்கத்தினை வளர்த்து நாட்டின் நலத்தைப் பெருக்கவல்லதாகிய தொண்டு என்மனத்திற்கினியதொன்ருகை யால், இவ்வருட் பணியைச் செவ்வனே புரிதற்கான செல்வம் கல்வி, ஆக்குந்திறன் ஆகிய சிறப்பியல்கள் என்னிடம் இல்லையே எனக்கருதவுமின்றி, இம்மகாநாட்டினைக் கூட்ட முயலும் உண்மையன்பர்களின் குழுவில் யானும் ஒருவனென விரைவிற் சேர்ந்து கொண்டேன்.

நாட்டின் நலங்கருதி உழைத்துவருஞ் சங்கங்கள் மிகப்பல. இச்சங்கங்கள் 'குருடர் யானைகண்ட' காட்சியைப்போலவே, நாட்டின் நலப்பாட்டில் ஒவ்வொரு பகுதியே சாலுமென நினைந்தும், பலதிறத்தனவாகிய மேம்பாட்டிற்கும் அடிப்படையான கலைநூற்புலமை, தூயசிந்தை, பரந்த உள்ளம், மனத்திண்மை, ஒப்புரவொழுகல், ஆக்குந்திறன், பொதுநலத்தொண்டு இன்னோரன்ன பெற்றிமைகள் மக்களிடை அமையாவழி தமது முயற்சிகள் பாழ்படுமென்பதை அறிந்துகொள்ளாதும், தமது எண்ணம் நிறைவேறாது தளர்வுற்றும், ஒருவரோடொருவர் மலைந்து கலாம் விளைத்தும் வருகின்றனர். அரசுரிமைகள் யாவையும் ஒருங்கே எய்தி சுய ஆட்சி புரிவதால் நாடு நலஞ் சிறக்குமெனும் கொள்கையை மேற்கொண்டு கிளர்ச்சிபுரிந்து வருஞ் சங்கங்கள் மிகப்பல. உழவுத்தொழில், கைத்தொழில், சிற்பம், ஓவியம், வாணிபம் ஆகிய பொருளாதாரங்களைச் செழுமையுறச்செய்து பொருள் வளத்தைப் பெருக்குவதால் நாடு நலமுறுமெனக் கருதி உழைத்துவருஞ் சங்கங்கள் மிகப்பல. நமது நாட்டிலுள்ள மக்கட் பகுதியினர் தாந்தாமும் உலகியல் நிலையில் உயர்தரம் எய்தமுயலுவதால், இந்தியரெனும் மக்கட்டொகுதியின் ஒவ்வொரு பகுதியினரும் செம்மையுற்று, இந்திய சமூகமும், அதனையே அங்கமாகக்கொண்ட இந்திய நாடும் முன்னேறுமெனக்கருதி முயன்றுவரும் வகுப்புச் சங்கங்கள் மிகப்பல. இவையேயன்றி மக்களின் மனநலங்களைத் தூய்மையாக்கி மனித வாழ்க்கையைச் செழுமையுறச் செய்வதால் நாடு நலம்பெறும் என உழைத்துவரும் சமயச் சங்கங்களும் சமய சமூகங்களின் சீர்திருத்தச் சங்கங்களும் எண்ணிறந்தன, இன்னனைய சங்கங்களில் தலைவராயும், உறுப்பினராயும். தொண்டர்களாயும் இருந்து பணியாற்றுபவர் எண்ணிறந்தவர்; இவர்கள் மிக்க அறிவும், ஆற்றலும், உலைவிலா உழைப்புங் கொண்டவரென்றாலும் அன்னார் அளவிறந்த இன்னல்கட்கிடையே அகப்பட்டு அவமே துன்புறுகின்றனரன்றி அவர் தஞ்சிறந்த நோக்கங்கள் நிறைவேறியதைக்கண்டோமில்லை. இச்சங்கங்களின் நோக்கங்கள் மிகச்சீரியனவாயிருந்தும், நாட்டின் நலத்தையே நாடுவனவாயிருந்தும், தத்தம் கொள்கைகளையே

நாட்டப் புகுந்த மக்களிடைப் பிளவுகள் மிகுந்து வருகின்றன. பல கொள்கையினரும் வேற்றுமைகளை மறந்து தாய்மொழி வளர்த்தல் என்ற சிறந்த நோக்கத்துடன் ஒருமித்து அதற் காவன புரிதலால் தமக்குள் ஒற்றுமை, கல்வி, அறிவு, ஆற்றல் முதலியன வளரவும், பிறர் கொள்கையின் மேம்பாடுகளை அறியவும், அனைவரும் ஏற்கும் முறையில் ஒருங்கே தொண் டாற்றவும் வழிதிறக்கவல்ல இம்முத்திறத்தனவாகிய மகாநாடு கள் மிகவும் வேண்டப்படுவனவாகும்.

பண்டைக்காலம் முதல் நாகரிகத்தின் உயரிய நிலையை அடைந்த தேசங்களின் சரித நூல்களை நன்கு ஆராய்ந்தவர், மொழிமதுகையில் தலைசிறந்தகாலை நாடுகள் உயர்நிலையெய்தவும், மொழிவலம் குன்றியகாலை நாடுகள் கீழ்நிலையெய்தவும் காண்பர். பாபிலோனியர், எகுபதியர், ஈபரூவர், யவனர், உரோமர் ஆதிய மக்களின் தலையெடுப்பும், வீழ்ச்சியும் இவ்வுண்மையினை நன்கு தெரிக்கும். இற்றை நாளிலும் எழுத்து வழக்கற்ற மக்கள் நாகரிகத்தின் கீழ்தரத்தில் தாழ்வுற்றிருப்பதும்மொழிவலத்தில் உயர உயர நாகரிகத்தின் மேற்றரத்தில் உயர்வதும் கண்கூடு. கலைநூற்புலமையில் மிகச்சிறந்தவர் உவந்தளிக்கும் வாழ்வன்றோ அரசரின் கொற்றம்! நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களையும் அவற்றோடு தொடர்புற்றிருக்கும் பல திறத்தனவாகிய சக்திகளையும் நமக்கு அடிமையாக்கி நமது குற்றேவல்களைப்புரியச்செய்வதுபுலமைமிக்கோரதுசெயலன்றி வேறென்ன? கலைவாணரது பெருந்துணையால் நாடுநகரங்களை வென்று பொருளின் பெருவளங்களைக் கொள்ளும் பேரரசர், தமக்கு வாழ்வளித்த புலமை மிக்கோரை நன்மதிப்புடன் பேணமறந்து சின்னீரவாகிய புலனுகர்ச்சியில் மூழ்குங்காலை மதுகையிழந்து, நாட்டின் நலனிழந்து நாகரிக நிலையில் தாழ் வடைகின்றனர். 'புத்திமான் பலவான்' என்பது முதுமொழி யன்றோ? உலகெல்லாம் இருள் நிறைந்து, அதில் வாழும் மனித ரனைவரும் விலங்குகளேபோல் திரிந்த பண்டைக்காலத்தே தமிழ் மக்கள் நாகரிகத்தின் உன்னத நிலையை அடைந்தவராய், தமிழ் நாட்டு மூவேந்தரும் இமயத்தில் தமது இலச்சினையை நாட்டிய

கொற்றம் மிக்கவராய், தென்குமரியொடு வடவிமயம் ஒரு மொழி வைத்துலகாண்ட வியத்தகும் வீரராய், தெய்வப்புலவர்களுடன் தோழமை கொண்டு அன்னார் நன்மதிப்பைப் பெறுவதே தமது வாழ்க்கையின் விழுப்பயன் என்னும் கொள்கையினராய் இருந்து அரசு புரிந்தது உலகறிந்த உண்மை. தமிழர்கள் வாணிபத்தில் தலைசிறந்து விளங்கினர். பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும் இயற்றிய பாலாவியன்ன மெல்லிய ஆடைகள் பொன், முத்து, பவளம், அகில், சந்தனம், தோகை, தந்தம் ஆகியவற்றை கப்பல் வழியாலும், நிலத்தின் பெருவழியாலும் அராபியா, எகுபதிநாடு, பாரசீகம், மெசபடோமியா, பலஸ்தீன் கிரேக்கநாடு, உரோமாபுரி ஆகிய தூரதேசங்களுக்கெல்லாம் தமிழ்நாட்டு மிகுவளங்களைக்கொண்டு போய் வர்த்தகம் புரிந்திருக்கின்றனர். சிற்பம், ஓவியம் ஆதிய அருங்கலைகள் அறுபத்து நான்கினும் தமிழர் சிறந்த புலமை மிக்கோர் என தஞ்சை இராசராசேச்சுரம், சித்தன்னவாசல் சித்திரம், காவிரியணை என்பன போன்ற செயற்கரிய சிற்பங்கள் சான்றுபகரும் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூலையும், திருக்குறள் போன்ற அறநூலையும், சிலப்பதிகாரம் போன்ற இயல் இசை நாடக நூலையும், அகப்பொருள் புறப்பொருள்களின் இலக்கிய நூல்களையும் இயற்றிய எண்ணிறந்த புலவர்களையும் கொண்டநாடு நில உலகில் தமிழ் நாடொழிந்த எங்கேனும் உண்டா? அற்றைநாளில் சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், நிலக்கிழவர்கள், அமைச்சர்கள், வாணிபர்கள், மருத்துவர்கள், பெண்மக்கள் ஆதிய அனைவரும் மாண்புமிக்க புலவர்களாய் இருந்தனர். தமிழ்நாடு கலைமலிந்த நாடாக விளங்கிற்று. அரசரும் குடிகளும் கல்வியே கருத்தனமெனவும், அதனைத்தேடுவதே தமது வாழ்க்கைப்பயன் எனவும் நினைத்து தமிழ்க்கலைகளைப் போற்றி வந்தனர். அதுகாறும் அவர்கள் வெற்றிக்கு வீழ்ச்சியேயில்லை. கலைத்திறன் சுருங்கச் சுருங்க கல்லாபாக்களுக்கு அடிமைப்பட்டு, தமிழர் தம்நாகரிகத்தின் தனிச்சிறப்புகளை மறந்து பிறமொழியாளரின் இழிதகவான கொள்கைகளை மேற்கொண்டு,

அடிமை வாழ்வில் அகப்பட்டு மீளும்வகை தெரியாது திகைத்து நிற்கின்றனர். நமது பிறவிப் பிணிகளாய் நம்மைப் பிணித்திருக்கும் சில ஆரியக் கொள்கைகளினின்றும் நாம் விடுதலை பெற்றாலன்றி நமது நாடு விடுதலையடையாது, என்பது ஒருதலை. பண்டைத் தமிழரின் நாகரிகச் சிறப்பினை நாம் உணர்ந்து கோடற்கு இன்றியமையாத சாதனங்களாயிருப்பன தமிழ் நூற்களே யாதலால் அவற்றையும், இற்றைநாளில் மேம்பாடடைந்துவரும் பிறநாட்டினரின் கலைத்திறன் முதலியவற்றையும் ஒருங்கே நன்கு கற்றுத் தெளிவடைந்தால் எல்லாவகையிலும் நாம் முன்னேற்றம் அடைதல் கூடும்.

ஆதலால் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கெனத் தொண்டுபுரியும் மூதறிஞர்கள், கல்வி வளர்ச்சியே பல்வகை முன்னேற்றத்திற்கும் அடிப்படை என்பதை நன்குணர்ந்தனர். ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்டகாலமாக பல்கலைக்கழகங்களை நிறுவியும், கோடிக் கணக்கான தொகைகளைச் செலவிட்டும், அக்கழகங்களுக்குரிய கலாசாலைகளில் பயின்றுதேறும் மாணவர்க்குப் பட்டங்களையும் பதவிகளையும் வழங்கியும், ஆங்கிலநூல் கணிதநூல், சரிதநூல், தத்துவநூல், இரசாயனநூல், பூதநூல், இயற்கைநூல், அறநூல், சிற்பநூல், மருத்துவநூல் இன்னோரன்ன கலைகளின் நுண்மாண் பொருள்களைக் கற்றுவல்ல இளைஞர்களை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் தயாரித்து விடுகின்றனர். இன்னனம் தேறிவரும் மாணவர்களால் நாடு எத்துணை மேம்பாடைந்திருக்கிறதெனச் சிந்தித்துத் தெளிவடைதல் அறிவுடையோர் கடனாகின்றது. இப்பட்டதாரிகள், தாம் அரிதிற்கற்ற கலைத்திறனை வயிறு வளர்ப்பதற்கான பதவிகளைத் தேடுதற்குரிய கருவிகளாக மதித்தார்களே யன்றி, அக்கலையறிவுகளைப் பிற்றைநாளில் வளர்க்கவோ, ஆங்கிலமறியாத கோடிக்கனக்கான மக்களுக்குப் பயன்படும் வழியில் போதிக்கவோ, நாட்டின் வளம் பெருகுதற்கான தொழில் முறைகளில் மேனாட்டுக் கலைவாணரைப்போல் பயன்படுத்தவோ முயன்றார்களில்லை. பல்லாண்டுகள் முயன்று தாம் கற்ற கலையுணர்வுகளை

காலடைவில் முற்றும் மறந்து அவை சிறிதுமே பெறாத மாந்தர்களைப்போல் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். தாம்பெரிய கலைவாணர்களெனவும், சிறந்த பட்டதாரிகளெனவும், இறுமாந்து தமது நாட்டினர், உற்றார், உறவினர் ஆகிய மக்களது நடை, உடை, ஒழுகலாறுகளை அவமதித்து அவர்களுடன் தோழமை கொள்ளாதும், அன்னார் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறப்புறுமாறு சமூகத் தொண்டுகளைப் புரியாதும், தனித்த சாதியினராகப் பிரிந்து “நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாது” இருந்து வருகின்றனர். அன்றியும் அரசியலார் வழங்கிவரும் உயர் பதவிகளைப் பெறவேண்டுமென்ற வேட்கையால் விழுங்கப்பட்டு, நாட்டு மொழிகளையும், நமது மூதறிஞர்கள் எய்ப்பில் வைப்பென வைத்துப்போந்த தெய்வப்பனுவல்களையும் நன்குணராது வீணே வளர்ந்துவரும் பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களின் உறுப்பினராயும், கல்லூரித்தலைவர்களாகவும், கல்வித் தலைவர்களாகவும் பதவிகளைப் பெற்று நாட்டு மொழிகள் தலையெடுக்க வொண்ணாது சூழ்ந்து வரும் கேடுகட்கு அளவுதானும் உண்டோ? தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடைய ஒருசிலர் அதன் பொருட்டாகக் கொணருந் திட்டங்களை ஏற்காது, ‘தான்றேறான் தேற்றியுந்தேறான்’ என்ற கூற்றிற்கு இலக்கியமான இவ்வன்கண்ணார்கள் மறுப்புகள் கூறிக்கவிழ்த்து விடுகின்றனர். இத்தகைத் தீயபண்புகள் நிரம்பியோர் மிகுந்திருக்கும் பல்கலைக் கழகங்களிலாதல், கல்லூரிகளிலாதல் தாய்மொழிக்கல்வி போற்றி வளர்க்கப்படுமென எண்ணுதல் ஏழைமதியன்றோ?

தமது நாட்டு மக்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென விரும்புவோர், தமது நாட்டுமொழியில் கல்வி புகட்டுவதைவிட்டு, அன்னிய மொழியில் கற்பிக்க முயலும் பேதமை நாகரிக உலகத்தில் எங்கேனும் உண்டா? தொடக்கப் பள்ளிக்கூடங்கள், உயர்தரப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எனப் பலதிறத்தனவாகக் கல்வி நிலையங்களை நாடெங்கும் பரப்பி, விழலுக்கிறைத்த நீரெனவே கோடிக் கணக்கான தொகைகளைச் செலவிட்டு நூறாண்டுகளின் மேலதாக

முயன்றதன் பயன் என்ன? கையெழுத்தேனும் வரையவல்லவர்களையுள்ளிட்டு நமது நாட்டில் நூற்றுக்கு நால்வரே கற்றவருளரென மதிப்பிடப்படுகிறது. எஞ்சியுள்ள தொண்ணூற்றறுவரும் கைச்சாத்திடத்தானுங் கற்பதற்கு இன்னும் எத்துணை ஊழிகள் செல்லவேண்டும்? கலைகளில் வல்லராதற்கு அதனினும் மிக்க பலவூழிகள் செல்லவேண்டுமன்றோ? குருடரெனவும், கல்லாமாக்களெனவும், நாகரிக உலகத்தினரால் இகழப்பட்டு, நேற்றுவரை படுகுழியில் ஆழ்ந்து கிடந்த சப்பானியர் ஐம்பதாண்டுகளிற் குள்ளாக மேனாட்டினரும் திகைப்புறும் வண்ணம் மதிவலமும், படைவலமும், பொருள் வலமும், பெற்றுத்திகழ்வது, அவர் தம் நாட்டுமொழி அளித்த மதுகையன்றோ? தமது சுமைகளை எடுக்கவும், தாம் சவாரி செய்யவும் வேண்டி, குடித்தனக்காரர் தீனி வைத்தும் சேணமாதியவற்றால் ஒப்பனை செய்தும் வளர்த்துவரும் குதிரை முதலிய கால்நடைகளைப் போன்று, தமது ஏவல்வழி நின்று பணியாற்றுதற் பொருட்டு துரைத்தனத்தார் வழங்கும் பட்டம் பதவி முதலியவற்றால் அழகு செய்யப்பெற்ற பட்டதாரிகள், தமது உண்மை நிலையைச் செவ்விதின் உணராமலும், நாட்டின் நலத்தைச் சிறிதும் கருதாமலும் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த கருவி தாய்மொழி அன்றெனை அறியாது கூறிக் கேடு விளைக்கின்றனர். உலகவழக்கழிந்தொழிந்து சிதைந்தமையால் பிணமொழி (Classical language) எனக்கருதப்படும் மொழிகட்குத் தனிச்சிறப்பும் ஆதரவும்இடங்கள்தோறும்தேடுகின்றனர். இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம் ஆதிய பிரிவுகளில் தலைசிறந்த தமிழ் நூற்கள் பலவிருந்தும், சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் தலைவர்கள் தமிழ்க்கலைகளின் சிறப்பை நன்குணராமலோ, பிறமொழியின் மாட்டுத் தாம் தவறி வைத்திருக்கும் சார்பினாலோ, தமிழ் மாணவர்க்கு வித்துவான் என்ற ஒரு பட்டமே வழங்கவும், வடமொழியாளர்க்கு மட்டும் பல்வகையினவாகிய சிரோமணி, வித்துவான் பட்டங்களையும் வழங்கி வருகின்றனர். உயர்தனிச் செம்மொழிகளென அறிவுடையோர் போற்றும் சீரிய மொழிகளின் பெற்றிமைகளில் ஒன்றும் பொருந்தாத 'இந்தி' என்னும் மொழி

அரசியல் மேம்பாட்டிற்கு இன்றியமையாத சாதனமெனச் சாதிக்கின்றனர். பள்ளியிறுதி (S. S. L. C.) ஆகிய தேர்வுகளில் அம்மொழியைக் கட்டாய பாடம் ஆக்கவும் வேண்டுமென்கின்றனர். அம்மொழியின் வாழ்வு நேற்றையதெனவும், அது பயிலிடம் மிகச்சுருங்கியதெனவும், அரசியற் கிளர்ச்சியின் மேம்பரப்பில் நீர்க்குமிழிபோல் தோன்றி மறையுங்கொள்கைகளைப்போன்ற பெற்றிமையுடையதென்றும் நம்மவர் சிறிதும் சிந்திந்தாரில்லை. இவ்வாறாக ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆகிய பிறமொழிகளின் ஆக்கத்தைத் தேடுதலில் கருத்துடையராய், தாய்மொழி வளர்ச்சியில் கவலைகொள்ளாது அதனைப் புறக்கணித்துவரும் பட்டதாரிகள் நிறைந்துள்ள பல்கலைக் கழகங்களையும், கல்வி நிலையங்களையும் நம்பியிருத்தலில் பயனேதுமுண்டோ? பல்கலைக் கழகத்தினர் B.A. வகுப்பில் V-வது தமிழ்த் தொகுதியையும் B. A. தமிழ் Honours பட்டத் தேர்வையும் அனுமதித்திருந்தும், தமிழ் நாட்டிலுள்ள முதற்றரக் கல்லூரிகளில் எத்தனை கல்லூரிகள் இத்தேர்வுகட்கு வசதி தருகின்றன? சட்ட சபையிலுள்ள தமிழ்நாட்டு உறுப்பினரும், நமது மந்திரிமார்களும், ஆட்சித் தலைவர்களும் இக் கருமத்தில் தமது கருத்தைச் செலுத்துவராகில் தமிழ் நாட்டிலுள்ள அரசியலார் கல்லூரிகள் (Government Colleges) யாவற்றிலும் இத்தேர்வுகட்குரிய வசதிகள் மிக எளிதில் வாய்த்திருக்குமன்றோ? சென்னை நகரிலுள்ள பச்சையப்பன் ஆகிய முதற்றரக் கல்லூரிகள் யாவும் தமிழ் மொழிக்கு உயர்பதம் அளிக்காது அதனை புறக்கணித்திருப்பது தமிழ் நாட்டுத் தலைவர்களின் கவனத்திற்குரியதன்றோ? சென்னைப் பல்கலைக் கழகத்தார், கிழக்கேதேசமொழிகளின் பட்டத்தேர்வுகள் (Oriental titles Examinations) செய்து பட்டமளிக்க வசதிகள் அமைத்திருக்க வடமொழி பயில்வோர்க்கும் பதினெட்டு கலாசாலைகளும் தமிழ்மொழி பயில்வோர்க்குத் திருவையாற்று அரசர் கல்லூரி ஒன்றிலும் ஓர் ஒதுக்கிடம் வாய்த்திருப்பதன் காரணம் யாது? அன்றைமலைப் பல்கலைக் கழகத்தினர் இசைநாற்புலமையை வளர்த்தற்கு அண்மையில் விதிகளமைத்தனர். பொருளுணர்ச்சியில்லாத 'கிராமபோன்' போன்ற மனிதராகிய

இசைக்கருவிகளை இயற்றுவது அறிவுடைமை யாமோ? இதனை நன்குணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக் கலையாசிரியர்கள் ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, எனும் மூன்று மொழிகளிலும் சிறிதளவு பயிற்சியை மாணவர் பெற வேண்டுமெனக் கருதி பாடதிட்டங்களை யமைத்து தமிழை அறவே ஒதுக்கி விட்டனர். இது அறிவுடையோர் எள்ளி நகை யாடற் குரியதொரு செயலல்லவா? பண்சுமந்த பாடல்கள் எனவும், தெய்வத்தமிழ்ப் பனுவல்கள் எனவும், தமிழ்நாடுபோற்றும் தேவார திருவாசகங்களையும் திவ்வியப்பிரபந்தங்களையும், திருப்புகழ் திருவருட்பா ஆகிய இசை நூல்களையும் அவமதித்து ஒதுக்கிய வன்கண்ணர்களை இசை ஆசிரியர்களாய் அமர்த்திய அப்பல்கலைக்கழகம் தமிழ் நாட்டின் நன்மதிப்பை எங்ஙனம் பெறுதல் கூடும்? தேவாரத் திருப்பாடல்களாலும், திவ்வியப் பிரபந்தங்களாலும் பல்லாயிர ஆண்டுகளாக உயிர்பெற்று விளங்கும் திருக்கோயில்களைப் புதுக்குந் திருவினர்கள் அத் திருக்கோயில்களுக்கு உயிரும் வாழ்வும் ஒருங்கே அளித்த தெய்வப் பனுவல்கள் அங்கு வீறுடன் வழங்குதற்கு வசதிகள் செய்ய நினையாது, தன்னலமே கருதும் தீத்திறத்தாரது பொய்யுரைகளில் மயங்கி, கனஞ்சடையென்றுருவேற்றிக் கண் மூடிக் கதறும் வேதக்கிடைகளை நிறுவுதற்கு முற்படும் ஏழைமைக்கு என்னென் றிரங்குவேம்! இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்குவோர், இதுபோது தமிழர் விழிப்புடையராயில்லை யெனவும், நாட்டிற்கும் நமக்கும் நலந்தரவல்ல கருமங்களைச் சூழ்ந்து முடிக்காது உயர்பதங்களிலுள்ள தன்னலம் பெருக்கும் வன்கண்ணர்களின் பொய்யுரைக்கு அடிமைப்பட்டு நாட்டின் நலங்களை வீணே கெடுக்கின்றனர் எனவும், தெற்றெனத் தெளிவர்.

சிலகாலமாக, கரந்தைத் தமிழ்ச் சங்கமும், பிற தமிழ்ச் சங்கங்களும் இயற்றிவரும் கிளர்ச்சிகளின் பயனால், கலைநூற்களை மாணவர்கள் எளிதிற் கற்றுத் தெளிவு பெறுதற்குரிய கருவி ஆங்கிலமல்லவெனவும், சிறந்த கருத்துக்களை அறிதற்கென ஆங்கிலமொழியைக் கற்பதற்கே பதினன்கு ஆண்டுகள் வரை

முயலுதல் பயனற்ற முயற்சியெனவும், தாய்மொழியே கல்விக்கு ஏற்ற கருவியெனவும் தமிழ் நாட்டுக் கலைவாணர்கள் மனங் கொண்டனர். சிற்சில ஆசிரியக் கழகங்களிலும் (Teachers Guilds) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இத்தகைய முடிபுகள் நிறைவேறுகின்றன. பள்ளியிறுதித் தேர்வில் (S. S. L. C. Examination) ஆங்கிலமொழிந்த கலைகள் பற்றிய வினாக்களுக்குத் தத்தம் தாய்மொழியிலே மாணவர்கள் விடை பகரலாமெனும் உரிமையை அரசியலார் வழங்கியுமிருக்கின்றனர். என்றாலும், இத்திருத்திய முறையானது ஏன் ஆட்சிக்கு வரவில்லை என்று கூர்ந்து நோக்குங்கள். உயர்தரக் கலாசாலைகளைப் (High Schools) புரந்துவரும் தலைவர்களும், நாட்டுக் கழகங்களும் (District Boards) நகரக் கழகங்களும் (Municipalities) பட்டங்கள் பெற்ற கலாசாலை ஆசிரியர்களும் தாய்மொழிப்பற்று சிறிதும் இல்லாதிருத்தலே காரணமென்பது விசிதமல்லவா? தாய் மொழியில் கலை நூற்களைக் கற்பித்தால் மாணவர்க்கு ஆங்கிலப் புலமை குன்றிவிடுமென்கின்றனர். இது, இக்கொள்கையினரின் திரிபுணர்ச்சியால் கண்ட முடிபேயன்றி, தமது அநுபவத்தால் அறிந்த உண்மையல்ல. தஞ்சாவூர் ஜில்லா, பாபநாசம் உயர்தரக் கலாசாலையில் தலைமை ஆசிரியராயிருந்த காலத்தும், இதுபோது பூளேபேட்டு உயர்தரக்கலாசாலையின் தலைமை ஆசிரியராயிருக்கும் போதும், தமிழ்மொழியில் மாணவர்க்குக் கலையுணர்வு தந்துவரும் திருவாளர் R. சீனிவாசய்யங்கார் அவர்கள் B. A., L. T., இம்முறையைக் கையாளுவதால் மாணவர்களில் பெரும்பான்மையோர் தேர்வுகளில் வெற்றியடைகின்றனர் எனவும், ஆங்கிலத்தில் திறமை எய்தி உயர்ந்த எண்கள் (Marks) பெறுகின்றனர் எனவும் சான்று பகர்கின்றனர். (see Hindu Literary Supplement dated 18-7-32) திருச்சிராப்பள்ளித் தேசியக்கல்லூரியின் தலைவர் திரு. V. சாரநாதய்யங்கார் அவர்கள் M A. சென்னைப்பல்கலைக் கழகத்தின் சார்பில் திரு. இராவ்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை M. A. B. L. அவர்களின் தலைமையில் 'இந்திய நாட்டுப் பல்கலைக் கழகத்தின்வேலை' என்பது பொருளாகப் பேசியஞான்று தாய்மொழியைப்போற்ற வேண்டியது இன்றியமையாததெனெ விளக்கியதுடன் கலைநூற்

களைக் கற்பதற்குத் தாய்மொழியே சாலச் சிறந்ததெனவும் மொழிந்தனர். இசுலாமியா பல்கலைக் கழகத்தினர் தோற்றிய காலம் முதல் அருங்கலை யனைத்தையும் நாட்டுமொழியாகிய 'உருது' வில் மாணவர்க்குப் போதிக்கும் தனிச் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றனர். தாய்மொழிப் பயிற்சியால் ஆங்கில மொழித்திறன் குன்றிவிடுமென்பது தவறுபட்ட கொள்கை என்பது வெளிப்படை. மற்றொரு சாரார் கலைநூற்களைப் போதிப்பதற்கு தாய்மொழியில் எழுதிய கருவி நூற்கள் இல்லையெனவும், அறிவு நூற்பொருள்களை செவ்வனே உணர்த்தவல்ல மரபுச்சொற்கள் (Technical words) இல்லையெனவும், வாய்பாடுகள் (Formulas) இல்லையெனவும் கூறுகின்றனர். இதுவும், நிரம்பிய அறிவு, ஆற்றல், முயற்சி முதலியன இல்லாத வெள்ளறிவினர் கூறும் தடையாகும். ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை மிக்க தமிழறிஞர் சிலரை ஒன்று சேர்த்து இன்றியமையாத பணவுதவிகளை அரசியலாரும் பல்கலைக் கழகத்தினரும் புரிந்தால் இக்குறைபாடு மிக எளிதில் அகன்று விடுமென்பதில் ஐயமேயில்லை. காலஞ்சென்ற திரு. பா. வே. மாணிக்கம் நாயகர் அவர்கள் வடிவு நூலில் (Geometry) பயின்றுவரும் மரபுச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களை மிகமிக எளிதிற் படைத்து விட்டனர். அத்திருவினரின் ஒப்புயர்வற்ற தமிழ்ப் புலமையினை தமிழர் பயன் படுத்திக் கொள்ளாத ஏழைமைதான் என்னே! என்னே!! இசுலாமியா பல்கலைக் கழகத்தினர் கலைநூற்களை உருதுமொழில் எழுதுவோர்க்குப் பரிசு வழங்குவல் என விளம்பரஞ்செய்து உயர்தரப் படிப்பிற்கான கலைநூற்களை எளிதாக அம்மொழியில் ஆக்கிக் கொண்டனர். இத்தகைய முயற்சி தமிழ் நாட்டில் இன்னே தொடங்கப் பெறுமெனின், பிற்றைநாளில் யாம் பெறும் தமிழ்ப் புலமையால் இக்கலைநூற்கள் தூய்மையாக்கப் படுமன்றோ? வடமொழியாரியம் வருமுன்னர், குமரி முதல் இமயம்வரை ஒருமொழி வைத்துலகாண்ட தமிழ் மூவேந்தர் காலத்து அறுபத்து நான்கு அருங்கலைகளும் தமிழில் மலிந்திருந்த நாட்டில், கருத்துரைக்க மொழியில்லையென ஏக்கற்று நிற்பது இக்கூற்றைப்பகருவோரது வெள்ளறிவினை வெளியாக்குகின்றது. வங்காளம், பம்பாய்

மாகாணங்களிலுள்ள ஆங்கிலப் பட்டதாரிகள் கலை நூற்களிலும் ஆங்கிலத்திலும் புலமையெய்தியிருந்தும் தத்தம் தாய்மொழியிலும் தாய் நாட்டிலும் தமது பழக்கவழக்கங்களிலும் பெரிதும் பற்றுடையரா யிருக்கின்றனர்; தமிழ் நாட்டுப் பட்டதாரிகளோ இத்தகைய சிறப்புகள் உடையரெனப் புகழ்தற்கில்லை.

இக்கூறியவற்றால் தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் கல்வித் தலைவர்களும், தமிழ் வளர்ச்சிக்குரியவற்றை இதுகாறும் செய்திலரெனவும், இதுபோது கையாளப்பட்டுவரும் கல்வி முறையில் தமிழ் மாட்சியினை ஆங்கிலங் கற்போர் அறிந்து கொள்ளாதவாறு கற்பிக்கப்படுகிறதெனவும், ஆங்கில வாயிலாகக் கல்வி கற்பிக்கப்படுவதால் பல்கலைக் கழகத் தேர்வுகளில் பட்டம் பெற்று வெளிவருபவர் மனப்பண்புகள் (Culture) அடையாதவராய், கல்வி வளர்ச்சியில் கருத்தற்றவராய், நாட்டின் நலத்திற்கு உழைக்காதவராய், அடிமை வாழ்வையே நாடுபவராய், பழந்தமிழ்நாகரிகத்தினை சிறிதும் உணராதவராய் வீணே கழிகின்றனர் எனவும் இம்முறையை நூற்றாண்டுகளாகக் கையாண்டதில் எய்திய பயன் யாது மில்லையெனவும், தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடையவர்கள் ஆங்கிலமாதிய பிறமொழிகளை வளர்த்தலே கருமம் என்றிருக்கும் கல்வி நிலையங்களையும், கல்வித் தலைவர்களையும் நம்பியிருத்தல் தவறெனவும் கண்டாம்.

முன்னேற்றம் பெறுதற்கு முயலும் மனிதர்கள் கலைத் திறன், நுண்ணறிவு, உடல்வலம், பொருள்வளம், அரசுரிமை ஆகிய இவற்றையே விரும்புகின்றனர். இவைமட்டும் வாய்த்தால் மனஅமைதியும், இன்பவாழ்வும் மனிதர் பெறுதல்கூடுமா? இக்கூறியனவெல்லாம் அளவிலவாகப் பெற்றிருக்கும் அமெரிக்கரும் ஐரோப்பியரும் மன அமைதியுடன் சுகமே வாழ்கின்றனரா? சுய ஆட்சிபெற்ற ஒவ்வொரு நாட்டிலும் குழப்பம்; வாணிபமும் செல்வமும் மிகஇருந்தும் வறுமை; படைத்திறனும் அதிகாரமும் அளவிலவாகப் பெற்றும் அயராக்கவலை; கிறித்து நாதரின் மெய்யுரைகளை தாம் கைக்கொள்ளும் வேதமெனப் பெருமிதம்பேசி, மக்களையும் நாடுகளையும், பிறர் உரிமைகளையும்

தாந்தாமும் அடிப்படுத்த வேண்டுமெனுங் கருத்தினால் செய்து வரும்பொறாமை, வஞ்சனை, சூழ்ச்சி, தீச்செயல் ஆகிய கொடுமைகட்கு ஓர் எல்லைதானும் இல்லை. குரூகர் என்னும் துரைமகனும் ஈன்சதீன் என்னும் துரைமகனும் வாணிபத்துறையில் கோடிக்கணக்கான பொருளை ஈட்டினவர்; இகத்தில் பெறற் கரும் பேறுகள் அனைத்தையும் பெற்றிருந்தும், உயர்ந்த குறிக்கோள் யாதுமின்றி, உண்ணுவது முறங்குவதுமாகிய வாழ்க்கையில் இன்பநிலை காணாது உவர்த்து, அவமே தமது உயிரை மாய்த்துக் கொண்டனர். மேனாட்டினர், நாகரிகத்தின் உயர்நிலையை அடைந்தவர் எனும் மயக்க உணர்ச்சியால் அன்னாரின் ஒழுகலாறுகளையும் மனப்பான்மைகளையும் நம்மவரிற் பலர் கைக்கொள்ளுகின்றனர். 'நாளையே கூற்றுவன் வருவான்; இன்றே உண்டு களியுங்கள்' என்ற கொள்கையால் ஆடவர் பெண்டிர் எனப் படுவோர், தமது பழங்குடி மரபுகளை ஓம்பாது களியாட்டயர்தலே நோக்கமாகத் தமது மனிதத் தன்மைகளை நாடோறும் இழந்து வருவதைக் கண்டு மேனாட்டு மூதறிஞர்கள் மிகவும் கவல்கின்றனர். வெளிமயக்குகளால் ஏமாற்றமடைந்து மேனாட்டினரின் சீர்கெட்ட கொள்கைகளும் ஒழுகலாறுகளுமே நாகரிகமெனக்கொண்டு அவற்றையெல்லாம் பண்ணடைகளைப் போல் கைக்கொள்ளமுயலும் நம்மவரின் ஏழைமைக்கு மிகவும் இரங்குகின்றேம். குடித்தனங்கள் மனைமாட்சியற்று மாய்ந்துபோகவிட்டு, துரைத்தனத்தைச் செப்பனிடுவது அறிவுடைமையோ? உலகியல் நெறியில் உயர்நிலை எய்தியுள்ள மேனாட்டினரின் வாழ்க்கை நாகரிகமல்லவெனின், நாகரிகமென்பது தான் என்ன? நாகரிகம்என்பதற்கு நகரத்தனம்(Civilization)என்பதுமேனாட்டினரின் விடை. வறுமை, பிணி, படிற்றொழுக்கம் ஆதியன நகரங்களில் மலிந்திருக்கின்றன. இங்கு கலையறிவுமிருந்தும், நடையுடை பாவனையாகிய வெளித்தோற்றங்கள் மாறியும் காணப்படுகின்றன. நாகரிகத்தின் பண்புகள் இவைதாமோ? ஆமெனின், இவை வேண்டப்படுவனவா? என்பது அறிவுடையோர் ஆராய்ச்சிக்குரியது. நாகரிகம்என்ற சொல்லே, வடமொழி நூல்களில் பயிலப்பட வில்லையெனவும், இதன் அடிச்சொல் (Rootword)

யாதெனவும், இம்மொழி ஆக்கத்தின் விதியாதொன்றாய். உசாவி, நாகரிகம் என்பது வடமொழியாளர் அறியாததொன்றெனவுந் தெரிந்துகொண்டேன். இவ்வனமாக மேனாட்டுக் கலைவாணராலும், வடமொழியாளராலும் உரைதானும் காணலாகாத நாகரிகம் என்னும் பதத்தினை தெய்வப் புலவராகிய திருவள்ளுவராதியோர் கண்ணோட்டம், இரக்கம் என்றபொருளில் வழங்கினர். பெறற்கரும் பேறுகளையெல்லாம் ஒருங்கே பெற்றானெனினும் இரக்கமொன்றில்லையேல் அவனை நாகரிகன் எனத் தமிழறிஞர் மதியார். தம்மவர், வறுமையாலும், பிணியாலும் அறியாமையாலும் தம்மருகே இடரும் இன்னலுமுற்று வருந்த, தாம்மட்டும் உண்டு களித்திருப்பது மனிதத்தனம் அல்லவென்பதைக் கடைப்பிடித்து "யான்பெற்ற இன்பம் பெறுக யிவ்வையகம்" எனத் தமிழ்மறை, அறுதியிட்டது. பிறப்பினால் ஒருவற்கு உயர்வு தாழ்வுகள் வாய்ப்பதே முறை என்னுங்கொள்கை தமிழ்நாட்டில் நுழையத் தலைப்பட்டதும், 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' 'சாதி யிரண்டொழிய வேறில்லை' 'ஒழுக்கம் உயர்குடி உய்க்கும்' 'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல்லர்' என்றெல்லாங்கூறி தமிழ்முதறிஞர் கடிந்திருக்கின்றனர். திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பெத்தான் சாம்பான் ஆதியவர்களின் உண்மை வரலாறுகளினின்றும் நாம் அறியத்தகும் படிப்பினையாது. சைவ வைணவத் தலைவர்கள் தொண்டக் குலத்திற்சேர்ந்தவர்; பிறப்பினால் எந்த இனத்தவராயினும்,

"எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ்சாதனமுங்
கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது உவந்தடிமைத் திறநினைந்
தங்குவந்து நோக்கி
யிவர் தேவரவர் தேவரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்
தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார்" என்றவாறெல்லாம் பாராட்டி
ஒழுகினர்,

மறையவர் குலத்திற்றோன்றிய அழலோம்பும் அப்பூதியடிகள் அப்பமூர்த்திகளைத் தனது தியானப் பொருளாகவும் வழிபடு கடவுளாகவுங்கொண்டு உய்தி பெற்றனர். திராவிட சிசுவென சங்கரரால் புகழப் பெற்ற திருஞான சம்பந்தர் திருப் பாணாழ்வாருடன் தோழமை கொண்டும் திருநாவுக்கரசரைத் தமது ஞானத் தந்தையே எனவும் போற்றி வாழ்ந்தனர். மணிவாசகப்பெருமானும் பிறப்பினால் உயர்வு பேசும் கொள்கை யினரை "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத்தடுமாறும் ஏதமிலி" எனக் கடிந்திருக்கின்றனர். பிறப்பால் உயர்வு தேடும் பெற்றியினர், தமது வெளிப்பூச்சும் தாழ்வடமுமே சிறந்த ஆசாரமெனக் கருதி ஏனையோரைத் தாழ்வு செய்கின்ற னர். தமிழர் மதிக்கும் ஆசாரம் இதுவல்ல.

"நன்றி யறிதல், பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ
டொப்புரவாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசாரவித்து.

என்பதே பழந்தமிழ் மக்கள் பாராட்டி வளர்த்த ஆசாரம். தமிழ்ப் பெருங்குடி மக்களாயினோர் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத் தமியர் உண்டலுமிலர்; பிறரஞ்சுவ தஞ்சிப் புகழெனி னுயிருங் கொடுக்குவர்; பழியெனி னுலகுடன் பெறினுங்கொள்ளார் தமக்கெனமுயலா நோன்றாட் பிறர்க் கென முயலுநர்! இச்சீரிய கொள்கைகளைப் பின்பற்றிய ஒழுக் கமே தமிழர் நாகரிகம். கல்விச்செல்வம், பொருட்செல்வம் ஆகிய இரண்டு செல்வங்களையும் ஒருங்கே பெற்றாலும், அரசியல் உரிமைகள் அனைத்தையும் அடைந்தாலும் இக்கூறிய நாகரிகப் பண்புகள் மனிதர்மாட்டு அமையாவிடில் தாம் பெற்ற செல்வ மாதியவற்றால் தமக்கும் பிறர்க்கும் கேடுகள் விளையும் என்பது ஒருதலை. நாகரிகத்தின் உண்மைப் பண்புகளைத் தெரிந்து, அச் செந்நெறியில் ஒழுகி சிறந்த நிலையில் வாழ்க்கையை நடத்திய சீரியோரது வரலாறுகளைக் கற்றுணர்ந்து கோடற்கு

பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும் தமிழ்க்கலைகளும் தமிழ்க் கல்வியும் இன்றியமையாத சாதனங்கள்.

இனி, ஆங்கிலத்துறையில் நுழையாதிருந்துவரும் நமது தமிழ் நாட்டுத் தலைவர்கள் மொழி வளர்ச்சியின் பொருட்டு எவ்வகையானும் துணைபுரிகின்றனரா வென ஆராய்வோம். தமிழ் மூவேந்தரெனப் பாராட்டப்பெறும் அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு நெடுங்காலம்வரை, குறுநில மன்னர், நிலக்கிழவர், செல்வர் ஆகியபலரும், தமிழில் புலமை மிக்கோராய், காவிய நலங்களைத் தாமேகண்டு இன்புறும் பெற்றிமையுடையராய், புலமை மிக்கோரைத் தெய்வமே போல் போற்றும் பண்புடையராய் இருந்தமையால் நாடெங்கும் தமிழ்க் கல்வி பரவி, பல சிறந்தனவாகிய காவியங்கள் இயற்றப்பட்டு வந்தன. இற்றை நாளிலோ கல்வி கற்போரின் நோக்கம் மிகத் தாழ்ந்துவிட்டது. யாதேனுமொரு ஊழியஞ்செய்து ஊதியம் பெறுதற் பொருட்டே கல்வி கற்கப்படுகின்றது. அத்தகைய நோக்கமில்லாதவர் கல்வியை நாடுவதே யில்லை. நமக்குற்றதுணை கல்வியினுங்கில்லை என்ற சீரிய கொள்கையை அறவே மறந்துவிட்டனர். ஆதலால் பண்டைக் காலம்போல் அல்லாது, கல்விக்குரிய சாதனங்களான புத்தகங்கள் மலிந்திருந்தும், போதனாமுறை பயின்றுள்ள ஆசிரியர் மிக்கிருந்தும், கலாசாலைகள் ஊர்தொறும் நிறுவப்பெற்றிருந்தும், நாடெங்கும் கலைமலிவில்லை; கலைத்திறம் குன்றிவிட்டது; கல்விப்பொருளை இழந்து, அறியாமையில் மூழ்கி, நலந்தீங்கு தானும் தெரியாது அவலமுறும் நாடாகி விட்டது. இப்பொழுதுள்ள செல்வரிற் பெரும்பாலார் கல்வியைப் போற்றுவதில்லை. நூற்பயனை நன்குணர்ந்து தெவிட்டாத இன்பத்திற் திளைக்கும் திறனற்று, செவியிற் சுவையுணர்வற்று, சிற்றின்ப நுகர்ச்சியினை நாடும் வாயுணர்வின் மாக்களாய் விட்டனர். உலகியல் நிலையில் உயர் பதங்களை நாடி, கைப்பொருளை வரையாது வழங்கிப்பெறும் பதவிகளின் கடமைகளைத் தாமும் உணர்ந்து கொள்ளாமலும் நேரிய வழியில் முறைசெய்யாமலும் உலகின் நகைப்பொருளாய் வதிகின்றனர். நகரக் கழகங்களிலும் (Municipalities) ஊர்க் கழகங்களிலும் (Village Panchayats) கூற்றக் கழகங்களிலும் (Taluk Boards) நாட்டுக் கழகங்களிலும் (District Boards) நாட்டின் கல்விக்கழகங்களிலும் (DistrictEducationalCouncils) உறுப்பினராயும், தலைவராயும் அமர்பவர்கள் தமிழ்மொழிப்பற்றுடன் கல்வியை வளர்க்கும் கருத்துடையரானால் தொடக்கக்

கல்வியும் உடர்தரக்கல்வியும் எத்துணைத் திருத்தமுறும்? தமிழ் நாட்டினின்று சட்டசபைக்கு அனுப்பப்பெறும் உறுப்பினரும், நகரக்கழகங்களிலிருந்தும் நாட்டுக்கழகங்களிலிருந்தும் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பெறும் உறுப்பினரும் தமிழ்மொழியைப் போற்றுங் கருத்துடையராயின் தமிழ்மொழி எத்துணை ஆக்கம்பெறும்? இக் கூறிய கழகங்கட்கு மொழிப்பற்று சிறிதுமில்லாதவர்களும், பிறமொழிகளை வளர்க்கும் நோக்குடையார்களும் மிகுதியாக அனுப்பப்படுவதால் தமிழ்மொழி பாதுகாப்பும் போற்றுதலுமின்றித் தளர்வுறுகின்றது. கலைநூற்களிலும், ஆங்கிலத்திலும் புலமையுற்றோர்க்குத் தரப்படும் நன்மதிப்பும் உரிமைகளும் நாட்டுமொழிவல்லோர்க்கு வழங்கப் பெறுவதில்லை.

இன்னனைய குறைபாடுகளை நீக்கி தமிழ்மொழி ஆக்கம் பெறுதற்குரிய வழிகளைக் காணவும், அதற்கான துறைகளில் முயலவும் கருதியே தமிழன்பர்களாகிய உங்களை அறைகூவி அழைத்தோம். எங்கள் எளிய வேண்டுகோளைப் பொருட்படுத்தித் தத்தமக்குரிய அலுவல்களைவிட்டு தொலைவிலுள்ள இந்நகருக்கு எளிவந்தது, தமிழ்மொழியிடத்து நீங்கள் வைத்திருக்கும் உண்மைப்பற்றை விளக்குவதுடன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ள எம்மனோர்க்குப் பேரூக்கத்தையும் அளிக்கின்றது. இம்மகா நாட்டின் வரவேற்புத் தலைமையை யான் ஏற்க நேர்ந்ததே செல்வத்தின் ஆதரவு மிக்கில்லாது, ஊக்கமொன்றே பற்றுக்கோடாக இக்கூட்டம் நிகழ்கின்றதெனப் போதரும் ஆதலால் போக்குவரத்து வசதிகளிலும், இருக்கை உணவு முதலிய வசதிகளிலும் காணப்படும் குறைபாடுகளைத் தங்கள் பெருந்தகைமையால் பொறுத்தருளி, இம்மகாநாட்டின் சீரிய நோக்கங்களை நிறைவேற்றுதற்கான கருமங்களைக் கருத்துடன் திட்டஞ் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

தமிழர் மகாநாடு கூடுவதன் நோக்கம் யாதென இதுகாறுங் கூறியவற்றால் நாம் ஒருவாறு தெரிந்து கொண்டிருக்கிறோம். தமிழர் முன்னேற்றமே நமது முடிந்த நோக்கம் என்பதில் ஐயமில்லை. பற்பல துறைகளிலும் மக்கள் உயர் நிலையை எய்தினாலன்றி அவர்கள் முன்னேற்றம் அடைந்தவரெனக் கருதவொண்ணாது. இத்தகைய பரந்த நோக்கங்களுடன் கூடும் மகாநாடு சிலமணிநேரங்களில் எதனையும் முடிவுகட்ட முடியாது. ஆதலால் எல்லா வகையான முன்னேற்றங்கட்கும் அடிப்படை

யான ஒரு சிறிய பொருளையே ஆராயவும் திட்டஞ் செய்யவும் கூடியிருக்கின்றோம், என்பதை அன்பர்கள் நினைவில் அகலாது வைத்துக்கொள்ள வேண்டியது. நமது முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பன பலவென்றாலும் அவையனைத்தும் அறியாமை என்ற ஒன்றில் அடங்கிவிடும். அறியாமையாகிய இருளை நீக்குதற்குக் கல்வியாகிய விளக்கொளி ஒன்றே ஏற்றசாதனம். தமிழ் நாட்டில் கல்வி பரவுதற்கு தமிழ்க் கல்வியே ஒப்புயர்வற்ற கருவியாகும். தமிழ் நாட்டிலுள்ள மக்களனைவரும் தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் அவர்களைத் தமிழர் எனக் கூறுதற்கில்லை. தமிழ் மக்கள் அனைவருமே தமிழ் கற்றுப் புலமை மிக்கோராய் ஆய்விடின், நலந்தீங்குகளைத் தெரிந்து சிறிய நிலைமை எய்துவராதலின் இவ்வரும் பணியை இன்றே தொடங்கவேண்டுமெனக் கருதி இங்கு கூடியிருக்கின்றோம். தமிழ் நாடெங்கும் தமிழ்க் கல்வியைப் பரப்ப முயலுவதே நமது நோக்கமெனின் அதனை நிறைவேற்றுதற்குரிய முடிபுகளைச் செய்வதானால் நாம் அனைவரும் ஒத்த மனதுடன் தமிழ் மொழியின் ஆக்கத்தினை வளர்த்தற்குரிய முடிபுகளைச் செய்யவும் அவற்றின்வழித் தொண்டு புரியவும் கூடும். அதனேடமையாது இங்குள்ள ஒவ்வொருவரும் மொழி வளர்ச்சிக்கு நெருங்கிய தொடர்பில்லாத பல துறைகளில் இறங்கித் தத்தம் கொள்கைகளை நாட்டப்புகுவரேனில் குறுகிய காலத்தில் ஒரு முடிபையுங் காணாது பிளவுபட்டுச் சிதறுண்டு போக நேரும். ஆதலால் இம் மகாநாட்டின் நோக்கம் தமிழ்மொழி வளர்ச்சி என்பதையும் அதற்கான வழிதுறைகளைத் தேடி முடிப்பதே நமது கருமம் என்பதையும் இந்நோக்கத்துடன் நெருங்கிய இயைபில்லாத பொருள்கள் இம் மகாநாட்டினுக்கு ஏற்புடையனவல்ல என்பதனையும் அன்பர்கள் கருத்தில் வைப்பார்களாக.

தமிழ் வளர்ச்சி யொன்றே இம்மகாநாட்டின் நோக்கமெனின் தமிழ்ப் புலவர் மகாநாடும் தமிழ் மாணவர் மகாநாடும் அதனை நிறைவேற்றக் கூடுமே, தமிழர் மகாநாடு இயற்றத்தகும் கருமம் என்ன? தமிழரிற் பெரும்பான்மையோர் தமிழ்ப் புலவரும் அல்லர்; தமிழ் மாணவரும் அல்லர்; தமிழ்க் கலைகளைப் பரவச் செய்தற்கு தமிழ்ப் புலவரும் தமிழ் மாணவரும் இன்றியமையாத கருவிகள் என்றாலும், மொழிப்பற்றுடைய தமிழர்கள், பொருளையும், தமது செல்வாக்கையும் வரையாது கொடுத்து உதவினாலன்றி தமிழ்ப் புலவர்களும் மாணவர்களும் யாதும் செய்ய இயலாது. இம்முத்திறத்தினரும் ஒன்று

சேர்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய வழிகளில் தொண்டாற்ற வேண்டுமெனக் கருதியே மூன்று மகாநாடுகளும் கூட்டப்பெற்றிருக்கின்றன.

இம்மகாநாடுகளின் உண்மை நோக்கங்கள் யாதெனத் தெரியாதபடியால் மக்களின் சீர்திருத்தத்தில் கருத்துடைய நண்பர்கள் செய்தித் தாள்களிலும், துண்டுத் தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும் முடிபுகளை வெளியிட்டு வருவதைப் பார்த்தேன். மக்கள் நலமுற வேண்டும் என்னுங் கருத்துடன் இவ்வருந் தொண்டினை இவர்கள் மேற்கொண்டது நாம் பாராட்டத்தக்கதாகும். நாட்டிற்கு நலம் புரியவேண்டும் என்ற நன்னோக்கமே இவர்களைத் தூண்டுகின்றது. சமூகவாழ்வில் பல திறப்பட்ட சீர்திருத்தங்கள் இன்றியமையாது வேண்டப்படும். பழையனவெல்லாம் கழியற் பாலனவோ? புதியனவெல்லாம் கொள்ளற்பாலனவோ? என்பது அறிவுடையார் ஆராய்ந்து தெளிய வேண்டுவதாகும். இவர் கொள்கைகளில் சிலவற்றில் எனக்கு முரண்பட்ட கருத்தும் சிலவற்றில் உடன்பாடான கருத்தும் இருந்து வருகின்றன. உடன்படுவனவற்றிலும் சீர்திருத்தமுறுதற் பொருட்டுச் சூழும் முறைகளில் வேறுபாடும் உண்டு. ஆனால் இவைபற்றிய ஆராய்ச்சிகள் இக்கூட்டத்தில் கருதக்கூடியனவல்லவாதலால் அவை குறித்து யாதும் பேசாதொழிகின்றேன்.

தமிழ்மொழி ஆக்கம் பெறுதற்பொருட்டு கல்வி நிலையங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் தலைவராயும், பணியாளர்களாயும் அமர்பவர் மிகுந்த தமிழ்ப் பற்றுடையராயிருத்தல் இன்றியமையாததெனவும், இக் கல்வி நிலையங்கள் இயற்றத்தகும் தமிழ்ப்பணிகள் யாவையெனவும், தமிழ்நாட்டுத் தலைவர்கள் தமிழ்த்தொண்டு செவ்வனம் நடைபெறுதற்கான கருமங்களில் கருத்தூன்ற வேண்டுமெனவும் மேலே கூறியுள்ளோம். இக் கல்வி நிலையங்களையே நம்பியிருத்தல் சாலாது எனவும் கூறினேம். இனி அரசியலார் நடத்திவரும் கலாசாலைகளாலும், ஊர்க்கழகங்கள் (Local Boards) நடத்திவரும் கலாசாலைகளாலும், பல்கலைக் கழகங்களாலும் இயற்றத்தகும் தமிழ்த்தொண்டு மிகச் சுருங்கிய பயனை விளைக்குமேயன்றி, நாடெங்குமே தமிழ்க்கலை பரவுதற்கு உரிய வசதிகளை அளிக்க முடியாது என்பது ஒருதலை. தமிழ்ப் புரவலராயும், தமிழன்பராயும் உள்ள அனைவரும் ஒருங்குசேர்ந்து இம்மொழித் தொண்டினை

ஊக்கத்துடன் புரிய முற்படவேண்டும். தமிழன்பர்கள் தாந் தாமும் தனித்தனியே செய்பவல்ல சிலதொண்டுகள் உண்டு. அறிவுடையோர் போற்றும் தமிழ் நூற்களை ஒவ்வொருவரும் விலை கொடுத்து வாங்கித் தக்கார் துணைகொண்டு தினமும் பயிலுதல்வேண்டும். தத்தம் ஊர்களில் நூல் நிலையங்களை நிறுவியும், கலைபயிலிடங்களை நாட்டியும், கல்வி கற்காத எல்லா மனிதர்களையும் வேற்றுமையின்றி ஆதரவுடன் ஒருங்கு சேர்த்து, அவர்கட்கு நல்லுணர்ச்சியும், ஒருமைப்பாடும், மனத் திண்மையும், சிலமும், பொதுநல நோக்கங்களும் வளரக்கூடிய முறையில் ஆய்வுரைகளைப் புகட்டுதல் வேண்டும். தமிழ்ப்புலவர் கட்கு நன்மதிப்பும் தமிழ் மாணவர்க்கு நல்லாதரவும் தருதல் வேண்டும். ஞானசாகரம், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச்செல்வி, கலாநிலயம், சித்தாந்தம் ஆதிய சிறந்த தமிழ்த் தாள்களை மிகுதியும் போற்றி வளர்க்கவேண்டும். தமிழரும், தமிழ்மொழியும் ஆக்கம் பெறவேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் பல்லாண்டுகளாய்த் தொண்டினை ஆற்றிவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆயிரக்கணக்கினராய் உறுப்பினராகி உதவிபுரிய முற்படல் வேண்டும். திங்களொன்றிற்கு நான்கணாக்கள் கொடுத்து சங்க முயற்சிகளை வளம்பெறச் செய்விரேனில் சிறந்த முறையில் தமிழ்க்கல்லூரி நிறுவுதல் கூடும்; நல்லாசிரியரின் துணையினால் இயல் இசை நாடகமெனும் முத்தமிழையும் வளர்த்தல் கூடும்; ஆங்கில வடமொழிக் கலைகளை நன்குணர்ந்து தமிழில் புலமைமிக்க கலைவாணரின் உதவிகொண்டு அருங்கலையனைத்தையும் தமிழில் ஆக்குதல் கூடும். இன்னனைய நலங்களை எளிதில் ஆக்கவல்ல கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வளத்தைப் பெருகுவித்து நலம்புரிதல் தமிழ் மூதறிஞரின் கடமையாகும்.

முத்தமிழ்த் துறைபோகிய தமிழன்பர்களே! தங்கள் நல்வருகையால் தமிழ்நாடு அறிவும் ஆக்கமும் பெறுதற்குரிய முறைகள் இன்றே வகுக்கப்பெறும்! தன்னலங்கருதாது பிறர் நலமே கருதும் உங்கள் சீரிய தொண்டினை ஏற்று அளந்தறியவொண்ணாத சிறப்பினைத் தமிழ் நாட்டிற்கு வழங்குதற் பொருட்டு தமிழன்னை புரிந்து வந்த தவம் இன்றே பயன்பட இருக்கின்றது! தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களே! வம்மின்! தங்கள் நல்வரவினாலும், அரிய தொண்டினாலும் நாடு நலம் பெறுவதாக.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௮	ஆங்கீரச, தை.	மலர் ௰.

ஓர் இந்தியப் பேரறிஞர்

அ. ஸ்ரீநிவாஸாசாரி அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.

['ஆசியா' என்னும் பத்திரிகையிற் பண்டு வெளிவந்த ஒரு கட்டுரையின் மொழிபெயர்ப்பு. ஜகதீச சந்திரவசு என்பாரது பெருமையினைக் 'காய்தல் உவத்தல் அகற்றி' நடுநின்று நன்கு விளக்கும் மாட்சிபெற்றிருத்தலானும், தமிழுலகம் அதனை யுணர்ந்து பயனடைதல் ஒருதலை யாகலானும், இது மொழி பெயர்க்கப்பட்டது.]

திங்கட்டாள்களை இயற்றிவரும் ஆசிரியரும், அவரினும் உய்த்துணாரும் ஆற்றலின் மிக்காராய்த் திகழ்தற் பாலராகிய இயற்கை நூற்புலவரும், ஜகதீச சந்திரவசு என்பாரை மக்களின நூன் முறைமையோடு ஒவ்வாத ஒரு முரண்பாடாகவே கருதுகின்றனர். தமது தாய் நாட்டினரது பெரும் பழமைவாய்ந்த நம்பிக்கைகளின் நடுவே புக்கழுந்திக் கிடக்கும் ஓர் இந்தியர் செயல்வழித் தேர்தல் முறையிற் றுறைபோகிய மேனாட்டுப் பௌதிகநூற்புலவர்க்கு ஓர் இணையாய் மிளிர்தலும், பன்னெறிக் கண்ணும் ஆன்ற பயன்றரும் பான்மையிற் சிறந்த நுண்ணிய

புத்துண்மைகளை உணர்ந்தோதிய வகையானே அவர் உயிர்நூலினது வளத்தைப் பெருக்கி யளித்தலும், அன்னார்க்கு இயற்கை முரணாகவே தோன்றுகின்றன. உள்ளத்தை யடக்கி உண்முகமாக்கிச் சிந்தனையில் ஆழும் இயல்பும், நுண்பொருளை ஆராயும் ஆற்றலும், கற்பனைத் திறனும் வாய்ந்தவரன்றோ இந்தியர்? அப்பெற்றியார் புறவுலகத்துக் காணும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி யறிந்து, அவைகளைக் கருதலளவையால் ஆராய்ந்து, அவற்றினின்றும் தொகை முறையானும் வகை முறையானும் நூன்முறைக்கும் செயன் முறைக்கும் இறையும் தோலாத நுண்ணிய கொள்கையொன்றை நிலை நாட்டவல்லரோ என்று எங்ஙனும் எதிர் வழக்கிடுகின்றனர். கிழக்கத்தியார் இயற்கை நூற்புலமையை யெய்துந் தகுதியற்றாரெனக் கற்றோருலகம் பன்னெடு நாளாகக் கொண்டிருந்த ஒரு முடிபிற்கு வசு என்பார் விலக்காய் விளங்குதல், ஐரோப்பியர்க்கும் அமெரிக்க நாட்டினர்க்கும் அறியவொண்ணாத நீரதாகின்றது.

நாம் அறிந்துள்ள இயற்கைநூல் இற்றைக்குச் சில நூற்றாண்டுகட்கு முன்னரே தோன்றியதொன்று என்பதையும், பொருளின் இயல்பையும் சத்தியின் இயல்பையும் ஆராய்கின்றுழி, இஞ்ஞான்றைய நூலோரது முறைப்படி, அனைத்திற்கும் அடிப்படையான இயற்கை விதிகளைத் தேடியறியும் முறை கலிலியோ நியூட்டன் என்னும் பெரியாரது காலத்துத் தான் தொடங்கியது என்பதையும், இயற்கை நூலாராய்ச்சியாற் பெற்ற, நுண்மதி விளக்கஞ் சொரியும் அரும்பெரும் முடிபுகள் யாவும் கழிந்த நூற்றைம்பதாண்டுகட்கு உட்பட்டுக்கண்டனவே என்பதையும், அண்மையில் இயற்கைப் பொருளாராய்ச்சி முறைக்கண் ஒரு முதிர்வு உண்டாதற்கு முன்பு ஐரோப்பியர் இந்தியரைப்போலும் சீன நாட்டினரைப் போலும் அத்துணை ஆழ்ந்த சிந்தனை விழைவும் ஞானநூற்பற்றும் உடையராயிருந்தனர் என்பதையும் யாம் மறந்துவிடும் இயல்புடையேம். மேனாடு கீழ்நாடுகட்குள்ள வேற்றுமைகளைக் காண்பான் இரண்டையும் ஒப்பிட்டு நோக்குவார், ஐரோப்பியர்க்குள் இயற்கை நூலாராய்ச்சி வளர்ந்து வந்த சரிதையைப் பொதுவாகப் புறக்

கணித்து விடுகின்றனர். அவ்வழக்கம் ஒரு சார் கிடக்கவும், வசுவொடும் ஐந்து நிமிடம் உரையாடலொன்றே, கீழ் நாட்டாரை அறிவுகுன்றியவராக மதித்தொழுகும் பொதுவறிவுடைய ஒரு அமெரிக்கனும் ஐரோப்பியனும் கொண்டுள்ள மருட்கருத்துக்களை யெல்லாம் தகர்த்தெறியப் போதியதாகும். வசு ஊன்றிய ஞானச் சார்புடையார் என்பது மெய்யே; ஆனல் ஒரு கத்தோலியமதத் துறவியாரது உள்ளத்து அவரது மதத்துட் கூறிய 'தூய ஆவி'யைப் பற்றிய நம்பிக்கையும் அவரது மானநூலறிவும் ஒன்றோடொன்று யாங்ஙனம் முரணுவோ. அங்ஙனமே மெய்ஞ்ஞான ஆர்வமும் இயற்கை நூலாராய்ச்சித் திறனும் இந்தியரிடத்து ஒருங்கே வதியக் கூடியனவாம். ஆயினும் இந்தியர்க்குரிய அனுபூதியும், மேற்றிசையாரது இயற்கைக் கலைநுட்பங்களை உவர்ப்பொடு பற்றும் உள்ளப் பண்பும் விரவிய ஒருகலவையில் முன்னது தலையெடுத்து நிற்கும் ஒரு நிலையையே வசுவினிடத்துக் காணலாகும் என்று நீர் எண்ணுவீரேல், அதுவும் பிழை படுதலை நீர் உணர்வது ஒருதலை. எப்பாலும் கோடாது நடு நின்று உண்மையைத் தேரும் உள்ளமல்லாது, மேனுட்டுள்ளம் கீழ்நாட்டுள்ளம் என இரு திறப்பட்ட உள்ளங்கள் இல்லையென்னும் உண்மையே உருக்கொண்டிலங்கிய தென்னப் பொலிவார் அவர்.

பருத்தவுடலும் நடுத்தர வயதும் உடையராய்ப் பாதிரிமார்க்குரிய அங்கியணிந்து, ஒல்லையில் மாறக்கூடிய முகத்தோற்றமும் மிளிருங் கண்களும் பொன்னணி மின்னும் பொலிவும் திகழ நிற்கும் இப்பெரியாரை நீர் வினவுங்கால், அவர் உம்மை மாவியப்பில் ஆழ்த்துகின்ருர். , எடுத்துக்கொண்ட பொருளைச் செம்மையும் தெளிவும் கிளர, உரைவளம் மலிய அவர் எடுத்தோதும் முறையினுல் நீர் இறும்பூதெய்தாது ஒழிவீரேனும், அவரது நடையும் பீடும் இறையுந்தருக்கின்றிய எழின்மாண்பும் நும் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விடுதல் திண்ணம். சேக்ஷ்ஸ்பியரையும் உவோர்ட்ஸ்வோர்த்தையும் கற்றுத்தெளிந்த கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஓர் அறிஞர்க்குரிய பயிற்சி முற்றிய ஆங்கிலப் பேச்சியலும் சொல் வளமும் தோய,

மேற்றிசை இயற்கைக் கலைவாணரையொப்ப உரையாடவும் சொற்பொழிவாற்றவும் அவர் திறனுடையார். ஐரோப்பிய நாட்டு இயற்கைக் கலைஞர், உள்ளச் சார்பின் வழியே இயற்கையினை நோக்கி யின்புறும் இயல்பு நுழைதற்கு இடந்தராத திண்மையை விழைந்து நாடுதலானே, பெரும்பாலும் அழகினை நுகரும் நீர்மை தம்மாட்டு வாடி யுதிரப் பெற்றுள்ளனர். உயிர் நூனுட்பங்களைத் தேரும் வாழ்க்கையராய்த் திரிந்தமையின், தாம் சுவைநயங்கண்டு களிப்புறும் கவினை முற்றும் இழந்தமையைக் குறித்து டார்வின் என்பார் மனம் நனியுளைந்தார் என்ப. ஆனால் வசுவோ அதற்கு மறுதலையாவார்; அவரது இயற்கை நூற்புலமை அவராராய்ந்த செடிகள் மீது அவர்க்கிருந்த நெஞ்சுக் கசிவினைக் கூரவே செய்தது.

நாம் கற்றறிந்துள்ள இயற்கைக் கலைச் செல்வமனைத்தையும் குறைவறக் கையாளும் திறமை வாய்ந்த அவர் அடி முதல் முடிகாறும் பௌதிக நூற்புலவரே யாவார். அவரது சொற்பெருக்கோ, கணித நூற்கோடுகளும் குற்றுரைகளும் மலிந்த சுவையற்ற ஆராய்ச்சியாகாது, தேர்தற்களத்துக் கண்ட முடிபுகளைக் கற்பனையழகாற் புனைந்துவரைந்த ஒரு சொல்லோவியம் அனையதாகும்; அனையதாதல்பற்றி, புத்தமத உள்ளுறைப் பொருள் விளக்க நூலைப்போன்று பௌதிக நூல் உணர்தற்கரியதாகும் எனக் கருதுவோரும் அதனைக் கேட்கில், உள்ளம் சிறைப்படுவர். அவர் தாமியற்றிய வியத்தகும் புதுப்பொறிகளைப்பற்றி விரித்துக் கூறுங்கால், பாவலரைப் போன்று செஞ்சொற்களைத் தொடுக்கும் சீர்மை செவிமடுப்பாரது உள்ளத்தைக் கவியச் செய்யும். ஆய்ந்தெடுத்த சொற்களை அழகுற அமைக்கும் திறமை, அவர்பால் இயற்கைக் கலைப்புலமையினும் இலக்கியப் புலமை மிக்கிருந்ததைப் புலப்படுத்தா நின்றது. அவர் தமது முதிர் பருவத்தின் பெரும் பகுதியினைச் செலவிட்டுக் கண்டறிந்த செடி நூனுட்பங்களைப் பற்றிக் கூறுங்கால், அப்பூண்டுகள் பசிய நாரும் இலையும் இணைந்த வெறுந்தொகுதிகளாகாது, அறிவு விளக்கம் பெற்ற உயிர்ப் பொருள்களாகவே வயக்குகின்றன. அப்பூண்டுகளிடத்தும் உயிர்கள் உறைகின்றன

என்று அவர் இயம்பாதொழியினும், அவைகளைத் தமது என்பினுள் என்பாய் ஊனினுள் ஊனாய்க் கருதுவதை நீர் உணர்ந்து விடுவீர். ஆயினும் இம்மையவாக்களையும் பொருள்விழைவினையும் அவர் அகற்றுவதேதமான, ஓராதுரைக்கும் கொள்கைகளையும் உதைந்தெறிவார். பண்டையோர் இயற்கையினைப் பற்றிக் கொண்ட சமயச் சார்புடைய கொள்கைகளை அவர் ஒப்புதலும், முன்னோர்பால் எழுந்த ஏதுவின்றிய பெருமதிப்பாலன்று, தேர்தற்களத்துத் தாம் நிகழ்த்திய நுண்மாண் வினைத்திறங் களினாற் போந்த முடிபுகள் அவைகளை வலியுறுத்துதல்பற்றியே என்க.

நீர் இத்தனையும் உணர்வது, அவர் மொழிந்தது மட்டும் கொண்டல்ல, அவர் மொழியாது விடுத்தவற்றைக் கொண்டும் என்னவே தகுதியாகும். நம்பிக்கையளவாய் நிற்பனவும் மறுத்தற்கொண்ணா உண்மைகளைக் கொண்டு நிறுவ இயலாதனவுமாய பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி அவர் முன்பு நிகழுங்கால், அவர் வழக்கிடுதலைத் தவிர்த்துப் பிறரது கூற்றுக்குச் செவி சாய்த்து நிற்றல் ஒருக்கால் கிழக்கத் தியார்க்குரிய, பிறரை மதித்தொழுகும் பெற்றியாற் போலும்; அன்றேல் அது அவரது பரந்தநோக்கின் பான்மையைத் தெரிவிப்பதுபோலும்; ஆனால் அவர் இயற்கைக் கலைநூன் முடிபுகளைப்பற்றி இயம்புங் காலும், தாம் தேர்ந்து தெளிந்த பொருள்களைப்பற்றிக் கூறுங் காலும், பிறரது புரையோடிய வழக்குகளையும் அயர்ச்சிபற்றி யெழும் உரைகளையும் துளைத்துப் பொடிபடுத்துவர்; அப்போது அவரை மறுத்து முடிவுரை வழங்கல் எவர்க்கும் அரியதாகும். ஆயினும் அங்ஙனம் வழக்காடுமிடத்தும், பிறரைமதித்தொழுகும் மாண்பின் வனப்பினைக் காண்பதன்றி அவர்பால் தருக்கையும் மிடுக்கையும் அணுவளவும் எவரும் காணார்.

அவரொப்பக் கற்பனைத் திறனமைந்தார், டார்வின்தொடக் கத்தரான தொகைமுறைத் தேர்ச்சியில் (வேறுபட்ட பல்வகைப் பொருள்களையும் கூர்ந்துநோக்கி அவையனைத்துள்ளும் அடங்கி நிற்கும் பொதுவான ஒரு தொகைப்பொருள் காணலில்) வல்ல இயற்கைநூற் புலவரேயன்றிப் பிறரல்லர். அத்தகைய

நுண்மாண் நுழைபுலமுடையார் புறநோக்கிற்குப் பலவாறு வேறுபட்டுக் குவிந்து கிடப்பதாகத் தோன்றும் பல்லாயிர உண்மைகளையும் நுணுகியறிந்து, அவைகளினூடே பொதுவிதி யொன்று புலனாதலைக் கண்டு, அதனின்றும் வகைமுறை வழக்கால் அவையனைத்தையும் நிறுவிச் செல்லார். இங்ஙனம் பொதுவிதி காணும் கூர்மதிக் காட்சியுடையார்க்குப் புதுப் பொருளொன்றைக் காணவே போதியதாகாது. அப்பொருட்கும் உலக இயக்க முறைக்கும் உள்ள பொருத்தம் யாது என்ற வினா அவர்பால் எழுந்தே தீரும். தனித்துக் காணப்படும் ஓர் உண்மையைப் பற்பல உண்மைகளோடு ஒன்றாக இணைத்து, அவையனைத்துள்ளும் ஊடுருவிச் செல்லும் ஒரு பொதுத் தொடர்பினைக் கண்ணுறும் மாட்சி உள்ளத்து விளையும்வரை, அவரது ஆராய்ச்சித்திறனும் கற்பனைத்திறனும் ஆறியிரா. இதனால் அவர் அரும்பாடுபட்டுத் தொகுத்துள்ள உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு நிலைநாட்டும் இயற்கைப் பொருணூற் கொள்கைகளின்கண், பருப்பொருளைமட்டும் பகுத்தறிய முயலும் கலைவாணர்க்குரிய சுருங்கிய நோக்கத்திற்கு முற்றிலும் வேறுபட்ட கடலெனப் பரந்த காட்சி நலன் ஒன்று மிளிரா நிற்கும்.

அவர்க்கு இயற்கை நூலாராய்ச்சி ஞான வாழ்க்கையினை அனையதாயிற்று. இறைவனை வணங்குதற்கெனக் கோட்டஞ் சமைப்பாரது மனப்பான்மையே, கல்கத்தா நகரில் 'வசு ஆராய்ச்சி நிலையம்' ஒன்றை அவர் நிறுவுங்கால், அவரிடத்து அமைந்திருந்தது. ஆண்டுக் கணக்காகத் தன்னலம் மறுத்து வாழ்ந்த தகைமைக்கு அது ஓர் அறிகுறியாய் இலங்குகின்றது; யாங்ஙனமெனில், பல்கலைக்கழகத்துப் பேராசிரியராய் அமர்ந்து ஈட்டிய அற்ப ஊதியத்தில் அவர்க்கு எஞ்சியதனைத்தும், அவர் சொற்பொழிவாற்றிப் பெற்ற வருமானமும் அவர் இயற்றிய பனுவல்களின் பதிப்புரிமைக்கு ஈடாக வந்த ஊதியமும் யாவும் அவரது நாட்டினர்க்கு முதன் முதலாக ஓர் ஆராய்ச்சி நிலையத்தை அமைத்தளித்தற்கென்றே தன்னய மோப்பமுமின்றிப் பயன்படுத்தப்பட்டன. அந்நிலையத்தின் திறப்புவிழா நாளன்று அவர் தமது சீடரை நோக்கி, "உண்மையை நேரிற் காணும்

குறிப்பிற்கே, திண்ணிய ஒழுக்கத்துடனும் அசையாத மன வுறுதியுடனும் நமது வாழ்க்கை முழுவதினையும் ஒப்படைப்பீராக!" என்று அறிவுறுத்தினார். தமது நிலையம் உலக முழுதிற்கும் பொதுவாயிருத்தல் வேண்டும் என்றும், அதன்கண் கல்லூரிபற்றியும் இனம்பற்றியும் மொழிபற்றியும் பால்பற்றியும் எனைத்தானும் வேற்றுமை இல்லாதொழிதல் வேண்டும் என்றும், வருங்காலமெல்லாம் அது அத்தன்மையதாதல் வேண்டும் என்றும், ஒரு கட்டுப் பாட்டையும் அதற்கு ஏற்படுத்தினர். அங்ஙனம் அவர் ஆற்றியது, "இரண்டாயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகட்கு முன்னர் நாளந்தா தாக்ஸிலா முதலிய பண்டைய பல்கலைக் கழகங்களில், உலகின் பல பகுதிகளிலிருந்தும் சார்ந்த மாந்தர்க்கு இடமுதவிய" பழைய நாட்டு முறைமைக்குப் பொருந்தியதே யாயிற்று.

அசோக மன்னரது குறிக்கோள்கள் அவர்பால் உயிர் பெற்று வாழ்கின்றன. அசோகர் பல நாடுகளை அடிப்படுத்திப் பேரரசு புரிந்தாராயினும், உலகத்தாரைக் கட்டினின்று விடுவிக்கவும் பெரிது முயன்றார். தம்மிடத்துள்ளவற்றையெல்லாம் அவர் ஈந்தார்; ஒரு நெல்லிக்கனியொழியப் பிறிதொன்றும் இல்லாத காலம் குறுகியவிடத்தும், அதிலும் ஓர் அரைக்கனியை மகிழ்ந்தளித்தார். அசோகரது நெல்லிக்கனிக்குறி வசுநிலையத்தின் அணிமுடியிற் றிகழ்தருகின்றது. இந்தியரது இயற்கைக் கலைநூலறிவுக்கு ஒரு நினைவுச் சின்னமாக விளங்கற்பாலதாம் ஒரு மாளிகையின் அணிகளில் ஒன்றாய அக்குறியினை அமைத்தகாலை, வசு என்பார் "இஞ்ஞான்று நெல்லிக்கனியில் அரைப்பங்கினையே நம்மால் அளிக்க இயலும்" என்று கூறினார்.

அவர் கல்கத்தா நகரில் அரசியற் கல்லூரியில் ஓர் ஆசிரியராய் அமர்ந்திருந்த போதே தமது ஆராய்ச்சிகளைத் தொடங்கலாயினர்; நெடும்பொழுது மனஞ்சலிக்கசொற்பொழிவாற்றியும், மாணவர்களது விடைத்தாள்களைத் திருத்தியும், பாடத் திட்டங்களை அமைத்தும் தமது கடமைகளை ஆற்றி முடித்த பின், எஞ்சிய நேரத்தையே ஆராய்ச்சிக்கும் பயன் படுத்தினர். முப்பத்தைந்தாவது பிறந்த நாளன்று, அவர் இந்தியர்க்குரிய

வழக்கப்படி ஒரு நோன்பு பூண்டனர்; தமக்கெனும் நினைப்பு மின்றி இயற்கை நூலாராய்ச்சிக்கே தம்மைப் பலியாக அன்று தொட்டு அளித்திடல்வேண்டும் எனச் சூள்செய்துகொண்டனர். அவர் கேம்பிரிட்ஜ் கல்லூரியிற் பெற்றிருந்த பயிற்சியும், நேர் தன்முறையில் அவர்க்கிருந்த இணையற்ற திறமையும் அத்தகைய வாழ்க்கையைப் பின்பற்றும் தகையை அவர்க்களித்தன.

அவர் அம்பலமறியத் தாம் கண்ட உண்மைகளை முதன் முதலில் வெளிப்படுத்தியது, கழிந்த நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளின் தொடக்கத்தே யாகும். அற்றை நாள் இயற்கைக் கலைநூலுலகமே குழப்பத்திற்குள்ளா யிருந்தது. கேம்பிரிட்ஜ் கல்லூரியிற் புகழ்சான்ற பேராசிரியராய் விளங்கிய கிளார்க் மாக்ஸ்வெல் என்பார் தற்காலத்திய கணிதநூன்முறை யானே மிக அரிதாக ஆராய்ந்து, தற்கால ஆராய்ச்சிகளில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்றென அனைவராலும் கொண்டாடப்படுமாறு ஒளியென்பது வான்பொருட்கண் நிகழும் மின்காந்த அலையியக் கமே யென்பதை நிலை நாட்டினர்; அன்றியும், ஒளியொன்றோ புலனாகா ஒளியலைகள் என்றழைக்கலாம் படி வேறு மின்காந்த அலைகள் இருத்தல் கூடும் என்று ஊகத்தால் உணர்ந்துரைத்தார். புலனாகாத இக்கதிர்களைக் காணற்குச் செயற்கைக் கட்பொறி யொன்று வேண்டியிருந்தது; அக்கதிர்கள் பருதியின் ஒளிக் கதிர்களைப்போற் பொருள்களிற் பட்டு எதிர்மீளவும், பொருள் களிற் புகுந்து நெறிவிலகிச் செல்லவும் கூடும் என்றும், கண் ணாடியை ஊடுருவிச் செல்வதுபோன்று மலைகளையும் மனித வுடலையும் மூடு பனியையும் அவை ஊடுருவிச் செல்லும் திறத் தனவென்றும் அவர் கூறினார். பின்னர் பான் நகரத்துப் பல் கலைக் கழகப் பேராசிரியராகிய ஹீன்ரிக் ஹேர்ட்ஸ் என்பார், கணித முறையால் மாக்ஸ்வெல் கட்டிய முடிபினைத் தேர்தன் முறையால் நிறுவும் தகுதிவாய்ந்த ஒரு சிறு கருவியை இயற்றி, அதன் துணையானே, புலனாகாக் கதிர்வெள்ளம் உலகமுழுதும் பாய்ந்து செல்வதையும் எடுத்துக்காட்டினார். இத்தகைய அலை களைக் கம்பியிலாத்தந்திக்குப் பயன்படுத்தும்பேறு மார்க்கோனி யென்பார்க்கே வாய்த்ததெனினும், அவைகளை ஹென்ரிக் என் பார் புதிதாகக் கண்ட திறமையின் மாட்சி நுழை கதிர்களையும்

ரேடியத்தையும் புதிதாகக் கண்ட மாட்சிக்குச் சிறிதும் தாழாது என்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது. ஹேர்ட்ஸ் என்பார் இயற்றிய கருவியினும் மேன்மைபெற்ற செயற்கைப் பொறியொன்றைப் பாரிஸ் நகர்ப் பல்கலைக்கழகப் பேராசிரியராகிய பிரான்லி என்பார் பின்னர் கண்டுபிடித்தனர். உலோகத்தாள் அடங்கிய ஒரு குழலே அவரது கருவியாயிற்று. அலைகள் அக்குழலைத் தாக்கலும், அத்தூளின் பகுதிகள் திரண்டு ஒன்றாயிணைந்து நெருங்குவனவாக, அதனால் மின்சார சக்தி அதன்வழியே புகுந்து செல்வதாயிற்று; மெல்ல அக்குழலைப் புடைத்தலும், அவை அசைந்து சிதறுவனவாகி, மீண்டும் அலைப் பெருக்கினைப் புலப்படுத்தும் நிலையை மேவின. அத்தகைய கருவியைக் கொண்டே (தூள் நெருங்குதல்பற்றி 'நெருங்கி' என்னும் பெயரால் இனி அதை அழைப்போம்) கம்பி யொழியலைகள் முதன் முதலாகப் பிற்காலத்து வாங்கப்படலாயின.

மேற்றிசை இயற்கை நூற் புலவர் முதன் முதலாக வசு என்பாரைப் பற்றிக் கேள்வியுற்றபோது, அன்னாரது நிலை இவ்வாறாயிருந்தது. இந்திய அரசாங்கத்தார் அவரைச் சொற்பொழிவாற்றுதற்கென ஐரோப்பாவிற்கு அனுப்பினர். பல நாடுகளின் தலைநகர்களிலும், இயற்கைப்போரில் முன்னணியில் நின்ற அறிஞரனைவரும் அவரது சொற்களைச் செவிமடுக்க வந்தனர். தற்காலப் பரங்கி நாட்டு எண்ணூற் புலவர் (கணித நூற்புலவர்) திலகராகிய ஹென்றிபாயின்கேர் கெயிலெடெட்டியுள்ள ஆங்கில இயற்கைக் கலைஞர் கழகத்துத் தலைவரான கேல்வின் பிரபு, வண்ணப்படம்பொறிக்கும் கருவியை இயற்றிய லிப்மன் என்பார், ஹீடெல்பர்க்கைச் சார்ந்த குவிங்க் என்பார் பெர்லின் நகரத்து வார்பர்க் என்பார் இன்னோரனைவரும், ஹெர்ட்ஸினது அலைகளை வசு ஆராய்ந்த வரலாற்றையும், கேட்பாரை வியப்பால் துணுக்குறச் செய்யும் நுண்ணறிவாற்றலமைந்த முறைகளானே அவ்வலைகளின் இருப்பை அவர் உணர்ந்தவாற்றையும் அவரே விரித்துரைப்பச் செவிவாயாக ஆர்வத்தோடு பருகி அவரது புகழினில் ஆழ்ந்து தம்வயமிழந்து நின்றனர். வசுவின் அலையறிகருவியை பிரான்லியின் 'நெருங்கி'

போடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, கட்பொறி முன்னர் கட்புல னுணர்விற்கு அறிகுறியாகத் தோன்றும் ஓர் உறுப்பு நிற்பது போலாயிற்று. இவற்றை யுன்னிய வார்பர்க் அறிஞர் இத் துறையில் ஆராய்ச்சி செய்து வந்த ஒருவரை நோக்கி, "மின்சார அலைகளை இனி நீர் விட்டொழிவீராக, வசுவென்பார் கண்டபின் உய்த்து எஞ்சியுள்ளது யாதுமில்லை" என்று அறிவுறுத்தவும் துணிந்தனர்.

வசு இயற்றிய கம்பிபொழி அலையறி கருவிகள் (கம்பியின் உதவியின்றி இயங்கும் வானலைகளின் இருப்பினைப்புலப்படுத்தும் கருவிகள்) அவ் அலைகளை உணருந்திறனுட்பத்திற்கு, கண்ணி னுள் அமைந்த எழினி ஒளியலைகளைப் பற்றுந் திறனுட்பத்தை உவமை கூறலாகும். ஆயினும், கண்ணெழினியின் ஆற்றற்கும் ஓர் எல்லையுண்டு; அது வீசும் அனலையும் கம்பிபொழி யலைகளை யும் காணவொண்ணாததாகும். ஆனால் மக்களது கட்பொறி யினையும் விஞ்சுதல் இயலுமோ? கட்புலனாற் காணப்படுவனவும் காணப்படாதனவுமாகிய இருவகை யலைகளையும் நோக்க உதவு வதும் கண்ணெழினியினும் உணர்வுத்திறன் கூர்ந்ததுமாகிய ஓர் உறுப்பமைந்த செயற்கைக்கண் ஒன்றை ஆக்குதல் ஒண் ணாதோ? அதனையும் வசுஇயற்றினர்; நினைத்ததும் தமது மாய வன்மையால் அத்தகைய கருவியை உண்டாக்கினர். அச் செயற்கைப் பொறி முன்னர், தமது கண்ணிற்குள்ளமைந்த நீர்க்குமிழையொப்ப, நீர் நிறைந்த கண்ணாடிக் கலமொன்றை வைத்தலும், அப்பொறி கம்பிபொழி யலையையும் வீசுமனலையும் காணவொண்ணாத குருடடைந்தது. கண்ணெழினிக்குப் பின் மூளை இருப்பதுபோல், அப்பொறிக்குப் பின் பதிவு செய்தலில் நுண்டிறன் வாய்ந்த கருவியொன்றை மின்சார சத்தியின் உதவியால் அமைத்தளித்தார். நீர்க்கலத்தை அகற்றியதும், அச்செயற்கைக் கட்பொறி தமது கட்பொறியாலும் காண வொண்ணாத அனலலைகளையும் மின்சார அலைகளையும் காண வல்லதாயிற்று. இத்தகைய கண் தான் யாதோவெனின், ஈயமும் கந்தகமும் கலந்தொன்றிய 'ஈயக்கந்தகை' [அவ்விரண்டும் கலந்து இணையுங்கால் புதியதொரு பொருளாக மாறுமாதலின்,

அப்பொருட்கு ஒரு புதுப்பெயர் இடப்பட்டது] என்னும் படிகத்துண்டுகள் இரண்டே. இவை உயிரற்றனவென்பதும் அசைவின்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகற்பாலனவென்பதும் வெளிப்படையன்றோ? ஆயினும் அவை, புறத்தெழும் தூண்டலொன்றை உணருந் திறனுட்பத்தில், மனிதனது ஐம்பொறிகளில் எதனையும் விஞ்சிய ஆற்றல் படைத்துள்ள, இரும்பூது சான்ற ஒரு கருவியாயின. உயிரற்ற பொருளைத் துணைக்கொண்டு இவ் இந்திய அறிஞர் இயற்றுவதை யறிந்தபின், இயற்கையை எள்ளி நகையாடும் எண்ணமொன்றும் பொருக்கென ஒருவருள்ளத்தை நண்ணலாகும். ஆனால் வசுவோ, இயற்கையினை நோக்குங்கால் இந்தியர்க்குத் தோன்றும் பணிவச்சங்களோடு பின் வருமாறு உரை செய்தனர்:—"பொறுக்கலாற்றா ஒளிப்பெருக்கினாற் கூச்சமெய்தாத வண்ணம் நமது கண்கட்குத் திரையிட்டு மறைத்தருளும் பாதுகாப்பின் அருமையினை நாம் ஒருக்கால் உணர்கின்றிலோம் போலும்."

இலந்தன்மா நகரிலுள்ள 'அரச நிலைய'த்தின் அழைப்பிற்கிணங்கி வசு அக்கழகத்தார் முன்பு சொற்பொழிவாற்றியக்கால் அவர்கள் கேட்டது, அருளாற் பெறும் புத்தப் புதிய அறிவொளி யனையதாயிற்று. 'நெருங்கி'யின் செயலைப்பற்றி அந்நாளில் அத்தேயத்தார் கொண்டிருந்த முடிபுகள் யாவும் பிழை பட்டனவாயின. காணவொண்ணு அலைகள் பாயுங்கால், உலோகத்துகட்கூறுகள் எவ்வாறோ ஒன்றாக நெருங்கிப் பின்னர் அக்குழலைத் தட்டியதும் மீண்டும் சிதறி விடுகின்றன என்னும் தவறான கருத்தினை ஆதாரமாகக் கொண்டெழுந்த கொள்கைகளெல்லாம் சாய்ந்தன. படம் பொறிக்குங் கருவியிற் படம் பதியுங் கண்ணுடியில் நிகழ்வதைப் போன்ற ஒரு செயலே 'நெருங்கி'யிலும் நிகழ்வதாக வசுவினிடமிருந்து ஐரோப்பா அறியப்பெற்றது. உலோகத்துகளும் கண்ணுடித் தகடும் நுண்துண்டங்களால் அமைக்கப்பட்டுள்ளனவாதலின், அத்துண்டங்கள் ஒரு பொருளில் (துகளில்) ஹெர்ட்ஸரது காணவொண்ணு அலைகளாலும், மற்றொன்றில் காணக்கூடிய அலைகளாலும் உலைவினை யடைகின்றன. இரப்பர்த் துண்டை இழுப்பதினுல்

அதன்கண் ஏற்படும் உளைவை நேர்ப்படுத்த இவ்வுளைவும். ஓய்வளிக்குங்கால் படம்பதியும் கண்ணாடியிலும் அவ்வுளைவு நீங்கும்; இக்காரணம் பற்றியே பல மாதங்களும் ஆண்டுகளும் கழிந்த பின், அப்படம்பதி கண்ணாடியில் உருத்துலக்க முயலுதல் பயனற்றதாகின்றது.

இவ்வுளைவு சோர்வினால் விளைவதையும், அச்சோர்வு நமது உடலின் தசைச் சோர்வை எல்லாவழியாலும் ஒத்திருத்தலையும் கூர்த்த நோக்கினால் அறிந்த வசு அக்கணமே உலோகங்களின் இயல்பைத் துறைபோகக் கற்றறியத் தொடங்கினார். ஆனால், பற்பல உலோகங்களும் கம்பிமொழி அலைகளை அறிவுறுத்துதற்கு எவ்வெவ்வளவிற்குப் பயன்படும் என்பதை ஆராய்வதிற் கருத்தூன்றாது, அவர் உலோகங்களை எத்தகைய உளைவுகட்கு ஆளாக்கக் கூடும் என்பதைப் பற்றியே அறிய அவாவினார். பீரங்கிக் குழல்களின் வழியாகப் பெருங்குண்டுகளை மீண்டும் மீண்டும் சுடும்போது, அவ்வுருக்குக் குழல்கட்கு யாதேனும் ஓர் ஊறு விளைதல் ஒருதலையென்பதைப் பீரங்கி செய்வோர் உணர்ந்திருந்தனரேனும், அதற்குத் தக்க காரணம் காட்டுவார் ஒருவரும் இலராயினர். வசு தமது கைகளிற் சிக்கக் கூடிய உலோகங்களனைத்தையும் இவ்வண்ணம் ஆராயத் தொடங்கினார். ஒரு விலங்கின் உடலினின்றும் அறுத்தெடுத்த ஒரு தசைப் பகுதியை ஆராய்வது போலவே அதனையும் ஆராய முயன்றார். உளைவிற்கு உள்ளாகுங்கால் அவைகளது நிலைமையை வரைந்து காட்ட வல்ல நுண்ணிய கருவிகளையும் தாமே அமைத்துக் கொண்டனர்; இவ்வழி ஆய்ந்து கண்ட உண்மைகளில் ஐயப்பாட்டிற்கு எள்ளளவும் ஏதுவில்லையென்பதை உணர்ந்தார். மனிதனது தசை மின்சார சத்திக்கு ஒருவாறு உட்படுங்கால், பொருக்கெனச் சுருக்குறுகின்றது; அவ்வண்ணமே ஓர் உலோகமும். இதுவே வசு கண்டது. உயிரற்ற தசை எதிர்ப்பின்றிக் கிடக்கின்றது. அங்ஙனமே, எதிர்க்குந் திறல் ஒழியுமளவும் உலோகங்களை உளையச்செய்யின், அவையும் அத்தன்மையவாகின்றன. அவர் உலோகங்களை உறையச் செய்தனர்; குளிரால் விறைத்த கையைப்போல் அவை உணர்வற்று விறைத்துக்

கிடந்தன. அவைகட்கு மயக்கந்தரும் மருந்துகளை யூட்டினராக, அவை அந்நிலையில் மின்சாரசத்திக்கு எதிர்த்தொழுகிய தன்மை அந்நிலையில் ஓர் உயிர்ப்பொருள் ஒழுகுந் தன்மையை ஒத்திருந்தது. அவர் அவைகளை இடுக்கியால் நெருக்கிப் பற்றினர்; அடித்தார்; அவைகள் அப்போது ஒழுகிய வகை, உயிருள்ள ஊன் அத்தகைய வருத்தத்திற்கு உள்ளாகுங்கால் ஒழுகு வகையே ஒத்திருந்தது. அவைகளை மேன்மேலும் நையப் புடைத்து வந்தார்; அவை களைப்படைந்து மூர்ச்சை யுற்றுக் கிடந்தன; பதிவு செய்யுங் கருவிகளில் உள்ள ஊசிகள் அவ்வமயம் உயிர்ச் சத்தியற்ற நிலையினைக் குறிக்கும் முதற்கோட்டினைச் சார்ந்தன.

(தொடரும்.)

புத்தக நிலையம்

க. சம்பந்தம் பிள்ளை அவர்கள், B.A., L.T.,

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆண்டு விழாக் காலத்து திரு. S. R. அரங்கநாதம் M.A., L.T., F.L.A., அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

மக்கள் வளமுற வாழ்தற்கு உதவுவது கல்விப் பெருக்கம். பெரியருஞ் சிறியரும், செல்வரும் வறியரும், நகரத்தாரும் நாட்டாரும் சிறிதளவேனுங் கல்வி பயிலுதற்கு ஆவன புரிதல் தற்கால இயல்பு. இக்கல்விப் பெருக்கத்திற் குற்றதுணையாவது புத்தக நிலையம்.

நமது நாட்டில் நிறுவப்பட்டுள்ள புத்தக நிலையங்கள் பல. இவை எண்ணிறந்த நூல்களைப் படைத்தவை. இந்நூல்களைத் தாங்கி நிற்கும் கண்ணாடிப் பேழைகளின் பேரழகு பார்ப்போர் மனத்தைப் பற்றி ஈர்ப்பனவாகும். என்றாலும் இப்புத்தகங்கள் தத்தம் நிலையத்தில் நிலைத்திருப்பனவேயன்றி மக்கள் கைத்தலங் காண்பதரிது. இவ்வண்ணம் இடம் பெயராதிருந்து பேழைகளை சிதைக்கும் புத்தகங்கள் பலவும் நாடெங்கும் உலாவி மக்களோடு உறைந்து அன்னார் அக இருளைச் சிதைத்தலன்றோ விரும்பத்தக்கதாகும்! இவ்வுண்மையினை யோர்ந்த மேனாட்டார் புத்தக நிலையம் பயனுறுத்தற்குரிய பல செவ்விய முறைகளை ஆய்ந்தறிந்து ஆண்டு வருகின்றனர்.

புத்தகங்களைப் பேழைகளிற் பொதிந்து காக்கும் பழக்கம் அங்கு இல்லை; விலை மிகுந்த பதிப்புகளும் அங்கு திறந்த பெட்டகங்களிலேயே அடுக்கப் பெற்றிருக்கும்; அவைகளை யெடுத்துக் கண்ணுற எண்ணுவோர் நிலையத்தின் பணியாளரின் அனுமதி தானும் பெறவேண்டுவதில்லை; அவரவர் மனம் நாடும் நூலை யெடுத்துப் பார்க்கலாம்; விருப்பமுண்டேல் நிலையத்தின் ஓரிடத்தில் அமர்ந்து படிக்கலாம். இவ்வண்ணம் கட்டுக்காப்பு இல்லாவிடின் புத்தகத் தொகுதிக்குப் பாடு விளையாதோ என்ற ஐயப்பாடு எழக்கூடும். ஆனால், இத்தகைய பொது நிலையப் பொருளைக் களவாடிச் செல்ல எண்ணும் கயவர் மிகச் சிலரே என்பது ஒருதலை. மற்றும் இத்தீச்செயலைத் தடுத்தற்கேற்ற பாதுகாவல்களுடன் நிலையம் அமைக்கப்படலாம். பலகணிக்குக் கம்பி வலையிட்டும் நிலையம் முழுவதிற்கும் ஒரு புறத்தே வாயில் அமைத்தும், புத்தகங்கள் களவு போகாத வண்ணம் காக்கலாகும்.

நிலயத்திற்பணியாற்றுவோர் தக்கோராயிருப்பர். புத்தகம் படிக்க விருப்ப மற்றோரையும் தம் வழிப்படுத்துதற்குரிய பொறுமையும் நயப்பாடும் கல்வித்திறனும் இப்பணியாளர்பாற் காணலாம். வேண்டுவோர் வேண்டும் நூல்களை யெடுத்துக் கொடுத்தற்குரிய நூற் பழக்கமும் பெற்றிருப்பர். பிறர்

வைதிடினும் வாழ்த்திடினும் அவற்றைப் பொருட்படுத்தாது தமது கருமமே கண்ணாயிருப்பர். ஆகவே, திட்டமான நோக்கம் எதுவுமின்றி நிலையத்தில் நுழைவோர் எவரும் ஏதேனும் ஒரு புத்தகம் பெற்றே திரும்புவர். இவ்வழியே அவர்கள் நிலையத்தின் உறுப்பினராகி அதன் புத்தகங்களைப் பயன் படுத்த முற்படுவர்.

நிலையத்தையே யெட்டிப் பாராதும் அதனாற் பெறும் பயனைக் கருதாதும் இருப்பவர் பலர். இவர்களை உறுப்பினராக்குதற்குரிய சில முறைகளும் உண்டு. மேனாட்டவர் செய்தித்தாள் படிப்பதிற் பேரவா பூண்டவர். ஊணும் உறக்கமுந் துறப்பினும் அன்றாடம் வெளிவரும் செய்தித் தாள் படிக்காதிருக்க ஒருப்படார். எளிய வருவா யுள்ளோரும் இவ்வொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பர். புத்தக நிலையக் காவலர் இதனை நன்குணர்ந்தவராதலின், நிலையத்தில் செய்தித் தாள்கட்கெனத் தனியிடம் அமைத்துளர். ஆண்பாலரும் பெண்பாலரும் அங்கு வந்து பொருட் செலவு சிறிதுமின்றிச் செய்தித் தாள் படித்துப் போகலாம். செய்தியறிய வருவோருடன் நிலையக் காவலர் நெருங்கித் தோழமைகொண்டு பழகுவர்; நயமொழி பலபகர்ந்து நிலையத்திலுள்ள புத்தகங்களைக் கண்ணுறச் செய்வர்; நாளடைவில் அவர்களை நிலையத்தின் உறுப்பினராக்கி விடுவர்.

மற்றொரு முறையு முண்டு. ஆங்காங்குள்ள நிலையங்களில் மக்கள் உள்ளத்தைத் தமது மொழித் திறனாற் கவரவல்ல பேச்சாளர்கள அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். சொற்பொழிவூடு நிலையத்திலுள்ள சிறந்த நூல்களைப் பற்றிச் சிற்சில குறிப்புரைகளும் இணைத்துக் கூறுவர். இதனால் அந்நூல்களைக் காணவேண்டுமென்ற அவா சிலரிடத்தாவது பிறக்கும். சொற்பொழிவு முடிந்ததும் அவையினர் வெளியேறும் வழியில் அந்நூல்கள் யாவருக்கும் நன்கு புலனாகும் வகையில் வைக்கப்பட்டிருக்கும். எவரேனும் அவைகளை நோக்குவதாய்த்தோன்றின் அக்கணமே பணியாளர் ஒருவர் அவர் முன்வந்து பரிவுடன் பேசி அவர் விரும்பிய நூலை யெடுத்துச்செல்ல உதவுவார்; நிலை

யத்தின் அமைப்பை விளக்கும் துண்டு வெளியீடுகளையும் அந் நூலிற் செருகி விடுவார். நூலைப் படிக்குங்கால் இவ்வெளியீடு களைப் படித்து அவர் நிலையத்தின் உறுப்பினராக வேண்டுமென் பதே நோக்கம்.

நிலையத்தின் அமைப்பைப் பொதுமக்கள் தெரிந்துகொள்ளு மாறு பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட அறிக்கைகள் நகரத்தின் பல பகுதிகளிலுமுள்ள பொது விடங்களில் ஒட்டி வைக்கப்படும்.

நகர மக்களிற் சிலர் அவரவர் தொழிலின் நெருக்கடியால் நிலையத்திற்குச் சென்று புத்தகம் பெற இயலாதவராய் இருப்பர். இத்தகையோருக்கும் உதவி புரிதற்குகந்த வழிகள் கையாளப்படுகின்றன. நிலையத்தின் பணியாளர் தெருத்தெரு வாய்ச் சென்று புத்தகம் படிக்க வல்லவரைக் கணக்கிடுவர்; அந்தந்தத் தெருவில் பலரும் அடிக்கடி கூடும் பெரியோர் மாளி கைகளையும் அறிந்து கொள்வர். அப்பால், நிலையத்தின் புத்த கங்களிற் சிலவற்றை ஒரு பெட்டகத்திற் கொண்டுபோய் மாளி கையின் ஒரு புறத்திற் பெட்டகத்தை வைத்து மாளிகைத் தலைவர் பொறுப்பில் விட்டு வருவர்.

மேற்கூறிய முறைகள் நகரத்தாருக்கு உதவுவன. புத்தக நிலையம் நாட்டாருக்குப் பயன்படுவ தெவ்வாறு? நகரத்திற்குப் புறம்பே வாழ்ந்து வருவோர் நிலையத்திற்கு வந்துபோக முடியா தன்றோ? அதனால் பணியாளர் நாட்டார் விரும்பத்தகும் நூல் களைத் திரட்டி, வண்டியிலேற்றிக்கொண்டு ஊரூராய்ச் செல்வர்; ஆங்காங்கு புத்தகங்களை யெடுத்துக்காட்டி அவரவர் விரும்பும் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச்செய்வர். சின்னாட் கழித் துத் திரும்பி வந்து, தாம் முன்னே கொடுத்த புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு வேறு புத்தகங்களைக் கொடுப்பர்.

இவ்வாறு பல மக்கட்கும் புத்தகங்களைக் கொடுத்து வாங் குங்கால் அவற்றிற் புழுதி படிந்திருப்பவை சில; எண்ணெய் தோய்ந்திருப்பவை சில; முதலேடு இழந்திருப்பவைசில; இடை யேடு இழந்திருப்பவை சில; கடையேடு இழந்திருப்பவை சில;

படம் பறி கொடுத்திருப்பவை சில; மேலுறை நீத்துக் காகிதச் சுருளாய்த் திரிவுற்றிருப்பவை சில; விலையேறிய நூல்களும் இவ்வாறு உருமாறி இழிநிலை யெய்துவனவாகும். இதனைத் தடுக்கும் வகையாது?

இந்த இடர்ப்பாட்டைக் களைதற்கு உருஷியா தேசத்தில் வழங்கும் முறை குறிக்கத் தக்கது. நிலையத்தின் அதிகாரிகள் ஒரு நாளைத் தேர்ந்து உறுப்பினரனைவரையும் அழைத்து ஒரு பொதுக் கூட்டம் கூட்டுவர். மேற்கூறி யாங்கு பாழடைந்த புத்தகமொன்றை அவையினர் முன்னிலையிற் கொணர்வர். பிறருக்குப் பயன்படாத நிலைமையை யடைந்துள்ள அப்புத்தகத்தை ஒரு சவமாயக் கருதி, சவத்திற்குரிய ஈமக்கடன்களைச் செய்வர்.

புத்தகங்களைக் காக்குங் கடமையை உறுப்பினருக்கு அறிவுறுத்தற் பொருட்டு வேறொரு முறையும் வழங்கி வருகின்றது. புத்தகம் சிதைவுறும் வரலாறு நாடக உருவ மாக்கப்படும். இந் நாடகம் சோகரசம்செறிந்துளதாயிருக்கும்; புத்தகமே நாடகத் தலைவன்; புழுதி, எண்ணெய், எழுதுகோல் முதலியன அத்தலைவனைச் சிதைத்தொழிக்க சதியோசனை செய்பவை. மக்கள் அறிவைப் பெருக்கும் பெருநெறி பிடித்து நிற்கும் தலைவன்; தன் பகைவர் சதியோசனையை மதியாதிருப்பதால் அவர்களுடைய சூழ்ச்சிகட்கு இலக்காகி இறுதியில் அழிவுறுகின்றான். இந்நாடகம் முறைப்படி நடித்துக் காட்டப்படும்.

புத்தக நிலையம் பெரும் பயனிறுத்தற்குத் துணைசெயும் மற்றொரு முறையுமுண்டு. அது, சிறுவர்கட்கென்று தனி நிலையங்களை நிறுவலே யாம். நிலையத்தின் நூல்களை நன்முறையில் உபயோகிக்கும் வழிகளைச் சிறுவருக்குக் கற்பித்து விட்டால், அச்சிறுவர் பெரியோராகுங்கால் புத்தகங்களை முறைப்படி பயன் படுத்துவர்; முறையுணராப் பிறருக்கும் முறையினை விளக்கிக் காட்டுவர்.

சிறுவர்க் கென்றுள்ள நிலயங்களிலும் அவரவர் விரும்பிய புத்தகங்களை யெடுத்துப் படிக்கும் உரிமை யுண்டு. சிறுவர்

பிறருதவி யின்றித் தாமே எடுத்துக்கொள்ளும் வகையில் புத்தகங்கள் தாழ்வான பேழைகளில் வைக்கப் பட்டிருக்கும். புத்தகங்கள் யாவும் சிறுவர் நாடும் பொருள் கொண்டனவாகவே யுள்ளவை; சிறு கதைகளைக் கவினுற ஓதுவன ஒருசில; களியாட்டக் குறிப்புடையன ஒரு சில; உள்ளங் கவரும் உருவங்கள் கொண்டவை ஒரு சில; கைத்தொழில் விளக்குவன ஒரு சில. இந்நிலையங்களிற் பணி புரிவோர் பெரும்பாலும் பெண்பாலரே. சிறுவர் இந்நிலையங்களை நாடி வரச் செய்வதற்கு கதை சொல்லல், சிறு நாடகம் நடித்தல், படக் காட்சி யளித்தல் முதலிய மகிழ்ச்சி விளைக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

புத்தக நிலையம் செழித்தோங்குவதற்காக மேனாட்டார் பற்றியுள்ள பேரூக்கம் நம்மவரிடத்தும் நன்கு ஊன்றல் வேண்டும். நமது புத்தக நிலையங்கள் தம்பாலுள்ள புத்தகங்களைப் பேரா அன்புடன் புல்லி நிற்காமல் மக்கள் பலருக்கும் அவைகளை வரையின்றி வழங்கி, அன்னார் அறிவாம் பெரும் பேறு பெற்று இன்பந் துய்த்து இறையருள் நாடக நற்றுணை நல்கி நெடும் புகழ் நடுக!

பழைய காலத்திய இருபெருங் கிணறுகள்

T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

I மாற்பிடுகு இருபெருங் கிணறுகள்

மாற்பிடுகு பெருங்கிணறு என்பது திரிச்சிராப்பள்ளிக்கு வடக்கே பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள திருவெள்ளறைப் புண்டரிகாட்சப் பெருமாள் கோயிலின் தென்பக்கத்திலுள்ளது. இங்குக் குறிக்கப்பெற்ற திருமால் கோயில் ஆழ்வார்களால்

பாடப் பெற்றதாகும். அன்றியும், இவ்வூரில் சிவாலயம் ஒன்று உளது. இது மலையிற் குடைந்ததொருகோயில் என்பது பார்ப்போர்க்கு இனிது புலப்படும். தற்காலத்தில் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானைச் சம்புநாதர் என்று வழங்குகின்றனர்; ஆனால் இதிற் காணப்படும் கல்வெட்டுக்கள் திருவானைக்கல் பெருமான் அடிகள் என்றே உணர்த்துகின்றன. இவ்விருகோயில்களிலும் சோழ மன்னர்களது கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவற்றுள் இரண்டு கல்வெட்டுக்கள் ஒரு கிணற்றின் மேற்பக்கத்தில் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று, கிணற்றை வெட்டுவித்தவன் யாவன் என்பதையும் அதற்கு இடப்பெற்ற பெயர் யாது என்பதையும் கிணறு வெட்டப்பெற்ற காலத்தையும் அறிவிக்கின்றது, மற்றொரு கல்வெட்டு அறுசீர் விருத்தமாக உள்ளது. கல்வெட்டுக்கள் இரண்டையும் அடியிற் காண்க.

1. (1) ஸ்வஸ்தி ஸ்ரீ பாரத்வாஜகோத்திரத்தின் வழித்தோன்றிய
 பல்லவ திலத குலோத்பவன் தந்திவர்மற்கு யாண்டு நான்கா
 வது தொடுத்துக் கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான் ஆலம்
 பாக்க விசைய நல்லூழான் (2) தம்பி கம்பன் அரையன்
 திருவெள்ளறைத் தென்னூர்ப் பெருங்கிணறு இதன்
 பெயர் மாற்பிடுகு பெருங்கிணறென்பது—இது ரட்சிப்
 பார் இவ்வூர் மூவாயிரத் தெழுநூற்று வரும்.

2. (1) கண்டார் காணு வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
 பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்
 (2) தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
 உண்டே லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய் *

இவற்றுள் முதலாவதுகல்வெட்டு பலஉண்மைச்செய்திகளையுணர்த்துகின்றது. பல்லவ குலத்தினர் பாரத்துவாஜ கோத்திரத்தினர் என்பதையும் அப்பல்லவ குலத்தில் தந்திவர்மன் என்னும் வேந்தன் ஒருவன் இருந்தான் என்பதையும் திருவெள்ளறைத் தென்னூர்ப் பெருங்கிணறு அவ்வேந்தனது ஆட்சியின்

* இப்பாடலில் ஏகார கெட்டெழுத்திற்குப் பிறகு யகரமெய் வந்திருத்தல் ஆராய்தற்குரியது.

நான்காம் ஆண்டில் தோண்டத் தொடங்கப்பெற்று ஐந்தாம் ஆண்டில் அவ்வேலை முடிவுற்றது என்பதையும் அப்பெருங் கிணற்றைத் தோண்டுவித்தவன் ஆலம்பாக்க விசைய நல்லூழான் தம்பியான கம்பன் அரையன் என்பதையும் அதன் பெயர் மாற்பிடுகு பெருங்கிணறு என்பதையும் அது இனிது புலப்படுத்துகின்றது.

நந்தி வர்மப் பல்லவ மல்லனது உதயேந்திரம் செப்பேடுகளிலும் காசாக்குடிச் செப்பேடுகளிலும் பாரத்துவாச முனிவர் பல்லவ மன்னர்களின் முன்னோர்களுள் ஒருவராகக் குறிக்கப் பட்டுள்ளார். (South Indian Inscriptions Volume II part III) பல்லவர்களைப் பாரத்துவாச கோத்திரத்தினர் என்று முதலாவது கல்வெட்டு உணர்த்துவதற்குக் காரணம் இதுவேயாகும். அக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள நந்திவர்மன் கி. பி. 717 முதல் கி. பி. 780 வரையில் நம் தமிழ் நாட்டில் ஆட்சிபுரிந்த நந்தி வர்மப் பல்லவ மல்லனது மகன்; கி. பி. 780 முதல் 830 முடிய சோழமண்டலத்தையும் தொண்டை மண்டலத்தையும் அரசாண்ட நெடுமுடி வேந்தன். எனவே, இவனது ஐந்தாம் ஆண்டாகிய கி. பி. 785-ல் மேலே குறித்துள்ள திருவெள்ளறைத் தென்னூர்ப் பெருங்கிணற்றின் வேலை முடிவெய்தி அது மக்கட்குப் பயன்படும் நிலையில் இருந்திருத்தல்வேண்டும். அப்பெருங் கிணற்றைத் தோண்டுவித்தவன் கம்பன் அரையன் என்பான். இவன் ஆலம்பாக்க விசைய நல்லூழான் என்பவனது தம்பி என்பது அக்கல்வெட்டால் அறியப்படுகின்றது. இங்குக் குறிக்கப்பெற்ற ஆலம்பாக்க விசைய நல்லூழான் தந்தி வர்மனது தந்தையாகிய நந்தி வர்மப் பல்லவ மல்லனது அமைச்சர்களுள் ஒருவன். இச்செய்தி நந்தி வர்மப் பல்லவ மல்லனது ஆட்சியின் அறுபத்திரண்டாம் ஆண்டில் வெளியிடப்பெற்ற * பட்டத்தாள்மங்கலம் செப்பேட்டினால் புலப்படுகின்றது. பெருங் கிணறு தோண்டுவித்த கம்பன் அரையனும் தன் தமையனைப் போலவே பல்லவ மன்னர்களது அரசாங்கத்தில் உயர்நிலையில் இருந்தவன் ஆதல்வேண்டும். அரையன் என்பது

* *Epigraphia Indica Volume XVIII No.14*

அரசனால் அளிக்கப்பட்ட பட்டமாகும், கம்பன் என்பது இவனது இயற்பெயர், எனவே, கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கம்பன் என்பது இயற்பெயராக வழங்கி வந்த செய்தி ஈண்டு அறிந்து கொள்ளுதற்குரிய தொன்றும். உடன் பிறப்பின ராய்ப் பல்லவ மன்னர்களான நந்தி வர்மப் பல்லவ மல்லன், தந்தி வர்மன் என்போரது ஆட்சிக் காலங்களில் உயர் நிலையி லிருந்து அரசாங்கத்தை நடத்தி வந்த இவ்விரு தலைவர்களும் ஆலம்பாக்கம் என்னும் ஊரில் வாழ்ந்தவர்கள் என்பது 'ஆலம் பாக்க விசைய நல்லூழான்' என்ற சொற்றொடரால் நன்கு வெளியாகின்றது.

இவ்வாலம்பாக்கம், லால்குடி என்று தற்காலத்தில் வழங் கும் திருத்தவத்துறையிலிருந்து அரியலூர்க்குச் செல்லும் பெரு வழியில் 12 ஆவது மைலில் உள்ளது. இது பல்லவர்களது ஆட்சிக் காலங்களில் தந்தி வர்ம மங்கலம் என்னும் பெயரை எய்தியிருந்தது; சோழ மன்னர்களது ஆட்சிக் காலங்களில் மது ராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று வழங்கிற்று; அந்நாளில் சோழ மண்டலத்திலிருந்த ஒன்பது வளநாடுகளில் ஒன்றாகிய இராசேந்திரச் சிங்கவள நாட்டின் உண்ணாடுகளுள் ஒன்றான பொய்கை நாட்டிலுள்ள ஊராக இருந்தது, (Annual Report on Epigraphy for 1905—06 page 63) திருவெள்ளறையி லுள்ள மாற்பிடுகு பெருங்கிணற்றைப் போல இவ்வாலம் பாக் கத்திலும் மாற்பிடுகு ஏரி ஒன்றும் இருந்ததென்று கல்வெட்டுக் களால் புலப்படுகின்றது. வெவ்வேறு ஊர்களிலுள்ள பெருங் கிணற்றிற்கும் ஏரிக்கும் ஒரே பெயரிட்டு வழங்கப் பட்டுள்ளமை ஈண்டுணரத்தக்கது. இவ்வேதுபற்றித் திருவெள்ளறையில் பெருங்கிணறு தோண்டுவித்த கம்பன் அரையன் என்னும் தலைவனே தன் ஊராகிய ஆலம்பாக்கத்திலும் மாற்பிடுகு ஏரி வெட்டுவித்திருத்தல் கூடும் என்றும் எண்ணலாம். மாற்பிடுகு ஏரியை வெட்டுவித்தவன் இவனது தமையனாகிய ஆலம்பாக்க விசைய நல்லூழானை இருத்தல்வேண்டும் என்று கூறினும் பொருந்தும். இவ்வூர்க்குத் தந்தி வர்ம மங்கலம் என்னும் ஒரு பெயரிருந்திருப்பதை நோக்குங்கால் கி. பி. 780 முதல் 830

முடிய ஆட்சிபுரிந்த நந்திவர்மன் என்ற பல்லவ மன்னனால் உடன் பிறப்பினராகிய இவ்விருவர்க்கும் இது முற்றூட்டாக அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று அறியப்படுகின்றது.

இனித் திருவெள்ளறையில் தோண்டுவிக்கப்பெற்ற கிணற்றின் பெயர் ஆராய்தற்குரிய தொன்றும். கல்வெட்டில் 'இதன் பெயர் மாற்பிடுகு பெருங்கிணறு என்பது' என்றிருத்தலால் நாகரிகம் மிகுந்துள்ளதாகக் கருதப்படும் இந்நாளில் ஆற்றின் பாலங்களுக்கும் பிற கட்டிடங்களுக்கும் பெயரிட்டு வழங்குவது போல அந்நாளிலும் அத்தகைய வழக்கம் இருந்து வந்தது என்பது நன்கறியக் கிடக்கின்றது. மாற்பிடுகு என்பது ஒரு சிறந்த பட்டம் என்று புலப்படுகின்றது. மால்+பிடுகு என்ற இத்தொடர் மொழியின் பொருள் பேரிடி என்பதே யாம். இப்பட்டத்தையும் விடேல் விடுகு, பகாப்பிடுகு பெரும்பிடுகு என்ற பட்டங்களையும் பெற்று வாழ்ந்த சில முத்தரையர்களின் கல்வெட்டுக்கள், செந்தலை, திருச்செந்துறை, திருமெய்யம், மலைக்கோயில் முதலான ஊர்களில் உள்ளன. இன்னோர், பல்லவ மன்னர்கட்குந் திறை செலுத்தி வந்த குறுநில மன்னர் ஆவர். எனவே, இப்பட்டங்கள் பல்லவ மன்னர்களால் இவர்களுக்கு வழங்கப் பட்டிருத்தல் வேண்டும். செங்கற்பட்டு ஜில்லா வல்லங் குகைக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு, பல்லவ வேந்தனாகிய முதல் மகேந்திர வர்மன் பகாப்பிடுகு என்னும் பட்டம் உடையவனாயிருந்தனன் என்று உணர்த்துகின்றது. சைவசமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகளைத் துன்புறுத்தியவன் இவ்வேந்தனே யாவன். இவனது பேரனுடைய புதல்வனான முதல் பரமேச்சுரவர்மன் பெரும்பிடுகு என்ற பட்டம் எய்தியவன் என்பது கூரத்துச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது. (South Indian Inscriptions Volume I page 154.) கி. பி. 830 முதல் 854 வரையில் ஆட்சிபுரிந்த தெள்ளாறெறிந்த நந்தி வர்மன் விடேல் விடுகு என்ற பட்டமுடையவன் என்பது நந்திக் கலம்பகத்தால் புலப்படுகின்றது. இவனது தந்தையாகிய தந்தி வர்மனே மாற்பிடுகு என்னும் பட்டத்துடன் விளங்கியவன். எனவே, கி.பி.785ஆம்ஆண்டில் திருவெள்ளறையில்

கம்பன் அரையன் என்னுந் தலைவனால் அமைக்கப்பெற்ற மாற்பிடுகு பெருங்கிணறு கி. பி. 780 முதல் 830 வரையில் அரசாண்ட பல்லவ வேந்தனாகிய தந்தி வர்மனது பட்டப் பெயரால் அக்காலத்தில் வழங்கப்பெற்றிருத்தல் வேண்டுமென்பது நன்கு வெளியாதல் காண்க.

II

இராசராசன் கிணறு

இராசராசன் கிணறு என்பது காஞ்சிமா நகரிலிருந்து வந்தவாசிக்குச் செல்லும் பெருவழியில் மாமண்டூருக்குத் தெற்கே ஐந்துகல் தூரத்திலுள்ள உக்கல் என்ற ஊரில் மேலைப்பெருவழியிலுள்ளது. இக்கிணற்றின் வரலாற்றை அவ்வூரிலுள்ள புவனி மாணிக்க விஷ்ணு கிரகம் என்னும் பெயருடைய திருக்கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு நன்கு விளக்குகின்றது. அதனை அடியிற் குறிக்கின்றேன்.

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்க பாடியும் நுளம்பபாடியுந் தடிகைபா

2. டியும் குடமலைநாடும் கொல்லமுங் கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டப்பாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்றித் தண்டாற்

3 கொண்ட தன்னெழில் வளரூழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோ ராஜகேஸரி வன்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்குயாண்

4 டு உயக ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய ஸ்ரீவிக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்து மேலைப்

5 பெருவழியில் ஸ்ரீராஜராஜதேவர் திருநாமத்தால் கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் பணிமகன் சோழ மண்டலத்து தென்கரை நாட்டு நித்த

6 விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன் இவனை ஸ்ரீராஜராஜ கிணற்றில் கொட்டிக்கு நிறைப்பார்க்கு அருமொழிதேவன் மரக்காலால் நிசதம் நெல் உடு (குறுணி) ஆ

7 கக் திங்கள் கூ-க்கு நெல் * கூய கலமும் ஸ்ரீராஜராஜன் கண்ணிரட்டுவார்க்கு நிசதம் நெல் * உடு (குறுணி) ஆக திங்கள் ‑க்கு நெல்லு கூய கலமும் இப்பந்தலுக்கு குசக்கலம் இரு

8 வார்க்கு திங்கள் க-க்கு நெல்லு ¾ (இருதூணி) ஆக திங்கள் ௯-க்கு நெல்லு ச கலமும் ஸ்ரீராஜராஜன் கிணற்றுக்கும் கொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டுதோறும் புதுக்குப் புறமாக வைச்ச

9 நெல்லு உ கலம் ¾ (இருதூணி) ஆக நெல் * கூயகூ கலம் ¾ (இருதூணி) இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையோம் இறைத்ரவியமும் க்ரையத்ரவியமும் கொண்டு இறை இழிச்சி....

இக்கல்வெட்டினால் பல செய்திகள் (South Indian Inscription Volume III No. 44) அறியக்கிடக்கின்றன. இதில் குறிக்கப்பெற்றுள்ள கோராஜகேசரி வர்மன் இராஜராஜன் சுந்தரசோழன் என்று வழங்கும் இரண்டாம் பராந்தகசோழனது மகன்; தஞ்சைமாநகரிலுள்ள இராசராசேச்சுரம் என்னும் திருக்கோயிலை எடுப்பித்த பெருமையுடையவன்; கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரையில் சோழ மண்டலத்தையும் பிற மண்டலங்களையும் சிறப்புடன் ஆட்சிபுரிந்த பெருந்தகையாளன்; இவ்வேந்தனது திருப்பெயரால் இராஜராஜன் கிணறு அமைக்கப்பட்டது. இக்கிணற்றைச் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உக்கல் என்ற ஊரில் தன் அரசன் பெயரால் அமைப்பித்துத் தண்ணீர் இறைத்தற்கு நிபந்தம் விட்டவன் முதல் இராஜராஜ சோழனது பணிமகனும் சோழமண்டலத்தில் நித்த விநோத வளநாட்டிலுள்ள ஆவூர்க் கூற்றத்து ஆவூரில் வாழ்ந்த தலைவனுமாகிய கண்ணன் ஆரூரன் என்பான். நித்த விநோத வளநாடு

* இவ்விடத்தில் செல்லையுணர்த்தும் குறியுள்ளது.

என்பது முதல் இராஜராஜசோழன் காலத்தில் சோழமண்டலத்திலிருந்த ஒன்பது வளநாடுகளுள் ஒன்றாகும். சோழமண்டலம் முதல் இராஜராஜசோழனது ஆட்சிக்காலத்திற்கு முன்னர், பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததேயன்றி வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. முதல் இராஜராஜனது ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டில் தான் சோழமண்டலம் இராஜேந்திர சிங்கவளநாடு, இராசாச்ரய வளநாடு, நித்தவிநோத வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, அருண்மொழிதேவ வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராசராச வளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு என்ற ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வளநாடும் பலநாடுகளைத் தன்னகத்துக் கொண்டு விளங்கிற்று. வளநாட்டைத் தற்காலத்திலுள்ள ஜில்லாவுக்கும் நாட்டைத்தாலூகாவிற்கும் ஒப்பாகக் கூறுதல் பொருந்தும். வளநாட்டின் உட்பகுதிகளுள் சிலவற்றைக் கூற்றங்கள் என்று வழங்குவதும் உண்டு. மேலே குறித்துள்ள ஒன்பது வளநாடுகளின் பெயர்களும் இராஜராஜசோழனது இயற்பெயரும் புனை பெயர்களுமே யாம். பெரும்பான்மையாக நோக்குமிடத்து ஒவ்வொரு வளநாடும் இரண்டிரண்டுபேராறுகளுக்கும் இடையில் அமைந்திருந்த நிலப்பரப்பேயாகும்.

மேலே வரைந்துள்ள கல்வெட்டில் குறிக்கப்பெற்ற நித்தவிநோத வளநாடு என்பது தஞ்சாவூர் தாலூகாவின் கீழ்ப்பகுதியும் பாவநாசந் தாலூகாவின் மேற்பகுதியும் மன்னார்குடித் தாலூகாவின் வடபகுதியும் அடங்கிய நிலப்பரப்பாகும். ஆலூர் கூற்றம், கிழார்க் கூற்றம், வெண்ணிக் கூற்றம், பாம்புணிக் கூற்றம், நல்லூர்நாடு, கரம்பைநாடு, முடிச்சோணாடு என்பவை நித்தவிநோத வளநாட்டின் உட்பகுதிகளாகவுள்ள சிலநாடுகள் ஆகும்.

இனி, ஆலூர்க் கூற்றத்து ஆலூர் என்பது தற்காலத்தில் தஞ்சைஜில்லா பாவநாசந் தாலூகாவிலுள்ளதும் சைவசமயாசாரியார்களால் பாடப்பெற்ற சிறப்புடையதும் பசுபதீச்சுரம் என்னும் திருக்கோயிலைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவதுமாகிய ஆலூரேயாகும். ஆலூர்க் கூற்றம் என்பது இவ்வாலூரைத்

தலைநகராகக்கொண்டு இதனைச் சூழ்ந்திருந்த ஒரு சிறுநாடாகும். இரும்புதலை, விளாத்தூர் முதலான ஊர்கள் இக்கூற்றத்திலிருந்தன என்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. எனவே, தஞ்சாவூர் ஜில்லா பாபநாசத் தாலுகா ஆவூரில் வாழ்ந்த தலைவனும் முதல் இராஜராஜசோழனது பணிமகனுமாகிய கண்ணன் ஆரூரன் என்பவனே செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உக்கல் என்ற ஊரில் தன் அரசனாகிய இராஜராஜன் பெயரால் கிணறு தோண்டுவித்துத் தண்ணீர் இறைப்பார்க்கு நிபந்தம் விட்டவன் என்றுணர்க.

இக்கல்வெட்டில் காணப்படும் அருமொழி தேவன் மரக்கால் அரசாங்க முத்திரையிடப்பெற்ற மரக்கால் ஆகும். அருமொழி தேவன் என்பது முதல் இராஜராஜனுக்குரிய பெயர்களுள் ஒன்றும். இவ்வேந்தன் காலத்திலிருந்த அரசாங்க மரக்காலுக்கு 'இராசகேசரி' என்ற பெயர் வழங்கிற்று என்றும் இம்மன்னர் பெருமானால் எடுப்பிக்கப்பெற்ற தஞ்சை இராசராசேச்சுரம் திருக்கோயிலிலிருந்த மரக்காலுக்கு ஆடவல்லான் என்ற பெயர் வழங்கிற்று என்றும் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. இங்குக் குறிக்கப்பெற்ற அருமொழிதேவன் இராசகேசரி, ஆடவல்லான் என்ற மூன்று மரக்கால்களும் ஒரே அளவுள்ளவை என்பது ஈண்டு உணர்தற்குரியது.

நாள்தோறும் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பவனுக்கு நாள் ஒன்றுக்குக் கூலி இரண்டு மரக்கால் நெல்லும் கொடுக்கப்பட்டு வந்தது என்பது இக்கல்வெட்டால் புலப்படுகின்றது. அன்றியும், திங்கள்தோறும் மட்பாண்டங்கள் இடுவோனுக்குத் திங்கள் ஒன்றுக்கு எட்டு மரக்கால் நெல் கூலியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதம் நேருமாயின் அவற்றைப் புதுக்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு இரு கலனே எட்டு மரக்கால் நெல் நிபந்தமாக வைக்கப்பட்டுள்ளது.

இனி, இக்கல்வெட்டில் காணப்படும் பெருவழி (Road) பணிமகன் (Servant) புதுக்குப்புறம் (Cost for repairing) என்ற

செந்தமிழ்த் தொடர்மொழிகள் நமது உள்ளத்தைப் பிணிக்குந் தன்மையனவா யிருக்கின்றன.

'மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணுப் பெருந்தகையாள் பெற்றானும்—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா வுடம்பெய்தி னார்'

திருக்குறளும் சேக்கிழாரும்

பண்டிதர், R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், நன்னிலம்.

செந்தமிழ்க் களஞ்சியமாகிய தெய்வத் திருக்குறளை எடுத்தாண்ட தமிழ் நூலாசிரியர்களுக்குள், பெரிய புராணம் என வழங்கி வருகிற திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழாரும் ஒருவராவர். ஆனால் திருக்குறளை எடுத்தாண்ட தமிழ் நூலாசிரியர்களுக்குள், அதனை மிக்க நயம்பெற எடுத்தாண்டவர்கள் சிலர்களே. இத்தகையோர்களை யெண்ணுமிடத்து அவ்வரிசையில் முதலில் வைத்து எண்ணப்பெறத் தகுந்தவர் சேக்கிழாரே யாவர் எனக் கூறுதல் மிகையாகாது. ஆயின் இவ்வாறு கூறுதற்குக் காரணம் யாதெனில், இதனை ஆராய்தற்கு முன்னரே, திருக்குறள் மக்கட்பகுதியினர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுதற்குரியதாமாறு அதன்கணுள்ள சிறப்பு யாதெனை ஆராய்தல்வேண்டும். இதனை நன்கு ஆராய்ந்த ஆசிரியர் கல்லாடனார்,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவர் தமக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்." எனக்

கூறியுள்ளதை நோக்குமிடத்து, திருவள்ளுவர் உலகியலை எடுத்துக்காட்டியே அறமாதிய பொருள்களை விளக்கியிருத்தலின், திருக்குறள் அறிவுடையோர் எவராலும் மறுக்க முடியாததொரு நூலாயிருக்கின்றதென்பது தெளிவாக விளங்குகின்றது. அங்ஙனமாயின் திருக்குறளிற் கூறப்படுவனவெல்லாம் உலகியலிற் காணப்படுவனவோ என வினவுவார்க்கு விடையிறுப்பார் போன்று, சேக்கிழார் திருக்குறளை எடுத்தாண்டிருப்பது அறிஞர்கள் பலபடப் புகழ்ந்து பாராட்டத் தகுந்ததாகும். உலகியலில் எடுத்துக் காட்ட முடியாத குறட்பாக்களை உவமையில் வைத்துக் காட்டியிருப்பதும், திருவள்ளுவர் பொதுவகையாற் கூறியிருப்பனவற்றை சிறப்பு வகையாற் கூறியிருப்பதும், திருக்குறட்பாக்களின், கருத்துக்களையும், அடிகளையும், சொற்றொடர்களையும், சொற்களையும், எடுத்தாண்டிருப்பதும், ஆராய்வார்க்கு மிக்க இன்பம் பயப்பனவாகும். இவற்றையெல்லாம் பின்வரும் செய்யுட்களில் ஆண்டாண்டுக் காண்க.

1. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

(இ-ள்) எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வியறிவானுய பயன் யாது? மெய்யுணர் வினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின். எ-று.

இவ்வாறு கல்வியறி வானுய பயன் கடவுளின் நற்றாளைத் தொழுவதே யாம் எனக்கொண்டார் உளரோ? அங்ஙனமாயின் அவர் யார்? என வினவுவார்க்கு விடையிறுப்பார் போன்று இக்குறட் கருத்தை, சேக்கிழார்.

செப்புதிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மைபணிபுங் கண்டத்தான் மலரடிக்கே யாளானார்
பொய்படிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்

என்ற செய்யுளில் அழகுபெற அமைத்திருத்தல் காண்க. பொய்ப்படிமை யில்லாத புலவரெனப புகழ்மிக்கார், கருவி நூல்களையும், பொருள் நூல்களையும் கற்று, அக்கல்வி யறிவானுய

மெய்யறிவின் பயன் இதுவே எனத்துணிந்து, மையணியுங் கண்டத்தான் மலரடிக்கே ஆளானார் என்பதே இச்செய்யுளின் திரண்ட பொருளாகும்.

இச்செய்யுளிற் கூறியவாறே

உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றின்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்பு கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார்.

என்ற செய்யுளிலும் அக்குறட் கருத்தை அமைத்திருத்தல் காண்க.

சேக்கிழார், இவ்விரு செய்யுட்களிலும், "மையணியுங் கண்டத்தான் மலரடி" எனவும், "கூற்றுதைத் தகழல்" எனவும் கூறியிருப்பன நோக்கத் தகுந்தனவாகும். இவ்வாறு கூறிய தெற்றுக் கோவெனின், திருவள்ளுவர் அத்திருக்குறளில் கூறியுள்ள, "நற்றாள்" என்ற சொற்றொடர்க்குப் பொருள் கண்ட பரிமேலழகர், 'பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார்,' எனக் கூறியிருத்தலின், அந்நற்றாள் இதுவே யாமென்பார். "மையணியுங் கண்டத்தான் மலரடி" எனவும் கூற்றுதைத் தகழல் எனவும் கூறிப்போந்தனர் சேக்கிழார். தனக்குப் பிறப்பில்லாத முதல்வனே உயிர்களின் பிறவிப் பிணியை நீக்கக் கூடுமாகலின், அத்தகைய முதற்கடவுள் சிவபெருமானே யாமென்பது, இந்நஞ்சால் நாம் இறந்து படுவோம் என்றஞ்சித் திருமால் முதலிய தேவர்களெல்லாம், சிவபெருமானைச் சரணடைய, அவர் அதை உண்டமைந்திருந்தமையானும், கூற்றை யுதைத்தமையானும் விளக்குதலின் என்க.

எனவே பிறவிப் பிணியை அறுத்தற் குரியார் தொழ வேண்டுவது சிவபெருமானது திருவடிகளையே என்பது இதனால் தெள்ளிதிற் புலனாகின்றது.

'வாலறிவன்' எனப் பொதுவகையாற் கூறிப்போந்ததனை, சிவபெருமான் எனச் சிறப்பு வகையால் இச்செய்யுளில் கூறியவாறே, திருவள்ளுவர் பொது வகையாற் கூறிப்போந்தவற்றை

யெல்லாம், சேக்கிழார் சிறப்பு வகையாற் கூறியிருத்தலை, முன்னர் காட்டப்பெறும் செய்யுட்களினும் காண்க.

2. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

இ-ள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியில் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார். எ-று.

இத்திருக்குறட் கருத்தை

ஓங்குவள ரெயிலினுடன் விளங்கு வாயில்
அப்பதியில் வாழ்பெரியா ருள்ளம் போல
ஓங்குநிலைத் தன்மையவாய் அகில முய்ய
உமைபாகர் அருள்செய்த ஒழுக்க மல்லால்
நீங்குநெறி யடையாத தடையு மாகிச்
செங்கெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவிவளர் ஒளியா லென்றும்
தடநெடு வானளப் பனவாந் தகையவாகும்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

இத்திருக்குறளிலுள்ள 'பொறி வாயிலைந் தவித்தான்' என்ற தொடர் மொழிப் பொருளை,

கற்குடி மாமலை மேலெழுந்த கனகக் கொழுந்தினைக் கால்வளைய
பொற்றிரண் மேருச் சிலைவளைத்த போர்விடை யாளியைப்
[போற்றிசைத்து
நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞானசம்பந்தர் புலங்க ளைந்தும்
செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து திருச்சிராப்பள்ளி சிலம்பணைந்
[தார்

என்ற செய்யுளில் புலங்கள் ஐந்தும் செற்றவர் என ஆண்டிருத்தல் காண்க.

3. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடி சேரா தார்.

இ-ள். இறைவனடியாகிய புணையைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர். எ-று.

இக்குறட் கருத்தை

அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கிய அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்களி கந்திட இருதாளின்
புணைய ருளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டெழுந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி

என்ற செய்யுளிற் காண்க.

4. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

இ-ள். மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் நிலைபெற்று உயிர்களை வருத்தும்பசி. எ-று.

5. ஏரி னுழாஅர் உழவர்புய லென்னும்
வாரிவளங் குன்றிக் கால்.

இ-ள். உழவர் ஏரானுழுதலைச் செய்யார், மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின். எ-று

6. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

தேவர்கட்கும் இவ்வுலகின்கண் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது, மழை பெய்யாதாயின். எ-று.

இக்குறட்பாக்களை,

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவுமாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரு பூசையாற்றா
மிக்கபெரும் பசியுலகில் விரவலாலே

பண்ணமரும் மொழியுமையாள் முலையின்ஞானப்
பாலறுவாய ருடனரசும் பார்மேல்
கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினோர்க்குஞ்
சவலைவருமோவென்று கருத்துட் கொண்டார்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

7. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

இ-ள். அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும், மேகந்தான் அதனைக்குறைத்து அதன்கண் பெய்யாது விடுமாயின். எ-று.

இத்திருக்குறளை,

மகிழ்ந்த தன்றலை வைகுமந் நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைபுண ரோரையுட் புணர்ந்து
நிகழ்ந்த தன்மையின் நிலவு மேழ்கடல் நீர்மைகுன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்.

என்ற அருமைச்செய்யுளில் அழகுபெற ஆண்டிருத்தல் காண்க.

8. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றிவ்
வைம்புலத்தா றோம்பல் தலை

இ-ள் பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தானென்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்லறத்தானுக்குச் சிறப்புடைய அறமாம். எ-று.

இத்திருக்குறளை,

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரசுங் கடவுட் போற்றி குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந் துளபதிக ளெங்கும்

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

9. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்.

இ-ள். மனையறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள் ஒருவன் இல்லாளிடத்து இல்லையாயின் அவ்வில் வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமை யுடைத்தாயினும் அஃதுடைத் தன்று.

10. இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை

இ-ள். ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையினளாயினக்கால் இல்லாதியாது?. அவள் அன்னளல்லாக்கால் உள்ளதியாது?. எ-று,

இவ்விரண்டு பாட்டானும், மாட்சியுள்ள மனையாளே இல்வாழ்க்கைக்கு ஆதாரம் என்பது பெறப்படுகின்றது. இதனை

நீராருஞ் சடைமுடியார் அருளினல் நிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவரெனும் திருமைந்தர் அவதரித்தார்.

என்ற செய்யுளில் அழகுபெற அமைத்திருத்தல் காண்க.

11. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

இ-ள். பிற தெய்வம் தொழாது தன்தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும். எ-று,

இக்குறட்கருத்தை

குழைக்கலையும் வடிக்காதிற் கூத்தனு ரருளாலே
மழைக்குதவு பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் [பெற்றெடுத்தார்

என்ற செய்யுளிற் காண்க.

12. பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற

இ-ள். ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை. எ-று. இக்குறட் கருத்தை

மற்ற மனையோன் திருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் தவப் [புதல்வன்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும் பேறெல்லைப் பயன் [பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பாயுள ளபவித் திரையாம்.

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

இச்செய்யுளில் இறுதிபடியில்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இ-ள். எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக் கொள்க; கொண்டு அதன்கண் உபாயத்தைச் செய்க; விடாது வந்த பற்றுவிடற்கு. எ-று. என்ற குறளை எடுத் தாண்டிருத்தல் காண்க. பற்றையெறியும் பற்று யாது? என வினவுவார்க்கு "பற்றற்றான் பற்றினைப் பற்றி நின்று செய்யும் பற்று." என்பது தானே பெறப்படுதல் காண்க.

இக்குறட் கருத்தையே

அப்பொற்பதியி னிடைவேளாண் குலத்தைவிளக்க அவதரித்
செப்பற்கரிய பெருஞ்சீர்த்தி சிவனார்செய்ய கழல்பற்றி [தார்
எப்பற்றினையும் அறவெறிந்தார் எல்லைதெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத்தர்கள் பாற்பரிவுடையார் எம்பிரானார் விறன்மிண்டர்

அப்பொற்பதிவாழ் வணிகக்குலத் தான்ற தொன்மை
செப்பத்தகு சீர்க்குடி செய்தவஞ்செய்ய வந்தார்
எப்பற்றினையு மறுத்தேறுகைத் தேறுவார் தாள்
மெய்ப்பற்றெனப் பற்றிவிடாத விருப்பின் மிக்கார்.

என்ற செய்யுட்களிலும் எடுத்தாண்டிருத்தல் காண்க.

13. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

இ-ள். தம்மக்கள தறிவுடைமை பெரியநிலத்து மன்னு நின்ற உயிர்கட்கெல்லாம் தம்மினும் இனிதாம். எ-று.

இக்குறட் கருத்தை,

தம்பிரானைத் தோழமை கொண்டருளித் தனது தடம்புயஞ்சேர்
கொம்பனார்பால் ஒருதூது செல்ல ஏவிக்கொண் டருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமான் இணையில் துணைவராம்
நம்பியா ரூரரைப் பயந்தார் ஞாலமெல்லாங் குடிவாழ.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

14. அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

இ-ள். அன்பிற்கும் பிறர்அறியாமல் அடைத்துவைக்கும் தாழ் உளதோ? அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாரு மறியத் தூற்று மாகலான். எ-று.

இக்குறட் கருத்தை

தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடிதை வருசிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோ லன்புநீர் பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

என்ற செய்யுளில் விளக்கியிருத்தல் காண்க.

15. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

இ-ள். தன்கட் சென்ற விருந்தைப் பேணிப் பின்செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான் வருபிறப்பிற்றேவனாய் வானிலுள்ளார்க்கு நல்விருந்தாம். எ-று.

இத்திருக்குறளை,

அருவிலையிற் பெறுங்காசு மவையேயாகி
அமுதுசெய்யத் தொண்ட ரளவிறந்துபொங்கி

வருமவர்க ளெல்லார்க்கும் வந்தாருக்கும்
மகிழ்ந்தூட்ட இன்னடிசில் மாளாதாகத்
திருமுடிமேற் கங்கையொடு திங்கள் சூடும்
சிவபெருமா னருள்செய்யச் சிறப்பின்மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர்நாவுக்
கரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்கலிந்தார்.

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

16. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இ-ள். அனிச்சப்பூ மோந்துழி யன்றிக் குழையாது; விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். எ-று.

செப்பமைக்கண் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றாற்றலு மென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முத லாய இன்முகம் இல்வழி செப்பமைக் கண்ணே வாடி நீங்குதலின் தீண்டியவழியல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம். எனவே விருந்தோம்புவார்க்கு இன் முகமும் இன்சொல்லும், நன்றாற்றலும், ஆகிய மூன்றும் இன்றி யமையாதன என்பது பெறப்படுகின்றது. இதனை,

ஆரமென்பு புனைந்த வையர்தம் அன்ப ரென்பதோர் தன்மை [யால்
நேரவந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன்
கூரவந் தெதிர்கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீரமென் மதுரப் பதம்பரி வெய்த முன்னுரை செய்துபின்,
கொண்டு வந்து மனைபுகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாதனத் திடைவைத் தருச்சனை செய்துபின்
உண்டி நாலு விதத்தி லாறுசுவைத் திறத்தன ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுதுசெய்ய வளித்துளார்

என்ற செய்யுட்களில் காண்க.

17. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

இ-ள். விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன அளவிற் றென்பதோரளவுடைத்தன்று; அதற்கு அவ்விருந்தின் றகுதியளவே அளவு. எ-று. இத்திருக்குறட் கருத்தை,

கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்றன் அடியாரே
பெறலரிய விருந் தாகப் பெறிதன் மேலில்லை யெனும்
அறிவினராய வரமுது செய்வ தனுக் காதரிப்பார். என்ற

செய்யுளில் ஆண்டிருத்தல் காண்க.

18. இன்சொலா லீரமளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்

இ-ள். இன்சொலாவன அன்போடு கலந்து வஞ்சனையில வாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள். எ-று

இத்திருக்குறளை,

மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுர [வாக்கில்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளும் செம்பொற் [றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் [செல்வார்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தலை கூர்ந்து நோக்குக.

19. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொல் லவர்க்கு

இ-ள். எல்லார் மாட்டும் இன்பத்தை விளைவிக்கும் இன்சொல்லை யுடையார்க்கு துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம். எ-று.

இக்குறட்கருத்தை,
தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னல்வலித்

தாங்கயிற் கத்தி யாலரிந் தன்புடன்
ஒங்கு சீர்த்திருத் தொண்டி னுயர்ந்தனர்

என்ற செய்யுளில் "திங்கு சொற்ற திருவிலர்" என எதிர்மறை முகத்தாற்பெற வைத்திருத்தல் காண்க.

(தொடரும்.)

தமிழ்ச் செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் :—அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர், உயர்திரு. சுவாமி விபுலானந்தர் அவர்கள் Bsc., (London) தலைமையில் ஆங்கிரச தை 9, 10 தேதிகளில் (21, 22—1—1933) இச்சங்கத்தின் 22-ம் ஆண்டு விழா மிகச் சிறப்புடன் நடந்தது. நன்னிலம் உயர்தரக் கல்லூரி, ஆசிரியர் திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள் 'கம்பரும் சேக்கிழாரும்' என்பது பொருளாகவும் மகிபாலன்பட்டி, பண்டிதமணி திரு. மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் 'மெய்யுணர்வு' என்பது பொருளாகவும், மன்னார்குடி, பிண்ட்லே கல்லூரி, ஆசிரியர், திரு. தேவநேசப்பாவலர் அவர்கள் 'தமிழ் ஆக்க மரபு' என்பது பொருளாகவும், தலைவர் அவர்கள் 'இசைத் தமிழ்' என்பது பொருளாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள் 'பாரதியார் தமிழ்ப்பற்று' என்பது பொருளாகவும் கேட்டார் உளங்கனியப் பேசினர்.

அண்ணாமலைப் பல்கலை கழகம் இச்சங்கத்திற்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் அளித்திருக்கும் உரிமைபோலவே, இவ்விரு சங்கத்தினரும் தத்தம் உறுப்பினருள் ஒவ்வொருவரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினராக அனுப்பும் உரிமையை அளிக்கவேண்டுமெனவும், அதற்காவன புரியுமாறு அரசியலாரையும், சட்டசபை உறுப்பினரையும் வேண்டுவதெனவும் முடிவு செய்யப் பெற்றது.

தமிழகத்தின் பலவிடங்களிலிருந்தும் சங்க விழாவைச் சிறப்பிக்க வந்திருந்த தமிழன்பர்கள் சங்கத்தின் நன்முயற்சிகளை வளம்பெறச் செய்யும் பெருநோக்குடன் இரண்டாம் நாட் காலையில் ஒருங்குகூடி வழி துறைகளை ஆராய்ந்தனர். சிறந்த தமிழ் நூல்களை எளியரும் கற்றுப் பயனடையும் வண்ணம் மலிந்த விலையில் பதித்து வெளியிடும் பணியை சங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை மிக விரைவில் வெளியிட வேண்டுமெனவும் முடிவு செய்யப் பெற்றது. ஆண்டுக் குழுமியிருந்த தமிழன்பர்கள் வெளிவரும் நூலில் 600 பிரதிகள்வரை வாங்கிக் கொள்வோம் எனக் கையொப்பமிட்டனர்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலும், திருவையாறு அரசர் கல்லூரியிலும் பிறவிடங்களிலும் பயிலும் மாணர்கள் பெருந் திறளாக வந்திருந்து தமிழ்ப்பணியாற்றியது பாராட்டத் தக்க செய்தியாகும்.

மதிப்புரை.

பாலபோத விவேகாநந்த சரிதம் :—இந்நூல் இராமகிருட்டின தேவரின் ஆசிரமத்தைச் சார்ந்த சுவாமி கேதாரீசுவரா நந்தர் அவர்களால் இயற்றப்பெற்றது. சுவாமி விவேகாநந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்றினை இளஞ்சிறூர்களும் கற்றுப் பயன் பெறும் வண்ணம் எளிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. நமது சமய நெறிகளின் மேதக்க மாண்புகளை மேனாட்டினர் புகழ்ந்து பாராட்டவும், அச்சீரிய நெறிகளில் அயல் நாட்டினரும் அடிப்பட்டு ஒழுகவும் செய்த பெரியாரின் சிறந்த செய்திகளை மாணவர்கள் இளமையிற் கற்றுத் தெளிதல் நலந்தருவதாகும். நல்லநடையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப் பட்டிருக்கிறது. தொடக்கக் கல்லூரிகளில் மாணவர் பயிலத் தக்கது. தமிழ் நாட்டிலுள்ள கலாசாலைத் தலைவர்களும், நூல் நிலையத் தலைவர்களும் இந்நூலைத் தமிழ் நாடெங்கும் பரவச் செய்யுங் கடப்பாடுடையார்.

Temple Chimes :—தாயுமானப் பெருந்தகையாரின் தெய்வப்பனுவலினின்றும் முப்பத்து மூன்று திருப்பாடல்களை அங்கிலத்தில் மொழிபெயர்த்து மேனாட்டினர்க்குதவும் பெருநோக்குடன் இந்நூல் இயற்றப் பெற்றதாகும். "கோயின் மணிகள்" எனப்பொருள்படும் அங்கிலப் பெயரை இந்நூலின் பெயராக ஆசிரியர் புனைந்து சார்த்தியது சாலப் பொருத்தமுடைத்து. இறைவனைத் துதிக்கும் முகத்தால் பதி பசு பாசங்களின் உண்மை, இயல் ஆதியவற்றையும், சமய நெறிகளின் பொதுவியல் சிறப்பியல்களையும், கடவுள் வழிபாட்டின் இன்றியமையாமையினையும் இன்ன பிறவற்றையும் இக்கோயின் மணிகள் உலகர்க்கு விளக்குவனவாகும்.

சைவசித்தாந்தத்தின் தாயகமாகிய தமிழகத்திற்றானே இச்சமயத்தின் ஒப்புயர்வற்ற சிறப்புகளும், உண்மைப் பண்புகளும் போற்றுவாரின்றி மங்குதல் கண்கூடு. இக்குறைபாட்டினை நன்குணர்ந்த பெரியார் திரு. S. P. Y. சுரேந்தரநாத் வாயிகிலி ஆரியா M. A. B. D. S. T. M. அவர்கள் பல்லாயிர மயில்களுக்கு அப்பாற்பட்ட சுவிசர்லண்டு நாடு சென்று, மேனாட்டினரும் இச்சமய மேம்பாடுகளைக் கற்றுப் பயன் எய்துமாறு இக்கலைகளை அங்கிலத்தில் வெளியிட்டிருக்கின்றனர். இவ்வரிய தமிழ்த்தொண்டினை காலத்தாற் செய்த பேருதவியெனத் தமிழகத்தார் நன்றி பாராட்டும் கடப்பாடுடையர், திரு. ஆரியா அவர்கள் இந்நன்முயற்சியை இடையீடின்றித் தொடர்ந்து புரிதற்கு பொதுவாகத் தமிழறிஞர்களும், சிறப்பாக சைவமடாதிபதிகளும் பொருளாலும், பிறவாற்றாலும் இயன்றபடி உதவிபுரியுங்கடமையை மேற்கொள்ளுவார்களென அறிவுலகம் எதிர்பார்க்கிறது.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪	ஆங்கீரச, மாசி.	மலர் ௰௧.

திருக்குறளும் சேக்கிழாரும்

பண்டிதர், R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், நன்னிலம்.

(முற்றொடர்ச்சி 398-வது பக்கம் பார்க்க.)

20. பணிவுடையன் இன்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற

இ-ள். ஒருவனுக்கு அணியாவது தன்னால் தாழப்படுவார்கண் தாழ்ச்சியுடையனாய், எல்லார்கண்ணும் இனிய சொல்லையும் உடையனாதல். எ-று.

இத்திருக்குறளை,

ஈசருக்கே அன்பானார் யாவரையுந் தாங்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்
றாசையினா லாவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

21. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

இ-ள். எல்லார்க்கும் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்க முடைமை குலனுடைமையாம்; அவ்வொழுக்கத்திற்றவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய்விடும். எ-று. இக்குறட் கருத்தை,

நன்மைநீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த
தன்மைமேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மையோங் கெயில்வளம்பதி பயின்றது வரம்பின்
றொன்மை மேன்மையில் நிகழ்பெருந்தொண்டை நன்னாடு

என்ற செய்யுளிற் காண்க.

22. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

இ-ள். அழுக்காறு பகைவரை யொழித்தும் கேடு பயப்ப தொன்றாகலின், அவ்வழுக்காறுடையார்க்குப்பகைவர்வேண்டா; கேடு பயத்தற்கு அதுவே யமையும். எ-று.

இத்திருக்குறளை,

அங்கது கேட்டுநின்ற அமணரும் அவர்மேற்சென்ற
பொங்கிய வெகுளிகூறப் பொறாமைகாரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமேதனிவாதி லழிந்தோமாகில்
வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனேயென்று சொன்னார்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

23. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு

இ-ள். தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினையுடையாரஞ்சார், அஃதிலராகிய சீரியார் அஞ்சுவார். எ-று.

இத்திருக்குறளை,

பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு நணுகிக் கருவரைபோல்

வவிச்செறு பொருகைக்கரி யிணையுய்த் திட வெருளார்
சேவிற்றிகழ்பவர் பொற்கழல் தெளிவுற்றனர் பெரியோர்

என்ற செய்யுளில் எடுத்தாண்டுள்ள நயம் காண்க.

24. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

இ-ள். தமக்கு நீருதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யா நின்றன; ஆகலான் அம்மேகங்கள் போல்வார்செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவன வல்ல. எ-று.

இத்திருக்குறளை,

ஆராவார்வ யானைக் கடவுட்டினைத் தேயமர்ந்தருளால்
சீரார்வண்ணப் பொன்வண்ணத் திருவந்தாதி திருப்படிக்கீழ்ப்
பாராதரிக்க வெடுத்தேந்திப் பணிந்தார் பருவமழைபொழியும்
காரானிகர்க்கவரிய கொடைக்கையார் கழறிற் றறிவார்தாம்

ஒருவரொருவரிற் கலந்த உணர்வாலின்ப மொழியுரைத்து
மருவவினியார் பாற்செய்வ தென்னுமென்னு மகிழ்ச்சியினால்
பருவமழைச் செங்கை பற்றிக்கொண்டு பரமர் தாள்பணிய
தெருவிநீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேரமான்றோழர்

என்ற செய்யுட்களில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

25. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன் கணவர்.

இ-ள். தாம் உடையபொருளை ஈயாது வைத்துப் பின்னிழந்துபோம் அருளிலாதார் வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையாரெய்து மின்பத்தினைக் கண்டறியார் கொல்லோ. எ-று. இத்திருக்குறளை,

ஆளுடங்கணாருக் கன்பரணைந்த போதடியிற் றாழ்ந்து
மூளுமாதரவு பொங்கமுன்பு நின்றினிய கூறி
நாளுநல் லமுதமூட்டி நயந்தனவெல்லா நல்கி
நீளுமின் பத்துட்டங்கி நிதிமழை மாரிபோன்றார்.

என்றுகணவர் கூறுதலும் அதனுக்கிசைந்தெம்பிரான்றொண்டர்
இன்றுதாழா தமுதுசெய்யப் பெற்றிங்கவர்தம் மலர்ந்தமுகம்
நன்றுகாண்ப மெனநயந்து நம்மைக்காக்க வருமணியை
சென்றுபள்ளி யினிற்கொண்டு வாருமென்றார் திருவனையார்

என்ற செய்யுட்களில் மிக்க நயம்பெற எடுத்தாண்டிருத்தல் காண்க.

26. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

இ-ள். தனக்கு இணையின்றாக வோங்கிய புகழல்லது உலகத்து இறவாது நிற்பது பிறிதொன்றில்லை. எ-று.

இணையின்றாக ஒங்குதலாவது கொடுத்தற்கரிய உயிர், உறுப்பு, பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால்தன்னேடொப்பதின்றித் தானே உயர்தல்,

இத்திருக்குறட் கருத்தை,

ஒருவாறு பெருங்கிளைஞர் மனங்கேற்றத் துயரொழிந்து
பெருவான மடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினர்
மருவார்மேல் மன்னவர்க்கா மலையப்போம் களிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தி னுயிர்கொடுத்துப்புகழ்கொண்டார்

மாசின்மனத் துயரொழிய மருணிக்கியார் நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினல்
ஆசிலறச் சாலைகளும் தண்ணீர்ப்பந்தரு மமைப்பார்

என்ற செய்யுட்களில் அமைத்திருத்தல் காண்க.

இவற்றுள் 'மாசின் மனத்துயரொழிய' என்ற செய்யுளில் இரண்டாவதடியில்,

அற்கா வியல்பிற்று செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்

என்ற திறக்குறளை எடுத்தாண்டிருந்தல் காண்க.

27. தவமும் தவமுடையார்க் காகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

இ-ள். பயனைபன்றித் தவந்தானு முண்டாவது முற்றவ முடையார்க்கே, ஆகலான் அத்தவத்தை அம்முற்றவ மில்லாதார் முயல்வது பயனில் முயற்சியாம். எ-று.

இத்திருக்குறளை,

அவர்முன்பணி வொடுதொழு தங்கணைவுற அணிகொம் பரின்
[மிசை யருகெங்கும்
தவமுன்புரிதலில் வருதொண் டெனுநிலை தலைநின் றுயர்
[தமிழிறை யோராம்
இவர்தம் திருவடி வதுகண்ட திசயமெனவந் தெதிரரகரவென்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின் றன வளர்சிறை மென்கிளியொடு
[சிறுபூவை.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

28. தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேடுவன் புட்சிமிழ்த் தற்று.

தவவேடத்தின் கண்மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல், வேட்டுவன் புதலின் கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற் போலும். எ-று. இத்திருக்குறளை,

இவர்நிலை யிதுவேயாக இலங்குவேற் றென்னனனை
அவர்நிலை யதுவாமந்நாள் அருகர்தம் நிலையாதென்னில்
தவமறைந் தல்லசெய்வார் தங்கண்மந் திரத் திற்செந்தீ
சிவநெறி வளர்க்கவந்தார் திருமடஞ்சாரச் செய்தார்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

29. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

இ-ள். குன்றியின் புறம்போல வேடத்தாற் செம்மையுடையராயினும், அதன் மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம். எ-று.

இத்திருக்குறளை,

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்புமுடன் கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப் போர்வீரர்க்குச் சொன்னவிடம் புகுந்தான்

மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டி
கையினிற் படைகரந்த புத்தகக்கவளி யேந்தி
மைபொதி விளக்கேயென்ன மனத்தினுட் கறுப்புவைத்து
பொய்தவ வேடங்கொண்டு புகுந்தனன் முத்திநாதன்

என்ற செய்யுட்களில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

30. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு

இ-ள். விடேய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறி கட்குரிய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல்வேண்டும்; கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும். எ-று.

விடாவிடத்து ஐம்புலன்களும், நன்னெறியிற் செல்லும் மனத்தைத் தடைசெய்து துன்பத்தானும், பாவத்தானுமன்றி வாராத பொருள்களிற் செலுத்தும் என்பது இதனாற் பெறப் படுகின்றது. இதனை,

பலதுறைகளில் வெருவரலொடு பயில்வலையுற நுழைமா
உலமொடுபடர் வனதடையுற உறுசினமொடு கவர்நாட்ட
நிலவியவிரு வின்னவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமனனிடை தடைசெய்த பொறிகளி னளவுளவே.

என்ற செய்யுளில் உவமையில் அமைத்திருத்தல் காண்க.

31. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்றும்
நிலையாமை காணப் படும்.

இ-ள். ஒருவன் இருவகைப் பற்றுமற்ற பொழுதே அப் பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்; அவையறுதபொழுது அவற்றுற்பிறந்திறந்து வருகின்ற நிலையாமைகாணப்படும். எ-று

இத்திருக்குறளை,

அகிலலோகமும் பொன்முதற் றுமெனு மளவில்
புகலுமப் பெரும்பற்றினைப் புரையற வெறிந்த
இகலில்மெய்த் திருத்தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்விசும்பிடை யணைந்தனர் பொழிந்தர் முகைப்பூ.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

32. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு.

இ-ள். மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்றுணரும் விபரீத வுணர்வானே உளதாம் இன்பமில்லாத பிறப் பிறப்பு. எ-று.

இத்திருக்குறளில் பொதுவகையாற் கூறியிருப்பனவற்றை,

அந்நிலைமைச் சாக்கியர்தம் அருங்கலை நூலோதியது
தன்னிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
என்னுமது தெளிந்தீச ரருள்கூட ஈறில்சிவ
நன்னெறியே பொருளாவ தெனவுணர்வு நாட்டுவார்.

செய்வானும் செய்வினையும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவ னென்றருளாலே யுணர்ந்தறிந்தார்.

என்ற செய்யுளில் சிறப்புவகையாற் கூறியிருத்தல் காண்க.

33. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இ-ள். யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும், அத்தோன்றியவற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று மெய்ப்பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது. எ-று.

இத்திருக்குறட் கருத்தை,

ஏதமே விளைந்ததிந்த அடிகண்மாரி யல்பாலென்பார்
நாதனு மாலவாயி னம்பனே காணுமென்பார்
போதமா வதுவுமுக் கட்புராணனை அறிவதென்பார்
வேதமும் நீறுமாகி விரவிடு மெங்குமென்பார்.

என்ற செய்யுளில் சிறப்புவகையால் விளக்கியிருத்தல் காண்க.

34. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

இ-ள். ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம் பொருளை உணர்ந்து இருவகைப் பற்றுமற ஒழுகவல்லனாயின், அவனை முன்சாரக் கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர் வொழுக்கங்களை யழித்துப் பின்சார மாட்டா. எ-று.

இத்திருக்குறளை,

மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள்ளை மைதானோ
செம்மேனி வெண்ணீற்றர் திருத்தோணி சிகரம்பார்த்
தம்மேயப் பாவென்றென் றழைத்தருளி யழுதருள
ஆர்வமிக் கெழுமன்பினால் மலரய னனைய
சீர்மறைத் தொழிற்சடங்கு செய்திருந்து நூல்முனிவர்
பார்வழிப் படவரு மிருவினைக ளின்பந்தச்
சார்பொழிப் பவர்திருக் கையிற்காப்பு நாண்சாத்த

என்ற செய்யுட்களில் எடுத்தாண்டிருக்கும் நயம் ஆழ்ந்து நோக்கி இன்புறத் தக்கதாகும்.

35. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

இ-ள். ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சையென்னும் இக்குற்றங்கள் மூன்ற னுடைய பெயருங் கூடக் கெடுதலான் அவற்றின் காரியமாகிய வினைப்பயன்கள் உளவாகா. எ-று.

இத்திருக்குறளை,

தலைப்பட்டா ரெல்லாரும் தனிவீரர் வாளிற்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம் போலாயினார்.

என்ற செய்யுளில் உவமையாகக் கூறியிருத்தல் காண்க.

இச்செய்யுளில்,

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

என்ற திருக்குறளினுள்ள 'தலைப்பட்டார்' என்ற சொல்லை அப்படியே எடுத்தாண்டிருத்தலையும் நோக்குக. இன்னும் இத் திருக்குறளில் பிறவியை 'வலை' என உருவகித்துக்கூறியிருப்பது போல,

போர்வலைச் சிலைத்தொழில் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க வேகுமையர் தம்முனே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினார்.

என்ற செய்யுளிற் கூறியிருத்தலையும் காண்க.

36. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இ-ள். பிறப்புத் துன்பமாதலறிந்தவன் ஒன்றைவேண்டின் பிறவாமையை வேண்டும்; அப்பிறவாமை தான் ஒரு பொருளையும் அவாவாமை வேண்ட வரும். எ-று.

இவ்வருமைத் திருக்குறளிற் கூறியுள்ளவாறு,

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
இறைவாநீ ஆடும்போதுன் னடியின்கீழி ருக்கவென்றார்.

என்ற செய்யுளில் சிவபெருமான் காரைக்காலம்மையாரை

உனக்கு யாது வேண்டுமெனக் கேட்டருள, அம்மையார் பிறவாமை வேண்டும்' என வேண்டுவதாகக் கூறியிருத்தல் காண்க.

37. படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

இத்திருக்குறட் பொருள் தோன்ற குடி, கூழ் என்னும் சொற்களை,

தாழுஞ் செயலின் ஒருமன்னவன் தாங்கவேண்டும்
கூழுங்குடியு முதலாயின கொள்கைத் தேனும்
சூழும்படை மன்னவன் றோளிணைக் காவலின்றி
வாழுந் தகைத்தன்றிவ் வையகமென்று சொன்னார்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

38. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

இ-ள். ஒருவனுக்குத் தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பினும் சென்று தவுதலையுடைத்து. எ-று.

இத்திருக்குறளை,

ஐந்துவருட மலர்க்கணைய அங்கமாறு முடனிறையச்
சந்தமறைகளுட் படமுன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைக்குமலரின் வாசம்
சிந்தைமலர வுடன்மலரும் செவ்வியுணர்வு சிறந்ததால். [போல்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

39. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப் பதில்.

இ-ள். ஒருவன் வினையால் தனக்கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க; அவ்விடுக்கணை மென்மேலடரவல்லது அம்மகிழ்ச்சி போல்வது பிறிதில்லையாகலான். எ-று.

இத்திருக்குறளை,

அண்ணலருந் தவவேந்த ரானைதன்மேல் வரக்கண்டு
விண்ணவர் தம்பெருமானை விடையுகந் தேறும்பிரானைச்

சுண்ணவெண் சந்தனச் சாந்துதொடுத்த திருப்பதிகத்தை
மண்ணுலகுய்யவெடுத்து மகிழ்வுடனே பாடுகின்றார்.

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர் பாலிரப்பஞ்சிக்
காயமுயற்சியி னரிந்தகணம் புல்லுக் கொடுவந்து
மேயவிலைக்குக் கொடுத்து விலைப்பொருளா னெய்மாறி
தூயதிருவிளக் கமைத்தார் துளக்கில் திருத்தொண்டனார்.

என்ற செய்யுட்களில் எடுத்தாண்டிருக்கும் நயம் கூர்ந்து நோக்கி இன்புறத்தகுவனவாகும்.

இங்குக், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற தொடர்க்கு, 'ஒருவன் வினையாற்றனக் கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண்மகிழ்க' என உரைகண்டுள்ளார் பரிமேலழகர். இதன்கண் காணப்பெறும் 'அழியாமை உண்மகிழ்தல்' ஆகிய இரண்டையும் இவ்விரண்டு செய்யுட்களிலும் கூறியிருத்தல் காண்க.

40. உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

இத்திருக்குறளினுள்ள "உருளாயம்" பொருளாயம் என்ற சொற்றொடர்களை,

இருளாரு மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாய மெய்துதற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்
அருளாகவே கொண்டாங் கமுதுசெய்வித் தின்புறுவார்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

41. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

இ-ள். தொன்று தொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார் தாம் கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கியதாயினும் தம்பண்புடைமையின் நீங்கார். எ-று.

இத்திருக்குறளை,

பொற்சிலை வளையவளைதிர்ந்தவர் புற்றரவணைய சரம்பட
விற்படைதுணி யவுநின்றிலர் வெற்றிகொள் சுரிகைவழங்கினர்

முற்படுகொடை நிலைநின்றிட முற்றியபெருவள னின்றியும்
உற்றனஉதவிய பண்பினர் ஒத்தனருளர் சிலகண்டர்
என்ற செய்யுளில் உவமையாக எடுத்தாண்டிருத்தல் காண்க.

42. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

இ-ள். பெருமைக்குணமாவது காரண முண்டாயவழியும் அந்நிலையில்பாதல் நோக்கித் தருக்கின்றியிருத்தல், சிறுமைக் குணமாவது அந்நிலையில் வழியும் அதனை ஏற்றிக்கொண்டு தருக்கின் முடிவின் கண்ணே நின்று விடுதல். எ-று.

இத்திருக்குறளை,

மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத்தொழில்கள்
கற்றவர்கள் தன்னிற் கடந்துள்ளா ரில்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந்
துற்றுலகிற் றன்னையே சாலமதித் துள்ளான்.

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

43. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

இ-ள். கண்ணாற் கண்டும், செவியாற் கேட்டும், நாவா லுண்டும், மூக்கான் மோந்தும், மெய்யாற்றீண்டியும் அறுப விக்கப்படும் ஐம்புலனும் இவ்வொள்ளிய தொடியுடையாள் கண்ணே உளவாயின. எ-று.

இத்திருக்குறளை

பண்டுநிகழ் பான்மையினால் பசுபதி தன்னருளாலே
வண்டலர் பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்டது நலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்

என்ற செய்யுளில் எடுத்தாண்டிருத்தல் காண்க.

இனி, திருக்குறளில் " நன்றியில் செல்வம் " என்றோ ரதி காரம் உளது. இங்கு 'நன்றியில்' என்ற சொற்றொடர்க்கு

'தனக்கும் பிறர்க்கும் பயன் படாத' என உரை கண்டுள்ளார் பரிமேலழகர்,

இச்சொற்றொடரை இதே பொருளில்,

சென்றகாலத்தின் பழுதிலாத்திறமும் இனியெதிர்காலத்தின் [சிறப்பும்
இன்றெழுந் தருளப்பெற்ற பேறிதனுலெற்றைக்கும் திருவரு [ளுடையோம்
நன்றியில்நெறியில் அழுந்தியநாடும் நற்றமிழ்வேந்தனு முய்ந்து
வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும்மேன்மையு [படைத்தன மென்பார்.

என்ற செய்யுளில் அமைத்திருத்தல் காண்க.

இதே போல 'இரவச்சம்' என்ற சொற்றொடரையும் 'ஆப செயல் மாண்டதற்பின் அயலவர் பாலிரப்பஞ்சி' என்ற செய்யுளில் 'இரப்பஞ்சி' எனக் கூறியிருத்தல் காண்க.

இனி, 'இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் உலகம்
மகிழ்ந்து ளுவப்ப துடைத்து.'

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக இயற்பகை நாயனார் வரலாறும்,

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்

என்றதிருக்குறளுக்கு இலக்கியமாக அப்பூதியடிகள் வரலாறும், அமைந்திருத்தலையும் நோக்குக, பிறவும் இவ்வாறே காண்க.

The Historicity of 63 Tamil Saivite Saints.

அறுபத்துமூவர் காலம்.

K. சோமசுந்தரம் B.A., B.L., தஞ்சை.

முழுமுதற் கடவுளது பேரருட்டுணையை நிலவுலகமறிய நாட்டித் திகழ்ந்த தனியடியார் அறுபத்து மூவரது உண்மை வரலாறும் அவராற்றிய செயற்கருஞ் செயல்கள் முதலியனவும், தெற்றெனத் துணிந்துகொள்ள சேக்கிழாரது பெரியபுராணமும் ஆளுடைய நம்பிகள் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையும் துணையுள்ளனவாய் விளங்குகின்றன. தமிழ் நிலையை விறுசால் தென்னாட்டில் சைவசமயம் சிறப்புற்று விளங்கினமையும், திருவருளின் துணைவழி நின்று அந்நெறிச் செலவினை அறிவிக்க விரும்பம் பெற்றி வாய்ந்த சிவநேயமுடைய அடியார்கள் அச்சிவனடியார்கள் பால் நேயம் மிக்கு வாய்ந்த பல அடியார்கள் விளங்கினமை மெய்ப்படுத்தா நிற்கும் இந்நூற்களைக்கொண்டு, அறுபான் மும்மைநாயன்மார்களது காலத்தினை ஈண்டு ஒரு சிறிது விளக்குவாம்.

சைவ சமய குரவருள் ஒருவராகிய ஆளுடை நம்பிகளியற்றிய திருத்தொண்டத் தொகையினுள், அவர் நாயன்மார்கள் அறுபத்து மூவர்களுள் இறுதியில் வாழ்ந்தவரென்பது அறியப்பெறுவதால் அவரது காலத்தை ஆராயப்புகுவாம். இப்பெரியார் சேரமான் பெருமாள் நாயனாரென வழங்கும் கழறிற்றறிவாரை பெருநட்பாளராகக் கொண்டு பாண்டிய நாட்டுத் திருக்கோயில்களை வணங்கவேண்டி தென்னன் தொன்னகருக்குச் சென்றிருந்தபோது, பாண்டிய மன்னனும் அவரது திருச்செல்வியை அதுபோது மணந்து ஆங்கே தங்கியிருந்த சோழ மன்னனும் இவ்விரு சைவப் பெரியாரையும் விருப்புடன் வரவேற்று திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனரென சேக்கிழாரது பெரிய புராணம் கூறுநிற்கும்.

"தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்
அன்னவர்க ளுடன்கூட வணையவவ ருங்கூடி
மன்னு திருவாலவாய் மணிக்கோயில் வந்தடைந்தார்"
[சேரமான் புராணம் 92]

ஆனால் அங்கு பாண்டிய மன்னன் யாவனெனவும் சோழ மன்னவன் இன்னவன் எனவும் திண்ணமாய்ப் புலப்பட வில்லை; எனினும் சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவரென அப்பெரிய புராணம் நன்கு விளக்கா நிற்கும்.

ஆளுடைய நம்பிகள் 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்' என காடவர்கோன் கழற்சிங்கனைப் பற்றி பாடியிருத்தலால் அம்மன்னன தியல்பினையும் சரித்திர வுண்மையினையும் தெரிதற்கு நம்மனம் பெரிதும் ஈடுபடா நிற்கும். பல்லவ மன்னர்களது சிறப்புப் பெயர்களில் 'காடவர்' என்ற பெயர் ஒன்றுண்டென்று மெய்க் கீர்த்திகள் அறிவியா நிற்கும். இதனால் கழற் சிங்கன் பல்லவ மன்னனாயிருத்தல் வேண்டுமென்றும் அவன் வீரம் பொருந்திய பெருமன்னனென்றும் அவனது திருப்பெயரால் (கழற்சிங்கன்) உய்த்துணரப் படுகிறது. இம்மன்னனை ஆளுடைய நம்பிகள் சிவபெருமானதருளை நிரம்பப்பெற்று வாழ்ந்த அறுபத்து மூன்று அடியார்களோடு நிரலே சேர்த்து வைத்து பெரிதும் போற்றப் படுதலான இவன் சிவபக்தனாயிருத்தல் வேண்டுமென்ற உண்மை நன்கு விளங்கா நிற்கும். 'சிங்கன்' என்ற பெயருடைய இருவர் பல்லவ வேந்தர்களாய் முன்னர் விளங்கினரென கல்வெட்டின் ஆராய்ச்சியின் பயனால் பெறப்படுகின்றது. அவர்கள் முறையே நரசிங்கவர்மன், இராச சிங்கவர்மன் எனப்படுவர். இவர்களது சரித்திரத்தை அறியப் புகுங்கால் இராசசிங்கவர்மன் சிவபக்தி யுடையவனாய் விளங்கினவனென கல்வெட்டுகளால் அறியப் படுகின்றது. இவ்விராச சிங்கவர்மன் காஞ்சியில் ஓர் திருக்கோவில் எடுப்பித்தனனென்று அக்காஞ்சிக் கோயிலிலுள்ள கல்வெட்டு கூறு

நிற்பதோடு அவனை 'சிவசூடாமணி' 'ஈசுவர பக்தன்' என்று புகழ்ந்திருப்பதும் அறியத்தக்கது. [South Indian Inscription Vol. I No. 24 & Vol. II No. 98.] மற்றும் பனைமலைக் கோயிலின் கண்ணுள்ள கல்வெட்டில் இவனது சிறப்புப்பட்டம் 'சிவசூடாமணி' என்பது பொறிக்கப் பட்டிருத்தலின் இவனது சிறந்த சிவபக்தி எத்தன்மைத்தென தானே பெறப்படும். மற்றும் 'துப்ரேல்' என்றத் துரைமகனார் தன் 'பல்லவர்கள்' என்ற நூலின்கண் (Dubreuil on the Pallava's) இராசசிங்கவர்மன் தன்னாட்டில் மறைவளரவும் ஒழுக்கம் பெருகவும் தவம் மிகவும், கடவுளன்பு சிறக்கவும் திருக்கோயில்கள் பல மாமல்லபுரத்திலும், காஞ்சியிலும், பனைமலையிலும் கட்டியும் சிவனடியார்களைப்போற்றியும் தன் நாட்டை சிறப்புற ஆண்டனனெனக் கூறி அவனது சிவபக்தியின் நேர்மையினை வலியுறுத்துவார். சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் இவரது சிறந்த சிவபக்தி எந்தன்மைத்தென்றும் அஃது எப்பரிசினை வாய்ந்ததெனவும் சுட்டிக் காண்பிப்பதை பெரிதும் நோக்கற்பாலது. இராசசிங்கவர்மன் தன் தேவியாருடன் திருவாரூர் திருக்கோயிலில் வலம் வருங்காலத்து இவரது தேவி திரிபுரமெரித்த விரிசடைப் பெம்மானுக்கு தொடுக்கப்படும் ஓர்மலரை எடுத்து அதனைமோர்ந்து பார்க்க இதனைக் கண்ட செருத் துணையாரென்ற சிவனடியார் அவளது மூக்கையறுக்க, இச்செய்தியை அறிந்த அரசன் இறைவனுக்குரிய மலரை எடுத்த கையினையும் வெட்டி வீழ்த்தினான். இவ்வொரு சான்று கொண்டே இராசசிங்கவர்மன் எத்தகைய சிவபக்தி வாய்ந்தவனென ஊகிக்கற்பாலது. இராச சிங்கனது சிவபக்தியின் மாண்பினை அறிவிக்கவேண்டி சுந்தர மூர்த்திகள் பின் வருமாறே பாடியுள்ளார்.

"கருமையார் தருமனார் தமர்நம்மைக்கட்டிய கட்டறுப்
[பிப்பானை
யருமையாந் தன்னுலகந் தருவானைமண்ணுலகங்காவல்
[பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடாமன்னவரை
[மறுக்கஞ் செய்யும்

பெருமையாற் புலியூர்ச்சிற்றம்பலத் தெம்பெருமானைப் [பெற்றாமன்றே.

சேக்கிழாரது பெரிய புராணத்தில் இராச சிங்க வர்மன் காஞ்சியில் கைலாய நாதர் கோயிலெடுப்பித்தபோது பூசலார் நாயனார் திருநின்ற வூரில் மனக்கோயில் கட்டியுள்ளாரென அறியப்படுவதால் பூசலார் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவரென நன்கு புலனாகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் அப்பருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பின் பட்டவரென திருக்கேதாரப் பதிகத்தால் உணரக்கிடக்கின்றது.

'நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞான சம்பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன்னுரை செய்த
பாவின்றமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே.

ஆளுடைய நம்பி, ஆளுடைய பிள்ளையார் திருக்கோலக்காவிற் பொற்றாளம் பெற்றதையும்,

"நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்புஞான சம்பந்தனுக்குல [கவர்முன்
தாளமீந் தவன்பாடலுக் கிரங்குந் தன்மையா ளனையென் [மனக்கருத்தை
யாளும் பூதங்கள் பாடநின்றாடும்அங்கணன் றனையெண்கண [மிறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயிலுள்ளானைக் கோலக் காவினிற் [கண்டு கொண்டேனே

திருவீழி மிழலையில் படிக்காசு பெற்றதையும்,

பரந்த பாரிட மூரிடைப் பலிபற்றிப் பார்த்துணுஞ் சுற்றமா [யினீர்
தெரிந்தநான் மறையோர்க் கிடமாய திருமிழலை

இருந்துநீர் தமிழோடிசை கேட்குமிச்சையாற் காசுநித்
[தனல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே.

எனச் செந்தமிழ் வளமொடு கலந்த அன்பினது பெருக்கும் விளங்கும் தம் திருப்பதிகங்களில் கட்டிக் காண்பித்திருப்பதையுங் காண்க.

ஏயர்கோன் கலிக்காமரைப்பற்றி ஆளுடைய நம்பிகளால், 'ஏயர் கோனுற்ற விரும்பிணிதவிர்த்து' என்று குறிக்கப்படுவதினுலும் மானக்கஞ்சாறர் இவ்வேயர்கோன் கலிக்காமருக்கு பெண்கொடுத்தவராதலாலும் ஏயர்கோன் கலிக்காமரும், மானக்கஞ்சாறரும் ஆளுடையநம்பிகள் காலத்தவரென்று அறியப்பட்டது.

இராசசிங்கவர்மனே இரண்டாம் நரசிங்கவர்மனென சரித்திர ஆராய்ச்சி வல்லார் கூறுவர். இவனுண்ட காலம் கி. பி. 690 710 என்பது அவ்வாராய்ச்சியில் வல்லார் கொண்ட முடிவு. ஆகவே சுந்தரமூர்த்தி நாயனர் இவ்வரசரது காலத்தை யொட்டியே அஃதாவது கி. பி. 7-ம் நூற்றுண்டிறுதியிலும், 8-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராதல் வேண்டும்.

சுந்தரமூர்த்திகளது காலம் கி. பி. 7-ம் நூற்றுண்டினிறுதியிலும் 8-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் இடைப்பட்ட காலமென அறியப்பட்ட பின்னர் இனி தென்னுட்டகத்தே இறைவனது முழுமுதற்றன்மையை நிறுவிய 63 நாயன்மார்களும் கி. பி. 8-ம் நூற்றுண்டிற்கு முன்னிருந்தவர்களென அறியப்படும். இஃது சுந்தரமூர்த்திகளியற்றிய திருத்தொண்டத்தொகையால் நன்கு விளக்கப்படுகின்றது.

இனி ஆளுடையநம்பிகளுக்கு முன்னர் சைவசமய உண்மையினை நிறுவித் திகழ்ந்த அடியார்களில் சிறப்பான் முதன்மை வாய்க்கப்பெற்ற ஆளுடைய அரசு ஆளுடைய பிள்ளையார் முதலானோரின் காலத்தினை ஆராயின் ஏனை நாயன்மார்களது காலமும் உணரப்படும், இதனை ஈண்டு விளக்குவாம்.

தமிழகத்து வடவெல்லையாகிய வேங்கடமலைக்கு வடபாலுள்ள வடுகரென்பார் சமண்மதத்தைப் பரப்பும் பெருமுயற்சியுடையராய்ப் பாண்டிய மண்டலத்தைக் கைக்கொண்டரென்பதூம், * பின்னர் அவ்வடபுலவடுகரது வலிதொலைத்து பாண்டிய நாட்டை செங்கோல் வளைதலுறா வண்ணம் அரசெய்தியவர் மூர்த்தி நாயனாரென்பதூம் நம்பித் திருவிளையாடலிலிருந்து அறியப்படுகிறது. அஃது,

'துன்னு சேனையிற் றுளங்கிய ஒருகருநாட
மன்னன் அன்னநாள் வந்தருட் டென்னையோட்டிக்
கன்னி மண்டலங்கொண்ட மண்கையர் கைவிழுந்து
முன்னநீடிய வைதிய முறையையும் ஒழித்தான்.

வன்சமண் இருள்விட்டேக வைதிகத் தீபம்வற்றி
இன்பரசாள்வல் என்ன இயைந்தியாவரும் முன்சொன்ன
அன்புறு பகுதிமூன்றுஞ் செய்தருச் சித்தார்போற்றி
முன்பருள்சுரந்த சொக்க மூர்த்தியின் மூர்த்திவேந்தை.'

இதனுன் இளமையில் சமண்மதக் கொள்கை கொண்டு முதுமை

---

* கானக்கடி சூழ்வடுகக் கருநாடர் காவல்
மானப்படை மன்னன் வலிந்து நிலங்கொள்வானு
யானைக் குதிரைக் கருவிப்படைவீரர் திண்டேர்
சேனைக்கடலுங் கொடு தென்றிசை நோக்கிவந்தான்.
வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பிச்
சந்தப்பொதியிற் றமிழ் நாடுடை மன்னன்வீரஞ்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்துமாற்றால்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல்கொண்டான்.
தாழுஞ் சமண்கையர் தவத்தைமெய் யென்றுசார்ந்து
வீழுங்கொடி யோனது வன்றியும் வெய்யமுன்னைச்
சூழும் வினையாலரவஞ் சுடர்த் திங்களோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் வன்மைசெய்வான்
[மூர்த்தி நாயனார் புராணம்.]

யில் சமண்மதந் தழுவிய ஆளுடைய அரசரது * காலத்திற்கு அஃதாவது 6-ம் நூற்றாண்டிற்கு வெகுகால முன்னரேயிருந்து, சமணர்கள் ஆளுடைய பிள்ளையாருடன் வாதுசெய்து தோற்ற காலம்வரை சமண்மதம் தமிழகத்தில் பரவியிருந்ததென்பதும் அத்தகைய காலம் வடுகக் கருநாடர் காலமென்றும் அறியப் பெற்றாம். அதன் பின்னர் சமணர்கள் ஆளுடையபிள்ளையாரும் அவரது சிவநேயர்களும் சமண்மதந் தழுவிய கூன் பாண்டிய மன்னரது திருத்தேவியார் சைவசமயந் தழுவிய மங்கையர்க்கரசியாரது வேண்டுகோளுக்கிணங்கி மதுரையில் எழுந்தருளியதை சிறிதும் பொறாதவர்களாய், அச்சிவனடியார்கள் கூட்டம் அமர்ந்திருக்குமிடங்களில் பாண்டிய மன்னனது மனதிற்கிசைந்து தீயிடவே, அத்தீ ஆளுடைய பிள்ளையாரது திருவருளால் † சிவனடியார்களுக்கு ஒரு தீங்கும் செய்யாது பாண்டிய மன்னனுக்கு கொடிய வெப்பு நோயுண்டாக்க, மீண்டும், ஆளுடைய பிள்ளையாரது திருவருளால் பாண்டியனது கொடியதொரு வெப்பு நோய் தீர்ந்து கூன் பாண்டியனை சைவசமயத்தைத் தழுவுமாறு ஆளுடையபிள்ளையார் அருள்செய்த பின்னர் சமண் மதம் தன்னொளிமழுங்கிக் குன்றியது. மற்றும் வடபுல வடுகக் கூன் பாண்டியன் மேற்பகைத்த நெல்வேலிச் செருக்களத்தே தோற்ற பின்னர் சமண்மதம் அடியோடு தமிழகத்தே அழிவுற்றது. இந்நெல்வேலிப்போர் கி. பி. 630-ம் ஆண்டில் நிகழ்ந்ததென புரோபஸர் பேரியலும் மிஸ்டர் வி. ஏ. ஸ்மித்தும் விளக்கியுள்ளார்கள். இப்போரினில் கூன்பாண்டியன் வெற்றிபெற்றானென்பதை சுந்தரமூர்த்தி நாயனாரருளிச்செய்த திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

---

* முன்பெலாம் இளையகாலம் மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண இருமினாளுங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பகலுணங் கலட்டும் பேதைமார் போன்றென் உள்ளம்
அன்பனாய் வாழமாட்டேன் அதிகை வீரட்டனீரே.

† செக்கண் வெள் விடையாய் திருவாலவாய்
அங்களு அஞ்சலென் றருள் செய்யெனைக்
கக்குல் ஆரமண் கையர் இடுங்கனல்
பக்கமில் தென்னன் பாண்டியற் காகவே.

'நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்.'

நின்ற சீர் நெடுமாற நாயனார் புராணமும் பின் வருமாறே கூறப் புகும்,

'ஆயஅரசு அளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங்
காயுமதக் களிற்றின்நிரை பரப்பிஅமர் கடக்கின்றார்.

'இணையகடுஞ் சமர்விளைய இகல்உழந்த புறந்தலையிற்
பணைநெடுங்கை மதயானை பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதன்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம்புடன் புனைந்து'

ஆகவே கி. பி. 630-ல் சமண்மதம் அடியோடு அழிவுற்றதென அறியப்பெற்றோம்.

(தொடரும்.)

ஒலியும் எழுத்தும்

K. P. சந்தோஷம் B.A., L.T., Voorghese Callege, Vellore.

மக்களது வாய் உறுப்புக்களினின்றும் எழும்பக் கூடிய பல்வகை ஒலிகள் வெவ்வேறு வகைகளில் ஒன்றோடொன்று கூடிப்பொருள் பயக்கு முறையிற் பிறப்பதையே நாம் பேச்சென்று சொல்கின்றோம். இவ்வொலிகள் எல்லா மொழிகளிலும் பெரும்பான்மை ஒரு தன்மையனவே. ஒரே தன்மையான இயற்கை யமைப்புந் தட்ப வெப்ப நிலையுமுடைய நிலப்பகுதி யொன்றில் வாழுமக்கள சற்றேறக்தாழ ஒரே வகையைச் சேர்ந்த ஒலிகளை வழங்குகின்றனர். வடமொழியிற் கூட்டொலிகள் தனி எழுத்துக்களாக வருகின்றன. ஆங்கிலத்திலும் இத் தகைய ஒலிகள் உண்டு. பற்கிடுகிடுக்கக் குளிரும் நிலங்களில் வாழ்வோர், வாயை விரிவாய்த்திறப்பதால் தோன்றும் ஒலிகளை ஆளார்; அதில் இடருண்மை நோக்கி தமிழில் 'ஆ' என்ற எழுத்தாற் குறிக்கப்படுமொலி ஆங்கிலத்தில் இரண்டு மூன்று சொற்களில்தான் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் அவ்வொலி ஆகாரத்திற்கும் ஒகாரத்திற்குமிடையே தோன்றும் ஓர் ஓசையாகின்றது. Call என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள உயிரை எற்றவாறு பிறப்பிக்க வேண்டுமாயின், ஒகரத்தை எழுப்பும் நிலையில் இதழ்களை வைத்துக்கொண்டு, ஆகார ஒலியை உள்ளே தோற்றுவித்தால்தான் முடியும். ழ கரவொலி தமிழில் மாத்திரந் தோன்றுகின்றது. இங்ஙனம், சிலமொழிகளிற் காணப்படும் ஒலிகள் வேறுமொழிகளில் வருவதில்லை. பறவை விலங்குகளின் ஓசைகளுந் தட்ப வெப்பத்திற் கேற்றவாறு வேறுபட்டிருக்கின்றன.

வாயின் உறுப்புக்கள் வெவ்வேறு வகையிற் கூடுவதாற் பிறக்கும் ஒலிகளிலிருந்து பேச்சு முதன்முதல் எங்ஙனந் தோன்றிற்றென்று நாம் கூறவியலாது. கோழி முதலியவை அன்பு காட்டியழைக்க ஒரு குரலும், அச்சங்காட்டி வெருட்ட வேறு

குரலுங் கொடுப்பதை யாவருமறிவர். வெகுண்டு போருக் கழைக்க ஒரு குரலும், வெற்றியடைந்து மகிழ வேறு குரலுஞ் சேவலுக்குண்டு. கிளிகள் கொஞ்சுங்கால் தாழ்ந்த இனிய ஒலிகளை எழுப்புகின்றன; திடுக்கிடுங்கால் கூரிய ஒலியையுண் டாக்குகின்றன. பழக்கிய கிளி மக்கள் வழங்குஞ்சொற்களைப் பேசுகின்றது. ஆயினும், கிளியின் வாய் உறுப்புக்களிலிருந்து எழும்பக் கூடிய ஒலிகள் மிகச் சில சொற்களைக் கூட்டுதற்கே சாலும். பேச்சென்பதும் முதன்முதல், அன்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்த வந்த குரல்களிலிருந்து தான் தோன்றி யிருக்கவேண்டும். தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருப்பதைப் 'பழக்க மிடுதல்' என்று சொல்லக் கேட்கிறோம். இதனாற் பேச்சென்பது பழக்கத்தின் பயனென்று நன்கு விளங்கு கின்றது. வையகத்தில் முதன்முதற் றோன்றிய மக்கள் சிற்சில ஒலிகளைத்தான் வழங்கியிருத்தல் கூடும். அவர்கள் பறவை விலங்குகளிலிருந்து மிக வேறுபட்டிருத்தல் கூடாது, என்றாலும் ஒன்றிற்கொன்று மிக நுட்பமான வேற்றுமையுடைய பல ஒலிகளை வழங்குமாற்றல் அவர்கள் பால் மறைந்து கிடந்தது.

அன்பு, வெகுளி முதலிய உணர்ச்சிகள் உண்டாகும் பொழுது உடலிற் செந்நீர் விரைந்து பாய்கின்றது. உள்ளே நிகழ்கின்ற இம்மாறுதல் வெளியுறுப்புக்களில் விளங்குகின்றது. கண் விரிதல், முகஞ் சிவத்தல், உதடு துடித்தல், ஆகிய இவை அவ்விளக்கத்தின் சில பகுதிகளாம். தமிழர் இதை மெய்ப் பாடென்பர். காதலையொட்டிய மட்டில் இம்மெய்ப்பாடு சால விரிவாகத் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுளது. பறவை விலங்குகளிலும் மெய்ப்பாடுண்டு. காதலால் அல்லது வெகுளி யால் மயங்கிய ஒந்தியின்கண், முன் தோன்றா நிறங்கள் மிளிர் வதைக் காணலாம். ஈண்டு நாம் கவனிக்கவேண்டியது யாதெனின், மேற் கூறிய உணர்ச்சிகள் வெளிப்படுங்கால் ஒலியு முடன் தோன்றுகின்றதென்பது தான். வியப்பு மேலிட்ட காலை ஒருவன், "ஆ, ஓ, ஆகா, ஓகோ" என்ற ஒலிகளை வெளி விடுகின்றான். ஆதலின், உணர்ச்சிகள் தோன்றியொடுங்குழ்

அவை தம்மைத்தாம் வெளிப்படுத்தும் இயல்பினவாய் விளங்குகின்றனவென்று பார்க்கிறோம். இவ்வுணர்ச்சிகள் செவ்விய முறையில் ஒலியின் வாயிலாய் விளக்க முறுவதற்கே பேச்சு உதவுகின்றது. உணர்ச்சிகளையும் நினைவுகளையும் நிறங்கொண்டு நிட்டிக் காண்பித்தல் ஒவியமாகும்.

உணர்ச்சிகளும் நினைவுகளும் ஒலியிற் புகுந்து மக்களுக்கு இன்ப துன்பம் விளைவிக்கும் ஆற்றல் பெற்றிலங்குவது; அது பற்றி நினைக்கத் தொடங்குவோமாயின், பெரியதொரு விந்தையாகவே முடியும்; நாளா வட்டத்தில் ஒலிகள் பெருகி வளர்ந்து பொருட்களையும் வினைகளையும் பற்றிநின்று, அவற்றைச்சுட்டிய நிகழ்ச்சியின் அருமை எடுத்துரைக்குந் தன்மையதன்று. ஓரிடத்திற் சிதறிக்கிடக்கின்ற பல்வேறு வடிவங்களும் அளவுகளுமுடைய பாறைகள் நாளடைவிற் சிறிதுசிறிதாய்மாறி, மக்கள் விலங்கு, பறவைகளின் திருத்தமான உருப்பெற்று விளங்குமாயின், அஃதெத்துணை இறும்பூதாகுமோ, அத்துணை வியப்பு, ஒலியும் பொருளும் ஒன்றியதை ஊன்றிப் பார்த்தமக்கள் எய்தியிருக்கவேண்டும். கைவிட்டெண்ணக்கூடிய சில ஒலிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான வெவ்வேறு சொற்கள் கிளம்பியவழியே, விந்தையினும் விந்தையாகிய இவ்வுலகமும் வேறு பல்லுலகங்களுந் தோன்றியிருக்க வேண்டுமென்று பண்டை நாளிருந்த மக்கள் கருதினர்,

> நிலந் தீநீர் வளிவிசும் பொடைந்துங்
> கலந்த மயக்க முலக மாதலின்
> ....
> (தொல். மரபியல்)

நிற்க. ஒலிகள் சொற்களாயமைந்த வரலாற்றை யறிய வகை யொன்றுமில்லை. 'கா, கா' என்று கரையுமொரு பறவையைக் 'காகா' என்று சொல்வது இயற்கையே. ஒரு வீட்டிற்குத் தானியங்கியிற் (Motor car) சில நண்பர்கள் வந்தனர்; வீட்டு வாசலில் தானியங்கி வந்து நின்றவுடன், அதிலுள்ள குழலின் ஒலி பிறந்தது. வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறு குழந்தை தாயைக் கூப்பிட்டு, " அம்மா, பாம், பாம் " என்றது.

குழலினோசை அதற்கு 'பாம், பாம்' என்று கேட்டதைக் கொண்டு, அவ்வோசையையே குழந்தை தானியங்கிக்குப் பெயராக்கிற்று. ஆதலின் குழந்தை நிலையிலிருந்த தொன்மக்கள் 'கா,கா' என்று கரையும் பறவையைக் 'காக்கா' என்றதில் வியப் பொன்றுமில்லை. 'காக்கா' என்ற சொல் முதிர்ச்சி பெற்றுக் 'காக்கை', 'காகம்' என்று வந்திருத்தல்வேண்டும். இங்ஙனம், ஒன்றிரண்டிற்கு நாம் வரலாறு கூறுதல் ஒல்லுமேயொழிய, ஒருமொழியிலுள்ள சொற்களுக்கெல்லாம் தோற்ற முரைத்தல் கூடாதாம். 'கல்வி என்பது கல்' என்ற முளையிலிருந்து வந்த தென்று காண்கின்றோம். ஆயின், 'கல்' என்ற முளைக்கு அதன் பொருள் எங்ஙனம் வந்ததென்று சொல்வதரிது.

வரவர மக்களின்பேச்சு கண்டனவற்றின் மேற்செல்வதோ டமையாது காணுதவற்றைக் குறிக்கத் தொடங்கிற்று. 'கல்' என்பது நிலத்தைத் தோண்டுதலைக் குறித்தபின், உளத்தைப் பண்படுத்துஞ் செய்தியைச் சுட்டலாயிற்று. 'விளங்கு' என்பதன் பிறவினையாகிய 'விளக்கு' என்ற சொல் உண்கலம், வீடு முதலியவற்றைத் தூய்மை செய்ய ஏவும் வினையாய் நின்று, பிறகு, அழுக்காகிய இருளை நீக்குங் கருவிக்குப் பெயராகி, அதனோடமையாது, 'விளக்கம்' என நின்று, அறியாமை நீக்கத்தை யுணர்த்திற்று. இதில், அழுக்கு, இருள், அறியாமை, ஆகிய மூன்றுமொரு தன்மையனவாகக் கருதப்பட்டது நன்கு வெளியாகின்றது. விளக்கேற்றி, நெல்லுமலருந்தூவி, வணங்கும் வழக்கும் தமிழ்ப் பெண்டிர்க்குண்டென்று பண்டை நூல்கள் வாயிலாயறிகின்றோம். அதன் குறிப்பு நினைத்தற்கினியது. அன்றியும், நிலவு, தீ, வெய்யவன், எனும் மூன்றொளிகளின் அடையாளமாக முத்தீ வணங்கல் அந்தணர் ஒழுக்கமாயிற்று. முத்தீ, முக்கண், முப்பாற்புள்ளி (ஆய்தம்) ஆகிய இவை ஒற்றுமையுடையன. தொன்றுதொட்டே நமிழ் முக்கண்ணோடு பொருந்தி வருகின்றது. தம்மொழி சிவன் தந்ததென்பர் தமிழர். அதன் பொருள் யாதெனவாராய்க.

பேச்சுடன் (ஒலியுடன்) எழுத்துந் தோன்றியிருக்குமாயின், ஒரு மொழியினது வளர்ச்சி நமக்கு வெளிப்பட்டிருக்கும். முதன்

முதல் மக்கள் பேசியது எழுத்திற் பதியப் பட்டிருப்பின், மொழியின் பல்வேறு நிலைகளை நாமறிதல் கூடும். ஆனால் எம் மொழியிலும் பேச்சுடன் எழுத்தெழவில்லை. பேச்செழுந்த பன்னூறாண்டுகட்குப் பின்னரே எழுத்து வந்தமையால் சொற்களின் தோற்ற வளர்ச்சி மறைந்தது. ஒரு சொல்லுக்கும், அதனாற் குறிக்கப்படும் பொருளுக்குமுள்ள பொருத்தம் இத்தகையதென்றறிய விழைவார்க்கு,

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"

என்று தமிழுக்குப் பேரிலக்கணம் வகுத்த தொல்லாசிரியர் மறைப்புந் திறப்புமொன்று படப் பகர்ந்தார்.

தமிழ் வழக்கில், தனித்தியங்கக் கூடாதனவாகிய க், ச், ட், ண் முதலிய ஒலிகளை மொழிக்கு முதலில் வைப்பதில்லை. இஃதொரு குறையென்றாதல், உயர்வென்றாதல் கூற யாம் முன் வரவில்லை; இவ்வொலிகளை முதலில் வைத்துப் பேசத் தமிழறிஞர் இணங்கிலர். தமிழ்மொழி தொடங்கிய பொழுதே இவ்வொழுங் குண்டாயிற்றென்று துணிந்து கூறுதல் சாலுமோ வன்றோ அறியோம். எழுத்து வகுக்கப்பட்ட கால முதல் இவ்வொழுங் குண்டு. க், ச், ட், ண் முதலியவற்றை இயக்கும்பொழுது உயிரொலியை முன்கொடுத்து, இக், இச், இட் என்று சொல்வதை இன்றளவும் பார்க்கின்றோம். ஆங்கிலத்தில் மகரஒற்றை 'எம்' என்று சொல்கிறார்கள்; ககர ஒற்றைக்'கே' என்கின்றார்கள். இவ்வொலிகளைத் தனியாக இயக்குவதன் வருத்தத்தை யுன்னியே உயிரைக் கூட்டி யுரைக்கின்றனர். இவ்வருத்தங் கருதித் தமிழர் மொழிக்கு முதலினின்று மிவற்றை விலக்கின ரென்று கூறுதல் கூடும். என்றாலும், உயிர்த் தொடர்பில்லா வொலியை மொழிக்கு முதலில் வைப்பதன் இயைபின்மையே தமிழரை அங்ஙனஞ் செய்யத் தூண்டிற்றென்று கொள்ளலே தகுதி.

இஃதன்றி, நுனிநா அண்ணத்தை ஒற்றுவதாலுந் தடவுவதாலுந் தோன்றுகின்ற ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்பன உயிரேறிவரினும், மொழிக்கு முதலாம் உரிமை பெற்றில.

இவற்றுள ட, ண, ள, ஆகிய மூன்றும் புணர்ச்சியில் ஒன்றோ டொன்றுறழ்வன. 'காட்சி' என்பதில் ணகரம் டகரமாயிற்று. 'முண்முருங்கை' என்பதில் ளகரம் ணகரமாயிற்று. 'உட்கிடக்கை' என்பதில் ளகரம் டகரமாயிற்று. இங்ஙனமே ல, ற, ன என்ற மூன்றும் மயங்கும். ஏன், இவ்வாறாக வேண்டுமெனின், ள, ட, ண என்ற மூன்றும் பிறக்குமிட மொன்றே; ல, ற, ன வும் ஓரிடத்திற் பிறப்பனவே. பிறப்பொத்தலால் இவை, ஒன்று மற்றொன்றாய்த் திரிவது எளிது. இவை மொழிக்கு முதலாக நிற்க, வேறு மொழிகள் இவற்றிற்கு முன் வருமாயின் தமிழ் மொழியின் அமைப்பே சிதைந்துபோம். அன்றியும், டகரம் ளகர தகரங்கள் சேர்வதாற் பிறக்கும்; றகரம், லகரமுந் தகரமு மிணையத்தோன்றும்; ணகரம், ளகரமும் நகரமும் புணரவரும். மற்ற ஒலிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க, இவற்றின் நிலையாத் தன்மை நன்குவிளங்கும். ஆதலின் இவைமொழிக்கு முதலாகா. நுனி நா மேல் நோக்கி எழுந்து வளைந்து அண்ணத்தைத் தடவப் பிறக்கும் ரகார ழகாரங்களிரண்டும் இஞ்ஞான்றுந் தமிழறியார்க்கு மலைவு தருவனவாம். இனி, எழுத்தை நோக்குவோம். மொழிக்கு முதலில் வாராப் பிற ஒலிகளை ஆராயப்புகின் இடஞ்சாலாது.

வாயின் முயற்சியாலாகின்ற ஒலியைக்கையின் முயற்சியாலாகின்ற எழுத்தாகக் கண்டது பெரியதொரு விந்தையே; செவிக்குப் புலனாவதைக் கண்ணுக் குணர்த்திய செய்தி எளிதாமோ! மக்கள் பேசக்கற்று எத்துணை நூற்றாண்டுகள் சென்ற பின் எழுத்து வந்ததோ அறியோம் எழுத்தின் மாட்சியை இக்காலத்திருக்கும் நாம் செவ்வனமறிவதரிது. பழக்கத்தின் பயனாகப் பாலும் புளிக்குமென்பதோடொப்பப் பெருந்தொகையினராய் எளிதாக இஞ்ஞான்று வழங்கப்படுமெழுத்து வியப்பெழுப்பு மாற்றலற்று நிற்கின்றது; ஒருவன் பேசுவதை மற்றொருவன் எழுதி வேறோரிடத்திற் கொண்டு போய்ப்படித்துக் காட்டல், தந்தியிலொரு செய்தியை அனுப்புவதை யொக்கும்.

சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் முதன்முதற் பேசுங்கருவி எடிசன் என்பவரால் இயற்றப்பட்டபொழுது, அதைக்

கேட்ட சிலர் பெரிதுங் கலக்கமுங் கவற்சியுங் கொண்டனரென் றறிகின்றோம். பேசுங் கருவிக்குள் ஓர் அலகையைப் பிடித் தடைத்து, அதனுதவியாற் பேச்சும் பாடலும் எடிசன் உண் டாக்கினர் என்று கல்வி வாய்ந்த சிலர் உறுதியாய் நம்பினார்கள். ஆயினும் இஞ்ஞான்று தெருவில் விளையாடுஞ் சிறாரும் பாடுங் கருவியைப் போர் இறும்பூதென்று கருதார்.

ஆப்பிரிக்காவிலுள்ள கருமக்கள் கூட்டமொன்றினிடையே சென்ற நூற்றாண்டில் ஓர் ஆங்கிலர் தம் மனைவியுடன் வாழ்ந்து வந்தார். எழுத்தும் படிப்பு மின்னவென்றறியாத மக்க ளிடையே வாழ்ந்த அவர், ஒருநாள் தமது வீட்டை விட்டு நெடு வழி சென்றபின், வேண்டிய பொருளொன்றைத் தம்முடன் கொண்டு வராமையை யறிந்தார். அறிந்தவுடன், கடிதத் துண்டொன்றைப் பையிலிருந்து அவர் எடுத்து, அதில், தாம் மறந்து வைத்துவிட்டு வந்த பொருளைக் கடிதங்கொண்டு வரு வோனிடங் கொடுத்தனுப்புமாறு, மனைவிக்கெழுதினர். பிற கவர் தம்முடன் வந்த கருமகனைநோக்கி, "விரைந்து சென்றிதை நமதில்லாளிடங்காட்டி, யான் வேண்டும் பொருளைக்கொணர்க" என்றனர். கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, வந்த வழியே திரும்பிய எழுத்தறியா மகன், வீட்டிலிருக்கும் மனைவிக்கு எங்ஙனந் தன் கணவனின் விருப்பம் வெளியாகுமென்று வழி முழுவதுங் கருதிக் கொண்டேகினன். இல்லமடைந்தவுடன், தான் கொணர்ந்த கடிதத்தைக் கிழத்தி கையிற்கொடுத்து வாய் திறவாது அவ்வம்மையை அவன் பார்த்துக் கொண்டு நின்றான். கடிதம் பார்த்த நல்லாள், உள்ளே சென்று தன் கணவன் குறித்த பொருளைக் கையிற்கொண்டு வருவதைக் கண்ட கரு மகன், அஃதொரு மாயமென்று நினைத்தான். மிகத் தொன்மை யில் எழுத்து வழங்கியநாளில், மக்கள் அதை எவ்வாறு கருதின ரென்பது மேற்கூறியதனுதவியா லறியப்படும்.

ஒலிக்கும், அதன் வடிவமாகிய எழுத்துக்குமுள்ள இயைபு பெரும்பாலும் மறைந்தது. க, ங; ச, ஞ; த, ந; ப, ம; என வருமவற்றுள் சிறிதொற்றுமை காணலாம். இவை பிறப்பால் ஒற்றுமையுடையன வாதல்பற்றி உருவிலுஞ் சிறிதொன்றித்

தோன்றுகின்றன. உ, வ, ப, ம என்ற நான்கெழுத்துக்களும் இதழிற் பிறப்பனவாதலால், வடிவில் அவ்வொற்றுமையைக் காட்டின. மகரத்திற்குப் பண்டை வடிவம் 'ப்' என்றறிதல் வேண்டும். அகரத்தின் உருவம்பற்றித் திரு. மாணிக்கநாய்க்கர் அவர்கள் கூறியதை நோக்குக.

எழுத்துக்களை உயிராகவும் மெய்யாகவுந் தமிழர் வகுத்த வாறு வேறெவருஞ் செய்யவில்லை. பிறமொழிகளில் உயிரையும் மெய்யையும் விரவியே நெடுங்கணக்கைத் தொகுத்திருக்கின்றனர். உயிரென்றும் மெய்யென்றும் ஒலிகளைப் பகுத்தபின், உயிரேறாத மெய்யை மொழிக்கு முதலில் வைக்கத் தமிழர் உடன்படாராயினர். எற்றிற்கெனின், மொழிக்குக் காரணமாகிய ஒலியில், உயிர், இறை உடல் என்ற முப்பொருளுண்மையை அவர்கள் கண்டனர். தாம் கண்ட இவ்வுண்மையை அவர்கள் மொழியிற் புகுத்தியதால் தமிழின் தன்மை வேறாயிற்று. உள்ளிருந்து வருகின்ற உயிர்ப்பு (மூச்சு) திறவுண்ட வாயின் வழியே இயற்கையாகச் செல்வதாற் பிறக்கின்ற அகர ஒலி, அருவிலிருந்து உருத்தோன்று மச்செய்தியைக் குறித்தது. இவ்வுயிர்ப்பை நாவாற் சிறிது திரிக்க அது இகரமாகின்றது; அவ்வுயிர்ப்பே குவிந்த இதழ்களூடே செல்ல உகரம் பிறக்கின்றது. இகரத்தோடு எ, ஏ, ஐ என்பன தொடர்புடையன. இங்ஙனம், அகரம் உயிருக்குயிராகி விளங்குகிறது.

வாயினுறுப்புக்கள் ஒன்றோடொன்று ஒற்றுவதாற் பிறக்கு மொலிகளை ஒற்றென்றே மொழிந்தார். ஒற்றுக்களில் உயிரேறிய பின், அவ்வுயிர், ஏறிய ஒற்றின் உருவங்கோடல் தமிழ் நெடுங் கணக்கில் மிக அழகாக விளங்குகின்றது. இவ்வாறு உண்மைத் தன்மைக்கேற்ற வண்ணம் ஒலிகளை ஒழுங்கு செய்த தமிழர், உண்மைக்கு முரண்படும் ஒலிவழக்கை விலக்கியது வியப்பாங் கொல்!

அகரமேறிய மெய்க்கும் பிற உயிர்களேறிய மெய்க்கும் வேற்றுமை யுண்டெண்பதை விளக்கும் பொருட்டு, க, கி, கு, என்றெழுதினர். இவ்வேற்றுமையைப் புகுத்தாவிடின், ஆங்கிலத்திலிருப்பது போல், Ka, Ki, Ku, என்றெழுதியிருக்கலாம்.

அங்ஙனஞ் செய்திருப்பின் தமிழில் எழுத்துக்களின் தொகை இருநூற்றுக்கு மேற்பட்டதாக விரிந்திராது உயிரைவிட்டு மெய் தனியாக நிற்காதென்பது பற்றியும், உயிரின் தன்மைக்கேற்ப மெய்யுந் திரியுமென்பது நோக்கியும் பதினெட்டு மெய்களுக்கும் பன்னிரண்டுயிர்க் கேற்ற எழுத்தமைத்தார்.

கண்ணப்பர் கண்ட அன்பு

S. இராமச்சந்திரன் B.A., கும்பகோணம்,

வையத்தி னல்லரசாய் வாழ்ந்தாலென் வானத்தில்
செய்யசுக மேவித் திகழ்ந்தாலென்—மெய்யருட்
கண்ணப்ப ரன்பிற் கருத்துற் றுருகாரேல்
எண்ணப் பயன்படா ரிங்கு.

கண்ணப்பரின் உருக்கமான அரும் பெருங்கதையினை அறியாதார் நம் தமிழ் நாட்டிலிரார். வடமொழியினும் சில மாறுபாடுகளுடன் இக்கண்ணப்பர் கதை வழங்கி வருகிறது. திருத்தொண்டர் அறுபத்தி மூவருள்ளும் நம்மனதைக் கவர்ந்து நிற்பவர் கண்ணப்பரே யாவர். "கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்ட பின்" என்ற தொடக்கத்தையுடையத் திருவாசகச் செய்யுளில் கண்ணப்பரின் தலை சிறந்த அன்பை மணிவாசகர் வாயார வாழ்த்துகின்றார். "அன்பிற்குக் கண்ணப்பர்" என்றோர் உலக வழக்கும் பெருவழக்காய் உலவுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமகனின் அன்பின் தன்மையை இக்கட்டுரையின்கண் ஆராய்வாம்.

கண்ணப்பர் கதையெனத் தமிழ்நாட்டில் பெருவழக்காய் பேரொளியோடு திகழ்வது தெய்வப்புலமை வாய்ந்த சேக்கிழார் அருளிய பெரிய புராணக் கதைதான். சேக்கிழாருக்கு முற்காலத்தவர்களாகிய நக்கீரரும், கல்லாடரும் பிற்காலத்தவர்களாகிய சிவப்பிரகாசரும் ஆனந்தக் கூத்தரும் ஆகிய பெரும் புலவர்கள் இக்கண்ணப்பர் கதையினைப் பலவேறு வகையாக எழுதி வைத்துள்ளார்கள். அன்பின் இயல்பினையும் அதன் உயர்வினையும் உள்ளவாறுணர்ந்த தெய்வப் புலவராகியச் சேக்கிழார் செய்த கண்ணப்பர் கதைமுன் அவையெல்லாம் மழுங்கி வழக்கொழிந்து போயின. அகப்பொருட்டுறையில் தலைவன் தலைவிக்கு உரித்தாய் இருந்துவந்த அன்பின் கதையைக் கடவுட் கதையாக மாற்றியவர் நமது சேக்கிழாரே யாவர். எனவே அச்சேக்கிழார் செய்த கதையினைக்கொண்டே கண்ணப்பர் கண்ட அன்பினை ஆராய்வாம்.

இவ்வாராய்ச்சியிற் செல்லுமுன் ஈண்டு சில உரைப்ப உள. இக்காலத்தில் கடவுளையும், கடவுள் மணங் கமழுங் காவியங்களையும் சில மனிதர் கைவிதிர்க்கக் காண்பது மிகவும் இரங்கத் தக்கதேயாகும். காவியமாவது நிரந்தரமாய் மெய்ம்மையின் முறைப்படி மானிட வாழ்க்கையின் முழுமையைத் தோற்றுவிக்கின்ற ஓர் ஒப்பற்ற ஓவியமன்றிப் பிறிதல்ல. மேலும் உயரிய தத்துவங்களையும் அறவொழுக்கங்களையும் உணர்த்த காவியங்கள் பெரிதும் உதவுவன. மன்பதைத் தொகுதி தனக்குரிய மாண்புநிலை எய்துவதற்கு இலக்கிய உணர்வு இன்றியமையாதது. புராணங்களே சமய நூற்களாகா. சமய உண்மைகளில் ஏதேனுமொன்றைக் குறிக்கொண்டு சில புராணங்கள் தினையளவைப் பனையளவாகப் புனைந்து கூறுவனபற்றி அறிவு நிரம்பாத ஆதர்கட்கு உதவுவன என்பது ஒருபுடை ஒப்பு. பொய்யும் வம்பும் நிறைந்த புராணங்கள் பலவுள என்பதும் மிகையாகாது. தன்னலங் கருதி சில நூல்களில் இடைச்செருகல்களும் ஏற்பட்டுள்ளன என்பது ஆராய்ச்சியாளர் தம் துணிபு.

எனவே வம்பும் வழக்கும் நிறைந்தும் நம் நலத்திற்குத் தீங்குதரும் புராணங்களையும் இதிகாசங்களையும் புறக்கணிப்பது நன்றேயன்றி காவியரசம் நிறைந்த பெரும் நூல்களின் போக்கைத் தலைகீழாகக்காட்டி வாய் வம்பு பேசுவது அறிவின்மையே யாகும். கூறிப்போந்தபடி மற்றும் காவியங்களில் உள்ள நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துப் பார்ப்பது அவைகளைச் செப்பிய புலவர்கள் கருதிய நலத்தை எய்தியவர்களாக மாட்டோம். விபரீதப் பொருள்படுத்தி வீண்வாதம் செய்வதற்கே அவை உதவும். ஆக்கியோன் நோக்கத்துடன் கலந்தே நாம் அவைகளைப் பயிலவும் கற்கவும் வேண்டும். கண்ணப்பர் கதையையே இதற்கு ஒரு சான்றாக எடுத்துக் கொள்ளலாம். கண்ணப்பர் நிலையில் நின்று அவரோடு ஒன்று கலவாதவற்கு அவர் இறைவனுக்குச் செய்த வழிபாடெல்லாம் பழியுடைச் செய்கைகளாகவே தோன்றும். சிவகோசரியருக்கும் முதலில் இவ்விதமே தோன்றியதன்றோ?

மற்றும் நூல்களின் பெயரைச் சொன்ன அளவில் சிலர் அதனைப்பற்றிய ஆராய்ச்சி பலவற்றுள்ளும் தலையிட்டுக் கொண்டு அக்காலத்திலாண்ட அரசர் தம் பெயர்களையும், அக் காலப் பழக்க வழக்கங்களையும் ஆராயவும், எந்த ஆறு எந்த வழியாக ஓடியது என்பதை முடிவு கட்டவும் செப்புத் தகடுகளையும், சிலா சாசனங்களையும், இடிந்த கோபுரங்களையும் உடைந்த சிலைகளையும் தேட ஆரம்பித்து விடுகின்றனர். இம் முறையும் இலக்கியங்களைப் பயிலும் திறமாகாது. கவியினது கருத்தினத கலத்தையும், எடுத்துக்கொண்டப் பொருளைக் கூறிச் செல்லும் திறனையும் அதனுள்ளே பொதிந்துள்ள அரும்பெரும் திட்ப நுட்பங்களையும் நீதிகளையும் உய்த்துணர்ந்து தெளிய அறிதலே சிறைப்புடைத் தாம். இதை இவ்வளவில் விடுத்து மேற்செல்லுதும்.

கண்ணப்பரின் தாய், தந்தை, நாடு, நகரம், பெயர், இன்னோரன்னபொருள்களை இணைத்தமைத்து நக்கீரர் ஓர் அழகிய வெண்பா இயற்றியுள்ளார்.

“ தத்தைதா யாம்தந்தை நாகனும் தன்பிறப்பு
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனும்—தித்திக்கும்
திண்ணப்ப னென்றுபேர் செய்தவத்தால் காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண்”

கண்ணப்பர், பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரில்வேடர்குலத் தரசனாகிய நாகனென்பவனுக்குத் திண்ணன் என்னும் பிள்ளைத் திருநாமத்தோடு தோன்றினார். இவரது தாயின்பேர் தத்தை. வயது பதினாறானதும் குலத்தலைமை பூண்டு வேடர்களுடன் கன்னி வேட்டைக்குச் சென்றார். அங்கே வேட்டையாடும் போது ஒருபன்றி வேடர்களையும் வலைகளையும் தப்பியோடு வதைக்கண்டு அதை நெடுந்தூரந் துரத்திச்சென்றுக் குத்திக் கொன்றார். பிறகு தன்னுடன் தொடர்ந்து வந்த நாணன் வழி காட்ட தாகவிடாய் தீர்த்துக் கொள்ளப் பொன்முதரி யாற்றிற் குச்சென்றபோது, அங்கே காளத்தித் திருமலையைக் கண்டு நாணனால் அங்குள்ள சிவலிங்கத்தைப் பற்றியும் அதன் பூசனை யைப்பற்றியும் தெரிந்துகொண்டார். தன்னையறியாமலே ஓர் புத்துணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று. நேரே மலைக்கு ஓடினார். அங்கே குடுமித் தேவரைக் கண்டதும் அன்புருவாக மாறி விடு கின்றார். கண்ணுங் கருத்துமாக இராப்பகல் தூங்காமல் இறை வனுக்கு வழிபாடு புரிவதிலேயே நின்றார். ஆறும்நாள் இறை வனது ஓர் கண்ணில் புண்ணீர் கசிந்தது. அப்புண்ணீர் நிற்கும் பொருட்டுத் தன் கண் ஒன்றை அகழ்ந்து அப்பினார். மறு கண்ணிலும் புண்ணீர் தோன்றியது. தன் மறு கண்ணையும் தோண்டப்போனார், இறைவன் தோன்றித் தடுத்தருள் புரி கின்றார். இதுவே கதையிற் பொதிந்துள்ள பொருள்.

கண்ணப்பரிடம் காணும் அன்பினை விளக்கப் புகுமுன், அன்பினைப்பற்றிப் பொதுவாகச் சில கூறிவேண்டியுள. அன்பு என்பது பொருளின்கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சியின்பாற் படும். உலகத்துப்பொருள்கள், உண்மை மாத்திரையுணர்த்தி பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த் தப்படுவனவும் என இருவகைப் படும். அவற்றுள் உண்மை மாத்திரை யுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதன காமம்,

வெகுளி, மயக்கம், இன்பம், துன்பம், முதலியன. உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன மாடம், கூடம், மனிதன், மரம் முதலியன. அன்பு என்பது பொருளின் உண்மை மாத்திரை யல்லாது பிழம்பு உணர்த்தலாகாது. இது அன்பு என்று தந்து காட்ட இயலாது. குடத்துள் விளக்கும் தடத்துள்வாளும் போல் அன்பு உள்ளது. குடத்திலிட்ட விளக்கும் உறையி லிட்ட வாளும் உள்ளே மறைந்திருந்து வெளியே தோன்றா திருப்பதுபோல் அன்பும் உள்ளத்துள்ளே ஒளிரும் தன்மையது அதனைக் கண்கொண்டோ அல்லது பிறபொறிகளைக்கொண்டோ அறிந்துகொள்ள இயலாது மனத்தால் தான் சிறிதளவு உணர இயலும்; அன்பின் பெருக்கைக் காதலன் காதலி இவர்க ளிடையே பெரிதும் காணலாம் என்ப.

உவகை அல்லது இன்பமே அன்பின் பயனாகும். நோக்க வேறுபட்டால் வெவ்வேறு பெயர் பெறுகின்றனவே யன்றி அன்பு, இன்பு என்ற இரண்டிற்கும் உள்ள உள்ளநிலை ஒன்று தான் "அன்பினாலடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகி" என்றும் "முடிவிலா இன்ப அன்பு வேண்டி" எனவும் தெய்வச் சேக்கிழார் கூறும் அடிகள் ஈண்டு நோக்கத் தக்கன.

அன்பு வேறு; அவா வேறு. அவா நெறியில் ஒருவன் தனக்காக உலகம் உள்ளதாக எண்ணுகிறான். ஆனால் அன்பு நெறியிலோ உலகத்திற்கெனத் தான் இருப்பதாக எண்ணு கிறான். அன்பிலாழ்ந்தவன் தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்; பொதுமறை கூறிய பொய்யா மொழியார்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" என்றார்.

அன்புடையோர் தன்னுயிரைப் போல் மன்னுயிரை நினைக் கின்றார் என்பது மட்டுமல்ல. மன்னுயிரைத் தன்னுயிராகவே நினைக்கின்றார். அன்பு நிலையில் தன்னுயிர் மன்னுயிர் என்ற வேற்றுமை உணர்ச்சியே கிடையாது.

. பத்தியும் அன்பும் உள்ள நெகிழ்ச்சியின் பாற்பட்டதே யாயினும் மிகவும் வேறு பட்டவை. பத்தி மனஉருக்கத்தோடு நின்று விடுவது. அன்போ ஆன்மாவைப் பற்றியது. ஆன்ம நெகிழ்ச்சியே அன்பு எனப்படும். கண்ணப்பர் புராணத் திலேயே இவ்வேற்றுமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. சிவ கோசரியார் இறைவன் மாட்டுக்கொண்டது பத்தி; கண்ணப்பர் கொண்டது அன்பு.

அன்பு உலகத்துப் பொருள்களில் பலதிறப்பட்டு நிகழும்; காதலன் காதலி இவர்கள்பால் உளதேல் சாவிற் சாதல், நோவின் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி இரங்கல் முதலி யன காணப்படும். கடவுள்பால் உளதேல் அப்பெருமானது உண்மையை நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் காணுந் தோறும் தன் வசமழிதலும், மயிர்க் கூச்செறிவதும், மெய் புளகித்தலும், ஆனந்த அருவி பொழிதலும், விம்மலும், நாத் தழுதழுத்தலும் உரைதடுமாறலும், ஆடலும், பாடலும் முதலிய பிறவும் காணப்படுமென்பர். அன்பு நிகழ்வதற்கு ஒத்த திரு, உரு, ஆண்டு, குடி, அருள், உணர்வு ஆகிய இவைகள் துணைபுரிகின்றன. முன்பின் தொடர்பின்றியே செம்புலப் பெய் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தின்புறுதலு முண்டு. அன்பொழுக்கத்தில் ஓர் உயிர் ஈருடல் என்பதோடு நிற்பதில்லை. ஈருடலும் ஒருடலாகின்றன. எனவே நோவின் நோதல் முதலிய பூசல் வெளிப்படுகின்றன.

முடிவாகக் கூறுமிடத்து, அன்பு என்பது காதல், கண் ணோட்டம், ஆர்வம், அளி, இரக்கம், மகிழ்ச்சி, அருள், நட்பு, நகை, நடுநிலை என்பன வற்றிற்கெல்லாம் வேருகி இவற்றின் உயர்வெல்லாம் ஒருசேரப் பிழிந்தெடுத்த இன்சுவைப்பொருளே யாகுமென்றும், இவற்றின் பேரொளியையெல்லாம் ஒன்று சேர்த்துத் தீட்டியது அன்பின் படமென்றும் ஓர் அறிஞர் கூறியது சாலவும்பொருந்துமன்றோ?

(தொடரும்.)

தமிழ்ச் செய்திகள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரவை:—

இப்பேரவையின் ஆண்டுவிழாவில் கீழ்க்கண்ட முடிபுகள் செய்யப்பெற்றன.

(1) பல்கலைக் கழக செனட் சபை அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை B., A., பட்டம் பெற்றவர்களுக்கு அளித்திருப்பதுபோல வித்வான், சிரோமணி பட்டங்கள் பெற்றவர்களுக்கும் அவ்வுரிமை கொடுப்பது நேரிதென சென்னை, ஆந்திரா, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் அதிகாரிகளையும் அரசியலாரையும், சட்டசபை உறுப்பினர்களையும் இப்பேரவை வேண்டுகிறது.

(2) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பிரிலிமினரி வித்வான், Siromani பரீட்சைகளில் தேறிய மாணவர்களை சென்னைப்பல்கலைக்கழகத்தின் வித்வான், சிரோமணி Final பரீட்சைகளுக்கு அருகரென ஏற்றுக் கொள்ளவேண்டுமெனவும் அதற்காவன புரியுமாறு இவ்விரு பல்கலைக் கழகங்களின் அதிகாரிகளை இப்பேரவை வேண்டுகிறது.

(3) கும்பகோணம் அரசியலார் கல்லூரியில் நிகழ்ந்து வரும் கல்லூரிகளின் மாணவர்கள் ஆங்கிலச் சொற்போரும், வெற்றிபெறும் மாணவர்க்குப் பரிசு வழங்கலும், போல, இப் பல்கலைக் கழகத்திலும் தமிழ் மாணவர்களுக்குள் நாவலர் போட்டி நிகழ்த்த வேண்டுமென இக்கழக அதிகாரிகளை இப் பேரவை வேண்டுகிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்:— திருச்சிராப்பள்ளி ஈபர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையில் மாசி 29 தேதியன்று திரு

வள்ளுவர் திருநாள் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் வித்வான், அ. பூவராகம் பிள்ளையவர்கள் 'திருவள்ளுவர்' என்பது பொருளாகவும் பண்டிதர், ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் 'நல்லந்துவனார்' என்பதுபொருளாகவும் கும்பகோணம் அரசர் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் 'திருக்குறள்—மூன்றாம்பால்' என்பது பொருளாகவும் அரிய விரிவுரைகள் நிகழ்த்தினர்.

* * * * *

இச்சங்கத்தார் நடத்திவரும் திக்கற்ற மாணவர் இல்லத்தின் பொருட்டாக இச்சங்க உறுப்பினர் திரு. G. சீனிவாச நாயுடு அவர்கள் (Retired Sub. Asst. Surgeon) கீழவாசல் தஞ்சை, ஒரு நூறு வெண்பொற்காசுகளை நன்கொடையாக உவந்தளித்தனர். இப்பெருந்தகையார் இயற்றிய நன்றிஞாலத்தின் மாணப்பெரிது.

* * * * *

இச்சங்க உறுப்பினர் கூனம்பட்டி அம்பலகாரர் என்னும் திரு. S. குமாரசாமி மேற்கொண்டார் அவர்கள் அரிதிற்றேடிய தமிழ் அங்கில நூல்கள், முந்நூறின் மேற்பட்டனவற்றையும் நிலைப்பேழை ஒன்றனையும் இச்சங்க நூல் நிலையத்திற்கு மனமுவந்து கொடுத்தனர். இது சங்கத்தாற் போற்றற்குரிய ரியசி, கொடையாகும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி :— இக்கழகத்தின் உதவியால் நடைபெற்றுவரும் தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் கீழே குறித்தபடி திருக்குறட் புலமைக்கட்டுரைப் பரிசு ஒன்றும் திருக்குறட் பாட பல்கலைக் கழக மாணவர் பரிசுகள் மூன்றும் வழங்கப்பெறும். அன்றியும் இக்கழக உதவியால் நடைபெறும் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் ஆதரவில் கீழே குறித்தபடி சமயக் கட்டுரைப் பரிசு ஒன்றும் சமய பாடப் பரிசுகள் இரண்டும் வழங்கப்பெறும்.

I. கட்டுரைப் பரிசுகள்

(1) திருக்குறட் புலமைக் கட்டுரைப் பரிசு ரூ. 100

திருக்குறட் கட்டுரை ஒன்று பக்கம் ஒன்றுக்கு 32 வரிகள் அடங்கிய (Foolscap) பூல்ஸ்கேப் காகிதத்தில் (50) ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமல் 'திருக்குறள் ஒழுக்கமுறை' (*Basic Principles of morality as expounded in Tirukkural)* என்னும் பொருள்பற்றிச் செந்தமிழ் நடையில் எழுதி 15-7-33க்குள் கீழ்க்குறித்த இக்கழக அமைச்சர் விலாசத்திற்குப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

இந்தக் கட்டுரை தமிழ்ப் பண்டிதர்களும், மாணவரல்லாத ஏனைய தமிழ் அறிஞர்களும் எழுதியனுப்பலாம்.

(2) சமயக் கட்டுரைப் பரிசு ரூ. 50

'சைவ சமயம் உலகப்பொதுச்சமயம்' (*Saivism as a universal Religion*) என்னும் பொருள்பற்றிய கட்டுரை ஒன்று செந்தமிழிலாவது அல்லது ஆங்கிலத்திலாவது (Foolscap) பூல்ஸ்கேப் பக்கம் ஒன்றுக்கு 32 வரிகள் அடங்கிய (30) முப்பது பக்கங்களுக்குக் குறையாமல் எழுதி 15-7-33க்குள் இக்கழக அமைச்சர் விலாசத்துக்குப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

சாதிசமய வேற்றுமையின்றி எவரும் இக்கட்டுரைகளை எழுதுதற்கு உரியராவர்.

பரிசுக்கட்டுரைகளை அச்சிட்டு வெளிப்படுத்தும் முழுஉரிமையும் முறையே தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்கும், தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்திற்குமே உரியதாகும். ஏனைய கட்டுரைகள் அவ்வக்கட்டுரை யாளர்களின் செலவிலேயே திருப்பியனுப்பப்படும்.

கட்டுரையாளர் தங்கள்கட்டுரையில் தங்கள் இயற்பெயரை எழுதாமல், தாங்கள் விரும்பும் ஒரு புனை பெயரையே எழுதுதல் வேண்டும்; புனை பெயருடன் தங்கள் இயற்பெயரும் விலாசமும் அடங்கிய ஒரு கடிதத்தை ஒரு காகிதக் கூட்டில் (Cover-ல்) வைத்து ஒட்டி அரக்கு முத்திரையிட்டு, அதனைக் கட்டுரையுடன் வேறொரு பெரிய காகிதக்கூட்டில் (Long cover-ல்) அடக்கஞ் செய்து பதிவுத்(ரிஜிஸ்டர்) தபாலிலேயே அனுப்புதல்வேண்டும்.

II. தேர்வுப்பரிசுகள்

(1) திருக்குறள் பல்கலைக் கழக மாணவர் பரிசு

(திருக்குறட்பாடம்) திருக்குறள்-அறத்துப்பால் முதல் 38 அதிகாரங்கள் உரையுடன் ஓதப்பெற்ற பல்கலைக்கழக மாணவர் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய முதன் மூவர்க்கு முறையே ரூ. 25, ரூ. 15, ரூ. 10-ல் மூன்று பரிசுகள் வழங்கப்பெறும்.

(2) சமய பாடப் பரிசு

சைவ சித்தாந்த சாத்திரம் (14) பதினான்கில் ஒன்றாகிய உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பெற்ற திருவருட்பயனை உரையுடன் கற்ற அன்பர்கள் தேர்வில் முதல் வகுப்பில் தேறியமுதல் இருவர்க்கு முறையே ரூ. 15, ரூ. 10-ல் இரண்டுபரிசுகள் வழங்கப்பெறும். இத்தேர்விற்குக் கற்றுத் தகுதியுடைய எவரும் வரலாம்.

குறிப்பு:—முதல் வகுப்புக்கு 100-க்கு 60-க்குக் குறையாத அம்சங்கள் வாங்க வேண்டும்.

மேற் குறித்த இருவகைத் தேர்வுகளும் 29—10—1933 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தேர்வு இடங்கள் (Examination centres) 15—8—33-க்குப் பின் தெரிவிக்கப்படும்.

தேர்வுகட்கு வரவிரும்பும் பல்கலைக்கழக (University class students) மாணவர்களும், அன்பர்களும் 15—9—33க்குள் கீழ்க் குறித்த கழக அமைச்சர் விலாசத்திற்குத் தேர்வுக் கட்டணம் (Examination fees) அணா 4ஐ $(\frac{1}{2})$ அரையணாத் தபாற்றலையாக அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவுசெய்து கொள்ளல்வேண்டும். அங்ஙனம் பதிவு செய்து கொள்ளுகிறவர்களே தேர்விற்கு வர உரியராவர்.


குறிப்பு:—தமிழ் அன்பர்களிடமிருந்து நன்கொடைப்பொருள் எதிர்பார்க்கின்றோம். அங்ஙனம் நன்கொடைப்பொருள் கிடைப்பின் மேற்கண்ட பரிசுகளின் தொகை மிகுதிப்படுத்தப் பெறும்.

2. கட்டுரைகளும், தேர்வுக்கட்டணமும், அவைகளின் தொடர்பான கடிதப்போக்கு வரத்துகளும் அமைச்சர் விலாசத்திற்கே அனுப்புதல் வேண்டும். விடைபெற விரும்புவோர் $\frac{3}{4}$ அணாக் கார்டாவது, தபாற்றலையாவது அனுப்புதல் வேண்டும்.

மதிப்புரை

தனவணிகன்:-பர்மாவிலுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்க ஆதரவில் இரங்கூனில் வெளியாகும் வாரத்தாள். வாணிபம், கைத்தொழில், பொருள் இவைபற்றிய செய்திகளைத் தமிழர்கள் தெரிந்து மேனிலை எய்த வேண்டுமெனும் பெருநோக்குடையது. தமிழர்கள் குடியேறியுள்ள நாட்டிலும், தமிழ் நாட்டிலும், உள்ள தமிழரின் பொருளாதார நிலைகளை நன்கு விளக்குவது. இதுகாறும் இத்தகைய செய்திகளை விளக்குதற்குரிய தாளொன்று இல்லாத குறை தனவணிகனால் நீங்கியது குறித்துத் தமிழுலகம் பாராட்டுங் கடப்பாடுடையது. தமிழன்பர்கள் இத்தாளினை ஆதரித்து நலமடைவாராக.

காரைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்திரண்டாவது
ஆண்டுவிழாவில் தலைமை தாங்கிய



உயர்திரு. சுவாமி விபுலாநந்தரவர்கள் B. Sc (LONDON)
அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ்பேராசிரியர்.

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௮	ஆங்கீரச, பங்குனி.	மலர் ௰௨.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்திரண்டாவது ஆண்டுவிழாவில் தலைமை தாங்கிய உயர்திரு. சுவாமி விபுலாநந்தரவர்கள் பேசிய முன்னுரை.

தமிழ் மக்களாகிய நாம் இரண்டுகோடியென்னும் எண்ணிக்கையினையுடையேயோம். பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டிலே செம்மையோடு உயிர் வாழ்ந்தோம். இன்றும் ஓர் அளவுக்கு ஆற்றலோடு வாழுகின்றேம். வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பனையும் ஈன்றளித்த எமது அன்னை இந்நாளிலும் பாரதியென்னும் வீர கவிஞனை உலகிற்கு உதவினள்.

சங்க காலத்திருந்த தமிழ் மக்களின் மனவலியும் உடல் வலியும் இன்று நம்மிடத்துக் குறைவுற்றுக் காணப்படுவனவாயினும் அவரது வலிமைக்குக் காரணமாகவிருந்த வாய்மையும் ஈகையும் தமிழ் மக்களிடத்து இன்றும் பொலிவுற்று விளங்குகின்றன. தமிழன் உண்மையுடையவன்; தமிழன் நடுவு நிலையுடையவன்; தமிழன் இயல்பாகவே ஈகையென்னும் பெருங்குணமுடையவன். இக்குணங்கள் நம்மிடத்து நிலைபெற்றிருக்கும்வரையும் நாம் உயிர் வாழ்வோம்; எல்லா உயர்வும் நம்மை

வந்தெய்தும். எக்காரணத்தினாலாவது இவ்வுயர் குணங்களி லிருந்து வழுவுவோமாயின் நமது ஆக்கமனைத்தும் அழிந்து போகும்.

இந்நாட்டிலிருந்து செறிந்த அறிவொளியே உலகெங்கும் பரந்தது. மேல் புலத்தாரது ஞானமனைத்திற்கும் யவன நாடு தாயகமென்றும் யவனருக்கு முன் நாகரிகம் படைத்தோர் மிசிரம் என்னும் எகிப்து நாட்டினரென்றும், அவர்க்கு முந்தி யோர் பாபிலோனிய ஆசிரிய சுமேரியரென்றும், அவரோடு ஒத்த காலத்தினர் சிந்து நதிக்கரையிலே ஹரப்பா, மோஹஞ்ஜி தாரோ என்னும் இடங்களிலே அண்மையிற்கண்டு பிடிக்கப் பட்ட புராதன நகரங்களிலே வாழ்ந்தோராகிய தமிழ் மக்க ளென்றும் ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுரைக்கின்றனர். நாக ரீகத்திற்குப் பிறப்பிடம் தமிழகமேயென்பது மேல்புலத் தறிஞர் பலரது துணிபு. பண்டைநாளில் உலகிற்கு அறிவொளி யைத் தந்த நமது மூதாதையரது உதிரம் நமது உடலத்திற் செறிந்திருக்கிறது. இன்றும் நமது நாடு தனது பண்டைச் சிறப்போடு பொலிவுற வேண்டுமென்பது நம்மனைவருக்கும் பொதுவாகிய உள்ளக்கிடக்கை. இதற்கு நாம் எவ்வெவ் வழி களில் முயலவேண்டுமென்பதைச் சிறிது நேரம் சிந்தனை செய் வோமாக.

உலகத்தின் பலபாகங்களுக்கும் இந்நாளில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. பிறநாட்டு மக்களுடைய வாழ்க்கை முறையை நுணுக நோக்கி நமது சமூக வாழ்க் கையைச் செம்மை செய்ய முயலவேண்டும். பலவகைப்பட்ட கலைத்துறைகளுள்ளே உலக சரித்திரமானது சமூக வாழ்க்கை யின் உட்கிடையை யறிதற்கு இன்றியமையாத சாதனமாகும். நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு உலகிலுள்ள மாந்தர் எவ் வாறு மக்கட் கூட்டந்தாரது பொது நலத்தையும் தத்தமது நாட்டு நலத்தையும் பெருக்கினார்களென்றும், கல்வியும், கைத் தொழிலும், வர்த்தகமும், அரசியலும், பிறவும் மேற்றிசை யிலும் கீழ்த்திசையிலும் எந்நிலையிலிருக்கின்றனவென்றும் நாம் உணர்ந்து கொள்வோமாயின், நமது நாட்டினது முன்னேற்றத்

திற்காக முயல்வது நமக்கு இயல்பாக வந்தெய்தும். தேசசரித்திரத்தைக் கூறும் நூல்கள் தமிழ்மொழியிலில்லை. இக்குறைவை நாம் விரைவில் நிறைவு செய்யவேண்டும். அண்டப்புழுகுகள் பொதிந்த புனைந்துரைக் கதைகளையும் வாளா பொழுது போக்கிற்காக ஏற்பட்ட பொய்க்கதைகளையும் படிப்பதைச் சிறிது காலம் நிறுத்திவிட்டு உலகத்தின் பலபாகங்களிலுமுள்ள மக்களது வாழ்க்கையை நமக்குப் புலப்படுத்தும் உண்மைச் சரித்திரங்களைக் கற்க முயல்வோமாக. இதனால் இம்மைப் பயனுண்டு; மறுமைப் பயனுமுண்டு. தேச சரித்திரத்தைப் போலவே பொருள்புரி நூலையும் கணித நூலையும் விஞ்ஞான நூலையும் முயன்று கற்போமாக. உடல் வலியையும் மன வலியையும் பெருக்கிக் கொள்வோமாயின், ஆன்மலாபம் தானே வந்தெய்தும். தீர புருஷனுக்கே ஆத்ம ஞான விசாரணையுரியதெனக் கண்ணபகவான் கீதையிலே கூறிய உறுதிமொழியை மறவாதிருப்போமாக. வலியின்மைக்கு அச்சமே காரணம்; அச்சம் அறியாமையினின்று உதிக்கின்றது. அறிவொளி பரவுமாயின் அச்சம் நீங்கும்; அச்சம் நீங்கவே வலிமை வந்தெய்தும். "வலிமை, வலிமை, வலிமை, இதுவே நாம் வேண்டுவது" என வேதாந்த சிங்கமாகிய சுவாமி விவேகாநந்தர் முரசறைந்து கூறுகின்றார். நமது முன்னோர் பெருந்தகைமை படைத்திருந்தார். அவர் வழி வந்தேமாகிய யாம் அவரினுஞ் சிறந்து விளங்குவோமாக. நம்மினும் பார்க்க நமக்குப் பின் வருகிற நமது மக்கள் உயர்வடைவதற்கு வேண்டிய சாதனங்களைச் சேர்த்து வைப்போமாக.

நாட்டிலே பலவகைப்பட்ட நோய்களும் உலவுகின்றன; சுகாதார முறைகளைக் கைப்பற்றியொழுகாமையினாலே நோயுண்டாகிறது. சுத்தக் காற்றும், சூரியவெளிச்சமும், நல்ல நீரும், தூய உணவுமே உண்மை மருத்துவர்கள். கிராமங் கிராமமாகச் சென்று நாம் இவ்வுண்மைகளை ஏழை மக்களுக்குப் போதிக்க வேண்டும். கல்வி கற்றுத்தேறினோர் வேலையில்லையென்று திண்டாடவேண்டியதில்லை. மக்களுக்குத் தொண்டுபுரிகின்ற பெரிய வேலை அறிவுடையோர் அனைவருக்கும் உரியதாக அமைந்து

கிடக்கின்றது; ஆடம்பரம் வேண்டாம், உயர்ந்த சம்பளம்வேண்டாம்; தொண்டுபுரிதலே வேண்டும், எனத் தூய சிந்தையோடு மக்களுடைய நலத்துக்காக உழைப்போர் தமது உணவுக்கும் உடைக்குந் திண்டாட வேண்டியதில்லை. உண்மையறிவு நமக்கு வலிமையைத் தருவது; பிறர்க்கும் வலிமையைத் தருவது. ஆதலினாலே நமது உள்ளம் என்றும் உண்மையறிவை நாடுவதாக; பிறர் நலத்திற்காக உழைப்போமாயின் அனைவர்க்குந் தந்தையாகிய ஆண்டவன் நமக்கு வேண்டிய நலத்தினைத் தந் தருளுவான்.

தமிழ் நாட்டில் ஈகை நிரம்பவுண்டு. ஆயினும் அது குளத்திலுகுத்த நீர்போலப் பயனற்ற வழிகளிலே பெரிதுஞ் செல்லுகின்றது. வாடிய பயிருக்கன்றோ நீர் பெய்யவேண்டும். உண்ண உணவும் உடுக்கத் துணியுமின்றி ஏழைகள் பரிதவிக்கின்றனர்; பன்னூறாயிரந் தமிழ்மக்கள் கூலித் தொழிலுக்காகக் கடல்கடந்து செல்கின்றனர். பண்டை நாளில் அறிவொளி வீசிய இந்த நாடு அறியாமையில் அமிழ்ந்திக் கிடக்கின்றது. ஆயிரந் தமிழரில் தொளாயிரத்து அறுபதின்மருக்கு எழுத்து வாசனையில்லை. அநாதைகளின் அழுகையொலியும் விதவைகளின் கண்ணீரும் உதவியை வேண்டி முறையிடுகின்றன. இந்த நிலையிலே செல்வம்படைத்த தமிழ்மக்கள் யாது செய்கின்றனர்? பசிப்பிணியறியா "உயர் குலத்தாருக்கு" அறுசுவை யுண்டியும் பிறவும் வழங்குதற்கு வேண்டிய நிலையங்களை அமைக்கின்றனர். ஒரு தொழிலும் புரியாது உண்டுடுத்துச் சுகமாக விருப்போருக்குக் கைப்பொருளை வழங்கிவிடுதலே தானமென்றும் அதுவே புண்ணியமும் புகழுமென்றும் நினைக்கின்ற தீய மனப்பான்மை தமிழகத்திலும் புகுந்துவிட்டது. "வறியார்க்கொன் றீவதே ஈகை" என்னும் வள்ளுவனாரது மணிமொழியைத் தமிழர் மறந்துவிட்டனர்போலும். வறியார்க்கு ஈவதே ஈகை. அதுவே இம்மை மறுமைப் பயனைத் தரவல்லது. நெருக்குண்டுகிடக்கும் தாழ்ந்த வகுப்புச் சகோதரருக்கு ஊன்றுகோல்போன்று உதவி புரிவதே இக்காலத்தில் நாம் செய்தற்குரிய ஒப்பற்ற தானமாகும்.

ஒரு தாய் வயிற்றுப் பிறந்த மக்கள்போலப் பழந்தமிழர் ஒன்று கூடி வாழ்ந்தனர். ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசும் கொடிய வழக்கம் தமிழகத்தில் உற்பத்தியாகவில்லை. பழந்தமிழ் நாட்டுக் குறுநில மன்னர் பாணரோடு உடனிருந்துண்டனர் என்றும், அம்மன்னரளித்த ஊனையும் சோற்றையும் உயர்குலத்தார் உவப்புடனுண்டனரென்றும் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. "பாணன் பறையன் துடியன் கடம்பனென்றிந் நான்கல்லது குடியுமில்லை" என்பதை நோக்குமிடத்து இக்காலத்துத் தாழ்த்தப்பட்ட வகுப்பாரென ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் பழந்தமிழ் நாட்டுக் குடிகளென்பது யாவர்க்கும் புலனாகும். பொருளதிகாரத்தினுள்ளே பாணரும் பார்ப்பாரும் 'பாத்த சிறப்பின் வாயில்க'ளெனவும், 'அகம்புகன் மரபின் வாயில்கள்' எனவும் ஒருங்கு கூறப்பட்டாராதலின் தீண்டாமையென்னும் கொடிய வழக்கம் பழந்தமிழ் நாட்டிலிருந்ததில்லையென்பது வெளிப்படையாகின்றது. தமிழரது ஆக்கத்தினைக் கண்டு மனஞ்சகியாத வேற்றுப் புலத்தார் குலவேற்றுமையென்னும் ஆப்பினைத் தமிழரிடையே கடாவி விட்டாரென்று எண்ணுதற்கிடமுண்டு. அஃதெவ்வாறாயினும் உலகு இந்நாளிலிருக்கின்ற நிலையை நோக்குமிடத்து வகுப்புப் பேதங்களனைத்தினையும் நீக்கி விடவேண்டுமென்பது தெள்ளிதிற்புலனாகின்றது. பண்டு நம்முன்னோர் வாழ்ந்ததுபோல நாமும் ஒன்றுபட்டு வாழ்வோமெனின், நாம் உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுவோம்; உய்யும் வழியிதுவே யன்றிப் பிறிதொன்றில்லை.

தொல்காப்பியச் சொல்லதிகாரக்

குறிப்பு ஆராய்ச்சி.

திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை திருவத்திபுரம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு என்னும் உரைநூல் பின்னங்குடி, டாக்டர், திரு. P. S. சுப்பிரமணிய சாஸ்திரி M. A Ph. D., அவர்களால் பல அறிஞர் துணைகொண்டு எழுதப்பட்டதோர் ஆராய்ச்சி நூல் என்பது பொழிலன்பர்களும், பிற தமிழறிஞர்களும் அறிந்ததே. அந்நூலின் முகவுரைக்கண், திரு. சாஸ்திரியார், "இவ்வாராய்ச்சியில் கூறப்பட்டன அனைத்தும் குற்றமில் கூற்று என்ற எண்ணம் எனக்கு ஒருபோதும் இல்லை. குற்றங்களைக் காரணங்களுடன் அறிவிக்கும் புலவர்களிடம் எப்போதும் நன்றியோடிருப்பேன். பண்டைநூல்கள் இயற்றிய நூலாசிரியரிடமும், உரைகள் இயற்றிய உரைகாரர்களிடமும் மிக்க பக்தியுடனும், கௌரவ புத்தியுடனும் இருக்க வேண்டுமென்பதோடு, அவர்கள் கொள்கையைத் தொல்காப்பியம் படிப்போர் நன்கு ஆராய்தல் வேண்டும் என்பதையும் அறிவிக்கவே இச்சிறு நூல் எழுதப்பட்டது," என்று கூறியிருத்தல் கண்டு, அறிஞர்கள் இதனை யாராய்வாராயினர். இவ்வாராய்ச்சிகளுள், மன்னார்குடி, தமிழ்ப்புலவர், திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், சாஸ்திரியார் எழுதிய குறிப்பும், உரையும் சேரக்கொண்டு, குறிப்புரையென்னும் கருத்தினராய், "சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்புரையும் மறுப்பும்" என்னும் பெயரிய ஆராய்ச்சியினைச் செய்துகொண்டு வருகின்றனர். திரு. பிள்ளையவர்கள் குறிப்புரையை மறுக்குமுகத்தால் அக்குறிப்பெழுதற்குக் காரணமாயிருந்த பண்டைய உரையாசிரியர்கள் உரையையும் தமக்கு இயற்கையே வாய்த்த ஆழ்ந்தகன்ற நுண்ணிய அறிவுடைமை தோன்றச் சிறந்து விரிந்ததோர்

ஆராய்ச்சி செய்து வருகின்றனரென்பதும், தமிழிலக்கண ஆராய்ச்சி வேட்கையுடையார்க்கு ஆர்வம் நிரப்பும் உரையமிழ்தாய் அது விளங்குகின்றதென்பதும் பொழிலன்பர்கள் அறிந்தனவாகும்.

இந்நிலையில், இக்குறிப்பு நூல் சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் தேர்தலுக்குப் பாடமாக விதிக்கப் பெற்றிருத்தலாலும், அத்தேர்தற்குத் தம்மை உரிமை செய்து கொள்ளும் மாணவர்கட்குக் குறுகியகாலமே கிடைத்திருத்தலின், அக்கால வெல்லைக்குள், திரு. பிள்ளையவர்களின் மறுப்பு முடிவுபெறுதல் ஆகாதெனத் தோன்றுதலாலும், யான் இவ்வாராய்ச்சியினை அக்காலவெல்லைக்குள் முடித்துத் தருமாறு பிள்ளையவர்களை வேண்டுகின்றேன்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புடையார், முதற்கண், "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே, யஃறிணை யென்மனார் அவரலபிறவே, ஆயிருதிணையினிசைக்குமன சொல்லே" என்ற சூத்திரத்தை யெழுதிப்பின், சொல்லதிகாரம், கிளவியாக்கம் என்னும் சொற்றொடர்களை யாராய்ந்து, பின்னர்ச் சூத்திரப்பொருளை யாராய்ந்து குறிக்கின்றார். அம்முறையே, முதலில், சொல்லின் இலக்கணம், அதிகாரம் என்பதன்பொருள் கிளவியாக்கம் என்பனவாகிய தலைப்புக்களை வகுத்துக்கொண்டு செல்லுதல், அவர்தம் ஆராய்ச்சிபொழுக்கம் இற்றெனச் சிறப்பிக்கின்றது.

சொல்லதிகாரம், சொல்லின் இலக்கணம்.

சொல்லின் இலக்கணம் கூறுமிடத்து, சாஸ்திரியார் உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் கூறிய இலக்கணங்களையும் காட்டி, அவற்றுள் நச்சினார்க்கினியர் சேனாவரையரை மறுத்துரைக்கும் பகுதியையெழுதி, முடிவில், "சேனாவரையர் சொல் கருவியாய் நில்லாது என்று கருதினர் என்பதற்குப் பிரமாணந்தோன்றவில்லை. அன்றியும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (சொல்-155) என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை நச்சினார்க்கினியர் இங்கு மறந்தனர் போலும்," என்றனர்.

சேனாவரையர் "சொல்லாவது எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்துவருவது" என்றாராக அதன்கட் குறித்து வருதற்குக் கருதி நிற்றல் எனப்பொருள் கொண்டு அவ்வாறு நிற்றல் உணர்வுடைப் பொருட் கல்ல தின்மையின், கருதி நிற்றற் 1பொருண்மையில் குறித்துவரு மென்றல் அசம்பவம் என நச்சினார்க்கினியார் மறுத்தனர். குறித்தல் என்பதற்கு அதுபொருளாதல், "எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற விடத்தும் "இவ்வாள் வெட்டு தலைக் கருதியேயிருக்கும் என்றாற்போலக் கருவிக் கருத்தாவாய் நின்றதென்றும்," உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே" என்ற சூத்திரத்தில், "இசைக்குமன்" என்றதும், கருவிக் கருத்தாவாய்க் கூறப்பட்டதென்பார், "பொருளையுணர்த்துவான் ஒரு சாத்தனேயெனினும், அவற்கது கருவியாகவல்லது உணர்த்த லாகாமையின், அக்கருவிமேல் தொழிலேற்றிச் சொல்உணர்த்து மென்று கருவிக் கருத்தாவாய்க் கூறினார். இவ்வாசிரியர் எவ் விடத்தும் சொல்லைக் கருவிக் கருத்தாவாகக் கூறுமாறு மேலே காண்க. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என் றாற்போல்வன என்றும் கூறினார். அஃதாக. சாஸ்திரியார் "மறந்தா"ரென்றது யாங்கனமமையும்.

அல்லதூஉம், சேனாவரையர் "சொல்நிகழ்ச்சிக்குப்பொருள் இடமாகலின், ஆயிருதிணையின் கண்ணென ஏழாவது விரிக்க" (சொல்-1) என்றும், "பொருளைச்சொல் இன்றியமையாமையின், அதனைக் குறையென்றார்" (சொல்-396) என்றும், "திரிந்துவேறு படூஉம் அன்னபிறவு" மென்றதனால், எட்சாந்து, கோட்டுநூறு, சாந்தநதொப்பு, தொகையதுவிரி, பொருளதுகேடு, சொல்லது பொருள் என்னும் தொடக்கத்தன கொள்க" (சொல்-80) என்றும் கூறுவனவற்றை நோக்குமிடத்துச் சேனாவரையர்க்கு, சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடம் என்பதூஉம், எனவே, சொல்லும் பொருளும் இடத்து நிகழ்பொருளும் இடமும் ஆகிய வெனினும் இவற்றதியைபு எட்சாந்து முதலியனபோல சமவாய சம்பந்த மென்பதூஉம் கருத்தாமென்க. நச்சினார்க்கினியர் "பொருட்டன்மை யுணர்தற்குக் கருவியாம்" என்பாராகலின்,

சொல்லும் பொருளும், கருவியும் செயப்படுபொருளுமாகிய சையோக சம்பந்தமென்பது அவர் கருத்தாமென்க. இங்ஙனம், கருத்துவகையால் இருவரும் வேறுபடு மாற்றை யுணராது, சாஸ்திரியார், "ஆனால் சேனாவரையர் சொல் கருவியாய் நில்லாது என்பதற்குப் பிரமாணந் தெரியவில்லை" எனத் தம் முண்மை நிலையைக் கூறினார். பிரமாணந் தெரிந்திருப்பின், நச்சினார்க்கினியரை மறுப்பல் என்றிருப்பரேல் நம்மனோர்க்கு மகிழ்ச்சி பயந்திருக்கும். இராது, "எல்லாச் சொல்லும் என்றது நோக்குகின்றவர்க்கு மக்களாகிய கருத்து யாதொரு பொருளிடத்துத் தோன்றுமென்று பொருள் தந்தால், வெள்ளாடையென்னும் பண்புத் தொகைபோல, அக்கருத்து மக்களாகாமையின் பண்புத் தொகையன்றாம்; அது மக்கட் சுட்டென்றதற்கு அப்பொருள் மக்கட் சுட்டென்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நிற்றலின், அன்மொழி தொகையன்றாம்," என்றனர். என்றது, மக்கட்சுட்டென்றதற்கு முதற்கண் மக்களாகிய பொருள்கூறிப், பின் இலக்கணங் கூறுமிடத்து, அம்மக்கட் பொருள் எய்தாவகையிற் கூறுதலாற் பொருந்தாது என்பதாம். எய்தாவகையிற் கூறுதலாவது:—வெள்ளாடை யென்பது "பண்புதொக வரூஉம்" (சொல்-418) என்புழிச் சேனாவரையர் காட்டியதொரு பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மக்களாகிய சுட்டு நிகழுமிடம் மக்கட் சுட்டெனின், வெண்மையாகிய ஆடையணியுமிடம் மகளாதல் வேண்டும்; அங்ஙனமாதல் கூடாமையின், மக்களாகிய சுட்டு நிகழும் பொருளும் மக்களாகாதென்றவாறும். இவ்வியைபின்மை நோக்கியன்றே, சிவஞான யோகிகளும், "உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே, அஃறிணை யென்மனார் அவரலபிறவே" (இலக். விளக். 162) என்றவிடத்துப் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை யென்றதனை மறுத்து, இருபெயரொட்டாகுபெயர் என்று கூறிப்பின், சூத்திர விருத்தியுள், "மக்கட்பொருள் எனவே யமையுமாயினும், அப்பொருட்கு உயர்திணையெனக் குறியிட்டதற்குக் காரணந்தோன்ற, மனத்தோடாறறிவினரே மக்களென

மரபியலுட் கூறும் உயர்ச்சிபற்றி மக்களாகிய நன்கு மதிக்கப் படும்பொருள் என்பார் மக்கட் சுட்டென்றார்; மக்களென்பது பொதுமையினீக்கிப் பொருளை விசேடித்து நிற்பச்சுட்டென்பது ஆகுபெயராய் அப்பொருளின் உயர்ச்சியுணர நிற்ப, இருபெயரு மொன்றனையொன்று விசேடித்து இன்னதிதுவென வருமாறு காண்க" எனத் தெருட்டுவாராயினர். இவ்வாராய்ச்சி நெறியிற் பொருளுரையைத் தெளியாது, சாஸ்திரியார், நச்சினார்க்கினியர் கூற்றினைக்கொண்டால், "தூணைக்கண்டு மகனென்று கருதிய வழியும் அஃறிணையே வழங்கவேண்டும்" என்று கருதுகின்றார். பொருள் குறித்தனவே என்ற தொல்காப்பிய சூத்திரத்தை நச்சினார்க்கினியர் இங்கு மறந்தனர்போலும்" என்றல் இச் சாஸ்திரியார்க்கு அடாது என்க.

இனி, அதிகாரம் என்றசொற்கு உரையாசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் முறைமையெனப் பொருள் கொண்டதற்கு ஏது கூறுவார்போன்று திரு. சாத்திரியார், "முறைமையென்பதற்கு விதி என்ற பொருள் கொண்டனர் போலும்," என்கின்றார். இதனை, அரசன் அதிகாரத்தை அரசுமுறை என்றாற் போலக் கோடல் பொருந்துவதாகும். ஈண்டு, முறைமைக்கும் விதிக்கும் இயைபின்மை "தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரையும் மறுப்பும்" என்ற கட்டுரைப்பகுதிகள் காட்டியிருக்கின்றன. மேலும், "சேனாவரையர் அதிகரணம் என்று பொருள் கூறினர்" என்று சாஸ்திரியார், கூறுகின்றார். சேனாவரையர், "ஈண்டு அதிகாரமென்றது ஒருபொருள் நுதலிவரும் பலவோத்தினது தொகுதியை என்க" என்று கூறி, "வடநூலாரும் ஓரிடத்து நின்றசொல் பல சூத்திரங்களோடு சென்றியைதலையும், ஒன்றனிலக்கணம் பற்றிவரும் பல சூத்திரத் தொகுதியையும் அதிகாரம் என்ப," என்று கூறியிருத்தலின், அவர்க்கு அதிகரணம் என்றல் கருத்தன்றென்க. அன்றியுமது கருத்தாயின், "[illegible]பா[illegible]விபாகம்," "ஞேயம்," "தாது" என்று வடநூலிசைபுகளைக் [illegible]தோதினவர், அதிகரணமுங் கூறு தொழியாராகலானும், அதிகாரத்துக்கும் அதிகரணத்துக்கும் பெரியதோர் வேறுபாடு நடைமுறையினும் காண்டலானும்,

அறிவு நூல்களில் சம்சயம், பூர்வபக்ஷம், சித்தாந்தம் முதலிய வற்றின் நிலைக்களனும் பொருண்மையில் அதிகரணம் வழங்கப் படுதலானும், இலக்கண நூல்களில் அரிசியிருத்தற்கு ஆதார மாகிய கலத்தை அதிகரணமென்னும் பொருண்மையில் வழங் குபவாதலானும், அதிகரணம் என்றுரென்றல் குற்றம் என்க.

இனி, கிளவியாக்கம் என்புழி, சேனாவரையர் "வழுக் களைந்து சொற்களையாக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று" என்று கூறி அதனை எடுத்துக் காட்டு முகத்தால் வலியுறுத்தியதோடு, "வினையிற்றோன்றும் பாலறி கிளவியும்" என்ற சூத்திரமுதல் இவ்வோத்து முடிவுகாறும் வழுக்களைந்து சொற்களையாக்கிக் கோடலே பொருளாதல் காட்டிச் செல்லுதலானும், நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள் கண்மேலா மாறுணர்த்துகின்றதெனஉரையாசிரியர் கூறியது தம் கருத்துக் கிசைவிலதாயினும், குற்றமின்மைகண்டு அதனையும் தழுவி, "சொற்கள் பொருள்கண் மேலாமாறு கூறி னமையான் கிளவியாக்கமாயிற் றெனினுமமையும்" என்று கூறுதலானும், பேரிலக்கிய விலக்கணக் கடலாய் விளங்கும் நச்சினார்க்கினியார் இவ்விருவர் கூறுவனவற்றையு மோர்ந்து, சேனாவரையார் கூறியாங்கே கூறினமையாலும், சாஸ்திரியார் "தெய்வச்சிலையார் கூற்றே மிகப்பொருந்தும்" என்பது எல் லார்க்கும் ஒப்ப முடிவதன்று.

இனி "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்ற விடத்து மக்கட்சுட்டு என்பதன் பொருள்பற்றிய குறிப்பினுள் சாஸ்திரியார், "மக்களென்று கருதப்படும் பொருள்" எனப் பொருளுரைத்த சேனாவரையர் உரையினையும், நச்சினார்க்கினியர் உரைத்த "மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள்" என்ற உரையினையும்காட்டி, அவ்விரண்டினுட் சேனாவரையருரைத்தது மெய்யுணர்வு திரிபுணர்வு என்றிரண்டிற்கும் ஏனையது மெய் யுணர்வுக்குப் பொருந்துமென்று கூறினர். கூறினபின், நச்சி னார்க்கினியர் சேனாவரைய ருரையின்கண் நிகழ்த்திய மறுப் பினைக்குறிப்பிட்டு, "ஆனால், கருதப்படும்" என்னும் சொல்லின்

தாற்பரியத்தை யூன்றி நோக்கின், இருவகையாய்க் கூறியவற்றுக்கும் பொருளில் மாறுபாடு இல்லையென்றே தோன்றுகின்றது" என்று கூறுகின்றார்.

சேனாவரையர், மக்கட்சுட்டு என்றதற்கு மக்கள் என்று கருதப்படும் பொருள் என்று பொருள் கூறிப்பின், அதற்கிலக்கணங் கூறுவார், "மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டு எனப் பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை," என்றாராக, அது பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையன்றென மறுக்கப் புகுந்த நச்சினார்க்கினியர், "முன்னர்மக்களென்று கருதப்படும்பொருளை யுயர்திணை யென்பவென்று அவர் கண்ணழிவு கூறியது ஒரு பொருளிடத்து நின்ற மக்கட்டன்மையாலே ஒருவற்கு அப்பொருள் மக்களென்று கருதப்பட்டதென்று பொருடந்து நின்றது; பின்னர், மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் இக்கருத்துத்தானும் திரிபுணர்ச்சி யாகலானும், மெய்யுணர்வுக்கே பொருந்துமெனத் தாம் முற்கூறியதனோடு மாறுகோடலானும், இருவர் உரையினையும் அவர் தெளிய உணராமையுணர்த்துவதாயிற்றென்க.

இனி, "ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே" என்றவிடத்து, சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் முறையே சொல் நிகழ்ச்சிக்குப்பொருளும், சொல் இசைத்தற்குத் திணையும் இடமாகக் கொண்டமையாலும், உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் இருதிணையினையும் இசைக்கும் எனக்கொண்டமையாலும், முறையே, இவ்விரு திறத்தாரும் ஏழாவதும், இரண்டாவதும் விரித்தனரென்றொழிதலை விடுத்து சாஸ்திரியார், "சான்றோர் செய்யுளுக்கு ஆதாரம் யாதெனத் தேடவேண்டியிருத்தலானும், தொல்காப்பியச் சூத்திரங்கள் இப்பொழுது நேரில் உள்ளமையானும், ஏழாம் வேற்றுமைத் தொகையென்று கருதினார்போலும்" என்கின்றார்.

இலக்கணத்திற் காதாரமாவது சான்றோர் செய்யுளென்பவாக, அச்செய்யுட் கடலுட்டிளைத்தாடிய சேனாவரையர்க்குத்

தொடர்றுன்பத்தையேற்றி, ஏதுவாக்கினதோடமையாதுதொல் காப்பியச் சூத்திரங்களே போதிய ஏதுவாயின என்றனர்.

தொல்காப்பியச்சூத்திரங்களுள்ளும், "யாதனுருபிற்கூறிற் றாயினும், பொருள் சென்மருங்கின் வேற்றுமை சாரும்" (சொல்-106) என்றும், "யாஅரென்னும் வினவின் கிளவி, அத் திணைமருங்கின் முப்பாற்கு முரித்தே" (சொல்-210) என்றும் வரும் சூத்திரங்களிலெல்லாம், சேனாவரையரே, இரண்டாவது விரித்தற்கேற்பப் பொருளுரைத்தனராகலின், அவர்க்கது கருத்தன்றென்க.

இனி, உயர்திணை யென்பதன் தொகைவிரி எனக்குறித்துக் கொண்டு அதன்கண் ஆசிரியர் சேனாவரையர், நச்சினார்க் கினியார், தெய்வச்சிலையார் ஆகிய மூவர் கூறிய இலக்கணங்களைக் கூறி, முடிவில் "ஆதலால் உயர்திணை யஃறிணை என்ற இரண் டையும் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவே கொள்ளுதல் நேராகும்; தெய்வச்சிலையார் கூறும்பொருளின்படி இரண்டையும் பண்புத் தொகையாகவே கொள்ளலாம்," என்றனர்.

சேனாவரையர் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை யென்றாரென்றும், அதுவே கோடற்பால தென்றும் கூறுமிவர், அவர் அங்ஙனம் கூறியதனை யாண்டுக் கண்டனரோ, அறியேம். சேனாவரையர்க்கது கருத்தாயின், இறந்தகாலத்தொக்க வினைத்தொகை யென்ற உரையாசிரியர் உரையினை மறுத்திருப்பராகலானும், சொல்லதிகார உரையின் கண் தம்மால் மறுக்கப் படுந்தோறும் சேனாவரையர் பெயரினைக் கிளந்தோது மியல்பினராகிய நச்சினார்க்கினியரும், பெயர்கூறாது தெய்வச்சிலையாரையோ பிறரையோ சுட்டி, "இதனைப் பண்புத் தொகை யென்பாருமுளர்" என்று மறுத்துச் சேறலானும், நன்னூற்குரை வகுத்த சங்கர நமச்சிவாயப் புலவர், "மக்கள் தேவர் நரகர் உயர்திணை" (நன்-261) என்ற சூத்திர உரையில், "திணை நிலங்குல லொழுக்கம்" என்பவாகலின், திணையென்னும் பல பொருளொருசொல் ஈண்டுக் குலத்தினை புணர்த்திநின்றது.

உயர்திணையல்லாததிணை யஃறிணை யெனப்பட்டது. இவ்விரண்டும் பண்புத்தொகை; உயர்வாகிய குலம், அஃதன்மையாயகுலம் என விரியும் அடையடுத்த இவ்விரண்டு சாதிப்பண்புகளும் ஆகுபெயராய்ப் பண்பிகளை யுணர்த்தி நின்றன," என விளங்க வுரைத்திருத்தலானும், இவருக்குப் பின்போந்த திராவிட மாபாடியமருளிய சிவஞான முனிவர், இலக்கண விளக்கச் சூறாவளியில் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்பதன் மறுப்பின்கண், "உயர்திணை யென்பது இறந்தகால வினைத் தொகையென்றார். உயர்ச்சி முக்காலத்தும் ஒத்தியல்வதறியார் போலும்" என மறுப்பவர், சேனாவரையர் கூறினரென இவர் கூறும் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையினை மறுத்தொழியாராகலானும், அது சேனாவரையர் கூறியதன்றென்றும், மக்கட் சுட்டென்பது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையென அவர் கூறிய தன்னையே நினைவுமாறி உயர்திணைக்கு ஏற்றிச் சாஸ்திரியார் கூறியதென்றும், உயர்திணையென்பது பண்புத் தொகையென்றும் கொள்க. அல்லதூஉம், உயர்திணையென்பது, "உயர்பொருளென விசேடித்து நின்றமையின், உயர்வானவென்றாற்போல வினைத்தொகையாகாதோவெனின், "வினையின் தொகுதி காலத் தியலும்" (சொல். தெய். 409) என்றாராகலின், ஈண்டுக் காலந் தோன்றாமையின் ஆகாதென்(க) எற்றுக்கு? உயர்ந்த மக்கள், உயராநின்ற மக்கள், உயரு மக்களென நல்வினை யேதுவாக மூன்று காலமுங் கொண்டாலாகுமேயெனின், அவ்வாறு கருதுவார்க்கு வினைத்தொகையுமாம்" என்று தெய்வச்சிலையார் கூறுதலானும், மக்கட் பிறவி அறிவிலதாம் நிலையினின்றும் ஓரறிவுடையுயிர் முதல் ஆறறிவுடை மக்கள் நிலையெனப் படிப்படியாய் உயர்ந்து போந்ததென,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாகி மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசு ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என மணிவாசகப் பெருந்தகையார் சிவபுராணத்துள் (25-30) கூறியிருத்தலானும், இக்காலத்தும் இயற்கைப் பொருள் நூலாராய்ச்சியாளரும் இதனை யுடம்பட்டுக் கோடலானும், வினைத் தொகையெனக் கூறியிருப்பாராயின், ஒருவாறு அமைவுடைத் தாம் என்க.

இனி, என்மனார் என்னும் சொற்பற்றிய உரைவகைகளை எடுத்துக்காட்டி, அவற்றுள் உரையாசிரியர், உரைத்ததனை மறுத்துரைக்கும் சேனாவரையரின் மறுப்புரையின் ஒரு பகுதிக் குப்பொருளுரைக்கப் புகுந்து, "சேனாவரையத்தில் 'இசைநிறை யென்பது........மேற்கோண் மலைவாதலானும்,' என்பதற்குப் பொருள் :—இடையியலில் மன் என்பது இசை நிறையில்வரும் என்று ஆசிரியர் கூறாமலிருக்கும்போது, இங்கு இசை நிறை யாகக் கொள்வது தாம் கொண்ட கொள்கைக்கு மாறுபாடாக லானும்—என்பதாகும்," என்று கூறுகின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியனார், மன்னென்னும் இடைச்சொன் முதலிய சொற்களுட் பல தனிமொழிக் குறுப்பாய் இயைந்து, ஒரு தனிச்செம்மொழியாயவிடத்து, அவற்றைப் பிரித்து, ஒரு மொழி முடிபிலக்கணம் கூறினாரல்லர்; கூறுதலும், "இந்திரனுக்குப் பிரகற்பதி இவைவழு இவை வழுவில்லனவென" வட மொழிகளைத் தனித்தனி யெடுத்தோதலுற்றார்க்குத் தெய்வ யாண்டிலாயிரம் சென்றது; சென்றும், சொற்கண் முடிந்தில வெனமாபாடியத்துள் ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதினார். தமிழ்மொழியுமவ்வாறு பெருகிக் கிடத்தலின் அவற்றை இவை வழு, இவை வழுவில்லனவெனத் தனித்தனி எடுத்தோதப்புகின், முடிவுபெறாது. ஆசிரியர்க் கொருவாற்றான் முடிவு பெறினும், பின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் அவற்றைக் கற்பதற்கே ஆயுள் போதாவாம். ஆகவே, அவற்றைக் கற்றுப் பலருடன் பயின்று, பிறர்க்குரைத்துக் கல்வி நிரப்புமாறில்லையாகலின், அவ்வாறு கூறாது, சிலவற்றைப் பொதுவிதியானும், சிலவற் றைச் சிறப்பு விதியானும், சிலவற்றை எடுத்தோத்தானும், சில வற்றையிலேசானும், சிலவற்றைப் புறனடையானும், சில வற்றை யுத்திவகையானு முணர்ந்து கொள்ளுமாறு, தொகுத்து

னால் செய்தாராகலின், ஆகாதென்க "(தொல்-முதற்சூத்திர விருத்தி" என்று சிவஞான முனிவர் கூறியருளினர். இடையியலில் ஏகாரவிடைச் சொற்கு எதிர்மறைப்பொருள் கூறாராயினும், அதற்கு அப்பொருண்மை, "மாறுகொளெச்சமும் வினாவுமெண்ணும் கூறிய வல்லெழுத்தியற்கையாகும்" (தொல். எழுத் 275) என்புழிப் பெறுமாறு ஆசிரியர் கூறுப. அங்ஙனம் கூறல் இடையியலிற் கூறிய ஐவகைப் பொருளினும் சிறு வரவிற்றென்பது பெறவைத்தற்கு என்ப. அன்றியும் மன்னென்னும் இடைச்சொல், சின் முதலிய இடைச்சொல் அசைநிலை முதலிய பொருண்மை குறித்து, "உரைத்திசினோரே," "அறிந்திசினோரே" எனவருதல் போலாது, காலம் முதலிய காட்டிப் "புணரியல் நிலையிடை யுணரத்தோன்றா" முடிபிற்றாகலினாலும், "அம்முன்றென்பமன்னைச் சொல்லே" (சொல். 252) என்றது, "அஃது அடுத்த சொல்வினை யன்னைச்சொல் என்றான், அவை மூன்றன்றி எத்துணையும் பலவாயினும், ஒன்றாயினும் மூன்று பகுதிப்படும் என்று கோடற்கு" (பொ. 661 உரை) எனப் பேராசிரியர் கூறுதலானும், அன்றி, சிவஞான முனிவர் கூறிய நூற்புணர்ப்பு வகையாற் கொள்வதல்லது எடுத்தோதாமையின் கோடற்பாற் றன்றெனல் உணர்வுடைமையன்று; மேற்கோண் மலைவு என்பதற்குப் பொருள் சாஸ்திரியார் கருதுவதன்று; மேற்கோள் மலைவென்பது "தோல்வித்தானம் இரண்டு இருபத்திரண்டாம்" (சிவ-சித்தி. சுபக். அளவை.14) எனும் தோல்வித்தானத்துள் அடங்கும் மயங்கப் பேசுதல், வாளா விருத்தலென்ற வகையிரண்டனுள், "தான் எடுத்துக் கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப் பேசுதலும், பிறிதொரு மேற்கோளைக் கூறுதலும், மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும், மேற்கோளை விட்டு விடுதலு" முதலிய பகுதிக்கண் அடங்குவதாகும். ஆகவே, என்ப என்னும் சொல்லினது பகரத்தை இசை நிறையென மேற்கொண்டு மறுத்து நீக்கி, மீட்டும் இசை நிறையெனமன், ஆர் என இரண்டிடைச் சொற்பெய்தல், குறைத்தற்குக் கொண்ட மேற்கோட்குக் கேடுவரப்பண்ணுதலின், சேனாவரையர் "இசை நிறை

யென்பது மறுத்துப் பொருள்கூறுகின்றார் பின்னும் இசைநிறை யென்றல் மேற்கோள் மலைவாதலானும்." எனச் சுருங்கிய வாய்பாட்டாற் கூறினாராகலின், சாஸ்திரியார், இதனை யறியாது கூறுபொருள் பொருளன்றென்க.

இனி, இக்குறிப்புரையுடையார், திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் காட்டியவாறு சொற்றொடராக்கத்து வழுவுதல் ஒருபுடை நிற்ப, பத்தி (Paragraph) வகுக்கு முறையிலும் வழுவுகின்றார். "சூத்திரத்தில் 'அவரல' 'பிற' இவ்விரண்டும் வேண்டுமா?" என வினவிக்கொண்டு தொடங்கும் பத்தியில், அதுபற்றிய கருத்தொன்றே பொருளாக அமைத்தல் வேண்டியிருப்ப, அதன்கண் அவ்வினாவோடியைபிலாத நச்சினார்க்கினியர் உரைத்த, "இச்சூத்திரத்தால் பொருளிரண்டு சொல்லிரண்டென வரையறுத்தார்" எனும் உரையினைக்காட்டி மறுக்கின்றமையின், இதுபத்திவழு என்க. வாக்கிய பேதம் எய்துதல் பற்றி மனம் உளைந்து வருந்தும் ஒருவர், அஃதெய்தா வகையிற் பத்திகளை வகுத்தலன்றோ செய்யற்பாலர்.

இனி, நச்சினார்க்கினியர் உரைத்த கருத்துரையினைக்காட்டி "அவ்வாறாயின், வாக்கியபேதம் என்னும் குற்றம்வரும்; "இவ்வாறு ஒருபொருள் நுதலிற்றாக உரையாக்கால், சூத்திரமொன்றுமாறில்லையென்க' என்று கூறியதும் இதுபற்றியே" என்று மறுக்கின்றார். பொருள்கள் உயிருள்ளன, உயிரில்லன என்றும், இயங்குதிணை, நிலைத்திணையென்றும், உள்பொருள், இல்பொருளென்றும் ஆராய்ச்சி வகைமைக்குத் தக வகுத்து ஆராயப்படுதலுண்மையின் இலக்கண நூலோர் உயர்திணைப் பொருள் அஃறிணைப்பொருள் என்று வகுத்துக் கொண்டனரென்றும், அப்பொருள்வகை யிரண்டனையும் இசைக்கும்சொல் உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல் என்றும் முறையே வகுக்கப்பட்டதென்றும் கூறுவார், "இச்சூத்திரத்தால், பொருளிரண்டு சொல்லிரண்டென வரையறுத்தார்" என்றார் எனினும் சொல்லையுணர்த்திய அதிகாரமாகிய இதன்கண் முதலிற்சொல் வரையறுத்தலே கருத்தென்பார், சேனாவரையர், "எனவே,

உயர்திணைச்சொல்லும் அஃறிணைச்சொல்லுமெனச் சொல்லிரண்டென்றவாறும்," என்றார். இதன்கண், "எனவே" என்றதன் தாற்பரியம், சொன்னிகழ்ச்சிக் கிடமென்ற முறையிற்பொருள் உயர்திணைப்பொருள், அஃறிணைப்பொருள் எனப்பொருள் இரண்டாயினும் என்பதாம். ஆகவே, இருவர் உரையினும் பொருள் வகை பெறப்படினும், வேண்டுவது சொல் வரையறையே யாகலின், குறிப்புரைகாரர் மறுப்பு போற்றத் தக்கதே யாம்.

இனி, இவர் மறுப்புரைகளில் வழங்கும் வாக்கியபேதம் என்னும் குற்றம் இலக்கண ஆராய்ச்சிக்கு வேண்டுவதே; யெனினும், வாக்கியபேதம் எய்தாவகையிற் பொருள் கூறுமிடத்து, சூத்திரத்தின் கருத்து விளங்கத் தோன்றுதாயின், வாக்கியபேதம் எய்தாமையும் குற்றமாம்; அன்றியும், வாக்கிய பேதம் எய்தாவகையிற் பொருள்கூறுமிடத்துச் சூத்திரத்தின் சொல்லிலக்கண வமைதிகெடுமாயின், வாக்கியபேதம் எய்தினும் குற்றமின்றாம். இஃது எதுபோலவெனின், கூறியது கூறல் குற்றமாம்; ஆயினும், "கூறியது கூறினும் குற்றம் இன்றே, வேறொரு பொருளை விளக்குமாயின்" என்பது போலவென்க. எனவே, கூறியது கூறல் போலச் சொற்கள் நிற்றல்கண்டு பொருளைத் துணியாமலே குற்றமென்றல் எவ்வாறு குற்றமாய் முடிகிறதோ, அவ்வாறே, சூத்திரத்துச் சொல்லிலக்கண வமைதி நோக்காது வாக்கியபேதம் எய்தாவகையிற் கூறுதல் குற்றமாகும். ஈண்டு வடமொழியாளர், "கருதிய இலக்கியம் சித்திக்குமாயின், வாக்கியபேதம் எய்தாமைக் கூறுக" என்றும், "கருதிய இலக்கியம் சித்திக்காதாயின், வாக்கியபேதம் எய்தினும் குற்றமின்று" என்றும் கூறுப; அம்மொழியிற் சொற்களின் கிடக்கை முறைக்காவதோர் வைப்பு நெறியின்மையின்.

இனி சூத்திரத்தின்பொருள் கூறுவான், "ஒரு சூத்திரத்தில் ஓர்உத்தேசியமும் ஒருவிதேயமுந்தான் இருத்தல்வேண்டும். இம்முறையை ஆசிரியர் தந்நூலுள் எங்கும் ஆண்டனர் என்பது அந்நோக்கத்துடன் ஒவ்வொரு சூத்திரத்தையும் ஆராய்வோருக்கு நன்கு புலப்படும். இச்சூத்திரத்தில் ('உயர்திணை

யென்மனார் மக்கட் சுட்டே,' என்று தொடங்கும் இச்சூத்திரத்தில்) மக்களைச் சுட்டுவது உயர்திணை, மக்களல்லாப் பிறவற்றைச் சுட்டுவது அஃறிணை, அவ்விருதிணையின் கண்ணும் சொல் இசைக்கும் என்று மூன்று உத்தேசியமும் மூன்று விதேயமும் இருப்பதால் வாக்கியபேதம் ஆகாதோவெனின், அற்றன்று; இதனுள் உயர்திணை, அஃறிணை இவற்றின் இலக்கணங்கூறாது முன்னோர் கூறிய இலக்கணத்தையே அநுவதித்து, சொல் என்பது உயர்திணை அஃறிணையின்கண் இசைக்கும் என்பது விதிக்கப்படுகின்றதென்க," என மேலே கடாவிடைகளால் அகலங் கூறக்கருதி, வாக்கிய பேதமின்றிக் கூறும் கருத்தினராய், "சொல், மக்களைச் சுட்டும் உயர்திணை, மக்களல்லாதவைதச் சுட்டும் அஃறிணை இவ்விரண்டு திணையின் கண்ணும் இசைக்கும் என்றவாறு" என்று கூறி முடித்தார்.

இப்பொருளை நோக்குமுன், "அஃறிணை இவ்விரண்டு" என்பதனை, "அஃறிணையென்ற அவ்விரண்டு" எனத் திருத்திக் கொள்க, சொற்றொடர் பொருணிலை இயைபுற நிற்றல்வேண்டு மாகலின் இச்சூத்திரத்துள் விதிக்கப்படுவது, சொல் உயர்திணை அஃறிணையென்ற இருதிணையின் கண்ணும் இசைக்குமென்பதாகலின், சூத்திரப்பொருளும் அதனையே முடித்தலின், வாக்கிய பேதம் எய்தாமை நன்றாயிற்று; ஆயினும், மக்கட்சுட்டு உயர் திணையென்மனார் என்றியைய நின்றதொடர், மக்களைச்சுட்டும் உயர்திணை எனப்பொருடந்து நிற்றற்குரிய இயைபின்மையானும், மக்கட் சுட்டென்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையென்று சேனாவரையர் கூறியதனை உடம்பட்டுப் போந்தவர், அதற்குரிய பொருள் கூறாது பெயரெச்சமாக்கிக் கூறுதல் வழுவாமாகலானும், அன்மொழித் தொகையைப் பெயரெச்சப் பொருண்மைத்தாக்குதல் இலக்கண மறியார் செயலாகலானும், என்மனார் என்னும் சொன்முடிபினை உரையாசிரியர்களின் உரைவிகற்பம் காட்டித் தம் கருத்தினைக் காட்டாது விடுத்ததுபோல, ஈண்டும் என்மனார் என்பதனை யறவே விடுத்தமையானும், இப்பொருளின்கண், வாக்கியபேத மென்னும் அக்குற்றமொழியப் பிறகுற்றம் மலியக் கிடத்த

லானும் இவ்வுரை போலியுரை என்க. இந்நெறியினையுணர்ந் தன்றே, ஆசிரியர் சேனாவரையர், "வாக்கியபேதம் எய்துமாறு, மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணை என்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணையென்று சொல்லுவர்; அவ்விருதிணைமேலும் சொற்கள் நிகழும் என்றவாறு," என்று கூறி, எனினும், இதன்கட் கூறப் பெறும் இலக்கணம் ஒன்றேயென யாப்புறுப்பார், "எனவே, உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லுமெனச் சொல் இரண்டென்றவாறாம்," என்றார்.

இவர் கருதிய வாக்கியபேதம் குற்றமாய் முடிந்தமையின், அதுபற்றி மறுக்கப்பட்டனவெல்லாம் குற்றமுடையவல்ல வென்று கொள்க.

இனி, இந்நூலுள் கூறப்பெறும் உரையாசிரியர் இளம்பூரணர் என்பது துணிபாயின் (உரையாசிரியர் வேறு, இளம்பூரணர் வேறு என்பாருமுளர்) அவருரையே எல்லாருரையினும் பழமையானதென்பவாகலினாலும், தெய்வச் சிலையார் உரை உரையாசிரியர் உரைக்குக் காலத்தாற் பிற்பட்டதென நன்கு தெரிதலாலும், அவ்வுரையாசிரியரால், "செம்மன என்பது வழக்கரிது" எனக் கூறப்படும் சொல் தெய்வச்சிலையார்க்குத் தோன்றுதல் அரிதாகலாலும், இசைக்குமன என்பதற்குச் சேனாவரையர் கூறியதனைக் கோடலே பொருந்துவதாம் என்றுதல், பிறிதாதல் கூறாது குறிப்புரையாளர் வாளாது செல்கின்றார்.

இனி, உரைநூல்களையாராயத் தொடங்கி இவர், திரு. கா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டுள்ள தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணத்து, "என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று. முற்றுச்சொல் எச்சப்பெயர் என்பவாகலின், இது செய்யுளோக்கித் தொகுத்துக் கூறினன் என்பது" என்றிருத்தலில், முடியற்பாற்று என்புழியுள்ள முற்றுப்புள்ளி, காற்புள்ளி (,) யாகவும், என்பவாகலின் என்புழியுள்ள புள்ளியை முற்றுப் புள்ளியாகவும் அமையத் திருத்திக்கொள்ளல்வேண்டு

மென்பார், "முற்றுச்சொல் எச்சப்பெயர் என்பவாகலின் என்பது என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று என்பதற்கு ஏதுவாகும்" என்றார். மேற்கோளும், ஏதுவும், எடுத்துக் காட்டும் இக்கூறிய முறையே நடைபெற்றியலும் என்பது, தொல்காப்பியம் படித்தறியப்புகும் மாணவர் முன்னரே அறிந்த தொன்றாகலின், இக்குறிப்பு வேண்டற்பாற்றன்று, மேலும் மேலும், இன்னோரன்ன புள்ளி பற்றிய பிழை நிகழ்ச்சி அச்சுத் தொழிற்கண் இயல்பே என்பதற்கு இவர் வெளியிட்டுள்ள இக் குறிப்பு நூலே போதிய சான்றாகும். ஒன்று கூறுதும், "ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்" (சொல். உ) என்ற சூத்திரக் குறிப்பில் வரற்பாற்றாகிய, "சிவணி—தெய்வச்சிலையார் சிவணி யென்பது வினையெச்சமன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது என்கின்றார். அவர் கொள்கையில் அச்சொல் ஒரு சொல் விழுக்காடென்று கொள்க" என்ற குறிப்பு, இச்சூத் திரக் குறிப்பில், "இசைக்குமன்" என்பதுபற்றிச் சேனாவரை யரும் தெய்வச்சிலையாரும் கூறியவற்றைக் குறிக்கும் குறிப்பின் கீழ், அச்சாகியிருத்தல் பெரும் பிழையாகும்.

இனி, "முற்றுச்சொல் எச்சப்பெயர் என்பவாகலின்," என்ற தொடர்க்கண்ணுள்ள எச்சப்பெயர் என்பதற்கு எஞ்சிய. பெயரையுடைய சொல்லென்பது பொருள். இங்கு என்மனார் என்னுஞ்சொல் எச்சப்பெயர் என்பது அவிநயனார் மதமென்பது "பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே" (சொல். 425) என்ற சூத்திரத்தினடியிலுள்ள தெய்வச் சிலையாருரையானும், பெயர் வினையும்மை (நன். 359) என்ற சூத்திரத்தினடியிலுள்ள மயிலை நாதருரையானும் நன்கு விளங்கும்" என்றார். என்ற இச்சாஸ் திரியார், "எச்சப்பெயர் வினையெய்து மீற்றினும்" என்னும் நன்னூற் சூத்திரம் (356) நினைவிருப்பின், "எச்சமாய் வரும் பெயர்" என்று கூறிய மயிலைநாதருரையாதல், "எச்சமாகிய பெயர்" என்ற சங்கர நமச்சிவாயருரையாதல் குறித்திருப்பர்; துணையின்மையால், தம் அறிவிற்கெட்டிய இவ்"வெஞ்சிய பெய ரையுடைய சொல்," என்றார். முடிக்கப்படுவதும், முடிப்பது மாகிய எல்லாப் பெயர்ச்சொற்களும் இந்நிலையில் எச்சப்பெயரா

மென்பது இந்நன்னூற் சூத்திரத்தாலே விளங்குதலின், அதனை யறியாது, அதனைப் பெயரெச்சங்கொண்டு முடியும் எச்சப் பெயரினீக்குதற்கு, "முற்றுச் சொல் எச்சப்பெயர்" என விசேடித்திருப்பதனையுமறியாது, ஆசிரியர் நக்கீரனார் முதலிய பண்டைய உரையாசிரியர்கள், "முற்றுச் சொல் எச்சப் பெயர் கொண்டு முடியுமாகலினென்பது," (இறை. அ. பொ. 1.) என வழங்குதலு நோக்காது, என்மனார் என்பதனை எச்சப் பெய ரெனத் திரியக்கொண்டு, அதனோடு நிற்றலின்றி, ஆசிரியர் அவிநயனார், தெய்வச்சிலையார் என்ற இருபேரிலக்கண அறிஞர் மேலும் இக் குற்றத்தை யேற்றுகின்றார். இக் குறிப்புரை யெழுதும் சாஸ்திரியாரொழிய, சிற்றிலக்கணம் கற்ற தமிழ்ச் சிறுவருள்ளும் ஒருவரும் கூறாராகலின், அவர் தம் உரைகளை யாம் ஈண்டுக் காட்டுதலுறின் வாளாது இடம் நிரம்புதலும், கட்டுரை விரிதலுமே பயனாம். "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்பது போல, செந்தமிழில் இவர் வெளியிட்ட இக் குறிப்பை, அதனோடு நிற்கவிடாது, "ஒரு புத்தகத்தில் எழுதப்படின், அப்புத்தகம் தொல்காப்பியம் படிக்கும் மாணவர்க்குப் பயன்படும்" (முகவுரை) என்று இவர்க்கு ஊதிக் கெடுத்தார் சிலர்.

இனி, "சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை யென்னும் ஒருவன் என்பது சுட்டுதற்குக் காரணமாகிய தன்மையனெனும் ஒருவன் என்றிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது" என்பது வேறொரு குறிப்பு. இதன்கண், சுட்டென்னும் பெயர், ஆகுபெயராய்த் தன்மை குறித்துணரக் கிடக்கும் சொற் றொடரை மாற்றி மக்கட்சுட்டே யென்பது மக்களென்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மையனெனும் பொருள் தருமாறு இயைத்தற்குரியதோர் இயைபேயின்மை யின், "சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை என்னும் ஒருவன்" என்பதே திருந்திய பாடமென்க. எனவே, காரணமின்றியே திருத்தங் கொள்ளுதலும் தாம் வேண்டியவாறு பொருள்கொள் ளுதலும் பிறவும் செய்தொழுகுதல் ஈண்டேபெறப்படுதலின்,

அவ்வொழுக்கம் நூலாராய்ச்சி யுடையார் மாட்டெய்தலாகாத் தீயொழுக்கம் என்பது சாஸ்திரியார் மனத்துட் கோடற்பாற்று. இக் குறிப்பிற்கு முன்னும் பின்னும் நின்ற குறிப்புக்களில் தம் உணர்வுக் கெட்டிய ஏது கூறினவர், ஈண்டுக் கூறாமை குற்றம் என்க.

இனி, "இசைக்கும் என்பது செய்யுமென்னும் பெயரெச்சம்" எனவரும் இளம்பூரண உரைப்பகுதியை மறுப்பார், "மேலும் அதனிலுள்ள இசைக்குமென்பது செய்யுமென்னும் பெயரெச்சம் என்ற வாக்கியம் பொருந்த வில்லை" என்று கொண்டமேற்கோளை வலியுறுத்துவான் காட்டிய ஏதுக்கள் இரண்டினுள்ளும் முதலாவதனைக் கூறுமிடத்து ஐயுற்றுக் கூறுவார் வாய்பாடு தோன்ற, "சூத்திரத்துக்கும் பொருள் சொல்லுங்கால் வினைமுற்றாகவே சொன்னதாகத் தோன்றுகிறது" என்கின்றார். இஃது "ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாமை" யாகிய குற்றம் என்க.

இனிச் சேனாவரையத்து, "என்மனார்" என்னும் சொன் முடிபுபற்றி வரும் மறுப்புரைப் பத்தியின் கண்ணுள்ள, "என் மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்வாராது, நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்றுவருதலானும்" என வரும் தொடரின் "நூலுள்ளும்" என்புழி "இந் நூலுள்ளும் என்ற பாடங்காட்டி, அதுவே பொருந்து" மென்கின்றார். இருவகைப் பட்ட பாடங்களுள் ஒன்றனைத் துணிந்து கூறலுறுவார், பொருந்துமாற்றிற்கு ஏதுவாதல், எடுத்துக் காட்டாதல், பொருளாதல் கூறுதலே இயல்பு. இவற்றுள் ஒன்றும் கூறாது, வாளாது, "பொருந்து" மென்றொழிதல் பொருந்ாது. நூல் என்ற விடத்துச் சான்றோர் செய்யுளென்றாற் போலச் சான்றோர் கூறிய எல்லா இலக்கணங்களும், "இந் நூல்" என்ற விடத்துத் தொல்காப்பியம் ஒன்றுமே கொள்ளப்படுமாகலின லும், சொல் நிலவுமிடம் இவ்வொரு நூலே யன்றி எல்லா நூலு மாகலினும், "நூலுள்ளும்" என்ற பாடமே கொள்க.

இத்துணையும் கூறியவாற்றால், சாஸ்திரியார் இச் சூத்திரத்தின் கீழ்க் குறித்த குறிப்பனைத்தும் குற்றமாகவே முடிந்தவாறும். இப் பெற்றித்தாய நூல் வித்துவான் தேர்தற்குப் பாடமாக வமைந்திருத்தலை நோக்குமிடத்து, நம்மனோர் மனத்துச் சென்னைப் பல்கலைக் கழகந்தான், இதனை யாராயாமல் பாடமாக வைத்தற்கு பாங்கன மிசைந்தது என்னும் வியப்பு நிகழ்கின்றது. காரணமின்றிக் காரியம் பிறவாதென்பவாகலின், முற்றிலும் ஆராய்தலே வேண்டுவது. இது நிகழ்த்தும் தமிழ்ப் புலவர் திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கட்கு நோயின்றிலங்கும் உடல் நலமும், சாயின்றிப் பெருகிய செல்வ நலமும், ஊறின்றி வளரும் வாழ்நாள் நலமும் தமிழ்த் தாயின் தண்ணருளால் மிகுக.

கண்ணப்பர் கண்ட அன்பு

S. இராமச்சந்திரன் B. A.,

(முற்றொடர்ச்சி 435-வது பக்கம் பார்க்க.)

“அன்பெனப்படுவதொன்றின் தன்மை அமரரும் அறிந்த தன்றால்” என்று கம்பரே கைவிதிர்க்கின்றார். இவ்வன்பின் உண்மைப்பொருளை உணர்ந்து ஓதினவரும் ஒழுகினவரும் இறையனார், மணிவாசகர், ஆண்டாள், வள்ளுவர், தொல்காப்பியர் ஆகிய தெய்வப் புலவர்களே யாவர். இப்பெரியார்கள் விரித்துரைத்த அன்பினைத்தான் கண்ணப்பர் கதையில் சேக்கிழார் வேறொருவகையில் ஓவியம் தீட்டிக் காட்டுகின்றார்.

அன்பாராய்ச்சியைத் தமிழர்கள் பொருள் ஆராய்ச்சியின் பாற் படுத்தினார்கள். நூல்கள் எடுத்துக் கூறும் பொருள்களை யெல்லாம் அகம், புறம் என்று இரண்டுவகையாக வகுத்தார்கள். தானுணர்ந்த ஒழுக்கத்தினை இன்னொருவனுக்கு இவ்வாறிது என்று எடுத்துச் சொல்ல இயலாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்விலேயே துய்க்கப் படுவதாய் நின்ற ஒழுக்கத்தினைக் கூறுவது அகப்பொருள்; அகம் என்றால் உள்; உள்ளத்தினிடையே கசிந்து கசிந்துருகி புறத்தார்க்குப் புலனாகாது நிற்பதால், அன்பை அகவொழுக்கத்தின்பாற் படுத்தினார்கள்; அவ்வாறின்றி வெளியார் யாருக்கும் விளங்க, வெளியிட இயலுவதாய் விரிந்துகிடப்பது புறப்பொருள். காதலன் காதலிஇவர்கள் கலந்து நுகரும் இன்பம் அகவொழுக்கத்தின்பாற்படும்; போர் புரிந்து புகழ்பெறுதல் புற ஒழுக்கத்தின்பாற்படும். ஒத்த அன்பினர் துய்க்கும் இன்பம் ஒன்றினையே அகவொழுக்கத்தில் ஐந்திணை அன்பு என்று தமிழ்நூல்கள் கூறும். மற்றவை கைக்கிளை,

பெருந்திணை முதலியவற்றின் பாற்படும். பெருந்தமிழ்ப்புலவர்களெல்லாம் வடமொழிக் கதைகளை தமிழில் மொழிபெயர்க்கும் போது கதையில், காதலன் காதலி ஒன்றுபடுவதைத் தமிழர் கண்ட அன்பொடுக்கமாகவே திரித்து அமைத்துள்ளார்கள். எனவே தமிழர் அன்பினை எத்துணைச் சிறப்புடையதாகப் போற்றி வந்தார்கள் என்பது தெற்றெனை விளங்குகிறது.

அன்பு தான் தமிழர் அறிந்த கடவுளென்ப. அன்பே இறைவன் உருவெனக் கொண்டனர். இக்கொள்கையை,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே."

என்ற திருமூலர் கூற்றும் நன்ருக விளக்குகிறது. மணிவாசகரும் "சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே" என்கின்ருர். "முன்பினன்றி மூவுலகத்திலும் அன்பினல்லதோர் ஆக்க முண்டாகுமோ" என்பர் நம் கம்ப நாடர். எனவே அன்பு என்ற சிறிய செந்தமிழ்ச்சொல் தமிழர் கண்ட உயரிய உண்மைகளை தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருப்பதைக் காண்கின்ரேம். இனி மேற்கொண்ட பொருளின் மேற் செல்லுவோம்.

ஒப்பாரும் மிக்காருமில்லாத இருவர் இயற்கையாகவே முன்னுக்கு இழத்து வரப்பட்டு தம் முணர்வற்றுத் தன்னந் தனியே ஒன்றுபடுதலே அகவொழுக்கம். அவ்வகவொழுக்கம் குறிஞ்சித் திணையில் நிகழும். நம் கண்ணப்பரும் காளத்திக் கடவுளரும் கலந்து ஒன்றுபட்ட இடம் காளத்திமலை. கண்ணப்பரோ மறவர் தலைவர். இறைவன் இமையவர் தலைவர்; காளத்தி மலையைப் பார்த்த மாத்திரத்தில், கண்ணப்பரது உள்ளத்தில் ஒருவித உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுகின்றன. குறிமித்

தேவரைக் கண்டு அவரோடு ஒன்றுபடும் வரையில் கண்ணப்பர் மனம் ஒரு நிலையில் நின்றபாடில்லை. தன்னுடன் கன்னிவேட்டைக்கு வந்த நாணன் வாயிலாய் காளத்தி மலையைப்பற்றியும், அதில் குடுமித்தேவர் கோயில் கொண்டுள்ளார் என்பதையும் அவருக்கு ஒரு பார்ப்பனர் பூசை செய்கின்றார் என்பதையும், அப்பூசை விவரத்தையும் தெரிந்து கொள்ளுகிறார். இவ்விவரங்களிலிருந்து, கண்ணப்பர் காளத்திக் கடவுளை எல்லாம் வல்ல இறைவனாகக் கருதினாரல்லர்; தன்னுதவியை நாடித் தன்னந்தனியே காட்டில் தத்தளிக்கும் தலைவன் எனத் தனக்குள்ளே கொண்டார்.

இனி, கடவுள் கண்டு களிக்குமாறு கண்ணப்பர் செய்த வழிபாட்டைச் சற்று நோக்குவோம்,

"வருங்கறைப் பொழுதுநீங்கி மல்கிய யாமம்சென்று
சுருங்கிட அறிந்தபுள்ளின் சூழ்சிலம் போசைகேட்டு
கருங்கடல் என்னநின்ற கண்துயி லாதவீரர்
அரும்பெறற் றம்பிரானார்க்கமுதுகொண்டணையவேண்டி"

இறைவனுக்குக் கொடிய விலங்குகளால் இடர் ஒன்றும் படாத வண்ணம் இரவெல்லாம் கண் துயிலாது கங்குல் எல்லை காண்பளவும் நிற்கின்றார். இறைவனுக்குப் பசிக்குமேயென்று வைகறையில் வேட்டைக்குப் போகின்றார். நறுஞ்சுவையுடையத் தசையாற் கொழுத்துப் பெருத்த விலங்குகளைத் தேடித்தேடி காட்டில் வேட்டையாடுகின்றார். அவ்விலங்குகளுடன் பொன்முகலியாற்றின்கரையை அடைகின்றார், தீக்கடைந்து நெருப்பு மூட்டுகின்றார். தேக்கிலையைத் தேடிக்கொணர்ந்து பெரிய தொன்னைகள் தைக்கின்றார். தேன் கூட்டைப் பிழிந்து அத்தொன்னை நிறையத் தேன் நிரப்புகின்றார். நெருப்பு சிறிதாக எரிந்தால் தசை செவ்வையாக வேகாது என்று ஊதி நன்றாகக் கொழுந்து விட்டெரியும்படிச் செய்கின்றார்.

"வாயம்பால் அழிப்பதும் வகுப்பதுவும் செய்தவற்றில்
ஆயவுறுப் பிறைச்சியெல்லாம் அரிந்தொரு கல்லையிலிட்டு
காயநெடுங் கோல்கோர்த்து கனலின்கண் உறக்காய்ச்சி
தூயதிரு வமுதமைக்கச் சுவைகாண லுறுகின்றார்."

கொழுமையும் இனிமையும் உடைய தசைகளை வேறு பிரித்து எடுத்து அவைகளைத் துண்டு துண்டாகக் கண்டித்து ஒரு தொன்னையில் வைக்கின்றார். அத்துண்டுகளை அம்பின் நுனியில் கோர்த்து நன்றாக நெருப்பில் பதமுறக் காய்ச்சுகின்றார். இத்தனையுஞ் செய்தது போதாதென்றுக் காய்ச்சிய தசைத்துண்டுகளைத் தன் நாவிலிட்டுக் குதட்டிச் சுவை மிகுந்தவை இவை யிவை என்று அறிந்து அவைகளை வேறுபடுத்தி ஒரு தொன்னையில் உமிழ்கின்றார். அத்தொன்னை நிறையத் தேனைத் தெளிய வடிகட்டி வார்க்கின்றார். எனவே இவைகளிலிருந்து நாம் அறியக்கிடப்பது, ஒரு காதலி தன் இன்னுயிர் காதலனுக்குச் சமையல் செய்வதுபோல் கண்ணப்பர் தன் வேலையிலேயே கண்ணுங் கருத்துமாகச் செய்து முடிக்கின்றார் என்பதேயாம்.

"நல்லபத முறவெந்து நாவின்கண் இடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத் தேன்பிழிந்து கலந்ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந் தூய்மஞ்சனமும்
எல்லையினில் முன்புபோல் உடன்கொண்டு வந்தணைந்தார்"

இறைவனுக்கும் பசிக்குமே என்று நினைக்கின்றார், விரைவில் வேலையை முடித்துக் கொள்ளுகிறார். 'இறைவனுக்கு வேண்டிய உணவும், திருமஞ்சன நீரும்' மலரும் ஒவ்வொன்றாகக் கொண்டு வந்தால் நேரமாகும்; இறைவன் இன்னுமா காத்திருப்பது? என ஒருகையில் இறைச்சி நிறைந்தத் தொன்னையை எடுத்துக் கொள்ளுகிறார். மற்றொரு கையில் வில்லை எடுத்துக் கொள்ளுகிறார். இரண்டு கையிலும் பண்டங்கள் இருப்பதால் நீரையும் மலரையும் எடுத்துச்செல்ல வேறுவகையில்லை. எனவே நீரை வாயில் முகந்து கொள்ளுகிறார். மலரைத் தன் தலையில் செருகிக் கொள்ளுகிறார்.

"தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனகம் ஒருகை ஏந்தி
இனியெம் பிரானர் சாலப் பசிப்பர் என்றிரங்கி ஏங்கி
னிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினர் திண்ணனர் தாம்"

இறைவனுக்குப் பசிக்குமே என்று ஓடோடியும் வருகிறார். இறைவனை அடைந்ததும் தன் வாயில் கொண்டு வந்த நீரை இறைவன்மேல் உமிழ்ந்துத் திருமஞ்சன மாட்டுகின்றார். பழம் பூவைக் களைந்துப் புதுப்பூச் சூட்டவேண்டும். கையிலோ வில்லும் கல்லையும் இருக்கின்றன. கீழே வைத்துவிட்டுக் கையினால் விலக்கலாமென்றாலோ நேரமாகிவிடும். இறைவனை இன்னுமா பசிபொறுக்க விடுவது? எனவே தமது செருப்புடன் கூடிய திருவடியால் பழம்பூவை நீக்குகின்றார். தலைக்கடவுள் மீது சாய்ந்துப் பூவைச் சூட்டுகின்றார். ஒரு கையில் இறைச்சியும் ஒருகையில் வில்லும் ஏந்தி வரவேண்டியிருப்பதால், கையில் கொண்டு வர இயலாத நீரை வாயில் முகந்து வருகிறார்; மலரை தலையில் செருகி வருகிறார்; கையால் விலக்க முடியாததைக் காலால் விலக்குகின்றார். இவ்வளவும் அன்பாலாயதன்றி வேறல்ல. இதுபற்றியன்றோ, சிவப்பிரகாசர்,

"ஆடுறு அடியேன் புதுக்குடந் தருநீர்
அன்பன் வாய்ப் புனலுனக் காமோ
கூடையின் மலர்பித் தையிற் றருமலரோ
கூறுமென் கவியவன் மொழியோ.

என்று கல்லுங் கரையக் கவிபாடிச் செல்லுகின்றார். பிறகு

"ஊனமுது கல்லையுடன் வைத்திது முன்னையினன்றால்
ஏனமொடு மான்கலைகள் மரைகடமை இவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சி யமுதடியேனும் சுவைகண்டேன்
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும் என மொழிந்தார்."

இறைவன் முன் இறைச்சியை வைக்கின்றார்,

"கொழுவியதசைகளெல்லாம் கோலினில்தெரிந்து கோத்தங்(கு)
அழலுறு பதத்தில் காய்ச்சிப் பல்லினில் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ்விறைச்சி போல
அழகிது நாயனீரே அமுது செய்தருளு மென்றார்."

பெற்றோர்கள் குழந்தைக்கு அன்னமூட்டுவது போல மிகவும் பரிவோடு கண்ணப்பர் இறைவனுக்கு ஊனை ஊட்டுகின்றார், ஆனால் அது ஊன் என்று இகழத்தக்கதோ? அல்ல. அன்பைக் குழைத்து சமைத்து ஊட்டிய ஆராவமுதமே யாகும். தம் அம்மை வாயிலும் அப்பன் வாயிலும் தான் உண்பதைவைத்து மழலைமொழிகளைப் பாட்டாகப் பாடிக் கூத்தாடுகின்ற குழந்தைகள் செய்கையைக்கண்டு அகமகிழ்ந்து புளகாங்கிதம்கொள்ளும் பெற்றோரைப் போல இறைவனும் கண்ணப்பர் செய்கையைப் புகழ்ந்து கொண்டாடுகின்றார்.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வாறு அறிநீயென் றருள்செய்தார்"

அமிர்தமும், அவிர்ப்பாகமும் கண்ணப்பர் ஊட்டிய ஊனுக்கு ஒவ்வுமோ என்று பறை சாற்றுகின்றார் ஒரு புலவர்.

அன்புடையார் கூடி இன்பம் துய்ப்பதுபோலவே கண்ணப்பரும் கடவுளரும் உள்ளத்தே உவகைத் ததும்ப ஒன்றுபட்டு நிற்கின்றார். பின்னர் இறைவன் கண்களில் குருதி நீர் பெருகி நிற்கின்றது.

"வந்தவர் குருதிகண்டார் மயங்கினர் வாயினன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங்குஞ்சிநின் றலைந்துசோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்துவீழ்ந்தார்"

குருதி நீர் பெருகுவதைக் கண்டு அடியற்ற மரம்போல் சாய்ந்து செயலற்றுக் கிடக்கின்றார், அப்புண்ணீர் நிற்பதற்காக

அநேக பச்சிலைகளைத் தேடிக்கொணர்ந்து அவற்றின் சாற்றை யெல்லாம் பிழிந்து இறைவன் கண்ணில் இடுகின்றார். ஒன்றும் பயன்படாது போகவே, மனங்கலங்கிச் சோர்வடைந்து நிற்கின்றார். திடீரென்று அவர் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதிக்கின்றது.

" இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தையார்கண்
அதற்கிது மருந்தாப்புண்ணீர் நிற்கவும் அடுக்குமென்று
மதர்த்தெழும் உளத்தோடு மகிழ்ந்துமுன் இருந்துதங்கண்
முதற்சரம் மடுத்துவாங்கி முதல்வர்தம் கண்ணில்அப்ப."

ஊனுக்கு ஊன் மருந்து என்ற உலகவழக்கு நினைவிற்கு வரவே தன் கண்களில் ஒன்றை அகழ்ந்து இறைவன் கண்ணில் அப்புகின்றார். அன்பராயினர் தமது காதலருக்கு வருந்துன்பத்தைத் தமக்கு வந்ததாகவே எண்ணி மனம் வருந்திப்பின் அந்நோய் தீரும் வகையில் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் பிறிதொரு பயனுங்கருதாது வருத்தம் சிறிதுமின்றி ஈவதுபோல கண்ணப்பர் கடவுளின் கண்ணில் புண்ணீர் பெருகுவதைக் கண்டதும் கலங்குகிறார்; தன் கண்ணை இடந்தப்பின் அந்நோய் தீருமென்றுத் தோன்றியதும் சிறிதும் தாழ்த்தாது கண் போய் விடுமென்றும் கலங்காது, நோகுமேயென்றும் தயங்காது அக மகிழ்ச்சியோடு தன் கண்ணை அம்பினால் அகழ்ந்தெடுத்து அப்புகிறார். குருதியின் பெருக்கு நின்றதைக் கண்டதும் அளவிட முடியாத உவகையில் ஆழ்கின்றார்.

" நின்றசெங் குருதிகண்டார் நிலத்தினின் றேறப்பாய்ந்தார்
குன்றென வளர்ந்ததோள்கள் கொட்டினர் கூத்தும்ஆடி
நன்றுநான் செய்தஇந்த மதியெனநகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போலமிக்கார்."

பின்னர் மற்றொரு கண்ணில் புண்ணீர் கசிவதைக் கண்டதும்,

" கண்டபின் கெட்டேன்எங்கள் காளத்தியார்கண் ஒன்று
புண்தரு குருதிநிற்க மற்றைக்கண் குருதிபொங்கி

பண்டுமற் றிதனுக்கஞ்சேன் மருந்துகைகண்டேன் இன்னும்
உண்டொருகண் அக்கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்" என்றும்

கலக்க மெய்தினரேனும் மருந்து தன் வசமே இருப்பதை உணர்ந்து தேறுதல் அடைகின்றார். தன் கண்களில் மிகுதியாக நின்ற ஒரு கண்ணை இடந்து அப்பின் இந்நோயுந்தீருமென்றுத் தன் மற்றொரு கண்ணையும் அகழப் போகிறார். அவ்வாறு செய்வது அவருக்குப் பெரிதும் இன்பமாயது, ஆனால் கடவுளுக்கோ உள்ளம் நடுங்குகிறது.

"கண்ணுதல் கண்ணில்தங்கண் இடந்தப்பில் காணுநேர்பாடு
என்னுமார் தம்பிரான்தன் திருக்கண்ணில் இடக்கால்ஊன்றி
உன்னிமுறு விருப்பினோடும் ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில்ஊன்ற தரித்திலர் தேவதேவர்."

"செங்கண்வெள் விடையின்பாகர் திண்ணனார் தம்மையாண்ட
அங்கணர் திருக்காளத்தி அற்புதர் திருக்கைஅன்பால்
தங்கண்முன் இடக்கும் கையைத்தடுக்க மூன்றடுக்குநாக
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்கவென்ற."

இவ்வரிய நிலையைக்காண இறைவனும் அறிவாளருமே உரியர் என்பதை சேக்கிழார் பின்வரும் ஒரு கவியில் விளக்குகிறார்.

"கானவர் பெருமானார்தங் கண்ணிடந் தப்பும்போதும்
ஊனமுதுகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும்போதும்
ஞானமா முனிவர்கண்டார் நான்முகன் முதலாயுள்ள
வானவர் பூவின்மாரி பொழிந்தனர் மறைகள்ஆர்ப்ப"

எனவே இவ்வாராய்ச்சியில், கண்ணப்பர் கதையே தமிழ்க் கதை என்பது ஒன்றேயல்ல, மற்றும் கண்ணப்பர் பிறந்த வேடர்குடி பழந்தமிழ்க்குடி என்பது மட்டுமல்ல, கண்ணப்பர் கொண்ட அன்பே தமிழ் அன்பு என்பதும் அவர் கைக்கொண்ட ஒழுக்கமே தனிப்பெருந் தமிழ் ஒழுக்கம் என்பதும் அறியக் கிடக்கின்றன.

கண்ணப்பர் ஒருவர் தான் கண்ணை அகழ்ந்தெடுத்தவர் என்று கூறுவது உண்மையல்ல. கண்ணை அகழ்ந்தெடுப்பதில் யாதொரு பெருமையுமில்லை. மற்றையோரும் தங்கண்ணை அகழ்ந்தெடுத்ததாகக் கதைகள் உள. ஆனால் அந்த நிகழ்ச்சிகளெல்லாம் அன்பால் நிகழ்ந்தவையல்ல. திருவாழிக்காகத் திருமால் சிவனை வழிபட்ட கதையை யாவரும் அறிவர். சிவபெருமானிடத்தில் அப்பெரியார் கொண்ட உள்ளத்துறுதி ஒப்புயர்வற்றதே யெனினும் எதன்பொருட்டுத் தம் கண்ணைக் கொடுத்தார் என்று நோக்குமிடத்து அவர் செய்கை நம் கண்ணப்பர் செய்கையின் முன் மங்கி மழுங்கிப் போகின்றது. திருவாழி ஒன்று பெறவேண்டியே திருமால் தம் கண்ணைக் கொடுத்தார். கண்ணப்பரோ ஒன்றையும் வேண்டாதன்றோ தம் கண்ணை அகழ்ந்தெடுத்தார். அன்பு கொண்டார் அந்நிலையில் கண்ணைப் பிடுங்கி அப்பாமல் இருக்க முடியாது,

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" என்பதுமறை மொழியன்றோ.

சிலர் கண்ணன்றி உடலையும் கொடுத்துள்ளார்கள். சூரபத்மன் உலகையெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென்றுத் தனது தசையையுங் குருதியையும் அவியாகக் கொண்டுக் கடும் வேள்வி செய்தான். பின்னர்த் தன்னையே நிறையவியாக இட்டு வேள்வித் தீயில் குதித்து நெருப்பிற்கு இரையாகின்றான். எதற்காக இவையெல்லாம்? உலகையெல்லாம் தன்னடியின்கீழ் அழுத்தி அடிமையாக்கவன்றோ? கண்ணப்பரோ ஒன்றும் வேண்டினரல்லர். ஆனால் வழிபாட்டில் தினையளவும் குறையுளதோ? பொருட்பற்றி செய்கின்ற பூசனைபோல்" என்று கனிவுற மணிவாசகர் சிறப்பிக்கின்றார்.

ஒன்றும் வேண்டாத கண்ணப்பரோ கண்ணை அகழும் போது களிப்பினால் கூத்தாடுகின்றார். சூரனுங் கடவுளைக் கண்டான்; கண்ணப்பருங் கடவுளைக் கண்டார். ஆனால் அவன் கண்ட வகை வேறு; இவர் கண்டவகை வேறு. வேண்டியதை அளிக்குங் கடவுளாக சூரன் கடவுளைக் கண்டான். இன்ப

உருவாகிய கடவுளே தாமாகி கண்ணப்பர் கடவுளைக்கண்டார். அன்பினால்தான் கடவுளின் உண்மையுருவைக் காண இயலும் மற்றும் எவ்வகையாலும் காணமுடியாது என்பர். இதை அறிவுறுத்தவே திருமூலர்

"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுக்கினும்
அன்போடுருகி அகங் குழைவார்க் கன்றி
என்போல் மணியை எய்த வொண்ணாதே." என்றார்.

கண்ணப்பரின் அன்பின் பெருமையை எண்ணியதும் முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும் திடுக்கிடுகின்றார். கண்ணப்பர் திருத்தொண்டினைப் புகழ்ந்து வியந்து அரிது அரிது என நடுநடுங்கி அங்ஙனம் செய்ய மாட்டேன் எங்ஙனம் உய்வேன் என்று கைவிதிர்க்கின்றார்.

"வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லேன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லேன் நானினிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி அப்பருக்கே." என்கிறார்.

திருக்களிற்றுப்படியார் இவ்வன்பின் தன்மையை உணரவும் இயலுமோ? எனக் கூறுகின்றார்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை என்றதினால்
கண்ணப்ப னொப்பதோர் அன்பதனை—கண்ணப்பர்
தாமறிவர் காளத்தி யாரறிவார் மற்றன்றி
ஆரறியும் அன்பன் றது." என்கின்றார்.

கண்ணப்பர் அன்பின் பெருக்கிற்குப் பெரும் எடுத்துக் காட்டாக விளங்குவதால் அவரைப் பலரும் பலவகையாகப் புனைந்து போற்றியுள்ளார்கள். அவரது கதை முழுமையும் பாடாது தமது பாட்டின் நோக்கத்திற் கேற்ப அக்கதையின் நுணுக்கங்கள் சிலவற்றை மின்னிப் பொலியச்செய்த புலவர்கள் பலருளர்.

ஞாயிற்றின் வழிபாடு

வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

எல்லாம் வல்ல இறைவன் தனக்கென ஒரு பெயரும் ஒருருவமும் இல்லான் எனினும் அன்பர்கள் அவனுக்கு ஆயிரந் திருப்பெயரும் திருவுருவமும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். அங்ஙனம் வழிபடற் கமைத்துக் கொள்ளப்பெறும் திருவுருவங்கள் பெரும் பான்மையும் கல், மண், பொன், மணி, முதலியவைகளாலாயவை.

இங்ஙனம் மனிதன் கைப்பட வியற்றியவையே யன்றிப் பலர், மனிதர் முயற்சியால் ஆக்கப்படாதனவும் இறைவன் ஒருவன் உண்மையையும் அவனது வரம்பிலாற்றலையும் மக்கட்குத் தெரிந்து நிற்பனவுமான இயற்கைப் பெரும் பொருள்களையும் அன்னோன் திருமேனியாகப் பாவித்து வழிபடுவர்.

அவ்வியற்கைப் பெரும் பொருள்களாவன, "நிலம் நீர் நெருப்பு உயிர் கால் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாயமைந்தன்" (திருவாசகம்) என்பவையாம். இவற்றை அட்ட மூர்த்தம் என வழங்குவர். "எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே" என்றார் புகலியர் பெருமானும். அட்ட மூர்த்தங்களில் ஏனையவற்றினும் ஞாயிற்றினையே சுற்றோரும் மற்றோரும்நம்நாட்டில் பெரும்பாலும் ஒருபொழுதோ, இருபொழுதோ முப்பொழுதோ, தமக்கியன்ற பொழுது வணங்கிவருதல் கண்கூடு.

இங்ஙனம் ஞாயிற்றின் வழிபாடு மலிந்திருப்பதேன் எனில் ஆணவ இருளில் அழுந்திக் கிடக்கும் உயிர்கட்குத் தன் இன்னருள் ஒளி ஈந்து அவ்விருளைப்போக்கி அறிவிச்சை செய்கைகளைக் கிளப்பி இயக்கும் இறைவனையொப்ப, புறவிருளில் மறை

பட்டுக் கிடக்கும் மன்னுயிர்த் தொகைகட்கு தன் ஒளி ஈந்து கண்ணொளி விளக்கி அவற்றின் அறிவிச்சை செயல்களைக் கிளப்புவது ஞாயிறேயாம்.

இதனாலன்றோ " உலக முவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு, ஓவறவிமைக்கும் சேண்விளங் கவி ரோளி" எனச் செவ்வேற் செம்மலுக்குப் பரிதியை உவமை கூறினார், நக்கீரப் பெருநாவலர்.

ஞாயிறின்றேல் ஒளியெங்கே, வளியெங்கே, முகிலெங்கே, மழையெங்கே, புனலெங்கே, பயிரெங்கே, உடம்பெங்கே, உணர்வெங்கே, ஒன்றும் இராது. ஆதலாலே ஞாயிற்றை கண்கண்ட தெய்வமாக மண்கொண்டு பரவும்.

ஞாயிற்றின் வழிபாடு எக்காலத்தில் நம் தமிழ் நாட்டிற் றேன்றியது என அறுதியிட்டுரைக்க முடியாது. பல்லாயிர ஆண்டுகட்கு முன்றோன்றிய தொல்காப்பிய நூலுள்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்று

கூறப்படுவதால் அந்நூல் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழ் நாட்டிலிருந்திருத்தல் வேண்டுமென்பது துணியப்படும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய அகத்திணையுரையில் " சூரியனை எல்லா நிலத்திற்கும் போதுத்தேய்வமென்று கூறுதலாலும்" இறையனார் களவியலுரையில் அதன் ஆசிரியர் "தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர். வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும், ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர்" எனக் கூறுதலாலும் ஞாயிற்றின் வழிபாடுதொன்று தொட்டுள்ளதென்பது மேலும் உறுதி பெறும்.

இஃது இங்ஙனமாக முதற் குலோத்துங்கன் காலத்தில் தான் ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழகத்திற்குப் புதிதாகக் கொண்டு வரப்பட்டதென்று 1926—1927-ஆம் ஆண்டைய

தென் இந்திய கல்வெட்டு இலாகாவின் அறிக்கை கூறுவது* பொருந்துவது அன்று என்பதற்கு மேற்கூறியவையே போதிய சான்றும். வேறும் சில கூறுதும்.

பதினொன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நம் தமிழகத்தை ஆட்சி புரிந்த முடி மன்னனாகிய முதற் குலோத்துங்கனுக்கு நெடுநாள் முந்தித் தோன்றிய நூல்களுள், நற்றிணையில் "பசுங் கதிர்மதிய மொடுசுடர் கண்ணுக" என்றும், சிலப்பதிகாரத்தில் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்றும், அந்நூலுரையில் அடியார்க்கு நல்லார், பாலைக்குத் தெய்வம் "பரிதியஞ் செல்வனும் திகிரியஞ் செல்வியுமெனக்கோள்க" என்றும்,

திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

"அருக்கன்பாத நிணைகுவ ரந்தியில்
அருக்கனுவ னரனுரு வல்லனோ" என்றும் கூறுவதாலும், ஞாயிறு வழிபாட்டின் தொன்மை விளங்கும்.

சிலப்பதிகாரம் கனாத்திற முரைத்த காதையில் "பகல் வாயிலுச்சிக் கிழான் கோட்டம்" என்று ஒரு கோயிற் பெயர் காணப்படுவதாலும், உச்சிக்கிழான்—சூரியன், அன்றி பகல்

---

* Annual report on South Indian Epigraphy for 1926—1927. Page 79. Para 19.

The temple dedicated to the sun and the attendant planetary deities at Surynarkoil in the Tanjore District owes its existance to Kulottunga I. The village itself takes its surname after the local temple. The Surya temple is an unique one of its kind in South India and it possibly shows the influence of Gahadavala Kings of Kannauj who were worshippers of the sun. From the existence of the image of the God Visvesvara with his Consort Visalakshi in the temple at Suryanarkoil, it has been inferred that the worship of the sun was introduced from Benares. (Annual report for 1908 Paragraph 60) In No. 229 of 1927 the God is called குலோத்துங்க சோழ மாத்தாண்டாலய தேவர், and in No. 231 of 1927 குலோத்துங்க சோழ மாத்தாண்டாலையத்து சூரியதேவர் thus combining in one, the name of the Originator of the temple **and the worship of the sun newly introduced.**

வாயில் உச்சிக்கிழான்—பகற்பொழுதுக்கு வழியான உச்சிக்கிழானென்றுமாம் என்றும், "கீழ்த்திசையில் தோன்றுகின்ற சூரியன் கோயில்" என்றும், முறையே அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் உரை கூறுவதாலும், முதலாங் குலோத்துங்கனுக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே ஞாயிற்றுக்குக் கோயிலும் நம் நாட்டில் உண்டு என்பதும் பெறுதும்.

மேற்காட்டிப் போந்தவாறு, ஞாயிற்றின் வழிபாடு நம் தமிழகத்தில் தொன்று தொட்டுள்ளது என்பதும், முதலாங் குலோத்துங்கன் காலத்திற்றான் அவ்வழிபாடு நம் தமிழகத்திற்குப் புதிதாகக் கொண்டு வரப்பட்டதென்று 1926—27-ஆம் ஆண்டைய கல்வெட்டு இலாகாவின் அறிக்கை கூறுவது பொருத்தமில்லை என்பதும், வெள்ளிடைமலைபோல் விளங்குவதாகும்.

மேலும், சூரியனார் கோயிலிலுள்ள சூரிய தேவர்க்கு "குலோத்துங்க சோழ மாத்தாண்டாலயத்து சூரியதேவர்" எனப்பெயர் உண்டென்று அக்கோயில் கல்வெட்டுக்கள் உணர்த்துவது கொண்டு - அக்கோயில் முதற் குலோத்துங்க மன்னனால் எடுப்பிக்கப்பட்டதென்று கொள்ளுவது மாத்திரமே பொருத்தமுடைத்தாகும்.

தமிழ்ச்செய்திகள்

கலா நிலையம் யாழ்ப்பாணம்:—இது தமிழ்க் கலைவளர்க்கும் பெருநோக்குடன் நிறுவப்பெற்றிருக்கும் தமிழ்ச்சங்கம். இச்சங்கத்தார் புலமை மிக்கவர்களைக்கொண்டு விரிவுரைகள் நிகழ்த்துவதோடமையாது, தமிழ் இலக்கிய வகுப்பு, தமிழ் இலக்கண வகுப்பு, இந்திய தத்துவஞான நூலாராய்ச்சி வகுப்பு பொருள்நூல் ஆராய்ச்சி வகுப்பு என அமைத்து உறுப்பினர்கள் கலையறிவு நிரம்புதற்பொருட்டு இயற்றிவரும் தமிழ்ப்பணி

பாராட்டத்தக்கது. நூல் நிலையமும், வாசகசாலையும் போற்றி வளர்க்கப்பெறுகிறது. பழைய தமிழ் ஏடுகளைத் தேடிச்சேமிப்பதும் தனது கருமமாகக் கொண்டிருக்கின்றது. இன்னோரன்ன துறைகளில் உழைத்து தமிழுக்கு ஆக்கந்தரமுயலும் இச்சங்கம் தழைத்தோங்குமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

* * * * *

கரந்தைத் தமிழ்ச் சங்கம் — கம்பர் திருநாள் :— இம்மதி திருவாளர், ஆசிரியர், அ. வரதநஞ்சையப்பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அதுபோது தலைவர் அவர்கள் "கம்பரும் திருத்தக்க தேவரும்" என்பது பொருளாகவும், திருவாளர். T. S. சபாபதி பிள்ளையவர்கள் B. A., (Retired District Registrar) 'மிதிலைக்காட்சி' என்பது பொருளாகவும், திருவாளர், M. N. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் (Retired Sub-Inspector of Police) 'அங்கதன் தூது' என்பது பொருளாகவும் அரிய விரிவுரைகள் நிகழ்த்தினர்.

இத்திருநாட் சிறப்பின் செலவு முற்றும் ஏற்றருளி நன்கொடைவுதவிய மதுரை திருவாளர், E. M. கோபால கிருட்டிணக்கோனர் அவர்களின் நன்றி போற்றற்பாலது.

* * * * *

கம்பர் செந்தமிழ்ச் சங்கம் குளித்தலை:—ஆங்கீரச பங்குனி 5, 6 நாட்களில் கோயம்புத்தூர் கல்விக் கழகத் தலைவர் திருவாளர் இராவ்சாகேப் M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A.B.L. அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இச்சங்கத்தின் 8-ம் ஆண்டுவிழாத் தமிழ்ப் பேரவையில் நிறைவேறிய முடிபுகள்:—

1. தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளை ஆராய்ச்சி செய்வதற்கு தமிழ்ப்புலமை நிரம்பியவர்களையே நியமிக்கும்படிக்கும், அவற்றைத்தாமே ஆராய்பவர்கட்கு பணவுதவிகள் செய்யும்படிக்கும், இதுவரையில் ஆராய்ந்து அரசியலார் சேமித்து வைத்திருக்கும் கல்வெட்டுகளை விரைவில் வெளியிடும்படிக்கும் அரசியலாரை இச்சங்கம் வேண்டுகின்றது.

2. சென்னைப் பல்கலைக் கழக வித்வான் தேர்வில் முதன்மையிடம் பெறுபவருக்கு ஆயிரம் வெண்பொற்காசு பரிசு வழங்குவதுபோலவே, அண்ணாமலைப் பல்கலைக் கழக வித்வான் தேர்வில் முதன்மை பெறுவோர்க்கும் பரிசு வழங்க வேண்டுமென தமிழ் நாட்டிலுள்ள சைவமடத்தலைவர்களை இச்சங்கம் வேண்டுகிறது.

3. சென்னைப் பல்கலைக் கழக வித்வான் தேர்வில் திருப்பனந்தாள் அடிகள் வழங்கிவரும் ஆயிர ரூபாப்பரிசை மூன்று கூறுக்கி முதன் மூவர்கட்குக் கொடுக்க வேண்டுமென்பதை இச்சங்கத்தார் வன்மையுடன் மறுக்கின்றனர். இரண்டாவது மூன்ருவது பரிசுகள் வைப்பது விரும்பத்தக்கதென்றும், அவற்றிற்குப் போதிய தொகைகளைத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அளிக்கவேண்டுமெனவும் இச்சங்கம் முடிவு செய்கின்றது.

4. கல்லூரிகளிலும் (Colleges) உயர்தரப் பள்ளிக் கூடங்களிலும் (High schools) ஆங்கில மொழிந்த எல்லாக் கலைகளையும் தமிழில் (தாய்மொழியில்) மாணவர்க்குக் கற்பித்தல் வேண்டுமென இச்சங்கம் தீர்மானிக்கின்றது.

5. பள்ளியிறுதித்தேர்வு (S. S. L. C. Examination.) நடுத்தரத்தேர்வு (Intermediate Examination) கல்லூரித் தேர்வு (B. A. Examination) முதலியவற்றில் முதல்பிரிவில் (A Group) தமிழை எடுத்துக்கொண்ட மாணவர்கள் மூன்ரும் பிரிவிலும் (C Group) அதே மொழியை விருப்பபாடமாக எடுத்துக்கொள்ளுமாறு விதிக்கவேண்டுமென பள்ளியிறுதிக் கழகத்தாரையும் (S. S. L. C. Board) பல்கலைக் கழகத்தாரையும் (University Authorities) இச்சங்கம் வேண்டுகிறது.

6. தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் யாவும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்துடன் இணைக்கப்படுதல் தமிழ்வளர்ச்சிக்கு இன்றியமையாததெனை இச்சங்கம் வலியுறுத்துகின்றது.

தமிழ்ப்பொழில் 1 முதல் 7 துணர்களுக்குக் கட்டுரை வழங்கியோர்.

கோ. குப்புசாமி ராசு தஞ்சை
மா. வே. கோபாலகிருஷ்ணையர் ,,
N. விசுவநாதையர் ,,
சிவ. குப்புசாமிபிள்ளை ,,
K. சோமசுந்தரம்பிள்ளை B. A., ,,
நீ. கந்தசாமிபிள்ளை M. R. A. S., ,,
E. R. அங்கப்பா ,,
V. சண்முகம் செட்டியார் தமிழாசிரியர் ,,
உமா. பஞ்சாபகேசன் ,,
கி. அரங்கராசன் ,,
க. சம்பந்தம்பிள்ளை B. A., L. T.. ,,
சி. வேதாசலம்பிள்ளை B. A., B. L., ,,
இராம. மாணிக்கவாசகம்பிள்ளை ,,
பண்டிதர். L. உலகநாதபிள்ளை திருவையாறு
கு. சோமசுந்தரதேசிகர் தமிழாசிரியர் ,,
இ. கோவிந்தசாமிபிள்ளை ஷெடி ,,
R. வேங்கடாசலம்பிள்ளை ஷெடி ,,
நாராயணசாமியார் ஷெடி ,,
G. சுப்பையா ஷெடி ,,
R. நரசிம்மலுநாயடு ,,
வை. சுந்தரேசவாண்டையார் ,,
அ. கந்தசாமிபிள்ளை தமிழாசிரியர் கும்பகோணம்
T. V சதாசிவப்பண்டாரத்தார் தமிழாசிரியர் ,,
மா. சா. வேங்கடராமையர் ஷெடி ,,
E. S. வரதராசையர் B. A. ஷெடி திருச்சி
பண்டிதர். ந. மு. வேங்கடசாமிநாட்டார் ,,
அ. சிவப்பிரகாசம்பிள்ளை தமிழாசிரியர் ,,
கு. தங்கவேலுபிள்ளை ,,
திருநீலகண்டசுவாமிகள் சிதம்பரம்
S.K. கோவிந்தசாமிப்பிள்ளை B.A., Hon's. ,,
மணி. திருநாவுக்கரசுமுதலியார் சென்னை
பண்டித அ. கோபாலையர் ,,
P. V. மாணிக்கநாயக்கர் ,,
P. S. வேதாசலையர் தமிழாசிரியர் ,,
வித்துவான் மு. இராகவையங்கார் ,,
இ. மு. சுப்பிரமணியபிள்ளை தமிழாசிரியர் நாங்குனேரி

A. சீனிவாசாச்சாரியார் B.A., L.T., ஸ்ரீவில்லிபுத்தூர்
சாமி. வேலாயுதம்பிள்ளை B.A., B.L., குடவாசல்
R. P. அமிர்தலிங்கம்பிள்ளை தமிழாசிரியர் நன்னிலம்
S. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., மதுரை
T. N. அப்பனையங்கார் B. A., ,,
T. S. கந்தசாமிமுதலியார் B. A., சாத்தூர்
மறைமலையடிகள் பல்லாவரம்
M. N. சோமசுந்தரம்பிள்ளை புலவர் மன்னார்குடி
S. V. கனகசபைபிள்ளை ,,
M. S. பூர்ணலிங்கம்பிள்ளை B.A., L.T., ,, முன்னீர்ப்பள்ளம்
வ. உ. சிதம்பரம்பிள்ளை B.A., கோவிற்பட்டி
ப. மு. சிதம்பர முத்தரையர் தமிழாசிரியர் அரியலூர்
சுவணம். சிவப்பிரகாசர் தமிழாசிரியர் காவிரிப்பட்டினம்
பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியார் மகிபாலன்பட்டி
க. உலகநாதபிள்ளை திருவனந்தபுரம்
S. நடேசபிள்ளை B.A., B L., யாழ்ப்பாணம்
கண்ணபுரத்துக் கவுணியன் } தமிழாசிரியர், ,,
வெண்ணெய்க் கண்ணனார் }
சாமி. சிதம்பரனார் தமிழாசிரியர், பாபநாசம்
வீ. உலக ஊழியர் ஷெடி நாமக்கல்
சி. சோமசுந்தர முதலியார் திருவாரூர்
ந. மு. கோவிந்தராயநாட்டார் B. A., L.T., கூத்தாநல்லூர்
A. S. துரைசாமிப்பிள்ளை தமிழாசிரியர் செய்யாறு
வ. பழ. சாமிநாதசெட்டியார் மேலைச்சிவபுரி
M. முருகைய வாத்தியார் கோயமுத்தூர்
கந்தசாமியார் தமிழாசிரியர் சோழவந்தான்
ஆசிரியர் அ. வரதநஞ்சையபிள்ளை தோரமங்கலம்

தமிழ்ப்பொழில் கட்டுரைகள்.

I-ம் துணர். 1925-26.

II-ம் துணர். 1926-27.

அஞ்ஞானக் குறிப்பு
இயல்நூற் குறிப்பு
உலகவரலாறு
எட்டு ஒன்பது முதலியவை
கம்பரும் மக்களுள்ளமும்
கல்வி
கற்புடையமகள் கண்ணகி
குமரகுருபரவடிகளும் அவர் நூல்களும்
குற்றியலுகரப் புணரியல்
கூவலாமை
சம்புவராயமன்னர்
சிலப்பதிகார நாடகத்து ஒரு பகுதி
சோதிமரம்
தஞ்சையரசர்
தமிழ் மக்களும் கப்பற்றொழிலும்
தமிழர் வீரம்
தமிழிற் பிறமொழிக் கலப்பு
தலையாலங்கானத்துச் செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன்
திருவிழா
தொல்காப்பிய மரபியல்
"நத்தம் போற்கேடு" என்னும் குறளுரை
"நத்தம் போற்கேடு" என்னும் குறளுரை
யாராய்ச்சி
நறுந்தொகைப் பதிப்பு
நெசவுத்தொழிலும் நம்மவரும்
பல்கலைக்கழகங்களின் பாடநூல்கள்
பிறப்பொக்கும், சிறப்பொவ்வா
மத்தியகாலத்துச் சோழர்
மழவர் வரலாறு
முதலாங் குலோத்துங்கன்
மூடதாமக் கன்னியார்
மூவர் தமிழ் ஆராய்ச்சி
மூவர் தமிழின் சிறப்பு
வரலாற்று மொழிகள்
வரலாற்று மொழியாராய்ச்சி விளக்கம்
வள்ளல்கள் வரலாறு

III-ம் துணர். 1927-28.

இராசராசன்
வாசுகியம்மையார்
பரமோபதேசம்
முருகன் சிறுவிளையாடல்
இன்பப்பேறு
உயிர்ப்பண்புகளும் வீட்டுவாயில்களும்
சிந்தாமணியின் நந்தா ஒளிகள்
கல்வி
வெஞ்சமாக் கூடலூர்
செவ்விளைப்பருவம்
ஒரு கல்வெட்டு
முதலாங் குலோத்துங்க சோழன்
சுந்தரமூர்த்திகளது காலம்
குமரகுருபர அடிகளும் அவர் நூல்களும்
திருத்தக்கதேவர்,
பண்டைத்தமிழர் அரசியல்நிலை
சிலப்பதிகார நாடகப்பகுதி
புகழேந்தி-ஒட்டக்கூத்தர்
அறிவு
புத்த நிர்வாணகாலம்
சிலப்பதிகாரக்காலம்
மணிமேகலை
திருவள்ளுவர் இயல்புகூறி நெஞ்சறி
வுறுத்தல்
ஓவியமும் தமிழரும்
பண்டைத் தமிழரின் சமயம்
ஐயவினாத்தொடர்
தமிழர் வீரம்
புகழ்
தமிழர் நல்லிசைப்புலமை
உடல் இயலும் உடல்நலவழியும்
திருச்சுழியல் வெண்பா அந்தாதி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
தமிழக நிலைமையும் தமிழர் கடமையும்

IV-ம் துணர். 1928-29.

)ராசராசன்
்தி பசு பாச வகை
தி பசு பாசப்பனுவல்
குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
த்துவ விளக்கம்
மிழ் நாட்டுப் பெண்பாற் புலவர்கள்
மாரகுருபர அடிகளும், அவர் நூல்களும்
வாமி நாதம்
மனென்னும் வைப்பு
துரைக் காஞ்சியாராய்ச்சி
ட்பு
ண்ணாமலைப் பல்கலைக் கழகம்
ர் ஆராய்ச்சி
யவினைத் தொடர்
இன்ப வாழ்க்கை
ஏழை மக்களை எவ்வழி யுயர்த்தலாம்
ச்சையப்ப முதலியார்
னது பற்பல வேலைகள்

மார்க்கண்டேயர்
திருச்சுழியல் வெண்பா வந்தாதி
எனது கனவிற் கனு
தன்னலமும் பொது நலமும்
தன்னலப்பாட்டு
முப்பாலிற்கண்ட மூவகை யுதவிகள்
எனது காதலர்
மாதங்கள்
கிறித்தவர் கிழமைகளும் மாதங்களும்
பாண்டியர் வரலாறு
மிழலைக் குறும்ப நாயனார்
புறநாட்டுப் பொருள்கள்
பண்டைத் தமிழ் மக்களும், தனித்தமிழ் மொழியும்
பாடவேறுபாடுகள்
கண்ணகியும் மாதவியும்
பள்ளிக்கூடப்பாடங்களின்உரையாராய்ச்சி
உடல் இயலும் உடல் நல வழியும்

V-ம் துணர். 1929-30.

சைவ உணவுக்கு மாறான சில கொள்கை [களின் மறுப்பு
அறிவுடை மறுமொழி
ல் தனிச் செய்யுட்கள்
ல புதுமைகள்
ராங்கெறி விளங்காய்
குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்
திபசுபாசப் பனுவல்
குறிஞ்சிப்பாட்டின் கருப்பொருள்
மிழரும் ஆடையும்
மிழ்மொழியும் தமிழ்நாடும்
ள்ளம்
ணவு
ழக்கமும் வழக்கும்
சேக்சிர்
ாண்டியர் வரலாறு
திருமலை வெண்பா
திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டுக்கள்
பித்தரக் கல்வி முறையின் மறு அமைப்பு
ரவிரிப்பூம் பட்டினம்
தமிழறிவு குறைந்திருப்பதேன்?
உடல் இயலும் உடல்நல வழியும்

கல்வெட்டுக்களால் அறியப்படும் சிலதமிழ்ப் [புலவர்கள்
இளங்கிளை
உலாக்கொண்ட மூன்று சோழ மன்னர்கள்
அடம்பும் கடம்பும்
தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை
தமிழ் இலக்கணமும் தமிழ் நாட்டின் [இல்லறவாழ்க்கை முறையும்
ஆர்க்காடு
மதுரைக்காஞ்சி யாராய்ச்சி
உயிர்ப் பண்புகளும் வீட்டுவாயில்களும்
கலித்தொகையும் நச்சினார்க்கினியரும்
குமரகுருபர அடிகளும் அவர் நூல்களும்
தமிழ்ப் புதுவாண்டு
தமிழ்க் கொலை
திருச்சுழியல் வெண்பா அந்தாதி
சிந்தையின் சிறப்பு
திருவள்ளுவர் திருக்குறள்பாயிர ஆராய்ச்சி
இலவசக்கட்டாயக் கல்வியின் இன்றியமையாமை
தஞ்சை தமிழ் மக்கள் கூட்டத்தின் [முடிவுகள்
தமிழ் மறை

VI-ம் துணர். 1930-31.

VII-ம்துணர். 1931-32.